S. S. M. SOMASUNDARAM CHETTY, KONDANOOR, RAMNADDISTRICT, VIA. TRICHINOPOLY.
S. S. M. SOMASUNDARAM CHETTY, KONDANOOR, RAMNADDISTRICT, VIA. TRICHINOPOLY.

உ

கணபதி துணை.

தெய்வப்புலமைத்

திருவள்ளுவநாயனார்

அருளிச்செய்த

தமிழ்வேதமாகிய

திருக்குறண்மூலமும், பரிமேலழகருரையும்.

இவை

இராமநாதபுரசமஸ்தானம் ம-ள-ள-ஸ்ரீ

பொன்னுச்சாமித்தேவரவர்கள்

வேண்டுகோளின்படி,

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரால்

பலபிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்து,

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

பொன்னம்பலபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

ஒன்பதாம் பதிப்பு.

பிங்கள ஆனிமீ.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST. - TAMIL NADU - INDIA

TKSSM
KONDANOOR

உ

கணபதி துணை.

சிறப்புப்பாயிரம்.

மகாவித்துவானாகிய

ம-௱-௱-ஸ்ரீ திரிசிரபுரம்

மீனாட்சிசுந்தரப்பிள்ளை

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்பூத்தமகரந்தப்புதுமதுவச்செழுங்கமலப்பொகுட்டுவாழ்வோன்
றென்பூத்தநான்முகத்தோனலனைமுகத்தோனேதெளிமினென்னக்
கொன்பூத்ததமிழ்வழங்குநிலத்தினறமினிதெழுந்துகுதிகொண்டாட
மின்பூத்தசெங்கதிரின்வள்ளுவரென்றொருநாமமேவத்தோன்றி. (௧)

பொலிதரமுன்னுணர்ந்தமறையகத்தமைந்தவறமுதனாற்பொருளுமேன்மே
லொலிதரமற்றநான்குமொருமூன்றினடக்கியின்றேனொழுக்கியாங்கு
மெலிதரலில்வரைமுதற்பேருருவொருசிற்றுடியகம்விளங்கன்மான
நலிதரறீசிலசொல்லிற்பலபொருளுஞ்செறித்துநவைநண்ணாதாக. (௨)

மொழிசுருங்கல்பொருள்விளங்கன்மொழியவினிதாதனலமொழிபுணர்த்தல்
வழியமையோசையிற்பொலிதலாழ்ந்திருத்தன்முறைநிறுவன்மலைவுதீர்தல்
பொழிவிழுமியதுபயத்தல்காட்டாதலிப்பத்தும்பொலியவாய்ந்த
கழிபொருளுங்கருதணியுநோக்குமிடந்தொறுங்கிடந்துகளிப்புச்செய்ய. (௩)

மையேறுபொழின்மதுரைமாநகரத்தருட்புலமைமாட்சியார்முன்
கையேறுதிருமூலாகமச்சோதிமறைமுளைத்தகனிவாய்விண்டு
பையேறுமணிபொருமோர்துதிகவிசொற்றிடப்பலரும்பரவிப்போற்ற
வையேறுதிருக்குறளென்றொருநூல்செய்துலகுவப்பவளித்தானாக. (௪)

அன்னநூற்பெருமையுணர்ந்தான்றபாணிநிபுரிந்தவரியநூலுக்
கின்னறீர்பதஞ்சலிபோற்பலருரையும்வியாப்பியமாயிருக்கநாளு
முன்னவாம்வியாபகமேயாகநூற்கருத்துணர்ந்தேமொழிந்தாரென்ன
நன்னர்வான்புகழ்ப்பரிமேலழகருரையியற்றவதைநாடியாரும். (௫)

எட்டுவரைந்தெடுத்துணர்ந்துவருநாளிலெங்கணுஞ்சாலெழுத்துக்குற்ற
மோட்டும்வகையுணராராய்ப்பரம்பரையொன்றேகருதியொழிந்தாரத்தோ
மாட்டுவலென்றுணர்ந்தனையமூலமும்பேருரையுமுனம்வகுத்தவாறே
நீட்டுதலிலாவெழுத்திலியைவியெனவுலகுபுகழ்செம்பிராடன். (௬)

ஓதுபதியாயவிராமீசர்திருவருளானீருடுத்தவைப்பிற்
கோதுபதியாதகலவறந்தழைந்துவிளங்கிடச்செங்கோல்கைக்கொண்ட
சேதுபதிமானேசரதிகாரநடாத்துசெயசிங்கஞ்செம்பூ
மாதுபதியயர்வுயிர்ப்பவுலகமுழுவதும்புரக்கும்வள்ளற்கோமான். (எ)

கற்பகத்தின்றளிரனையமென்னிறமுஞ்சங்கினொடுகமலரேகை
யுற்பவமுமொருசுரபிச்செருத்தன்முலைநிகர்விரலுமொளிர்பொன்னாழி
யிற்பதியொண்சுடர்மணியுமெய்துதலாற்றருநிதியமிரண்டுதெய்வப்
பொற்பமையாவருண்மணியிவ்வைந்துஞ்சேர்ந்தாயவெனும்புரவுக்கையான். (அ)

பாருநெடுவிசும்புமறுவெங்குளதென்றுராயப்பரந்தமார்பா
னேருமுணர்வுடையார்பாற்பெருங்கருணைமடைதிறந்தாலொத்தகண்ணன்
வாருமிளநகையரும்பவினியர்முகமலர்த்துமொழிமதுரவாயான்
மேருவெனப்புடைபரந்துபகைவர்நிலைகலங்கவெழூஉவீங்குந்தோளான். (௯)

சிவஞானத்தேவர்வரப்பிரசாதபாலனருள்செறிபூபாலன்
பவஞானமுழுதொழியக்கோபாலனெஞ்ஞான்றும்பணிகாபாலன்
றவஞானநீற்றொளியேயொளிர்பாலன்பகைகாணத்தகாப்பின்பால
னவஞானமறுத்துணர்ந்தமுப்பாலன்போர்வையெனவமைசீர்ப்பாலன். (௧௦)

ஒருகாவித்துவசத்தானொளிர்தளவமாலிகையானுணர்வான்மீக்கூர்ந்
தருகாவித்துவசத்தானன்றபெருஞ்சிவஞானமடங்கவுய்க்குங்
கருகாவித்துவசத்தான்பகைநோக்கியுருமனமேகடைகாதுஞ்சா
துருகாவித்துவசத்தான்புணர்யான்செய்காயமெனவுரைக்கும்வாளான். (௧௧)

கந்துகத்தானம்பரவுமாறுபொழிந்தெழுகளிற்றான்கருதார்மேற்பாய்
கந்துகத்தானம்பரவுசூடியடியான்வாயிற்கட்டித்தூங்குங்
கந்துகத்தானம்பரவுமாதாவென்றுயிர்கருதிக்கரிசெலாமி
கந்துகத்தானம்பரவுரவமாதிநீங்கவறங்கைக்கொண்டுள்ளான். (௧௨)

தரைசெய்தவப்பயனாகியமைந்தபெருவளப்புதுவைத்தலைமையோன்பொன்
வரைசெய்நிதிப்பெருவாழ்க்கைமாகனவான்பெரும்புலவர்மறவாதென்று
முரைசெய்பெரும்புகழ்ப்பொன்னுச்சாமிநரேந்திரன்மகிழ்கூர்ந்துரைப்பக்கேட்டு
நரைசெய்விடையேறுயர்த்தநம்பிரானடிக்கன்பேநயக்குநல்லோன். (௧௩)

மன்னுபெருந்தமிழ்ப்பாடையிலக்கணமுமிலக்கியமும்வரம்புகண்டோன்
பன்னுசிவபுராணங்கள்பலதெரிந்தோன்சிவாகமநூற்பரவைமூழ்கி
யுன்னுமனுபூதியெனும்விலைவரம்பிலாமணிகையுறக்கொண்டுள்ளா
னின்னுநயகுணத்தினாய்ச்சைவமெனும்பயிர்வளர்க்குமெழிலிபோல்வான். (௧௪)

நீடுபுகழ்த்திருக்கேதீச்சரந்திருக்கோணாசலமிந்நிலவாநின்ற
நாடுபுகழ்த்தலம்பொலியாழ்ப்பாணத்துநல்லூர்வாழ்நகராக்கொண்டோன்
றேடுபுகழுருவமைந்தகந்தவேடவத்துதித்தசெல்வன்யாரும்
பாடுபுகழாறுமுகநாவலனவ்வாறச்சிற்பதிப்பித்தானே. (௧௫)

மகாவித்துவானாகிய ம-ா-ா-ஸ்ரீ

மீனாட்சிசுந்தரப்பிள்ளைமாணாக்கரும்

சிதம்பரச்செட்டியார் குமாரருமாகிய

தியாகராஜச்செட்டியார்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

திருவளர் தெய்வச் செழுமறை யவர்த—முருவளர் செங்கை யுதக மவாவிக்—கருங்கடன் முகட்டிற் செங்கேழ் பரப்பி—மரகதம் பழுத்த துரகத மோரேழ்—சேர்தர யாத்த வோர்கால் வையத்—தமர்ந்தினி தெழூஉ வகலிடம் புதைத்த—செறியிருள் விழுங்குஞ் செஞ்சுடர் வானவ—னலங்கொளி விரிக்கு நலங்கிளர் கரங்க—டண்டிடத் திறக்கு மாண்டகு புதவ—மாயிரந் தாங்கி யவிர்நிலா வெறிக்குந்—தரளங் குயிற்றிய தமனியக் கோயி—லரசுவீற் றிருந்திவ் வகில மீன்ற—நான்மறை முழங்கு நன் னாவுடைக் கடவுள்—பெருகுபே ரருளாற் றிருவள் ளுவராய்—மகிதலத் துதித்து மன்னுறு மக்க—ளறமுத னான்குந் திறமுற வுணரவு—நன்மை யெங்கணு நனிசிறந் தோங்கவும்—புன்மை யண்டப் புறம்போ யொழியவுஞ்—சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவ—னுள்ளம் பெருங்களி கொள்ளை கொள்ளவுந்—தவலரும் புகழ்சால் சங்கத் தமர்ந்த—நுவலரும் புலவர்சொ னுண்பொரு ணூலெலாந்—திருப்பெறு கல்வி நிரப்புறு வோர்சொல்—பருப்பொரு ணூலாய் விருப்பற் றொழியவுஞ்—சிற்றள வினதாய்ப் பெரும்பொரு ளடக்கி—யுற்றவிந் நூலினி துணர்வோர் யாரு—நணுகுசொற் சுவையொடு நகுபொருட் சுவைகவர்ந்—தனுவின்மா மேரு வடக்கத் துணியவு—நற்றமிழ்ச் செல்வம் பெற்றநன் னாட்டின்முன்—மற்றைய பன்மொழி யுற்றபுன் னாடெலா—மன்பொரு ளுடையர்முன் வறியவர் போல—வென்செய் வாமென் றேக்கற்று நிற்கவு—மெழுத்து முதலாய விலக்கண மெல்லாம்—பழுத்தினி துறங்கும் பள்ளி யாகவு—மின்றி யமையா வின்னலம் பலவுந்—துன்றின கிடந்து துதிபெறத் திகழவுந்—திருவுளத் துன்னித் திருவாய் மலர்ந்து—பொருவறப் புகன்ற புகலருந் தெய்வத்—திருக்குற ளென்னுஞ் செந்தமிழ் வேதம்—பலருரை செய்ய நிலவிய தெனினு—மொருவாப் புலமைத் தருமர்முன் னாய—பாடல்சால் சிறப்பிற் பதின்மர் செய்த—நாடுறு முரைகளுட் பீடமைந் தோங்கும்—பரிமே லழகர் பண்ணிய வுரையொடு—விரிகடல் சூழ்புவி மேவி விளங்கப்—பரிவுறு மச்சிற் பதித்துத் தருகெனக்—கற்பகச் சோலைக் கனத் தருவெனப்—பொற்புறு புலவர் புகலுவ ரஃது—நம்போன் மாரு நல்வள மூழைத்தெனி—லம்பர்ச் சென்றினி தறிய லாமென—வெண்ணிச் சென்றுங் கெழிலுற வளர்ந்து—விண்ணுற நிவந்த வியன்மாம் பொழிற்கட்—சிவந்தழை மனத்துச் செவ்வியோர்க் கிடமாய்க்—கவின்றிகழ் காரைக் காலவ தரித்த—வம்மைதிரு வுளங்கனிந் தடியார்க் களித்த—கனிக்கெதி ராகக் கண்ணுத லருளிய—வினித்ததே மாங்கனி யிப்பொழிற் கனியே—யென்னக் கிளைதொறுந் துன்னிக் கனிந்த—வெண்ணிலாக் கனிகளை யுண்ண விரும்பி—வாவிப் புகுந்திள மந்திகளெல்லா—மேவியத் தருக்கண் மீமிசை யிருந்து—தாவிப் புகுந்தத் தருநுனி யேறி—யோவிலக் கனிகவர்ந் துணவலி யின்றிக்—கூனடை வெரிநின் மேன்மயி ரெலாமுதிர்ந்—திருகண் குழியா வென்பெலாம் வெளிப்பட்—டகடுற வொட்டி யடுபசி வருத்த—வண்ணாந்து நோக்கி நண்ணி யிருக்கு—முதுபெரு மந்திகண் முன்னர்முன் னுகுத்து—வெறுத்திட வூட்டி விழைந்துபின் னுண்டு—தாமுயன் றுண்ணுந் தகுவலி யில்லா—வுறவினர்க் கூட்டியுண் ணறவரை நிகர்க்கு—நலமலி செம்பி நன்னாடுடை

வுற வுணர்ந்த—புலவரி லுயர்ந்தொளிர் நலமலி பெருமான்—புகலருஞ் சீர்த்தி பொத்
துஞ்—சகமகி ழாறு முகநா வலனே.

மகாவித்துவானாகிய ம-ா-ா-ஸ்ரீ

மீனாட்சிசுந்தரப்பிள்ளைமாணாக்கரும்

வீரச்செட்டியார் குமாரருமாகிய சோடசாவதானம்

சுப்பராயச்செட்டியார்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

மலர்தலை யுலகிற் குலவுயிர்த் தொகைக—டுன்னிய வினைவழி மன்னிய
போகந்—தனைவிழைந் தருந்த நனைமலர்க் கோதை—மலைமக ளொருபா னிலைதர
வமைத்த—சிவபிரா னருளின் றவலரு வலியாற்—பாற்படு மண்டப் பரப்பினை நொடி
யினுள்—வீற்று வீற்றாக விழுத்தக வகுத்த—தேன்முகப் பதும நான்முகப் புத்தேள்—
வன்பட ரகன்று மன்பதை யனைத்தும்—விதிவிலக் குணர்ந்து கதிபெறற் குவந்து—
சீரிய தெய்வ வாரிய மொழியா—னல்கிய வளமை மல்கிய சிறப்பிற்—பாயிர நான்
மறை மாயிரு ஞாலத்—தடுபகை கரக்கப் படுபொரு ளாதலி—னுலையா மரபி னிலை
பெற வம்மறைப்—பருப்பொரு ளொருவி விழுப்பொரு ளொருங்கு—மமிழ்தினு மினிய
தமிழினிற் றருவான்—பவர்சடைப் பனவர் நுவலருஞ் சீர்சா—லிகலறு தவத்திறற்
பகவமா முனிவரன்—செய்தவப் பயனா னைதப வந்து—மாண்டநல் லருட்கொடை
பூண்டகா ரணத்தாற்—றெய்வப் புலமைத் திருவள் ளுவரெனு—நிகரில்பேர் மேற்
கொண் டகலிட முய்யத்—துன்பக லறம்பொரு ளின்பம்வீ டென்னு—நாற்பொருள்
பயக்கு மேற்புடைத் தாகத்—தப்பா தருளிய முப்பான் மருவிய—திருக்குற ளென்
னுந் தெய்வமா மறையொடு—தருமர் முதலிய சால்பினர் வகுத்த—திருகிலபே ருரை
களுட் சிறந்து நிலைஇய—வரிமே லியல்புகழ்ப் பரிமே லழக—ருளங்கனிந் தியற்றிய
வளங்கனி யுரையினைத்—தேர்ச்சியின் மிக்கோர் சிந்தைநன் குவப்பக்—கரவிகி
தங்களான் விரவிய வழுக்களைந்—தருவிய லச்சிற் றருகெனப் பஃறலைப்—பன்ன
கஞ் சுமந்த பன்னக வரைப்பிற்—குணங்குலைப் புரவி வணங்கல ரேறு—வெதுப்
பற வுலகம் பொதுக்கடிந் தளிக்கும்—வலமுறு மிராச குலசூ டாமணி—கழை
சுளி புகர்முகக் கடவுணல் வேழம்—விழைதரு கற்பக மென்குழை நொடித்து—
வான்றோய் நறுஞ்சுவைத் தேன்றோய்த் தருந்தப்—புழைக்கர நீட்டப் பழிப்பறு
தேனிரு—றுறுமிய சந்தனச் சூழல்வாய்க் குலவுஞ்—செறுபுல னுடைய குறுமுனி
தன்பா—லரந்தைகெட நுவன்று வரம்பெறு பாக்குக்—குண்டுபடு மீர்ஞ்சுனை
குடைந்தர மகளி—ரரக்கலர் கரம்விரித் திரப்பதை நிகர்ப்ப—வடுப்படாக் காந்தட்
டுடுப்பலர் கஞலிய—முதியசெந் தமிழ்கமழ் பொதியமால் வரையான்—விரவிய
விண்ணவர் பரவவீ ரடியான்—மூவுல களந்த மேவரு நெடுமால்—வன்றிறற் பகு
வாய் வன்றியி னுருக்கொளீஇ—யுருவமண் புகுந்து தருவியுங் காணா—வருளார்
பசுங்கொடி யொருபாற் படர்ந்த—முக்கட் கரும்பின் செக்கம லத்தாள்—கரையினிற்
றோய்ந்து புரைதப மணக்க—நலத்தரு கவுணியக் குலக்கொழுந் திட்ட—பழமறை
தன்னகத் தளவளாய் மணக்குந்—தெய்வவெண் டிரையெறி வையைமா நதியான்—
வரியளி மிதிப்பப் புரிமுறுக் கவிழ்ந்த—மணங்கம ழம்புய மணங்கயர் குநர்க்கு—மக
னமர்ந் துதவுந் தகவினர் கடுப்ப—முகனமர்ந் தொழுக்குந் துகளறு செந்தே—னுவட்
டெறிந் தின்கழைப் படப்பையிற் புகுந்து—சுரிமுகச் சங்குழல் வரிமடை யுடைப்ப—

மட்டியல் பூந்துகள் கொட்டிச் சிறைசெயுங்—கவிழ்துணர்த் தேமாம் பொழில்புடை யுடுத்த—பம்பிய வளம்பொலி செம்பிநன் னுடன்—பூனத முளரி மானதத் தட மெனத்—தேவரு மயிர்ப்பப் பூவளை யங்களை—வெண்ணிறச் சிறக ரண்ணிய மராள—மருந்திட வென்றும் விருந்திடு மணித்தடந்—துதைதரு செல்வப் புதுவைமா நகரா—னுலம்பொரு மறுவில் வலம்படு புயத்தி—னுறைதரு கொற்றவை யுவ்வகையொடு குறு நகை—யரும்பிய தொப்ப விரும்பிய வனைந்த—வளியடை கிடக்குந் தளவமா லிகை யான்—மரவுரி யந்தணன் மறுத்துமுட் சினப்பிற்—றகைக்குந் திறனலன் சிகைக் கனல் கொழிக்குங்—குலிசவாட் படையுடைக் குரிசிலென் றுணர்குற்—றன்னவன் றனைநீத் திங்கர்ப் போந்த—துச்சைச் சிரவமீ துண்மையே யாமெனக்—கண்டவர் பலரும் வாய் விண்டிடச் சிறந்து—விழிகவர் வனப்பிற் சுழிகொள்வாம் பரியான்—றன்னுட னுடன்றமர் தாக்கிய தெய்வக்—கொன்னுறை வயிரவாட் கோட்டுமா னினங்க—ளகைப்பொடு வாய்வெரீஇத் திகைத்தோட் டெடுத்துச்—செல்வுழி யின்றித் திசைதொறு மிமையா—நாட்டமொடு வட்கி வாட்டமொடு நிற்ப—வயங்கொ டிறு மாந்து தயங்கிமதங் கவிழ்த்து—நிகரிகந் துலவும் புகர்முகக் களிற்றுன்—கடையுகத் தெழுந்த கருங்கட லென்னப்—படையொடு துவன்றிய வடையல ருடையா—நெஞ்சு பறை கொட்ட வஞ்சிவிழி விளர்ப்ப—வேற்றிடி போல விடையரு திரட்டுங்—கூற் றுற மெறுழ்வலி யேற்றுரி முரசினன்—பலப்பல வரசர் நலப்பமே லுயர்த்த—பைங் கொடி யடங்கலும் பணிசெயூ நிற்பத்—திகழ்ந்துமே லோங்கிச் சிறந்தெழிற் சய மக—ளாவிக் கிணையதாங் காவிக் கொடியினோன்—பீடா ருலகங் கோடா நெறியி னிற்—குலவுற நடாத்து நிலவுசெங் கோலினன்—றண்ணிய நலங்கெழு புண்ணிய மேரு—நிறைதரு கருணைக் குறையுணல் லின்பத்—திரையெறி கல்விக் கரைபொரு கடனறுங்—தண்ணளி யரும்பிப் புண்ணிய மலர்ந்து—நன்றிபல பழுத்து நின்றருண தாரு—நித்திய வருட்சிவ பத்தியின் பைங்கூழ்—புகழ்தரு மிரவலர் நிகழ்தரு குறிப்ப றிந்—துதவிடு சீர்சா லதுலசிந் தாமணி—விளங்குறு முயிரெனு மிளங்கோ தனங் கள்—கூட்டமிட் டருந்தி யேப்பமிட் டுவப்பக்—கண்ணிய வின்சுவை நண்ணிய வருட்பா—லேமமொடு சுரக்குங் காம தேனு—பொய்வகைச் சமயப் புதையிருள் புடைபட்—மெய்வகை யொளிவிரி சைவ சிகாமணி—யென்றுபற் பலரு மெடுத்தினி தியம்பக்—குன்றலி னிலமகள் குதுகலிப் பெய்தத்—தவஞா னம்பெறு சிவஞான தேவ—ரியற்றிய தவத்தா னயக்கத் தோன்றியோன்—பொதியவிழ் கடுக்கைகொடு மதிதவழ் சடில—மன்னு சாமிதன் மலர்க்கழல் பழிச்சும்—பொன்னு சாமிமால் புகன் றன ளுக—வடங்கிய தழனு வடங்கலு நிமிர்த்தெனத்—தளிர்த்தளி மொய்ப்பத் துளித்தலர் தேமாங்—கனிசிறு வளியாற் கமலமென் பொகுட்டிற்—றுக்குறீஇ யுடை ந்து வாக்குறு பைந்தே—னீர்த்தட நிரப்பு மீழநன் னாட்டி—னிலமகண் முகமெனக் குலவும்யாழ்ப் பாணத்—ததிவளஞ் செறிந்து பொதிதலிற் பலகலை—வல்லோர் புகழு நல்லூ ராளி—நந்தலி னலங்கெழு கந்தவேட் குரிசில்—பெரிதுவந்து ஞற்றிய வரிய மெய்த் தவத்தாற்—பெர்றையருள் சாந்த நிறைகொடை வாய்மையென்—றின்னநற் குணங்களோர் மன்னிய வுருக்கொடு—வந்ததென் றியாவரும் வழங்கிட வந்தோன்—கல்வியங் கடலைக் கடப்பவர் தமக்கோர்—சொல்வியன் புணையெனத் துரிசற நிற்போ—னிருவகைப் பிரம சரியநன் னெறியின்—மயற்றலை புகுத்தா நயிட்டிக நிலையினன்—கற் பனை கடந்த சிற்பரஞ் சுடர்தாள்—கனவினு நனவினுங் கழலாக் கருத்தினன்—பழி தரு முத்திப் பகுப்பெலா மொருவி—யழிவில்பே ரின்ப மளிக்குறு முத்தியை—யெளி தினிற் றெரித்துப் பளகிலின் புறுத்துஞ்—சைவசித் தாந்த மெய்தரு பனுவலை—யையந் திரிபற வகத்தினன் குணர்ந்தோன்—கையற விகந்த கருணையங் கடலோன்—கூறுசீர் புனையு மாறுமுக நாவலன்—பரவிய வுவப்பிற் பதித்தனன்—விரவிய வுல கம் விளங்குதற் பொருட்டே.

பாலியலதிகாரவகராதி.

பால்.	பக்கம்.
அறத்துப்பால்.	௧
காமத்துப்பால்.	௩௦௭
பொருட்பால்.	௧௧௨
இயல்.	**பக்கம்.**
அங்கவியல்.	௧௮௨
அரசியல்.	௧௧௨
இல்லறவியல்.	௧௫
ஒழிபியல்.	௨௭௧
களவியல்.	௩௦௭
கற்பியல்.	௩௨௯
துறவறவியல்.	௬௮
அதிகாரம்.	**பக்கம்.**
அடக்கமுடைமை.	௩௭
அமைச்சு.	௧௮௨
அரண்.	௨௧௩
அருளுடைமை.	௬௮
அலரறிவுறுத்தல்.	௩௨௬
அவர்வயின்விதும்பல்.	௩௬௧
அவாவறுத்தல்.	௧௦௫
அவையஞ்சாமை.	௨௦௭
அவையறிதல்.	௨௦௪
அழுக்காறாமை.	௪௭
அறன்வலியுறுத்தல்.	௧௨
அறிவுடைமை.	௧௨௪
அன்புடைமை.	௨௪
ஆள்வினையுடைமை.	௧௭௭
இகல்.	௨௪௩
இடனறிதல்.	௧௪௪
இடுக்கணழியாமை.	௧௮௦
இரவச்சம்.	௩௦௧
இரவு.	௨௯௮
இல்வாழ்க்கை.	௧௫
இறைமாட்சி.	௧௧௨
இனியவைகூறல்.	௨௯
இன்னாசெய்யாமை.	௮௮
ஈகை.	௬௨
உட்பகை.	௨௫௧

அதிகாரம்.	பக்கம்.
உழவு.	௨௯௨
உறுப்புநலனழிதல்.	௩௫௩
ஊக்கமுடைமை.	௧௭௨
ஊடலுவகை.	௩௭௯
ஊழ்.	௧௦௮
ஒப்புரவறிதல்.	௫௯
ஒழுக்கமுடைமை.	௩௯
ஒற்றாடல்.	௧௬௯
கடவுள்வாழ்த்து.	௩
கண்ணோட்டம்.	௧௬௬
கண்விதுப்பழிதல்.	௩௩௫
கயமை.	௩௦௩
கல்லாமை.	௧௧௮
கல்வி.	௧௧௫
கள்ளாமை.	௭௯
கள்ளுண்ணாமை.	௨௬௨
கனவுநிலையுரைத்தல்.	௩௪௭
காதற்சிறப்புரைத்தல்.	௩௧௯
காலமறிதல்.	௧௪௧
குடிசெயல்வகை.	௨௯௦
குடிமை.	௨௭௧
குறிப்பறிதல்.	௨௦௨
குறிப்பறிதல்.	௩௧௦
குற்றங்கடிதல்.	௧௨௬
கூடாநட்பு.	௨௩௫
கூடாவொழுக்கம்.	௭௬
கேள்வி.	௧௨௧
கொடுங்கோன்மை.	௧௬௧
கொல்லாமை.	௯௧
சான்றாண்மை.	௨௭௯
சிற்றினஞ்சேராமை.	௧௩௨
சுற்றந்தழால்.	௧௫௨
சூது.	௨௬௫
செங்கோன்மை.	௧௫௮
செய்ந்நன்றியறிதல்.	௩௨
சொல்வன்மை.	௧௮௫
தகையணங்குறுத்தல்.	௩௦௭

அதிகாரம்.	பக்கம்.
தவம்.	௭௩
தனிப்படர்மிகுதி.	௩௪௧
தீநட்பு.	௨௩௨
தீவினையச்சம்.	௫௭
துறவு.	௯௭
தூது.	௧௯௬
தெரிந்துசெயல்வகை.	௧௩௫
தெரிந்துதெளிதல்.	௧௪௬
தெரிந்துவினையாடல்.	௧௪௯
நடுவுநிலைமை.	௩௪
நட்பாராய்தல்.	௨௨௭
நட்பு.	௨௨௪
நலம்புனைந்துரைத்தல்.	௩௧௭
நல்குரவு.	௨௯௫
நன்றியில்செல்வம்.	௨௮௪
நாடு.	௨௧௦
நாணுடைமை.	௨௮௭
நாணுத்துறவுரைத்தல்.	௩௨௨
நிலையாமை.	௯௪
நிறையழிதல்.	௩௫௮
நினைந்தவர்புலம்பல்.	௩௪௪
நீத்தார்பெருமை.	௯
நெஞ்சொடுகிளத்தல்.	௩௫௫
நெஞ்சொடுபுலத்தல்.	௩௭௦
பகைத்திறந்தெரிதல்.	௨௪௮
பகைமாட்சி.	௨௪௬
பசப்புறுபருவரல்.	௩௩௮
படர்மெலிந்திரங்கல்.	௩௩௨
படைச்செருக்கு.	௨௨௧
படைமாட்சி.	௨௧௮
பண்புடைமை.	௨௮௨
பயனிலசொல்லாமை.	௫௪
பழைமை.	௨௩௦
பிரிவாற்றாமை.	௩௨௯
பிறனில்விழையாமை.	௪௨

அதிகாரம்.	பக்கம்.
புகழ்.	௬௪
புணர்ச்சிமகிழ்தல்.	௩௧௩
புணர்ச்சிவிதும்பல்	௩௬௭
புதல்வரைப்பெறுதல்.	௨௧
புலவி.	௩௭௩
புலவிநுணுக்கம்.	௩௭௬
புலான்மறுத்தல்.	௭௧
புல்லறிவாண்மை.	௨௪௦
புறங்கூறாமை.	௫௨
பெண்வழிச்சேறல்.	௨௫௬
பெரியாரைத்துணைக்கோடல்.	௧௨௯
பெரியாரைப்பிழையாமை.	௨௫௩
பெருமை.	௨௭௬
பேதைமை.	௨௩௮
பொச்சாவாமை.	௧௫௫
பொருள்செயல்வகை.	௨௧௫
பொழுதுகண்டிரங்கல்.	௩௫௦
பொறையுடைமை.	௪௪
மடியின்மை.	௧௭௪
மருந்து.	௨௬௮
மன்னரைச்சேர்ந்தொழுகல்.	௧௯௯
மானம்.	௨௭௪
மெய்யுணர்தல்.	௧௦௧
வரைவின்மகளிர்.	௨௫௯
வலியறிதல்.	௧௩௮
வாய்மை.	௮௨
வாழ்க்கைத்துணைநலம்.	௧௮
வான்சிறப்பு.	௬
விருந்தோம்பல்.	௨௬
வினைசெயல்வகை.	௧௯௪
வினைத்திட்பம்	௧௯௧
வினைத்தூய்மை.	௧௮௮
வெகுளாமை.	௮௫
வெஃகாமை.	௪௯
வெருவந்தசெய்யாமை.	௧௬௩

பாலியலதிகாரவகராதி முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருவள்ளுவர்குறள்.

பரிமேலழகருரை.

அறத்துப்பால்.

உரைப்பாயிரம்.

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத் தழிவில்வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரானெடுக்கப்பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. * அவற்றுள், வீடென்பது சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம் வழக்குத் தண்டமென மூவகைப்படும். †

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர்முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று ‡ அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்.

வழக்காவது ஒருபொருளைத் தனித்தனியே எனதெனதென்றிருப்பார் அது காரணமாகத் தம்முண்மாறுபட்டு அப்பொருண்மேற் சொல்வது. அது கடன்கோடன் முதற் பதினெட்டுப் பதத்ததாம். §

---

* அறம் பொருள் இன்பம் வீடென்பனவற்றை வடநூலார் முறையே தருமம் அருத்தம் காமம் மோக்ஷமென்பர்.

† ஒழுக்கம் வழக்குத் தண்டமென்பனவற்றை வடநூலார் முறையே ஆசாரம் விவகாரம் பிராயச்சித்தமென்பர்.

‡ நிலை - ஆச்சிரமம்.

§ விவகாரபதம் பதினெட்டாவன கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதைநல்காமை, ஒப்பிப்பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடையனல்லான்விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ளமொப்பாமை, கட்டுப்பாடுகடத்தல், நிலவழக்கு, மாதராடவர்தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு எனவிவை.

தண்டமாவது அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத் தகவொறுத்தல்.

இவற்றுள் வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்துதற்பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற்சிறப்பிலவாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வுமிகுதியானுந் தேயவியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றையொழித்து, ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமெனவெடுத்துக்கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளொழித்து, எல்லார்க்குமொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறந் துறவறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கைநிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படுவதாகலின், அதனைமுதற்கட் கூறுவான்றொடங்கி, எடுத்துக்கொண்ட இலக்கிய மினிதுமுடிதற்பொருட்டுக் கடவுள்வாழ்த்துக் கூறுகின்றார்.

பாயிரம்.

முதல் அதிகாரம். கடவுள்வாழ்த்து.

அஃதாவது கவி தான் வழிபடுகடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக்கடவுளை யெனவறிக: என்னை? சத்துவமுதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான். அம்மூன்று பொருளை யுங் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரெனவுணர்க.

க. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. க.

இதன்பொருள். எழுத்தெல்லாம் அகர முதல - எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன:—உலகு ஆதிபகவன் முதற்று - அதுபோல உலகம் ஆதிபகவனாகிய * முதலையுடைத்து. என்றவாறு.

இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத்தலைமை விகாரத் தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற்பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங்கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி, எழுத்தெல்லாமென்றார். ஆதிபகவன் என்னுமிருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு. உலகென்றது ஈண்டுயிர்கண்மேனின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், ஆதிபகவன்முதற்றேயென உலகின்மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தாகக்கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவுளதுண்மை கூறப்பட்டது.()

உ. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். உ.

இ - ள். கற்றதனால் ஆய பயன் என் - எல்லாநூல்களையுங்கற்றவர்க்கு அக்கல்வியறிவானாய பயன் யாது?—வாலறிவன் நற்றாள் தொழாரெனின் - மெய்யுணர்வினையுடையானது நல்ல தாள்களைத் தொழாராயின். எ - று.

எவனென்னும் வினாப்பெயர் என்னென்றாய், ஈண்டின்மைகுறித்துநின்றது. கொல்லென்பது அசைநிலை. பிறவிப்பிணிக்கு மருந்தாகலின், நற்றாளென்றார். ஆகமவறிவிற்குப் பயன் அவன்றாளைத்தொழுது பிறவியறுத்தலென்பது இதனாற் கூறப்பட்டது. (உ)

ங. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். ங.

இ - ள். மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார் - மலரின்கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார்—நிலமிசை நீடு வாழ்வார் - எல்லாவுலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார். எ - று.

* ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னுமாறுக்கும் பகமென்னும் பெயருண்மையால், பகவனென்பதற்கு இவ்வாறுகுணங்களையு முடையோனென்பது பொருள்.

அன்பானினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின், ஏகினானென இறந்தகாலத்தாற் கூறினார்: என்னை? "வாராக் காலத்து நிகழுங் காலத்து—மோராங்குவருஉம் வினைச்சொற் கிளவி—யிறந்தகா லத்துக் குறிப்பொடு கிளத்தல்—விரைந்த பொருள வென்மனார் புலவர்." * என்பதோத்தாகலின். இதனைப் "பூமேனடந்தான்" என்பதோர் பெயர்பற்றிப் பிறிதோர் கடவுட்கேற்றுவாருமுளர். சேர்தல் - இடைவிடாது நினைத்தல். (௩)

௪. வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. ௪.

இ - ள். வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு - ஒருபொருளையும் விழைதலும் வெறுத்தலுமில்லாதவனடியைச் சேர்ந்தார்க்கு—யாண்டும் இடும்பை இல - எக்காலத்தும் பிறவித்துன்பங்கள் உளவாகா. எ - று.

பிறவித்துன்பங்களாவன தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமெனமூவகையான் வருந்துன்பங்கள். அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டு † மின்மையின், அவை காரணமாக வரும் மூவகைத்துன்பங்களும் இலவாயின. (௪)

௫. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. ௫.

இ - ள். இருள் சேர் இருவினையும் சேரா - மயக்கத்தைப்பற்றி வரும் நல்வினை ‡ தீவினையென்னு மிரண்டுவினையும் உளவாகா—இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு - இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினாரிடத்து. எ - று.

இன்ன தன்மைத்தென ஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை இருளென்றும், நல்வினையும் பிறத்தற் கேதுவாகலான் இருவினையுஞ் சேராவென்றுங் கூறினார். இறைமைக்குணங்களிலராயினாரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேராவாகலின், அவை முற்றவுமுடைய இறைவன்புகழே பொருள்சேர் புகழெனப்பட்டது. புரிதல் - எப்பொழுதுஞ்சொல்லுதல். (௫)

௬. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். ௬.

இ - ள். பொறி வாயில் ஐந்து அவித்தான் - மெய், வாய், கண், மூக்குச், செவியென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது—பொய் தீர் ஒழுக்கநெறி நின்றார் - மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார்—நீடு வாழ்வார் - பிறப்பின்றி எக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்வார். எ - று.

---

* தொல்காப்பியம், வினையியல், ௪௪. † வேண்டுதலும் வேண்டாமையும்.

‡ ஈண்டு நல்வினையென்றது அழிதன்மாலையவாய துறக்கவின்ப முதலிய காமியங்களைப்பயப்பனவாகிய வேள்விமுதலியனவற்றை. இவை வீட்டுக்கு நேரே வாயிலாகிய தத்துவஞானத்தைப் பயவாமைமாத்திரையேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலுமுடையனவாம். ஆதலால், இந்நல்வினை தீவினை யிரண்டும் ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துதற்கண் பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முளொப்பனவாமென்க. சரியை கிரியை யோகங்கள் ஞானம் வாயிலாக வீடுபயத்தலின், ஈண்டு, நல்வினையென்றது அவற்றையன்றென்க.

புலன்கள் ஐந்தாகலான், அவற்றின்கட்செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று. ஒழுக்கநெறி ஐந்தவித்தானாற் சொல்லப்பட்டமையின், ஆண்டையாறனுருபு செய்யுட்கிழமைக்கண்வந்தது, கபிலரதுபாட்டு என்பது போல. இவை நான்குபாட்டானும் இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறிநிற்றலுஞ் செய்தார் வீடுபெறுவரென்பது கூறப்பட்டது. (௬)

௭. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. ௭.

இ - ள். தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - ஒருவாற்றானுந் தனக்கு நிகரில்லாதவனது தாளைச் சேர்ந்தார்க்கல்லது,—மனக்கவலை மாற்றல் அரிது - மனத்தின்கணிகழுந் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது. எ - று.

"உறற்பால - தீண்டா விடுத லரிது." * என்றாற்போல ஈண்டு அருமை இன்மைமேனின்றது. தாள் சேராதார் பிறவிக்கேதுவாகிய காம வெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின், பிறந்து அவற்றான் வருந்துன்பங்களுள் அழுந்துவரென்பதாம். (௭)

௮. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது. ௮.

இ - ள். அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க்கல்லது—பிற ஆழி நீந்தல் அரிது - அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது. எ - று.

அறம், பொருள், இன்பமென உடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப் பிரித்தமையான், ஏனைப்பொருளுமின்பமும் பிறவெனப்பட்டன. பலவேறுவகைப்பட்ட அறங்களெல்லாவற்றையுந் தனக்கு வடிவாகவுடையனாகலின், அறவாழியந்தணனென்றார். அறவாழியென்பதனைத் தருமசக்கரமாக்கி அதனையுடைய அந்தணனென்றுரைப்பாருமுளர். அப்புணையைச் சேராதார் கரைகாணாது அவற்றுள்ளே யழுந்துவராகலின், நீந்தலரிதென்றார். இஃதேகதேசவுருவகம். (௮)

௯. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை. ௯.

இ - ள். கோள் இல் பொறியிற் குணம் இல - தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள்போலப் பயன்படுதலுடையவல்ல—எண்குணத்தான் தாளை வணங்காத் தலை - எண்வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத தலைகள். எ - று.

எண்குணங்களாவன தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை எனவிவை. † இவ்வாறு சைவாக

* நாலடியார், பழவினை,—ஈண்டுநீர் வையத்துளெல்லாரு மெத்துணையும்—வேண்டார்மற் றீய விழைபய னல்லவை—வேண்டினும் வேண்டா விடினு முறற்பால—தீண்டாவிடுத லரிது.

† தன்வயத்தனாதல்—சுவதந்திரத்துவம். தூயவுடம்பினனாதல்—விசுத்ததேகம். இயற்கையுணர்வினனாதல்—நிராமயான்மா. முற்றுமுணர்தல்—சருவஞ்ஞத்துவம். இயல்பாகவே பாசங்

மத்துக் கூறப்பட்டது. அணிமாவை * முதலாகவுடையனவெனவும், கடையிலாவறிவை † முதலாகவுடையனவெனவும் உரைப்பாருமுளர். காணாத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயனிலவெனத் தலைமேல்வைத்துக் கூறினர்; கூறினரேனும், இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனிலவென்பதூஉங்கொள்க. இவை மூன்றுபாட்டானும் அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலுஞ் செய்யாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது. (கூ)

கo. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார். கo.

இ-ள். இறைவன் அடி (சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் - இறைவனடியென்னும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரியகடலை நீந்துவர்:—சேராதார் நீந்தார் - அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனுளழுந்துவர். எ - று.

காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், பிறவிப்பெருங்கடலென்றார். சேர்ந்தாரென்பது சொல்லெச்சம். உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கு அஃதறாமையுமாகிய இரண்டும் இதனால் நியமிக்கப்பட்டன. (கo)

உம் அதி.—வான்சிறப்பு.

அஃதாவது அக்கடவுளதாணையான் உலகமும் அதற்குறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற்கேதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கக. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று. க.

இ-ள். வான் நின்று உலகம் வழங்கி வருதலால் - மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலான்,—தான் அமிழ்தமென்று உணரற் பாற்று - அம்மழைதான் உலகத்திற்கு அமிழ்தமென்று உணரும் பான்மையையுடைத்து. எ - று.

நிற்பவென்பது நின்றெனத் திரிந்து நின்றது. உலகமென்றது எண்டுயிர்களை. அவை நிலைபெற்று வருதலாவது பிறப்பு இடையறாமையின் எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தமுண்டார் சாவாது நிலைபெறுதலின், உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை அமிழ்தமென்றுணர்கவென்றார். (க)

களிநீங்குதல்—அநாதிபோதம். பேரருளுடைமை—அலுப்தசத்தி. முடிவிலாற்றலுடைமை—அநந்தசத்தி. வரம்பிலின்பமுடைமை—திருப்தி. "எட்டு வான்குணத் தீசனெம் மான் றனை" எனத் திருநாவுக்கரசுநாயனாரும், "இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தினானை யிறையவனை மறையவனை யெண்குணத்தி னானை" எனச் சுந்தரமூர்த்திநாயனாரும் அருளிச்செய்தவாற்றானும், இறைவனுக்கு எண்குணமுண்மை சிவாகமநூற்றுணிவென்பதறிக.

* அணிமா முதலிய எண்சித்திகளாவன அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசிதை, வசிதை எனவிவை.

† கடையிலாவறிவு முதலிய எண்குணங்களாவன கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு எனவிவை. இவ்வாறு ஆருகதநூலிற் கூறப்பட்டது.

கஉ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை. உ.

இ - ள். துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி - உண்பார்க்கு நல்ல வுணவுகளை உளவாக்கி,—துப்பார்க்குத் துப்பு ஆயதூஉம் மழை - அவற்றையுண்கின்றார்க்குத் தானும் உணவாய் நிற்பதூஉம் மழை. எ - று.

தானுமுணவாதலாவது தண்ணீராயுண்ணப்படுதல். சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினமையின், அஃறிணைக்கும் இஃதொக்கும். இவ்வாறு உயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் நீக்குதலின், அவை வழங்கிவருதலுடையவாயின வென்பதாம். (உ)

கங. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி. ங.

இ - ள். விண் இன்று பொய்ப்பின் - மழை வேண்டுங்காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின்,—விரி நீர் வியன் உலகத்துள் - கடலாற் சூழப்பட்ட அகன்றவுலகத்தின்கண்—நின்று உடற்றும் பசி - நிலைபெற்று உயிர்களை வருத்தும் பசி. எ - று.

கடலுடைத்தாயினும் அதனாற் பயனில்லையென்பார், விரி நீர் வியனுலகத்தென்றார். உணவின்மையின், பசியான் உயிர்கள் இறக்குமென்பதாம். (ங)

கச. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். ச.

இ - ள். உழவர் ஏரின் உழார் - உழவர் ஏரானுழுதலைச்செய்யார்,—புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால் - மழையென்னும் வருவாய் தன் பயன் குன்றின். எ - று.

குன்றியக்காலென்பது குறைந்துநின்றது. உணவின்மைக்குக் காரணங்கூறியவாறு. (ச)

கரு. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை. ரு.

இ - ள். கெடுப்பதூஉம் - பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம்—கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே எடுப்பதூஉம் - அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப்பெய்து முன் கெடுத்தாற்போல எடுப்பதூஉம்—எல்லாம் மழை - இவையெல்லாம் வல்லது மழை. எ - று.

மற்று வினைமாற்றின்கண்வந்தது. ஆங்கென்பது மறுதலைத்தொழிலுவமத்தின்கண் வந்த உவமச்சொல். கேடுமாக்கமும் எய்துதற்குரியார் மக்களாதலின், கெட்டார்க்கென்றார். எல்லாமென்றது அம்மக்கண்முயற்சிவேறுபாடுகளாற் கெடுத்தல் எடுத்தல்கடாம் பலவாதல் நோக்கி. வல்லதென்பது அவாய்நிலையான்வந்தது. * மழையினதாற்றல் கூறியவாறு. (ரு)

---

* அவாய்நிலை ஒருசொல் மற்றொருசொல்லை அவாவிநிற்றல். இவ்வாறு அவாய் நிலையால் வருவித்து முடிப்பதனை வடநூலார் அத்தியாகாரமென்பர்.

கசு. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. சு.

இ - ள். விசும்பின் துளி வீழின் அல்லால் - மேகத்திற்றுளிவீழிற் காண்பதல்லது,—மற்று ஆங்கே பசும்புற்றலை காண்பு அரிது - வீழாதாயின், அப்பொழுதே பசும்புல்லினது தலையையுங் காண்டல் அரிது. எ - று.

விசும்பு ஆகுபெயர். மற்று வினைமாற்றின்கண் வந்தது. இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. ஓரறிவுயிரும் இல்லை யென்பதாம். (சு)

கஎ. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின். எ.

இ - ள். நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் - அளவில்லாதகடலும் தன்னியல்பு குறையும்,—எழிலி தான் தடிந்து நல்காதாகி விடின் - மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கட்பெய்யாது விடுமாயின். எ - று.

உம்மை சிறப்பும்மை. தன்னியல்பு குறைதலாவது நீர்வாழுயிர்கள் பிறவாமையும், மணி முதலாயின படாமையுமாம். ஈண்டுக் குறைத்தலென்றது முகத்தலை; அது "கடல்குறைபடுத்தநீர் கல் குறைபடவெறிந்து" * என்பதனானும் அறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழை வேண்டுமென்பதாம். இவை ஏழுபாட்டானும் உலகநடத்தற்கேதுவாதல் கூறப்பட்டது. (எ)

கஅ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. அ.

இ - ள். வானோர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல்லாது - தேவர்கட்கும் இவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழவும் பூசையும் நடவாது,—வானம் வறக்குமேல் - மழை பெய்யாதாயின். எ - று.

நைமித்திகத்தோடு கூடிய நித்தியமென்றாராகலின், செல்லாதென்றார். உம்மை சிறப்பும்மை. நித்தியத்திற்றாழ்வுதீரச் செய்வது நைமித்திக † மாதலின், அதனை முற் கூறினார். (அ)

கசு. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். சு.

இ - ள். வியன் உலகம் தானம் தவம் இரண்டும் தங்கா - அகன்றவுலகின்கண் தானமும் தவமுமாகிய இரண்டறமும் உளவாகா,—வானம் வழங்காதெனின் - மழை பெய்யாதாயின். எ - று.

தானமாவது அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல். தவமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கல் முதலாயின. பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின்மேலும் நின்றன. (சு)

உ0 நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. க0.

---

* பரிபாடல். உ0 † நைமித்திகம்—நிமித்தத்தாலாவது.

இ - ள். யார் யார்க்கும் நீர் இன்று உலகு அமையாது எனின் - எவ்வகைமேம் பாட்டார்க்கும் நீரையின்றி உலகியல் அமையாதாயின்,—ஒழுக்கு வான் இன்று அமையாது - அந்நீர் இடையறுதொழுகும் ஒழுக்கும் வானையின்றியமையாது. எ - று.

பொருளின்பங்களை உலகியலென்றார், அவை இம்மைக்கண்ணவாகலின். இடையறுதொழுகுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல். நீரின்றமையாதுலகென்பது எல்லாரானுந் தெளியப்படுதலின், அதுபோல ஒழுக்கும் வானின்றமையாமை தெளியப்படுமென்பார், நீரின்றமையாதுலகெனினென்றார். இதனை நீரையின்றி யமையாது உலகாயின் எத்திறத்தார்க்கும் மழையையின்றி ஒழுக்கம் நிரம்பாதென உரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் அறம்பொருளின்பங்கள் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

௩ம் அதி.—நீத்தார்பெருமை.

அஃதாவது முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ்வறமுதற்பொருள்களை உலகிற்கு உள்ளவாறுணர்த்துவார் அவராகலின், இது வான்சிறப்பின்பின் வைக்கப்பட்டது.

௨௧. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு. க.

இ - ள். ஒழுக்கத்து நீத்தார் பெருமை - தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறந்தாரது பெருமையை—விழுப்பத்துவேண்டும் பனுவற்றுணிவு - விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிதென விரும்பும் நூல்களது துணிவு. எ - று.

தமக்கு உரியவொழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலாவது,—தத்தம் வருணத்திற்கும் நிலைக்குமுரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும், அறம்வளரப் பாவந்தேயும், பாவந்தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்தவநித்தங்களது வேறு பாட்டுணர்வும் அழிதன்மாலையவாய இம்மை மறுமையின்பங்களி னுவர்ப்பும் பிறவித்துன்பங்களுந் தோன்றும், அவைதோன்ற வீட்டின்கணாசையுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சியுண்டாம், அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும் அகப்பற்றாகிய யானென்பதும் விடும், ஆகலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே யுவர்த்துவிடுதலெனக்கொள்க. பனுவலெனப் பொதுப்படக் கூறியவதனான், ஒன்றையொன்றெவ்வாத சமயநூல்களெல்லாவற்றிற்கும் இஃது ஒத்த துணிவென்பது பெற்றாம். செய்தாரது துணிவு பனுவன்மேலேற்றப்பட்டது. (க)

௨௨. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று. ௨.

இ - ள். துறந்தார் பெருமை துணைக் கூறின் - இருவகைப் பற்றினையும் விட்டாரது பெருமையை இவ்வளவென்று எண்ணாற் கூறியறியலுறின்,அளவுபடாமையான்—வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று - இவ்வுலகத்துப் பிறந்திறந்தாரை எண்ணி இத்துணையரென அறியலுற்றாற்போலும். எ - று.

முடியாதென்பதாம். கொண்டாலென்னும் வினையெச்சம் கொண்டெனத்திரிந்து நின்றது. (௨)

உ௩. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. ௩.

இ - ள். இருமை வகை தெரிந்து - பிறப்பு வீடென்னும் இரண்டனது துன்ப வின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து—ஈண்டு அறம் பூண்டார் பெருமை - அப்பிறப் பறுத்தற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டாரது பெருமையே—உலகு பிறங் கிற்று - உலகின்கணுயர்ந்தது. எ - று.

"தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப்போல இருமை யென்றது ஈண்டெண்ணின்கணின்றது. * பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொக்கது. இதனால் திகிரியுருட்டி உலகமுழுதாண்ட அரசர் முதலாயினார் பெருமை பிரிக்கப்பட் டது. இவைமூன்றுபாட்டானும் நீத்தார்பெருமையே எல்லாப்பெருமையினும் மிக்க தென்பது கூறப்பட்டது. (௩)

உ௪. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. ௪.

இ - ள். உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் - திண்மையென் னுந் தோட்டியால் பொறிகளாகிய யானையைந்தையும் தத்தம் புலங்கண்மேற் செல் லாமற் காப்பான்—வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து - எல்லாநிலத்தினும் மிக்க தென்று சொல்லப்படும் வீட்டுநிலத்திற்கு ஓர்வித்தாம். எ - று.

இஃதேகதேசவுருவகம். திண்மை ஈண்டறிவின்மேற்று. அந்நிலத்திற்சென்று முளைத்தலின், வித்தென்றார். ஈண்டுப் பிறந்திறந்து வரும் மகனல்லனென்பதாம். ()

உரு. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி. ரு.

இ - ள். ஐந்து அவித்தான் ஆற்றல் - புலன்களிற் செல்கின்ற அவாவைந்தை யும் அடக்கினனது வலிக்கு—அகல் விசும்புள்ளார்கோமான் இந்திரனே சாலும் கரி - அகன்ற வானத்துள்ளாரிறைவனாகிய இந்திரனே அமையுஞ்சான்று. எ - று.

ஐந்துமென்னும் முற்றும்மையும் ஆற்றற்கென்னும் நான்கனுருபும் செய்யுள்விகா ரத்தாற்றொக்கன. தான் ஐந்தவியாதுசாப மெய்திநின்று அவித்தவனதாற்றல் உண ர்த்தினானாகலின், இந்திரனே சாலுங்கரியென்றார். (ரு)

உசா. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். சா.

இ - ள். செயற்கரிய செய்வார் பெரியர் - ஒத்த பிறப்பினராய மக்களுள் செய் தற்கெளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர்:—செயற்கரியசெய் கலாதார் சிறியர் - அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றைச் செய்யமாட்டாதார் சிறியர். எ - று.

* ஈண்டு இருமையென்பதனுள் மைவிகுதி, தன்மையுணர்த்தாது தன்மையுடைப் பொரு ளையே யுணர்த்தலின், பகுதிப்பொருள் விகுதி யென்னுஞ் சுவார்த்தபாவ தத்திதப் பிரத்தியயம்.

செயற்கெளியவாவன மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளாற் புலன்களிற் செலுத்தலும், வெஃகலும், வெகுடலும் முதலாயின. செயற்கரியவாவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோகவுறுப்புக்கள். நீரிற்பலகான் மூழ்கல் முதலாய நாலிருவழக்கிற்றாபதபக்கமென்பாருமுளர்; * அவை நியமத்துள்ளே அடங்கலின், நீத்தாரது பெருமைக்கேலாமையறிக. (௬)

௨௭. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு. ௭.

இ-ள். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின்வகை - சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமுமென்று சொல்லப்பட்ட தன்மாத்திரைகளைந்தனது கூறுபாட்டையும்—தெரிவான்கட்டே உலகு - ஆராய்வானறிவின்கண்ணதே உலகம். எ-று.

அவற்றின் கூறுபாடாவன பூதங்கட்கு முதலாகிய அவைதாமைந்தும், அவற்றின்கட்டோன்றிய அப்பூதங்களைந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்துமாக இருபதுமாம். வகைதெரிவான்கட்டென உடம்பொடுபுணர்த்ததனால், † தெரிகின்ற புருடனும் அவன்றெரிதற்கருவியாகியமான் ‡ அகங்கார மனங்களும் அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாம். தத்துவமிருபத்தைந்தனையுந் தெரிதலாவது, மூலப்பகுதி ஒன்றிற் றோன்றியதன்மையிற் பகுதியேயாவதல்லது விகுதியாகாதெனவும், அதன்கட்டோன்றிய மானும் அதன்கட்டோன்றிய அகங்காரமும் அதன்கட்டோன்றிய தன்மாத்திரைகளுமாகிய ஏழும் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும் தங்கட்டோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலுமுடையவெனவும், அவற்றின்கட்டோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினாறும் தங்கட்டோன்றுவன வின்மையின் விகுதியேயாவதல்லது பகுதியாகாவெனவும், புருடன் தானொன்றிற்றோன்றாமையானும் தன்கட்டோன்றுவனவின்மையானும் இரண்டுமல்லனெனவும், சாங்கிய நூலுளோதியவாற்றான் ஆராய்தல். இவ்விருபத்தைந்துமல்லது உலகெனப் பிறிதொன்றில்லையென உலகினதுண்மையறிதலின், அவனறிவின்கண்ணதாயிற்று. இவை நான்குபாட்டானும் பெருமைக்கேது ஐந்தவித்தலும் யோகப்பயிற்சியும் தத்துவவுணர்வுமென்பது கூறப்பட்டது. (௭)

௨௮. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். ௮.

இ-ள். நிறைமொழி மாந்தர் பெருமை - நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை—நிலத்து மறைமொழி காட்டிவிடும் - நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் § காட்டும். எ-று.

---

* நீரிற்பலகான்மூழ்கல் முதலியவெட்டும் "நீர்பலகான் மூழ்கி நிலத்தசை இத்தோலுடையாச்—சோர்சடை தாழச் சுடரோம்பி - யூரடையார்—கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்—வானகத்துய்க்கும் வழி." என்னும் வெண்பாவானுணர்க. வெண்பாமாலை, வாகைப் படலம், ௧௬.

† உடம்பொடு புணர்த்தலென்பது ஒருத்தி. இதனை வடநூலார் நிபாதமென்பர்.

‡ மான்—மகத்தத்துவம். மஹத்தென்னும் வடமொழி எழுவாயொருமையின் மஹாந் என நிற்கும். அது தமிழின் மானெனத் தற்பவமாயிற்று. சாங்கியநூலிலே மான் என்றது புத்தியை.

§ கண்கூடு—பிரத்தியக்ஷம்.

நிறைமொழியென்பது அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் மொழி. காட்டுதல் பயனுணர்த்துதல். (அ)

உகூ. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. கூ.

இ - ள். குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி - துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கணின்ற முனிவரது வெகுளி,—கணமேயும் காத்தல் அரிது - தானுள்ளவளவு கணமேயாயினும், வெகுளப்பட்டாராற்றடுத்தல் அரிது. எ - று.

சலியாமையும் பெருமையும் பற்றிக் குணங்களைக் குன்றாகவுருவகஞ்செய்தார். குணம் சாதியொருமை*. அநாதியாய் வருகின்றவாறுபற்றி ஓரோவழி வெகுளி தோன்றியபொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்குமாகலின் கணமேயுமென்றும், நிறைமொழிமாந்தராகலின் காத்தலரிதென்றுங் கூறினார். இவையிரண்டுபாட்டானும் அவராணை கூறப்பட்டது. (கூ)

நூ0. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். க0.

இ - ள். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் - எல்லாவுயிர்கண்மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகலான்,—அந்தணர் என்போர் அறவோர் - அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தினின்றவர். எ - று.

பூணுதல் விரதமாகக்கோடல். அந்தணரென்பது அழகிய தட்பத்தினையுடையாரென ஏதுப்பெயராகலின், அஃது அவ்வருளுடையார்மேலன்றிச் செல்லாதென்பது கருத்து. அவ்வாறாணையுடையராயினும் உயிர்கண்மாட்டருளுடையரென்பது இதனாற் கூறப்பட்டது. (க0)

௪ ம் அதி.—அறன்வலியுறுத்தல்.

அஃதாவது அம்முனிவரானுணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப்பொருளு மின்பமும் போலாது, அறன், இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்தென்பது கூறுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும். "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு—மறத்து வழிப்படூஉந்தோற்றம் போல" † என்றார் பிறரும்.

நூக. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு. க.

---

* சாதியொருமையாவது ஒருசொல் ஒருமையீறு தோன்ற நின்றும் தோன்றாது நின்றும் பின் ஒருமைப்பன்மை வினையீறாக மேல்வந்து முடிக்குஞ்சொற்களுமின்றித் தானே பன்மைப் பொருளுணர்த்துவது. இதனை வடநூலார் சாத்தியேகவசனமென்பர். "ஈறுதோன்றியசாதி யொருமையு—மீறுதோன்றாத சாதி யொருமையு - மென விரு திறப்படு மிருதிணை மருங்கினும்." "சிவிகை—பொறுத்தானோ டூர்ந்தா னிடை." "அஞ்சுவ தஞ்சாமைபேதைமை" என்புழிப் பொறுத்தான் அஞ்சுவது என ஈறுதோன்றிய சாதியொருமை வரும். "தென்புலத்தார் தெய்வம்" "குணமென்னுங் குன்றேறி நின்றார்" என்புழித் தெய்வம் குணம் என வீறுதோன்றாச் சாதியொருமை வரும்.

† புறநானூறு. நூக.

இ - ள். சிறப்பு ஈனும் - வீடுபேற்றையுந்தரும்;—செல்வமும் ஈனும் - அறக்கம் முதலிய செல்வத்தையுந்தரும்;—உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன் - ஆதலான் உயிர்கட்கு அறத்தின்மிக்க ஆக்கம் யாது? எ - று.

எல்லாப்பேற்றினுஞ் சிறந்தமையின், வீடு சிறப்பெனப்பட்டது. ஆக்கந்தருவதனை ஆக்கமென்றார். ஆக்கம் மேன்மேலுயர்தல். ஈண்டுயிரென்றது மக்களுயிரை, சிறப்புஞ்செல்வமும் எய்துதற்குரியது அதுவேயாகலின். இதனால் அறத்தின் மிக்கவுறுதி இல்லையென்பது கூறப்பட்டது. (க)

௩௨. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. ௨.

இ - ள். அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை - ஒருவனுக்கு அறஞ்செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை:—அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை - அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை: எ - று.

அறத்தினூஉங்காக்கமுமில்லையென மேற்சொல்லியதனையே அனுவதித்தார்,* அதனாற் கேடுவருதல் கூறுதற்பயனோக்கி. இதனால் அது செய்யாவழிக் கேடுவருதல் கூறப்பட்டது. (௨)

௩௩. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். ௩.

இ - ள். ஒல்லும் வகையான் - தத்தமக்கியலுந்திறத்தான்—அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல் - அறமாகிய நல்வினையை ஒழியாதே அஃதெய்துமிடத்தானெல்லாஞ்செய்க. எ - று.

இயலுந்திறமாவது இல்லறம் பொருளளவிற்கேற்பவும், துறவறம் யாக்கைநிலைக்கேற்பவுஞ் செய்தல். ஓவாமை இடைவிடாமை. எய்துமிடமாவன மனம் வாக்குக் காயமென்பன. அவற்றாற் செய்யும் அறங்களாவன முறையே நற்சிந்தையும் நற்சொல்லும் நற்செயலு மெனவிவை. இதனான் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது. (௩)

௩௪. மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற. ௪.

இ - ள். மனத்துக்கண் மாசு இலன் ஆதல் - அவ்வாற்றான் அறஞ்செய்வான் தன் மனத்தின்கட் குற்றமுடையனல்லனாக;—அனைத்து அறன் - அவ்வளவே அறமாவது;—பிற ஆகுல நீர - அஃதொழிந்த சொல்லும் வேடமும் அறமெனப்படா, ஆரவார நீர்மைய. எ - று.

குற்றம் தீயனசிந்தித்தல். பிறரறிதல்வேண்டிச் செய்கின்றனவாகலின், ஆகுல நீரவென்றார். மனத்துமாசுடையனாயவழி அதன்வழியவாகிய மொழி மெய்களாற் செய்வன பயனிலவென்பதூஉம் பெறப்பட்டது. (௪)

* அனுவதித்தலெனினும் வழிமொழிதலெனினுமொக்கும். அனுவாதமாவது முன்னர்ப் பெறப்பட்டதொன்றனை வேறொன்று விதித்தற்பொருட்டுப் பின்னருமெடுத்தோதுதல். அதனால் அது கூறியது கூறலென்னுங்குற்றமாகாது வழிமொழிதலென்றாயிற்று. வழிமொழிதற்கு முன்னர்ப் பெறப்பட்டதனைப் புரோவாதமென்பர் வடநூலார். ஈண்டுப் புரோவாதம் "அறத்தினூஉங் காக்க மெவனோ" என்பது.

௩௫. அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொன் னுன்கு
இழுக்கா வியன்ற தறம். ௫.

இ - ள். அழுக்காறு - பிறராக்கம் பொருமையும்—அவா - புலன்கண்மேற்செல்கின்ற அவாவும்—வெகுளி - அவையேதுவாகப் பிறர்பால்வரும் வெகுளியும்—இன்னுச்சொல் - அதுபற்றிவருங் கடுஞ்சொல்லுமாகிய—நான்கும் இழுக்கா இயன்றது அறம் - இந்நான்கினையுங் கடிந்து இடையறுது நடந்தது அறமாவது. எ - று.

இதனுன் இவற்ருேடு விரவியியன்றது அறமெனப்படாதென்பதூஉங்கொள்க. இவை யிரண்டுபாட்டானும் அறத்தினதியல்பு கூறப்பட்டது. (௫)

௩௬. அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்ருத் துணை. ௬.

இ - ள். அன்று அறிவாம் என்னுது அறம் செய்க - யாம் இது பொழுதிளையமாகலின் இறக்குஞான்று செய்துமெனக் கருதாது அறத்தினை நாடோறுஞ் செய்க;—அது பொன்றுங்கால் பொன்ருத் துணை - அவ்வாறு செய்தவறம் இவ்வுடம்பினின்றும் உயிர்போங்காலத்து அதற்கு அழிவில்லாததுணையாம். எ - று.

மற்றென்பது அசைநிலை. பொன்ருத் துணையென்ருர், செய்தவுடம்பழியவும் உயிரோடொன்றி ஏனையுடம்பினுஞ் சேறலின். இதனுன் இவ்வியல்பிற்ருய அறத்தினை நிலையாத யாக்கை நிலையினபொழுதே செய்கவென்பது கூறப்பட்டது. (௬)

௩௭. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடை. எ.

இ - ள். அறத்து ஆறு இது என வேண்டா - அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகமவளவையான் உணர்த்தல்வேண்டா:—சிவிகை பொறுத்தானேடு ஊர்ந்தான் இடை - சிவிகையைக் காவுவானேடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னுனே உணரப்படும். எ - று.

பயனை ஆறென்ருர், பின்னதாகலின். எனவென்னுமெச்சத்தாற் சொல்லாகிய வாகமவளவையும், பொறுத்தானே டூர்ந்தானிடையென்றதனுற் காட்சியளவையும் பெற்ரும். உணரப்படுமென்பது சொல்லெச்சம். இதனுற் பொன்ருத்துணையாதல் தெளிவிக்கப்பட்டது. (எ)

௩௮. வீழ்நாள் படாஅமை நன்ருற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். அ.

இ - ள். வீழ் நாள் படாமை நன்று ஆற்றின் - செய்யாது கழியும் நாளுளவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்யுமாயின்,—அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல் - அச்செயல் அவன் யாக்கையோடு கூடுநாள் வரும் வழியை வாராமலடைக்குங்கல்லாம். எ - று.

ஐவகைக் குற்றத்தான்வரும் இருவகைவினையுமுள்ள துணையும் உயிர் யாக்கையோடுங் கூடிநின்று அவ்வினைகளதிருவகைப் பயனையும் நுகருமாகலான், அந்நாண் முழுவதும் வாழ்நாளெனப்பட்டது. குற்றங்களைந்தாவன அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பென்பன; இவற்றை வடநூலார் பஞ்சக்கிலேசமென்ப.

வினையிரண்டாவன நல்வினை தீவினையென்பன. பயனிரண்டாவன இன்பந்துன்பமென்பன. இதனான் அறம் வீடு பயக்குமென்பது கூறப்பட்டது. (அ)

ருகூ. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில. கூ.

இ - ள். அறத்தான் வருவதே இன்பம் - இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது;—மற்ற எல்லாம் புறத்த - அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம் இன்பமாயினுந் துன்பத்தினிடத்த,—புகழும் இல - அதுவேயுமன்றிப் புகழுமுடையவல்ல. எ - று.

ஆனுருபு ஈண்டுடனிகழ்ச்சிக்கண் வந்தது, "தூங்கு கையா னோங்கு நடைய" * என்புழிப்போல. இன்பம், காமநுகர்ச்சி, அஃதாமாறு காமத்துப்பாலின் முதற்கட் சொல்லுதும். இன்பத்திற் புறமெனவே துன்பமாயிற்று. பாவத்தான்வரும் பிறனில் விழைவு முதலாயின அக்கணத்துளின்பமாய்த் தோன்றுமாயினும் பின்றுன்பமாய் விளைதலின், புறத்தவென்றார். அறத்தோடு வாராதன புகழுமிலவெனவே, வருவது புகழுமுடைத்தென்பது பெற்றாம். இதனான் அறஞ்செய்வாரே இம்மையின்பமும் புகழும் எய்துவரென்பது கூறப்பட்டது. (கூ)

சய. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி. கய.

இ - ள். ஒருவற்குச் செயற்பாலது அறனே - ஒருவனுக்குச் செய்தற்பான்மையது நல்வினையே;—உயற்பாலது பழியே—ஒழிதற்பான்மையது தீவினையே. எ - று.

ஓருமென்பன விரண்டும் அசைநிலை. தேற்றேகாரம் பின்னுங் கூட்டப்பட்டது. பழிக்கப்படுவதனைப் பழியென்றார். இதனாற் செய்வதுமொழிவதும் நியமிக்கப்பட்டன. (கய)

இவைநான்கும் பாயிரம்.

இல்லறவியல்.

ரு ம் அதி.—இல்வாழ்க்கை.

அஃதாவது இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு. இன்னிலை அறஞ்செய்தற்குரிய இருவகைநிலையுள் முதலாதலின், இஃதறன் வலியுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

சக. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை. க.

இ - ள். இல்வாழ்வான் என்பான் - இல்லறத்தோடு கூடிவாழ்வானென்று சொல்லப்படுவான்—இயல்பு உடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை - அறவியல்பினையுடைய ஏனைமூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்கநெறிக்கண் நிலைபெற்ற துணையாம். எ - று.

* புறநானூறு. உஉ.

இல்லென்பது ஆகுபெயர். என்பானெனச்செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது*. ஏனைமூவராவார் ஆசாரியனிடத்தினின்றோதுதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரியவொழுக்கத்தானும், இல்லைவிட்டு வனத்தின்கட்டீயொடு சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யுமொழுக்கத்தானும், முற்றத்துறந்த யோகவொழுக்கத்தானுமென இவர்; இவருள் முன்னையிருவரையும் பிறர் மதமேற்கொண்டு கூறினார். இவர் இவ்வொழுக்கநெறிகளை முடியச்செல்லுமளவும் அச்செலவிற்குப் பசி நோய் குளிர் முதலியவற்றான் இடையூறு வாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய வுதவி அவ்வவ நெறிகளின் வழுவாமற்செலுத்துதலான், நல்லாற்றினின் றுணையென்றார். (௧)

௪௨. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை. ௨.

இ - ள். துறந்தார்க்கும் - களைகணானவராற்றுறக்கப்பட்டார்க்கும்—துவ்வாதவர்க்கும் - நல்கூர்ந்தார்க்கும்—இறந்தார்க்கும் - ஒருவருமின்றித் தன்பால்வந்திறந்தார்க்கும்—இல்வாழ்வான் என்பான் துணை - இல்வாழ்வானென்று சொல்லப்படுவான் துணை. எ - று.

துறந்தார்க்குப் பாவமொழிய அவர் களைகணாய் நின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவு முதலிய கொடுத்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்தலானும் துணையென்றார். இவையிரண்டுபாட்டானும் இன்னிலை எல்லாவுபகாரத்திற்கு முரித்தாதல் கூறப்பட்டது. (௨)

௪௩. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை. ௩.

இ - ள். தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற - பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்ட—ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை - ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற்செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம். எ - று.

பிதிரராவார் படைப்புக்காலத்து அயனாற்படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கிடம் தென்றிசையாதலின், தென்புலத்தாரென்றார். தெய்வமென்றது சாதியொருமை. விருந்தென்பது புதுமை; அஃது ஈண்டாகுபெயராய்ப் புதியராய் வந்தார்மேனின்றது; அவர் இருவகையர், பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாருமென. ஒக்கல் சுற்றத்தார். எல்லாவறங்களும் தானுளனாய் நின்று செய்யவேண்டுதலின், தன்னையோம்பலும் அறனாயிற்று. என்றவென்பது விகாரமாயிற்று. ஆங்கு அசை. ஐவகையும் அறஞ்செய்தற்கிடனாகலின் ஐம்புலமென்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று, இவ்வைம்புலத்திற்கும் ஐந்து கூறுவேண்டுதலானென்பதறிக. (௩)

௪௪. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில். ௪.

---

* எனப்படுவானெனநற்பாலது செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் படுவிகுதி தொக்கு என்பானென நின்றதெனக்கொண்டார் பிரயோகவிவேகநூலாரும் தொல்காப்பியச் சூத்திரவிருத்திகாரரும். இவ்வாறு வருவனவற்றை வடநூலார் நயக்கு என்பர்.

இ - ள். பழி அஞ்சிப் பாத்து ஊண் வாழ்க்கை உடைத்தாயின் - பொருள் செய்யுங்கால் பாவத்தையஞ்சி * யீட்டி, அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினோர்க்கும் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தானுண்டலை ஒருவனில்வாழ்க்கை உடைத்தாயின்,—வழி எஞ்ஞான்றும் எஞ்சல் இல் - அவன்வழி உலகத்தெஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தலில்லை. எ - று.

பாவத்தான்வந்த பிறன்பொருளைப் பகுத்துண்ணின், அறம் பொருளுடையார்மேலும் பாவந் தன்மேலுமாய் நின்று வழியெஞ்சுமாகலின், பழியஞ்சியென்றார். வாழ்வான துடைமை வாழ்க்கைமேலேற்றப்பட்டது. (ச)

சரு. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது. ரு.

இ - ள். இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின் - ஒருவனில்வாழ்க்கை தன்றுணைவிமேற் செய்யத்தகும் அன்பினையும் பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்தினையுமுடைத்தாயின்,—அது பண்பும் பயனும் - அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம். எ - று.

நிரனிறை. இல்லாட்குங் கணவற்கும் நெஞ்சொன்றாகாவழி இல்லறங் கடைபோகாமையின், அன்புடைமை பண்பாயிற்று, அறனுடைமை பயனாயிற்று. இவை மூன்று பாட்டானும் இன்னிலையினின்றான் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது. (ரு)

சசு. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன். சு.

இ - ள். இல்வாழ்க்கை அறத்தாற்றின் ஆற்றின் - ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவனாயின்,—புறத்தாற்றில் போய்ப் பெறுவது எவன் - அவன் அதற்குப் புறமாகிய நெறியிற்போய்ப் பெறும் பயன் யாது? எ - று.

அறத்தாறென்பது பழியஞ்சிப் பகுத்துண்டலும், அன்புடைமையுமென மேற்சொல்லிய ஆறு. புறத்தாறு இல்லைவிட்டு வனத்துச் செல்லுநிலை. அந்நிலையின் இது பயனுடைத்தென்பார், போய்ப் பெறுவதெவனென்றார். (சு)

சஎ. இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை. எ.

இ - ள். இல்வாழ்க்கை இயல்பினான் வாழ்பவன் என்பான் - இல்வாழ்க்கைக்கணின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவான்—முயல்வாருள் எல்லாம் தலை - புலன்களை விட முயல்வாரெல்லாருள்ளும் மிக்கவன். எ-று.

முற்றத்துறந்தவர் விட்டமையின், முயல்வாரென்றது மூன்றாநிலையினின்றாரை. அந்நிலைதான் பலவகைப்படுதலின் எல்லாருள்ளுமெனவும், முயலாதுவைத்துப் பயனெய்துதலின் தலையெனவுங்கூறினார். (எ)

சஅ. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து. அ.

---

* பழியஞ்சியென்பதனைப் பழியையஞ்சி, பழியினஞ்சி எனவிரிக்கலாமென்பது "அச்சக்கிளவிக் கைந்து மிரண்டு—மெச்சமிலவே பொருள்வயினான." என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானறிக.

இ - ள். ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை - தவஞ்செய்வாரையுந் தத்தநெறியின்கணொழுகப்பண்ணித் தானுந் தன்னறத்திற்றவறுத இல்வாழ்க்கை— நோற்பாரின் நோன்மை உடைத்து - அத்தவஞ்செய்வார் நிலையினும் பொறையுடைத்து. எ - று.

பசி முதலியவிடையூறு நீக்கலின், ஆற்றினொழுக்கியென்றார். நோற்பாரென்பது ஆகுபெயர். நோற்பார் நிலைக்கு அவர்தம்மையுற்ற நோயல்லது இல்வாழ்வார் நிலைபோற் பிறரையுற்ற நோயும் பொறுத்தலின்மையின், நோற்பாரினோன்மையுடைத்தென்றார். (அ)

சகூ. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று. கூ.

இ - ள். அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே - இருவகையறத்தினும் நூல்களான் அறனென்று சிறப்பித்துச்சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே:—அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று - ஏனைத் துறவறமோவெனின், அதுவும் பிறனாற் பழிக்கப்படுவதில்லையாயின், அவ்வில்வாழ்க்கையோடு ஒருதன்மைத்தாகநன்று. எ-று.

ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது; இதனாற் பிரிக்கப்பட்டது துறவறமாகலின், அஃது என்னுஞ்சுட்டுப்பெயர் அதன்மேனின்றது. பிறன்பழிப்பதென்றது கூடாவொழுக்கத்தை. துறவறம், மனத்தையும் பொறிகளையும் ஒறுத்தடக்க வல்ல அருமையுடைத்தாயவழியே, அவற்றையொறுக்கவேண்டாது ஐம்புலவின்பங்களாரத்துய்க்கும் எண்மையுடைய இல்வாழ்க்கையோடு அறமென ஒருங்கெண்ணப்படுவதென்றவாறாயிற்று. இவை நான்குபாட்டானும் இன்னிலையே பயனுடைத்தென இதன்சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

ருo. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். கo.

இ - ள். வாழ்வாங்கு வையத்துள் வாழ்பவன் - இல்லறத்தோடுகூடி வாழுமியல்பினால் வையத்தின்கண் வாழ்பவன்—வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் - வையத்தானேயெனினும் வானின்கணுறையுந் தேவருள் ஒருவனாக வைத்து நன்குமதிக்கப்படும். எ - று.

பின்றேவனாய் அவ்வறப்பயனுகர்தல் ஒருதலையாகலின், தெய்வத்துள் வைக்கப்படுமென்றார். இதனான் இன்னிலையது மறுமைப்பயன் கூறப்பட்டது. இம்மைப்பயன் புகழ்; அதனையிறுதிக்கட் கூறுப. (கo)

---

௬ ம் அதி.—வாழ்க்கைத்துணை நலம்.

அஃதாவது அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

ருக. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. க.

இ - ள். மனைத் தக்க மாண்பு உடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காள் - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளையுடையளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையையுடையாள்—வாழ்க்கைத்துணை - அதற்குத் துணை. எ - று.

நற்குணங்களாவன துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன வாழ்க்கைக்குவேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில்வன்மையும், ஒப்புரவுசெய்தலும் முதலாயின. வருவாய்க்குத்தக்க வாழ்க்கையாவது முதலையறிந்து அதற்கியைய அழித்தல். இதனான் இவ்விரண்டுநன்மையுஞ் சிறந்தனவென்பது கூறப்பட்டது. (க)

ருஉ. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில். உ.

இ - ள். மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள் ஒருவனில்லாளிடத்திலையாயின்,—வாழ்க்கை எனைமாட்சித்தாயினும் இல் - அவ்வில்வாழ்க்கை செல்வத்தான் எத்துணை மாட்சிமையுடைத்தாயினும் அஃதுடைத்தன்று. எ - று.

இல்லையென்றார், பயன்படாமையின். (உ)

ருங. இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை. ங.

இ - ள். இல்லவள் மாண்பு ஆனால் இல்லது என் - ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற்செய்கையளாயினக்கால் இல்லாததியாது?—இல்லவள் மாணாக்கடை உள்ளது என் - அவள் அன்னளல்லாக்கால் உள்ளதியாது? எ - று.

மாண்பெனக் குணத்தின்பெயர் குணிமேனின்றது. இவையிரண்டுபாட்டானும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியே பிறவல்லவென்பது கூறப்பட்டது. (ங)

ருச. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். ச.

இ - ள். பெண்ணின் பெருந்தக்க யா உள - ஒருவனெய்தும் பொருள்களுள் இல்லாளின்மேம்பட்ட பொருள்களியாவையுள,—கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் - அவண்மாட்டுக் கற்பென்னுங் கலங்காநிலைமை யுண்டாகப்பெறின்? எ - று.

கற்புடையாள்போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிறவின்மையின், யாவுளவென்றார். இதனாற் கற்புநலத்தது சிறப்புக் கூறப்பட்டது. (ச)

ருரு. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. ரு.

இ - ள். தெய்வம் தொழாள் கொழுநற்றொழுது எழுவாள் பெய் என - பிறதெய்வந்தொழாது தன்றெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் * பெய்யென்றுசொல்ல,—மழை பெய்யும் - மழை பெய்யும். எ - று.

* கொழுநற் றொழுதெழுவாளென்பது எழுந்து கொழுநற்றொழுவாளென முன்பின்னாகப் பொருள்படுமென்றார் பிரயோகவிவேகநூலார். அவர் கூறுமாறு,—"இனிக் 'கொழுநற் றொழுதெழுவாள்' 'தொழுதெழுவார் வினைவள நீறெழ' என்னுந் திருவள்ளுவரினும் திருக்கோவையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் தொழாநின்றெழுவாள் தொழாநின்றெழுவார் எனத் துணைவினையாயுரைப்பர்: எழுதல் துயிலொழிதலாதலின், எழுந்து தொழுவாள் எழுந்து தொழுவார் என முன் பின்னாகப் பொருள்படுதலன்றி, நகுபு வந்தான் ஓடிவந்தான் என்பன போலத் தொழாநின்று துயிலொழிதல் கூடாதென்க. "வைகறையாமந் துயிலெழுந்து தான்

தெய்வந்தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங்காலத்தாகலின், தொழுதெழுவாளென்றார். தொழாநின்றென்பது தொழுதெனத்திரிந்துநின்றது. தெய்வந்தானேவல் செய்யுமென்பதாம். இதனாற் கற்புடையவளதாற்றல் கூறப்பட்டது. (ரு)

ருசா. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். சா.

இ - ள். தற்காத்துத் தற்கொண்டாற் பேணி - கற்பினின்றும் வழுவாமற்றன்னைக் காத்துத் தன்னைக்கொண்டவனையும் உண்டி முதலியவற்றாற் பேணி—தகைசான்ற சொற் காத்து - இருவர் மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற் காத்து—சோர்வு இலாள் பெண் - மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளினுங் கடைப்பிடியுடையாளே பெண்ணாவாள். எ - று.

தன்மாட்டுப் புகழாவது வாழூரார் கற்பாற் றன்னைப் புகழ்வது. சோர்வு மறவி. இதனால் தற்புகழ்தற்சிறப்புக் கூறப்பட்டது. (சா)

ருஎ. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. எ.

இ - ள். மகளிர் சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் - மகளிரைத் தலைவர் சிறையாற்காக்குங்காவல் என்னபயனைச் செய்யும்?—நிறை காக்கும் காப்பே தலை - அவர் தமது நிறையாற் காக்குங் காவலே தலையாய காவல். எ - று.

சிறை மதிலும், வாயில்காவலும் முதலாயின. நிறை நெஞ்சைக் கற்புநெறியினிறுத்தல். காவலிரண்டினும் நிறைக்காவலில்வழி ஏனைச்சிறைக்காவலாற் பயனில்லையென்பார், நிறைகாக்குங் காப்பே தலையென்றார். ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது. இதனால் தற்காத்தற்சிறப்புக் கூறப்பட்டது. (எ)

ருஅ. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு. அ.

இ - ள். பெண்டிர் பெற்றாற் பெறின் - பெண்டிர், தம்மையெய்திய கணவனை வழிபடுதல் பெறுவராயின்,—புத்தேளிர் வாழும் உலகு பெருஞ்சிறப்புப்பெறுவர் - புத்தேளிர் வாழுமுலகின்கண் அவராற் பெருஞ்சிறப்பினைப் பெறுவர். எ - று.

வழிபடுதலென்பது சொல்லெச்சம். இதனால் தற்கொண்டாற் பேணிய மகளிர் புத்தேளிராற் பேணப்படுவரென்பது கூறப்பட்டது. (அ)

ருகூ. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை. கூ.

இ - ள். புகழ் புரிந்த இல் இலோர்க்கு - புகழை விரும்பிய இல்லாளையில்லாதார்க்கு—இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை இல்லை - தம்மையிகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்கவேறுபோல நடக்கும் பெருமிதநடை இல்லை. எ - று.

செய்யு—நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்—றந்தையுந் தாயுந் தொழுதெழுக" † என்பது துயிலெழுந்து பின்றந்தையுந்தாயுந் தொழுது பின் காரியத்திற் செல்க வெனப் பொருள் பட்டுவருதலானும், அவருரை அசம்பாவிதமென்க." நான்காவது திங்குப்படலம், ரு-ம் பாட்டுரை.

† ஆசாரக்கோவை ரு - ம் பாட்டு.

புரிந்தவென்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது. பெருமிதமுடையா னுக்குச் சிங்கவேறு நடையானுவமமாகலின், ஏறுபோலென்றார். இதனால் தகைசா ன்ற சொற்காவாவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது. (சு)

சுO. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு. கO.

இ - ள். மங்கலம் என்ப மனைமாட்சி - ஒருவற்கு நன்மையென்றுசொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளை;—அதன் நன்கலம் (என்ப) நன் மக்கட்பேறு - அவை தமக்கு நல்லவணிகலமென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலை. எ - று.

அறிந்தோரென்பது எஞ்சிநின்றது. மற்று அசைநிலை. இதனால் வாழ்க்கைத் துணைக்கு ஆவதோரணிநலங்கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய் யப்பட்டது. (கO)

எம் அதி.—புதல்வரைப்பெறுதல்.

அஃதாவது இருபிறப்பாளர் மூவரானும் * இயல்பாகவிறுக்கப்படூஉங் கடன் மூன்றனுள், முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத் தார்கடன் புதல்வரைப் பெறுதலானுமல்லது இறுக்கப்படாமையின், அக்கடனிறுத் தற்பொருட்டு நன்மக்களைப் பெறுதல். அதிகாரமுறைமை மேலே பெறப்பட்டது.

சுக. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. க.

இ - ள். பெறுமவற்றுள் - ஒருவன் பெறும் பேறுகளுள்,—அறிவு அறிந்த மக்கட் பேறு அல்ல பிற - அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிறபே றுகளை—யாம் அறிவது இல்லை - யாம் மதிப்பதில்லை. எ - று.

அறிவதென்பது அறிதலைச்செய்வதென அத்தொழின்மேனின்றது. காரணமா கியவுரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தேவிடுமாதலான், அத்துணிவுபற்றி அறிந்த வென இறந்தகாலத்தாற் கூறினார். அறிவறிந்தவென்றதனான், மக்களென்னும்பெயர் பெண்ணொழித்துநின்றது. இதனாற் புதல்வர்ப்பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது. ()

சுஉ. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். உ.

இ - ள். எழுபிறப்பும் தீயவை தீண்டா - வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பேழி ன்கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா,—பழி பிறங்காப் பண்பு உடை மக்கட்பெறின் - பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறு வானாயின். எ - று.

அவன் தீவினை வளராது தேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவனாயினென்றவாறாயிற்று. பிறப்பேழாவன "ஊர்வ பதினொன்று

* இருபிறப்பாளர்மூவரென்றது உபநயனத்திற்கு முன்னொருபிறப்பும் பின்னொருபிறப்பு மாகிய இருபிறப்புடையராயுள்ள அந்தணர், அரசர், வணிகரென்னும் முதன் மூன்று வருணத் தாரை. இருபிறப்பாளரெனினும், துவிசரெனினுமொக்கும்.

மொன்பது மானுட—நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச் - சீரிய—பந்தமாந் தேவர் பதினாலயன் படைத்த—வந்தமில்சீர்த் தாவரநா லைந்து." தந்தைதாயர் தீவினைதேய் தற்பொருட்டு அவரைநோக்கிப்புதல்வர் செய்யுந்தானதருமங்கட்கு அவர் நற்குணங் காரணமாகலின், பண்பென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மேனின்றது. (உ)

சூங. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
ட்டந்தம் வினையான் வரும். ௩.

இ - ள். தம் மக்கள் தம்பொருள் என்ப - தம்புதல்வரைத் தம்பொருளென்று சொல்லுவர் அறிந்தோர்,—அவர் பொருள் தந்தம் வினையான் வரும் - அப்புதல்வர் செய்தபொருள் தம்மைநோக்கி அவர்செய்யும் நல்வினையானே தம்பால் வரும் ஆதலான். எ - று.

தந்தம் வினையென்புழித் தொக்கு நின்ற ஆறும்வேற்றுமை முருகனது குறிஞ்சி நிலம் என்புழிப்போல உரிமைப்பொருட்கண்வந்தது. பொருள்செய்த மக்களைப் பொருளென உபசரித்தார். இவையிரண்டுபாட்டானும் நன்மக்கட்பெற்றார் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது. (௩)

சூச. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ். ச.

இ - ள். அமிழ்தினும் ஆற்ற இனிதே - சுவையான் அமிழ்தத்தினும் மிகவினிமை யுடைத்து—தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ் - தம்மக்களது சிறுகையானளாவப் பட்ட சோறு. எ - று.

சிறுகையானளாவலாவது "இட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து—நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தல்." * (ச)

சூரு. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு. ரு.

இ - ள். உடற்கு இன்பம் மக்கள் மெய் தீண்டல் - ஒருவன்மெய்க்கின்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல்;—செவிக்கு இன்பம் அவர் சொற்கேட்டல் - செவிக்கின்பமாவது அவரதுசொல்லைக் கேட்டல். எ - று.

மற்று வினைமாற்று. மக்களது மழலைச்சொல்லேயன்றி அவர்கற்றறிவுடைய ராய்ச் சொல்லுஞ்சொல்லும் இன்பமாகலின், பொதுப்படச் சொல்லென்றார். தீண்டல் கேட்டலென்னுங் காரணப்பெயர்கள் ஈண்டுக் காரியங்களின்மேனின்றன. (ரு)

சூசூ. குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர். சூ.

இ - ள். குழல் இனிது யாழ் இனிது என்ப - குழலிசையினிது யாழிசையினி தென்று சொல்லுவர்—தம்மக்கள் மழலைச்சொற் கேளாதவர் - தம்புதல்வருடைய குதலைச்சொற்களைக்கேளாதவர். எ - று.

---

* புறநானூறு, கஅஅ—"படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணு—முடைப் பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்—குறுகுறு நடந்து சிறுகை நீட்டி—யிட்டுந் தொட்டுங் கௌவி யுந் துழந்து—நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து—மயக்குறு மக்களை யில்லோர்—பயக் குறை யில்லைதாம் வாழு நாளே."

குழல் யாழ் என்பன ஆகுபெயர். கேட்டவர் அவற்றினும் மழலைச்சொல் இனிதெ ன்பரென்பது குறிப்பெச்சம். இனிமை மிகுதிபற்றி மழலைச்சொல்லைச் சிறப்புவகை யானுங்கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் இம்மைப்பயன் கூறப்பட்டது. (சு)

சுஎ. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல். எ.

இ - ள். தந்தை மகற்கு ஆற்றும் நன்றி - தந்தை புதல்வனுக்குச்செய்யும் நன் மையாவது—அவையத்து முந்தி இருப்பச்செயல் - கற்றோரவையின்கண் அவரினும் மிக் கிருக்குமாறு கல்வி யுடையனாக்குதல். எ - று.

பொருளுடையனாக்குதல் முதலாயின துன்பம் பயத்தலின் நன்மையாகாவென் பது கருத்து. இதனால் தந்தைகடன் கூறப்பட்டது. (எ)

சுஅ. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. அ.

இ - ள். தம்மக்கள் அறிவுடைமை - தம்மக்களதறிவுடைமை—மா நிலத்து மன் உயிர்க்கெல்லாம் தம்மின் இனிது - பெரியநிலத்து மன்னாநின்ற உயிர்கட்கெல்லாந் தம்மினு மினிதாம். எ - று.

ஈண்டறிவென்றது இயல்பாகிய அறிவோடுகூடிய கல்வியறிவினை. மன்னுயிரெ ன்றது ஈண்டறிவுடையார்மேனின்றது, அறிவுடைமை கண்டின்புறுதற்கு உரியார் அவராகலின். இதனால் தந்தையினும் அவையத்தாருவப்பரென்பது கூறப்பட்டது. ()

சுகூ. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். கூ.

இ - ள். ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் - தான் பெற்றபொழுதை மகிழ்ச் சியினும் மிகமகிழும்—தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்-தன்மகனைக் கல்வி கேள்விகளானிறைந்தானென்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய். எ - று.

கவானின்கட்கண்ட பொதுவுவகையினுஞ் சால்புடையனெனக் கேட்ட சிறப் புவகை பெரிதாகலின் பெரிதுவக்குமெனவும், பெண்ணியல்பாற் றானாகவறியாமை யிற் கேட்ட தாயெனவுங் கூறினார். அறிவுடையாரென்பது வருவிக்கப்பட்டது, சான் றோனென்றற்குரியர் அவராகலின். தாயுவகைக்களவின்மையின், அஃதிதனாற் பிரித் துக்கூறப்பட்டது. (கூ)

எ௦. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல். க௦.

இ - ள். தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி - கல்வியுடையனாக்கிய தந்தைக்கு மகன் செய்யுங் கைம்மாறாவது—இவன் தந்தை என் நோற்றான்கொல் எனும் சொல் - தன்னறிவு மொழுக்கமுங்கண்டார் இவன்றந்தை இவனைப் பெறுதற்கு என்ன தவஞ் செய்தான் கொல்லோ வென்று சொல்லுஞ் சொல்லை நிகழ்த்துதல். எ — று.

சொல்லென்பது நிகழ்த்துதலாகிய தன்காரணந்தோன்ற நின்றது. நிகழ்த்துதல் அங்ஙனஞ்சொல்லவொழுகல். இதனாற் புதல்வன் கடன் கூறப்பட்டது. (க௦)

அ ம் அதி.—அன்புடைமை.

அஃதாவது அவ்வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார் கட் காதலுடையனாதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள்பிறத்தலும் அன்பின் பயனாகலின், இது வேண்டப்பட்டது. வாழ்கைத்துணைமேல் அன்பில்வழி இல்லறமினிது நடவாமை "அறவோர்க்களித்தலு மந்தண ரோம்பலுந்—துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்—விருந்தெதிர் கோடலு மிழந்தவென்னை" * என்பதனானும், அதனாலருள் பிறத்தல் "அருளென்னு மன்பீன் குழவி" † என்பதனானுமறிக.

எக. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும். க.

இ - ள். அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ - அன்பிற்கும் பிறரறியாமலடைத்துவைக்குந் தாழுளதோ?—ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும் - தம்மாலன்புசெய்யப்பட்டாரது துன்பங்கண்டுழி அன்புடையார்கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லாருமறியத் தூற்றும் ஆதலான். எ - று.

உம்மை சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை கண்ணீர்மேலேற்றப்பட்டது. காட்சியளவைக்கெய்தாதாயினும் அனுமானவளவையான் வெளிப்படுமென்பதாம். இதனால் அன்பினதுண்மை கூறப்பட்டது. (க)

எஉ. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு. உ.

இ - ள். அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர் - அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப்பொருளானுந் தமக்கேயுரியர்;—அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர் - அன்புடையார் அவற்றானேயன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர். எ - று.

ஆனுருபுகளும் பிரிநிலையேகாரமும் விகாரத்தாற் றொக்கன. என்பு ஆகுபெயர். என்புமுரியராதல் "தன்னகம் புக்க குறு நடைப் புறவின் றபுதியஞ்சிச் சீரை ‡ புக்கோன்" § முதலாயினார்கட்காண்க. (உ)

எங. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு. ங.

இ - ள். ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு - பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியினை—அன்போடு இயைந்த வழக்கு என்ப - அன்போடு பொருந்துதற்குவந்த நெறியின்பயனென்று சொல்லுவர் அறிந்தோர். எ - று.

பிறப்பின தருமை பிறந்தவுயிர்மேலேற்றப்பட்டது. இயைந்தவென்பது உபசார வழக்கு. 0 வழக்கு ஆகுபெயர். உடம்போடியைந்தல்லது அன்புசெய்யலாகாமையின், அது செய்தற்பொருட்டு இத்தொடர்ச்சி யுளதாயிற்றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமையென்றாயிற்று. (ங)

---

* சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை. † திருக்குறள், எருள.

‡ சீரை - துலாக்கோற்றட்டு. § சிபிச்சக்கரவர்த்தி. புறநானூறு - சசங.

0 சையோக சம்பந்த வாசகத்தைச் சமவாய சம்பந்தத்திற்குரைத்தமையால் உபசாரமாயிற்று.

எச. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு. ச.

இ - ள். அன்பு ஆர்வமுடைமை ஈனும் - ஒருவனுக்குத் தொடர்புடையார்மாட்டுச் செய்தவன்பு அத்தன்மையாற் பிறர்மாட்டும் விருப்பமுடைமையைத்தரும்,—அது நண்பு என்னும் நாடாச்சிறப்பு ஈனும் - அவ்விருப்பமுடைமைதான் இவற்குப் பகையும் நொதுமலுமில்லையாய் யாவரும் நண்பென்றுசொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத்தரும். எ - று.

உடைமை உடையனாந்தன்மை. யாவருநண்பாதல் எல்லாப்பொருளுமெய்துதற் கேதுவாகலின், அதனை நாடாச்சிறப்பென்றார். (ச)

எரு. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு. ரு.

இ - ள். அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப - அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்—வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு - இவ்வுலகத்து இல்வாழ்க்கைக்கணின்று இன்பநுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச்சென்றெய்தும் பேரின்பத்தினை. எ - று.

வழக்கு ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கணின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங்கூடியின்புற்றார் தாஞ்செய்த வேள்வித்தொழிலாற்றேவராய் ஆண்டுமின்புறுவராகலின், இன்புற்றாரெய்துஞ்சிறப்பென்றார். தவத்தாற்றுன்புற்றெய்துந் துறக்கவின்பத்தினை ஈண்டுமின்புற்றெய்துதல் அன்பானன்றி யில்லையென்பதாம். (ரு)

எசு. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. சு.

இ - ள். அன்பு சார்பு அறத்திற்கே என்ப அறியார் - அன்புதுணையாவது அறத்திற்கேயென்று சொல்லுவர் சிலரறியார்;—மறத்திற்கும் அஃதே துணை - ஏனை மறத்திற்கும் அவ்வன்பே துணையாவது. எ - று.

ஒருவன்செய்த பகைமைபற்றி உள்ளத்து மறநிகழ்ந்துழி அவனை நட்பாகக்கருதி அவன்மேலன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்குந்துணையாமென்பார், மறத்திற்குமஃதேதுணையென்றார், "துன்பத்திற் கியாரே துணையாவார்*." என்புழிப் போல†. இவையைந்துபாட்டானும் அன்பினது சிறப்புக்கூறப்பட்டது. (சு)

எஎ. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம். எ.

இ - ள். என்பு இலதனை வெயில்போலக் காயும் - என்பில்லாத வுடம்பை வெயில் காய்ந்தாற்போலக் காயும்—அன்பு இலதனை அறம் - அன்பில்லாதவுயிரை அறக்கடவுள். எ - று.

என்பிலதென்றதனுன் உடம்பென்பதூஉம், அன்பிலதென்றதனுன் உயிரென்பதூஉம் பெற்றும். வெறுப்பின்றி எங்குமொருதன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்

* திருக்குறள், கஉகக.

† "ஆதி சத்தத்தால் பூவிற்குச் சென்றான், துன்பத்திற் கியாரேதுணையாவார், மறத்திற்கு மஃதே துணை, பிணிக்குமருந்து என்பவற்றின்கட் பறித்தல் நீக்குதலென நடுவே பெய்து பொருளுரைத்துத் துமர்த்தமென்பதுங்கொள்க," என்றார் பிரயோக விவேகநூலார். காரக படலத்து "உடனிகழ்கின்ற" என்னும் பதினாறுஞ்செய்யுளுரையிற்காண்க.

லது தன்னியல்பாற்சென்று கெடுமாறுபோல, அத்தன்மைத்தாகிய அறத்தின் முன் அன்பில்லது தன்னியல்பாற்கெடுமென்பதாம். அதனைக்காயுமென வெயிலறங்களின் மேலேற்றினார், அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின். இவ்வாறு "அல்லவை செய்தாற் கறங்கூற்றம்" * எனப்பிறருங் கூறினார். (எ)

எஅ. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று. அ.

இ - ள். அகத்து அன்பு இல்லா உயிர் வாழ்க்கை - மனத்தின்கணன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல்—வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தற்று - வன்பாலின்கண் வற்றலாகிய மரந் தளிர்த்தாற்போலும். எ - று.

கூடாதென்பதாம். வன்பால் வன்னிலம். வற்றலென்பது பால்விளங்காவஃறிணைப்படர்க்கைப்பெயர். (அ)

எகூ. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு. கூ.

இ - ள். யாக்கையகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு - யாக்கையகத்தின்கணின்று இல்லறத்திற்குறுப்பாகிய அன்புடையரல்லாதார்க்கு—புறத்து உறுப்பெல்லாம் எவன் செய்யும் - ஏனைப்புறத்தின்கணின்று உறுப்பாவனவெல்லாம் அவ்வறஞ்செய்தற்கண் என்னவுதவியைச் செய்யும்! எ - று.

புறத்துறுப்பாவன இடனும், பொருளும், ஏவல்செய்வாருமுதலாயின. துணையொடு கூடாதவழி அவற்றாற்பயனின்மையின், எவன்செய்யுமென்றார். உறுப்புப்போறலின், உறுப்பெனப்பட்டன. யாக்கையிற் கண்முதலிய உறுப்புக்களெல்லாம் என்ன பயனைச் செய்யும், மனத்தின்கணுறுப்பாகிய அன்பிலாதார்க்கென்றுரைப்பாருமுளர். அதற்கு இல்லறத்தோடு யாதுமியைபில்லாமையறிக. (கூ)

அ0. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. க0.

இ - ள். அன்பின் வழியது உயிர்நிலை - அன்புமுதலாக அதன்வழிநின்ற உடம்பே உயிர்நின்றவுடம்பாவது;—அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல்போர்த்த - அவ்வன்பில்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற்போர்த்தனவாம், உயிர்நின்றனவாகா. எ - று.

இல்லறம் பயவாமையின், அன்னவாயின. இவைநான்குபாட்டானும் அன்பில்வழிப்படுங் குற்றங்கூறப்பட்டது. (க0)

கூம் அதி.—விருந்தோம்பல்.

அஃதாவது இருவகை விருந்தினரையும் † புறந்தருதல். தென்புலத்தார் முதலியவைம்புலத்துள் முன்னையவிரண்டும் கட்புலனாகாதாரை நினைந்து செய்வனவாகலானும், பின்னையவிரண்டும் பிறர்க்கீதலன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல்

---

* கல்லா வொருவற்குத் தன்வாயிற் சொற்கூற்ற—மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய் கூற்ற—மல்லவை செய்தாற் கறங்கூற்றங் கூற்றமே—யில்லிருந்து தீங்கொழுகுவாள்—நான்மணிக்கடிகை.

† இருவகைவிருந்தினர். சஅ-ம் குறளுரையிற்காண்க.

சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறுகாத அன்புடையிருவர்கூடிய ல்லது செய்யப்படாமையின், இஃது அன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.

அக. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.   க.

இ - ள். இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் - மனைவியோடும் வனத்திற் செல்லாது இல்லின்கணிருந்து பொருள்களைப்போற்றிவாழுஞ் செய்கையெல்லாம்—விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு - விருந்தினரைப்பேணி அவர்க்குபகாரஞ் செய்தற் பொருட்டு. எ - று.

எனவே, வேளாண்மைசெய்யாவழி இல்லின்கணிருத்தலும் பொருள்செய்தலுங் காரணமாக வருந்துன்பச்செய்கைகட்கெல்லாம் பயனில்லையென்பதாம். (க)

அஉ. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.   உ.

இ - ள். சாவா மருந்து எனினும் - உண்ணப்படும் பொருள் அமிர்தமேயெனினும்,—விருந்து புறத்ததாத் தான் உண்டல் - தன்னைநோக்கி வந்த விருந்து தன்னில்லின்புறத்ததாகத் தானே உண்டல்—வேண்டற்பாற்று அன்று - விரும்புதன் முறைமையுடைத்தன்று. எ - று.

சாவாமருந்து சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. விருந்தின்றியே ஒருகாற்றுனுண்டலைச் சாவாமருந்தென்பார் உளராயினும் அதனையொழிக வென்றுரைப்பினுமமையும். இவையிரண்டுபாட்டானும் விருந்தோம்பலின் சிறப்புக்கூறப்பட்டது. (உ)

அங. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.   ங.

இ - ள். வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை - தன்னைநோக்கி வந்த விருந்தை நாடோறும் புறந்தருவானதில்வாழ்க்கை—பருவந்து பாழ்படுதல் இன்று - நல்குரவான் வருந்திக்கெடுதலில்லை. எ - று.

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனாற் பொருடொலையாது மேன்மேற்கிளைக்குமென்பதாம். (ங)

அச. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.   ச.

இ - ள். செய்யாள் அகன் அமர்ந்து உறையும் - திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும்—முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல் - முகமினியனாய்த் தக்கவிருந்தினரைப் பேணுவான தில்லின்கண். எ - று.

மனமகிழ்தற்குக் காரணம் தன்செல்வம் நல்வழிப்படுதல். தகுதி ஞானவொழுக்கங்களானுயர்தல். பொருள் கிளைத்தற்குக் காரணங் கூறியவாறு. (ச)

அரு. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.   ரு.

இ - ள். விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம் - முன்னேவிருந்தினரை மிசைவித்துப் பின் மிக்கதனைத் தான் மிசைவானது விளைபுலத்திற்கு—வித்தும் இடல் வேண்டுமோ - வித்திடுதலும் வேண்டுமோ, வேண்டா. எ - று.

கொல்லென்பது அசைநிலை. தானே விளையுமென்பது குறிப்பெச்சம். இவை மூன்றுபாட்டானும் விருந்தோம்புவார் இம்மைக்கணெய்தும் பயன் கூறப்பட்டது.()

அசூ. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு. சூ.

இ - ள். செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான் - தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக்கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ணவிருப்பான்—வானத்தவர்க்கு நல்விருந்து - மறுபிறப்பிற்றேவனாய் வானினுள்ளார்க்கு நல்விருந்தாம். எ - று.

வருவிருந்தென்பது இடவழுவமைதி. நல்விருந்து எய்தாவிருந்து. இதனான் மறுமைக்கணெய்தும்பயன் கூறப்பட்டது. (சூ)

அஎ. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன். எ.

இ - ள். வேள்விப் பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை - விருந்தோம்பலாகிய வேள்வியின்பயன் இன்னவளவிற்றென்பதோரளவுடைத்தன்று;—விருந்தின் துணைத் துணை - அதற்கு அவ்விருந்தின்றகுதியளவே அளவு. எ - று.

ஐம்பெருவேள்வியி * னொன்றாகலின் வேள்வியென்றும், பொருளளவு "தான் சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்—வான்சிறிதாப் போர்த்து விடும்" † ஆகலின், இனைத்துணைத்தென்பதொன்றில்லையென்றுங் கூறினார். இதனான் இருமையும் பயத்தற்குக் காரணங் கூறப்பட்டது. (எ)

அஅ. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். அ.

இ - ள். பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர் - நிலையாப்பொருளை வருந்திக் காத்துப் பின் அதனையிழந்து இதுபொழுதுயாம் பற்றுக்கோடிலமாயினேமென்றிரங்குவர்—விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார் - அப்பொருளான் விருந்தினரையோம்பி வேள்விப் பயனையெய்தும் பொறியிலாதார். எ - று.

"ஈட்டிய வொண்பொருளைக்—காத்தலு மாங்கே கடுந்துன்பம்" ‡ ஆகலின், பரிந்தோம்பியென்றார். வேள்வி ஆகுபெயர். (அ)

* ஐம்பெருவேள்வியாவன பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாகமெனவிவை. அவற்றுள், பிரமயாகம் வேதமோதல்; தேவயாகம் ஓமம்வளர்த்தல்; மானுடயாகம் விருந்தோம்பல்; பிதிர்யாகம் நீர்க்கடனாற்றல்; பூதயாகம் பலியீதல்.

† உறக்குந் துணையதோராலம்வித் தீண்டி—யிறப்ப நிழற்பயந் தாஅங் - கறப்பயனுந்—தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்—வான்சிறிதாப் போர்த்துவிடும்—நாலடியார், அறன்வலியுறுத்தல்.

‡ ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்—காத்தலு மாங்கே கடுந்துன்பங்-காத்தல்—குறைபடிற்றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்—குறைபதி மற்றைப்பொருள்—நாலடியார், ஈயாமை.

அ௯. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு. ௯.

இ - ள். உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை - உடைமைக்காலத் தின்மையாவது விருந்தோம்பலையிகழும் பேதைமை:—மடவார்கண் உண்டு - அஃது அறிந்தார்மாட்டு உளதாகாது, பேதையார்மாட்டேயுளதாம். எ - று.

உடைமை பொருளுடையனுந்தன்மை. பொருளாற்கொள்ளும்பயனை யிழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமையை இன்மையாகவுபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பலையிகழிற் பொருள் நின்றவழியும் அதனாற்பயனில்லையென்பதாம். இவையிரண்டுபாட்டானும் விருந்தோம்பாவழிப் படுங்குற்றங் கூறப்பட்டது. (௯)

௯௦ மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. ௧௦.

இ - ள். அனிச்சம் மோப்பக் குழையும் - அனிச்சப்பூ மோந்துழியன்றிக்குழையாது;—விருந்து முகம் திரிந்து நோக்கக் குழையும் - விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர். எ - று.

அனிச்சம் ஆகுபெயர். சேய்மைக்கட்கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்டவழி நன்றுற்றலுமென விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக்கண்ணே வாடிநீங்குதலின், தீண்டியவழியல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியரென்பதாம். இதனான் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது. (௧௦)

---

௧௦ ம் அதி.—இனியவைகூறல்.

அஃதாவது மனத்தின்கணுவகையை வெளிப்படுப்பனவாகிய இனியசொற்களைச் சொல்லுதல். இதுவும், விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின்பின் வைக்கப்பட்டது.

௯௧. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். ௧.

இ - ள். இன்சொல் - இன்சொலாவன—ஈரம் அளைஇப் படிறு இலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச் சொல் - அன்போடு கலந்து வஞ்சனையிலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார்வாயிற் சொற்கள். எ - று.

ஆல் அசைநிலை. அன்போடு கலத்தல் அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை வாய்மை. மெய்யுணர்ந்தார் நெஞ்சிற்கெல்லாஞ் செம்மையுடைத்தாய்த்தோன்றலின், செம்பொருளெனப்பட்டது. இலவாஞ்சொல்லெனவியையும். வாயென வேண்டாதுகூறினர், தீயசொற்பயிலாவென்ப தறிவித்தற்கு. இதனான் இன்சொற்கிலக்கணங் கூறப்பட்டது. (௧)

௯௨. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். ௨.

இ - ள். அகன் அமர்ந்து ஈதலின் நன்று - நெஞ்சுவந்து ஒருவற்கு வேண்டிய பொருளைக்கொடுத்தலினும் நன்று—முகன் அமர்ந்து இன்சொலனாகப் பெறின் -

கண்டபொழுதே முகமினியனாய் அதனோடு இனியசொல்லையுமுடையனாகப் பெறின். எ - று.

இன்முகத்தோடுகூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள்வயத்ததன்றித் தன் வயத்ததாயினும், அறநெஞ்சுடையார்க்கல்லது இயல்பாகவின்மையின், அதனினுமரிதென்னுங் கருத்தான், இன்சொலனாகப் பெறினென்றார். (உ)

௯௩. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சொ லினதே யறம். ௩.

இ - ள். முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி - கண்டபொழுதே முகத்தான் விரும்பி இனிதாக நோக்கி—அகத்தான் ஆம் இன்சொலினதே அறம் - பின் நண்ணிய வழி மனத்துடனாகிய இனியசொற்களைச் சொல்லுதலின்கண்ணதே அறம். எ - று.

நோக்கியென்னும் வினையெச்சம் இன்சொலென அடையடுத்துநின்ற முதனிலைத் தொழிற்பெயர்கொண்டது. ஈதலின்கண்ணதன்றென்றவாறு. இவையிரண்டுபாட்டானும் இன்முகத்தோடு கூடியவின்சொல் முன்னரே பிணித்துக்கோடலின் விருந்தோம்புதற்கட் சிறந்ததென்பது கூறப்பட்டது. (௩)

௯௪. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு. ௪.

இ - ள். யார்மாட்டும் இன்பு உறூஉம் இன்சொலவர்க்கு - எல்லார்மாட்டும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லையுடையார்க்கு—துன்பு உறூஉம் துவ்வாமை இல்லாகும் - துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இல்லையாம். எ - று.

நாமுதலிய பொறிகள் சுவை முதலிய புலன்களை நுகராமையுடைமையின், துவ்வாமையென்றார். யார்மாட்டுமின்புறூஉமின்சொலவர்க்குப் பகையும் நொதுமலுமின்றி உள்ளது நண்பேயாம், ஆகவே, அவர் எல்லாச்செல்வமுமெய்துவரென்பது கருத்து. (௪)

௯௫. பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற. ௫.

இ - ள். ஒருவற்கு அணி பணிவு உடையன் இன்சொலனாதல் - ஒருவனுக்கணியாவது தன்னாற்றொழப்படுவார்கட்டாழ்ச்சியுடையனாய் எல்லார்கண்ணும் இனியசொல்லையுமுடையனாதல்;—பிற அல்ல - இவையிரண்டுமன்றி மெய்க்கணியும் பிறவணிகள் அணியாகா. எ - று.

இன்சொலனாதற்கினமாகலின், பணிவுடைமையும் உடன்கூறினார். மற்று அசைநிலை. வேற்றுமையுடைமையாற் பிறவெனவும், இவை போலப் பேரழகுசெய்யாமையின் அல்லவெனவுங் கூறினார். இவையிரண்டுபாட்டானும் இனியவை கூறுவார்க்கு இம்மைப்பயன் கூறப்பட்டது. (௫)

௯௬. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். ௬.

இ - ள். நல்லவை நாடி இனிய சொலின் - பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ்சொற்களை மனத்தானாராய்ந்து இனியவாக ஒருவன்சொல்லுமாயின்;—அல்லவை தேய அறம் பெருகும் - அவனுக்குப் பாவங்கடேய அறம் வளரும். எ - று.

தேய்தல் தன்பகையாகிய அறம் வளர்தலிற் றனக்கு நிலையின்றிமெலிதல். "தவத்தின்முன் னில்லாதாம் பாவம்" * என்பதூஉம் இப்பொருட்டு. நல்லவை நாடிச் சொல்லுங்காலுங் கடியவாகச்சொல்லின், அறனாகாதென்பதாம். இதனான் மறுமைப் பயன் கூறப்பட்டது. (௬)

௯௭. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். ௭.

இ - ள். நயன் ஈன்று நன்றி பயக்கும் - ஒருவனுக்கு இம்மைக்கு நீதியையுமுண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும்—பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல் - பொருளாற் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப்பண்பினீங்காத சொல். எ - று.

நீதி உலகத்தோடு பொருந்துதல். பண்பென்பது ஈண்டதிகாரத்தான் இனிமைமேனின்றது. தலைப்பிரிதல் ஒருசொன்னீர்மைத்து. (௭)

௯௮. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும். ௮.

இ - ள். சிறுமையுள் நீங்கிய இன்சொல் - பொருளாற் பிறர்க்கு நோய்செய்யாத இனியசொல்—மறுமையும் இம்மையும் இன்பம் தரும் - ஒருவனுக்கு இருமையினும் இன்பத்தைப் பயக்கும். எ - று.

மறுமையின்பம் பெரிதாகலின், முற்கூறப்பட்டது. இம்மையின்பமாவது உலகம் தன்வயத்ததாகலான் நல்லனவெய்தி இன்புறுதல். இவையிரண்டுபாட்டானும் இருமைப்பயனும் ஒருங்கெய்துதல் வலியுறுத்தப்பட்டது. (௮)

௯௯. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. ௯.

இ - ள். இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் - பிறர் கூறும் இன்சொற்றனக்கின்பம் பயத்தலை அனுபவித்தறிகின்றவன்—வன்சொல் வழங்குவது எவன்கொல் - அது நிற்கப் பிறர்மாட்டு வன்சொல்லைச் சொல்லுவது என்னபயன் கருதி! எ - று.

இனிதென்றது வினைக்குறிப்புப்பெயர். கடுஞ்சொற் பிறர்க்கு மின்னாதாகலின், அது கூறலாகாதென்பது கருத்து. (௯)

௧௦௦. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. ௧௦.

இ - ள். இனிய உளவாக இன்னாத கூறல் - அறம் பயக்கும் இனியசொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம் பயக்கும் இன்னாதசொற்களை ஒருவன் கூறுதல்—கனி இருப்பக் காய் கவர்ந்தற்று - இனிய கனிகளும் தன்கைக்கணுளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை நுகர்ந்ததனோடொக்கும். எ - று.

கூறலென்பதனாற் சொற்களென்பது பெற்றாம். பொருளை விசேடித்து நின்ற பண்புகள் உவமைக்கண்ணுஞ்சென்றன. இனியகனிகளென்றது ஔவையுண்ட நெல்

* விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்—றவத்தின்முன் னில்லாதாம் பாவம் - விளக்குநெய்—தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை—தீர்விடத்து நிற்குமாந் தீது—நாலடியார், துறவு.

விக்கனி * போல அமிழ்தாவனவற்றை. இன்னாதகாய்களென்றது காஞ்சிரங்காய் போல நஞ்சாவனவற்றை. கடுஞ்சொற்சொல்லுதல் முடிவிற்றனக்கே யின்னாதென்பதாம். இவையிரண்டுபாட்டானும் இன்னாதகூறலின் குற்றங் கூறப்பட்டது. (௧0)

௧௧ம் அதி.—செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்தியில் குற்றம் செய்ந்நன்றி கோறலேயாகலின், அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டு, இஃதினியவைகூறலின்பின் வைக்கப்பட்டது.

௧0௧. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. ௧.

இ - ள். செய்யாமல் செய்த உதவிக்கு - தனக்கு முன்னொருதவிசெய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்தவுதவிக்கு—வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - மண்ணுலகும் விண்ணுலகுங் கைமாறாகக் கொடுத்தாலும் ஒத்தலரிது. எ - று.

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையவாகலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்றுவாயின. செய்யாமைச் செய்தவுதவியென்று பாடமோதி, மறித்துதவமாட்டாமையுள்ளவிடத்துச் செய்தவுதவியென்றுரைப்பாருமுளர். (௧)

௧0௨. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது. ௨.

இ - ள். காலத்தினால் செய்த நன்றி - ஒருவனுக்கு இறுதிவந்த வெல்லைக்கண் ஒருவன் செய்தவுபகாரம்—சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது - தன்னை நோக்கச் சிறிதாயிருந்ததாயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப் பெரிது. எ - று.

அக்காலநோக்குவதல்லது பொருணோக்கலாகாதென்பதாம். காலத்தினாலென்பது வேற்றுமை மயக்கம். (௨)

௧0௩. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது. ௩.

இ - ள். பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் - இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்குமென்று ஆராய்தலிலராய்ச் செய்தவுதவியாகிய ஈரமுடைமையை ஆராயின்,—நன்மை கடலிற் பெரிது - அதனன்மை கடலினும் பெரிதாம். எ - று.

இவை மூன்றுபாட்டானும் முறையே காரணமின்றிச் செய்ததூஉம், காலத்தினாற் செய்ததூஉம், பயன்றூக்காராய்ச் செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டது. (௩)

௧0௪. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார். ௪.

---

* மால்வரைக்—கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி—யமிழ்துவிளை தீங்கனி யௌவைக்கீந்த—வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவே—லரவக்கடற் றானையதிகனும்—சிறுபாணாற்றுப்படை.

தொன்னிலைப்—பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட—சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா—தாத னின்னகத் தடக்கிச்—சாதனீங்க வெமக்கீத் தனையே—புறநானூறு, ௯௧.

இ - ள். தினைத்துணை நன்றி செயினும் - தமக்குத் தினையளவிற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும்,—பனைத்துணையாக்கொள்வர் பயன் தெரிவார் - அதனை அவ்வளவிற்றாகக் கருதாது பனையளவிற்றாகக் கருதுவர் அக்கருத்தின்பயன்றெரிவார். எ - று.

தினை பனையென்பன சிறுமைபெருமைகட்குக் காட்டுவன சிலவள்வை. அக்கருத்தின் பயனாவது அங்ஙனங் கருதுவார்க்குவரும் பயன். (௪)

க0௫. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. ௫.

இ - ள். உதவி உதவிவரைத்து அன்று - கைம்மாறானவுதவி காரணத்தானும் பொருளானுங் காலத்தானுமாகிய மூவகையானும் முன்செய்த உதவியளவிற்றன்று;—உதவிசெயப்பட்டார் சால்பின் வரைத்து - அதனைச் செய்வித்துக்கொண்டவர்தம் அமைதியளவிற்று. எ - று.

சால்பு எவ்வளவுபெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாமென்பார், சால்பின் வரைத்தென்றார். இவையிரண்டுபாட்டானும் மூன்று மல்லாத வுதவிமாத்திரமும் அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாமென்பது கூறப்பட்டது. (௫)

க0௬. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு. ௬.

இ - ள். துன்பத்துள் துப்பு ஆயார் நட்புத் துறவற்க - துன்பக்காலத்துத் தனக்குப் பற்றுக்கோடாயினாரது நட்பை விடாதொழிக;—மாசு அற்றார் கேண்மை மறவற்க - அறிவொழுக்கங்களிற் குற்றமற்றாரது கேண்மையை மறவாதொழிக. எ - று.

கேண்மை கேளாந்தன்மை. இம்மைக்குறுதிகூறுவார் மறுமைக்குறுதியும் உடன்கூறினார். (௬)

க0௭. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. ௭.

இ - ள். தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு - தங்கணெய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை—எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் - எழுமையினையுடைய தம்மெழுவகைப்பிறப்பினும் நினைப்பர் நல்லோர். எ - று.

எழுமையென்றது வினைப்பயன்றொடரும் எழுபிறப்பினை; அது வளையாபதியுட் கண்டது. எழுவகைப்பிறப்பு மேலேயுரைத்தாம். * விரைவுதோன்றத் துடைத்தவரென்றார். நினைத்தலாவது துன்பந்துடைத்தலான் அவர்மாட்டுளதாகிய அன்பு பிறப்புத்தோறுந் தொடர்ந்து அன்புடையராதல். இவை இரண்டுபாட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது. (௭)

க0௮. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. ௮.

இ - ள். நன்றி மறப்பது நன்று அன்று - ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று;—நன்றல்லது அன்றே மறப்பது நன்று - அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன். எ - று.

* திருக்குறள் - ௬௨.

இரண்டும் ஒருவனாற்செய்யப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு. (அ)

௧0௯. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும். ௯.

இ - ள். கொன்று அன்ன இன்னா செயினும் - தமக்கு முன்னொரு நன்மைசெய்தவர் பின்கொன்றாலொத்த இன்னாதவற்றைச் செய்தாராயினும்,—அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும் - அவையெல்லாம் அவர்செய்த நன்மையொன்றனையும் நினைக்க இல்லையாம். எ - று.

தினைத்துணை பனைத்துணையாகக்கொள்ளப் படுதலின், அவ்வொன்றுமே அவற்றையெல்லாங் கெடுக்குமென்பதாம். இதனான் நன்றல்லது அன்றே மறக்குந்திறங் கூறப்பட்டது. (௯)

௧௧0. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. ௧0.

இ - ள். எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் - பெரியவறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தினீங்கும் வாயிலுண்டாம்;—செய் நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை - ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃதில்லை. எ - று.

பெரியவறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலையறுத்தலும், மகளிர்கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல். * இதனாற் செய்ந்நன்றிகோறலின் கொடுமை கூறப்பட்டது. (௧0)

கஉ ம் அதி.—நடுவுநிலைமை.

அஃதாவது பகை நொதுமல் நண்பென்னும் மூன்றுபகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கு நிலைமை. இது, நன்றிசெய்தார் மாட்டு அந்நன்றியினை நினைத்த வழிச் சிதையுமன்றே அவ்விடத்துஞ் சிதையலாகாதென்றற்கு, செய்ந்நன்றியறிதலின் பின் வைக்கப்பட்டது.

௧௧௧. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். ௧.

இ - ள். தகுதி என ஒன்றே நன்று - நடுவுநிலைமையென்று சொல்லப்படும் ஓரறமுமே நன்று,—பகுதியான் பாற்பட்டு ஒழுகப்பெறின் - பகை நொதுமல் நண்பென்னும் பகுதிதோறும் தன்முறைமையை விடாதொழுகப்பெறின். எ - று.

தகுதியுடையதனைத் தகுதியென்றார். "ஊரானோர் தேவகுலம்" என்பது போலப் பகுதியானென்புழி ஆனுருபு தோறுமென்பதன்பொருட்டாய் நின்றது. பெறினென்பது அவ்வொழுக்கத்தருமைதோன்ற நின்றது. இதனான் நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது. (௧)

* ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு—மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்குங்—குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்—வழுவாய் மருங்கிற் கழுவாயுமுளவே—நிலம்புடை பெயர்வ தாயினுமொருவன்—செய்தி கொன்றார்க்குய்தியில்லென்—றறம்பாடின்றே யாயிழை கணவ—புறநானூறு, ௩௪. கழுவாய் - பிராயச்சித்தம்.

ககஉ. செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து. உ.

இ - ள். செப்பம் உடையவன் ஆக்கம் - நடுவுநிலைமையையுடையவனது செல்வம்—சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து - பிறர்செல்வம்போல் அழிவின்றி அவன் வழியினுள்ளார்க்கும் வலியாதலையுடைத்து. எ - று.

விகாரத்தாற்றொக்க எச்சவும்மையான் இறக்குந் துணையும் அவன்றனக்கும் ஏமாப்புடைத்தென்பது பெற்றாம். அறத்தோடுவருதலின், அன்னதாயிற்று. தானிறந்துழி எஞ்சிநிற்பதாகலின், எச்சமென்றார். (உ)

ககங. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல். ங.

இ - ள். நன்றே தரினும் - தீங்கன்றி நன்மையே பயந்ததாயினும்,—நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல் - நடுவு நிற்றலையொழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே யொழியவிடுக. எ - று.

நன்மை பயவாமையின், நன்றே தரினு மென்றார். இகத்தலானென்பது இகந்தெனத் திரிந்துநின்றது. இவையிரண்டுபாட்டானும் முறையே நடுவுநிலைமையான் வந்த செல்வம் நன்மை பயத்தலும், ஏனைச்செல்வம் தீமை பயத்தலுங் கூறப்பட்டன. (ங)

ககச. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும். ச.

இ - ள். தக்கார் தகவிலர் என்பது - இவர் நடுவுநிலைமையுடையர் இவர் நடுவுநிலைமையிலரென்னும் விசேடம்—அவரவர் எச்சத்தால் காணப்படும்—அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும். எ - று.

தக்கார்க்கெச்சமுண்டாதலும் தகவிலார்க்கில்லையாதலும் ஒருதலையாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின. இதனால் தக்காரையுந் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது. (ச)

ககரு. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. ரு.

இ - ள். கேடும் பெருக்கமும் இல் அல்ல - தீவினையாற்கேடும் நல்வினையாற்பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன;—நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி - அவ்வாற்றையறிந்து அவை காரணமாக மனத்தின்கட்கோடாமையே அறிவானமைந்தார்க்கு அழகாவது. எ - று.

அவை காரணமாகக் கோடுதலாவது அவை இப்பொழுது வருவனவாகக் கருதிக் கேடுவாராமையைக்குறித்தும் பெருக்கம் வருதலைக்குறித்தும் ஒருதலைக்கணிற்றல். அவற்றிற்குக் காரணம் பழவினையே, கோடுதலன்று என உண்மையுணர்ந்து நடுவுநிற்றல் சால்பினை யழகுசெய்தலின்; சான்றோர்க்கணியென்றார். (ரு)

ககசா. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின். சா.

இ - ள். தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின் - ஒருவன் தன்னெஞ்சம் நடுவு நிற்றலையொழிந்து நடுவல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின்,—யான் கெடுவல் என்பது அறிக - அந்நினைவை யான் கெடக் கடவே னென்றுணரும் உற்பாதமாக அறிக. எ - று.

நினைத்தலும் செய்தலோடொக்குமாகலின், செயினென்றார். (௬)

கக௭. கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு. ௭.

இ - ள். நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு - நடுவாகநின்று அறத்தின் கண்ணே தங்கினவனது வறுமையை—கெடுவாகவையாது உலகம் - வறுமையென்று கருதார் உயர்ந்தோர். எ - று.

கெடுவென்பது முதனிலைத்தொழிற்பெயர். செல்வமென்று கொள்ளுவரென்பது குறிப்பெச்சம். இவை மூன்றுபாட்டானும், முறையே கேடும்பெருக்கமும் கோடுத லான் வாராவென்பதூஉம், கோடுதல் கேட்டிற்கேதுவாமென்பதூஉம், கோடாதவன் றாழ்வு கேடன்றென்பதூஉம், கூறப்பட்டன. (௭)

கக௮. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. ௮.

இ - ள். சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் - முன்னேதான் சமனாகநின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்குந் துலாம்போல—அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி-இலக்கணங்களானமைந்து ஒருபக்கத்துக் கோடாமை சான்றோர்க்கு அழகாம். எ - று.

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற்கோடாமையும் உவமைக்கண்ணும், கூட்டி, சான்றோர் சீர்தூக்கலாவது தொடைவிடை * களாற் கேட்டவற்றை ஊழான் † உள்ளவாறுணர்தலாகவும், ஒருபாற்கோடாமையாவது அவ்வுள்ளவாற்றை மறையாது பகை நொதுமல் நட்பென்னும் மூன்றுதிறத்தார்க்கும் ஒப்பக்கூறுதலாகவும், உரைக்க. இலக்கணங்களானமைதல் இருவழியும் ஏற்பனகொள்க. (௮)

கக௯. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின். ௯.

இ - ள். செப்பம் சொற்கோட்டம் இல்லது - நடுவுநிலைமையாவது சொல்லின் கட்கோடுதலில்லாததாம்,—உட்கோட்டம் இன்மை ஒருதலையாப் பெறின் - அஃதன்னதாவது மனத்தின்கட்கோட்டமின்மையைத் திண்ணிதாகப் பெறின். எ - று.

சொல் ஊழான் அறுத்துச் சொல்லுஞ்சொல். காரணம்பற்றி ஒருபாற்கோடாத மனத்தோடு கூடுமாயின், அறங்கிடந்தவாறு சொல்லுதல் நடுவுநிலைமையாமெனவே, அதனோடு கூடாதாயின் அவ்வாறு சொல்லுதல் நடுவுநிலைமையன்றென்பது பெறப்பட்டது. (௯)

---

* தொடை - வினா. † ஊழ் - முறைமை. "தொடைவிடை யூழாத் தொடைவிடை துன்னி"—வெண்பாமாலை, வாகைப்படலம், அவையமுல்லை, ௧௯.

கஉ0. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின். க0.

இ - ள். பிறவும் தமபோல் பேணிச் செயின் - பிறர்பொருளையுந் தம்பொருள் போலப் பேணிச் செய்யின்,—வாணிகம் செய்வார்க்கு வாணிகம் - வாணிகஞ்செய்வார்க்கு நன்றாய வாணிகமாம். எ - று.

பிறவுந்தமபோற்செய்தலாவது கொள்வது மிகையுங் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்பநாடிச் செய்தல். இப்பாட்டு மூன்றனுள், முன்னையவிரண்டும் அவையத்தாரை நோக்கின, ஏனையது வாணிகரை நோக்கிற்று, அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறாகச் சிறந்தமையின். (க0)

கரு ம் அதி.—அடக்கமுடைமை.

அஃதாவது மெய், மொழி, மனங்கள் தீநெறிக்கட்செல்லாது அடங்குதலுடையனாதல். அஃது எதிலார்குற்றம்போற்றன்குற்றமுங்காணும் நடுவுநிலைமையுடையாற்காதலின், இது நடுவுநிலைமையின்பின் வைக்கப்பட்டது.

கஉக. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும். க.

இ - ள். அடக்கம் அமரருள் உய்க்கும் - ஒருவனை அடக்கமாகியவறம் பின்றேவருலகத்துய்க்கும்,—அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும் - அடங்காமையாகியபாவம் தங்குதற்கரிய இருளின்கட்செலுத்தும். எ - று.

இருளென்பது ஓர்நரகவிசேடம். "எல்லாம் - பொருளிற் பிறந்துவிடும்" * என்றாற்போல உய்த்துவிடுமென்பது ஒருசொல்லாய் நின்றது. (க)

கஉஉ. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங் கில்லை யுயிர்க்கு. உ.

இ - ள். உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை - உயிர்கட்கு அடக்கத்தின் மிக்க செல்வமில்லை,—அடக்கத்தைப் பொருளாக் காக்க - ஆகலான் அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாகக்கொண்டு அழியாமற்காக்க. எ - று.

உயிரென்பது சாதியொருமை. அஃது ஈண்டு மக்களுயிர்மேனின்றது, அறிந்தடங்கிப்பயன்கொள்வது அதுவேயாகலின். (உ)

கஉங. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின். ங.

இ - ள். அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப்பெறின் - அடங்குதலே நமக்கு அறிவாவதென்றறிந்து நெறியானே ஒருவன் அடங்கப்பெறின்,—செறிவு அறிந்து சீர்மை பயக்கும் - அவ்வடக்கம் நல்லோரானறியப்பட்டு அவனுக்கு விழுப்பத்தைக் கொடுக்கும். எ - று.

* கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி—சொல்லிற் பிறக்கு முயர்மத - மெல்ல—வருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்—பொருளிற் பிறந்து விடும்—நான்மணிக்கடிகை, எ.

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந்தருதலின், பொதுப்படக்கூறினார். சுட்டு வருவிக்கப்பட்டது. அதனால் அங்ஙனம் விழுப்பந்தருவதாயது ஒழுக்கமென்பது பெற்றாம். உயிர் எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாயினும் ஒழுக்கம்போல விழுப்பந்தாராமையின், உயிரினுமோம்பப்படுமென்றார். (க)

கரு௨. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை. ௨.

இ - ள். ஒழுக்கம் ஓம்பிப் பரிந்து காக்க - ஒழுக்கத்தினை ஒன்றானும் அழிவுபடாமற்பேணி வருந்தியுங்காக்க;—தெரிந்து ஓம்பித்தேரினும் துணை அஃதே - அறங்கள் பலவற்றையுமாராய்ந்து இவற்றுள் இருமைக்குந்துணையாவது யாதென்று மனத்தையொருக்கித் தேர்ந்தாலும் துணையாய் முடிவது அவ்வொழுக்கமேயாகலான். எ - று.

பரிந்துமென்னுமும்மை விகாரத்தாற்றொக்கது. இவையிரண்டுபாட்டானும் ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது. (௨)

கரு௩. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். ௩.

இ - ள். ஒழுக்கமுடைமை குடிமை - எல்லார்க்குந் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம்;—இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் - அவ்வொழுக்கத்திற்றவறுதல் அவ்வருணத்திற் றாழ்ந்த வருணமாய்விடும். எ - று.

பிறந்த வருணத்துள் இழிந்தகுலத்தாராயினும் ஒழுக்கமுடையராக உயர்குலத்தராவராகலின் குடிமையாமென்றும், உயர்ந்தவருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறத் தாழ்ந்த வருணத்தராவராகலின் இழிந்த பிறப்பாய் விடுமென்றுங் கூறினார். உள்வழிப்படுங் குணத்தினும் இல்வழிப்படுங்குற்றம் பெரிதென்றவாறு. பயன் இடையீடின்றி யெய்துதலின், அவ்விரைவு பற்றி அவ்வேதுவாகிய வினைகளே பயனாகவோதப்பட்டன. (௩)

கரு௪. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். ௪.

இ - ள். ஓத்து மறப்பினும் கொளலாகும் - கற்ற வேதத்தினை மறந்தானாயினும் அவ்வருணங்கெடாமையிற் பின்னும் அஃதோதிக்கொளலாம்;—பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் - அந்தணனது உயர்ந்தவருணம் தன்னொழுக்கங்குன்றக் கெடும். எ - று.

மறந்தவழி இழிகுலத்தனாமாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தான், மறப்பினுமென்றார். சிறப்புடைவருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்குங் கொள்ளப்படும். (௪)

கரு௫. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு. ௫.

இ - ள். அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று - அழுக்காறுடையான் மாட்டு ஆக்கமில்லாதாற்போல—ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை - ஒழுக்கமில்லாதவன் மாட்டும் உயர்ச்சியில்லை. எ - று.

உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லையென்பது பெற்ரும்; என்னை? "கொடுப்பதழுக்கறுப்பான் சுற்ற*" மும் நல்கூர்தலின். உயர்வு உயர்குலமாதல். (ரு)

கநசு. ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து. சு.

இ - ள். ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் - செய்தற்கருமை நோக்கி ஒழுக்கத்திற் சுருங்கார் மனவலியுடையார்,—இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து - அவ்விழுக்கத்தால் தமக்கிழிகுலமாகிய குற்றமுண்டாமாற்றை அறிந்து. எ - று.

ஒழுக்கத்திற்சுருக்கம் அதனை யுடையார்மேலேற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமைபற்றி, உரவோரென்ருர். (சு)

கநஎ. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி. எ.

இ - ள். ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் - எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டையெய்துவர்,—இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர் - அதனினின்றிழுக்குதலானே தாம் எய்துதற்குரித்தல்லாத பழியையெய்துவர். எ - று.

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம் அடுக்குமென்று கொள்ளுமாகலின், எய்தாப்பழி யெய்துவரென்ருர். இவையைந்துபாட்டானும் ஒழுக்கம் உள்வழிப்படுங்குணமும் இல்வழிப்படுங் குற்றமுங் கூறப்பட்டன. (எ)

கநஅ. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும். அ.

இ - ள். நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் - ஒருவனுக்கு நல்லவொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்;—தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் - தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினுந் துன்பம் பயக்கும். எ - று.

நன்றிக்கு வித்தாகுமென்றதனுல் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், இடும்பைதருமென்றதனுல் நல்லொழுக்கம் இன்பந்தருதலும் பெற்ரும், ஒன்றுநின்றே ஏனையதை முடிக்குமாகலின். இதனுற் பின்விளைவு கூறப்பட்டது. (அ)

கநகூ. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். கூ.

இ - ள். வழுக்கியும் தீய வாயால் சொலல் - மறந்துந் தீயசொற்களைத் தம் வாயாற் சொல்லுந் தொழில்கள்—ஒழுக்கமுடையவர்க்கு ஒல்லா - ஒழுக்கமுடையவர்க்கு முடியா. எ - று.

தீயசொற்களாவன பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய்ம்முதலியனவும், வருணத்திற்கு உரியவல்லனவுமாம். அவற்றது பன்மையாற் சொல்லுதற்ரெழில் பலவாயின. சொலல் சாதியொருமை. சொலலெனவே அமைந்திருக்க வாயாலென வேண்டாது

* திருக்குறள், கசுசு.

கூறினர், நல்லசொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன்சிறப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் தாற்பரியமென்ப. (கூ)

கசo. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார். கo.

இ - ள். உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் - உலகத்தோடு பொருந்த வொழுகுதலைக் கல்லாதார்,—பல கற்றும் அறிவிலாதார் - பலநூல்களையுங் கற்றாராயினும், அறிவிலாதார். எ - று.

உலகத்தோடு பொருந்தவொழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதனவொழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பனகொண்டு வருதலான் அவையுமடங்க உலகத்தோடொட்டவென்றும், கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமுமாகலின் அவ்வொழுகுதலைக் கல்லாதார் பலகற்றுமறிவிலாதாரென்றுங் கூறினர். ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல். இவையிரண்டுபாட்டானும் சொல்லானுஞ் செயலானும் வருமொழுக்கங்களெல்லாம் ஒருவாற்றாற் றொகுத்துக் கூறப்பட்டன. (கo)

கரு ம் அதி.—பிறனில்விழையாமை.

அஃதாவது காம மயக்கத்தாற் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இஃது, ஒழுக்க முடையார் மாட்டே நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின்பின் வைக்கப் பட்டது.

கசக. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில். க.

இ - ள் பிறன் பொருளாட் பெட்டு ஒழுகும் பேதைமை - பிறனுக்குப் பொருளாந் தன்மையையுடையாளைக் காதலித்தொழுகுகின்ற அறியாமை—ஞாலத்து அறம் பொருள் கண்டார்கண் இல் - ஞாலத்தின்கண் அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந்தறிந்தார்மாட்டில்லை. எ - று.

பிறன்பொருள் பிறனுடைமை. அறம் பொருளென்பன ஆகுபெயர். செவ்வெண்ணின்றொகை தொக்குநின்றது. இன்பமொன்றையே நோக்கும் இன்பநூலுடையார் இத்தீயொழுக்கத்தையும் பரகீயமென்று * கூறுவராகலின், அறம் பொருள் கண்டார் கணில்லென்றார்; எனவே, அப்பேதைமையுடையார்மாட்டு அறமும் பொருளும் இல்லையென்பது பெறப்பட்டது. (க)

கசஉ. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில். உ.

இ - ள். அறன்கடை நின்றாருள் எல்லாம் - காமங் காரணமாகப் பாவத்தின்கண் நின்றாரெல்லாருள்ளும்—பிறன்கடை நின்றாரின் பேதையார் இல் - பிறனில்லாளைக் காதலித்து அவன் வாயிற்கட்சென்று நின்றார்போலப் பேதையாரில்லை. எ - று.

அறத்தினீக்கப்பட்டமையின், அறன்கடையென்றார். அறன்கடை நின்ற பெண்வழிச் செல்வாரும் வரைவின்மகளிரோடும் இழிகுலமகளிரோடுங் கூடி இன்பநுகர்

* பரகீயம் - பிறற்குரியது.

வாரும்போல அறமும் பொருளும் இழத்தலேயன்றிப், பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாங்கருதிய இன்பமும் இழக்கின்றாராகலின், பேதையாரில்லென்றார்; எனவே, இன்பமுமில்லையென்பது பெறப்பட்டது. (உ)

கசரு. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
தீமை புரிந்தொழுகு வார். ரு.

இ - ள். தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார் - தம்மை ஐயுறாதாரில்லாள் கண்ணே பாவஞ்செய்தலை விரும்பியொழுகுவார்,—விளிந்தாரின் வேறு அல்லர் மன்ற - உயிருடையரேனும், இறந்தாரேயாவர். எ - று.

அறம் பொருளின்பங்களாகிய பயன் உயிரெய்தாமையின், விளிந்தாரின் வேறல்லரென்றும், அவர் தீமை புரிந்தொழுகுவது இல்லுடையவரது தெளிவுபற்றியாகலின் தெளிந்தாரில்லென்றுங் கூறினார். (ரு)

கசச. எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல். ச.

இ - ள். எனைத்துணையராயினும் என்னாம் - எத்துணைப்பெருமையுடையராயினும் ஒருவர்க்கு யாதாய் முடியும்—தினைத்துணையும் தேரான் பிறன் இல் புகல் - காமமயக்கத்தால் தினையளவுந் தம்பிழையையோராது பிறனுடைய இல்லின்கட்புகுதல்! எ - று.

இந்திரன்போல எல்லாப்பெருமையுமிழந்து சிறுமையெய்தல் நோக்கி, என்னாமென்றார். "என்னீ ரறியாதீர் போல விவைகூறி—இன்னீர வல்ல நெடுந்தகாய்*" என்புழிப்போல உயர்த்தற்கட் பன்மை யொருமை மயங்கிற்று. தேரான்பிறனென்பதனைத் தம்மை ஐயுறாத பிறனென்றுரைப்பாருமுளர். (ச)

கசரு. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. ரு.

இ - ள். எளிது என இல் இறப்பான் - எய்துதலெளிதென்று கருதிப் பின்விளைவு கருதாது பிறனில்லின்கணிறப்பான்—விளியாது எஞ்ஞான்றும் நிற்கும் பழி எய்தும் - மாய்தலின்றி எஞ்ஞான்றும் நிலைநிற்குங் குடிப்பழியினையெய்தும். எ - று.

இல்லின்கணிறத்தல் இல்லாள்கண் நெறிகடந்து சேறல். (ரு)

கசசு. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண். சு.

இ - ள். இல் இறப்பான்கண் - பிறனில்லாள்கண் நெறிகடந்து செல்வானிடத்து—பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவாவாம் - பகையும் பாவமும் அச்சமுங் குடிப்பழியுமென்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம். எ - று.

எனவே, இருமையுமிழத்தல் பெற்றாம். இவையாறுபாட்டானும் பிறனில்விழைவான்கட் குற்றங் கூறப்பட்டது. (சு)

கசஎ. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். எ.

---

* கலித்தொகை, பாலைக்கலி, ரு-ம் பாட்டு.

இ - ள். அறனியலான் இல்வாழ்வான் என்பான் - அறனாகிய இயல்போடுகூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுவான்—பிறன் இயலாள் பெண்மை நயவாதவன் - பிறனுக்குரிமை பூண்டு அவனுடைய இயல்பின்கண்ணே நிற்பாளது பெண்டன்மையை விரும்பாதவன். எ - று.

ஆனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இல்லறஞ் செய்வானெனப்படுவான் அவனே யென்பதாம். (எ)

கசஅ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு. அ.

இ - ள். பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை - பிறன்மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை—சான்றோர்க்கு அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு - சால்புடையார்க்கு அறனுமாம் நிரம்பியவொழுக்கமுமாம். எ - று.

புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கருமையின், அதனையடக்கிய ஆண்மையைப் பேராண்மையென்றார். ஒன்றோ வென்பது எண்ணிடைச்சொல். செய்தற்கரிய அறனும் ஒழுக்கமும் இதனைச் செய்யாமையே பயக்குமென்பதாம். (அ)

கசகூ. நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார். கூ.

இ - ள். நாம நீர் வைப்பின் - அச்சந் தருங் கடலாற் சூழப்பட்ட உலகத்து—நலக்கு உரியார் யார் எனின் - எல்லாநன்மைகளும் எய்துதற்குரியார் யாவரெனின்,—பிறற்கு உரியாள் தோள் தோயாதார் - பிறனொருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச்சேராதார். எ - று.

அகலம், ஆழம், பொருளுடைமை முதலியவற்றான் அளவிடப்படாமையின், நாம நீரென்றார். நலத்திற்கென்பது நலக்கெனக் குறைந்து நின்றது. உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது*. இருமையினும் நன்மையெய்துவரென்பதாம். (கூ)

கருo. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. கo.

இ - ள். அறன் வரையான் அல்லசெயினும் - ஒருவன் அறத்தைத் தனக்குரித்தாகச் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும்,—பிறன்வரையாள் பெண்மை நயவாமை நன்று - அவனுக்குப் பிறனெல்லைக்கணிற்பாளது பெண்மையை விரும்பாமையுண்டாயின், அது நன்று. எ - று.

இக்குணமே மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இவைநான்குபாட்டானும் பிறனில் விழையாதான்கட் குணங் கூறப்பட்டது. (கo)

கசுா ம் அதி.—பொறையுடைமை.

அஃதாவது காரணம் பற்றியாதல் மடமையானாதல் ஒருவன் தமக்கு மிகை செய்தவழித் தாமும் அதனை அவன்கட்செய்யாது பொறுத்தலையுடையராதல். நெறியி

---

* நாம் என்றது நாம எனத் திரிந்து நின்றது.

னீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டுமென்றற்கு, இது பிறனில்விழையாமையின் பின் வைக்கப்பட்டது.

கருக. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை. க.

இ - ள். அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல - தன்னையகழ்வாரை வீழாமற் றாங்கு நிலம்போல—தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை - தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாயவறம். எ - று.

இகழ்தல் மிகையாயின செய்தலும், சொல்லுதலும். (க)

கருஉ. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று. உ.

இ - ள். என்றும் இறப்பினைப் பொறுத்தல் - பொறை நன்றாகலால், தாமொறுத்தற்கு இயன்ற காலத்தும் பிறர் செய்த மிகையைப் பொறுக்க;—அதனை மறத்தல் அதனினும் நன்று - அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின், அப்பொறையினும் நன்று. எ - று.

மிகையென்றது மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள்ளப்படுதலின், மறத்தலை அதனினுநன்றென்றார். (உ)

கருங. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. ங.

இ - ள். இன்மையுள் இன்மை விருந்து ஒரால் - ஒருவனுக்கு வறுமையுள்வைத்து வறுமையாவது விருந்தினரையேற்றுக்கொள்ளாது நீக்குதல்;—வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை - அதுபோல வன்மையுள்வைத்து வன்மையாவது அறிவின்மையான் மிகைசெய்தாரைப் பொறுத்தல். எ - று.

இஃதெடுத்துக்காட்டுவமை. அறனல்லாத விருந்தொரால் பொருளுடைமையாகாதவாறுபோல, மடவார்ப்பொறையும் மென்மையாகாதே வன்மையாமென்பது கருத்து. (ங)

கருச. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும். ச.

இ - ள். நிறையுடைமை நீங்காமை வேண்டின் - ஒருவன் சால்புடைமை தன்கணின்று நீங்காமை வேண்டுவனாயின்,—பொறையுடைமை போற்றி ஒழுகப்படும் - அவனாற் பொறையுடைமை தன்கண் அழியாமற் காத்தொழுகப்படும். எ - று.

பொறையுடையாற்கல்லது சால்பில்லையென்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது. (ச)

கருரு. ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. ரு.

இ - ள். ஒறுத்தாரை ஒன்றாக வையார் - பிறன் தமக்குத் தீங்குசெய்தவழிப் பொறாது அவனையொறுத்தாரை அறிவுடையார் ஒருபொருளாக மனத்துக்கொள்ளார்,—பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து வைப்பர் - அதனைப் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து கொள்வர். எ - று.

ஒறுத்தவர் தாமும் அத்தீங்கு செய்தவனோடொத்தலின், ஒன்றாகவையாரென்றார். பொதிந்துவைத்தல் சார்புடைமைபற்றி இடைவிடாது நினைத்தல். (ரு)

கருசு. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். சு.

இ - ள். ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் - தமக்குத் தீங்கு செய்தவனை யொறுத்தார்க்கு உண்டாவது அவ்வொருநாளையின்பமே;—பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ் - அதனைப் பொறுத்தார்க்கு உலகமழியுமளவும் புகழுண்டாம். எ - று.

ஒரு நாளையின்பம் அந்நாளொன்றினும் கருதியது முடித்தேமெனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின், ஏற்புடையுலகென்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. (சு)

கருஎ. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று. எ.

இ - ள். திறன் அல்ல தற் பிறர் செய்யினும் - செய்யத்தகாத கொடியவற்றைத் தன்கட்பிறர் செய்தாராயினும்,—நோ நொந்து அறன் அல்ல செய்யாமை நன்று - அவர்க்கு அதனால் வருந்துன்பத்திற்கு நொந்து தான் அறனல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று. எ - று.

உம்மை சிறப்பும்மை. துன்பத்திற்கு நோதலாவது "உம்மை—யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் *" என்றுபரிதல். (எ)

கருஅ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல். அ.

இ - ள். மிகுதியான் மிக்கவை செய்தாரை - மனச்செருக்காற் றங்கட்டீயவற்றைச் செய்தாரை—தாம் தந்தகுதியான் வென்றுவிடல் - தாம் தம்முடைய பொறையான் வென்றுவிடுக. எ - று.

தாமும் அவர்கட்டீயவற்றைச்செய்து தோலாது பொறையான் அவரின் மேம்பட்டு வெல்கவென்பதாம். இவைநான்குபாட்டானும் பிறர்செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது. (அ)

கருகூ. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர். கூ.

இ - ள். துறந்தாரின் தூய்மை உடையர் - இல்வாழ்க்கைக்கணின்றேயும் துறந்தார்போலத் தூய்மையுடையார்—இறந்தார்வாய் இன்னாச்சொல் நோற்கிற்பவர் - நெறியைக் கடந்தார்வாய் இன்னாதசொல்லைப் பொறுப்பவர். எ - று.

---

* தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற—றெம்மை யிகழ்ந்த வினைப் பயத்தா - லும்மை—யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று—பரிவதூஉஞ் சான்றோர் கடன்—நாலடியார், துறவு.

தூய்மை மனமாசின்மை. வாயென வேண்டாது கூறினார், தீயசொற்கள் பயின்ற தெனத் தாம்வேண்டியதனிழிபு முடித்தற்கு. (கூ)

கசுO. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின். கO.

இ - ள். உண்ணாது நோற்பார் பெரியர் - விரதங்களான் ஊணைத்தவிர்ந்து உற்ற நோயைப் பொறுப்பார் எல்லாரினும் பெரியர்;—பிறர் சொல்லும் இன்னாச்சொல் நோற்பாரிற் பின் - அவர் பெரியராவது தம்மைப் பிறர் சொல்லும் இன்னாதசொல்லைப் பொறுப்பாரிற்பின். எ - று.

பிறர் அறிவிலாதார். நோலாமைக்கேதுவாகிய இருவகைப்பற்றொடு நின்றே நோற்றலின், இன்னாச்சொனோற்பாரிற் பின்னென்றார். இவையிரண்டுபாட்டானும் பிறர் மிகைக்கச்சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது. (கO)

கஎ ம் அதி.—அழுக்காறாமை.

இதனுள் அழுக்காறென்பது ஒருசொல். அதற்குப் பொருள் * மேலேயுரைத்தாம். அச்சொற் பின்னழுக்காற்றைச் செய்யாமையென்னும் பொருள்பட எதிர்மறையாகாரமும் மகரவைகாரவிகுதியும்பெற்று அழுக்காறாமையென நின்றது. இப்பொறாமையும் பொறைக்கு மறுதலையாகலின், இதனை விலக்குதற்கு இது பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.

கசுக. ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு. க.

இ - ள். ஒருவன் தன்னெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு - ஒருவன் தன் னெஞ்சத்தின்கண் அழுக்காறென்னுங் குற்றமில்லாத இயல்பினை — ஒழுக்காறாக் கொள்க - தனக்கோதிய ஒழுக்கநெறியாகக் கொள்க. எ - று.

இயல்பு அறிவோடுகூடிய தன்மை. அத்தன்மையும் நன்மைபயத்தலின், ஒழுக்கநெறிபோல உயிரினுமோம்புகவென்பதாம். (க)

கசுஉ. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின். உ.

இ - ள். யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின் - யாவர்மாட்டும் அழுக்காற்றினின்று நீங்குதலை ஒருவன் பெறுமாயின்,—விழுப்பேற்றின் அஃது ஒப்பது இல்லை - மற்றவன்பெறுஞ் சீரிய பேறுகளுள் அப்பேற்றினையொப்பதில்லை. எ - று.

அழுக்காறு பகைவர்மாட்டும் ஒழிதற்பாற்றென்பார், யார்மாட்டுமென்றார். அன்மை வேறாதல். இவையிரண்டுபாட்டானும் அழுக்காறின்மையது குணங் கூறப்பட்டது. (உ)

கசுங. அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான். ங.

---

* திருக்குறள், ஙபு.

இ-ள். அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் - மறுமைக்கும் இம்மைக்கும் அறமுஞ் செல்வமுமாகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதானென்று சொல்லப்படுவான்—பிறன் ஆக்கம் பேணாது அழுக்கறுப்பான் - பிறன் செல்வங்கண்டவழி அதற்கு உவவாது அழுக்காற்றைச் செய்வான். எ - று.

அழுக்கறுத்தலெனினும் அழுக்காறெனினுமொக்கும். அழுக்காறு செய்யின் தனக்கே ஏதமாமென்பதாம். (ங)

ககச. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து. ச.

இ-ள். அழுக்காற்றின் அல்லவை செய்யார் - அழுக்காறு ஏதுவாக அறனல்லவற்றைச் செய்யார் அறிவுடையார்—இழுக்காற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து - அத்தீநெறியால் தமக்கிருமையினுந் துன்பம் வருதலையறிந்து. எ - று.

அறனல்லவையாவன செல்வம் கல்வி முதலியனவுடையார்கட்டீங்கு நினைத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம். (ச)

ககரு. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. ரு.

இ-ள். ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது-அழுக்காறு பகைவரையொழிந்துங் கேடு பயப்பதொன்றாகலின்,—அழுக்காறு உடையார்க்கு அது சாலும் - அவ்வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடுபயத்தற்கு அதுதானேயமையும். எ - று.

அதுவேயென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொக்கது. (ரு)

ககசு. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும். சு.

இ-ள். கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் - ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றம்—உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் - உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதுமின்றிக் கெடும். எ - று.

கொடுப்பதன்கணழுக்கறுத்தலாவது கொடுக்கப்படும் பொருள்களைப் பற்றிப் பொறாமைசெய்தல். சுற்றங்கெடுமெனவே, அவன் கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர்பேறு பொறாமை தன்பேற்றையேயன்றித் தன்சுற்றத்தின் பேற்றையும் இழப்பிக்குமென்பதாம். (சு)

ககஎ. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும். எ.

இ-ள். அழுக்காறு உடையானை - பிறராக்கங்கண்டவழிப் பொறாமையுடையானை—செய்யவள் அவ்வித்துத் தவ்வையைக் காட்டிவிடும் - திருமகள் தானும் பொறாது தன்றவ்வைக்குக் காட்டி நீங்கும். எ - று.

தவ்வை மூத்தவள். தவ்வையைக்காட்டியென்பது "அறிவுடையந்தண னவளைக் காட்டென்றானே*" என்பதுபோல உருபு மயக்கம். மனத்தைக்கோடுவித்து அழுக்காறுடையனாயினானையென்றுரைப்பாருமுளர். (எ)

* கலித்தொகை, மருதம்.—எ.

கசூஅ. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும். அ.

இ - ள். அழுக்காறு என ஒருபாவி-அழுக்காறென்றுசொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி—திருச் செற்றுத் தீயுழி உய்த்துவிடும் - தன்னையுடையானை இம்மைக்கட்செல்வத்தைக்கெடுத்து, மறுமைக்கண் நரகத்திற் செலுத்திவிடும். எ - று.

பண்பிற்குப் பண்பியில்லையேனும், தன்னையாக்கினானை இருமையுங்கெடுத்தற்கொடுமைபற்றி, அழுக்காற்றினைப் பாவியென்றார், கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின். இவையாறுபாட்டானும் அழுக்காறுடைமையது குற்றங் கூறப்பட்டது.

கசூகூ. அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும். கூ.

இ - ள். அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் - கோட்டத்தினைப்பொருந்திய மனத்தையுடையவனதாக்கமும்,—செவ்வியான் கேடும் நினைக்கப்படும் - ஏனைச் செம்மையுடையவனது கேடும் உளவாயின், அவை ஆராயப்படும். எ - று.

கோட்டம் ஈண்டழுக்காறு. உளவாயினென்பது எஞ்சிநின்றது. ஆக்கக்கேடுகள் கோட்டமுஞ் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையரால் இதற்கேதுவாகிய பழவினை யாதென்றாராயப்படுதலின், நினைக்கப்படுமென்றார்: "இம்மைச் செய்தன யானறி நல்வினை—யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்—திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது" * என நினைக்கப்பட்டவாறறிக. (கூ)

கஎ0. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில். க0.

இ - ள். அழுக்கற்று அகன்றாரும் இல்லை - அழுக்காற்றைச் செய்து பெரியராயினாருமில்லை;—அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் - அச்செயலிலாதார் பெருக்கத்தினீங்கினாருமில்லை. எ - று.

இவையிரண்டுபாட்டானும் கேடுமாக்கமும் வருதற்கேது ஒருங்கு கூறப்பட்டது.

கஅ ம் அதி.—வெஃகாமை.

அஃதாவது பிறர்க்குரிய பொருளை வெளவக்கருதாமை. பிறருடைமை கண்டவழிப் பொறாமையேயன்றி அதனைத் தான் வெளவக்கருதுதலுங் குற்றமென்றற்கு இஃது அழுக்காறாமையின்பின் வைக்கப்பட்டது.

கஎக. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். க.

இ - ள். நடுவு இன்றி நன்பொருள் வெஃகின் - பிறர்க்குரியன கோடல் நமக்கு அறனன்றென்னும் நடுவுநிலைமையின்றி அவர் நன்பொருளை ஒருவன் வெஃகுமாயின்,—குடி பொன்றிக் குற்றமும் ஆங்கே தரும் - அவ்வெஃகுதல் அவன் குடியைக் கெடச் செய்து, பல குற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும். எ - று.

---

* சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, கூக - கூரு.

குடியை வளரச்செய்து பலநன்மையும் பயக்குமியல்புபற்றி, வெஃகினென்பார், நன்பொருள் வெஃகினென்றார். பொன்ற வென்பது பொன்றியெனத் திரிந்துநின்றது*; செய்தென்பது சொல்லெச்சம். (க)

களஉ. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். உ.

இ - ள். படு பயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்-பிறர் பொருளை வௌவினால் தமக்கு வரும் பயனை விரும்பி அது வௌவுதற்குப் பழியின்கண்ணே படுஞ்செயல்களைச் செய்யார்—நடுவு அன்மை நாணுபவர் - நடுவுநிலைமையன்மையை அஞ்சுபவர். எ - று.

நடுவு ஒருவன் பொருட்குப் பிறன் உரியனல்லனென்னும் நடுவு. (உ)

களஙு. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். ஙு.

இ - ள். சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யார் - பிறர்பால் வௌவிய பொருளால் தாமெய்தும் நிலையில்லாத வின்பத்தை விரும்பி அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார்—மற்றின்பம் வேண்டுபவர் - அறத்தான் வரும் நிலையுடைய வின்பத்தைக் காதலிப்பவர். எ - று.

பாவத்தான் வருதலின் அப்பொழுதே யழியுமென்பார், சிற்றின்பமென்றார். மற்றையின்பமென்பது மற்றின்பமென நின்றது. (ஙு)

களச. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். ச.

இ - ள். இலம் என்று வெஃகுதல் செய்யார் - யாம் வறிய மென்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்பொருளை விரும்புதல் செய்யார் - புலம் வென்ற புன்மையில் காட்சியவர் - ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத காட்சியினையுடையார். எ - று.

வெல்லுதல் பாவநெறிக்கட்செல்ல விடாமை. புலம் வென்ற புன்மையில் காட்சியவர்க்கு வறுமையின்மையின், வெஃகுதலு மில்லையாயிற்று. புன்மையில் காட்சி பொருள்களைத் திரிபின்றி யுணர்தல். (ச)

களரு. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். ரு.

இ - ள். அஃகி அகன்ற அறிவு என்னும்-நுண்ணிதாய் எல்லா நூல்களினுஞ்சென்ற தம்மறிவு என்ன பயத்ததாம்,—வெஃகி யார்மாட்டும் வெறிய செயின் - பொருளை விரும்பி யாவர்மாட்டும் அறிவோடு படாத செயல்களை அறிவுடையார் செய்வராயின். எ - று.

---

* குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும், குடிமடிந்து குற்றம் பெருகும், இருணீங்கி யின்பம் பயக்கும் என்புழிப் பொன்றுவித்து, மடிவித்து, நீங்குவித்து எனற்பாலன பிறவினைப் பொருளுணர்த்தும் விவ்விகுதி தொக்கு, பொன்றி, மடிந்து, நீங்கி என நின்றனவெனக் கொண்டார் தொல்காப்பியச் சூத்திரவிருத்திகாரர். இங்ஙனம் வருவனவற்றை வடநூலார் அந்தர்ப்பாவித ணிச்சென்பர்.

யார்மாட்டும் வெறிய செய்தலாவது தக்கார்மாட்டும் தகாதார்மாட்டும் இழிந்தனவும் கடியனவும் முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவைசெய்யாமையாகலின், அறிவென்றுமென்றார். (ரு)

௧எசு. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். சு.

இ - ள். அருள் வெஃகி ஆற்றின்கண் நின்றான் - அருளாகிய அறத்தை விரும்பி அதற்குவழியாகிய இல்லறத்தின்கணின்றவன்—பொருள் வெஃகிப் பொல்லாத சூழக்கெடும்-பிறர்பொருளையவாவி அதனை வருவிக்குங் குற்றநெறிகளை எண்ணக் கெடும். எ - று.

இல்லறநெறியால் அறிவு முதிர்ந்துழியல்லது துறக்கப்படாமையின், அதனைத் துறவறத்திற்கு ஆறென்றார். கெடுதல் இரண்டறமுஞ் சேரவிழத்தல். சூழ்ந்த துணையானே கெடுமெனவே, செய்தாற்கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது. (சு)

௧எஎ. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். எ.

இ - ள். வெஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க - பிறர்பொருளையவாவிக் கொண்டு அதனாலாகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக;—விளைவயின் பயன் மாண்டற்கு அரிதாம்- பின்னனுபவிக்குங்கால் அவ்வாக்கத்தின் பயன் நன்றாதலில்லை ஆகலான். எ - று.

விளையென்பது முதனிலைத்தொழிற்பெயர். இவையேழுபாட்டானும் வெஃகுதலின் குற்றம் கூறப்பட்டது. (எ)

௧எஅ. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். அ.

இ - ள். செல்வத்திற்கு அஃகாமை யாதெனின் - சுருங்கன் மாலைத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக்காரணம் யாதென்று ஒருவனுராயின்,—பிறன் வேண்டும் கைப்பொருள் வெஃகாமை - அது பிறன்வேண்டுங் கைப்பொருளைத் தான் வேண்டாமையாம். எ - று.

அஃகாமை ஆகுபெயர். வெஃகாதான்செல்வம் அஃகாதென்பதாயிற்று. (அ)

௧எகூ. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு. கூ.

இ - ள். அறன் அறிந்து வெஃகா அறிவுடையார் - இஃதறனென்றறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரை—திரு திறன் அறிந்து ஆங்கே சேரும் - திருமகள் தானடைதற்காங்கூற்றினையறிந்து அக்கூற்றானே சென்றடையும். எ - று.

அடைதற்காங்கூறு காலமும், இடனும், செவ்வியும் முதலாயின. இவையிரண்டு பாட்டானும் வெஃகாமையின் குணங் கூறப்பட்டது. (கூ)

௧அ௦. இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு. ௧௦.

இ - ள். எண்ணாது வெஃகின் இறல் ஈனும் - பின் விளைவதறியாது ஒருவன் பிறன் பொருளை வெளவக்கருதின் அக்கருத்து அவனுக்கிறுதியைப் பயக்கும்,—வேண்டாமை என்னும் செருக்கு விறல் ஈனும் - அப்பொருளை வேண்டாமையென்னுஞ் செல்வம் வெற்றியைப் பயக்கும். எ - று.

பகையும் பாவமும் பெருக்கலின் இறலீனுமென்றும், அப்பொருளை வேண்டி உழல்வோர் யாவரையுங் கீழ்ப்படுத்தலின் விறலீனுமென்றுங் கூறினார். செருக்கு ஆகுபெயர். இதனால் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன. (க0)

கக ம் அதி.—புறங்கூறாமை.

அஃதாவது காணாதவழிப் பிறரையிகழ்ந்துரையாமை. மொழிக்குற்றம் மனக்குற்றமடியாக வருதலான், இஃது அழுக்காறாமை வெஃகாமைகளின்பின் வைக்கப்பட்டது.

கஅக. அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது. க.

இ - ள். ஒருவன் அறம் கூறான் அல்ல செயினும் - ஒருவன் அறனென்று சொல்லுவதுஞ் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும்,—புறங்கூறான் என்றல் இனிது - பிறனைப் புறங்கூறானென்று உலகத்தாரால் சொல்லப்படுதல் நன்று. எ - று.

புறங்கூறாமை அக்குற்றங்களானிழிக்கப்படாது மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இதனால் அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது. (க)

கஅஉ. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை. உ.

இ - ள். அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீது - அறனென்பதொன்றில்லையென அழித்துச்சொல்லி அதன்மேற்பாவங்களைச் செய்தலினுந் தீமையுடைத்து—புறன் அழீஇப் பொய்த்து நகை - ஒருவனைக் காணாதவழி இகழ்ந்துரையால் அழித்துச் சொல்லிக் கண்டவழி அவனொடு பொய்த்துநகுதல். எ - று.

உறழ்ச்சி நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல் ஒளியைக்கோறல். (உ)

கஅஙு. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும். ங.

இ - ள். புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் - பிறனைக் காணாதவழி இகழ்ந்துரைத்துக் கண்டவழி அவற்கினியனாகப் பொய்த்து ஒருவனுயிர்வாழ்தலின்—சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும் - அது செய்யாது சாதல் அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும். எ - று.

பின் புறங்கூறிப் பொய்த்தலொழிதலின், சாதல் ஆக்கந்தருமென்றார். ஆக்கம் அஃதொழிந்தார் மறுமைக்கணெய்தும் பயன். அறம் ஆகுபெயர். தருமென்பது இடவழுவமைதி. * (ங)

* தொல்காப்பியத்துக் கிளவியாக்கத்தில், "அவற்றுள், தருசொல் வருசொல்லாயிரு கிளவியுந்—தன்மை முன்னிலை யாயீரிடத்த" என்னுஞ் சூத்திரத்திற்கு மாறாக ஈண்டுப் படர்க்கையிடத்திற்கு வந்தமையின், இடவழுவமைதியாயிற்று.

௧௮௪. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். ௪.

இ - ள். கண் நின்று கண் அறச் சொல்லினும்-ஒருவனெதிரே நின்று கண்ணோட்டமறச் சொன்னானாயினும்,—முன் இன்று பின் நோக்காச் சொல் சொல்லற்க - அவனெதிரின்றிப் பின்வருங்குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லாதொழிக. எ - று.

பின் ஆகுபெயர். சொல்வான்றொழில் சொன்மேலேற்றப்பட்டது*. இவை மூன்றுபாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது. (௪)

௧௮௫. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். ரு.

இ - ள். அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை - புறஞ்சொல்லுவானொருவன் அறனை நன்றென்று சொல்லினும், அது தன்மனத்தானாய்ச் சொல்லுகின்றானல்லனென்பது †—புறஞ்சொல்லும் புன்மையால் காணப்படும் - அவன் புறஞ்சொல்லுதற்குக் காரணமான மனப்புன்மையானே அறியப்படும். எ - று.

மனந்தீதாகலின், அச்சொற் கொள்ளப்படா தென்பதாம். (ரு)

௧௮௬. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும். சு.

இ - ள். பிறன் பழி கூறுவான் - பிறனொருவன் பழியை அவன்புறத்துக் கூறுமவன்—தன்பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும் - தன்பழி பலவற்றுள்ளும் உளையுந்திறமுடையவற்றைத் தெரிந்து அவனாற் கூறப்படும். எ - று.

புறத்தென்பது அதிகாரத்தாற்பெற்றாம். இது வருகின்றவற்றிற்குமொக்கும். திறன் ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்டான் அக்கூறியாற்கு அவ்வளவன்றி அவனிறந்துபட்டு உளையுந் திறத்தனவாகிய பழிகளை நாடி எதிரே கூறுமாகலின், திறன்றெரிந்து கூறப்படுமென்றார். (சு)

௧௮௭. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றா தவர். எ.

இ - ள். பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் - தம்மை விட்டு நீங்குமாற்றாற் புறங்கூறித் தங்கேளிரையும் பிரியப்பண்ணுவர்—நகச்சொல்லி நட்பாடல் தேற்றாதவர் - கூடி மகிழுமாறு இனியசொற்களைச் சொல்லி அயலாரோடு நட்பாடலை அறியாதார். எ - று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கேளிரையும் பிரிப்பரென்றகருத்தான், அயலாரோடுமென்பது வருவித்துரைக்கப்பட்டது. அறிதல் தமக்குறுதியென்றறிதல்.

* முன்னின்று பின்னோக்காச்சொல், இது ஒருபொருளின் வினை மற்றொருபொருளின் வினையானது. பிரயோகவிவேகம், திங்குப்படலம், "மருளறு காரணம்" என்னும் ௧௪ - ம் பாட்டிற் காண்க.

† அறஞ்சொல்லு நெஞ்சத்தான் என்பதனை நெஞ்சோடறஞ் சொல்வானென விகுதி பிரித்துக்கூட்டுவர் பிரயோகவிவேகநூலார்.

"கடியு-மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை"* என்புழிப்போலத் தேற்றாமை தன்வினையாய்நின்றது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து. (௭)

௧௮௮. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா
ரென்னைகொ லேதிலார் மாட்டு. ௮.

இ - ள். துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார் - தம்மொடு செறிந்தாரது குற்றத்தையும் அவர்புறத்துத் தூற்றுமியல்பினையுடையார்—ஏதிலார்மாட்டு என்னைகொல் - அயலார்மாட்டுச் செய்வது யாதுகொல்லோ! எ - று.

தூற்றுதல் பலருமறியப் பரப்புதல். அதனிற்கொடியது பிறிதொன்று காணாமையின், என்னைகொலென்றார். செய்வதென்பது சொல்லெச்சம். என்னர்கொலென்று பாடமோதி, எவ்வியல்பினராவரென்றுரைப்பாருமுளர். (௮)

௧௮௯. அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை. ௯.

இ - ள். புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை - பிறர் நீங்கினவளவு பார்த்து அவர் பழித்துரையை உரைப்பானது உடற்பாரத்தை—வையம் அறன்நோக்கி ஆற்றுங்கொல் - நிலம் இக்கொடியது பொறுத்தலே எனக்கறமாவதெனக் கருதிப் பொறுக்கின்றதுபோலும். எ - று.

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற்கரிதென்னுங் கருத்தால், அறநோக்கியாற்றுங்கொலென்றார். இவையைந்துபாட்டானும் புறங்கூறுவார்க்கெய்துங்குற்றங் கூறப்பட்டது. (௯)

௧௯௰. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு. ௧௰.

இ - ள். ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின் - ஏதிலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர் குற்றங்காணுமாறுபோலப் புறங்கூறலாகிய தங்குற்றத்தையுங் காண வல்லராயின்,—மன்னும் உயிர்க்குத் தீது உண்டோ - அவர் நிலைபேறுடைய வுயிர்க்கு வருவதொரு துன்பமுண்டோ? எ - று.

நடுவுநின்று ஒப்பக்காண்டலருமைநோக்கிக் காண்கிற்பினென்றும், கண்டவழியொழிதலிற் பாவமின்றாம் ஆகவே வரும் பிறவிகளினுந் துன்பமில்லையென்பது நோக்கி உயிர்க்குத் தீதுண்டோ வென்றுங் கூறினார். இதனாற் புறங்கூற்றொழிதற்கு உபாயங் கூறப்பட்டது. (௧௰)

௨௰ம் அதி.—பயனிலசொல்லாமை.

அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல்லென வாக்கின்கணிகழும் பாவநான்கனுள், பொய் துறந்தார்க்கல்லது ஒருதலையாகக் கடியலாகாமையின், அஃதொழித்து, இல்வாழ்வாராற் கடியப்படும் ஏனை மூன்றனுள், கடுஞ்சொல் இனியவைகூறலானும், குறளை புறங்கூறாமையானும், விலக்கி, நின்ற பயனில்சொல் இதனான் விலக்குகின்றாராகலின், இது புறங்கூறாமையின்பின் வைக்கப்பட்டது.

* கலித்தொகை, மருதம்—௨௭.

கககக. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும். க.

இ - ள். பல்லார் முனியப் பயனில சொல்லுவான் - அறிவுடையார் பலருங் கேட்டு வெறுப்பப் பயனிலவாகிய சொற்களைச் சொல்லுவான்—எல்லாரும் எள்ளப் படும் - எல்லாரானுமிகழப்படும். எ - று.

அறிவுடையார் பலரும் வெறுப்பவே ஒழிந்தாரானும் இகழப்படுதலின், எல்லாரு மெள்ளப்படுமென்றார். மூன்றனுருபு விகாரத்தாற் றொக்கது. (க)

கககஉ. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது. உ.

இ - ள். பயன் இல பல்லார்முன் சொல்லல் - பயனிலவாகிய சொற்களை அறிவுடையார் பலர்முன்பே ஒருவன் சொல்லுதல்—நயன் இல நட்டார்கண் செய்தலின் தீது-விருப்பமிலவாகிய செயல்களைத் தன்னட்டார் மாட்டுச் செய்தலினும் தீது. எ-று.

விருப்பமில வெறுப்பன. இச்சொல் அச்செயலினும் மிகவிகழற்பாடு பயக்கு மென்பதாம். (உ)

கககங. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை. ங.

இ - ள். பயன் இல பாரித்து உரைக்கும் உரை - பயனிலவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்குமுரைதானே—நயன் இலன் என்பது சொல்லும் - இவன் நீதியிலனென்பதனை உரைக்கும். எ - று.

உரையால் இவன் நயனிலனென்பதறியலாமென்பார், அதனை உரைமேலேற்றி உரைசொல்லுமென்றார். (ங)

கககச. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து. ச.

இ - ள். பயன் சாராப் பண்பு இல் சொல் பல்லாரகத்து - பயனொடுபடாத பண்பில் சொற்களை ஒருவன் பலரிடைச்சொல்லுமாயின்,—நயன் சாரா நன்மையின் நீக்கும்-அவை அவர்மாட்டு நீதியொடுபடாவாய், அவனை நற்குணங்களினீக்கும். எ-று.

பண்பு இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொற்குணங்கள். சொல்லுமாயி னென்பதும், அவர்மாட்டென்பதும், எச்சமாக வருவிக்கப்பட்டன. (ச)

கககரு. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். ரு.

இ - ள். பயன் இல நீர்மையுடையார் சொலின் - பயனிலவாகிய சொற்களை இனியநீர்மையுடையார் சொல்லுவராயின்,—சீர்மை சிறப்பொடு நீங்கும் - அவரது விழுப்பமும் அதனால் வரும் நன்குமதிக்கற்பாடும் உடனே நீங்கும். எ - று.

நீர்மை நீரின்றன்மை. சொலினென்பது சொல்லாமையை விளக்கிற்று. (ரு)

கக௯௬. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். ௬.

இ - ள். பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல் - பயனில்லாத சொற்களைப் பலகாலுஞ் சொல்லுவானை மகனென்று சொல்லற்க;—மக்கட்பதடி எனல் - மக்களுட்பதரென்று சொல்லுக. எ - று.

அல்விகுதி வியங்கோள் முன் எதிர்மறையினும், பின் உடம்பாட்டினும் வந்தது. அறிவென்னும் உள்ளீடின்மையின், மக்கட்பதடியென்றார். இவையாறுபாட்டானும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங் கூறப்பட்டது. (௬)

கக௯௭. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. ௭.

இ - ள். நயன் இல சான்றோர் சொல்லினும் சொல்லுக - நீதியொடு படாத சொற்களைச் சான்றோர் சொன்னாராயினும், அஃதமையும்:—பயன் இல சொல்லாமை நன்று - அவர் பயனிலவற்றைச் சொல்லாமை பெறின், அது நன்று. எ - று.

சொல்லினுமெனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றிலும் பயனில தீயவென்பதாம். (௭)

கக௯௮. அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். ௮.

இ - ள். அரும்பயன் ஆயும் அறிவினார் - அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவினையுடையார்—பெரும்பயன் இல்லாத சொல் சொல்லார் - மிக்க பயனுடையவல்லாத சொற்களைச் சொல்லார். எ - று.

அறிதற்கரிய பயன்களாவன வீடுபேறும், மேற்கதிச்செலவும் முதலாயின. பெரும்பயனில்லாதவெனவே, பயன் சிறிதுடையனவும் ஒழிக்கப்பட்டன. (௮)

கக௯௯. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர். ௯.

இ - ள். பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் - பயனினீங்கிய சொற்களை மறந்துஞ்சொல்லார்—மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர் - மயக்கத்தினீங்கிய தூய வறிவினையுடையார். எ - று.

தூயவறிவு மெய்யறிவு. மருடீர்ந்தவென்னும் பெயரெச்சம் காட்சியவரென்னுங் குறிப்புப்பெயர்கொண்டது. இவைமூன்றுபாட்டானும் பயனிலசொல்லாமையின் குணங் கூறப்பட்டது. (௯)

உ00. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். க0.

இ - ள். சொல்லின் பயனுடைய சொல்லுக - சொற்களிற் பயனுடைய சொற்களைச் சொல்லுக;—சொல்லின் பயனிலாச் சொல் சொல்லற்க - சொற்களிற் பயனில்லாத சொற்களைச் சொல்லாதொழிக. எ - று.

சொல்லினென்பது இருவழியும் மிகையாயினும், சொற்பொருட்பின்வருநிலை யென்னும் அணிநோக்கி வந்தது, "வைகலும் வைகல் வரக்கண்டும்" * என்பதுபோல. இதனாற் சொல்லப்படுவனவும் படாதனவும் நியமிக்கப்பட்டன. (௧௦)

உ௧ம் அதி.—தீவினையச்சம்.

அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனுன் மெய்யின்கணி கழும் பாவங்களெல்லாந்தொகுத்து விலக்குகின்றுராகலின், இது பயனில சொல்லா மையின்பின் வைக்கப்பட்டது.

உ0௧. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
　　தீவினை யென்னுஞ் செருக்கு.　　　௧.

தீவினை யென்னும் செருக்கு-தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை—தீவி னையார் அஞ்சார் - முன்செய்த தீவினையுடையார் அஞ்சார்,—விழுமியார் அஞ்சுவர் - அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர். எ - று.

தீவினையென்னுஞ் செருக்கெனக் காரியம் காரணமாக † உபசரிக்கப்பட்டது. மேற்றெட்டுச் செய்து கைவந்தமையான் அஞ்சாரென்றும், செய்தறியாமையான் அஞ்சுவரென்றுங் கூறினர். (௧)

உ0உ. தீயவை தீய பயத்தலாற் றீயவை
　　தீயினு மஞ்சப் படும்.　　　உ.

இ - ள். தீயவை தீய பயத்தலால் - தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யுந் தீவினைகள் பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலான்,—தீயவை தீயினும் அஞ்சப் படும் - அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனாற்றீயினுமஞ்சப்படும். எ - று.

பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம்பினுஞ்சென்று சுடுதல் தீக்கின்மையின், தீயினுமஞ்சப்படுவதாயிற்று. (உ)

உ0௩. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
　　செறுவார்க்குஞ் செய்யா விடல்.　　௩.

இ - ள். அறிவினுள் எல்லாம் தலை என்ப - தமக்குறுதி நாடும் அறிவுகளெல் லாவற்றுள்ளும் தலையாய அறிவென்று சொல்லுவர் நல்லோர்—செறுவார்க்கும் தீய செய்யா விடல் - தம்மைச் செறுவார்மாட்டும் தீவினைகளைச் செய்யாது விடு தலை. எ - று.

விடுதற்குக் காரணமாகிய அறிவை விடுதலென்றும், செயத்தக்குழியுஞ் செய்யா தொழியவே தமக்குத் துன்பம் வாராதென உய்த்துணர்தலின் அதனை அறிவினுளெல் லாந்தலையென்றுங் கூறினர். செய்யாதென்பது கடைக்குறைந்து நின்றது. இவை மூன்றுபாட்டானும் தீவினைக்கஞ்சவேண்டுமென்பது கூறப்பட்டது. (௩)

---

* வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்—வைகலும் வைகலை வைகுமென் றின்புறு வர்—வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்—வைகலை வைத்துணரா தார்—நாலடியார், அறன்வலியுறுத்தல்.

† காரணங் காரியமாதற்கும் காரியங் காரணமாதற்கும் விதி பிரயோகவிவேகம், திங்குப் படலம், "மருளறுகாரணம்" என்னும் ௧௬-ம் பாட்டிற்காண்க.

உ௦ச. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.   ச.

இ - ள். பிறன் கேடு மறந்தும் சூழற்க - ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணாதொழிக;—சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் - எண்ணுவனாயின், தனக்குக் கேடுபயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும். எ - று.

கேடென்பன ஆகுபெயர். சூழ்கின்றபொழுதே தானு முடன்சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது பெறப்பட்டது. அறக்கடவுளெண்ணுதலாவது அவன்கெடத் தான் நீங்க நினைத்தல். தீவினை எண்ணலுமாகாதென்பதாம்.()

உ௦ரு. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.   ரு.

இ - ள். இலன் என்று தீயவை செய்யற்க - யான் வறியனென்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யாதொழிக;—செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும் - செய்வனாயின், பெயர்த்தும் வறியனாம். எ - று.

அத்தீவினையாற் பிறவிதோறும் இலனாமென்பதாம். அன்விகுதி முன் தனித் தன்மையினும், பின் படர்க்கையொருமையினும் வந்தது. தனித்தன்மை "உளனாவென் னுயிரையுண்டு" * என்பதனானுமறிக. மற்று அசைநிலை. இலமென்றுபாடமோதுவாரு முளர். பொருளான் வறியனெனக் கருதித் தீயவை செய்யற்க், செய்யின் அப்பொருளானேயன்றி நற்குண நற்செய்கைகளானும் வறியனா மென்றுரைப்பாருமுளர். (ரு)

உ௦சு. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.   சு.

இ - ள். நோய்ப்பால தன்னை அடல் வேண்டாதான் - துன்பஞ்செய்யுங் கூற்றவாகிய பாவங்கள் தன்னைப் பின்வந்து வருத்துதலை வேண்டாதவன்—தீப்பால தான் பிறர்கண் செய்யற்க - தீமைக்கூற்றவாகிய வினைகளைத் தான் பிறர்மாட்டுச் செய்யா தொழிக. எ - று.

செய்யின், அப்பாவங்களடுதல் ஒருதலையென்பதாம். (சு)

உ௦எ. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.   எ.

இ - ள். எனைப்பகை உற்றாரும் உய்வர் - எத்துணைப் பெரிய பகையுடையாரும் அதனையொருவாற்றானுய்வர்;—வினைப்பகை வீயாது பின் சென்று அடும் - அவ்வா றன்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப் புக்குக் கொல்லும். எ - று.

"வீயா—துடம்பொடு நின்ற வுயிரு மில்லை." † என்புழியும் வீயாமை நீங்காமைக் கண் வந்தது. (எ)

உ௦அ. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.   அ.

* கலித்தொகை, குறிஞ்சி—உஉ.   † புறநானூறு, ௩௬௩.

இ - ள். தீயவை செய்தார் கெடுதல் - பிறர்க்குத் தீவினைகளைச்செய்தார் தாங் கெடுதல் எத்தன்மைத்தெனின்,—நிழல் தன்னை வீயாது அடி உறைந்தற்று - ஒருவ னிழல் நெடிதாகப்போயும் அவன்றன்னை விடாது வந்து அடியின்கட்டங்கியதன் மைத்து. எ - று.

இவ்வுவமையைத் தன்காலம் வருந்துணையும் புலனாகாது உயிரைப்பற்றி நின்று அது வந்துழி உருப்பதாய தீவினையைச்செய்தார் பின் அதனாற் கெடுதற்கு உவமை யாக்கி உரைப்பாருமுளர். அஃதுரையன்றென்பதற்கு அடியுறைந்தநிழறன்னை வீய்ந் தற்றென்னாது வீயாதடியுறைந்தற்றென்ற பாடமே கரியாயிற்று. மேல் வீயாது பின் சென்றடுமென்றார், ஈண்டு அதனையுவமையான் விளக்கினார். (அ)

உ0கூ. தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். கூ.

இ - ள். தன்னைத் தான் காதலன் ஆயின் - ஒருவன், தன்னைத் தான் காதல் செய் தலுடையனாயின்,—தீவினைப்பால் எனைத்து ஒன்றும் துன்னற்க - தீவினையாகிய பகுதி எத்துணையுஞ் சிறியதொன்றாயினும் பிறர்மாட்டுச் செய்யாதொழிக. எ - று.

நல்வினை தீவினையென வினைப்பகுதி இரண்டாகலின், தீவினைப்பாலென்றார். பிறர்மாட்டுச்செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம் பயத்தல் விளக்கினாராகலின், தன்னைத்தான் காதலனாயினென்றார். இவையாறுபாட்டானும் பிறர்க்குத் தீவினைசெய் யிற்றாங் கெடுவரென்பது கூறப்பட்டது. (கூ)

உக0. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின். க0.

இ - ள். மருங்கு ஓடித் தீவினை செய்யான் எனின் - ஒருவன் செந்நெறிக்கட் செல்லாது கொடுநெறிக்கட்சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச் செய்யானாயின்,— அருங்கேடன் என்பது அறிக - அவனை அரிதாகிய கேட்டையுடைய னென்ப தறிக. எ - று.

அருமை இன்மை. அருங்கேடனென்பதனை "சென்று சேர் கல்லாப் புள்ள புள்ளி லென்றூழ் வியன்குளம்" * என்பதுபோலக் கொள்க†. ஓடியென்னும் வினையெச்சம் செய்யானென்னும் எதிர்மறைவினையுட் செய்தலோடு முடிந்தது. இதனால் தீவினை செய்யாதவன் கேடிலனென்பது கூறப்பட்டது. (க0)

உஉம் அதி.—ஒப்புரவறிதல்.

அஃதாவது உலகநடையினையறிந்து செய்தல். உலகநடை வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமேயறிந்து செய்யுந்தன்மைத்தாகலின், ஒப்புர வறிதலென்றார். மேல் மனமொழிமெய்களாற் றவிரத்தகுவன கூறினார், இனிச் செய்யத்தகுவனவற்றுள் எஞ்சிநின்றன கூறுகின்றாராகலின், இது தீவினையச்சத்தின் பின் வைக்கப்பட்டது.

---

* அகநானூறு, சஉ.

† அருங்கேடன் என்பதனைக் கேடரியனென விகுதிபிரித்துக் கூட்டுவர் பிரயோகவிவேக நூலார்.

உகக. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு. க.

இ - ள். மாரிமாட்டு உலகு என் ஆற்றும் - தமக்கு நீருதவுகின்ற மேகங்களினிடத்து உயிர்கள் என்னகைம்மாறு செய்யாநின்றன?—கடப்பாடு கைம்மாறு வேண்டா - ஆகலான், அம்மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவனவல்ல. எ - று.

என்னாற்றுமென்ற வினா யாதுமாற்றாவென்பது தோன்ற நிற்றலின், அது வருவித்துரைக்கப்படும். தவிராதன்மையவல்லவென்பது கடப்பாடென்னும் பெயரானே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவனமேலேற்றினார். (க)

உகஉ. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. உ.

இ - ள். தக்கார்க்கு - தகுதியுடையார்க்காயின்,—தாள் ஆற்றித் தந்த பொருளெல்லாம் - முயறலைச் செய்தீட்டிய பொருண்முழுதும்—வேளாண்மை செய்தற் பொருட்டு - ஒப்புரவு செய்தற்பயத்தவாம். எ - று.

பிறர்க்குதவாதார் போலத் தாமே உண்டற்பொருட்டும், வைத்திழத்தற்பொருட்டுமன்றென்பதாயிற்று. (உ)

உகங. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற. ங.

இ - ள். புத்தேளுலகத்தும் ஈண்டும் - தேவருலகத்தும் இவ்வுலகத்தும்—ஒப்புரவின் நல்ல பிற பெறல் அரிது - ஒப்புரவுபோல நல்லன பிறசெயல்களைப் பெறுதலரிது. எ - று.

ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒருதன்மையராதலின், புத்தேளுலகத்தரிதாயிற்று; யாவர்க்குமொப்பது இதுபோற் பிறிதொன்றின்மையின், இவ்வுலகத்தரிதாயிற்று. பெறற்கரிதென்று பாடமோதிப் பெறுதற்குக் காரணமரிதென்றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

உகச. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். ச.

இ - ள். உயிர்வாழ்வான் ஒத்தது அறிவான் - உயிரோடு கூடிவாழ்வானாவான் உலகநடையினை யறிந்து செய்வான்;—மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் - அஃதறிந்து செய்யாதவன், உயிருடையனேயாயினும், செத்தாருள் ஒருவனாகக் கருதப்படும். எ - று.

உயிரினறிவுஞ்செயலுங் காணாமையின், செத்தாருள்வைக்கப்படுமென்றார். இதனால் உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறனுடைத்தன்றென்பது கூறப்பட்டது. (ச)

உகரு. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு. ரு.

இ - ள். உலகு அவாம் பேரறிவாளன் திரு - உலகநடையை விரும்பிச் செய்யும் பெரியவறிவினையுடையவனது செல்வம்—ஊருணி நீர் நிறைந்தற்று-ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங்குளம் நீர்நிறைந்தாற்போலும். எ - று.

நிறைதலென்னும் இடத்துநிகழ்பொருளின் ெறாழில் இடத்தின்மே லேற்றப்பட்டது. பாழ்போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாதுதவுமென்பதாம். (ரு)

உகசு. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின். சு.

இ - ள். செல்வம் நயனுடையான்கண் படின் - செல்வம் ஒப்புரவுசெய்வான் கண்ணே படுமாயின்,—பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்று - அது பயன்படுமரம் ஊர் நடுவே பழுத்தாற்போலும். எ - று.

உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே நயனென்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுக்குமென்பதாம். (சு)

உகஎ. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின். எ.

இ - ள். செல்வம் பெருந்தகையான்கண் படின் - செல்வம் ஒப்புரவுசெய்யும் பெரியதகைமையையுடையான்கண்ணே படுமாயின்—மருந்தாகித் தப்பா மரத்தற்று - அஃது எல்லாவுறுப்பும் பிணிகட்கு மருந்தாய்த் தப்பாத மரத்தை யொக்கும். எ - று.

தப்புதலாவது கோடற்கரிய இடங்களினின்றுதல், மறைந்து நின்றுதல், காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை. தன்குறைநோக்காது எல்லார் வருத்தமுந் தீர்க்குமென்பதாம். இவைமூன்றுபாட்டானும் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது. (எ)

உகஅ. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். அ.

இ - ள். இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் - செல்வஞ் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார்—கடன் அறி காட்சியவர் - தாஞ்செய்யத் தருவனவற்றையறிந்த இயற்கையறிவுடையார். எ - று.

பிறவெல்லாம் ஒழியினும், இஃதொழியாரென்பதாம். (அ)

உகக. நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு. கூ.

இ - ள். நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் - ஒப்புரவுசெய்தலையுடையான் நல்கூர்ந்தானாதலாவது—செயும் நீர செய்யாது அமைகலா ஆறு - தவிராது செய்யு நீர்மையையுடைய அவ்வொப்புரவுகளைச் செய்யப்பெறாது வருந்துகின்ற வியல்பாம். எ - று.

தானுகர்வன நுகரப்பெறாமையன்றென்பதாம். இவையிரண்டுபாட்டானும் வறுமையான் ஒப்புரவொழிதற்பாற்றன்றென்பது கூறப்பட்டது. (கூ)

உ௨௰. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. க௰.

இ - ள். ஒப்புரவினால் கேடு வரும் எனின் - ஒப்புரவுசெய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பாருளராயின்,—அஃது ஒருவன் விற்றுக் கோட்டக்கது உடைத்து - அக்கேடு தன்னை விற்றாயினுங் கொள்ளுந்தகுதியையுடைத்து. எ - று.

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொரு பொருளில்லையன்றே இஃதாயின் அதுவுஞ்செய்யப்படுமென்றது, புகழ் பயத்தனோக்கி. இதனால் ஒப்புரவினாற் கெடுவது கேடன்றென்பது கூறப்பட்டது. (க௰)

உங ம் அதி.—ஈ கை.

அஃதாவது வறியராயேற்றார்க்கு மாற்றாது கொடுத்தல். இது மறுமைநோக்கியதாகலின், இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

உ௨க. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. க.

இ - ள். வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை - ஒருபொருளுமில்லாதார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது;—மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து - அஃதொழிந்த எல்லாக்கொடையுங் குறியெதிர்ப்பை கொடுக்கு நீர்மையையுடைத்து. எ - று.

ஒழிந்த கொடைகளாவன வறியரல்லாதார்க்கு ஒருபயனோக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது அளவுகுறித்துவாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது. நீரதென்புழி அதுவென்பது பகுதிப்பொருள்விகுதி. பின்னுந் தன்பால் வருதலின், குறியெதிர்ப்பை நீரதுடைத்தென்றார். இதனான் ஈகையதிலக்கணங் கூறப்பட்டது.(க)

உ௨உ. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. உ.

இ - ள். கொளல் நல்லாறு எனினும் தீது - ஏற்றல் வீட்டுலகிற்கு நல்லநெறியென்பார் உளராயினும் அது தீது;—மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று - ஈந்தார்க்கு அவ்வுலகெய்துதலில்லையென்பார் உளராயினும் ஈதலே நன்று. எ - று.

எனினுமென்பது இருவழியும் அங்ஙனங்கூறுவாரின்மை விளக்கிநின்றது. பிரிநிலையேகாரத்தால் பிறவறங்களின் ஈதல் சிறந்ததென்பது பெற்றாம். நல்லதுகூறுவார் தீயதுமுடன்கூறினார். (உ)

உ௨ங. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. ங.

இ - ள். இலன் என்னும் எவ்வம் உரையாமை - யான் வறியனென்று இரப்பான் சொல்லுமிளிவரவைத் தான் பிறர்கட்சொல்லாமையும்,—ஈதல் - அதனைத் தன்கட் சொன்னார்க்கு மாற்றா தீதலும்,—உள குலனுடையான்கண்ணே - இவையிரண்டுமுளவாவன குடிப்பிறந்தான்கண்ணே. எ - று.

மேற்றீதென்றது ஒழிதற்கும் நன்றென்றது செய்தற்குமுரியவனை உணர்த்திய வாறு. இனி இலனென்னுமெவ்வமுரையாமை யீதலென்பதற்கு அவ்விளிவரவை ஒருவன்றனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தலெனவும், அதனைப் பின்னும் பிறனொருவன்பாற்சென்று அவனுரையாவகையாற் கொடுத்தலெனவும், யான் இதுபொழுது பொருளுடையேனல்லேனெனக் கரப்பார்சொல்லும் இளிவரவைச்சொல்லாது கொடுத்தலெனவும் உரைப்பாருமுளர். அவர் ஈதலென்பதனைப் பொருட்பன்மை பற்றி வந்த பன்மையாகவுரைப்பர். (௩)

உஉச. இன்னா திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு. ச.

இ-ள். இரக்கப்படுதல் இன்னாது - இரத்தலேயன்றி இரக்கப்படுதலும் இனிதன்று,—இரந்தவர் இன்முகம் காணும் அளவு - ஒருபொருளையிரந்தவர் அதுபெற்றதனால் இனிதாகிய அவர்முகங்காணுமளவும். எ-று.

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தாற்றொக்கன. இரக்கப்படுதல் இரப்பார்க்கு ஈவலென்றிருத்தல். அதனை இன்னாதென்றது "எல்லா—மிரப்பார்க்கொன்றீயாமை" * கூடுங்கொல்லோ வென்னும் அச்சநோக்கி. எனவே, எல்லாப்பொருளும் ஈதல்வேண்டுமென்பது பெறப்பட்டது. (ச)

உஉரு. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின். ரு.

இ-ள். ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் - தவத்தான் வலியார்க்கு வலியாவது தம்மையுற்ற பசியைப் பொறுத்தல்:—அப்பசியை மாற்றுவார் ஆற்றலிற்பின்-அவ்வலிதான் அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியை ஈகையா னொழிப்பாரது வலிக்குப் பின். எ-று.

தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதாராற்றலின் தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பாராற்றல் நன்றென்பதாம். (ரு)

உஉசு. அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. சு.

இ-ள். அற்றார் அழி பசி தீர்த்தல் - வறியாரது மிக்க பசியை அறனோக்கித் தீர்க்க,—பொருள் பெற்றான் ஒருவன் வைப்புழி அஃது - பொருள்பெற்றானொருவன் அதனைத் தனக்குதவ வைக்குமிடம் அவ்வறமாகலான். எ-று.

எல்லாநன்மைகளும் அழிய வருதலின், அழிபசியென்றார். அறனோக்கியென்பது எஞ்சிநின்றது. அற்றாரழிபசி தீர்த்த பொருள் பின்றனக்கே வந்துதவுமென்பதாம். (சு)

உஉஎ. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது. எ.

இ-ள். பாத்து ஊண் மரீஇயவனை - எஞ்ஞான்றும் பகுத்துண்டல்பயின்றவனை—பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது - பசியென்றுசொல்லப்படுந் தீயநோய் தீண்டுதலில்லை. எ-று.

---

* கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்—சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம்—எல்லா—மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்—மாணக் குடிப்பிறந்தார்—நாலடியார், குடிப்பிறப்பு.

இவ்வுடம்பினின்று ஞானவொழுக்கங்களை அழித்து அதனால் வருமுடம்புகட்கும் துன்பஞ்செய்தலின், தீப்பிணியெனப்பட்டது. தனக்கு மருத்துவன்றனாகலின், பசிப்பிணி நணுகாதென்பதாம். இவையாறுபாட்டானும் ஈதலின்சிறப்புக் கூறப்பட்டது. (௭)

௨௨௮. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். ௮.

இ - ள். தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர் - தாமுடையபொருளை ஈயாதுவைத்துப் பின்னிழந்துபோம் அருளிலாதார்—ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல் - வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவருவத்தலான் அருளுடையாரெய்தும இன்பத்தினைக் கண்டறியார்கொல்லோ! எ - று.

உவக்குமென்பது காரணத்தின்கண்வந்த பெயரெச்சம்; அஃது இன்பமென்னுங் காரியப்பெயர் கொண்டது. அறிந்தாராயின், தாமும் அவ்வின்பத்தை யெய்துவதல்லது வைத்திழவாரென்பது கருத்து. (௮)

௨௨௯. இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல். ௯.

இ - ள். நிரப்பிய தாமே தமியர் உணல் - பொருட்குறை நிரப்பவேண்டி வறியார்க்கீயாது தாமே தனித்துண்டல்—இரத்தலின் இன்னாது மன்ற - ஒருவர்க்குப் பிறர்பாற்சென்று இரத்தலினுமின்னாது ஒருதலையாக. எ - று.

பொருட்குறைநிரப்பலாவது ஓரோவெண்களைக்குறித்து அத்துணையீட்டுதுமென ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக் கூட்டுதல். தனித்தல் பிறரையொழித்தல். இரத்தற்குள்ளது அப்பொழுதை யிளிவரவே பின் நல்குரவில்லை; தமியருண்டற்கு அவையிரண்டுமுளவாமாகலின், இரத்தலினின்னாதென்றார். நிரப்பியவென்பதற்குத் தேடிய வுணவுகளையென்றுரைப்பாருமுளர். (௯)

௨௩௦. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை. ௧௦.

இ - ள். சாதலின் இன்னாதது இல்லை - ஒருவற்குச் சாதல்போல இன்னாததொன்றில்லை;—அதூஉம் ஈதல் இயையாக்கடை இனிது - அத்தன்மைத்தாகிய சாதலும் வறியார்க்கொன்றீதன் முடியாதவழி இனிது. எ - று.

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான், இனிதென்றார். இவை மூன்றுபாட்டானும் ஈயாமையின் குற்றங் கூறப்பட்டது. (௧௦)

உ௪ம் அதி.—புகழ்.

அஃதாவது இல்வாழ்க்கைமுதல் ஈகையீறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகின்கணிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. இது, பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

௨௩௧. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு. ௧.

இ - ள். ஈதல் - வறியார்க்கீக;—இசை படவாழ்தல் - அதனாற் புகழுண்டாக வாழ்க;—அதுவல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை - அப்புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லையாகலான். எ - று.

இசைபடவாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களும் உளவேனும்; "உணவின் பிண்ட முண்டி முதற்று" * ஆகலின், ஈதல் சிறந்ததென்பதற்கு ஞாபகமாக ஈதலென்றார். உயிர்க்கென்பது, பொதுப்படக்கூறினாரேனும் விலங்குயிர்கட்கேலாமையின், மக்களுயிர்மேனின்றது. (க)

உருஉ. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
ஈவார்மே னிற்கும் புகழ். உ.

இ - ள். உரைப்பார் உரைப்பவை எல்லாம் - உலகத்து ஒன்றுரைப்பாருரைப்பனவெல்லாம்—இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ் - வறுமை யானிரப்பார்க்கு அவர்வேண்டியதொன்றை யீவார்கணிற்கும் புகழாம். எ - று.

புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும்†. அவற்றுள் உரைப்பாருரைப்பவையென எல்லார்க்குமுரிய வழக்கினையே யெடுத்தாராயினும், இனம்பற்றிப் புலவர்க்கேயுரிய செய்யுளுங் கொள்ளப்படும்; படவே, பாடுவார் பாடுவனவெல்லாம் புகழா மென்பதூஉம் பெற்றாம். ஈதற்காரணஞ் சிறந்தமை இதனுள்ளுங் காண்க. இதனைப் பிறர்மேலும் நிற்குமென்பார் தாமெல்லாஞ் சொல்லுக, புகழ் ஈவார்மேனிற்குமென்றுரைப்பாருமுளர். அது புகழது சிறப்புநோக்காமையறிக. (உ)

உருங. ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். ங.

இ - ள். ஒன்றா உயர்ந்த புகழல்லால் - தனக்கு இணையின்றாக வோங்கிய புகழல்லது—உலகத்துப் பொன்றாது நிற்பது ஒன்று இல் - உலகத்து இறவாதுநிற்பது பிறிதொன்றில்லை. எ - று.

இணையின்றாகவோங்குதலாவது கொடுத்தற்கரிய உயிருறுப்புப்பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னோடொப்பதின்றித் தானேயுயர்தல். அத்தன்மைத்தாகிய புகழே செய்யப்படுவதென்பதாம். இனி ஒன்றாவென்பதற்கு ஒருவார்த்தையாகச் சொல்லியெனவும், ஒருதலையாகப் பொன்றாது நிற்பதெனவும் உரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

உருச. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு. ச.

இ - ள். நிலவரை நீள் புகழ் ஆற்றின் - ஒருவன் நிலவெல்லைக்கண்ணே பொன்றாது நிற்கும் புகழைச் செய்யுமாயின்,—புத்தேள் உலகு புலவரைப் போற்றாது - புத்தேளுலகம் அவனையல்லது தன்னையெய்திநின்ற ஞானிகளைப் பேணாது. எ - று.

புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே யெய்தாமையின், புலவரைப்போற்றாதென்றார். அவன் இரண்டுலகும் ஒருங்கெய்துதல் "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்—வலவ னேவா வான வூர்தி—யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து" ‡ எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது. (ச)

* புறநானூறு, கஅ. † புறநானூறு, உஎ. ‡ புறநானூறு, உஎ.

உநடு. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. ரு.

இ - ள். நத்தம் (ஆகும்) கேடும் - புகழுடம்பிற்கு ஆக்கமாகுங் கேடும்,—உளது ஆகும் சாக்காடும் - புகழுடம்புளதாகுஞ் சாக்காடும்,—வித்தகர்க்கல்லால் அரிது - சதுரப்பாடுடையார்க்கல்லதில்லை. எ - று.

நந்தென்னுந் தொழிற்பெயர் விகாரத்தான் நத்தென்றாய், பின் அம்மென்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று, நத்தமென்றாயிற்று. போலென்பது ஈண்டுரையசை. ஆகுமென்பதனை முன்னுங்கூட்டி, அரிதென்பதனைத் தனித்தனி கூட்டியுரைக்க. ஆக்கமாகுங்கேடாவது புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகுஞ் சாக்கடாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றால் நிலையின வெய்துவார் வித்தகராகலின், வித்தகர்க்கல்லாலரிதென்றார். இவையிரண்டுபாட்டானும் புகழுடையாரெய்தும் மேன்மை கூறப்பட்டது. (ரு)

உநசு. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. சு.

இ - ள். தோன்றின் புகழொடு தோன்றுக - மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க;—அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று - அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று. எ - று.

புகழ் ஈண்டு ஆகுபெயர். அஃதிலாரென்றமையின் மக்களாயென்பதூஉம், மக்களாய்ப் பிறவாமையென்ற அருத்தாபத்தியான் விலங்காய்ப் பிறத்தலென்பதூஉம், பெற்றாம். இகழ்வாரின்மையின், நன்றென்றார். (சு)

உநஎ. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன். எ.

இ - ள். புகழ் பட வாழாதார் - தமக்குப் புகழுண்டாக வாழமாட்டாதார்—தம் நோவார் - அதுபற்றிப் பிறரிகழ்ந்தவழி இவ்விகழ்ச்சி நம்மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே—தம்மை இகழ்வாரை நோவது எவன் - தம்மை யிகழ்வாரை நோவதென்கருதி! எ - று.

புகழ்பட வாழலாயிருக்க அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறரிகழ்தல் ஒருதலையாகலின், இகழ்வாரையென்றார். (எ)

உநஅ. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறாஅ விடின். அ.

இ - ள். இசை என்னும் எச்சம் பெறுவிடின் - புகழென்னுமெச்சம் பெறலாயிருக்க அது பெறாதொழிவராயின்,—வையத்தார்க்கு எல்லாம் வசை என்ப - வையகத்தோர்க்கெல்லாம் அதுதானே வசையென்று சொல்லுவர் நல்லோர். எ - று.

எச்சமென்றார், செய்தவரிறந்துபோகத் தான் இறவாது நிற்றலின். இகழப்படுதற்குப் பிறிதொருகுற்றம் வேண்டாவென்பது கருத்து. (அ)

உநகூ. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம். கூ.

இ - ள். இசை இலா யாக்கை பொறுத்த நிலம் - புகழில்லாத வுடம்பைச் சுமந்த நிலம்—வசை இலா வண்பயன் குன்றும் - பழிப்பில்லாத வளப்பத்தையுடைய விளையுள் குன்றும். எ - று.

உயிருண்டாயினும் அதனாற்பயன் கொள்ளாமையின் யாக்கையெனவும், அது நிலத்திற்குப் பொறையாகலிற் பொறுத்தவெனவுங் கூறினார். விளையுள் குன்றுதற் கேது பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. குன்றுமென இடத்துநிகழ்பொருளின் றொழில் இடத்தின்மேனின்றது. இவை நான்குபாட்டானும் புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது. (௯)

உசும. **வ**சையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர். ௧௦.

இ - ள். வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் - தம்மாட்டு வசையுண்டாகாமல் வாழ்வாரே உயிர்வாழ்வாராவார்;—இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் - புகழுண்டாகாமல் வாழ்வாரே இறந்தாராவார். எ - று.

வசையொழிதலாவது இசையென்னுமெச்சம் பெறுதலாயினமையின், இசையொழிதலாவது வசைபெறுதலாயிற்று. மேல் இசையிலாயாக்கையென்றதனை விளக்கியவாறு. இதனால் இவ்விரண்டும் உடன்கூறப்பட்டன. மறுமைப்பயன் "வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்*" என மேலே கூறப்பட்டது; படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும் தேவருலகிற்போகமும் பயனென்பது பெற்றாம்.

இனி மனுமுதலிய அறநூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடங்கும்: அஃதறிந்தடக்கிக்கொள்க; யாமுரைப்பிற்பெருகும். (௧௦)

இல்லறவியல் முற்றிற்று.

* திருக்குறள், ருo.

துறவறவியல்.

இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினார். துறவறமாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடுபேற்றின்பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசுதீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற்பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றான் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும்.

விரதம்.

அவற்றுள் விரதங்களாவன இன்னவறஞ்செய்வலெனவும் இன்னபாவமொழிவலெனவும் தம்மாற்றலுக்கேற்ப வரைந்துகொள்வன. அவைதாம் வரம்பிலவாகலிற் பெருகுமென்றஞ்சி, அவைதம்முள்ளே பலவற்றையும் அகப்படுத்துநிற்குஞ் சிறப்புடையன சிலவற்றை ஈண்டுக் கூறுவான்றொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.

---

௨௫ ம் அதி.—அருளுடைமை.

அஃதாவது தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கண்மேலுஞ் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல இது துறவறத்திற்குச் சிறந்தமையின் முற்கூறப்பட்டது.

௨௪௧. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. ௧.

இ-ள். செல்வத்துள் செல்வம் அருட்செல்வம் - செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது அருளான் வருஞ்செல்வம்,—பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள - அஃதொழிந்த பொருளான் வருஞ் செல்வங்கள் இழிந்தார் கண்ணுமுளவாம் ஆகலான். எ-று.

அருளான் வருஞ்செல்வமாவது உயிர்களையோம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார்கண்ணேயல்லதில்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம், ஏனை நீசர் கண்ணுமுளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பிலவென்பதாம். (௧)

௨௪௨. நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை. ௨.

இ-ள். நல்லாற்றான் நாடி அருள் ஆள்க - அளவைகளானும் பொருந்துமாற்றானும் நன்றான நெறியிலே நின்று, நமக்குத் துணையாம் அறம் யாதென்றாராய்ந்து, அருளுடையராக;—பல்லாற்றால் தேரினும் துணை அஃதே - ஒன்றையொன்றொவ்வாத சமயநெறிகளெல்லாவற்றானும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே, பிறிதில்லை. எ-று.

அளவைகளாவன பொறிகளாற் காணுங்காட்சியும், குறிகளானுய்த்துணரும் அனுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமுமென மூன்று. ஒப்புப்பற்றியுணரும்

உவமையும், இங்ஙனமன்றாயின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறாய இன்மையுமென இவற்றைக் கூட்டி ஆறென்பாருமுளர். இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாறாவது இது கூடும் இது கூடாதெனத் தன்கண்ணே தோன்றுவது: இதனை வடநூலார் யுத்தியென்ப. ஆற்றானென்பது வேற்றுமைமயக்கம். ஒன்றையொன்றொவ்வாமையாவது மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முண்மாறுகோடல்; அன்னவாயினும் அருடுணையென்றற்கண் ஒக்குமென்பதாம். உயிரை விட்டு நீங்காது இருமையினுமுதவலின், துணையென்றார். இவையிரண்டுபாட்டானும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

உசங. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல். ங.

இ - ள். இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல் - இருள் செறிந்த துன்பவுலகத்துட் சென்றுபுகுதல்—அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை - அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கில்லை. எ - று.

இருள்செறிந்த துன்பவுலகமென்றது திணிந்தவிருளையுடைத்தாய்த் தன்கட்புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோர் நரகத்தை; அது கீழுலகத்துள் ஓரிடமாகலின், உலகமெனப்பட்டது. (ங)

உசச. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. ச.

இ - ள். மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு - நிலைபேறுடைய உயிர்களைப்பேணி அவற்றின்கண் அருளுடையனுவானுக்கு—தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப - தன்னுயிர் அஞ்சுதற்கேதுவாகிய தீவினைகள் உளவாகாவென்று சொல்லுவர் அறிந்தோர். எ - று.

உயிர்களெல்லாம் நித்தமாகலின், மன்னுயிரென்றார். அஞ்சுதல் துன்பநோக்கியஞ்சுதல். அன்னவறத்தினோன் கொலைமுதலிய பாவங்கள் செய்யானெனவே மறுமைக்கண் நரகம் புகாமைக்கேது கூறியவாறாயிற்று. (ச)

உசரு. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி. ரு.

இ - ள். அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை - அருளுடையார்க்கு இம்மையினும் ஒருதுன்பமுண்டாகாது;—வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் கரி - அதற்குக் காற்றியங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று. எ - று.

சான்றாவார் தாங்கண்டு தேறிய பொருளைக் காணாதார்க்குத் தேற்றுதற்குரியவர். அருளாள்வார்க்கு அல்லலுண்டாக ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒருவருங்கண்டறிவாரின்மையின், இன்மைமுகத்தான் ஞாலத்தார்யாவருஞ் சான்றென்பார், வளிவழங்கு மல்லன்மாஞாலங் கரியென்றார்: எனவே, இம்மைக்கணென்பது பெற்றாம். ஞாலம் ஆகுபெயர். இவைமூன்றுபாட்டானும் அத்துணையுடையார்க்கு இருமையினுந் துன்பமில்லாமை கூறப்பட்டது. (ரு)

உசசு. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார். சு.

இ - ள். அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் - உயிர்கண்மாட்டுச் செய்யப்படும் அருளைத் தவிர்ந்து தவிரப்படுங் கொடுமைகளைச் செய்தொழுகுவாரை—பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் - முன்னும் உறுதிப்பொருளைச் செய்யாது தாந் துன்புறுகின்றமையை மறந்தவரென்று சொல்லுவர் நல்லோர். எ - று.

உறுதிப்பொருள் அறம். துன்புறுதல் பிறவித்துன்ப * மூன்றனையும் அனுபவித்தல். மறந்திலராயின், அவ்வாறொழுகாரென்பது கருத்து. (சு)

உசஎ. அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு. எ.

இ - ள். அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை - உயிர்கண்மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பமில்லை,—பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு- பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லையாயினாற்போல. எ - று.

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத்தின்பங்கட்குப் பொருள் காரணமானாற்போல, அவ்வுலகத்தின்பங்கட்கு அருள் காரணமென்பதாயிற்று. (எ)

உசஅ. பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிது. அ.

இ - ள். பொருள் அற்றார் ஒருகால் பூப்பர் - ஊழான் வறியராயினார் அது நீங்கிப் பின் ஒருகாலத்துச் செல்வத்தாற்பொலிவர்,—அருள் அற்றார் அற்றார் மற்று ஆதல் அரிது - அவ்வாறன்றி அருளிலாதார் பாவமறாமையின் அழிந்தாரே, பின்னொருகாலத்தும் ஆதலில்லை. எ - று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. மேற்பொருளின்மையோடு ஒருவாற்றானொப்புமை கூறினாராகலின், அது மறுத்து, பிறவாற்றான் அதனினுங் கொடிதென்பது கூறியவாறு. (அ)

உசகூ. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி
னருளாதான் செய்யு மறம். கூ.

இ - ள். அருளாதான் செய்யும் அறம் தேரின் - உயிர்கண்மாட்டு அருள்செய்யாதவன் செய்யுமறத்தையாராயின்,—தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்று-ஞானமில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும். எ - று.

மெய்ப்பொருள் மெய்ந்நூலிற்சொல்லும்பொருள். நிலைபெற்ற ஞானமில்லாதவன் இடையே மெய்ப்பொருளையுணர்ந்தால் அதனைத் தன்ஞானமின்மையால் தானேயழித்துவிடும், அதுபோல அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன்னருளாமையால் தானேயழித்துவிடுமென்பதாயிற்று; ஆகவே, பிறவறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமென்பது பெற்றாம். இவைநான்குபாட்டானும் அத்துணையில்லாதார்க்கு வருங்குற்றங் கூறப்பட்டது. (கூ)

உரு0. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. க0.

இ - ள். வலியார் முன் தன்னை நினைக்க - தன்னின்வலியார் தன்னை நலிய வரும்பொழுது அவர் முன் தானஞ்சிநிற்கு நிலையினை நினைக்க—தான் தன்னின் மெலியார்

* பிறவித்துன்பம் மூன்றும் மேலே-நான்காம் குறளுரையிற் கூறப்பட்டது.

மேல் செல்லுமிடத்து - அருளில்லாதவன் தன்னினெளியார்மேல் தான் நலியச்செல்லும்பொழுது. எ - று.

மெலியாரெனச் சிறப்புடைய உயர்திணைமேற் கூறினாராயினும், ஏனையஃறிணையுங் கொள்ளப்படும். அதனை நினைக்கவே இவ்வுயிர்க்கும் அவ்வாறே அச்சமாமென்றறிந்து அதன்மேல் அருளுடையனாமென்பது கருத்து. இதனால் அருள் பிறத்தற்குபாயங் கூறப்பட்டது. (கo)

உசூ ம் அதி.—புலான்மறுத்தல்.

அஃதாவது ஊனுண்டலையொழிதல். கொலைப்பாவத்தைப் பின்னுமுளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும் முன்னும் அதனான் வருதலின் அதன்காரியமாதலையும் ஒருங்குடைத்தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்றாகலின், அதனை விலக்குதற்கு, இஃதருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

உருக. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள். க.

இ - ள். தன் ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன் உண்பான் - தன்னுடம்பை வீக்குதற்பொருட்டுத் தான் பிறிதோருயிரினுடம்பைத் தின்பவன்—எங்ஙனம் ஆளும் அருள் - எவ்வகையான் நடத்தும் அருளினை! எ - று.

பயனிலாத ஊன் பெருக்கலைப் பயனெனக்கருதி இக்கொடுமை செய்வானே அறிவிலாத கொடியோனென்றவாறாயிற்று. எங்ஙனமாளுமருளென்பது ஆளானென்பது பயப்பநின்ற இகழ்ச்சிக்குறிப்பு. (க)

உருஉ. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு. உ.

இ - ள். பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை - பொருளாற் பயன்கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கில்லை;—ஆங்கு அருளாட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை - அதுபோல அருளாற்பயன்கோடல் ஊன்றின்பவர்க்கில்லை. எ - று.

பொருட்பயனிழத்தற்குக் காரணம் காவாமை போல, அருட்பயனிழத்தற்கு ஊன்றினல் காரணமென்பதாயிற்று. ஊன்றின்றாராயினும் உயிர்கட்கு ஒரு தீங்கும் நினையாதார்க்கு அருளாடற்கிழுக்கில்லையென்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவையிரண்டுபாட்டானுங் கூறப்பட்டது. (உ)

உருங. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம். ங.

இ - ள். படை கொண்டார் நெஞ்சம்போல் - கொலைக்கருவியைத் தங்கையிற் கொண்டவர் மனம் அதனாற் செய்யுங் கொலையையே நோக்குவதல்லது அருளை நோக்காதவாறுபோல—ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் நன்று ஊக்காது - பிறிதோருயிரினுடலைச் சுவைபடவுண்டவர் மனம் அவ்வூனையே நோக்குவதல்லது அருளை நோக்காது. எ - று.

சுவைபடவுண்டல் காயங்களான் இனிய சுவைத்தாக்கி யுண்டல். இதனால் ஊன்றின்றார் மனம் தீங்குநினைத்தல் உவமவளவையாற் சாதித்து, மேலது வலியுறுத்தப்பட்டது. (ங)

உருச. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். ௪.

இ - ள். அருள் யாதெனின் கொல்லாமை - அருள் யாதெனின், கொல்லாமை;— அல்லது (யாதெனின்) கோறல் - அருளல்ல தியாதெனிற் கோறல்;—அவ்வூன் தினல் பொருளல்லது - ஆகலான், அக்கோறலான் வந்த ஊனைத்தின்கை பாவம். எ - று.

உபசாரவழக்காற் கொல்லாமை கோறலாகிய காரியங்களை அருள் அல்லதெனக் காரணங்களாக்கியும், ஊன்றின்கையாகிய காரணத்தைப் பாவமெனக் காரியமாக்கியுங்கூறினார். அருளல்லது கொடுமை. சிறப்புப்பற்றி அறமும் பொருளெனப்படுதலின், பாவம் பொருளல்லதெனப்பட்டது. கோறலென முன்னின்றமையின், அவ்வூனென்றார். இனி இதனை இவ்வாறன்றி அருளல்லதென்பதனை ஒன்றாக்கி, கொல்லாமை கோறலென்பதற்குக் கொல்லாமையென்னும் விரதத்தையழித்தலென்றுரைப்பாருமுளர். (௪)

உருரு. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு. ரு.

இ - ள். உயிர் நிலை ஊன் உண்ணாமை உள்ளது - ஒருசாருயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊனுண்ணாமையென்கின்ற அறத்தின்கண்ணது;—உண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது - ஆகலான், அந்நிலை குலைய ஒருவன் அதனையுண்ணுமாயின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது. எ - று.

உண்ணப்படும் விலங்குகள் அதனாற்றேய்ந்து சிலவாக ஏனையபலவாய் வருதலின், உண்ணாமையுள்ளதுயிர்நிலையென்றார். உண்ணினென்பது உண்ணவெனத் திரிந்துநின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான் நெடுங்காலம் நிரயத்துளழுந்துமென்பதாம். கொலைப்பாவம் கொன்றார்மேனிற்றலின் பின்னூனுண்பார்க்குப் பாவமில்லையென்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது. (ரு)

உருசு. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில். சு.

இ - ள். தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின் - பேதைமை காரணமாக வல்லது ஊன்றின்கை காரணமாக உலகங் கொல்லாதாயின்;—விலைப்பொருட்டு ஊன் தருவார் யாரும் இல் - பொருள் காரணமாக ஊன் விற்பார் யாவரும் இல்லை. எ - று.

உலகென்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேனின்றது. பின்னிகழுந்தின்கை முன்னிகழுங்கொலைக்குக் காரணமாகாமையின் தின்பார்க்குக் காரணத்தான் வரும்பாவமில்லையென்ற வாதியைநோக்கி, அருத்தாபத்தியளவையாற் காரணமாதல் சாதித்தலின், இதனான் மேலது வலியுறுத்தப்பட்டது. (சு)

உருஎ. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின். எ.

இ - ள். புலால் பிறிதொன்றன் புண் - புலாலாவது பிறிதோருடம்பின் புண்;— அது உணர்வார்ப் பெறின் உண்ணாமை வேண்டும் - அது தூய்தன்மை யறிவாரைப் பெறின், அதனை உண்ணுதொழியல்வேண்டும். எ - று.

அஃதென்னல் வேண்டுமாய்தம் விகாரத்தாற்ருெக்கது. அம்மெய்ம்மையுணராமை யின், அதனையுண்கின்றுரென்பதாம். பொருந்துமாற்ருனும் * புலாலுண்டல் இழிந்த தென்பது இதனுற் கூறப்பட்டது. (௭)

உ௫௮. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன். ௮.

இ - ள். செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் - மயக்கமாகிய குற்றத்தினீங்கிய அறிவினையுடையார்—உயிரின் தலைப்பிரிந்த ஊன் உண்ணுர் - ஒருயிரினீங்கிவந்த ஊனை யுண்ணுர். எ - று.

தலைப்பிரிவென்பது ஒருசொல். பிணமென ஊனின்மெய்ம்மை தாமேயுணர்த லின், உண்ணுரென்ருர். (௮)

உ௫௯. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணுமை நன்று. ௯.

இ - ள். அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் - தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம்வேள்வி வேட்டலினும்,—ஒன்றன் உயிர் செகுத்து உண்ணுமை நன்று - ஒருவிலங்கினுயிரைப்போக்கி அது நின்ற ஊனையுண்ணுமை நன்று. எ - று.

அவ்வேள்விகளான் வரும் பயனினும் இவ்விரதத்தான் வரும்பயனே பெரி தென்பதாம். (௯)

உ௬0. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும். ௧0.

இ - ள். கொல்லான் புலாலை மறுத்தானை - ஒருயிரையுங்கொல்லாதவனுமாய்ப் புலாலையுமுண்ணுதவனை—எல்லாவுயிரும் கைகூப்பித் தொழும் - எல்லாவுயிருங் கைகு வித்துத் தொழும். எ - று.

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றேயுடையார்க்கு அதனுற் பய னில்லையாகலின், கொல்லாமையுமுடன்கூறினுர். இப்பேரருளுடையான் மறுமைக்கட் டேவரின் மிக்கானுமென அப்பயனது பெருமை கூறியவாறு. இவைமூன்றுபாட் டானும் ஊனுண்ணுமையதுயர்ச்சி கூறப்பட்டது. (௧0)

உ௭ ம் அதி.—தவம்.

அஃதாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்ருற் றம்முயிர்க்கு வருந் துன்பங் களைப் பொறுத்து, பிறவுயிர்களையோம்புதல். புலான்மறுத்து உயிர்கண்மேல் அருண் முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது புலான்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

உ௬௧. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு. ௧.

---

* பொருந்துமாறு—யுத்தி.

ROM. MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR

உகூகூ. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
ஞற்ற றலைப்பட் டவர்க்கு. கூ.

இ - ள். கூற்றம் குதித்தலும் கைகூடும் - கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம்—நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு - தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு. எ - று.

சிறப்பும்மை அது கூடாமை விளக்கிற்று; மன்னுயிரெல்லாந் தொழுதலேயன்றி இதுவுங்கைகூடுமென எச்சவும்மையாக வுரைப்பினுமமையும். ஆற்றல் சாபவருள்கள். இவைநான்குபாட்டானும் தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது. (கூ)

உஎ௦. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். க௦.

இ - ள். இலர் பலராகிய காரணம் - உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாதெனின்,—நோற்பார் சிலர் நோலாதவர் பலர் - அது தவஞ்செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல். எ - று.

செல்வநல்குரவென்பன ஈண்டறிவினது உண்மையின்மைகளையுங் குறித்து நின்றன; என்னை? "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை—பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்*" என்றாராகலின். நோற்பார் சிலரெனக் காரணங் கூறினமையான், காரியம் வருவித்துரைக்கப்பட்டது. தவஞ்செய்யாதார்க்கு இம்மையின்பமுமில்லையென இதனால் அவரது தாழ்வு கூறப்பட்டது. (க௦)

உஅம் அதி.—கூடாவொழுக்கம்.

அஃதாவது தாம் விட்ட காமவின்பத்தை உரனின்மையிற் பின்னும் விரும்புமாறுதோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாய தீயவொழுக்கம். அது விலக்குதற்கு இது தவத்தின்பின் வைக்கப்பட்டது.

உஎக. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும். க.

இ - ள். வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் - வஞ்சம் பொருந்திய மனத்தையுடையவனது மறைந்தவொழுக்கத்தை—பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்-உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங்களைந்துங் கண்டு தம்முள்ளே நகும். எ - று.

காமம் தன்கண்ணே தோன்றி நலியாநிற்கவும் அதனதின்மைகூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் வஞ்சமனமென்றும், அந்நலிவு பொறுக்கமாட்டாதொழுகுங் களவொழுக்கத்தைப் படிற்றொழுக்கமென்றும், உலகத்துக்களவுடையார் பிறரறியாமற் செய்வனவற்றிற்கு ஐம்பெரும்பூதங்கள் சான்றாகலின், அவ்வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்றவாற்றையுமறிந்து அவனறியாமற் றம்முள்ளே நகுதலின், அகத்தே நகுமென்றுங்கூறினார். செய்த குற்றம் மறையாதாகலின், அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து. (க)

---

* நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை—பண்ணப் பணைத்த பெருஞ் செல்வமெண்ணுங்காற்—பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ—கண்ணவாத் தக்க கலம்—நாலடியார், அறிவின்மை.

உஎஉ. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின். உ.

இ-ள். வான் உயர் தோற்றம் எவன் செய்யும்-ஒருவனுக்கு வான்போலுயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும்,—தான் அறி குற்றம் தன் நெஞ்சம் படின் - தான் குற்றமென்றறிந்த அதன்கண்ணே தன்னெஞ்சு தாழுமாயின். எ - று.

வானுயர் தோற்றமென்பது "வான்றோய்குடி*" என்றாற்போல இலக்கணை வழக்கு. அறியாது செய்த குற்றமல்லது அறிந்துவைத்துச் செய்த குற்றங் கழுவப் படாமையின், நெஞ்சு குற்றத்ததாயே விடும்; விடவே, நின்றவேடமாத்திரத்துக்குப் புறத்தாரை வெருட்டுதலேயல்லது வேறுபயனில்லை யென்பதாம். (உ)

உஎங. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று. ங.

இ-ள். வலி இல் நிலைமையான் வல்லுருவம் - மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலியில்லாத இயல்பினையுடையான் வலியுடையார் வேடத்தைக்கொண்டு தான் அதன் வழிப்படுதல்—பெற்றம் புலியின்றோல் போர்த்து மேய்ந்தற்று - பசு காவலர் கடியாமற் புலியின்றோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற்போலும். எ - று.

† இல்பொருளுவமை. வலியினிலைமையானென்ற அடையானும், மேய்ந்தற்றென் னுந் தொழிலுவமையானும், வல்லுருவத்தோடு மனவழிப்படுதலென்பது பெற்றாம். காவலர் கடியாமை புலி புற்றின்றதென்பதனானும், அச்சத்தானுமாம்; ஆகவே, வல் லுருவங்கோடற்குப் பயன் அன்னகாரணங்களான் உலகத்தார் அயிராமையாயிற்று. இவ்வாறு தனக்குரிய இல்லாளையுந்துறந்து வலியுமின்றிப் பிறர் அயிராத வல்லுருவ முங்கொண்டு நின்றவன் மனவழிப் படுதலாவது தன் மனமோடியவழியே ஓடி மறைந்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாறுதல், பெற்றம் தனக்குரிய புல்லைவிட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற்போலுமென்ற உவமையான் அறிக.

உஎச. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. ச.

இ-ள். தவம் மறைந்து அல்லவை செய்தல் - அவ்வலியினிலைமையான் தவ வேடத்தின்கண்ணே மறைந்துநின்று தவமல்லவற்றைச் செய்தல்—வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்தற்று - வேட்டுவன் புதலின்கண்ணே மறைந்துநின்று புட்களைப் பிணித்தாற்போலும். எ - று.

தவம் ஆகுபெயர். தவமல்லவற்றைச் செய்தலாவது பிறர்க்குரிய மகளிரைத் தன்வயத்ததாக்குதல். இதுவும் இத்தொழிலுவமையானறிக. (ச)

உஎரு. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும். ரு.

இ-ள். பற்று அற்றேம் என்பார் படிற்றொழுக்கம் - தம்மைப் பிறர் நன்கு மதித்தற்பொருட்டு யாம் பற்றற்றேமென்று சொல்வாரது மறைந்தவொழுக்கம்,—எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமா

* நாலடியார், குடிப்பிறப்பு—உ. † இல்பொருளுவமை - அபூதவுவமை.

யினும், பின் என்செய்தேம் என்செய்தேமென்று தாமேயிரங்கும்வகை, அவர்க்குப் பல துன்பங்களையுங் கொடுக்கும். எ - று.

சொல்லளவல்லது பற்றறுமையின், பற்றற்றேமென்பாரென்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்கால நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன் விளைவின்கண் "அந்தோ வினையேயென்றழு*" வராகலின், எற்றெற்றென்றுங் கூறினார். இவையைந்துபாட்டானும் கூடாவொழுக்கத்தினிழுக்கம் கூறப்பட்டது. (ரு)

உஎசு. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில். சு.

இ - ள். நெஞ்சின் துறவார் - நெஞ்சாற் பற்றறுதுவைத்து—துறந்தார்போல் வஞ்சித்துவாழ்வாரின் - பற்றற்றார்போன்று தானஞ்செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல—வன்கணார் இல் - வன்கண்மையையுடையார் உலகத்தில்லை. எ - று.

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுமைக்கட்டேவராதற்பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்னதீதுமென்று அறியாதீந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினராக்குதல். அவர் இழிபிறப்பினராதல் "அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினா லலறு முந்நீர்த்—தடங்கட னடுவுட் டீவு பலவுள வவற்றுட் டோன்றி—யுடம்பொடு முகங்களொவ்வா ருழ்கனி மாந்தி வாழ்வர்—மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேன் மன்னரேறே†" என்பதனானறிக. தமக்கு ஆவனசெய்தார்க்கு ஆகாதன விளைத்தலின், வன்கணாரில்லென்றார். (சு)

உஎஎ. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து. எ.

இ - ள். குன்றிப்புறம் கண்டு அனையரேனும் - குன்றியின்புறம்போல வேடத்தாற் செம்மையுடையராயினும்,—குன்றி மூக்கின் அகம் கரியார் உடைத்து - அதன் மூக்குப்போல மனமிருண்டிருப்பாரை உடைத்து உலகம். எ - று.

குன்றி ஆகுபெயர். செம்மை கருமையென்பன ‡ பொருளின்கணிறத்தை விட்டுச் செப்பத்தினும் அறியாமையினுஞ் சென்றனவாயினும், பண்பாலொத்தலின், இவை பண்புவமை: "கூழின் மலிமனம் போன்றிரு ளாநின்ற கோகிலமே§" என்பதுமது.

உஎஅ. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். அ.

இ - ள். மாசு மனத்தது ஆக - மாசு தம்மனத்தின்கண்ணதாக—மாண்டார் நீராடி-பிறர்க்குத் தவத்தான் மாட்சிமையுடையராய் நீரின்மூழ்கிக்காட்டி—மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் - தாம் அதன்கண்ணே மறைந்து செல்லும் மாந்தர் உலகத்துப் பலர். எ - று.

---

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், உஎ.

† சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், உசச.

‡ பொருள் - உபமேயம்.

§ வாழும் படியொன்றுங் கண்டிலம் வாழியிம் மாம்பொழிற்றேன்—சூழு முகச்சுற்றும் பற்றின வாற்றெண்டை யங்கனிவா—யாழின் மொழிமங்கை யங்கன்சிற் றம்பல மாதரியாக்—கூழின் மலிமனம் போன்றிரு ளாநின்ற கோகிலமே—திருச்சிற்றம்பலக்கோவையார், ௬உஉ.

மாசு காம வெகுளி மயக்கங்கள். அவை போதற்கன்றி மாண்டாரென்று பிறர் கருதுதற்கு நீராடுதலான், அத்தொழிலை அவர் மறைதற்கிடனாக்கினார். இனி மாண்டார் நீராடியென்பதற்கு மாட்சிமைப்பட்டாரது நீர்மையையுடையராயென உரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் அவ்வொழுக்கமுடையாரது குற்றமும் அவரையறிந்து நீக்கல்வேண்டுமென்பதும் கூறப்பட்டன. (அ)

உஎகூ. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். கூ.

இ-ள். கணை கொடிது யாழ் கோடு செவ்விது - அம்பு வடிவாற்செவ்விதாயினும், செயலாற்கொடிது; யாழ் கோட்டால் வளைந்ததாயினும், செயலாற்செவ்விது;— ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல் - அவ்வகையே தவஞ்செய்வோரையுங் கொடியர் செவ்வியரென்பது, வடிவாற்கொள்ளாது, அவர் செயல்பட்ட கூற்றானே அறிந்துகொள்க. எ-று.

கணைக்குச்செயல் கொலை. யாழுக்குச்செயல் இசையாலின்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயிற் கொடியரெனவும், அறமாயிற் செவ்வியரெனவுங் கொள்கவென்பதாம். இதனான் அவரையறியுமாறு கூறப்பட்டது. (கூ)

உஅ0. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின். க0.

இ-ள். மழித்தலும் நீட்டலும் வேண்டா - தவஞ்செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா,—உலகம் பழித்தது ஒழித்துவிடின் - உயர்ந்தோர் தவத்திற்காகாதென்று குற்றங்கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின். எ-று.

பறித்தலும் மழித்தலுளடங்கும். மழித்தலென்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூறாராயினார். இதனாற் கூடாவொழுக்கமில்லாதார்க்கு வேடமும் வேண்டாவென அவரது சிறப்புக் கூறப்பட்டது. (க0)

உகூ ம் அதி.—கள்ளாமை.

அஃதாவது பிறருடைமையாயிருப்பதியாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாமை. கருதுதலும் செய்தலோடொத்தலின், கள்ளாமையென்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டுவகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனங்கொள்ளினும் அமையும், துறந்தார்க்காயின் அதனைக் கருதியவழியும் பெரியதோரிழுக்காம் ஆகலின், இது துறவறமாயிற்று. புறத்துப்போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர்மனம் அஃதொழிந்து புறத்தே போந்து பஃறலைப்பட்டு உடம்பின்பொருட்டுப் பொருளை நோக்குதலேயன்றி, அது தன்னையும் வஞ்சித்துக்கொள்ளக்கருதுதல் அவர்க்குப் பெரியதோரிழுக்காதல் அறிக. இவ்வாறு வாய்மைமுதற் கொல்லாமையீறாய நான்கதிகாரத்திற்குமொக்கும். பொருள்பற்றி நிகழுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது காமம்பற்றி நிகழ்வதாய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

உஅக. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு. க.

இ - ள். எள்ளாமை வேண்டுவான் என்பான் - வீட்டினையிகழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்குமதிக்கப்படுவான்—எனைத்தொன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க - யாதொருபொருளையும் பிறரை வஞ்சித்துக்கொள்ளக் கருதா வகை தன்னெஞ்சினைக் காக்க. எ - று.

எள்ளாதென்னும் எதிர்மறைவினையெச்சம் எள்ளாமையெனத் திரிந்து நின்றது. வீட்டினையிகழ்தலாவது காட்சியே அளவை யாவதென்றும், நிலம், நீர், தீ, வளி யெனப் பூதம் நான்கேயென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தாற்றோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின்கண்ணே அறிவு மதுவின்கட்களிப்புப்போல வெளிப்பட்டழியுமென்றும், இறந்தவுயிர் பின் பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனாற் செய்யப்படுவனவென்றுஞ் சொல்லும் உலோகாயதமுதலிய மயக்கநூல்களைத் தெளிந்து, அவற்றிற்கேற்ப ஒழுகுதல். ஞானத்திற்கேதுவாய மெய்ந்நூற்பொருளையேனும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக் கொள்ளின், அதுவுங் களவாமாகலின், எனைத்தொன்றுமென்றார். நெஞ்சு கள்ளாமற் காக்கவெனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதலென்பது பெற்றாம். (க)

உஅஉ. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல். உ.

இ - ள். உள்ளத்தால் உள்ளலும் தீதே - குற்றங்களைத் தந்நெஞ்சாற் கருதுதலும் துறந்தார்க்குப் பாவம்;—பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல் - ஆதலால், பிறனொருவன்பொருளை அவன் அறியாவகையால் வஞ்சித்துக்கொள்வேமென்று கருதற்க. எ - று.

உள்ளத்தாலென வேண்டாது கூறினார், அவருள்ளம் ஏனையாருள்ளம் போலாது சிறப்புடைத்தென்பது முடித்தற்கு. உள்ளலுமென்பது இழிவுசிறப்பும்மை. அல்விகுதி வியங்கோளெதிர்மறைக்கண்வந்தது. இவையிரண்டுபாட்டானும் இந்நடைக்குக் களவாவது இதுவென்பதூஉம் அது கடியப்படுவதென்பதூஉங் கூறப்பட்டன. ()

உஅங. களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும். ங.

இ - ள். களவினால் ஆகிய ஆக்கம் - களவினாலுளதாகிய பொருள்—ஆவதுபோல அளவிறந்து கெடும் - வளர்வதுபோலத் தோன்றித் தன்னெல்லையைக் கடந்து கெடும். எ - று.

ஆக்கத்திற்கேதுவாகலின், ஆக்கமெனப்பட்டது. எல்லையைக்கடந்து கெடுதலாவது தான் போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்தவறத்தையும் உடன்கொண்டுபோதல். அளவறிந்தென்று பாடமோதி, அவர் பயன்கொள்ளுமளவறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடுமென்றுரைப்பாருமுளர். (ங)

உஅச. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும். ச.

இ - ள். களவின்கண் கன்றிய காதல் - பிறர்பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை—விளைவின்கண் வீயாவிழுமம் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும்பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும். எ - று.

கன்றுதலான் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து அதனாற் பாவமும் பழியும் பயந்தேவிடுதலின், வீயாவிழுமந் தருமென்றார். இவையிரண்டுபாட்டானும் அது கடியப்படுதற்குக் காரணங் கூறப்பட்டது. (௪)

உஅரு. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில். ரு.

இ - ள். அருள் கருதி அன்பு உடையராதல் - அருளினது உயர்ச்சியையறிந்து அதன்மேல் அன்புடையராயொழுகுதல்—பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார் கண் இல் - பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருதி அவரது சோர்வு பார்ப்பார் மாட்டு உண்டாகாது. எ - று.

தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித் துறந்து போந்தவர் பின் பிறர்க்குரிய பொருளை நன்குமதித்து அதனை வஞ்சித்துக்கோடற்கு அவரது சோர்வு பார்க்கும் மருட்சியரானால், அவர்மாட்டு, உயிர்கண்மேலருள்செய்தல் நமக்குறுதி யென்றறிந்து அவ்வருளின் வழுவாதொழுகுந் தெருட்சி கூடாதென்பதாம். (ரு)

உஅசு. அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர். சு.

இ - ள். அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார் - உயிர் முதலியவற்றையளத்த லாகிய நெறியின்கணின்று அதற்கேற்ப ஒழுகமாட்டார்—களவின்கண் கன்றியகாத லவர் - களவின்கண்ணே மிக்க வேட்கையையுடையார். எ - று.

உயிர்முதலியவற்றையளத்தலாவது காட்சிமுதலாகச் சொல்லப்பட்ட அளவைக ளான் உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக் குற்ற விளைவுகளையும், அவற்றான் அது நாற்கதியுட் பிறந்திறந்து வருதலையும், அது செய்யா மல் அவற்றைக் கெடுத்தற்குபாயமாகிய யோகஞானங்களையும், அவற்றான் அஃதெய் தும் வீட்டினையும், அளந்து உள்ளவாறறிதல். இதனை ஆருகதர் தருமத்தியானமென்ப. அதற்கேற்ப ஒழுகுதலாவது அவ்வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றினீங்கி நல்லன வற்றின்வழி நிற்றல். (சு)

உஅஎ. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில். எ.

இ - ள். களவு என்னும் கார் அறிவாண்மை - களவென்று சொல்லப்படுகின்ற இருண்டவறிவினையுடையராதல்—அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல் - உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினார்கணில்லை. எ - று.

இருள் மயக்கம். காரியத்தைக் காரணமாகவுபசரித்துக் களவென்னுங் காரறி வாண்மையென்றும், காரணத்தைக் காரியமாக்கி அளவென்னுமாற்றலென்றுங் கூறி னார். களவுந்துறவும் இருளுமொளியும்போலத் தம்முண் மாறுகலின், ஒருங்கு நில்லா வென்பது இவை மூன்றுபாட்டானுங் கூறப்பட்டது. (எ)

உஅஅ. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு. அ.

இ - ள். அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிறகும் - அவ்வளத்தலேயே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலைபெற்ருற்போல நிலைபெறும்—களவு அறிந்தார் நெஞ்சில் கரவு - களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை. எ - று.

உயிர்முதலியவற்றை அளந்தறிந்தார்க்குத் துறவறஞ்சலியாது நிற்குமென்பது இவ்வுவமையாற்பெற்றும். களவோடு மாறின்றி நிற்பது இதனுற் கூறப்பட்டது. (௮)

௨௮௯. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ரு தவர். ௯.

இ - ள். அளவு அல்ல செய்தாங்கே வீவர் - அவ்வளவல்லாத தீய நினைவுகளை நினைத்தபொழுதே கெடுவர்—களவு அல்ல மற்றைய தேற்ருதவர் - களவல்லாத பிறவற்றை அறியாதவர். எ - று.

தீயநினைவுகளாவன பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ்சனையால் அது கொள்ளுமாறும், கொண்டவதனுல் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின. நினைத்தலுஞ்செய்தலாகலிற் செய்தென்றும், அஃது உள்ளவறங்களைப் போக்கிக் கரந்த சொற்செயல்களைப் புகுவித்து அப்பொழுதே கெடுக்குமாகலின் ஆங்கே வீவரென்றுங் கூறினர். மற்றையவாவன துறந்தார்க்கு உணவாக வோதப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலாயினவும், இல்வாழ்வார் செய்யுந் தானங்களுமாம். தேற்ருமை அவற்றையே நுகர்ந்து அவ்வளவானிறைந்திருத்தலை அறியாமை. இதனுற் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது. (௯)

௨௯௦. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு. ௧௦.

இ - ள். கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும் - களவினைப் பயில்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்புந் தவறும்;—கள்ளார்க்குப் புத்தேளுலகு தள்ளாது - அது செய்யாதார்க்கு நெடுஞ்சேணதாகிய புத்தேளுலகுந் தவருது. எ - று.

உயிர் நிற்றற்கிடனுகலின், உயிர்நிலையெனப்பட்டது. சிறப்பும்மைகளிரண்டும் விகாரத்தாற்ருெக்கன. இம்மையினும் அரசனுலொறுக்கப்படுதலின் உயிர்நிலையுந் தள்ளுமென்றும், மறுமையினுந் தேவராதல் கூடுதலிற் புத்தேளுலகுந் தள்ளாதென்றுங் கூறினுர். "மற்றது—தள்ளினுந் தள்ளாமை நீர்த்து*" என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதலறிக. இதற்குப் பிறவாறுரைப்பாருமுளர். இதனுல் இருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது. (௧௦)

௩௦ம் அதி.—வாய்மை.

அஃதாவது மெய்யினது தன்மை. பெரும்பான்மையுங் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கங் கள்ளாமைகளின்பின் வைக்கப்பட்டது.

௨௯௧. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல். ௧.

---

* திருக்குறள்—௫௯௬.

இ - ள். வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய்ம்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின்,—தீமை யாதொன்றும் இலாத சொலல் - அது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல். எ - று.

தீமை யாதொன்றுமிலாதவென இயையும். எனப்படுவதென்பது "ஊரெனப் படுவ துறையூர்" என்றாற்போல நின்றது. இதனான் நிகழ்ந்தது கூறலென்பது நீக்கப் பட்டது. அதுதானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மை யாமென்பது கருத்து. (௧)

௨௯௨. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். ௨.

இ - ள். புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் - பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின்,—பொய்ம்மையும் வாய்மையிடத்த - பொய்ம்மைச்சொற்களும் மெய்ம்மைச்சொற்களின் பாலவாம். எ - று.

குற்றந்தீர்ந்தநன்மை அறம்; அதனைப் பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்தநின்றதோருயிர் அச்சொற்களின் பொய்ம்மையானே அதனினீங்கி இன்புறுதல். நிகழாதது கூறலும், நன்மை பயவாதாயிற் பொய்ம்மையாம், பயப்பின் மெய்ம்மை யாமென்பது கருத்து. இவையிரண்டுபாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மையெனவும், நன்மை பயவாத நிகழா தது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மையெனவும், அவற்ற திலக்கணங் கூறப்பட்டது. (௨)

௨௯௩. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். ௩.

இ - ள். தன் நெஞ்சு அறிவது பொய்யற்க - ஒருவன் தன்னெஞ்சறிவதொன்ற னைப் பிறரறிந்திலரென்று பொய்யாதொழிக;—பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும் - பொய்த்தானாயின், அதனையறிந்த தன்னெஞ்சே அப்பாவத்திற்குக் கரியாய் நின்று, தன்னை அதன் பயனாய துன்பத்தையெய்துவிக்கும். எ - று.

நெஞ்சு கரியாதல் "கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார்—தங்காது தகை வின்றித் தாஞ்செய்யும் வினைகளுள்—நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறை யாவா—நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்*" என்பதனானுமறிக. பொய் மறையாமையின், அது கூறலாகாதென்பது இதனாற் கூறப்பட்டது. (௩)

௨௯௪. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன். ௪.

இ - ள். உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் - ஒருவன் தன்னுள்ளத்திற் கேற்பப் பொய்கூறாதொழுகுவனாயின்,—உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன் - அவன் உயர்ந்தோருள்ளத்தின்கணெல்லாம் உளனாம். எ - று.

உள்ளத்தாலென்பது வேற்றுமை மயக்கம். பொய் கூறாதொழுகுதலாவது மெய் கூறியொழுகுதல். அவனதறத்தின தருமைநோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவ னையே நினைப்பரென்பதாம். இதனான் இம்மைப்பயன் கூறப்பட்டது. (௪)

* கலித்தொகை, நெய்தல்—௮.

உகூரு. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. ரு.

இ - ள். மனத்தொடு வாய்மை மொழியின் - ஒருவன் தன்மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின்,—தவத்தொடு தானம் செய்வாரின் தலை - அவன் தவமுந்தானமும் ஒருங்குசெய்வாரினுஞ் சிறப்புடையன். எ - று.

மனத்தோடு பொருந்துதல் மனத்திற்கேறுதல். புறமாகிய மெய்யாற் செய்யு மவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யுமது பயனுடைத்தென்பதாம். (ரு)

உகூசு. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும். சு.

இ - ள். பொய்யாமை அன்ன புகழ் இல்லை - ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையையொத்த புகழ்க்காரணமில்லை;—எய்யாமை எல்லா அறமும் தரும் - மறுமைக்கு மெய்வருந்தாமல் அவனுக்கு எல்லாவறங்களையுந் தானேகொடுக்கும். எ - று.

புகழ் ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றானும் துறவறத்திற்கு உண்ணாமை முதலியவற்றானும் வருந்தல்வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல் அவ்விருவகைப்பயனையுந் தானே தருமென்பார், எய்யாமை யெல்லாவறமுந் தருமென்றார். (சு)

உகூஎ. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. எ.

இ - ள். பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - ஒருவன் பொய்யாமையையே பொய்யாமையையே செய்ய வல்லனாயின்,—பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று - அவன் பிறவறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று. எ - று.

அடுக்கிரண்டனுள் முதலது இடைவிடாமை மேற்று, ஏனையது துணிவின் மேற்று. பலவறங்களையும் மேற்கொண்டு செய்தற் கருமையால் சில தவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின் பயனையுந் தானே தரவற்றாய இதனையே மேற்கொண்டு தவறாமற்செய்தல் நன்றென்பார், செய்யாமை செய்யாமை நன்றென்றார். இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற்செய்யிற் பிறவறஞ்செய்கை நன்றெனப் பொழிப்பாக்கிப் பொய்கூறிற் பிறவறஞ்செய்கை நன்றாகாதென்பது அதனாற் போந்த பொருளாக்கி உரைப்பாருமுளர். பிறவறங்களெல்லாந் தரும் பயனைத் தானே தருமாற்றலுடைத்தென மறுமைப்பயனது மிகுதி இவை மூன்றுபாட்டானுங் கூறப்பட்டது. (எ)

உகூஅ. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். அ.

இ - ள். புறம் தூய்மை நீரான் அமையும் - ஒருவனுக்கு உடம்பு தூய்தாந் தன்மை நீரானேயுண்டாம்;—அகம் தூய்மை வாய்மையான் காணப்படும் - அதுபோல மனந்தூய்தாந்தன்மை வாய்மையானுண்டாம். எ - று.

காணப்படுவதுள்ளதாகலின், உண்டாமென்றுரைக்கப்பட்டது. உடம்பு தூய்தாதல் வாலாமைநீங்குதல். மனந்தூய்தாதல் மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு

நீரல்லது காரணமில்லாதாற்போல, அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணமில்லை யென்றவாறாயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டுமென் பதூஉம் பெற்றாம். (அ)

௨௯௯. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. ௯.

இ - ள். எல்லா விளக்கும் விளக்கு அல்ல - புறத்திருள் கடியும் உலகத்தார் விளக்குக்களெல்லாம் விளக்காகா:—சான்றோர்க்கு விளக்கு பொய்யா விளக்கே - துறவானமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே. எ - று.

உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீயென்பன. இவற்றிற்குப் போகா தவிருள் போகலின், பொய்யாவிளக்கே விளக்கென்றார். அவ்விருளாவது அறி யாமை. பொய்யாதவிளக்கென்பது குறைந்துநின்றது. பொய்கூறாமையாகிய விளக் கென்றவாறு. இனி இதற்குக் கல்விமுதலியவற்றான் வரும் விளக்கமெல்லாம் விளக் கமல்ல, அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே யென் றுரைப்பாருமுளர். (௯)

௩00. யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற. ௧0.

இ - ள். யாம் மெய்யாக் கண்டவற்றுள் - யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல் களுள்—எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை - யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்களில்லை. எ - று.

மெய்யுணர்த்துவனவற்றை மெய்யென்றார். அவையாவன தங்கண் மயக்கமின் மையின் பொருள்களையுள்ளவாறுணரவல்லராய்க் காம வெகுளிகளின்மையின் அவற் றையுணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய இறைவர், அருளான் உலகத்தார் உறுதி யெய்துதற்பொருட்டுக் கூறியவாகமங்கள். அவையெல்லாவற்றினும் இஃதொப்பமுடிந் ததென்பதாம். இவைமூன்றுபாட்டானும் இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது. ()

௩௧ம் அதி.—வெகுளாமை.

அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன்மாட்டுளதாயவிடத் தும் அதனைச் செய்யாமை. இது பொய்ம்மைபற்றி நிகழ்வதாய வெகுளியை விலக் கலின், வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

௩0௧. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென். ௧.

இ - ள். சினம் செல் இடத்துக் காப்பான் காப்பான் - தன் சினம் பலிக்கு மிடத்து அதனையெழாமற்றடுப்பானே அருளாற்றடுப்பானாவான்:—அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என் - ஏனைப்பலியாதவிடத்து அதனைத் தடுத்தாலென் தடாதொழிந்தாலென்! எ - று.

செல்லிடம் அல்லிடமென்றது தவத்தாற் றன்னின்மெலியாரையும் வலியாரை யும். வலியார்மேற் காவாவழியும் அதனான் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையிற்

காத்தவழியும் அறனில்லையென்பார், காக்கினென் காவாக்காலென்னென்றார். இத னான் வெகுளாமைக்கிடங் கூறப்பட்டது. (க)

நூ0உ. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற. உ.

இ - ள். சினம் செல்லா இடத்துத் தீது - ஒருவன் வெகுளி தன்னின் வலியார் மேலெழின் தனக்கே தீதாம்;—செல் இடத்தும் அதனின் தீய பிற இல் - மற்றையெளி யார்மேலெழினும் அதனிற்றீயன பிற இல்லை. எ - று.

செல்லாவிடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான் வருமேதமே, ஏனை யது இம்மைக்கட்பழியும் மறுமைக்கட்பாவமும் பயத்தலின், அதனிற்றீயன பிற வில்லையென்றார். ஓரிடத்து மாகாதென்பதாம். (உ)

நூ0நூ. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும். நூ.

இ - ள். யார்மாட்டும் வெகுளியை மறத்தல் - யாவர்மாட்டும் வெகுளியையொ ழிக;—தீய பிறத்தல் அதனான் வரும்-ஒருவர்க்குத் தீயனவெல்லாமுளவாதல் அதனான் வரும் ஆகலான். எ - று.

வலியார், ஒப்பார், எளியாரென்னும் மூவர் மாட்டும் ஆகாமையின் யார்மாட்டு மென்றும், மனத்தாற்றுறந்தார்க்கு ஆகாதனவாகிய தீச்சிந்தைகளெல்லாவற்றையும் பிறப்பித்தலின் தீயபிறத்தலதனான்வருமென்றுங் கூறினார். (நூ)

நூ0ச. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற. ச.

இ - ள். நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் - துறந்தார்க்கு அருளானுள வாய முகத்தின்கணகையையும் மனத்தின்கணுவகையையுங் கொன்று கொண்டெழு கின்ற சினமேயல்லது—பிறபகையும் உளவோ - அதனிற் பிறவாய பகைகளும் உளவோ இல்லை. எ - று.

துறவாற் புறப்பகையிலராயினும் உட்பகையாய் நின்று அருண்முதலிய நட்பினை யும் பிரித்துப் பிறவித்துன்பமுமெய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின்மிக்க பகை யில்லையாயிற்று. இவை மூன்றுபாட்டானும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது. (ச)

நூ0ரு. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். ரு.

இ - ள். தன்னைத் தான் காக்கின் சினம் காக்க - தன்னைத்தான் துன்பமெய்தா மற்காக்க நினைத்தானாயின், தன்மனத்துச் சினம் வாராமற்காக்க;—காவாக்கால் சினம் தன்னையே கொல்லும் - காவானாயின், அச்சினந் தன்னையே கெடுக்குங் கடுந்துன்பங் களை யெய்துவிக்கும். எ - று.

"வேண்டிய வேண்டியாங் கெய்தற்" * பயத்ததாய தவத்தைப் பிறர்மேற் சாபம் விடுதற்காக இழந்து அத்தவத்துன்பத்தோடு பழைய பிறவித்துன்பமும் ஒருங்கெய்து

* திருக்குறள்—உசுடு.

தலின், தன்னையே கொல்லுமென்றார். "கொல்லச் சுரப்பதாங் கீழ்*" என்புழிப் போலக் கொலைச்சொல் ஈண்டுத் துன்பமிகுதி யுணர்த்தி நின்றது. (ரு)

௩0௬. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
ஏமப் புணையைச் சுடும். ௬.

இ - ள். சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி - சினமென்னும் நெருப்பு— இனம் என்னும் ஏமப்புணையைச் சுடும் - தனக்கு இடமானவரையேயன்றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையுஞ் சுடும். எ - று.

சேர்ந்தாரைக்கொல்லி யென்பது ஏதுப்பெயர்; தான் சேர்ந்தவிடத்தைக் கொல் லுந்தொழிலதென்றவாறு. சேர்ந்தாரையென உயர்திணைப்பன்மைமேல்வைத்து ஏனை நான்குபாலும் தங்கருத்தோடு கூடிய, பொருளாற்றலாற்கொண்டார்; ஈண்டு உருவ கஞ் செய்கின்றது துறந்தார் சினத்தையேயாகலின். சினமென்னுநெருப்பென்ற விதப்பு, உலகத்துநெருப்புச் சுடுவது தான் சேர்ந்தவிடத்தையே இந்நெருப்புச் சேராதவிடத்தையுஞ் சுடுமென்னும் வேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டினமென் றது முற்றத் துறந்து தவஞானங்களாற் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிமொழிகளை இனியவாகச் சொல்லுவாரை. உருவகநோக்கிச் சுடுமென்னுந் தொழில் கொடுத்தாரா யினும், அகற்றுமென்பது பொருளாகக்கொள்க. ஏமப்புணை ஏமத்தையுபதேசிக்கும் புணை. இனமென்னுமேமப்புணையென்ற ஏகதேசவுருவகத்தாற் பிறவிக்கடலுளழுந்தா மல் வீடென்னுங் கரையேற்றுகின்றவென வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத் தாற் றொக்கது. தன்னையும் வீழ்த்து எடுப்பாரையுமகற்றுமென்பதாம். (௬)

௩0எ. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. எ.

இ - ள். சினத்தைப் பொருள் என்றுகொண்டவன் கேடு - சினத்தைத் தன்னாற்ற லுணர்த்துவதோர் குணமென்று தன்கட் கொண்டவன் அவ்வாற்றலிழத்தல்,—நிலத்து அறைந்தான் கைபிழையாதற்று - நிலத்தின்கண் அறைந்தவன்கை அந்நிலத்தையுறுதல் தப்பாதவாறுபோலத் தப்பாது. எ - று.

வைசேடிகர் பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பன வற்றை அறுவகைப்பொருளென்றாற்போல, ஈண்டுக் குணம் பொருளெனப்பட்டது. பிழையாததற்றென்பது குறைந்து நின்றது. இவை மூன்றுபாட்டானும் வெகுண் டார்க்கு வருந்தீங்கு கூறப்பட்டது. (எ)

௩0அ. இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. அ.

இ - ள். இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும் - பலசுடரையுடைத்தாய பேரெரிவந்து தோய்ந்தாலொத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும்,—வெகு ளாமை புணரின் நன்று - அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின், அது நன்று. எ - று.

இன்னாமையின் மிகுதி தோன்ற இணரெரியென்றும், அதனை மேன்மேலுஞ் செய்தல் தோன்ற இன்னாவென்றும், அச்செயல் முனிவரையும் வெகுள்விக்குமென்

* இரவலர் கன்றாக வீவாரா வாக—விரகிற் சுரப்பதாம் வண்மை - விரகின்றி—வல்லவ ரூன்ற வடியாபோல் வாய்வைத்துக்—கொல்லச் சுரப்பதாங் கீழ்—நாலடியார், ஈயாமை.

பது தோன்றப் புணரினென்றுங் கூறினார். இதனான் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது. (௮)

௩௦௯. உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
னுள்ளான் வெகுளி யெனின். ௯.

இ - ள். உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின் - தவஞ்செய்யுமவன், தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானாயின்,—உள்ளியது எல்லாம் உடன் எய்தும் - தான்கருதிய பேறெல்லாம் ஒருங்கே பெறும். எ - று.

உள்ளத்தாலென வேண்டாது கூறியவதனான், அருளுடையுள்ளமென்பது முடிந்தது. அதனானுள்ளாமையாவது அவ்வருளாகிய பகையையவளர்த்து அதனான் முற்றக் கடிதல். இம்மை மறுமை வீடென்பன வேறுவேறு திறத்தனவாயினும், அவையெல்லாம் இவ்வொன்றானேயெய்துமென்பார், உள்ளியதெல்லாமுடனெய்துமென்றார். இதனான் வெகுளாதார்க்குவரும் நன்மை கூறப்பட்டது. (௯)

௩௧௦. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. ௧௦.

இ - ள். இறந்தார் இறந்தார் அனையர் - சினத்தின்கண்ணே மிக்கார், உயிருடையராயினும், செத்தாரோடொப்பர்;—சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை - சினத்தைத் துறந்தார், சாதற்றன்மையராயினும், அதனையொழிந்தாரளவினர். எ - று.

மிக்கசினத்தையுடையார்க்கு ஞானமெய்துதற்குரிய உயிர்நின்றதாயினும் கலக்கத்தான் அஃதெய்தாமை ஒருதலையாகலின், அவரை இறந்தாரனையரென்றும், சினத்தை விட்டார்க்குச் சாக்காடெய்துதற்குரிய யாக்கைநின்றதாயினும், ஞானத்தான் வீடுபெறுதல் ஒருதலையாகலின், அவரை வீடுபெற்றாரோடொப்பரென்றுங் கூறினார். இதனான் அவ்விருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது. (௧௦)

௩௨ம் அதி.—இன்னாசெய்யாமை.

அஃதாவது தனக்கு ஒருபயனோக்கியாதல், செற்றம்பற்றியாதல், சோர்வானாதல் ஒருயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை. இன்னாசெய்தல் வெகுளியொழியவும் நிகழுமென்பது அறிவித்தற்கு, இது வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது.

௩௧௧. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். ௧.

இ - ள். சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்கின்னாசெய்து பெறலாமாயினும்,—பிறர்க்கு இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள் - அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறியவாற்றான் மனந்தூயாரது துணிவு. எ - று.

உம்மை பெருமைமேற்று. சிறப்புடையதனைச் சிறப்பென்றும், அதன்பயிற்சியான் வாயுவை வென்றெய்தப்படுதலின் எட்டுச்சித்திகளையுஞ் சிறப்பீனுஞ்செல்வமென்றும், காமம் வெகுளி மயக்கமென்னுங் குற்றங்களற்றமையான் மாசற்றாரென்றுங் கூறினார். இதனால் தமக்கொரு பயனோக்கிச் செய்தல் விலக்கப்பட்டது. (௧)

௩௧௨. கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். ௨.

இ - ள். கறுத்து இன்னா செய்தவக்கண்ணும் - தம்மேற் செற்றங்கொண்டு ஒருவன் இன்னாதவற்றைச் செய்தவிடத்தும்—மறுத்து இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள் - மீண்டு தாம் அவனுக்கின்னாதவற்றைச் செய்யாமையும் அவரது துணிவு. எ - று.

இறந்தது தழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அவ்வின்னாதவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பாலதென்பதாம். (௨)

௩௧௩. செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி
னுய்யா விழுமந் தரும். ௩.

இ - ள். செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின் - தான் முன்பொரின்னாமை செய்யாதிருக்கத் தன்மேற்செற்றங்கொண்டவர்க்கும் இன்னாதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின்,—உய்யா விழுமம் தரும் - அச்செயல் அவனுக்குக்கடக்கமுடியாத இடும்பையைக் கொடுக்கும். எ - று.

அவ்விடும்பையாவது தவமிழந்து பழியும் பாவமுமெய்தல். (௩)

௩௧௪. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். ௪.

இ - ள். இன்னா செய்தாரை ஒறுத்தல் - தமக்கின்னாதவற்றைச் செய்தாரைத் துறந்தாரொறுத்தலாவது—அவர் நாண நன்னயம் செய்து விடல் - அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய வுவகைகளைச் செய்து அவ்விரண்டனையும் மறத்தல். எ-று.

மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்குமாதலின், மறக்கற்பாலவாயின. அவரை வெல்லுமுபாயங் கூறியவாறு. இவைமூன்றுபாட்டானுஞ் செற்றம் பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது. (௪)

௩௧௫. அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. ௫.

இ - ள். அறிவினான் ஆகுவது உண்டோ - துறந்தார்க்கு உயிர்முதலியவற்றை உள்ளவாறறிந்த அறிவினானவதொரு பயனுண்டோ,—பிறிதின் நோய் தந்நோய்போல் போற்றாக்கடை - பிறிதோருயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம்முயிர்க்கு வந்தன போலக் குறிக்கொண்டு காவாவிடத்து. எ - று.

குறிக்கொண்டு காத்தலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தந்தொழில்களானும் பிறவாற்றானும் உயிர்களுறுவனவற்றை முன்னேயறிந்து உறாமற்காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணியவுடம்புடையவற்றைப்பற்றி வருதலிற் பொதுப்படப் பிறிதினோயென்றும், மறப்பான் அது துன்புறினும் நமக்கின்னாசெய்தலாமென்றறிந்து காத்தல் வேண்டுமாகலின் அது செய்யாவழி அறிவாற் பயனில்லையென்றுங் கூறினார். இதனாற் சோர்வாற்செய்தல் விலக்கப்பட்டது. (௫)

௩௧௬. இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல். ௬.

இ-ள். இன்னா எனத் தான் உணர்ந்தவை - இவை மக்கட்கின்னாதனவென அனுமானத்தாற்றானறிந்தவற்றை—பிறன்கண் செயல் தின்னாமை வேண்டும் - பிறன் மாட்டுச் செய்தலை மேவாமை துறந்தவனுக்கு வேண்டும். எ - று.

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை காட்சியளவையான் அறியப் படாமையறிக. அறமும் பாவமுமுளவாவது மனமுளனாயவழியாகலான், உணர்ந்தவையென்றார். (கூ)

௩௧எ. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணா செய்யாமை தலை. எ.

இ-ள். மனத்தான் ஆம் மாணா - மனத்தோடு உளவாகின்ற இன்னாத செயல்களை—எஞ்ஞான்றும் யார்க்கும் எனைத்தானும் செய்யாமை தலை - எக்காலத்தும் யாவர்க்குஞ் சிறிதாயினுஞ் செய்யாமை தலையாயவறம். எ - று.

ஈண்டு மனத்தானாகாதவழிப் பாவமில்லையென்பது பெற்றாம். ஆற்றலுண்டாய காலத்தும் ஆகாமையின் எஞ்ஞான்றுமென்றும், எளியார்க்குமாகாமையின் யார்க்குமென்றும், செயல் சிறிதாயினும் பாவம் பெரிதாகலின் எனைத்தானுமென்றுங் கூறினார்.

௩௧அ. தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். அ.

இ-ள். தன் உயிர்க்கு இன்னாமை தான் அறிவான் - பிறர் செய்யுமின்னாதன தன்னுயிர்க்கு இன்னாவாந்தன்மையை அனுபவித்தறிகின்றவன்—மன் உயிர்க்கு இன்னா செயல் என்கொல் - நிலைபேறுடைய பிறவுயிர்கட்குத் தானவற்றைச் செய்தல் என்ன காரணத்தான்! எ - று.

இவ்வாறே இவை பிறவுயிர்க்குமின்னாவென்பது அனுமானத்தானறிந்துவைத்துச் செய்கின்ற இப்பாவங் கழுவப்படாமையின், இன்னாதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்துமென்பது ஆகமத்தானுமறிந்து ஒழியற்பாலனென்பது தோன்றத் தானென்றும், அத்தன்மையான் ஒழியாமைக்குக் காரணம் மயக்கமென்பது தோன்ற என்கொலோவென்றுங் கூறினார். இவை மூன்றுபாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது. (அ)

௩௧கூ. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும். கூ.

இ-ள். பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் - துறந்தவர் பிறர்க்கின்னாதனவற்றை ஒருபகலது முற்கூற்றின்கட் செய்வராயின்,—தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும் - தமக்கின்னாதன அதன்பிற்கூற்றின்கண் அவர்செய்யாமற்றாமேவரும். எ - று.

முற்பகல் பிற்பகலென்பன பின் முன்னாகத்தொக்க ஆறாம்வேற்றுமைத்தொகை. தவமழிதலின், அங்ஙனங் கடிதினும் எளிதினும் வரும்; அதனால் அவைசெய்யற்க வென்பதாம். இனித் தானே வருமென்பது பாடமாயின், அச்செயறானே தமக்கின்னாதனவாய் வருமென உபசாரவழக்காக்கி, ஆக்கம் வருவித்துரைக்க. (கூ)

௩௨௦. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். க௦.

இ - ள். நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம் - இன்னாதனவெல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னாதன செய்தார்மேலவாம்;—நோய் இன்மை வேண்டுபவர் நோய் செய்யார் - அதனால் தம்முயிர்க்கு இன்னாதன வேண்டாதார் பிறிதோருயிர்க்கு இன்னாதனசெய்யார். எ - று.

உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு விளைவும் அதுவே * யாகலின், நோயெல்லா நோய்செய்தார்மேலவாமென்றார். இது சொற்பொருட்பின்வருநிலை. இவையிரண்டு பாட்டானும் அது செய்தார்க்கு வருந்தீங்கு கூறப்பட்டது. (௰)

௩௩ம் அதி.—கொல்லாமை.

அஃதாவது ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையனவீறாய உயிர்களைச் † சோர்ந்துங்கொல்லுதலைச் செய்யாமை. இது, மேற்கூறிய அறங்களெல்லாவற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் கூறாதவறங்களையும் அகப்படுத்துநிற்றலின், இறுதிக்கண் வைக்கப்பட்டது.

௩௨௧. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும். க.

இ - ள். அறவினை யாது எனின் கொல்லாமை - அறங்களெல்லாமாகிய செய்கை யாதென்று வினவின், அஃது ஒருயிரையுங் கொல்லாமையாம்,—கோறல் பிறவினை எல்லாம் தரும் - அவற்றைக் கொல்லுதல் பாவச்செய்கைகளெல்லாவற்றையுந் தானே தரும் ஆதலான். எ - று.

அறம் சாதியொருமை. விலக்கியதொழிதலும் அறஞ்செய்தலாமாகலின், கொல்லாமையை அறவினையென்றார். ஈண்டுப் பிறவினையென்றது அவற்றின்விளைவை. கொலைப்பாவம் விளைக்குந்துன்பம் ஏனைப்பாவங்களெல்லாங் கூடியும் விளைக்கமாட்டாவென்பதாம். கொல்லாமைதானே பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந் தருமென்று மேற்கோள்கூறி, அதற்கேது எதிர்மறைமுகத்தாற் கூறியவாறாயிற்று. (க)

௩௨௨. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. உ.

இ - ள். பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல் - உண்பதனைப் பசித்தவுயிர்கட்குப் பகுத்துக்கொடுத்துண்டு ஐவகையுயிர்களையுமோம்புதல்—நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை - அறநூலுடையார் துறந்தார்க்குத் தொகுத்தவறங்களெல்லாவற்றினுந் தலையாயவறம். எ - று.

பல்லுயிருமென்னும் முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. ஓம்புதல் சோர்ந்துங் கொலை வாராமற் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்துண்டல் இன்றியமையாவுறுப்பாகலின், அச்சிறப்புத்தோன்ற, அதனை இறந்தகாலவினையெச்சத்தாற் கூறினார்.

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், கருசு.

† புல்லும் மரமும் முதலியன பரிசத்தையறியும் ஓரறிவுயிர்கள். இப்பியுஞ் சங்கும் முதலியன அதனோடு இரதத்தையுமறியும் ஈரறிவுயிர்கள். கறையானும் எறும்பும் முதலியன அவ்விரண்டனோடு கந்தத்தையுமறியும் மூவறிவுயிர்கள். தும்பியும் வண்டும் முதலியன அம்மூன்றனோடு உருவத்தையுமறியும் நாலறிவுயிர்கள். வானவரும் மக்களும் நாகரும் விலங்கும் புள்ளும் முதலியன அந்நான்கனோடு சத்தத்தையுமறியும் ஐயறிவுயிர்கள்.

எல்லா நூல்களிலும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கியல்பாகலின், ஈண்டும் பொதுப்பட நூலோரென்றும், அவரெல்லார்க்கும் ஒப்பமுடிதலான் இது தலையாயவறமென்றுங் கூறினார். (உ)

கூஉகூ. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. கூ.

இ - ள். ஒன்றாக நல்லது கொல்லாமை - நூலோர் தொகுத்த அறங்களுள் தன்னோடிணைப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமை;—பொய்யாமை அதன் பின்சார நன்று - அஃதொழிந்தால் பொய்யாமை அதன்பின்னேநிற்க நன்று. எ - று.

நூலோர் தொகுத்தவறங்களென்பது அதிகாரத்தான் வந்தது. அதிகாரம் கொல்லாமையாயினும் மேற் பொய்யாமை பொய்யாமை யாற்றினெனவும் யாமெய்யாக் கண்டவற்றுளில்லையெனவுங் கூறினாராகலின், இரண்டறத்துள்ளும் யாது சிறந்ததென்று ஐயநிகழுமன்றே, அது நிகழாமைப்பொருட்டு, ஈண்டு அதன் பின்சாரப் பொய்யாமை நன்றென்றார், முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின். அதனைப் பின்சாரநன்றென்றது, நன்மைபயக்கும்வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும்வழி மெய்யும் பொய்யாயும் இதனைப் பற்ற அது திரிந்துவருதலானெனவுணர்க. இவை மூன்றுபாட்டானும் இவ்வறத்தினது சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

கூஉச. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி. ச.

இ - ள். நல்லாறு எனப்படுவது யாது எனின் - மேற்கதி வீடுபேறுகட்கு நல்ல நெறியென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்,—யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி - அஃது யாதோருயிரையுங் கொல்லாமையாகிய அறத்தினைக்காக்கக் கருதும் நெறி. எ - று.

யாதொன்றுமென்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல் வழுவாமற் காத்தல். இதனால் இவ்வறத்தினையுடையதே நன்னெறியென்பது கூறப்பட்டது. (ச)

கூஉரு. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை. ரு.

இ - ள். நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - பிறப்புநின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப்பொருட்டு மனைவாழ்க்கையைத் துறந்தாரெல்லாருள்ளும்—கொலை அஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை - கொலைப்பாவத்தை அஞ்சிக்கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன். எ - று.

பிறப்பு நின்றநிலையாவது இயங்குவ நிற்பவென்னுமிருவகைப் பிறப்பினும் இன்பமென்பதொன்றின்றி உள்ளனவெல்லாந் துன்பமேயாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமயவேறுபாட்டாற் பலவாமாகலின், நீத்தாருளெல்லாமென்றார். இதனான் இவ்வறம் மறவாதவனுயர்ச்சி கூறப்பட்டது. (ரு)

கூஉசு. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று. சு.

இ - ள். கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாண்மேல் - கொல்லாமையை விரதமாக மேற்கொண்டொழுகுவானது வாழ்நாளின்மேல்—உயிர் உண்ணும் கூற்றுச் செல்லாது - உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது. எ - று.

மிகப்பெரியவறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பரென்னும் அறநூற்றுணிபுபற்றி, இப்பேரறஞ்செய்தான்றானுங் கொல்லப்படான். படானாகவே, அடியிற்கட்டிய வாழ்நாள் இடையூறின்றி யெய்துமென்பார், வாழ்நாண்மேற் கூற்றுச்செல்லாதென்றார்: செல்லாதாகவே, கால நீட்டிக்கும், நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறுமென்பது கருத்து. இதனான் அவர்க்குவரு நன்மை கூறப்பட்டது. (௬)

௩௨௭. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. ௭.

இ - ள். தன் உயிர் நீப்பினும் - அது செய்யாவழித் தன்னுயிர் உடம்பினீங்கிப் போமாயினும்,—தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை செய்யற்க - தான் பிறிதோரின்னுயிரை அதனுடம்பினீக்குந் தொழிலைச் செய்யற்க. எ - று.

தன்னை அது கொல்லினுந் தான் அதனைக் கொல்லற்கவென்றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி. இனித் தன்னுயிர் நீப்பினுமென்பதற்குச் சாந்தியாகச் செய்யாதவழித் தன்னுயிர் போமாயினுமென்றுரைப்பாருமுளர்; பிற செய்தலுமாகாமையின், அஃதுரையன்மையறிக. (௭)

௩௨௮. நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை. ௮.

இ - ள். நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் - தேவர் பொருட்டு வேள்விக்கட்கொன்றால் இன்பமிகுஞ்செல்வம் பெரிதாமென்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும்,—சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை - துறவானமைந்தார்க்கு ஒருயிரைக் கொல்லவருஞ் செல்வங்கடை. எ - று.

இன்பமிகுஞ் செல்வமாவது தாமுந்தேவராய்த் துறக்கத்துச் சென்றெய்துஞ் செல்வம். அது சிறிதாகலானும், பின்னும் பிறத்தற்கேதுவாகலானும், வீடாகிய ஈறிலின்பமெய்துவார்க்குக் கடையெனப்பட்டது. துறக்கமெய்துவார்க்கு ஆமாயினும் வீடெய்துவார்க்கு ஆகாதென்றமையின், விதி விலக்குக்கள் தம்முண்மலையாமை விளக்கியவாறாயிற்று. இஃதில்லறமன்மைக்குக் காரணம். இவை யிரண்டுபாட்டானுங் கொலையது குற்றங் கூறப்பட்டது. (௮)

௩௨௯. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. ௯.

இ - ள். கொலை வினையர் ஆகிய மாக்கள் - கொலைத்தொழிலையுடையராகிய மாந்தர்,—புன்மை தெரிவார் அகத்துப் புலை வினையர் - அத்தொழிலின் கீழ்மையை அறியாத நெஞ்சத்தாராயினும், அறிவார் நெஞ்சத்துப் புலைத்தொழிலினர். எ - று.

கொலைவினையரென்றதனான், வேள்விக்கட் கொலையன்மையறிக. புலைவினையரென்றது தொழிலாற் புலையரென்றவாறு. இம்மைக்கட் கீழ்மையெய்துவரென்பதாம்.

௩௩௦. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். ௧௦.

இ - ள். செயிர் உடம்பின் செல்லாத் தீவாழ்க்கையவர் - நோக்கலாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழிதொழில் வாழ்க்கையினையுடையாரை—உயிர் உடம்

பின் நீக்கியார் என்ப - இவர் முற்பிறப்பின்கண் உயிர்களை அவை நின்றவுடம்பினின்று நீக்கினவரென்று சொல்லுவர் வினைவிளைவுகளையறிந்தோர். எ - று.

செல்லாவாழ்க்கை தீவாழ்க்கையெனக்கூட்டுக. செயிருடம்பினராதல் "அக் கேபோ லங்கை யொழிய விரலழுகித்—துக்கத் தொழுநோ யெழுபவே*" என்பத னுமறிக. மறுமைக்கண் இவையுமெய்துவரென்பதாம். இவையிரண்டுபாட்டானுங் கொல்வார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது. (௰)

அருளுடைமைமுதற் கொல்லாமையீறாகச் சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களுமடங்கும்; அஃதறிந்தடக்கிக்கொள்க. ஈண்டுரைப்பிற்பெருகும்.

ஞானம்.

இனி அவற்றின் பயனாகிய ஞானங்கூறிய தொடங்கினார். ஞானமாவது வீடு பயக்குமுணர்வு. அது நிலையாமைமுதல் அவாவறுத்தலிறுதியாக நான்கதிகாரத்து ளடக்கப்பட்டது.

௩௪ம் அதி.—நிலையாமை.

அவற்றுள் நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலையுதலிலவாந் தன்மை. மயங்கியவழிப் பேய்த்தேரிற்புனல்போலத் தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றிலரவுபோலக் கெடுதலிற் பொய்யென்பாரும், நிலை வேறுபட்டுவருதலாற் கணந் தோறும் பிறந்திறக்குமென்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறு படாமையுமுடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கேயுடையவென்பாரு மெனப் பொருட்பெற்றி கூறுவார் பலதிறத்தராவர்; எல்லார்க்கும் அவற்றது நிலை யாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃதுணர்ந்துழியல்லது பொருள்களிற் பற்றுவிடாதாகலின், இது முன் வைக்கப்பட்டது.

௩௩௧. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. ௧.

இ - ள். நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை - நிலையுத லிலவாகிய பொருள்களை நிலையுதலுடையவென்று கருதுகின்ற புல்லியவறிவினை யுடையராதல்—கடை - துறந்தார்க்கிழிபு. எ - று.

தோற்றமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறிவால் அவற்றின்மேற் பற்றுச்செய்தல் பிறவித்துன்பத்திற்கேதுவாகலின், அது வீடெய்துவார்க்கிழுக்கென் பது இதனாற் கூறப்பட்டது. இனிப் புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச்செய் வது சிற்றின்பத்துக்கேதுவாகிய செல்வத்தின்கண்ணும் அதனையனுபவிக்கும் யாக்கை யின்கண்ணுமாகலின், வருகின்ற பாட்டுக்களான் அவற்றது நிலையாமையை விதந்து கூறுப. (௧)

௩௩௨. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று. ௨.

---

* அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்—துக்கத் தொழுநோ யெழுபவே - யக்கா—லலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற—பழவினை வந்தடைந்தக் கால். நாலடியார், தீவினையச்சம்.

இ - ள். பெருஞ்செல்வம் கூத்தாட்டு அவைக் குழாத்தற்று - ஒருவன்மாட்டுப் பெரியசெல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கட் காண்போர்குழாம் வந்தாற்போலும்;—போக்கும் அது விளிந்தற்று - அதனது போக்கும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக்குழாம் போயினாற்போலும். எ - று.

பெருஞ்செல்வமெனவே துறக்கச்செல்வமுமடங்கிற்று. போக்குமென்ற எச்சவும்மையான், வருதலென்பது பெற்றாம். அக்குழாங் கூத்தாட்டுக் காரணமாக அரங்கின்கட் பஃறிறத்தாற்றானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போமாறு போல, செல்வமும் ஒருவனல்வினை காரணமாக அவன்மாட்டுப் பஃறிறத்தாற்றானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போமென்றதாயிற்று. (௨)

௩௩௩. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல். ௩.

இ - ள். அற்கா இயல்பிற்றுச் செல்வம் - நில்லாதவியல்பினையுடைத்துச் செல்வம்;—அது பெற்றால் அற்குப ஆங்கே செயல் - அதனைப் பெற்றால், அதனாற் செய்யப்படும் அறங்களை அப்பெற்றபொழுதே செய்க. எ - று.

அல்காவென்பது திரிந்துநின்றது. ஊழுள்ளவழியல்லது துறந்தாராற் பெறப்படாமையின் அது பெற்றாலென்றும், அஃதில்வழி நில்லாமையின் ஆங்கேயென்றுங் கூறினார். அதனாற்செய்யப்படும் அறங்களாவன பயனோக்காது செய்யப்படுங் கடவுட்பூசையும், தானமும் முதலாயின. அவை ஞானவேதுவாய் வீடுபயத்தலின், அவற்றை அற்குபவென்றும் செய்கவென்றுங்கூறினார். இவையிரண்டுபாட்டானும் செல்வநிலையாமை கூறப்பட்டது. (௩)

௩௩௪. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின். ௪.

இ - ள். நாள் என ஒன்றுபோல் காட்டி ஈரும் வாளது உயிர் - நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறைபோலத் தன்னைக்காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர்,—உணர்வார்ப் பெறின் - அஃதுணர்வாரைப் பெறின். எ-று.

காலமென்னும் அருவப்பொருள் உலகியனடத்தற்பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளாற் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானாகக் கூறுபாடாமையின் நாளெனவொன்றுபோலென்றும், அது தன்னை வாளென்றுணர மாட்டாதார் நமக்குப் பொழுதுபோகா நின்றதென்று இன்புறுமாறு நாளாய் மயக்கலிற் காட்டியென்றும், இடைவிடாதீர்தலான் வாளின் வாயதென்றும், அஃதீர்கின்றமையை உணர்வார் அரியராகலின் உணர்வார்ப்பெறினென்றுங் கூறினார். உயிரென்னுஞ் சாதியொருமைப் பெயர் ஈண்டு உடம்பின்மேனின்றது, ஈரப்படுவது அதுவேயாகலின். வாளென்பது ஆகுபெயர். இனி இதனை நாளென்பதொரு பொருள்போலத் தோன்றி உயிரை யீர்வதொரு வாளாமென்றுரைப்பாருமுளர்: எனவென்பது பெயரன்றி இடைச்சொல்லாகலானும், ஒன்றுபோற்காட்டி யென்பதற்கு ஒருபொருட்சிறப் பின்மையானும், அது வென்பது குற்றியலுகரமன்மையானும், அஃதுரையன்மையறிக. (௪)

௩௩௫. நாச்செற்று விக்குள்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும். ௫.

இ - ள். நாச் செற்று விக்குள் மேல் வாராமுன் - உரையாடாவண்ணம் நாவை யடக்கி விக்குளெழுவதற்குமுன்னே—நல்வினை மேற்சென்று செய்யப்படும் - வீட்டிற்கேதுவாகிய அறம் விரைந்து செய்யப்படும். எ - று.

மேனோக்கிவருதல் ஒருதலையாகலானும், வந்துழிச் செய்தலேயன்றிச் சொல்லலு மாகாமையானும் வாராமுன்னென்றும், அது தான் இன்னபொழுது வருமென்பதின் மையின் மேற்சென்றென்றுங் கூறினார். மேற்சேறல் மண்டுதல். நல்வினைசெய்யுமாற் றின் மேல்வைத்து நிலையாமை கூறியவாறு. (௫)

௩௩௬. நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. ௬.

இ - ள். ஒருவன் நெருநல் உளன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து - ஒருவன் நெருநலுளனாயினான் அவனே இன்றில்லையாயினானென்று சொல்லும் நிலையாமை மிகுதியுடைத்து—இவ்வுலகு - இவ்வுலகம். எ - று.

ஈண்டு உண்மை பிறத்தலையும், இன்மை இறத்தலையுமுணர்த்திநின்றன. அவை பெண்பாற்குமுளவாயினும், சிறப்புப்பற்றி ஆண்பாற்கே கூறினார். இந்நிலையாமையே உலகின் மிக்கதென்பதாம். (௬)

௩௩௭. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல. எ.

இ - ள். ஒருபொழுதும் வாழ்வது அறியார் - ஒருபொழுதளவும் தம்முடம்பு முயிரும் இயைந்திருத்தலைத் தெளியமாட்டார்;—கோடியும் அல்ல பல கருதுப - மாட்டாதுவைத்தும், கோடியளவுமன்றி அதனினும் பலவாய நினைவுகளை நினையாநிற்பர் அறிவிலாதார். எ - று.

இழிவுசிறப்பும்மையாற் பொழுதென்பது ஈண்டுக் கணத்தின்மேனின்றது. காரணமாகிய வினையினளவே வாழ்தற்கும் அளவாகலின், அஃதறியப்படாதாயிற்று. பலவாய நினைவுகளாவன பொறிகளானுகரப்படும் இன்பங்கள் தமக்குரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக்காரணமாமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாமுயலுமாறும், அவற்றிற்குவரு மிடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அப்பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப் பிறர் கொள்ளாமற் காக்குமாறும், அதனான் நட்டாரையாக்குமாறும், நள்ளாரையழிக்குமாறும், தாம் அவ்வின்பங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாரதியல்பின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு. இனிக் கருதுப வென்பதனை அஃறிணைப்பன்மைப்பெயராக்கி உரைப்பாருமுளர். (எ)

௩௩௮. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு. அ.

இ - ள். குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்று - முன்றனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்துபோனதன் மைத்து—உடம்போடு உயிரிடை நட்பு - உடம்பிற்கும் உயிர்க்குமுளதாய நட்பு. எ-று.

தனித்தொழியவென்றதனான், முன்றனியாமை பெற்றாம்: அஃதாவது கருவுந் தானும் ஒன்றாய்ப்பிறந்து வேறாந்துணையும் அதற்காதாரமாய் நிற்றல்; அதனால் அஃது

உடம்பிற்குவமையாயிற்று; அதனுள் வேற்றுமையின்றிநின்றே பின் புகாமற்போகலின், புள் உயிர்க்குவமையாயிற்று. முட்டையுட்பிறப்பன பிறவுமுளவேனும், புள்ளையே கூறினார், பறந்துபோதற்றொழிலான் உயிரோடொப்புமையெய்துவது அதுவேயாகலின். நட்பென்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப்போதலுணர்த்தி நின்றது*. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முண்மாறுகலின், வினைவயத்தாற்கூடியதல்லது நட்பிலவென்பதறிக. இனிக் குடம்பையென்பதற்குக் கூடென்றுரைப்பாருமுளர்: அது புள்ளுடன் றோன்றாமையானும், அதன்கண் அதுமீண்டு புகுதலுடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமையறிக. (௮)

௩௩௯. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. ௯.

இ - ள். சாக்காடு உறங்குவது போலும் - ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடொக்கும்;—பிறப்பு உறங்கி விழிப்பதுபோலும் - அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோடொக்கும். எ - று.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருகின்றாற்போலச் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவாறறிவித்தற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது.

௩௪௦. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு. ௰.

இ - ள். உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு - வாதமுதலியவற்றின் இல்லாய வுடம்புகளுள் ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு—புக்கில் அமைந்தின்றுகொல் - எஞ்ஞான்றுமிருப்பதோரில் இதுகாறும் அமைந்ததில்லைபோலும்! எ - று.

அந்நோய்கள் இருக்கவமைந்த ஞான்று இருந்தும், வெகுண்டஞான்றுபோயும், ஒருடம்பினும் நிலைபெறாது வருதலால், துச்சிலிருந்தவென்றார். பின் புறப்படாது புக்கேவிடுமில் அமைந்ததாயின், பிறரிற்களுள் ஒதுக்கிராதென்பதாம்; ஆகவே உயிரோடு கூடிநிற்பதோருடம்புமில்லையென்பது பெறப்பட்டது. இவையேழுபாட்டானும், முறையே யாக்கைகட்கு வரைந்த நாள் கழிகின்றவாறும், கழிந்தால் உளதாய நிலையாமையும், அவை ஒரோவழிப் பிறந்தவளவிலே இறத்தலும், ஒருகணமாயினும் நிற்குமென்பது தெளியப்படாமையும், உயிர்நீங்கியவழிக் கிடக்குமாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறி வருமாறும், அவைதாம் உயிர்க்குரிய வன்மையுமென்று, இவ்வாற்றால் யாக்கை நிலையாமை கூறியவாறு கண்டுகொள்க. (௰)

௩௫ ம் அதி.—துறவு.

அஃதாவது புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி, விடுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௩௪௧. யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன். ௧.

* இவ்வாறு பெயரடியாகத் தோன்றிய குறிப்பை வடநூலார் அபிதாமூலத்தொனியென்றும், விருத்தலக்கணையென்றுங்கூறுவர்.

இ - ள். யாதனின் யாதனின் நீங்கியான் - ஒருவன் யாதொருபொருளின் யாதொருபொருளின் நீங்கினான்—அதனின் அதனின் நோதல் இலன் - அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பமெய்துதலிலன். எ - று.

அடுக்குக்கள் பன்மை குறித்துநின்றன. நீங்குதல் துறத்தல். ஈண்டுத் துன்பமென்றது இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும், காத்தலானும், இழத்தலானும் வருவனவும், மறுமைக்கட் பாவத்தான் வருவனவுமாய இருவகைத்துன்பங்களையுமாம். எல்லாப்பொருளையும் ஒருங்கே விடுதல் தலை, அஃதன்றி ஒரோவொன்றாக விடினும் அவற்றான் வருந்துன்பமிலனாமென்பது கருத்து. (க)

நஉசஉ. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல. உ.

இ - ள். துறந்தபின் ஈண்டு இயற்பால பல - எல்லாப்பொருள்களையுந் துறந்தால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல;—வேண்டின் உண்டாகத் துறக்க - அவ்வின்பங்களை வேண்டின், அவற்றைக் காலம் பெறத்துறக்க. எ - று.

அவ்வின்பங்களாவன அப்பொருள்கள் காரணமாக மனமொழிமெய்கள் அலையாது நிற்றலானும், அவை நன்னெறிக்கட் சேறலானும் வருவன. இளமைக்கட்டுறந்தான் அவற்றை நெடுங்காலமெய்துமாகலின், உண்டாகத்துறக்கவென்றார். இன்பங்களென்பதும் காலமென்பதும் வருவிக்கப்பட்டன. இம்மைக்கட்டுன்பங்கள் இலவாதலேயன்றி இன்பங்களுளவாதலுமுண்டென்பதாம். (உ)

நஉசந. அடல்வேண்டு மைந்தன்புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு. ந.

இ - ள். ஐந்தன் புலத்தை அடல்வேண்டும் - வீடெய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களையுங் கெடுத்தல்வேண்டும்;—வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் - கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருண் முழுதையும் ஒருங்கே விடுதல்வேண்டும். எ-று.

புலமென்றது அவற்றை நுகர்தலை, அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கண்மேலல்லது வீட்டுநெறியாகிய யோகஞானங்களிற் செலுத்தாமையின், அதனையடல்வேண்டுமென்றும், அஃது அப்பொருள்கண்மேற் செல்லின் அந்நுகர்ச்சி விறகுபெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப்படாமையின், வேண்டியவெல்லா மொருங்குவிடல்வேண்டுமென்றுங் கூறினார். (ந)

நஉசச. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து. ச.

இ - ள். ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பாகும் - பற்றப் படுவதொருபொருளுமில்லாமை தவஞ்செய்வார்க்கு இயல்பாம்;—உடைமை பெயர்த்து மற்றும் மயலாகும் - அஃதன்றி, ஒன்றாயினுமுடைமை அத்தவத்தைப்போக்குதலான், மீண்டும் மயங்குதற்கேதுவாம். எ - று.

இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நோன்பென்பதூஉம் மயலென்பதூஉம் ஆகுபெயர். பெயர்த்தலானென்பது திரிந்துநின்றது. நோன்பைப் பெயர்த்த

னானென வேற்றுமைப்படுத்துக்கூட்டுக. எல்லாப் பொருள்களையும் விட்டு ஒருபொருளைவிடாதவழியும், அது சார்பாக விட்டனவெல்லாம் மீண்டுவந்து தவத்திற்கிடையீடாய் மனக்கலக்கஞ்செய்யுமென்பது கருத்து. இவை நான்குபாட்டானும் எனதென்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது. (௪)

௩௪௫. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை. ௫.

இ - ள். பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை - பிறப்பறுத்தலை மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும் மிகையாம்;—மற்றும் தொடர்ப்பாடு எவன் - ஆனபின் அதற்கு மேலே இயைபில்லனவுஞ்சில தொடர்ப்பாடுளவாதல் என்னும்! எ - று.

உடம்பென்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்புங் கொள்ளப்படும்*. அவற்றுள், அருவுடம்பாவது பத்துவகையிந்திரியவுணர்வோடும் ஐவகை வாயுக்களோடும் காமவினைவிளைவுகளோடுங் கூடிய மனம்; இது நுண்ணுடம்பெனவும்படும். இதன்கட் பற்று நிலையாமையுணர்ந்ததுணையான் விடாமையின், விடுதற்குபாயம் முன்னர்க் கூறுப. இவ்வுடம்புகளால் துன்பம் இடையறாதுவருதலையுணர்ந்து இவற்றோடு கட்டினை இறைப்பொழுதும் பொறாது வீட்டின்கண்ணே விரைதலின், உடம்பு மிகையென்றார். இன்பத்துன்பங்களான் உயிரோடு ஒற்றுமையெய்துதலின், இவ்வுடம்புகளும் யானெனப்படும். இதனான் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது. (௫)

௩௪௬. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும். ௬.

இ - ள். யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் - தானல்லாதவுடம்பை யானென்றும் தன்னோடியைபில்லாத பொருளை எனதென்றுங் கருதி அவற்றின்கட் பற்றுச்செய்தற்கேதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான்—வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் - வானோர்க்கும் எய்தற்கரிய வீட்டுலகத்தை யெய்தும். எ - று.

மயக்கம் அறியாமை. அதனைக் கெடுத்தலாவது தேசிகர்பாற் பெற்ற உறுதிமொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யானெனதன்மை தெளிந்து, அவற்றின்கட் பற்றை விடுதல். சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. இதனான் இவ்விருவகைப்பற்றினையும் விட்டார்க்கே வீடுளதென்பது கூறப்பட்டது. (௬)

௩௪௭. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. எ.

இ - ள். பற்றினைப் பற்றி விடாதவர்க்கு - இருவகைப்பற்றினையும் இறுகப்பற்றி விடாதாரை—இடும்பைகள் பற்றி விடா - பிறவித்துன்பங்கள் இறுகப்பற்றி விடா. எ - று.

இறுகப்பற்றுதல் காதல்கூர்தல். விடாதவர்க்கென்பது வேற்றுமை மயக்கம். இதனால் இவை விடாதவர்க்கு வீடில்லையென்பது கூறப்பட்டது. (எ)

* உருவுடம்பு தூலசரீரம். அருவுடம்பு சூக்குமசரீரம்.

௩௪௮. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். * அ.

இ - ள். தீரத் துறந்தார் தலைப்பட்டார் - முற்றத் துறந்தார் வீட்டினைத் தலைப் பட்டார்;—மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் - அங்ஙனந் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையுட்பட்டார். எ - று.

முற்றத்துறத்தலாவது பொருள்களையும் இருவகையுடம்பினையும் உவர்த்துப் பற்றற விடுதல். அங்ஙனந் துறவாமையாவது அவற்றுள் யாதானுமொன்றின்கட் சிறிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றித் தலைப்பட்டாரென்றும், பொய்ந்நெறி கண்டே பிறப்புவலையுளகப்படுதலின் மயங்கியென்றுங் கூறினார். (அ)

௩௪௯. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும். கூ.

இ - ள். பற்று அற்றகண்ணே பிறப்பு அறுக்கும் - ஒருவன் இருவகைப்பற்று மற்றபொழுதே, அப்பற்றறுதி அவன் பிறப்பையறுக்கும்;—மற்று நிலையாமை காணப் படும் - அவையறாதபொழுது அவற்றாற் பிறந்திறந்து வருகின்ற நிலையாமை காணப் படும். எ - று.

காரணமற்றபொழுதே காரியமும் அற்றதாமுறைமைபற்றி, பற்றற்றகண்ணே யென்றார்; "அற்றது பற்றெனி—லுற்றது வீடு†" என்பதூஉம் அதுபற்றி வந்தது. இவையிரண்டுபொட்டானும் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன. (கூ)

௩௫௦. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. ௰.

இ - ள். பற்று அற்றான் பற்றினைப் பற்றுக - எல்லாப் பொருளையும் பற்றிநின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டுநெறியை இதுவே நன்னெறியென்று மனத்துக் கொள்க;—அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு - கொண்டு, அதன்கணுபாயத்தை அம்மனத்தாற் செய்க, விடாது வந்த பற்று விடுதற்கு. எ - று.

கடவுள் வாழ்த்திற் கேற்ப ஈண்டும் பொதுவகையாற் பற்றற்றானென்றார். பற் றற்றான்பற்றென்புழி ஆறுவது செய்யுட்கிழமைக்கண்வந்தது. ஆண்டுப்பற்றென்றது பற்றப்படுவதனை. அதன்கணுபாயமென்றது தியானசமாதிகளை. விடாதுவந்த பற்

* இவ்வருமைத் திருக்குறளைச் சந்தானகுரவரு ளொருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் நெஞ்சுவிடுதூதில் "தேருங்கா—லுன்னை யொழிய வுறவில்லையென்னுமது—தன்னை யறிவைத் தனியறிவை - முன்னந்—தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி—வலைப்பட்டார் மற்றையவ ரென்று - நிலைத்தமிழின்—றெய்வப் புலமைத் திருவள்ளுவ ருரைத்த—மெய்வைத்த சொல்லை விரும்பாம - லேவர்க்கு—மாவதுவே செய்தங் கவர்வழியைத் தப்பாமற்—பாவமெனும் பௌவப் பாப்பழுந்திப் - பூவையர்தங்—கண்வலையிற் பட்டுக் கலவிக் கலைபயின்றங்—குண்மை நிலையுணர்ச்சி யோராமற் - றின்மையினு—லாவிற் கொடுமை பலபிதற்றி நாடோறுஞ்—சாவிற் பிறப்பிற் றலைப்பட்டிங் - காவிநிலை—நிற்கும்வகை பாராய் நிலையான நெஞ்சமே—பொற்பினுடன் யானே புகலக்கேள்" எனவெடுத்தருளிச்செய்தார். இந்நெஞ்சுவிடுதூது சைவசித்தாந்தம் பதினான்கினுளொன்று.

† அற்றது பற்றெனி—லுற்றது வீடுயிர்—செற்றது மன்னுறி—லற்றிறை பற்றே—திரு வாய்மொழி, ௨ - ம் திருப்பதிகம், ௫.

றென்பது அநாதியாய்வரும் உடம்பிற்பற்றினை. அப்பற்று விடுதற்கு உபாயம் இதனாற் கூறப்பட்டது. (கo)

ருசு ம் அதி.—மெய்யுணர்தல்.

அஃதாவது பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீதவையங்களானன்றி உண்மையானுணர்தல். இதனை வடநூலார் தத்துவஞானமென்ப. இதுவும் பற்றற்றான் பற்றினைப் பற்றியவழி உளதாவதாகலின், அக்காரணவொற்றுமைபற்றித் துறவின்பின் வைக்கப்பட்டது.

ருடுக. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு. க.

இ - ள். பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான் ஆம் - மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளென்றுணரும் விபரீதவுணர்வானே உளதாம்—மாணாப் பிறப்பு - இன்பமில்லாத பிறப்பு. எ - று.

அவ்விபரீதவுணர்வாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளுமில்லையெனவும், மற்றுமித்தன்மையவுஞ்சொல்லும் மயக்கநூல் வழக்குக்களை மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல். குற்றியை மகனென்றும் இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன ஒருபொருட்கிளவி. நரகர், விலங்கு, மக்கள், தேவரென்னும் நால்வகைப்பிறப்பினுமுள்ளது துன்பமேயாகலின், மாணாப்பிறப்பென்றார். இதனாற் பிறப்புத் துன்பமென்பதூஉம், அதற்கு முதற்காரணம் அவிச்சையென்பதூஉங் கூறப்பட்டன. (க)

ருடுஉ. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. உ.

இ - ள். மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு - அவிச்சையினீங்கி மெய்யுணர்வுடையராயினார்க்கு—இருள் நீங்கி இன்பம் பயக்கும் - அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும். எ - று.

இருள் நரகம்; அஃது ஆகுபெயராய்க் காரணத்தின்மேனின்றது. நீங்கியெனத் தொடைநோக்கி மெலிந்து நின்றது; நீங்கவென்பதன் றிரிபெனினுமமையும். மருணீங்கியென்னும் வினையெச்சம் காட்சியவரென்னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது. மாசறுகாட்சியென்றது கேவலவுணர்வினை. இதனால் வீடாவது நிரதிசயவின்பமென்பதூஉம், அதற்கு நிமித்தகாரணம் கேவலப் பொருளென்பதூஉம், கூறப்பட்டன. (உ)

ருடுரு. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து. ரு.

இ - ள். ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு - ஐயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு—வையத்தின் வானம் நணியது உடைத்து - எய்திநின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் அணித்தாதலுடைத்து. எ - று.

ஐயமாவது பலதலையாயவுணர்வு. அஃதாவது மறுபிறப்பும், இருவினைப் பயனும், கடவுளும் உளவோ இலவோ வென ஒன்றிற்றுணிவு பிறவாது நிற்றல்; பேய்த்தேரோ

கரு

புனலோ கயிறோ அரவோவெனத் துணியாது நிற்பதும் அது. ஒருவாற்றாற் பிறர் மதங்களைந்து தம்மதநிறுத்தல் எல்லாச்சமய நூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது மெய்யென நிகழுமையத்தினை யோகமுதிர்ச்சியுடையார் தம்மனுபவத்தானீக்கி மெய்யுணர்வாராகலின், அவரை ஐயத்தினீங்கித் தெளிந்தாரென்றும், அவர்க்கு அவ்வனுபவவுணர்வு அடிப்பட்டு வரவரப் பண்டையுலகியலுணர்வு தூர்ந்துவருமாகலின் அதனைப் பயன்மேலிட்டு வையத்தின்வான நணியதுடைத்தென்றுங் கூறினார்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது. (௩)

௩௫௪. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. ௪.

இ - ள். ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயம் இன்றே - செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகியவுணர்வு அவற்றை விட்டுத் தம்வயத்தாய வழியும், அதனாற் பயனில்லையேயாம்—மெய்யுணர்வு இல்லாதவர்க்கு - மெய்யினையுணர்தலில்லாதார்க்கு. எ - று.

ஐந்தாகியவுணர்வு மனம், அஃதெய்துதலாவது மடங்கி ஒருதலைப்பட்டுத் தாரணைக்கணிற்றல். அங்ஙனநின்றவழியும் வீடு பயவாமையின், பயமின்றென்றார். சிறப்பும்மை எய்துதற்கருமை விளக்கிநின்றது. இவையிரண்டுபாட்டானும் மெய்யுணர்வுடையார்க்கே வீடுளதென மெய்யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது. (௪)

௩௫௫. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. ௫.

இ - ள். எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் - யாதொருபொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றினும்,—அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கணின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது. எ - று.

பொருடோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்றவுண்மையைக் காண்பதென்றவாறாயிற்று. அஃதாவது கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்றவழி அரசனென்பதோர்சாதியும், சேரமானென்பதொருகுடியும், வேழநோக்கினையுடையானென்பதோர் வடிவும், சேயென்பதோரியற்பெயரும், மாந்தரஞ்சேரலிரும்பொறையென்பதோர் சிறப்புப்பெயரும், ஒருபொருளின்கட் கற்பனையாகலின், அவ்வாற்றுணராது நிலமுதல் உயிரீறாகிய தத்துவங்களின்றொகுதியெனவுணர்ந்து, அவற்றை நிலமுதலாகத் தத்தங் காரணங்களுளொடுக்கிக் கொண்டுசென்றாற் காரணகாரியங்களிரண்டுமின்றி முடிவாய் நிற்பதனையுணர்தலாம். எப்பொருளெனற் பொதுமையான் இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே யுணரப்படும். இதனான் மெய்யுணர்வினதிலக்கணங் கூறப்பட்டது. (௫)

௩௫௬. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. ௬.

இ - ள். ஈண்டுக் கற்று மெய்ப்பொருள் கண்டார் - இம்மக்கட்பிறப்பின்கண்ணே உபதேசமொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு அதனான் மெய்ப்பொருளை

யுணர்ந்தவர்—மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர் - மீண்டு இப்பிறப்பின்கண் வாராத நெறியையெய்துவர். எ - று.

கற்றென்றதனால் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், ஈண்டென்றதனால் வீடு பேற்றிற்குரிய மக்கட்பிறப்பினது பெறுதற்கருமையும் பெற்றும். ஈண்டு வாராநெறி வீட்டுநெறி. வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை கேள்வி, விமரிசம், பாவனையென்பன. அவற்றுட்கேள்வி * இதனாற் கூறப்பட்டது. (௬)

௩௫௭. ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. எ.

இ - ள். உள்ளம் ஒருதலையா ஓர்த்து உள்ளது உணரின் - அங்ஙனங்கேட்ட உபதேசமொழிப்பொருளை ஒருவனுள்ளம் அளவைகளானும் பொருந்துமாற்றானுந் தெளியவாராய்ந்து, அதனான் முதற்பொருளை யுணருமாயின்,—பேர்த்துப் பிறப்பு உள்ள வேண்டா - அவனுக்கு மாறிப் பிறப்புளதாக நினைக்கவேண்டா. எ - று.

ஒருதலையாவோர்த்தென இயையும். அளவைகளும் பொருந்துமாறும் மேலே † யுரைத்தாம். இதனால் விமரிசங் கூறப்பட்டது. (எ)

௩௫௮. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு. அ.

இ - ள். பிறப்பு என்னும் பேதைமை நீங்க - பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சை கெட—சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு - வீட்டிற்கு நிமித்தகாரணமாய செவ்வியபொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது. எ - று.

பிறப்பென்னும் பேதைமையெனவும், சிறப்பென்னுஞ் செம்பொருளெனவும், காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக் குற்றங்களுள் அவிச்சை ஏனைய நான்கிற்குங் காரணமாதலுடைமையின், அச்சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக்கூறினார். எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாகலால், வீடு சிறப்பெனப்பட்டது. தோற்றக்கேடுகளின்மையின் நித்தமாய், நோன்மையாற் றன்னையொன்றுங் கலத்தலின்மையிற்றூய்தாய்த், தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி, அதனைச் செம்பொருளென்றார். மேல் மெய்ப்பொருளெனவும் உள்ளதெனவுங் கூறியதூஉம் இதுபற்றியெனவுணர்க. அதனைக் காண்கையாவது உயிர் தன்னவிச்சைகெட்டு அதனோடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல். இதனைச் சமாதியெனவுஞ் சுக்கிலத்தியானமெனவுங் கூறுப. உயிர் உடம்பினீங்குங்காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த் தோன்றுமென்பது எல்லாவாகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே பயிறலாய இதனின்மிக்க வுபாயமில்லையென்பதறிக. இதனாற் பாவனை கூறப்பட்டது. (அ)

---

* கேள்வியெனினும், சிரவணமெனினுமொக்கும். விமரிசமெனினும், சிந்தித்தலெனினும், மனனமெனினு மொக்கும். பாவனையெனினும், தெளிதலெனினும், நிதித்தியாசனமெனினு மொக்கும்.

† உ௬உ-ம் குறளுரையிற்காண்க.

௩௫௯. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். * ௯.

இ - ள். சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் - ஒருவன் எல்லாப்பொருட்குஞ் சார்பாய அச்செம்பொருளையுணர்ந்து இருவகைப்பற்றுமற ஒழுகவல்லனாயின்,—சார்தரும் நோய் அழித்து மற்றுச் சார்தரா - அவனை முன் சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர்வொழுக்கங்களை யழித்துப் பின்சாரமாட்டா. எ - று.

ஆகுபெயராற் சாருமிடத்தையும் சார்வனவற்றையுஞ் சார்பென்றார். ஈண்டு ஒழுக்கமென்றது யோகநெறி யொழுகுதலை. அஃது இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதியென எண்வகைப்படும். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும்; யோகநூல்களுட்காண்க. மற்றுச் சார்தராவெனவியையும். சாரக்கடவனவாய் நின்ற துன்பங்களாவன பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றியீட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித்தனவும் பிறந்தவுடம்பான் முகந்து நின்றனவுமொழியப் பின்னுமனுபவிக்கக் கடவனவாய்க்கிடந்தன. அவை விளக்கின்முன்னிருள்போல் ஞானயோகங்களின் முன்னர்க் கெடுதலான், அழித்துச்சார்தராவென்றார். இதனை ஆருகதர் உவர்ப்பென்ப. பிறப்பிற்குக்காரணமாகலான், நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது. மேன்மூன்றுபாயத்தானும் பரம்பொருளை யுணரப் பிறப்பறுமென்றார். அஃதறும்வழிக் கிடந்த துன்பங்களெல்லாம் என்செய்யுமென்னுங்கடாவையாசங்கித்து அவை ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையவுயிரைச் சாரமாட்டாமையானும் வேறு சார்பின்மையானுங் கெட்டுவிடுமென்பது இதனாற் கூறப்பட்டது. (௯)

௩௬௦. காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய். ௧௦.

இ - ள். காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட - ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு, வெறுப்பு, அவிச்சையென்னு மிக்குற்றங்கண் மூன்றனுடைய பெயருங் கூடக்கெடுதலான்,—நோய் கெடும் - அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உளவாகா. எ - று.

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானெனமதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட்செல்லுமாசையும், அதுபற்றி அதன்மறுதலைக்கட்செல்லுங்கோபமுமென வடநூலார் குற்றமைந்தென்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்

* இவ்வருமைத்திருக்குறளைத் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் திருக்களிற்றுப்படியாரிலே "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையாற்—சார்புணர்வுதானே தியானமுமாஞ் - சார்பு—கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்—படவருவ தில்லைவினைப் பற்று." எனவெடுத்தருளிச்செய்தார். இவ்வுய்யவந்ததேவநாயனார் பெரும்பற்றப்புலியூரில் எழுந்தருளியிருந்தபொழுது தம்மையடைந்த ஓரதிபக்குவர்பொருட்டு இந்நூலைச்செய்து, இதன்பெருமையை உலகத்துள்ளார் உணர்ந்துய்யுமாறு திருவுளங்கொண்டு, திருவம்பலத்திற் சென்று வணங்கி, திருக்களிற்றுப்படியிலே இந்நூலை வைக்குமளவில் அத்திருக்களிற்றுக்கை நிமிர்ந்து இதனைவாங்கிப் பரமகருணாநிதியாகிய நடராசரது திருவடியிலே கொடுத்தமையால், அத்திருப்படைவீட்டினுள்ள எழுநூறு திருமடத்து முதலிகளும் தில்லைவாழந்தணர் மூவாயிரவரும் மாகேசுரர் நாற்பத்தெண்ணாயிரவரும் திருக்கோயிற்றிருத்தொண்டு செய்யும் திருப்பேர் எழாயிரத்துத்தொளாயிரவரும் பிறரும் சந்நிதியிலே கூடிநின்று வியப்புற்று, இந்நூற்குத் திருக்களிற்றுப்படியாரெனத் திருநாமஞ்சாத்தினார்களென்றறிக. இது சைவசித்தாந்த சாஸ்திரம் பதினான்கினுளொன்று.

கண்ணுமடங்குதலான், மூன்றென்றார். இடையறாத ஞான யோகங்களின் முன்னர் இக்குற்றங்கண் மூன்றுங் காட்டுத்தீமுன்னர்ப்பஞ்சுத்துய்போலுமாகலின், அம்மிகுதி தோன்ற இவை மூன்றனுமங்கெடவென்றார். இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கெடவென்பது எச்சத்திரிவு. நோயென்பது சாதியொருமை. காரணமாய அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின், அவர்க்கு வரக்கடவ துன்பங்களுமில்லையென்பது இதனாற் கூறப்பட்டது. முன்கிடந்த துன்பங்களும் மேல் வரக்கடவ துன்பங்களுமிலவாதல் மெய்யுணர்வின் பயனாகலின், இவையிரண்டுபாட்டும் இவ்வதிகாரத்தவாயின. இவ்வாற்றானே மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்தவுடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களுமே யென்பது பெற்றாம். (௧௦)

௩௭ம் அதி.—அவாவறுத்தல்.

அஃதாவது முன்னும் பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்கு நடுவுநின்ற உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமையின், வேதனைபற்றி ஓரோவழித் துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழைய பயிற்சிவயத்தான் நினைவு செல்லுமன்றே, அந்நினைவும் அவிச்சையெனப் பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாது மெய்ப்பொருளுணர்வானறுத்தல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௩௬௧. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. ௧.

இ - ள். எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பு ஈனும் வித்து - எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து—அவா என்ப - அவாவென்று சொல்லுவர் நூலோர். எ - று.

உடம்பு நீங்கிப்போங்காலத்து அடுத்த வினையும், அது காட்டுங்கதிநிமித்தங்களும், அக்கதிக்கணவாவும் உயிரின்கண் முறையே வந்துதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட் கொண்டுசெல்லுமாகலான், அதனைப் பிறப்பீனும் வித்தென்றும், கதிவயத்தானுளதாய அவ்வுயிர்வேறுபாட்டினும் அவை தன்மை திரியும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி * யென்னுங் காலவேறுபாட்டினும் அது வித்தாதல் வேறுபடாமையின் எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுமென்றும், இஃது எல்லாச்சமயங்கட்கு மொத்தலான் என்பவென்றுங் கூறினார். இதனாற் பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப்பட்டது. (௧)

௩௬௨. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். † ௨.

இ - ள். வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் - பிறப்புத்துன்பமாதலறிந்தவன் ஒன்றை வேண்டிற் பிறவாமையை வேண்டும்;—அது வேண்டாமை வேண்ட வரும் - அப்பிறவாமை தான் ஒருபொருளையும் அவாவாமையை வேண்ட அவனுக்குத் தானேயுண்டாம். எ - று.

---

* உற்சர்ப்பிணியாவது உலகம் வாழ்நாள் போகமுதலியவற்றான் வளர்பிறைபோலப் பெருகுங்காலம். அவசர்ப்பிணியாவது அஃது அவற்றாற் றேய்பிறைபோலச் சுருங்குங்காலம்.

† இவ்வருமைத்திருக்குறள் திருக்களிற்றுப்படியாரிலே "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்—வேண்டுமஃதே யஃதொன்றும் - வேண்டினது—வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டிடுக—வேண்டாமை வேண்டுமவன் பால்." எனவெடுத்தருளிச்செய்யப்பட்டது.

அநாதியாகத் தான் பிறப்புப் பிணி மூப்பிறப்புக்களாற்றுன்பமுற்று வருகின்றமையையுணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின்கண்ணேயாகலிற் பிறவாமையைவேண்டுமென்றும், ஈண்டைச் சிற்றின்பங்கருதி ஒருபொருளையவாவின் அது பிறப்பீனும் வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலின் அது வேண்டாமை வேண்ட வருமென்றுங் கூறினார். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின் அது வரும்வழி கூறத் தொடங்குகின்றமையின், மற்று வினைமாற்றின்கண் வந்தது. (உ)

௩௬௩. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில். ௩.

இ - ள். வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை - ஒருபொருளையும் அவாவாமையையொக்கும் விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின்கணில்லை,—ஆண்டும் அஃது ஒப்பது இல் - இனி அவ்வளவேயன்று, கேட்கப்படுகின்ற துறக்கத்தின்கண்ணும் அதனை யொப்பதில்லை. எ - று.

மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மேன்மேலுக்கக் கீழாதலுடைமையின், தனக்கு மேலில்லாத வேண்டாமையை விழுச்செல்வமென்றும், அதற்கு இரண்டுலகினுமொப்பதில்லையென்றுங் கூறினார். ஆகமவளவைபோலாது காட்சியளவை எல்லாரானுந் தெளியப்படுதலின், மக்கள்செல்வம் வகுத்து முற்கூறப்பட்டது. பிறவாமைக்கு வழியாமெனவும், விழுச்செல்வமாமெனவும், வேண்டாமையின் சிறப்பு இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது. (௩)

௩௬௪. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். ௪.

இ - ள். தூஉய்மை என்பது அவாவின்மை - ஒருவர்க்கு வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமை;—அது வாய்மை வேண்ட வரும் - அவ்வவாவில்லாமைதான் மெய்ம்மையை வேண்டத் தானே யுண்டாம். எ - று.

வீடாவது உயிர் அவிச்சைமுதலிய மாசு நீங்குதலாகலின், அதனைத் தூய்மையென்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்துத் தூய்மையென்பதவாவின்மையென்றும், மெய்ம்மையுடைய பரத்தை ஆகுபெயரான் மெய்ம்மையென்றுங் கூறினார். மற்று மேலையதுபோல வினைமாற்றின்கண் வந்தது. வேண்டுதல் இடைவிடாது பாவித்தல். அவாவறுத்தல் வீட்டிற்குப் பரம்பரையானன்றி நேரே யேதுவென்பதூஉம் அது வரும்வழியும் இதனாற் கூறப்பட்டன. (௪)

௩௬௫. அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர். ௫.

இ - ள். அற்றவர் என்பார் அவா அற்றார் - பிறவியற்றவரென்று சொல்லப்படுவார் அதற்கு நேரே யேதுவாகிய அவாவற்றவர்கள்;—மற்றையார் அற்றாக அற்றதிலர் - பிறவேதுக்களற்று அஃதொன்றுமறாதவர்கள், அவற்றாற் சிலதுன்பங்களற்றதல்லது அவர் போற் பிறவியற்றிலர். எ - று.

இதனால் அவாவறுத்தாரது சிறப்பு விதிமுகத்தானும் எதிர்மறைமுகத்தானுங் கூறப்பட்டது. (௫)

௩௬௬. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா. ௬.

இ - ள். ஒருவனை வஞ்சிப்பது அவா - மெய்யுணர்தலீறாகிய காரணங்களெல்லா மெய்தி அவற்றான் வீடெய்தற்பாலனாய ஒருவனை மறவிவழியாற் புகுந்து பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்க வல்லது அவா.—அஞ்சுவதே அறன் - ஆகலான், அவ்வவாவை அஞ்சிக்காப்பதே துறவறமாவது. எ - று.

ஒருமென்பன அசைநிலை. அநாதியாய்ப் போந்த அவா, ஓரோவழி வாய்மை வேண்டலையொழிந்து பராக்காற் காவானாயின், அஃதிடமாக அவனறியாமற் புகுந்து பழையவியற்கையாய் நின்று பிறப்பினையுண்டாக்குதலான், அதனை வஞ்சிப்பதென்றார். காத்தலாவது வாய்மை வேண்டலை இடைவிடாது பயின்று அது செய்யாமற் பரிகரித்தல். இதனால் அவாவின் குற்றமும் அதனைக் காப்பதே அறமென்பதூஉங் கூறப்பட்டன. (௬)

௩௬௭. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். எ.

இ - ள். அவாவினை ஆற்ற அறுப்பின் - ஒருவன் அவாவினையஞ்சித் துவரக் கெடுக்க வல்லனாயின்,—தவா வினை தான் வேண்டும் ஆற்றான் வரும் - அவனுக்குக் கெடாமைக்கேதுவாகிய வினை தான் விரும்புநெறியானேயுண்டாம். எ - று.

கெடாமை பிறவித்துன்பங்களானழியாமை. அதற்கேதுவாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறங்களை. வினை சாதியொருமை. தான் விரும்புநெறி மெய்வருந்தாநெறி. அவாவினை முற்றவறுத்தானுக்கு வேறறஞ்செய்யவேண்டா, செய்தனவெல்லாம் அறமாமென்பது கருத்து. இதனால் அவாவறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது. (எ)

௩௬௮. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவாஅது மேன்மேல் வரும். அ.

இ - ள். அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும் - அவாவில்லாதார்க்கு வரக் கடவதொருதுன்பமுமில்லை;—அஃது உண்டேல் தவாது மேன்மேல் வரும் - ஒருவற்குப் பிறகாரணங்களெல்லாமின்றி அஃதொன்றுமுண்டாயின், அதனானே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும். எ - று.

உடம்பு முகந்துநின்ற துன்பம் முன்பே செய்துகொண்டதாகலின், ஈண்டுத் துன்பமென்றது இதுபொழுது அவாவாற் செய்துகொள்வனவற்றை. தவாதுமேன்மேல் வருமென்றதனான், மூவகைத் துன்பங்களுமென்பது பெற்றாம். இதனால் அவாவே துன்பத்திற்குக் காரணமென்பது கூறப்பட்டது. (அ)

௩௬௯. இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். கூ.

இ - ள். அவா என்னும் துன்பத்துட்டுன்பம் கெடின் - அவாவென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமாயின்,—ஈண்டும் இன்பம் இடையறாது - அவன் வீடு பெற்றவழியேயன்றி உடம்போடு நின்றவழியும் இன்பமிடையறாது. எ - று.

துன்பத்துட்டுன்பம் ஏனைத்துன்பங்களெல்லாம் இன்பமாக வருந்துன்பம். விளைவின்கண்ணேயன்றித் தோற்றத்தின்கண்ணுந் துன்பமாகலின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரியமாக உபசரித்து அவாவென்னுந் துன்பத்துட்டுன்பமென்றும், அதுகெட்டார்க்கு மனங்கடுமாறாது நிரம்பி நிற்றலான் ஈண்டுமின்பமிடையறா

தென்றுங் கூறினர். இனி ஈண்டுமென்பதற்குப் பெருகுமென்றுரைப்பாருமுளர். இதனல் அவாவறுத்தார் வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்துவரென்பது கூறப்பட்டது. (கூ)

ருளo. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும். கo.

இ - ள். ஆரா இயற்கை அவா நீப்பின் - ஒருகாலும் நிரம்பாத வியல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின்,—அந்நிலையே பேரா இயற்கை தரும் - அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒருநிலைமையனுமியல்பைக் கொடுக்கும்.எ-று.

நிரம்பாமையாவது தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மேன்மேல் வளர்தல். அவ்வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்கதென்பது கருத்து. களிப்புக் கவற்சிகளும் பிறப்புப்பிணிமூப்பிறப்புக்களும் முதலாயினவின்றி உயிர் நிரதிசயவின்பத்ததாய் நிற்றலின், வீட்டினைப் பேராவியற்கையென்றும், அஃது அவா நீத்தவழிப் பெறுதல் ஒருதலையாகலின் அந்நிலையே தருமென்றுங் கூறினர்: "நன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந் திரிய மெல்லாமீர்த்—தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து—சென்றாங்கின்பத் துன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றா—லன்றே யப்போதேவீடு மதுவே வீடுவீடாமே*." என்பதும் இக்கருத்தேபற்றி வந்தது. இந்நிலைமையுடையவனை வடநூலார் சீவன்முத்தனென்ப. இதனல் வீடாவது இதுவென்பதூஉம் அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதேயுளதாமென்பதூஉங் கூறப்பட்டன. (கo)

துறவறவியல் முற்றிற்று.

இவ்வாற்றன் இம்மை மறுமை வீடென்னுமூன்றனையும் பயத்தற்சிறப்புடைத்தாய அறங்கூறினர்; இனிப் பொருளுமின்பமுங் கூறுவார், அவற்றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறுகின்றார்.

ருஅம் அதி.—ஊழ்.

அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதியென்பன ஒருபொருட்கிளவி. இது பொருளின்பங்களிரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடியைபுடைமையானும், அதனிறுதிக்கண் வைக்கப்பட்டது.

ருஎக. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி. க.

இ - ள். கைப்பொருள் ஆகு ஊழால் அசைவின்மை தோன்றும் - ஒருவற்குக் கைப்பொருளாதற்குக்காரணமாகிய ஊழான் முயற்சியுண்டாம்;—போகு ஊழால் மடி தோன்றும் - அஃதழிதற்குக் காரணமாகிய ஊழான் மடியுண்டாம். எ - று.

ஆகூழ் போகூழென்னும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப்பொருளவாய் நின்றன. அசைவு மடி. பொருளினாக்கவழிவுகட்குத் துணைக்காரணமாய முயற்சி மடிகளையுந் தானே தோற்றுவிக்குமென்பது கருத்து. (க)

* திருவாய்மொழி, எஅம் திருப்பதிகம், கூ.

௩எ௨. பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை. ௨.

இ - ள். இழவு ஊழ் (உற்றக்கடை) அறிவு பேதைப்படுக்கும் - ஒருவனுக்கு எல்லாவறிவுமுளவாயினும் கைப்பொருளிழத்தற்கேதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அஃது அதனைப் பேதையாக்கும்;—ஆகல் ஊழ் உற்றக்கடை அகற்றும் - இனி அவ னறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற் கேதுவாகிய ஊழ்வந்துற்றவிடத்து அஃததனை விரிக்கும். எ - று.

கைப்பொருளென்பது அதிகாரத்தான் வந்தது. இழவூழ் ஆகலூழென்பனவிரண் டும் வேற்றுமைத்தொகை. உற்றக்கடை யென்பது முன்னுங்கூட்டப்பட்டது. இயற் கையாணயவறிவையும் வேறுபடுக்குமென்பதாம். (௨)

௩எ௩. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும். ௩.

இ - ள். நுண்ணிய நூல் பல கற்பினும் - பேதைப்படுக்கு மூழுடையானொருவன் நுண்ணியபொருள்களையுணர்த்தும் நூல்பலவற்றையுங் கற்றானாயினும்,—மற்றும் தன் உண்மையறிவே மிகும் - அவனுக்குப் பின்னுந் தன்னூழானாகிய பேதைமையுணர்வே மேற்படும். எ - று.

பொருளினுண்மை நூலின்மேலேற்றப்பட்டது. மேற்படுதல் கல்வியறிவைப் பின்னிரங்குதற்காக்கிச் செயலுக்குத் தான்முற்படுதல். "காதன் மிக்குழிக் கற்றவுங் கைகொடா—வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்*" என்பதுமது. செயற்கை யானாய வறிவையுங் கீழ்ப்படுத்துமென்பதாம். (௩)

௩எச. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. ௪.

இ - ள். உலகத்து இயற்கை இருவேறு - உலகத்து ஊழினானாயவியற்கை இரண்டு கூறு;—திருவேறு தெள்ளியராதலும் வேறு - ஆதலாற் செல்வமுடையராதலும் வேறு அறிவுடையராதலும் வேறு. எ - று.

செல்வத்தினைப்படைத்தலுங் காத்தலும் பயன்கோடலும் அறிவுடையார்க்கல்ல தியலாவன்றே, அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவுங் காண்டலான், அறிவுடையராதற்காகுமூழ் செல்வமுடையராதற்காகாது. செல்வ முடையராதற்காகுமூழ் அறிவுடையராதற்காகாதென்றதாயிற்று. ஆகவே செல்வஞ் செய்யுங்கால் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டா வென்பது பெற்றாம். (௪)

௩எரு. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. ரு.

இ - ள். செல்வம் செயற்கு - செல்வத்தையாக்குதற்கு—நல்லவை எல்லாம் தீய வாம் - நல்லவையெல்லாந்தீயவாய் அழிக்கும்,—தீயவும் நல்லவாம் - அதுவேயன்றித் தீயவைதாமும் நல்லவாய் ஆக்கும், ஊழ்வயத்தான். எ - று.

---

* சீவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், எசு.

நல்லவை தீயவை யென்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. ஊழானென்பது அதிகாரத்தாற்பெற்றும்*. அழிக்குமூழுற்றவழிக் காலமுதலிய நல்லவாயினும் அழியும், ஆக்குமூழுற்றவழி அவை தீயவாயினும் ஆகுமென்பதாயிற்று. ஆகவே காலமுதலிய துணைக்காரணங்களையும் வேறுபடுக்குமென்பது பெற்றும். (௫)

௩௭௬. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம. ௬.

இ - ள். பால் அல்ல பரியினும் ஆகாவாம் - தமக்கூழல்லாத பொருள்கள் வருந்திக்காப்பினும், தம்மிடத்து நில்லாவாம்;—தம உய்த்துச் சொரியினும் போகா - ஊழாற்றமவாயபொருள்கள் புறத்தே கொண்டுபோய்ச் சொரிந்தாலும், தம்மை விட்டுப்போகா. எ - று.

பொருள்களினிலையும் போக்கும் ஊழினுலவதல்லது காப்பிகழ்ச்சிகளானுகா வென்பதாம். இவையாறுபாட்டானும் பொருட்குக்காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது. (௬)

௩௭௭. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது. ௭.

இ - ள். கோடி தொகுத்தார்க்கும் - ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும்—வகுத்தான் வகுத்த வகையல்லால் துய்த்தல் அரிது - தெய்வம் வகுத்த வகையானல்லது நுகர்தலுண்டாகாது. எ - று.

ஒருயிர் செய்தவினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின், வகுத்தானென்றார். "இசைத்தலுமுரிய வேறிடத் தான†." என்பதனன் உயர்திணையாயிற்று. படையாதார்க்கேயன்றிப் படைத்தார்க்குமென்றமையால், உம்மை எச்சவும்மை. வெறுமுயற்சி‡களாற் பொருள்களைப் படைத்தலல்லது நுகர்தலாகாது அதற்கு ஊழ்வேண்டுமென்பதாயிற்று. (௭)

௩௭௮. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின். ௮.

இ - ள். துப்புரவு இல்லார் துறப்பார் - வறுமையானுகர்ச்சி யில்லாதார் துறக்குங் கருத்துடையராவர்,—உறற்பால ஊட்டா கழியுமெனின் - ஊழ்கள் உறுதற்பாலவாய துன்பங்களை உறுவியாதொழியுமாயின். எ - று.

துறப்பாரென்பது ஆரீற்றெதிர்கால முற்றுச்சொல். தம்மால் விடப்பெறுவன தாமே விடப்பெற்றுவைத்துங் கருத்துவேறுபாட்டாற்றுன்ப முறுகின்றது ஊழின் வலியானென்பது எஞ்சி நிற்றலின், மன் ஒழியிசைக்கண் வந்தது. (௮)

* இவ்வாறு அதிகாரத்தால் வருவித்து முடிப்பதனை வடநூலார் அநுஷங்கமென்பர்.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், ௫௬.

‡ வெறுமுயற்சி - நல்வினை தீவினை யிரண்டினும் படாமுயற்சி. இலக்கணக்கொத்து, வினையியல் பதினேழாஞ் சூத்திரவுரையிற் காண்க.

௩௭௯. நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன். ௯.

இ - ள். நன்று ஆங்கால் நல்லவாக் காண்பவர் - நல்வினை விளையுங்கால் அதன் விளைவாய இன்பங்களைத் துடைக்குந்திறன் நாடாது இவை நல்லவென்று இயைந்த னுபவிப்பார்—அன்று ஆங்கால் அல்லற்படுவது எவன் - ஏனைத்தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களையும் அவ்வாறனுபவியாது துடைக்குந்திறன் நாடி அல்லலுழப்பது என்கருதி! எ - று.

தாமே முன்செய்துகொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும், இரண்டு மியைந்தனுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றற்கு இயைந்தனுபவித்து ஏனையதற்கு அது செய்யாது வருந்துதல் அறிவன்றென்பதாம். இவை மூன்றுபாட்டானும் இன்பத்துன் பங்கட்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது. (௯)

௩௮௦. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். ௧௦.

இ - ள். மற்றொன்று சூழினும் தான் முந்துறும் - தன்னை விலக்குதற் பொருட்டுத் தனக்கு மறுதலையாவதோருபாயத்தைச் சூழினும், தான் அவ்வுபாயமேயானும் பிறிதொன்றானும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும்;—ஊழிற் பெரு வலி யா உள - அதனால் ஊழ்போல மிக்கவலியுடையன யாவையுள. எ - று.

பெருவலி ஆகுபெயர். சூழ்தல் பலருடனும் பழுதறவெண்ணுதல். செய்தற்கே யன்றிச் சூழ்தற்கும் அவதி கொடாதென்றமையின், உம்மை எச்சவும்மை. எல்லாம் வழியாக வருதலுடைமையின், ஊழே வலியதென்பதாம். இதனான் அவ்விருவகை யூழின் வலியும் பொதுவாகக்கூறப்பட்டது.

அறத்துப்பால் முற்றிற்று.

பொருட்பால்.

அரசியல்.

இனி இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருளின்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவானெடுத்துக்கொண்டார். அது தன்றுணைக்காரணமாய அரசநீதி கூறவே யடங்கும். அரசநீதியாவது காவலைநடாத்துமுறைமை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியலென மூவகைப்படுத்து, மலர்தலையுலகிற்குயிரெனச் சிறந்த அரசனதியல்பு இருபத்தைந்ததிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

௩௯ம் அதி.—இறைமாட்சி.

அஃதாவது அவன்றன் நற்குண நற்செய்கைகள். உலகபாலருருவாய் நின்று உலகங்காத்தலின், இறையென்றார்; "திருவுடைமன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்*" என்று பெரியாரும் பணித்தார்.

௩௮௧. படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு. ௧.

இ - ள். படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் - படையுங் குடியுங் கூழும் அமைச்சும் நட்பும் அரணுமென்று சொல்லப்பட்ட ஆறங்கங்களையு முடையவன்—அரசருள் ஏறு - அரசருள் ஏறுபோல்வான். எ - று.

ஈண்டுக் குடியென்றது அதனையுடைய நாட்டினை. கூழென்றது அதற்கேதுவாய பொருளை. அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பென்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுணோக்கிப்பிறழவைத்தார். ஆறுமுடையானென்றதனால், அவற்றுள் ஒன்றில்வழியும் அரசநீதி செல்லாதென்பது பெற்றாம்; வடநூலார் இவற்றிற்கு அங்கமெனப் பெயர்கொடுத்ததூஉம் அது நோக்கி. ஏறென்பது உபசாரவழக்கு. இதனால் அரசற்கங்கமாவன இவையென்பதூஉம் இவை மூற்றுமுடைமையே அவன் வெற்றிக்கேது வென்பதூஉங் கூறப்பட்டன. (௧)

௩௮௨. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு. ௨.

இ - ள். வேந்தற்கு இயல்பு - அரசனுக்கியல்பாவது—அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை - திண்மையும் கொடையும் அறிவும் ஊக்கமுமென்னும் இந்நான்கு குணமும் இடைவிடாது நிற்றல். எ - று.

---

* திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னு—முருவுடைவண்ணங்கள் காணி னுலகளந் தானென்று துள்ளுங்—கருவுடைத் தேவிற்க ளெல்லாங் கடல்வண்ணன் கோயிலே யென்னும்—வெருவிலும் வீழ்விலுமோவாள் கண்ணன் கழல்கள் விரும்புமே—திருவாய்மொழி, ௩௪ம் திருப்பதிகம், ௮.

ஊக்கம் வினைசெய்தற்கண் மனவெழுச்சி. இவற்றுள் அறிவு ஆறங்கத்திற்கு முரித்து, ஈகை படைக்குரித்து, ஏனைய வினைக்குரிய. உயிர்க்குணங்களுள் ஒன்று தோன்ற ஏனையவடங்கிவரும், அவற்றுள் இவையடங்கின், அரசற்குக் கெடுவன பலவாமாகலின், இவை எப்பொழுதுந்தோன்றி நிற்றல் இயல்பாகவேண்டுமென்பார், எஞ்சாமை வேந்தற்கியல்பென்றார். (௨)

௩௮௩. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு. ௩.

இ-ள். நிலன் ஆள்பவற்கு - நிலத்தினையாளுந் திருவுடையாற்கு—தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா - அக்காரியங்களில் விரைவுடைமையும் அவையறிதற்கேற்ற கல்வியுடைமையும் ஆண்மையுடைமையுமாகிய இம்மூன்று குணமும் ஒருகாலும் நீங்கா. எ-று.

கல்வியது கூறுபாடு முன்னர்க் கூறப்படும். ஆண்மையாவது ஒன்றனையும் பாராது கடிதிற்செய்வதாகலின், அஃது ஈண்டு உபசாரவழக்காற் றுணிவெனப்பட்டது. உம்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. இவற்றுட் கல்வி ஆறங்கத்திற்கு முரித்து, ஏனைய வினைக்குரிய. நீங்காவென்பதற்கு மேலெஞ்சாமைக் குரைத்தாங் குரைக்க. (௩)

௩௮௪. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. ௪.

இ-ள். அறன் இழுக்காது - தனக்கோதிய அறத்தின் வழுவாதொழுகி—அல்லவை நீக்கி - அறனல்லவை தன்னாட்டின்கண்ணும் நிகழாமற் கடிந்து—மறன் இழுக்கா மானம் உடையது அரசு - வீரத்தின் வழுவாத தாழ்வின்மையினை யுடையான் அரசன். எ-று.

அவ்வறமாவது ஓதல், வேட்டல், ஈதலென்னும் பொதுத்தொழிலினும், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல், பகைத்திறந்தெறுதலென்னுஞ் சிறப்புத்தொழிலினும், வழுவாது நிற்றல். "மாண்ட—வறநெறி முதற்றே யரசின் கொற்றம்*" என்பதனால் இவ்வறம் பொருட்குக் காரணமர்தலறிக. அல்லவை கொலை, களவு முதலாயின. குற்றமாய மானத்தினீக்குதற்கு, மறனிழுக்காமானமென்றார்; அஃதாவது "வீறின்மையின் விலங்காமென மதவேழமு மெறியா—னேறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென்றெறியான்—மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையுமெறியா—றாறன்மையின் முதியாரையு மெறியானயி லுழவன்" † எனவும் "அழியுநர் புறக்கொடை யயில்வே லோச்சான்" ‡ எனவுஞ் சொல்லப்படுவது. அரசு அரசனது தன்மை; அஃது உபசாரவழக்கால் அவன்றன் மேனின்றது. (௪)

௩௮௫. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. ௫.

இ-ள். இயற்றலும் - தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேன்மேலுளவாக்கலும்—ஈட்டலும் - அங்ஙனம் வந்தவற்றை ஒருவழித்தொகுத்தலும்—காத்தலும் - தொகுத்தவற்றைப் பிறர்கொள்ளாமற் காத்தலும்—காத்த வகுத்தலும் - காத்த

* புறநானூறு, ௫௫. † சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், ௧௫௬.

‡ புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப்படலம், ௨௦.

வற்றை அறம்பொருளின்பங்களின் பொருட்டு விடுத்தலும்—வல்லது அரசு - வல்லவனே அரசன். எ - று.

ஈட்டல், காத்தல், வகுத்தலென்றவற்றிற்கேற்ப இயற்றலென்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன மணி, பொன், நெல் முதலாயின. அவை வரும் வழிகளாவன பகைவரையழித்தலும், திறைகோடலும், தன்னாடு தலையளித்தலும் முதலாயின. பிறரென்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினார். கடவுளர், அந்தணர், வறியோரென்றிவர்க்கும் புகழிற்குங்கொடுத்தலை அறப்பொருட்டாகவும், யானை, குதிரை, படை, நாடு, அரணென்றிவற்றிற்கும் பகையொடு கூடலிற் பிரிக்கப்படுவார்க்குந் தன்னிற் பிரிதலிற் கூட்டப்படுவார்க்குங் கொடுத்தலைப் பொருட்பொருட்டாகவும், மண்டபம், வாவி, செய்குன்று, இளமரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களானுகர்வனவற்றிற்குங் கொடுத்தலை இன்பப்பொருட்டாகவுங்கொள்க. இயற்றன் முதலிய தவறுமற்செய்தல் அரிதாகலின், வல்லதென்றார். இவை நான்குபாட்டானும் மாட்சியே கூறப்பட்டது. (௫)

௩௮௬. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம். ௬.

இ - ள். காட்சிக்கு எளியன் - முறைவேண்டினார்க்குங் குறைவேண்டினார்க்குங் காண்டற்கெளியனாய்—கடுஞ்சொல்லன் அல்லனேல் - யாவர்மாட்டுங் கடுஞ்சொல்லனல்லனுமாயின்,—மன்னன் நிலம் மீக்கூறும் - அம்மன்னனது நிலத்தை எல்லா நிலங்களினும் உயர்த்துக்கூறும் உலகம். எ - று.

முறைவேண்டினார் வலியரானலிவெய்தினார். குறைவேண்டினார் வறுமையுற்றிரந்தார். காண்டற்கெளிமையாவது பேரத்தாணிக்கண் அந்தணர் சான்றோருள்ளிட்டாரோடு செவ்வியுடையனாயிருத்தல். கடுஞ்சொல் கேள்வியினும் வினையினுங் கடியவாய சொல். நிலத்தை மீக்கூறுமெனவே, மன்னனை மீக்கூறுதல் சொல்லவேண்டாவாயிற்று. மீக்கூறுதல் இவன் காக்கின்ற நாடு பசி பிணி பகைமுதலியவின்றி யாவர்க்கும் பேரின்பந்தருதலிற் றேவருலகினும் நன்றென்றல். உலகமென்னுமெழுவாய் வருவிக்கப்பட்டது. (௬)

௩௮௭. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றான்கண் டனைத்திவ் வுலகு. ௭.

இ - ள். இன்சொலால் ஈத்து அளிக்க வல்லாற்கு - இனிய சொல்லுடனே ஈதலைச்செய்து அளிக்கவல்ல அரசனுக்கு—இவ்வுலகு தன்சொலால் தான் கண்டனைத்து - இவ்வுலகந் தன்புகழோடு மேவித் தான் கருதியவளவிற்றாம். எ - று.

இன்சொல் கேள்வியினும் வினையினும் இனியவாய சொல். ஈதல் வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல். அளித்தல் தன்பரிவாரத்தானும் பகைவரானும் நலிவுபடாமற் காத்தல். இவை அரியவாகலின் வல்லாற்கென்றும், அவன் மண்முழுது மாதலின் இவ்வுலகென்றுங் கூறினார். கருதியவளவிற்றுதல் கருதியபொருளெல்லாஞ் சுரத்தல். (௭)

௩௮௮. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். ௮.

இ - ள். முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் - தான் முறை செய்து பிறர் நலியாமற் காத்தலையுஞ் செய்யுமரசன்,—மக்கட்கு இறை என்று வைக்கப்

படும் - பிறப்பான் மகனேயாயினும், செயலான் மக்கட்குக் கடவுளென்று வேறு வைக்கப்படும். எ - று.

முறை அறநூலும் நீதிநூலுஞ் சொல்லும் நெறி. பிறரென்றது மேற்சொல்லி யாரை. வேறுவைத்தல் மக்களிற்பிரித்து உயர்த்துவைத்தல். (அ)

௩அ௯. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு. ௯.

இ - ள். சொல் செவி கைப்பப் பொறுக்கும் பண்பு உடை வேந்தன் - இடிக்குந் துணையாயினர் சொற்களைத் தன்செவி பொருதாகவும் விளைவுநோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது—கவிகைக்கீழ்த் தங்கும் உலகு - குடை நிழற்கண்ணே தங்கும் உலகம். எ - று.

செவிகைப்பவென்றதற் கேற்ப இடிக்குந் துணையாரென்பது வருவிக்கப்பட்டது. நாவின்புலத்தைச் செவிமேலேற்றிக் கைப்பவென்றார். பண்புடைமை விசேடவுணர் வினனுதல். அறநீதிகளிற்றவறுமையின், மண்முழுதுந் தானேயாளுமென்பதாம். (௯)

௩௯௦. கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானும் வேந்தர்க் கொளி. ௰.

இ - ள். கொடை - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும்—அளி - யாவர்க்குந் தலையளி செய்தலும்—செங்கோல் - முறைசெய்தலும்—குடி ஓம்பல் - தளர்ந்த குடிகளைப் பேணலுமாகிய—நான்கும் உடையான் - இந்நான்குசெயலையு முடையவன்—வேந்தர்க்கு ஒளியாம் - வேந்தர்க்கெல்லாம் விளக்காம். எ - று.

தலையளி முகமலர்ந்தினியகூறல். செவ்வியகோல்போறலின், செங்கோலெனப் பட்டது. குடியோம்பலெனவெடுத்துக் கூறினமையால், தளர்ச்சி பெற்றும்; அஃதா வது ஆறிலொன்றாய பொருடன்னையும் வறுமை நீங்கியவழிக் கொள்ளல்வேண்டின் அவ்வாறு கோடலும், இழத்தல்வேண்டின் இழத்தலுமாம். சாதிமுழுதும் விளக்கலின் விளக்கென்றார். ஒளி ஆகுபெயர். இவையைந்து பாட்டானும் மாட்சியும் பயனும் உடன் கூறப்பட்டன. (௰)

௪௰ம் அதி.—கல்வி.

அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலமெனறிவற்றினூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையனாயக்கால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதனோக்கி, இஃதரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத் தற்சிறப்புடைமையிற் பொதுப்படக் கூறுகின்றார். மேல் 'தூங்காமை கல்வி' எனத் தோற்றுவாய்செய்த மாட்சியை விரித்துக் கூறுகின்றமையின், இஃதிறைமாட்சியின் பின் வைக்கப்பட்டது.

௩௯௧. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக. க.

இ - ள். கற்பவை கசடு அறக் கற்க - ஒருவன் கற்கப்படுநூல்களைப் பழுதறக் கற்க;—கற்றபின் அதற்குத் தக நிற்க - அங்ஙனங்கற்றால் அக்கல்விக்குத்தக அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்க. எ - று.

௪௰ம் அதி.—கல்வி.

கற்பவையென்றதனன், அறம்பொருளின்பம் வீடென்னு முறுதிப்பொருளுணர்த்துவனவன்றிப் பிறபொருளுணர்த்துவன சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகாவென்பது பெற்றும். கசடறக் கற்றலாவது விபரீதவையங்களை நீக்கி மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல். நிற்றலாவது இல்வாழ்வுழிக் "கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்—தருமமுந் தக்கார்க்கே செய்*" தலினும், துறந்துழித் தவத்தான் மெய்யுணர்ந்து அவாவறுத்தலினும், வழுவாமை. சிறப்புடை மகற்காயிற் கற்றல்வேண்டுமென்பதூஉம், அவனாற் கற்கப்படுநூல்களும், அவற்றைக் கற்குமாறும், கற்றதனாற் பயனும் இதனாற் கூறப்பட்டன. (௧)

௩௯௨. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. ௨.

இ - ள். எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் - அறியாதார் எண்ணென்று சொல்லுவனவும் மற்றையெழுத்தென்று சொல்லுவனவுமாகிய கலைகளிரண்டினையும்—வாழும் உயிர்க்குக் கண் என்ப - அறிந்தார் சிறப்புடையுயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர். எ - று.

எண்ணென்பது கணிதம். அது கருவியுஞ் செய்கையுமென இருவகைப்படும்; அவை ஏரம்பமுதலிய நூல்களுட்காண்க. எழுத்தெனவே, அதனோடொற்றுமையுடைய சொல்லுமடங்கிற்று. இவ்விருதிறமும், அறமுதற்பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின், கண்ணெனப்பட்டன. அவை கருவியாதல் "ஆதிமுதலொழிய வல்லாதனவெண்ணி—னீதி வழுவா நிலைமையவான் - மாதே—யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்—றிறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு." "எழுத்தறியத் தீருமிழிதகைமை தீர்ந்தான்—மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு - மொழித்திறத்தின்—முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து—கட்டறுத்து வீடுபெறும்." இவற்றானறிக. என்பவென்பவற்றுள், முன்னையவிரண்டும் அஃறிணைப்பன்மைப்பெயர்; பின்னது உயர்திணைப்பன்மை வினை. அறியாதார் அறிந்தாரென்பன வருவிக்கப்பட்டன. சிறப்புடையுயிரென்றது மக்களுயிருள்ளும் உணர்வுமிகுதியுடையதனை. இதனாற் கற்கப்படுநூல்கட்குக் கருவியாவனவும் அவற்றதின்றியமையாமையுங் கூறப்பட்டன. (௨)

௩௯௩. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். ௩.

இ - ள். கண் உடையர் என்பவர் கற்றோர் - கண்ணுடையரென்று உயர்த்துச் சொல்லப்படுவார் கற்றவரே;—கல்லாதவர் முகத்து இரண்டு புண் உடையர்-மற்றைக் கல்லாதவர் முகத்தின்கண் இரண்டு புண்ணுடையர், கண்ணிலர். எ - று.

தேயமிடையிட்டவற்றையுங் காலமிடையிட்டவற்றையுங் காணும் ஞானக்கண்ணுடைமையிற் கற்றோரைக் கண்ணுடையரென்றும், அஃதின்றி நோய் முதலியவற்றாற் றுன்பஞ்செய்யும் ஊனக்கண்ணேயுடைமையிற் கல்லாதவரைப் புண்ணுடையரென்றுங் கூறினார். மேற்கண்ணன்மையுணரநின்ற ஊனக்கண்ணின் மெய்ம்மை கூறியவாற்றான், பொருணூல்களையுங் கருவிநூல்களையுங் கற்றோரதுயர்வும் கல்லாதாரதிழிவும் இதனாற்றொகுத்துக் கூறப்பட்டன. (௩)

௩௯௪. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில். ௪.

* நாலடியார், அறிவுடைமை.

இ - ள். உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே - யாவரையும் அவருவக்குமாறு தலைப்பெய்து இனி இவரை யாமெங்ஙனங் கூடுதுமென நினையுமாறு நீங்குதலாகிய அத்தன்மைத்து—புலவர் தொழில் - கற்றறிந்தாரது தொழில். எ - று.

தாம் நல்வழியொழுகல் பிறர்க்குறுதிகூறலென்பன இரண்டுந் தொழிலென ஒன்றுயடங்குதலின், அத்தன்மைத்தென்றார். அத்தன்மை அப்பயனைத்தருந்தன்மை. நல்லொழுக்கங் காண்டலானும், தமக்கு மதுரமுமுறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வெதிர்வுகளின் இன்பம் பயத்தலானும், கற்றார்மாட்டு எல்லாருமன்புடையராவரென்பதாம். இதனாற் கற்றாரதுயர்வு வகுத்துக்கூறப்பட்டது. (௪)

௩௯௫. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். ௫.

இ - ள். உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் - "பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்று" * தலான், செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோலத் தாமும் ஆசிரியர்முன் ஏக்கற்றுநின்றுங் கற்றார் தலையாயினார்;—கல்லாதவர் கடையயரே - அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றுமிழிந்தாரேயாவர். எ - று.

உடையார் இல்லாரென்பன உலகவழக்கு. ஏக்கறுதல் ஆசையாற்றாழ்தல். கடையரென்றதனான் அதன்மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது. பொய்யாய மானநோக்கி மெய்யாய கல்வியிழந்தார் பின்னொருஞான்றும் அறிவுடையராகாமையின், கடையரேயென்றார். இதனாற் கற்றாரதுயர்வுங் கல்லாதாரதிழிவுங் கூறப்பட்டன. (௫)

௩௯௬. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. ௬.

இ - ள். மணற்கேணி தொட்டனைத்து ஊறும் - மணலின்கட்கேணி தோண்டியவளவிற்றாகவூறும்;—மாந்தர்க்கு அறிவு கற்றனைத்து ஊறும் - அதுபோல மக்கட்கறிவு கற்றவளவிற்றாகவூறும். எ - று.

ஈண்டுக் கேணியென்றது அதன்கணீரை. அளவிற்றாகவென்றது அதனளவுஞ்செல்லவென்றவாறு. சிறிது கற்றதுணையான் அமையாது மேன்மேற் கற்றல்வேண்டுமென்பதாம். இஃது ஊழ் மாறுகொள்ளாவழியாகலின், மேல் "உண்மையறிவே மிகும்†" என்றதனோடு மலையாமையறிக. (௬)

௩௯௭. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. ௭.

இ - ள். யாதானும் நாடாம் ஊராம் - கற்றவனுக்குத் தன்னாடுந் தன்னூருமேயன்றி யாதானுமொருநாடும் நாடாம், யாதானுமோரூரும் ஊராம்;—ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு என் - இங்ஙனமாயின் ஒருவன் தானிறக்குமளவுங் கல்லாது கழிகின்றது என்கருதி! எ - று.

உயிரோடு சேறலிற் சாந்துணையுமென்றார். பிறர்நாடுகளும் ஊர்களுந் தமபோல உற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவந்து செய்தற்கேதுவாகலிற் கல்விபோலச் சிறந்தது பிறிதில்லை, அதனையே எப்பொழுதுஞ் செய்கவென்பதாம். (௭)

* புறநானூறு, கஅ௩. † திருக்குறள், ௩௭௩.

௩௯௮. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து. ௮.

இ - ள். ஒருவற்கு - ஒருவனுக்கு—தான் ஒருமைக்கண் கற்ற கல்வி - தானொரு பிறப்பின்கட்கற்ற கல்வி—எழுமையும் ஏமாப்பு உடைத்து - எழுபிறப்பினுஞ்சென்று உதவுதலையுடைத்து. எ - று.

வினைகள்போல உயிரின்கட்கிடந்து அது புக்குழிப் புகுமாகலின், எழுமையு மேமாப்புடைத்தென்றார். எழுமை மேலே கூறப்பட்டது*. உதவுதல் நன்னெறிக்க ணுய்த்தல். (௮)

௩௯௯. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். ௯.

இ - ள். தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு - தாமின்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகமின்புறுதலால் அச்சிறப்பு நோக்கி—கற்றறிந்தார் காமுறுவர் - கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர். எ - று.

தாமின்புறுதலாவது நிகழ்வின்கட் சொற்பொருள்களின் சுவைநுகர்வானும், புகழ் பொருள் பூசை பெறுதலானும், எதிர்வின்கண் அறம் வீடு பயத்தலானும், அதனான் இடையறாதவின்ப மெய்துதல். உலகின்புறுதலாவது இம்மிக்காரோடு தலைப்பெய்து அறியாதனவெல்லாம் அறியப்பெற்றேமென்றும், "யாண்டுபலவாக நரையில மாயினே†" மென்றுமுவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தலென்றிவற்றாற் றுன்புறுதலும் பலரையும் பகையாக்கலுமுடைத்தென அறிந்து அதனைக் காமுறாமையிற் கற்றறிந்தாரென்றும், கரும்பயிற்றுக் கூலிபோலத் தாமின்புறுதற்கு உலகின்புறுதல் பிறவாற்றானின்மையின் அதனையே காமுறுவரென்றுங் கூறினார். (௯)

௪00. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை. ௧0.

இ - ள். ஒருவற்குக் கேடு இல் விழுச்செல்வம் கல்வி - ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி;—மற்றையவை மாடு அல்ல-அஃதொழிந்த மணியும் பொன்னு முதலாயின செல்வமல்ல. எ - று.

அழிவின்மையாவது தாயத்தார், கள்வர், வலியர், அரசரென்றிவராற் கொள்ளப் படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமையுமாம். சீர்மை தக்கார் கண்ணே நிற்றல். மணி பொன்முதலியவற்றிற்கு இவ்விரண்டுமின்மையின், அவற்றை மாடல்லவென்றார். இவையைந்துபாட்டானுங் கல்வியது சிறப்புக் கூறப்பட்டது. ()

சுக ம் அதி.—கல்லாமை.

அஃதாவது கற்றலைச்செய்யாமை; என்றது அதனிழுக்கம்விழிபினை. கல்விச் சிறப்பு மேல் விதிமுகத்தாற் கூறியதுணையான் முற்றுப்பெறாமைநோக்கி, எதிர்மறைமுகத்தானுங் கூறுகின்றதாகலின், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

௪0௧. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். ௧.

* ௬௨-ம் குறளுரையிற்காண்க. † புறநானூறு, ககக.

இ - ள். அரங்கு இன்றி வட்டு ஆடியற்று - அரங்கினையிழையாது வட்டாடினாற் போலும்—நிரம்பிய நூல் இன்றிக் கோட்டிகொளல் - தானிரம்புதற்கேதுவாகிய நூல்களைக்கல்லாது ஒருவன் அவையின்கணொன்றனைச் சொல்லுதல். எ - று.

அரங்கு வகுத்ததானம். வட்டாடல் உண்டையுருட்டல். இவை "கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்—கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்*" என்பதனானறிக. நிரம்புதல் அறியவேண்டுவனவெல்லாமறிதல். கோட்டியென்பது ஈண்டாகுபெயர், "புல்லாவெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி†" என்புழிப்போல. சொல்லும் பொருளும் நெறிப்படாவென்பதாம். (௧)

௪௦௨. கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று. ௨.

இ - ள். கல்லாதான் சொற் காமுறுதல் - கல்வியில்லாதானொருவன் அவையின் கணொன்றுசொல்லுதலை அவாவுதல்—முலையிரண்டும் இல்லாதாள் பெண் காமுற் றற்று - இயல்பாகவே முலையிரண்டுமில்லாதாளொருத்தி பெண்மையை அவாவினாற் போலும். எ - று.

‡"இனைத்தெனவறிந்த சினை" யாகலின், தொகையொடு முற்றும்மை கொடுத்தார். சிறிதுமில்லாதாளென்பதாம். அவாவியவழிக்கடைபோகாது, போகினும் நகைவிளைக்குமென்பதாயிற்று. (௨)

௪௦௩. கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின். ௩.

இ - ள். கல்லாதவரும் நனி நல்லர் - கல்லாதாரும் மிகநல்லராவர்,—கற்றார்முன் சொல்லாது இருக்கப்பெறின் - தாமே தம்மையறிந்து கற்றாரவையின்கண் ஒன்றனையுஞ் சொல்லாதிருத்தல் கூடுமாயின். எ - று.

உம்மை இழிவுசிறப்பும்மை. தம்மைத்தாமறியாமையின் அது கூடாதென்பார் பெறினென்றும், கூடின் ஆண்டுத் தம்மை வெளிப்படுத்தாமையானும், பின் கல்வியை விரும்புவராதலானும் நனி நல்லரென்றுங்கூறினார். இவைமூன்றுபாட்டானுங் கல்லாதார் அவைக்கட்சொல்லுதற்குரியரன்மை கூறப்பட்டது. (௩)

௪௦௪. கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார். ௪.

இ - ள். கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும் - கல்லாதவனதொண்மை ஒரோவழி மிக நன்றாயிருப்பினும்,—அறிவுடையார் கொள்ளார் - அறிவுடையார் அதனையொண்மையாகக் கொள்ளார். எ - று.

---

* ஈன்பருந் துயவும் வான்பொரு நெடுஞ்சினைப்—பொரியரை வேம்பின் புள்ளிநீழற்—கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்—கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்—வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்ச்—சுரன்முதல் வந்த வுரன்மாய் மாலை—யுள்ளினெ னல்லனோ யானே யுள்ளிய—வினைமுடித் தன்ன வினியோண்—மனைமாண்சுடரொடு படர்பொழு தெனவே—நற்றிணை, ௩.

† புல்லா வெழுத்திற் பொருளில்வறுங் கோட்டி—கல்லா வொருவ னுரைப்பவுங்கண்ணோடி—நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்—பல்லாரு ணாணல் பரிந்து—நாலடியார், மேன்மக்கள்.

‡ தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், ௩௩.

ஒண்மை அறிவுடைமை. அது நன்றாகாது, ஆயிற்றுமினும் எரலெழுத்துப்*போல் வதோர் விழுக்காடாகலின், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியாரென்பதாம்.

ச0ரு. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். ரு.

இ-ள். கல்லர் ஒருவன் தகைமை - நூல்களைக் கல்லாதவொருவன் யானறிவுடையேனெனத் தன்னை மதிக்கு மதிப்பு—தலைப்பெய்து சொல்லாடச் சோர்வு படும் - அவற்றைக்கற்றவன் கண்டு உரையாடக் கெடும். எ-று.

கற்றவனென்பது வருவிக்கப்பட்டது. யாதானுமோர்வார்த்தை சொல்லுந் துணையுமே நிற்பது, சொல்லியவழி வழுப்படுதலின், அழிந்துவிடுமென்பதாம். இவையிரண்டுபாட்டானுங் கல்லாதார தியற்கையறிவின்குற்றங் கூறப்பட்டது. (ரு)

ச0சு. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர். சு.

இ-ள். கல்லாதவர் - கல்லாதவர்—உளர் என்னும் மாத்திரையர் அல்லால் - காணப்படுதலான் இலரல்லர் உளரென்று சிலர் சொல்லுமளவினராதலன்றி—பயவாக் களர் அனையர் - தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் விளையாத களர்நிலத்தோடொப்பர். எ-று.

களர் தானும் பேணற்பாடழிந்து உயிர்கட்கும் உணவு முதலிய உதவாதது போலத் தாமும் நன்குமதிக்கற்பாடழிந்து பிறர்க்கும் அறிவு முதலிய உதவாரென்பதாம். இதனாற் கல்லாதாரது பயன்படாமை கூறப்பட்டது. (சு)

ச0எ. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று. எ.

இ-ள். நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம் - நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பலநூல்களினுஞ்சென்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சியும் அழகும்—மண் மாண் புனை பாவை யற்று - சுதையான் மாட்சிமைப்படப் புனைந்த பாவையுடைய எழுச்சியும் அழகும்போலும். எ-று.

அறிவிற்கு மாட்சிமையாவது பொருள்களைக் கடிதிற்காண்டலும் மறவாமையும் முதலாயின. பாவை ஆகுபெயர். "உருவின்மிக்கதோ ருடம்பது பெறுதலுமரிது†" ஆகலான் எழினலங்களும் ஓர்பயனேயெனினும்; நூலறிவில்வழிச் சிறப்பிலவென்பதாம். இதனான் அவர் வடிவழகாற் பயனின்மை கூறப்பட்டது. (எ)

ச0அ. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு. அ.

இ-ள். நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாது - கற்றார் மாட்டுநின்ற வறுமையினுமின்னாது—கல்லார்கண் பட்ட திரு - கல்லாதார்மாட்டுநின்ற செல்வம். எ-று.

* "நந்து நாகுநீர் வண்டுசென் னடைவழி யெழுத்தாய்—வந்து வீழினும் வீழும்" என்றார் திருவிளையாடற்புராணத்தினும். சமணரைக் கழுவேற்றியபடலம், ௩0.

† கருவி மாமழை கனைபெயல் பொழிந்தென வழிநா—ளருவி போற்றொடர்ந் தலுதன வரும்பிணி யழலுட்—கருவிற் காய்த்திய கட்டளைப் படிமையிற் பிழையா—வுருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிதே—சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், கடுச.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தத்தநிலையினன்றி மாறிநிற்றலால் தாயிடுக்கட்படுதலும் உலகிற்குத் துன்பஞ்செய்தலும் இரண்டற்குமொக்குமாயினும், திருக் கல்லாரைக்கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாது நிற்றலான், வறுமையினுந் திருவின்னாதென்றார். இதனால் அவர் திருவின்குற்றங் கூறப்பட்டது. (அ)

ச0கூ. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. கூ.

இ - ள். கல்லாதார் மேற்பிறந்தார் ஆயினும் - கல்லாதார் உயர்ந்தசாதிக்கட்பிறந்தாராயினும்—கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்துப்பாடு இலர் - தாழ்ந்தசாதிக்கட் பிறந்துவைத்துங் கற்றாரது பெருமையளவிற்றாய பெருமையிலர். எ - று.

உடலோடொழியுஞ் சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லுங் கல்வியுயர்ச்சி சிறப்புடைத்தென்பதாம். இதனால் அவர்சாதியுயர்ச்சியாற் பயனின்மை கூறப்பட்டது. (கூ)

சக0. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர் க0.

இ - ள். விலங்கொடு மக்கள் அனையர் - விலங்கோடு நோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர் அத்துணைத்தீமையுடையர்—இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர் - விளங்கியநூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர். எ - று.

விலங்கு, நூல் சாதிப்பெயர். விளங்குதல் மேம்படுதல். விலங்கின் மக்கட்கேற்றமாய உணர்வுமிகுதி காணப்படுவது கற்றார்கண்ணேயாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினரல்லரென்பதாம். மயக்கநிரனிறை. இதனால் அவர் மக்கட்பிறப்பாற் பயனெய்தாமை கூறப்பட்டது. (க0)

சஉம் அதி.—கேள்வி.

அஃதாவது கேட்கப்படு நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல். கற்றவழி அதனினாயவறிவை வலியுறுத்தலானும், கல்லாதவழியும் அதனையுண்டாக்குதலானும் இது கல்வி கல்லாமைகளின்பின் வைக்கப்பட்டது.

சகக. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை. க.

இ - ள். செல்வத்துட்செல்வம் செவிச்செல்வம் - ஒருவற்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான்வருஞ்செல்வம்,—அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை - அச்செல்வம் பிறசெல்வங்களெல்லாவற்றினுந் தலையாகலான். எ - று.

செவியான்வருஞ்செல்வம் கேள்வியான் எல்லாப்பொருளையுமறிதல். பிற செல்வங்கள் பொருளான் வருவன. அவை நிலையா வாகலானும், துன்பவிளைவின வாகலானும், இது தலையாயிற்று. அவற்றையொழித்து இதனையே செய்கவென்பது குறிப்பெச்சம். (க)

சகஉ. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். உ.

இ - ள். செவிக்கு உணவு இல்லாத போழ்து - செவிக்குணவாகிய கேள்வியில்லாதபொழுது—வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும் - வயிற்றுக்குஞ் சிறிதுணவு இடப்படும். எ - று.

சுவைமிகுதியும் பிற்பயத்தலுமுடைய கேள்வியுள்ள பொழுது வெறுக்கப்படுதலான் இல்லாதபோழ்தென்றும், பெரிதாயவழித் தேடற்றுன்பமேயன்றி நோயுங்காமமும் பெருகுதலாற் சிறிதென்றும், அதுதானும் பின்னிருந்து கேட்டற்பொருட்டாகலான் ஈயப்படுமென்றுங் கூறினார். ஈதல் வயிற்றதிழிவுதோன்ற நின்றது. இவையிரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

சகங. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து. ங.

இ - ள். செவியுணவிற் கேள்வி உடையார் - செவியுணவாகிய கேள்வியினையுடையார்,—நிலத்து அவியுணவின் ஆன்றாரோடு ஒப்பர் - நிலத்தின்கண்ணராயினும், அவியுணவினையுடைய தேவரோடொப்பர். எ - று.

செவியுணவு செவியானுண்ணுமுணவு. அல்வழிக்கண்வந்த இன்சாரியையது னகரம் வலிந்து நின்றது. அவியாகியவுணவு தேவர்க்கு வேள்வித்தீயிற்கொடுப்பன. அறிவானிறைந்தமையான் ஆன்றாரென்றும், துன்பமறியாமையாற் றேவரோடொப்பரென்றுங் கூறினார். இதனால் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

சகச. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை. ச.

இ - ள். கற்றிலன் ஆயினும் கேட்க - உறுதி நூல்களைத் தான் கற்றிலனாயினும், அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார்சொல்லக்கேட்க,—அஃது ஒருவற்கு ஒற்கத்தின் ஊற்றாம் துணை - அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சிவந்துழிப் பற்றுக்கோடாந்துணையாகலான். எ - று.

உம்மை கற்கவேண்டுமென்பது பட நின்றது. தளர்ச்சி வறுமையானாதல் அறிவின்மையானாதல் இடுக்கட்பட்டுழி மனந்தளர்தல். அதனைக் கேள்வியினாய அறிவு நீக்குமாகலின், ஊற்றாந்துணையென்றார். ஊன்றென்னுமாகுபெயரின்னகரம் திரிந்து நின்றது. (ச)

சகரு. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல். ரு.

இ - ள். இழுக்கல் உடை உழி ஊற்றுக்கோல் அற்று - வழுக்குதலையுடைய சேற்றுநிலத்து இயங்குவார்க்கு ஊன்றுகோல்போலுதவும்—ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல் - காவற்சாகாடுகைப்பார்க்கு ஒழுக்கமுடையார் வாயிற்சொற்கள். எ - று.

அவாய்நிலையான் வந்த உவமையடையாற் பொருளடை வருவிக்கப்பட்டது. ஊற்றாகிய கோல்போலுதவுதல் தளர்ந்துழி அதனை நீக்குதல். கல்வியுடையரேனும் ஒழுக்கமில்லாதார் அறிவிலராகலின், அவர்வாய்ச்சொற் கேட்கப்படாதென்பது தோன்ற ஒழுக்கமுடையார்வாய்ச்சொல்லென்றார். வாயென்பது தீச்சொலறியாமையாகிய சிறப்புணர நின்றது. அவற்றைக் கேட்கவென்பது குறிப்பெச்சம். (ரு)

சகசா. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும். சா.

இ - ள். எனைத்தானும் நல்லவை கேட்க - ஒருவன் சிறிதாயினும் உறுதிப்பொருள் களைக் கேட்க,—அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் - அக்கேள்வி அத்துணையாயினும் நிறைந்த பெருமையைத் தரும் ஆகலான். எ - று.

எனைத்து அனைத்து என்பன கேட்கும்பொருண்மேலுங் காலத்தின்மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளிபோல வந்தீண்டி எல்லாவறிவுகளையுமுளவாக்கலின், சிறிதென்றிகழற்க வென்பதாம். (சு)

சகஎ. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர். எ.

இ - ள். பிழைத்து உணர்ந்தும் பேதைமை சொல்லார் - பிறழவுணர்ந்தவழியும், தமக்குப் பேதைமை பயக்குஞ் சொற்களைச் சொல்லார்—இழைத்து உணர்ந்து ஈண்டிய கேள்வியவர் - பொருள்களைத் தாமும் நுண்ணிதாகவாராய்ந்தறிந்து அதன்மேலும் ஈண்டிய கேள்வியினையுடையார். எ - று.

பிழைப்பவென்பது திரிந்துநின்றது. பேதைமை ஆகுபெயர். ஈண்டுதல் பலவாற்றான் வந்து நிறைதல். பொருள்களின் மெய்ம்மையைத் தாமுமறிந்து அறிந்தாரோடொப்பிப்பதுஞ் செய்தார் தாமதகுணத்தான் மயங்கினராயினும், அவ்வாறல்லது சொல்லாரென்பதாம். இவைநான்குபாட்டானுங் கேட்டார்க்கு வருநன்மை கூறப்பட்டது. (எ)

சகஅ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி. அ.

இ - ள். கேட்பினும் கேளாத் தகையவே - தம்புலமாய ஓசை மாத்திரத்தைக் கேட்குமாயினுஞ் செவிடாந் தன்மையவேயாம்—கேள்வியால் தோட்கப்படாத செவி - கேள்வியாற்றுளைக்கப்படாத செவிகள். எ - று.

ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஓசைமாத்திரத்தான் உறுதியெய்தாமையிற் கேளாத்தகையவென்றும், மனத்தின்கண் நூற்பொருள் நுழைதற்கு வழியாக்கலிற் கேள்வியைக் கருவியாக்கியும் கூறினார். பழைய துளை துளையன்றென்பதாம். (அ)

சகசு. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. சு.

இ - ள். நுணங்கிய கேள்வியர் அல்லார் - நுண்ணிதாகிய கேள்வியுடையரல்லாதார்—வணங்கிய வாயினர் ஆதல் அரிது - பணிந்த மொழியினையுடையராதல் கூடாது. எ - று.

கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை கேள்விமேலேற்றப்பட்டது. வாய் ஆகுபெயர். பணிந்தமொழி பணிவைப் புலப்படுத்திய மொழி. கேளாதார் உணர்வின்மையாற் றம்மைவியந்து கூறுவரென்பதாம். அல்லாலென்பதூஉம் பாடம். (சு)

சஉ0. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென். க0.

இ - ள். செவியிற் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள் - செவியானுகரப்படுஞ் சுவைகளையுணராத வாயுணர்வினையுடையமாந்தர்—அவியினும் வாழினும் என் - சாவினும் வாழினும் உலகிற்கு வருவதென்னை! எ - று.

செவியானுகரப்படுஞ்சுவைகளாவன சொற்சுவையும், பொருட்சுவையும்: அவற்றுட் சொற்சுவை குணம், அலங்காரமென இருவகைத்து. பொருட்சுவை காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தமென ஒன்பது வகைத்து. அவையெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும். வாயுணர்வென்பது இடைப்பதங்கடொக்குநின்ற மூன்றும்வேற்றுமைத்தொகை: அதுவாயானுகரப்படுஞ் சுவைகளையுணரும் உணர்வெனவிரியும். அவை கைப்பு, காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பென ஆறும். செத்தாலிழப்பதும் வாழ்ந்தாற் பெறுவதுமின்மையின், இரண்டு மொக்குமென்பதாம். வாயுணவினென்று பாடமோதுவாருமுளர். இவை மூன்றுபாட்டானுங் கேளாதவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது. (௧௦)

௪௩ம் அதி.—அறிவுடைமை.

அஃதாவது கல்வி கேள்விகளினாய அறிவோடு உண்மையறிவுடையனாதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௪௨௧. அற்றிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண். ௧.

இ - ள். அறிவு அற்றம் காக்கும் கருவி - அரசர்க்கு அறிவென்பது இறுதிவாராமற் காக்குங் கருவியாம்,—செறுவார்க்கு அழிக்கலாகா உள் அரணும்-அதுவேயுமன்றிப் பகைவர்க்கு அழிக்கலாகாத உள்ளரணுமாம். எ - று.

காத்தல் முன்னறிந்து பரிகரித்தல். உள்ளரண் உள்ளாயவரண்; உள்புக்கழிக்கலாகா அரணென்றுமாம். இதனால் அறிவினது சிறப்புக் கூறப்பட்டது. (௧)

௪௨௨. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு. ௨.

இ - ள். சென்ற இடத்தால் செல விடா - மனத்தை அதுசென்ற புலத்தின்கட் செல்ல விடாது—தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு - அப்புலத்தின் நன்மை தீமைகளையாராய்ந்து தீயதனினீக்கி நல்லதன்கட் செலுத்துவது அறிவு. எ - று.

வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமெனப் புலம் ஐந்தாயினும், ஒருகாலத்து ஒன்றின்கணல்லது செல்லாமையின், இடத்தாலென்றார். விடாதென்பது கடைக்குறைந்து நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல வேறுக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவென்றார், அஃது உயிர்க்குணமாகலின். (௨)

௪௨௩. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. ௩.

இ - ள். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் - யாதொருபொருளை யாவர் யாவர் சொல்லக்கேட்பினும்,—அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அப்பொருளின் மெய்யாய பயனைக்காண வல்லது அறிவு. எ - று.

குணங்கண் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்குமுண்மையின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும் உறுதிப்பொருள் பகைவர் வாயினும், கெடுபொருள் நட்டார்வாயினும் ஒரோவழிக் கேட்கப்படுதலான்,

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினுமென்றார். அடுக்குப் பன்மை பற்றி வந்தது. வாயென்பது அவர் அப்பொருளின்கட் பயிலாமை யுணர நின்றது. மெய்யாதல் நிலைபெறுதல். சொல்வாரதியல்பு நோக்காது அப்பொருளின் பயனோக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்வதறிவென்பதாம். (ந)

சஉச. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. ச.

இ - ள். தான் எண்பொருளவாகச் செலச் சொல்லி - தான் சொல்லுஞ் சொற்களை அரியபொருளவாயினும் கேட்பார்க்கு எளியபொருளவாமாறு மனங் கொளச் சொல்லி—பிறர்வாய் நுண் பொருள் காண்பது அறிவு - பிறர்வாய்க் கேட்குஞ் சொற்களின் நுண்ணியபொருள் காணவரிதாயினும் அதனைக் காணவல்லது அறிவு. எ - று.

உடையவன்றொழில் அறிவின்மேலேற்றப்பட்டது. சொல்லுவன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுகவென்பார் சொன் மேல்வைத்தும், கேட்பன வழுவினும் இனிது விளங்காவாயினும் பயனைக்கொண்டொழிகவென்பார் பொருண்மேல் வைத்துங் கூறினார். (ச)

சஉரு. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு. ரு.

இ - ள். உலகம் தழீஇயது ஒட்பம் - உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம்;—மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு - அந்நட்பின்கண் முன் மலர்தலும் பின் கூம்புதலுமின்றி ஒருநிலையனாவது அறிவாம். எ - று.

தழீஇயது இல்லதென்பன அவ்வத்தொழின்மேனின்றன. உலகமென்பது ஈண்டுயர்ந்தோரை. அவரோடு கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப்பூப்போல ஒருநிலையே நட்பாயினன் எல்லா வின்பமுமெய்துமாகலின், அதனை அறிவென்றார்*. காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன. இதனைச்செல்வத்தின் மலர்தலும் நல்குரவிற் கூம்பலுமில்லதென்று உரைப்பாருமுளர். (ரு)

சஉசா. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. சா.

இ - ள். உலகம் எவ்வது உறைவது - உலகம் யாதொருவாற்றானொழுகுவதாயிற்று,—உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு - அவ்வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றானொழுகுவது அரசனுக்கறிவு. எ - று.

உலகத்தையெல்லாம் யானியமித்தலான் என்னை நியமிப்பாரில்லையெனக் கருதித் தானினைத்தவாறே ஒழுகிற் பாவமும் பழியுமாமாகலான், அவ்வாறொழுகுதல் அறிவன்றென விலக்கியவாறாயிற்று. இவையைந்துபாட்டானும் அதனதிலக்கணங் கூறப்பட்டது. (சா)

சஉஎ. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர். எ.

---

* கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது—வேட்டதே வேட்டதா நட்பாட்சி - தோட்ட—கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை—நயப்பாரு நட்பாரு மில்—நாலடியார், நட்பாராய்தல்.

இ - ள். அறிவுடையார் ஆவது அறிவார் - அறிவுடையாராவார் வரக்கடவதனை முன்னறியவல்லார்;—அறிவிலார் அஃது அறிகல்லாதவர் - அறிவிலராவார் அதனை முன்னறியமாட்டாதார். எ - று.

முன்னறிதல் முன்னேயெண்ணியறிதல். அஃதறிகல்லாமையாவது வந்தாலறிதல். இனி ஆவ்தறிவாரென்பதற்குத் தமக்கு நன்மையறிவாரென்றுரைப்பாருமுளர்.

சஉஅ. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில். அ.

இ - ள். அஞ்சுவது அஞ்சாமை பேதைமை - அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம்;—அஞ்சுவது அஞ்சல் அறிவார்தொழில் - அவ்வஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம். எ - று.

பாவமும் பழியுங் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதிபற்றி அஞ்சுவதென்றார். அஞ்சாமை எண்ணாதுசெய்து நிற்றல். அஞ்சுதல் எண்ணித் தவிர்தல். அது காரியமன்றென்று இகழப்படாதென்பார் அறிவார்தொழிலென்றார். அஞ்சாமை இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின், ஈண்டஞ்சவேண்டுமிடங் கூறியவாறு. இவையிரண்டுபாட்டானும் அதனையுடையாரதிலக்கணங் கூறப்பட்டது. (அ)

சஉகூ. எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய். கூ.

இ - ள். எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு - வரக்கடவதாகியவதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினையுடையார்க்கு—அதிரவருவது ஓர் நோய் இல்லை - அவர் நடுங்க வருவதொரு துன்பமுமில்லை. எ - று.

நோயென வருகின்றமையின், வாளா எதிரதாவென்றார். இதனாற் - காக்கலாங் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல் அதன்காரணத்தை விலக்குதல். அவர்க்குத் துன்பமின்மை இதனாற் கூறப்பட்டது. (கூ)

சங0. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர். க0.

இ - ள். அறிவுடையார் எல்லாம் உடையார் - அறிவுடையார் பிறிதொன்று மிலராயினும் எல்லாமுடையராவர்;—அறிவிலார் என் உடையரேனும் இலர் - அறிவிலாதார் எல்லாமுடையராயினும் ஒன்றுமிலராவர். எ - று.

செல்வங்களெல்லாம் அறிவாற்படைக்கவுங் காக்கவும்படுதலின் அஃதுடையாரை எல்லாமுடையரென்றும், அவையெல்லாம் முன்னேயமைந்து கிடப்பினும் அழியாமற் காத்தற்குந் தெய்வத்தானழிந்துழிப் படைத்தற்குங் கருவியுடையரன்மையின் அஃதில்லாதாரை என்னுடையரேனுமிலரென்றுங் கூறினார். என்னுமென்புழி உம்மை விகாரத்தாற் றொக்கது. இதனான் அவரதுடைமையும் ஏனையாரதின்மையுங் கூறப்பட்டன. (க0)

சச ம் அதி.—குற்றங்கடிதல்.

அஃதாவது காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப்பட்ட குற்றங்களாறனையும் அரசன் தன்கணிகழாமற் கடிதல். இவற்றை வடநூலார்

பகைவர்க்கமென்ப. இவை குற்றமென்றறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின், அதன்பின் வைக்கப்பட்டது.

௪௩௧. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. ௧.

இ - ள். செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் - மதமும் வெகுளியுங் காமமுமாகிய குற்றங்களில்லாத வரசரது செல்வம்—பெருமித நீர்த்து - மேம்பாட்டு நீர்மையினையுடைத்து. எ - று.

மதம் செல்வக்களிப்பு. சிறியோர்செயலாகலின், அளவிறந்த காமஞ் சிறுமை யெனப்பட்டது. இவை நீதியல்லன செய்வித்தலான், இவற்றைக் கடிந்தார்செல்வம் நல்வழிப்பாடும் நிலைபேறுமுடைமையின், மதிப்புடைத் தென்பதாம். மிகுதிபற்றி இவை முற்கூறப்பட்டன. (௧)

௪௩௨. இவறலு மாண்பிறந்த மானமு மாணா
வுவகையு மேத மிறைக்கு. ௨.

இ - ள். இவறலும் - வேண்டும்வழிப் பொருள்கொடாமையும்—மாண்பு இறந்த மானமும் - நன்மையினீங்கிய மானமும்—மாணா உவகையும் - அளவிறந்தவுவகையும்—இறைக்கு ஏதம் - அரசனுக்குக் குற்றம். எ - று.

மாட்சியான மானத்தினீக்குதற்கு மாண்பிறந்த மானமென்றார்: அஃதாவது "அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாயென்றிவ*" ரை வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தே விடுதலும் முதலாயின. அளவிறந்தவுவகையாவது கழிகண்ணோட்டம். பிறருஞ் சினனேகாமங் கழிகண்ணோட்ட மென்றிவற்றை யறந்தெரி திகிரிக்கு வழியடையாகுந் தீதென்றார்†. இவையிரண்டு பாட்டானுங் குற்றங்களாவன இவையென்பது கூறப்பட்டது. (௨)

௪௩௩. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். ௩.

இ - ள். பழி நாணுவார் - பழியை யஞ்சுவார்,—தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் - தங்கட்டினையளவாங் குற்றம் வந்ததாயினும் அதனை அவ்வளவாகவன்றிப் பனையினளவாகக் கொள்வர். எ - று.

குற்றம் சாதிப்பெயர். தமக்கேலாமையிற் சிறிதென்றுபொறார் பெரிதாகக் கொண்டு வருந்திப் பின்னும் அது வாராமற் காப்பரென்பதாம். (௩)

௪௩௪. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தரூஉம் பகை. ௪.

இ - ள். அற்றம் தரூஉம் பகை குற்றமே - தனக்கிறுதி பயக்கும் பகை குற்றமே,—குற்றமே பொருளாகக் காக்க - ஆகலான், அக்குற்றம் தன்கண் வாராமையே பயனாகக் கொண்டு காக்கவேண்டும். எ - று.

இவைபற்றியல்லது பகைவர் அற்றந்தாராமையின் இவையே பகையாவனவென்னும் வடநூலார் மதம் பற்றிக் குற்றமேயற்றந்தரூஉம் பகையென்றும், இவற்றதின்

* புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்படலம், ௩௩. † பதிற்றுப்பத்து, ௨௨.

மையே குணங்களாதண்மை யாகக்கொண்டென்பார் பொருளாகவென்றுங் கூறினார். குற்றமே காக்கவென்பது "அரும்பண்பினாற் றீமைகாக்க" என்பதுபோல நின்றது. ()

சஙரு. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். ரு.

இ - ள். வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை - குற்றம் வரக்கடவதாகின்ற முற்காலத்திலே அதனைக் காவாத அரசன் வாழ்க்கை—எரிமுன்னர் வைத்தூறுபோலக் கெடும் - அது வந்தால் எரிமுகத்து நின்ற வைக்குவைபோல அழிந்துவிடும். எ - று.

குற்றமென்பது அதிகாரத்தான் வந்தது. முன்னரென்றதனீற்றது பகுதிப்பொருள்விகுதி. வருமென்னும் பெயரெச்சம் முன்னரென்னுங் காலப்பெயர் கொண்டது; அதனாற் காக்கலாங் காலம் பெறப்பட்டது. குற்றஞ் சிறிதாயினும் அதனாற் பெரிய செல்வம் அழிந்தேவிடுமென்பது உவமையாற் பெற்றாம். (ரு)

சஙசு. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு. சு.

இ - ள். தன்குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின் - முன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப் பிறர்குற்றங் காணவல்லனாயின்,—இறைக்கு ஆகும் குற்றம் என் - அரசனுக்கு ஆகக்கடவ குற்றம் யாது! எ - று.

அரசனுக்குத் தன்குற்றங் கடியாவழியே பிறர்குற்றங் கடிதல் குற்றமாவது, கடிந்தவழி முறைசெய்தலாமென்பார், என்குற்ற மாகுமென்றார்: எனவே, தன்குற்றங்கடிந்தவனே முறைசெய்தற் குரியவனென்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் அவற்றது கடிதற்பாடு பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப. (சு)

சஙஎ. செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும். எ.

இ - ள். செயற்பால செய்யாது இவறியான் செல்வம் - பொருளாற் றனக்குச் செய்துகொள்ளப்படுமவற்றைச் செய்துகொள்ளாது அதன்கட் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம்—உயற்பாலதன்றிக் கெடும் - பின் உளதாம்பான்மைத்தன்றி வறிதே கெடும். எ - று.

செயற்பாலவாவன அறம் பொருளின்பங்கள். பொருளாற் பொருள்செய்தலாவது பெருக்குதல்; அது "பொன்னி னாகும் பொருபடை•யப்படை—தன்னி னாகுந் தரணி தரணியிற்—பின்னை யாகும் பெரும்பொரு ளப்பொரு—டுன்னுங் காலைத் துன்னாதன வில்லையே*." என்பதனானறிக. அறஞ்செய்யாமையானும் பொருள் பெருக்காமையானும் உயற்பால தன்றியென்றும், இன்பப்பயன் கொள்ளாமையிற் கெடுமென்றுங் கூறினார். உயற்பாலதின்றியென்று பாடமோதுவாருமுளர். (எ)

சஙஅ. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று. அ.

இ - ள். பற்றுள்ளம் என்னும் இவறன்மை-பொருளை விடத்தகுமிடத்து விடாது பற்றுதலைச் செய்யுமுள்ளமாகிய உலோபத்தினது தன்மை—எற்றுள்ளும் எண்ணப்

* சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், ரு௰.

படுவது ஒன்று அன்று - குற்றத்தன்மைக ளெல்லாவற்றுள்ளும் வைத்தெண்ணப் படுவதொன்றன்று, மிக்கது. எ - று.

இவறலது தன்மையாவது குணங்களெல்லாம் ஒருங்குளவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்துத் தான் மேற்பட வல்லவியல்பு. ஒழிந்தன அதுமாட்டாமையின், எற்றுள்ளுமெண்ணப்படுவதொன்றன்றென்றார். எவற்றுள்ளுமென்பது இடைக்குறைந்து நின்றது. இவையிரண்டுபாட்டானும் உலோபத்தின்றீமை கூறப்பட்டது. (அ)

சஙகூ. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. கூ.

இ - ள். எஞ்ஞான்றும் தன்னை வியவற்க - தான் இறப்பவுயர்ந்த ஞான்றும் மதத்தாற் றன்னை நன்குமதியாதொழிக;—நன்றி பயவா வினை நயவற்க - தனக்கு நன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாதொழிக. எ - று.

தன்னை வியந்தழி இடமுங் காலமும் வலியும் அறியப்படாமையானும், அறனும் பொருளும் இகழப்படுதலானும், எஞ்ஞான்றும் வியவற்கவென்றும், கருதியது முடித்தே விடுவலென்று அறம்பொருளின்பங்கள் பயவா வினைகளை நயப்பின் அவற்றாற் பாவமும் பழியுங் கேடும் வருமாகலின், அவற்றை நயவற்கவென்றுங்கூறினார். இதனான் மதமானங்களின்றீமை கூறப்பட்டது. (கூ)

சசO. காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல். கO.

இ - ள். காதல காதல் அறியாமை உய்க்கிற்பின் - தான் காதலித்த பொருள்களை அவர் அக்காதலறியாமல் அனுபவிக்க வல்லனாயின்,—ஏதிலார் நூல் ஏதில - பகைவர் தன்னை வஞ்சித்தற்கெண்ணுமெண்ணம் பழுதாம். எ - று.

அறிந்தவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாமலுய்த்தால் வாயிலின்மையின் வஞ்சிக்கப்படா னென்பதாம். காமம், வெகுளி, உவகையென்பன முற்றக்கடியுங் குற்றமன்மையின், இதனாற் பெரும்பான்மைத்தாகிய காமநுகருமாறுகூறி, ஏனைச்சிறுபான்மையவற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிந்தார். (கO)

சரு ம் அதி.—பெரியாரைத்துணைக்கோடல்.

அஃதாவது மூவிருகுற்றமும் முறைமையிற் கடிதலிற் காவற்சாகாடுகைத்தற்குரியனாய அரசன் தீநெறிவிலக்கி நன்னெறிச்செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக்கோடல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும். பேரறிவுடையராவார் அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத்தெய்வக் குற்றங்கள்வாராமற் காத்தற்குரிய அமைச்சர், புரோகிதர்.

சசக. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். க.

இ - ள். அறன் அறிந்து மூத்த் அறிவுடையார் கேண்மை - அறத்தினது நுண்மையையறிந்து தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை—தேர்ந்து திறன் அறிந்து கொளல்-அரசன் அதனதருமையை யோர்ந்து, கொள்ளுந் திறமறிந்துகொள்க. எ-று.

௪௫-ம் அதி.—பெரியாரைத்துணைக்கோடல்.

அறநுண்மை நூலானேயன்றி உய்த்துணர்வானும் அறியவேண்டுதலின், அறனறிந்தென்றார். மூத்தல் அறிவானும், சீலத்தானும், காலத்தானும் முதிர்தல். அறிவுடையார் நீதியையும் உலகியலையுமறிதலையுடையார். திறனறிதலாவது நன்குமதித்தல், உயரச்செய்தல், அவர்வரைநிற்றலென்பன முதலாக அவர் பிணிப்புண்ணுந் திறனறிந்து செய்தல். (௧)

௪௪௨. உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். ௨.

இ-ள். உற்ற நோய் நீக்கி - தெய்வத்தானாக மக்களானாகத் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறறிந்து நீக்கி—உறாமை முற்காக்கும் பெற்றியார் - பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன்னறிந்து காக்கவல்ல தன்மையினையுடையாரை—பேணிக் கொளல் - அரசன் அவர் உவப்பன செய்து துணையாகக்கொள்க. எ-று.

தெய்வத்தான் வருந் துன்பங்களாவன மழையினதின்மை மிகுதிகளானும், காற்றுத் தீப் பிணியென்றிவற்றானும், வருவன. அவை கடவுளரையுந் தக்கோரையும் நோக்கிச்செய்யுஞ் சாந்திகளானீக்கப்படும். மக்களான்வருந்துன்பங்களாவன பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வாரென்றிவர்களான் வருவன. அவை சாமபேததான தண்டங்களாகிய நால்வகையுபாயத்துள் ஏற்றதனானீக்கப்படும். முற்காத்தலாவது தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களானறிந்து, அச்சாந்திகளாற்காத்தலும்; மக்களான் வருவனவற்றை அவர்குணம், இங்கிதம், ஆகாரம், செயலென்பனவற்றானறிந்து அவ்வுபாயங்களுளொன்றாற் காத்தலுமாம்: ஆகவே, புரோகிதரையும் அமைச்சரையுங் கூறியவாறாயிற்று. இங்கிதம் குறிப்பாணிகழும் உறுப்பின்றொழில். ஆகாரம் குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன நன்குமதித்தன் முதலியன. இவையிரண்டுபாட்டானும் பெரியாரதிலக்கணமும், அவரைத் துணையாகக் கோடல் வேண்டுமென்பதூஉம், கொள்ளுமாறுங் கூறப்பட்டன. (௨)

௪௪௩. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். ௩.

இ-ள். பெரியாரைப் பேணித் தமராக் கொளல் - அப்பெரியவர்களை அவர் உவப்பனவறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக்கொள்ளுதல்—அரியவற்றுள் எல்லாம் அரிது - அரசர்க்கு அரிய பேறுகளெல்லாவற்றுள்ளும் அரிது. எ-று.

உலகத்தரியனவெல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பேறு சிறந்ததென்றது, இதனால் அவையெல்லாம் உளவாதனோக்கி. (௩)

௪௪௪. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. ௪.

இ-ள். தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் - அறிவு முதலியவற்றால் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர்வழி நின்றொழுகுதல்—வன்மையுள் எல்லாம் தலை - அரசர்க்கு எல்லாவலியுடைமையினுந்தலை. எ-று.

பொருள், படை, அரண்களாகிய வலியினும் இத்துணைவலிசிறந்ததென்றது, இவர் அவற்றானீக்கப்படாத தெய்வத்துன்பமுதலியனவும் நீக்குதற்கு உரியராகலின்,

௪௪௫. சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். ௫.

இ - ள். சூழ்வார் கண்ணாக ஒழுகலால் - தன்பாரம் அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு நடத்தலான்,—மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் - அரசன் அத்தன்மையராய அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்க. எ - று.

இரண்டாவது விகாரத்தாற்றொக்கது. தானே சூழ வல்லனாயினும் அளவிறந்த தொழில்களான் ஆகுலமெய்துமரசன்பாரம் அதுவே தொழிலாய அமைச்சரானல்லது இனிது நடவாமைபற்றி, அவரைக் கண்ணாகக் கூறினார். ஆராய்தல் அமைச்சியலுட் சொல்லப்படும் இலக்கணத்தின ரென்பதனை யாராய்தல். இவை மூன்றுபாட்டானும் பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்புக் கூறப்பட்டது. (ரு)

சசசு. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். சு.

இ - ள். தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானை - தக்காராகிய வினத்தையுடையனாய்த் தானுமறிந்தொழுகவல்லவரசனை—செற்றார் செயக் கிடந்தது இல் - பகைவர் செய்யக் கிடந்ததொரு துன்பமுமில்லை. எ - று.

தக்கார் அறிவொழுக்கங்களாற்றகுதியுடையார். ஒழுகுதல் அறநீதிகளின் நெறி வழுவாமனடத்தல். வஞ்சித்தல், கூடினரைப்பிரித்தல், வேறுபகை விளைத்தலென்றி வற்றானும், வலியானும், பகைவர் செய்யுந் துன்பங்கள் பலதிறத்தவாயினும், தானுமறிந்து அறிவார்சொல்லுங் கொண்டொழுகுவான்கண் அவற்றுளொன்றும் வாராதென்பார், செற்றார் செயக்கிடந்ததில்லென்றார். (சு)

சசஎ. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். எ.

இ - ள். இடிக்கும் துணையாரை ஆள்வாரை - தீயன கண்டால் நெருங்கிச் சொல்லுந் துணையாந்தன்மையையுடையாரை இவர் நமக்குச் சிறந்தாரென்றாளுமரசரை—கெடுக்கும் தகைமையவர் யார் - கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்தியாவர்? எ - று.

தீயன பாவங்களும் நீதியல்லனவும். துணையாந்தன்மையாவது தமக்கு அவையின்மையும் அரசன்கணன்புடைமையுமாம். அத்தன்மையுடையார் நெறியினீங்கவிடாமையின், அவரையாளுமரசர் ஒருவரானுங் கெடுக்கப்படாரென்பதாம். நெருங்கிச் சொல்லுமளவினோரையென் றுரைப்பாருமுளர். இவையிரண்டு பாட்டானும் அதன் பயன் கூறப்பட்டது. (எ)

சசஅ. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். அ.

இ - ள். இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் - கழறுதற்குரியாரைத் தனக்குத் துணையாகக்கொள்ளாமையிற் காவலற்ற அரசன்—கெடுப்பார் இலானும் கெடும் - பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும். எ - று.

இல்லாத ஏமராவென்பன பெயரெச்சவடுக்கு. கெடுப்பார் உளராவரென்பது தோன்ற, இலானுமென்றார். தானே கெடுதலாவது பாகனில்லாத யானைபோல நெறியல்லாநெறிச் சென்று கெடுதல். (அ)

சசகூ. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை. கூ.

இ - ள். முதல் இலார்க்கு ஊதியம் இல்லை-முதற்பொருளில்லாத வணிகர்க்கு அதனால் வருமூதியமில்லையாம்;—மதலையாம் சார்பு இலார்க்கு நிலை இல்லை - அதுபோலத் தம்மைத் தாங்குவதாந் துணையில்லாத அரசர்க்கு அதனான் வரும் நிலையில்லை. எ - று.

முதலைப்பெற்றே இலாபம் பெறவேண்டுமாறுபோலத் தாங்குவாரைப் பெற்றே நிலைபெறவேண்டுமென்பதாம். நிலை அரசர் பாரத்தோடு சலியாதுநிற்றல். (கூ)

சரு0. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். க0.

இ - ள். பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்து - தான்றனியனாய் வைத்துப் பலரோடும் பகைகொள்ளுதலிற் பதிற்று மடங்கு தீமையுடைத்து—நல்லார் தொடர் கைவிடல் - அரசன் பெரியாரோடு நட்பினைக் கொள்ளாதொழிதல். எ - று.

பலர் பகையாயக்கால் "மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்—பேதுசெய்து பிளந்திடல்*" என்பவை யல்லது ஒருங்கு வினையாக்குறித்துச் செய்தாலும் ஒருவாற்றானுய்தல்கூடும், நல்லார் தொடர்கைவிட்டால் ஒருவாற்றானுமுய்தல் கூடாமையின், இது செய்தல் அதனினுந் தீதென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அது செய்யாதவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது. (க0)

சகூ ம் அதி.—சிற்றினஞ்சேராமை.

அஃதாவது சிறியவினத்தைப் பொருந்தாமை. சிறியவினமாவது "நல்லதனலனும் தீயதன்றீமையுமில்லென்போரும்†" விடரும் தூர்த்தரும் நடருமுள்ளிட்ட குழு. அறிவைத் திரித்து இருமையுங் கெடுக்குமியல்பிற்றாய அதனைப் பொருந்திற் பெரியாரைத் துணைக்கோடல் பயனின்றென்ப துணர்த்தற்கு இஃததன்பின் வைக்கப்பட்டது.

சருக. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். க.

இ - ள். பெருமை சிற்றினம் அஞ்சும் - பெரியோரியல்பு சிறியவினத்தையஞ்சா நிற்கும்;—சிறுமை தான் சுற்றமாச் சூழ்ந்து விடும் - ஏனைச்சிறியோரியல்பு அது சேர்ந்தபொழுதே அதனைத்தனக்குச் சுற்றமாகவெண்ணித் துணியும். எ - று.

தத்தமறிவு திரியுமாறும் அதனாற்றமக்கு வருந் துன்பமும் நோக்கலின் அறிவுடையாரஞ்சுவரென்றும், அறிவொற்றுமையாற் பிறிது நோக்காமையின் அறிவிலாதார் தமக்குச் சுற்றமாகத் துணிவரென்றுங் கூறினர். பொருளின்றொழில்கள் பண்பின்மேனின்றன. இதனாற் சிறியவினம் பெரியோர்க்காகாதென்பது கூறப்பட்டது. (க)

சருஉ. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு. உ.

* நீதியா லறுத் தந்நிதி யீட்டுதே—லாதி யாய வரும்பகை நாட்டுதன்—மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்—பேது செய்து பிளந்திடல் பெட்டதே—சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், ருஉ.

† புறநானூறு, உகூ.

இ - ள். நிலத்து இயல்பான் நீர் திரிந்து அற்றாகும் - தான் சேர்ந்த நிலத்தின தியல்பானே நீர் தன்றன்மை திரிந்து அந்நிலத்தின்றன்மைத்தாம்;--மாந்தர்க்கு இனத் தியல்பு அறிவு (திரிந்து) அதாகும் - அதுபோல மாந்தர்க்குத் தாஞ்சேர்ந்த இனத்தின தியல்பானே அறிவுந் தன்றன்மை திரிந்து அவ்வினத்தின்றன்மைத்தாம். எ - று.

எடுத்துக்காட்டுவமை. விசும்பின்கட்டன்றன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்த வழி, நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போலத் தனிநிலைக்கட்டன்றன்மைத் தாயவறிவு பிறவினத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியுமென இதனால் அதனது காரணங் கூறப்பட்டது. (உ)

சஙுங. மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்னா னெனப்படுஞ் சொல். ங.

இ - ள். மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம் - மாந்தர்க்குப் பொதுவுணர்வு தம் மனங்காரணமாகவுண்டாம்;—இன்னான் எனப்படும் சொல் இனத்தான் ஆம் - இவன் இத்தன்மையனென்று உலகத்தாராற் சொல்லப்படும் சொல் இனங்காரணமாக வுண்டாம். எ - று.

இயற்கையாய புலனுணர்வுமாத்திரத்திற்கு இனம் வேண்டாமையின் அதனை மனத்தானாமென்றும், செயற்கையாய விசேடவுணர்வுபற்றி நல்லனென்றாகத் தீய னென்றாக நிகழுஞ்சொற்கு இனம் வேண்டுதலின் அதனை இனத்தானாமென்றுங் கூறினார். உவமையளவை கொள்ளாது அத்திரிபும் மனத்தானாமென்பாரை நோக்கி இதனான் அது மறுத்துக் கூறப்பட்டது. (ங)

சஙுச. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு. ச.

இ - ள். அறிவு-அவ்விசேடவுணர்வு—ஒருவற்கு மனத்து உளதுபோலக் காட்டி-ஒருவற்கு மனத்தின்கண்ணேயுளதாவதுபோலத் தன்னைப் புலப்படுத்தி—இனத்து உளதாகும் - அவன் சேர்ந்தவினத்தின்கண்ணேயுளதாம். எ - று.

மெய்ம்மை நோக்காமுன் மனத்துளதுபோன்று காட்டியும் பின்னோக்கியவழிப் பயின்றவினத்துளதாயுமிருத்தலின், காட்டியென இறந்தகாலத்தாற் கூறினார். விசே டவுணர்வுதானும் மனத்தின்கண்ணே அன்றேயுளதாவதென்பாரை நோக்கி, ஆண்டுப் புலப்படுந் துணையேயுள்ளது அதற்குமூலம் இனமென்பது இதனாற் கூறப்பட்டது.(ச)

சஙுரு. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும். ரு.

இ - ள். மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் - அவ்விசேடவுணர்வு புலப்படுதற்கிடனாய மனந்தூயனாதற்றன்மையும் செய்யும்வினை தூயனாதற்றன்மையு மாகிய விரண்டும்—இனம் தூய்மை தூவா வரும் - ஒருவற்கு இனந்தூயனாதற்றன்மை பற்றுக்கோடாக உளவாம். எ - று.

மனந்தூயனாதலாவது விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமை யினீங்குதல். செய்வினை தூயனாதலாவது மொழிமெய்களாற்செய்யும் நல்வினையுடைய னாதல். தூவென்பது அப்பொருட்டாதல் "தூவறத் துறந்தாரை*" என்பதனானு

* கலித்தொகை, நெய்தற்கலி, க.

மறிக. ஒருவன் இனந்தூயனாகவே அதனோடு பயிற்சிவயத்தான் மனந்தூயனாய் அதன்கண் விசேடவுணர்வு புலப்பட்டு அதனாற்சொல்லுஞ் செயலுந்தூயனாமென, இதனால் இனத்துள்ளவாமாறு கூறப்பட்டது. (௫)

௪௫௬. மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை. ௬.

இ - ள். மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும் - மனந்தூயராயினார்க்கு மக்கட்பேறு நன்றாகும்;—இனம் தூயார்க்கு நன்று ஆகா வினை இல்லை - இனந்தூயராயினார்க்கு நன்றாகாத வினை யாதுமில்லை. எ - று.

காரியங் காரணத்தின் வேறுபடாமையின் எச்சநன்றாகுமென்றும், நல்லினத்தோடெண்ணிச் செய்யப்படுதலின் எல்லாவினையு நல்லவாமென்றுங் கூறினார். (௬)

௪௫௭. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும். ௭.

இ - ள். மன் உயிர்க்கு மனநலம் ஆக்கம் (தரும்) - நிலைபெற்றவுயிர்கட்கு மனத்தது நன்மை செல்வத்தைக் கொடுக்கும்;—இனநலம் எல்லாப் புகழும் தரும் - இனத்தது நன்மை அதனோடு எல்லாப்புகழையுங்கொடுக்கும். எ - று.

மன்னுயிரென்றது ஈண்டு உயர்திணைமேனின்றது. தருமென்னும் இடவழுவமைதிச்சொல் முன்னுங்கூட்டப்பட்டது. உம்மை இறந்ததுதழீஇயவெச்சவும்மை. மனநன்றாதற்னே அறமாகலின் அதனை ஆக்கந்தருமென்றும், புகழ் கொடுத்தற்குரிய நல்லோர்தாமே இனமாகலின் இனநலமெல்லாப்புகழுந்தருமென்றுங்கூறினார். மேல் மனநன்மை இனநன்மைபற்றிவருமென்பதனை உட்கொண்டு அஃதியல்பாகவேயுடையார்க்கு அவ்வினநன்மை வேண்டாவென்பாரை நோக்கி, அதுவேயன்றி அத்தன்மைய பலவற்றையுந் தருமென அவர்க்கும் அதுவேண்டுமென்பது இவ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது. (௭)

௪௫௮. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து. ௮.

இ - ள். மனநலம் நன்கு உடையராயினும் - மன நன்மையை முன்னை நல்வினையாற்றாமேயுடையராயினும்,—சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து - அமைந்தார்க்கு இனநன்மை அதற்கு வலியாதலையுடைத்து. எ - று.

நன்காலென்னும் மூன்றனுருபு விகாரத்தாற்றொக்கது. அந்நல்வினையுள்வழியும் மனநலத்தை வளர்த்துவருதலின், அதற்கேமாப்புடைத்தாயிற்று. (௮)

௪௫௯. மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து. ௯.

இ - ள். மனநலத்தின் மறுமை ஆகும் - ஒருவற்கு மனநன்மையானே மறுமையின்பமுண்டாம்;—மற்றஃதும் இனநலத்தின் ஏமாப்பு உடைத்து-அதற்கு அச்சிறப்புத்தானும் இனநன்மையான் வலிபெறுதலையுடைத்து. எ - று.

மனநலத்தினாகு மறுமையென்றது மறுமை பயப்பது மனநன்மைதானே பிறிதொன்றன்றென்னும் மதத்தையுடம்பட்டுக் கூறியவாறு. மற்று வினைமாற்று. உம்மை

இறந்ததுதழீஇயவெச்சவும்மை. ஒரோவழித் தாமதகுணத்தான் மனநலந்திரியினும் நல்வினம் ஒப்பநிறுத்தி மறுமைபயப்பிக்குமென நிலைபெறச்செய்யுமாறு கூறப்பட்டது. இவையிரண்டுபாட்டானுஞ் சிற்றினஞ்சேராமையது சிறப்பு நல்லினஞ்சேர்தலாகிய எதிர்மறைமுகத்தாற் கூறியவாறறிக. (௯)

சசுO. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில். கO.

இ - ள். நல்லினத்தின் ஊங்கு துணையும் இல்லை - ஒருவற்கு நல்லினத்தின் மிக்க துணையுமில்லை;—தீயினத்தின் (ஊங்கு) அல்லற்படுப்பதூஉம் இல் - தீயவினத்தின் மிக்க பகையுமில்லை. எ - று.

ஐந்தனுருபுகள் உறழ்பொருவின்கண்வந்தன. ஊங்கென்பது பின்னுங்கூட்டி உம்மை மாற்றியுரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமையினீக்கித் துயருறாமற் காத்தலின் அதனைத் துணையென்றும், தீயினம் அறிவினீக்கித் துயருறுவித்தலின் அதனைப் பகையென்றுங் கூறினர். அல்லற்படுப்பதென்பது ஏதுப்பெயர். இதனால் விதியெதிர்மறைகள் உடன் கூறப்பட்டன. (கO)

சஎம் அதி.—தெரிந்துசெயல்வகை.

அஃதாவது அரசன் தான்செய்யும் வினைகளையாராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத்துணைக்கோடல் பயனுடைத்தாயவழி அவரோடுஞ் செய்யப்படுவதாகலின், இது சிற்றினஞ்சேராமையின்பின் வைக்கப்பட்டது.

சசுக. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல். க.

இ - ள். அழிவதூஉம் - வினைசெய்யுங்கால் அப்பொழுது அதனாலழிவதனையும்—ஆவதூஉம் - அழிந்தாற்பின்னாவதனையும்—ஆகி வழி பயக்கும் ஊதியமும் - ஆய்நின்று பிற்பொழுது தருமூதியத்தையும்—சூழ்ந்து செயல் - சீர்தூக்கி உறுவதாயிற் செய்க. எ - று.

உறுவதாவது நிகழ்வின்கண் அழிவதனில் ஆவது மிக்கு எதிர்வினும் அது வளர்ந்து வருதல். அழிவதின்மையின், எதிர்வின்கண் வருமாக்கத்தை ஊதியமென்றார்: எனவே அவ்வூதியம் பெறின் நிகழ்வின்கண் அழிவதும் ஆவதுந் தம்முளொத்தாலும் ஒழிதற்பாற்றன்றென்பது பெற்றாம். இரண்டுகாலத்தும் பயனுடைமை தெரிந்து செய்கவென்பதாம். (க)

சசுஉ. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில். உ.

இ - ள். தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு - தாந் தெரிந்துகொண்ட இனத்துடனே செய்யத்தகும் வினையை ஆராய்ந்து பின் தாமேயுமெண்ணிச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு—அரும்பொருள் யாதொன்றும் இல்-எய்துதற்கரிய பொருள் யாதொன்றுமில்லை. எ - று.

ஆராயப்படுவனவெல்லாம் ஆராய்ந்துபோந்த இனமென்றுமாம். செய்வார்க்கென்றதனால், வினையென்னுஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. வினையாவது

மேற்சேறன்முதல் வேறலிருய தொழில். பொருள்கட்கேதுவாய அதனிற்றவருமை யின், அரியபொருள்களெல்லாம் எளிதினெய்துவரென்பதாம். இவையிரண்டுபாட்டா னுஞ் செய்யத்தகும் வினையும் அது செய்யுமாறும் கூறப்பட்டன. (உ)

சகூந. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார். ௩.

இ - ள். ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை - மேலெய்தக்கடவவூதியத் தினை நோக்கி முன்னெய்திநின்ற முதறன்னையும் இழத்தற்கேதுவாய செய்வினையை— அறிவுடையார் ஊக்கார் - அறிவுடையார் மேற்கொள்ளார். எ - று.

கருதியென்னும் வினையெச்சம் இழக்குமென்னும் பெயரெச்சவினைகொண்டது. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. ஆக்கமேயன்றி முதலையுமிழக்கும் வினைகளாவன வலியுங் காலமும் இடனுமறியாது பிறர்மண் கொள்வான்சென்று தம்மண்ணுமிழத்தல் போல்வன. முன்செய்துபோந்த வினையாயினுமென்பார், செய்வினையென்றார். (௩)

சகூச. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர். ௪.

இ - ள். தெளிவு இலதனைத் தொடங்கார் - இனத்தோடுந் தனித்தும் ஆராய்ந்து துணிதலில்லாத வினையைத் தொடங்கார்—இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் - தமக்கு இளிவரவென்னுங் குற்றமுண்டாதலை அஞ்சுவார். எ - று.

தொடங்கின் இடையின் மடங்கலாகாமையின், தொடங்காரென்றார். இளிவரவு அவ்வினையாற் பின்னழிவெய்தியவழி அதன் மேலும் அறிவும் மானமுமிலரென்று உலகத்தாரிகழுமிகழ்ச்சி. அஃதுண்டாதல் ஒருதலையாகலின், தெளிவுள்வழித் தொடங் குக வென்பதாம். (௪)

சகூரு. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. ரு.

இ - ள். வகை அறச் சூழாது எழுதல் - சென்றால் நிகழுந்திறங்களையெல்லாம் முற்றவெண்ணாது சிலவெண்ணிய துணையானே அரசன் பகைவர்மேற்செல்லுதல்— பகைவரைப் பாத்திப்படுப்பது ஓராறு - அவரை வளருநிலத்திலே நிலைபெறச் செய்வ தொரு நெறியாம். எ - று.

அத்திறங்களாவன வலி, காலம், இடனென்றிவற்றால் தனக்கும் பகைவர்க்கு முளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வருமிடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும், அதனாற் பெறும் பயனும் முதலாயின. அவற் றுட் சிலவெஞ்சினும் பகைவர்க்கு இடனுமாகலான், முற்றுப்பெறவெண்ணவேண்டு மென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஒழியத்தகும் வினையும் ஒழியாவழிப்படு மிழுக்குங் கூறப்பட்டன. (ரு)

சகூசு. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். சு.

இ - ள். செய்தக்க அல்ல செயக் கெடும் - அரசன் தன்வினைகளுட் செய்யத்தக் கனவல்லவற்றைச் செய்தலாற்கெடும்,—செய்தக்க செய்யாமையானும் கெடும் - இனி அதனானேயன்றிச் செய்யத்தக்கனவற்றைச் செய்யாமை தன்னானுங்கெடும். எ - று.

செய்யத்தக்கனவல்லவாவன பெரிய முயற்சியினவும், செய்தாற்பயனில்லனவும், அது சிறிதாயினவும், ஐயமாயினவும், பின்றுயர்விளைப்பனவுமெனவிவை. செய்யத் தக்கனவாவன அவற்றின் மறுதலையாயின. இச்செய்தல் செய்யாமைகளான் அறிவு ஆண்மை பெருமையென்னும் மூவகையாற்றலுட் பொருள் படையென இருவகைத் தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனுமாகலான், இரண்டுங் கேட்டிற்கேது வாயின. இதனாற் செய்வன செய்து ஒழிவனவொழிகவென இருவகையனவும் உடன் கூறப்பட்டன. (சு)

சசுஎ. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு. எ.

இ - ள். கருமம் எண்ணித் துணிக - செய்யத்தக்க கருமமும் முடிக்குமுபாயத்தை யெண்ணித் தொடங்குக,—துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு - தொடங்கி வைத்துப் பின்னெண்ணக் கடவேமென்றொழிதல் குற்றமாதலான். எ - று.

துணிவுபற்றி நிகழ்தலின், துணிவெனப்பட்டது. சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. உபாயமென்பது அவாய்நிலையான் வந்தது. அது கொடுத்தல், இன்சொற் சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தலென நால்வகைப்படும். இவற்றை வடநூலார் தான சாம பேத தண்டமென்ப. அவற்றுண் முன்னையவிரண்டும் ஐவகைய. ஏனைய மூவகைய; அவ்வகைகளெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும்*. இவ்வுபாயமெல்லா மெண்ணாது தொடங்கின் அவ்வினை மாற்றானால் விலக்கப்பட்டு முடியாமையானும், இடையினொழிதலாகாமையானும், அரசன்றுயருறுதலின், அவ்வெண்ணாமையை இழுக் கென்றார். செய்வனவற்றையும் உபாயமறிந்தே தொடங்குகவென்பதாம். (எ)

சசுஅ. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். அ.

இ - ள். ஆற்றின் வருந்தா வருத்தம் - முடியுமுபாயத்தாற் கருமத்தை முயலாத முயற்சி—பலர் நின்று போற்றினும் பொத்துப்படும் - துணைவர்பலர் நின்று புரை படாமற் காப்பினும் புரையபடும். எ - று.

முடியுமுபாயத்தான் முயறலாவது கொடுத்தலைப் பொருணசையாளன்கண்ணும்; இன்சொல்லைச் செப்பமுடையான், மடியாளன், முன்னே பிறரோடு பொருது நொந் தவனென இவர்கண்ணும்; வேறுபடுத்தலைத் துணைப்படையாளன், தன் பகுதியோடு பொருந்தாதானென இவர்கண்ணும்; ஒறுத்தலை இவற்றின் வாராதவழி இவர்கண்ணுந் தேறப்படாத கீழ்மக்கள்கண்ணுஞ் செய்து, வெல்லுமாற்றான் முயறல். புரைபடுதல் கருதிய நன்மையன்றிக் கருதாத தீமைபயத்தல். உபாயத்தது சிறப்புக் கூறியவாறு.()

சசுகூ. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. கூ.

இ - ள். நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு - வேற்றுவேந்தர்மாட்டு நன்றான வுபாயஞ்செய்தற்கண்ணுங் குற்றமுண்டாம்,—அவரவர் பண்பு அறிந்து ஆற்றாக்கடை - அவரவர் குணங்களையாராய்ந்தறிந்து அவற்றிற்கியையச் செய்யாவிடின். எ - று.

---

* அரும்பொருள் கொடுத்தல், தரும்பொருள்பெறாது விடுதல், கொடுக்கும் பொருள் கொடுத்தல், பிறன்பொருள்கொண்டு கொடுத்தல், இறையொழிதல் எனக்கொடுத்தல் ஐந்து; வணங்கல், புகழ்தல், எதிர்கோடல், நட்புக்கூறல், உறவுகூறல் என இன்சொற் சொல்லல் ஐந்து; நட்பொழிதல், கூடினரைப்பிரித்தல், வேறுபகை விளைத்தல் என வேறுபடுத்தல் மூன்று; துன்பஞ்செய்தல், பொருள்கோடல், கோறல் என ஒறுத்தல் மூன்று.

நன்றானவுபாயமாவது கொடுத்தலும் இன்சொற்சொல்லுதலுமாம். அவை யாவர் கண்ணும் இனியவாதற்சிறப்புடைமையின், உம்மை சிறப்பும்மை. அவற்றை அவரவர் பண்பறிந்தாற்றுமையாவது அவற்றிற்கு உரியரல்லாதார்கண்ணே செய்தல். தவறு அவ்வினை முடியாமை. (கூ)

சஎ0. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு. க0.

இ - ள். தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளாது - அரசர் வினைமுடித்தற் பொருட்டுத் தந்நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வராயின் உலகந் தம்மையிகழாநிற்கும்;—எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் - ஆகலான் அஃது இகழா வுபாயங்களை நாடிச் செய்க. எ - று.

தம்மென்பது ஆகுபெயர். தந்நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியராய்வைத்து மெலியார்க்குரிய கொடுத்தன்முதலிய மூன்றனைச் செய்தலும், மெலியராய்வைத்து வலியார்க்குரிய ஒறுத்தலைச்செய்தலுமாம். இவையிரண்டும் அறிவிலார் செய்வனவாகலின், உலகங்கொள்ளாதென்றார். அஃதெள்ளாதன செய்தலாவது அவற்றைத் தத்தம் வன்மை மென்மைகட்கேற்பச் செய்தல். மேல் இடவகையானுரிமை கூறிய உபாயங்கட்கு வினைமுதல்வகையான் உரிமை கூறியவாறு. இவை நான்குபாட்டானுஞ் செய்வனவற்றிற்கு உபாயமும் அதனதுரிமையுங் கூறப்பட்டன. (க0)

சஅ ம் அதி.—வலியறிதல்.

அஃதாவது அவ்வுபாயங்களுள் ஒறுத்தல் குறித்தவரசன் நால்வகை வலியையும் அளந்தறிதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

சஎக. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல். க.

இ - ள். வினை வலியும் - தான்செய்யக்கருதிய வினைவலியையும்—தன்வலியும் - அதனைச் செய்து முடிக்குந் தன்வலியையும்—மாற்றான் வலியும் - அதனை விலக்கலுறும் மாற்றான்வலியையும்—துணை வலியும் - இருவர்க்குந் துணையாவார் வலியையும்—தூக்கிச் செயல் - சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச்செய்க. எ - று.

இந்நால்வகை வலியுள் வினைவலி அரண்முற்றலும் கோடலும் முதலிய தொழிலானும், ஏனைய மூவகையாற்றலானுங் கூறுபடுத்துத் தூக்கப்படும். தன்வலி மிகவின்கட் செய்கவென்ற விதியால், தோற்றல் ஒருதலையாய குறைவின்கண்ணும், வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிகவென்பது பெற்றாம். (க)

சஎஉ. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். உ.

இ - ள். ஒல்வது அறிவது அறிந்து - தமக்கியலும் வினையையும் அதற்கறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து—அதன்கண் தங்கிச் செல்வார்க்கு - எப்பொழுதும் மனமொழிமெய்களை அதன்கண்வைத்துப் பகைமேற்செல்லும் அரசர்க்கு—செல்லாதது இல் - முடியாதபொருளில்லை. எ - று.

ஒல்வதெனவே வினைவலி முதலாய மூன்றுமடங்குதலின், ஈண்டறிவதென்றது துணைவலியேயாயிற்று. எல்லாப்பொருளுமெய்துவரென்பதாம். இவையிரண்டுபாட்டானும் வலியின்பகுதியும் அஃதறிந்து மேற்செல்வாரெய்தும் பயனும் கூறப்பட்டன.

சஎங. உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர். ங.

இ - ள். உடைத் தம் வலி அறியார் - கருத்தாவாதலையுடைய தம்வலியினளவறியாதே—ஊக்கத்தின் ஊக்கி - மனவெழுச்சியாற்றம்மின்வலியாரோடு வினைசெய்தலைத் தொடங்கி—இடைக்கண் முரிந்தார் பலர் - அவர் அடர்த்தலான் அது செய்து முடிக்கப்பெறாது இடையே கெட்டவரசர் உலகத்துப் பலர். எ - று.

உடையவென்பது அவாய்நின்றமையின், செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மூவகையாற்றலுள்ளுஞ் சிறப்புடைய அறிவுடையார் சிலராதலின், முரிந்தார் பலரென்றார். அதனால் தம்வலியறிந்தே தொடங்குகவென்பது எஞ்சிநின்றது. (ங)

சஎச. அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும். ச.

இ - ள். ஆங்கு அமைந்து ஒழுகான் - அயல்வேந்தரோடு பொருந்தியொழுகுவதுஞ் செய்யாது—அளவு அறியான் - தன் வலியளவறிவதுஞ்செய்யாது—தன்னை வியந்தான் - தன்னை வியந்து அவரோடு பகைத்தவரசன்—விரைந்து கெடும் - விரையக்கெடும். எ - று.

காரியத்தைக் காரணமாக உபசரித்து, வியந்தானென்றார். விரையவென்பது திரிந்து நின்றது. நட்பாயொழுகுதல், வலியறிந்து பகைத்தலென்னுமிரண்டனுள் ஒன்றன்றே அயல்வேந்தரோடு செயற்பாலது, இவையன்றித் தான் மெலியனாய் வைத்து அவரோடு பகைகொண்டானுக்கு ஒருபொழுதும் நிலையின்மையின், விரைந்து கெடுமென்றார். இவையிரண்டுபாட்டானுந் தன்வலியறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (ச)

சஎரு. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். ரு.

இ - ள். பீலி பெய் சாகாடும் அச்சு இறும் - பீலியேற்றிய சகடமும் அச்சுமுறியும்,—அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் - அப்பீலியை அது பொறுக்குமளவன்றி மிகுத்தேற்றின். எ - று.

உம்மை சாகாட்டது வலிச்சிறப்பேயன்றிப் பீலியது நொய்மைச்சிறப்புந் தோன்ற நின்றது. இறுமென்னுஞ்சினைவினை முதன்மேனின்றது. எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான்வலியனேயாயினும் அவர் தொக்கவழி வலியழியுமென்னும் பொருடோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னுமலங்காரம்: இதனை நுவலாநுவற்சியென்பாரும் ஒட்டென்பாருமுளர். ஒருவன் தொகுவார்பலரோடு பகைகொள்ளற்கவென்றமையின், இதனான் மாற்றான் வலியும் அவன்றுணை வலியும் அறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (ரு)

சஎசு. நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும். சு.

இ - ள். கொம்பர் நுனி எறிஞர் அஃது இறந்து ஊக்கின் - ஒருமரக்கோட்டினது நுனிக்கண்ணேயேறிநின்றார் தம்மூக்கத்தால் அவ்வளவினைக் கடந்து மேலுமேற ஆச்குவராயின்,—உயிர்க்கு இறுதியாகி விடும் - அவ்வூக்கம் அவருயிர்க்கு இறுதியாய் முடியும். எ - று.

நுனிக்கொம்பரென்பது கடைக்கணென்பதுபோலப் பின்முன்னாகத்தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை. பன்மை அறிவின்மைபற்றி இழித்தற்கண் வந்தது. இறுதிக்கேதுவாவதனை இறுதி யென்றார். பகைமேற்செல்வான்றொடங்கித் தன்னாற் செல்லலாமளவுஞ் சென்று நின்றான் பின் அவ்வளவினில்லாது மனவெழுச்சியான் மேலுஞ் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினைமுடிவிற்கேதுவாகாது அவனுயிர்முடிவிற்கேதுவாமென்னும் பொருடோன்றநின்றமையின், இதுவும் மேலையலங்காரம். அளவறிந்துநிற்றல்வேண்டு மென்றமையின், இதனால் வினைவலியறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (சு)

சஎஎ. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி. எ.

இ - ள். ஆற்றின் அளவு அறிந்து ஈக - ஈயுநெறியானே தமக்குள்ள பொருளினெல்லையையறிந்து அதற்கேற்பவீக;—அது பொருள் போற்றி வழங்கும் நெறி - அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக்கொண்டொழுகும் நெறியாம். எ - று.

ஈயுநெறி மேல் இறைமாட்சியுள் "வகுத்தலும் வல்லதரசு*" என்புழி உரைத்தாம். எல்லைக்கேற்பவீதலாவது ஒன்றனைவெல்லையை நான்குகூறாக்கி, அவற்றுள் இரண்டனைத் தன்செலவாக்கி, ஒன்றனை மேல் இடர்வந்துழி அது நீக்குதற்பொருட்டு வைப்பாக்கி, நின்றவொன்றனையீதல்: பிறரும் "வருவாயுட்கால்வழங்கி வாழ்தல்†" என்றார். பேணிக்கொண்டொழுகுதல் ஒருவரோடு நட்பிலாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக்கொண்டொழுகுதல். முதலிற்செலவு சுருங்கிற் பொருள் ஒருகாலும் நீங்காதென்பதாம். (எ)

சஎஅ. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. அ.

இ - ள். ஆகு ஆறு அளவு இட்டிதாயினும் கேடு இல்லை - அரசர்க்குப் பொருள் வருகின்ற நெறியளவு சிறிதாயிற்றாயினும் அதனாற்கேடில்லையாம்,—போகு ஆறு அகலாக்கடை - போகின்ற நெறியளவு அதனிற்பெருகாதாயின். எ - று.

இட்டிதெனவும் அகலாதெனவும் வந்த பண்பின்றொழில்கள் பொருண்மேனின்றன. பொருளென்பது அதிகாரத்தான் வருவித்து, அளவென்பது பின்னுங்கூட்டியுரைக்கப்பட்டன. முதலுஞ் செலவுந் தம்முளொப்பினுங் கேடில்லையென்பதாம். (அ)

சஎகூ. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும். கூ.

---

* நஅடு-ம் குறளுரையிற்காண்க.

† வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்—செய்தவை நாடாச் சிறப்புடைமை—யெய்தப்—பலநாடி நல்லவை கற்றலிம் மூன்று—நலமாட்சி நல்லவர்கோள்—திரிகடுகம், உக.

இ-ள். அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை - தனக்குள்ள பொருளினெல்லையையறிந்து அதற்கேற்ப வாழமாட்டாதான் வாழ்க்கைகள்—உளபோல இல்லாகித் தோன்றாக்கெடும் - உள்ளன போலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமுமின்றிக் கெட்டுவிடும். எ - று.

அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது அதனிற் சுருக்கக் கூடாதாயின் ஒப்பவாயினும் ஈத்துந் துய்த்தும் வாழ்தல். தொடக்கத்திற் கேடு வெளிப்படாமையின், உளபோலத் தோன்றியென்றார். முதலிற்செலவு மிக்கால் வருமேதங் கூறியவாறு. (கூ)

சஅ0. உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். க0.

இ-ள். உள வரை தூக்காத ஒப்புரவு ஆண்மை - தனக்குள்ளவளவு தூக்காமைக்கேதுவாய ஒப்புரவாண்மையால்—வளவரை வல்லைக் கெடும் - ஒருவன் செல்வத்தினெல்லை விரையக்கெடும். எ - று.

ஒப்புரவேயாயினும் மிகலாகா தென்றமையான், இதுவுமது. இவைநான்குபாட்டானும் மூவகையாற்றலுட் பெருமையின் பகுதியாய பொருள்வலியறிதல் சிறப்பு நோக்கி வகுத்துக்கூறப்பட்டது. (க0)

சகூம் அதி.—காலமறிதல்.

அஃதாவது வலியான் மிகுதியுடையனுய்ப் பகைமேற்சேறலுற்ற அரசன் அச்செலவிற்கேற்ற காலத்தினையறிதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

சஅக. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. க.

இ-ள். கூகையைக் காக்கை பகல் வெல்லும் - தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற்பொழுதின்கண் வெல்லாநிற்கும்,—இகல் வெல்லும் வேந்தர்க்குப் பொழுது வேண்டும் - அதுபோல, பகைவரதிகலை வெல்லக் கருதுமரசர்க்கு அதற்கேற்ற காலம் இன்றியமையாது. எ - று.

எடுத்துக்காட்டுவமை காலமல்லாவழி வலியாற் பயனில்லையென்பது விளக்கி நின்றது. இனிக் காலமாவது வெம்மையுங் குளிர்ச்சியுந் தம்முளொத்து நோய் செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த் தானை வருந்தாது செல்லுமியல்பினதாம். இதனாற் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது. (க)

சஅஉ. பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு. உ.

இ-ள். பருவத்தோடு ஒட்ட ஒழுகல் - அரசன் காலத்தோடு பொருந்த வினைசெய்தொழுகுதல்—திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு - ஒருவர்கண்ணும் நில்லாது நீங்குஞ் செல்வத்தைத் தன்கணீங்காமற் பிணிக்குங்கயிறும். எ - று.

காலத்தோடு பொருந்துதல் காலந்தப்பாமற் செய்தல். தீராமையென்றதனால், தீர்தன்மாலையதென்பது பெற்றாம். வினை வாய்த்து வருதலான், அதனினாகுஞ் செல்வம் எஞ்ஞான்றும் நீங்காதென்பதாம். (உ)

சஅங. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். ங.

இ - ள். அருவினை என்ப உளவோ - அரசராற் செய்தற்கரிய வினைகளென்று சொல்லப்படுவன உளவோ,—கருவியான் காலம் அறிந்து செயின் - அவற்றை முடித்தற்காங்கருவிகளுடனே செய்தற்காங்காலம் அறிந்து செய்வராயின். எ - று.

கருவிகளாவன மூவகையாற்றலும் நால்வகையுபாயங்களுமாம். அவை உளவாய வழியுங் காலம் வேண்டுமென்பதறிவித்தற்கு, கருவியானென்றார். எல்லாவினையும் எளிதின் முடியுமென்பதாம். (ங)

சஅச. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின். ச.

இ - ள். ஞாலம் கருதினுங் கைகூடும் - ஒருவன் ஞாலமுழுதுந் தானே யாளக் கருதினனாயினும் அஃது அவன்கையகத்ததாம்,—காலம் கருதி இடத்தான் செயின் - அதற்குச் செய்யும் வினையைக் காலமறிந்து இடத்தோடு பொருந்தச் செய்வனாயின். எ - று.

இடத்தானென்பதற்கு மேற்கருவியானென்பதற்கு உரைத்தாங்குரைக்க. கைகூடாதனவும் கைகூடுமென்பதாம். இவை மூன்றுபாட்டானுங் காலமறிதற்பயன் கூறப்பட்டது. (ச)

சஅரு. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். ரு.

இ - ள். கலங்காது ஞாலம் கருதுபவர் - தப்பாது ஞாலமெல்லாங் கொள்ளக் கருதுமரசர்—காலம் கருதி இருப்பர் - தம்வலி மிகுமாயினும் அது கருதாது அதற்கேற்ற காலத்தையே கருதி அது வருந்துணையும் பகைமேற் செல்லார். எ - று.

தப்பாமை கருதியவழியே கொள்ளுதல். வலிமிகுதி காலங்கருதி யென்றதனாற் பெற்றும். அது கருதாது செல்லின் இருவகைப் பெருமையுந் தேய்ந்து வருத்தமுமுறுவராகலின், இருப்பரென்றார். இருத்தலாவது நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்னும் அறுவகைக்குணங்களுள் மேற்செலவிற்கு மாறுயது. இதனாற் காலம் வாராவழிச் செய்வது கூறப்பட்டது. (ரு)

சஅகூ. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. கூ.

இ - ள். ஊக்கம் உடையான் ஒடுக்கம் - வலிமிகுதியுடையவரசன் பகைமேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு—பொரு தகர் தாக்கற்குப் பேரும் தகைத்து - பொருகின்ற தகர் தன் பகை கெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால் வாங்குந் தன்மைத்து. எ - று.

உவமைக்கட்டாக்கற் கென்றதனால், பொருளினும் வென்றியெய்தற்பொருட்டென்பது கொள்க. இதனால் அவ்விருப்பின் சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

சஅஎ. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர். எ.

இ - ள். ஒள்ளியவர் - அறிவுடையவரசர்—ஆங்கே பொள்ளெனப் புறம்வேரார்- பகைவர் மிகைசெய்த பொழுதே அவரறியப்புறத்து வெகுளார்,—காலம் பார்த்து உள் வேர்ப்பர் - தாம் அவரை வெல்லுதற்கேற்ற காலத்தினையறிந்து அது வருந்துணை யும் உள்ளே வெகுள்வர். எ - று.

பொள்ளெனவென்பது குறிப்புமொழி. வேரார் வேர்ப்பரெனக் காரணத்தைக் காரியமாகவுபசரித்தார். அறிய வெகுண்டுழித் தம்மைக் காப்பராகலிற் புறம்வேரா ரென்றும், வெகுளியொழிந்துழிப் பின்னும் மிகை செய்யாமலடக்குதல் கூடாமையின் உள்வேர்ப்பரென்றுங் கூறினர். (எ)

சஅஅ. செறுநரைக் காணிற் சுமக்க இறுவரை
காணிற் கிழக்காந் தலை. அ.

இ - ள். செறுநரைக் காணின் சுமக்க - தாம் வெல்லக் கருதிய வரசர் பகை வருக்கு இறுதிக்காலம் வருந்துணையும் அவரைக் கண்டாற்பணிக;—இறுவரைகாணின் தலை கிழக்காம் - பணியவே அக்காலம் வந்திறும்வழி அவர் தகைவின்றி யிறுவர். எ-று.

பகைமையொழியும் வகை மிகவுந் தாழ்கவென்பார் சுமக்கவென்றும், அங்ஙனந் தாழவே அவர் தம்மைக் காத்தலிகழ்வராகலிற் றப்பாமற்கெடுவரென்பார் அவர்தலை கீழாமென்றுங் கூறினர். தலைமேற்கொண்டதொருபொருளைத் தள்ளுங்கால் அது தன் றலைகீழாக விழுமாகலின், அவ்வியல்பு பெறப்பட்டது. இவையிரண்டுபாட்டானும் இருக்கும்வழிப் பகைமை தோன்றுமலிருக்கவென்பது கூறப்பட்டது. (அ)

சஅகூ. எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல். கூ.

இ - ள். எய்தற்கு அரியது இயைந்தக்கால் - பகையை வெல்லக் கருதுமரசர் தம் மாலெய்துதற்கரிய காலம் வந்துகூடியக்கால்,—அந்நிலையே செய்தற்கு அரிய செயல்- அது கழிவதற்கு முன்பே அது கூடாவழித் தம்மாற் செய்தற்கரிய வினைகளைச் செய்க. எ - று.

ஆற்றன்முதலியவற்றாற் செய்துகொள்ளப்படாமையின் எய்தற்கரியதென்றும், அது தானேவந்தியைதல் அரிதாகலின் இயைந்தக்காலென்றும், இயைந்தவழிப் பின் னில்லாதோடுதலின் அந்நிலையேயென்றும், அது பெறுவழிச் செய்யப்படாமையிற் செய்தற்கரியவென்றுங் கூறினர். இதனாற் காலம் வந்துழி விரைந்து செய்கவென்பது கூறப்பட்டது. (கூ)

சகூ0. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. க0.

இ - ள். கூம்பும் பருவத்துக் கொக்கு ஒக்க - வினைமேற் செல்லாதிருக்குங் காலத்துக் கொக்கிருக்குமாறுபோல இருக்க,—மற்றுச் சீர்த்த இடத்து அதன்குத்து ஒக்க - மற்றைச் செல்லுங் காலம் வாய்த்தவழி அது செய்து முடிக்குமாறுபோலத் தப்பாமற் செய்துமுடிக்க. எ - று.

மீன்கோடற்கிருக்கும்வழி அது வந்தெய்துந்துணையும் முன்னறிந்து தப்பாமற் பொருட்டு உயிரில்லதுபோன்றிருக்குமாகலானும், எய்தியவழிப் பின்றப்புவதற்கு முன்பே விரைந்து குத்துமாகலானும், இருப்பிற்குஞ் செயலிற்குங் கொக்கு உவமை

யாயிற்று. கொக்கொக்கவென்றாராயினும் அது கூம்புமாறுபோலக் கூம்புகவென்றும், குத்தொக்க வென்றாராயினும் அது குத்துமாறுபோலக் குத்துகவென்று முரைக்கப் படும், இது தொழிலுவமமாகலின். உவமைமுகத்தால் இருப்பிற்குஞ் செயலிற்கும் இலக்கணங் கூறியவாறாயிற்று. (கo)

ருo ம் அதி.—இடனறிதல்.

அஃதாவது வலியுங் காலமுமறிந்து பகைமேற் செல்வான் தான் வெல்லுதற் கேற்ற நிலத்தினையறிதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

சகூக. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது. க.

இ - ள். முற்றும் இடம் கண்டபின்னல்லது - பகைவரை முற்றுதற்காவ தோரிடம் பெற்றபின்னல்லது—எவ்வினையும் தொடங்கற்க - அவர்மாட்டு யாதொரு வினையையுந் தொடங்காதொழிக,—எள்ளற்க - அவரைச் சிறியரென்றிகழாதொழிக. எ - று.

முற்றுதல் வளைத்தல். அதற்காமிடமாவது வாயில்களானும் நூழைகளானும் அவர் புகலொடு போக்கொழியும்வகை அரணினைச் சூழ்ந்து ஒன்றற்கொன்று துணையாய்த் தம்முணலிவிலாத பலபடையிருப்பிற்கும் மதிலும் அகழுமுதலிய வரண்செய்யப்பட்ட அரசிருப்பிற்கு மேற்ற நிலக்கிடக்கையும் நீருமுடையது. அது பெற்றால் இரண்டுஞ்செய்கவென்பதாம். (க)

சகூஉ. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும். உ.

இ - ள். முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் - மாறுபாட்டோடு கூடிய வலியினையுடையார்க்கும்—அரண் சேர்ந்து ஆம் ஆக்கம் பலவும் தரும் - அரணைச்சேர்ந்தாகின்றவாக்கம் பலபயன்களையுங்கொடுக்கும். எ - று.

மாறுபாடாவது ஞாலம் பொதுவெனப் பொறாவரசர் மனத்தின்கணிகழ்வதாகலானும், வலியுடைமை கூறியவதனானும், இது பகைமேற்சென்றவரசர் மேற்றாயிற்று. உம்மை சிறப்பும்மை. அரண்சேராதாமாக்கமுமுண்மையின், ஈண்டாக்கம் விசேடிக்கப்பட்டது. ஆக்கமென்றது அதற்கேதுவாய முற்றினை. அது கொடுக்கும் பயன்களாவன பகைவராற்றமக்கு நலிவின்மையும், தாம் நிலைபெற்று நின்று அவரை நலிதலும் முதலாயின. (உ)

சகூங. ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின். ங.

இ - ள். ஆற்றாரும் ஆற்றி அடுப - வலியரல்லாதாரும் வலியராய் வெல்வர்,—இடன் அறிந்து போற்றிப் போற்றார்கண் செயின் - அதற்கேற்றவிடத்தினையறிந்து தம்மைக் காத்துப் பகைவர்மாட்டு வினை செய்வராயின். எ - று.

வினையென்பதூஉம் தம்மையென்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. காத்தல் பகைவரான் நலிவு வாராமல் அரணானும் படையானுங் காத்தல். இவ்வாற்றான் வினை செய்வராயின் மேற்சொல்லிய வலியின்றியும் வெல்வரென்பதாம். (ங)

சகூச. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.		ச.

இ - ள். இடன் அறிந்து துன்னியார் - தாம் வினைசெய்தற் கேற்றவிடத்தினை யறிந்து சென்ற வரசர்—துன்னிச் செயின் - அரணைப் பொருந்திநின்று அதனைச் செய் வராயின்,—எண்ணியார் எண்ணம் இழப்பர் - அவரை வெல்வதாக வெண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை யிழப்பர். எ - று.

அரணென்பது அவாய்நிலையான் வந்தது. எண்ணமென்றது எண்ணப்பட்ட தம் வெற்றியை. அதனையிழப்பரென்றார், அவர் வினை செய்யாமற் றம்மைக்காத்தமையின். இதனால் அவர் பகைவர் தோற்பரென்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் பகை வரரணின் புறத்திருப்பார் அதற்காமிடமறிதல் கூறப்பட்டது.		(ச)

சகூடு. நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற.		டு.

இ - ள். முதலை நெடும்புனலுள் (பிற) வெல்லும் - முதலை ஆழமுடைய நீரின் கணுயிற் பிறவற்றையெல்லாந் தான் வெல்லாநிற்கும்,—புனலின் நீங்கின் அதனைப் பிற அடும் - அப்புனலினீங்குமாயின் அதனைப் பிறவெல்லாம் வெல்லாநிற்கும். எ - று.

எனவே, எல்லாருந் தந்நிலத்து வலியரென்பது கூறப்பட்டது. பிறவென்பது முன்னுங் கூட்டப்பட்டது. நிலைப்படா நீரின்கட் பிறவெல்லாம் நிற்றலாற்றாமையின் அவையெல்லாம் முதலைக்கெளியவாம் அவையியங்குதற்குரிய நிலத்தின்கண் அஃதியங் கலாற்றாமையின் அஃதவற்றிற்கெல்லா மெளிதாமென்றது, மேற்செல்லும் அரசர் பகைவர் நிற்றலாற்றாவிடனறிந்து செல்வராயின் அவர் தமக்கெளியராவரென்றித் தாநிற்கலாற்றாவிடத்துச் செல்வராயின் அவர்க்கெளியராவரென்னும் பொருடோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னுமலங்காரம். அவரை அவர் நிற்றலாற்றா விடத்துச் சென்று வெல்க வென்பதாம்.		(டு)

சகூசு. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.		சு.

இ - ள். கால் வல் நெடுந்தேர் கடல் ஓடா - நிலத்தின்கணோடுங் கால் வலிய நெடிய தேர்கள் கடலின்கணோடமாட்டா,—கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா - இனி அக்கடலின்கணோடும் நாவாய்கடாமும் நிலத்தின்கணோடமாட்டா. எ - று.

கடலோடாவென்ற மறுதலையடையான் நிலத்தோடு மென்பது வருவிக்கப்பட் டது. கால்வனெடுந்தேரென்பது ஓடுதற்கேற்ற காலும் பெருமையுமுடையவாயினு மென்பதுபட நின்றது. மேற்சென்றார் பகைவரிடங்களை யறிந்து அவற்றிற்கேற்ற கருவிகளான் வினைசெய்கவென்பது தோன்றநின்றமையின், இதுவும் மேலையலங் காரமாயிற்று.		(சு)

சகூஎ. அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.		எ.

இ - ள். எஞ்சாமை எண்ணி இடத்தான் செயின் - பகையிடத்து வினைசெய்யுந் திறங்களையெல்லாம் ஒழியாதெண்ணி அவற்றை அரசர் இடத்தொடு பொருந்தச் செய் வராயின்;—அஞ்சாமை அல்லால் துணை வேண்டா - அச்செயற்குத் தந்திண்மையல் லது பிறிதொரு துணை வேண்டுவதில்லை. எ - று.

திண்ணியராய் நின்று செய்து முடித்தலே வேண்டுவதல்லது துணைவேண்டா வென்றார், அவ்வினை தவறுதற்கேதுவின்மையின். இவை மூன்றுபாட்டானும் வினை செய்தற்காமிடனறிதல் கூறப்பட்டது. (எ)

சகூஅ. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும். அ.

இ - ள். உறுபடையான் - பெரும்படையுடையவரசன்—சிறு படையான் செல் இடம் சேரின் - ஏனைச்சிறுபடையுடையானை யழித்தல் கருதி அவன் புகலேச் சென்று சாருமாயின்,— ஊக்கம் அழிந்துவிடும் - அவனுற் றன்பெருமை யழியும். எ - று.

செல்லிடம் அவனுக்குச் செல்லுமிடம். அழிந்துவிடுமென்பது எழுந்திருக்கு மென்றாற்போல ஒருசொல். ஊக்கத்தினழிவு உடையான்மேலேற்றப்பட்டது. தன் படைப்பெருமை நோக்கி இடனேக்காது செல்வனாயின், அஃது அப்படைக் கொருங்கு சென்று வினைசெயலாகாமையானுகப் பயிற்சியின்மையானுக அப்பெருமையாற் பய னின்றித் தானழிந்துவிடுமென்பதாம். (அ)

சகூகூ. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது. கூ.

இ - ள். சிறை நலனும் சீரும் இலர் எனினும் - அரணழித்தற்கருமையும் பெரு மையாகிய வாற்றலுமுடையரல்லராயினும்,—மாந்தர் உறை நிலத்தோடு ஒட்டல் அரிது - வினைக்குரிய மாந்தரை அவருறைகின்ற நிலத்தின்கட்சென்று தாக்குத லரிது. எ - று.

நிலத்தோடென்பது வேற்றுமை மயக்கம். ஆண்மையுடையாரைச் சிறுமை நோக்கி இருப்பின்கட் சென்று தாக்கின் அவர் அதுவிட்டுப்போதற் றுணிவினரன்றிச் சாதற்றுணிவினராவர்; ஆகவே, அவர்க்குப் பெரும்படையுடையுமென்பதாம். (கூ)

ருOO. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு. கO.

இ - ள். கண் அஞ்சா வேலாள் முகத்த களிறு - பாகர்க்கடங்காவுமாய் வேலாட் களைக் கோத்த கோட்டவுமாய களிறுகளை—கால் ஆழ் களரின் நரி அடும் - அவை காலாழுமியல்பிற்றாய சேற்றுநிலத்துப்பட்டுழி நரி கொல்லும். எ - று.

முகம் ஆகுபெயர். ஆண்மையும் பெருமையுமுடையாரும் தமக்கேலாநிலத்துச் செல்லின் அவற்றாற் பயனின்றி மிகவுமெளியரால் அழிவரென்பது தோன்ற நின்ற மையின், இதுவும் அவ்வலங்காரம். வேலாழ் முகத்தவென்று பாடமோதுவாருமுளர்: வேற்படை குளித்த முகத்தவாயின் அதுவும் நரியடுதற்கேதுவாய் முடிதலின், அது பாடமன்மையறிக. இவை மூன்றுபாட்டானும் பகைவரைச் சார்தலாகாவிடனும் சார்ந்தழிப் படுமிழுக்குங் கூறப்பட்டன. (கO)

ருக ம் அதி.—தெரிந்துதெளிதல்.

அஃதாவது அமைச்சர் முதலாயினுரைப் பிறப்புக் குணம் அறிவென்பனவற் றையுஞ் செயலேயுங் காட்சி கருத்து ஆகமமென்னும் அளவைகளானுராய்ந்து தெளி தல். வலிமுதன் மூன்று மறிந்து பகைமேற்செல்வானுக்குத் தானை வினையுற்றுச் செய்

தற்பொருட்டும் அறைபோகாமற்பொருட்டும் இது வேண்டுதலின், அவற்றின்பின் வைக்கப்பட்டது.

ருOக. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும். க.

இ - ள். அறம் பொருள் இன்பம் உயிரச்சம் - அரசனாற்றெளியப்படுவானொருவன், அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான்வரும் அச்சமுமென்னும்—நான்கின் திறம் தெரிந்து தேறப்படும் - உபதை * நான்கின்றிறத்தான் மனவியல் பாராய்ந்தால் பின்பு தெளியப்படும். எ - று.

அவற்றுள், அறவுபதையாவது புரோகிதரையும் அறவோரையும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோனன்மையின் இவனைப் போக்கி அறனுமுரிமையு முடையானொருவனை வைத்தற்கெண்ணினம் இதுதான் யாவர்க்கு மியைந்தது நின்கருத்தென்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத்தலைவனையும் அவனோடியைந்தாரையும் விட்டு, அவரான் இவ்வரசன் இவறன்மாலையனாகலின் இவனைப் போக்கிக் கொடையுமுரிமையு முடையானொருவனை வைத்தற்கெண்ணினம் இதுதான் யாவர்க்கு மியைந்தது நின்கருத்தென்னையெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது தொன்றுதொட்டு † உரிமையொடு பயின்றுளொரு தவமுதுமகளைவிட்டு, அவளால் உரிமையுள் இன்னாள் நின்னைக்கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்கவேண்டுமென்று என்னை விடுத்தாள் அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும்பொருளும் கைகூடுமெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவனில்லின் கணழைப்பித்து, இவர் அறைபோவானெண்ணற்குக் குழீஇயினரென்று தான் காவல் செய்து, ஒருவனால் இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச்செய்து நமக்கினியவரசனொருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கு மியைந்தது நின்கருத்தென்னையெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கினுந் திரிபிலனாயவழி எதிர்காலத்துந் திரிபிலனெனக் கருத்தளவையாற் றெளியப்படுமென்பதாம். இவ்வடநூற்பொருண்மை ‡ யையுட்கொண்டு இவரோதியததறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்சமெனப் பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறேயுரைத்தார்.

ருOஉ. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு. உ.

இ - ள். குடிப் பிறந்து - உயர்ந்த குடியிற் பிறந்து—குற்றத்தின் நீங்கி - குற்றங்களினின்று நீங்கி—வடுப் பரியும் நாண் உடையான் கட்டே தெளிவு - நமக்கு வடு வருங்கொலென்றஞ்சாநிற்கும் நாணுடையவன் கண்ணதே அரசனது தெளிவு. எ - று.

குற்றங்களாவன மேலரசனுக்குச் சொல்லியவகையாறும்§, மடி, மறப்பு, பிழைப்பென்றிவைமுதலாயவுமாம். நாண் இழிதொழில்களின் மனஞ்செல்லாமை. இவை பெரும்பான்மையும் தக்கோர்வாய்க் கேட்டலாகிய ஆகமவளவையாற்றெரிவன. இந்நான்குமுண்டயவனையே தெளிகவென்பதாம். (உ)

ருOங. அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு. ங.

* உபதை—சோதனை. † உரிமை - அரசன்மனைவியர்.

‡ இவ்வுபதை நான்கும் சாணக்கியரது அர்த்தசாஸ்திரம் முதற்பகுதி கO-ம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளன. § சுஙக-சுஙஉ-ம் குறள்களிற்காண்க.

இ - ள். அரிய கற்று ஆசு அற்றார் கண்ணும் - கற்றற்கரிய நூல்களைக் கற்று மேற்சொல்லிய குற்றங்களற்றார்மாட்டும்—தெரியுங்கால் வெளிறு இன்மை அரிது - நுண்ணிதாகவாராயுமிடத்து வெண்மையில்லாமை அரிது. எ - று.

வெண்மை அறியாமை; அஃது இவர்மாட்டுளதாவது மனத்தது நிலையாமையான் ஒரோவழியாகலின், தெரியுங்காலென்றார். காட்சியளவையாற்றெரிந்தால் அதுவுமில்லாதாரே தெளியப்படுவரென்பது குறிப்பெச்சம். இவ்வளவைகளான் இக்குணமுங் குற்றமுந்தெரிந்து குணமுடையாரைத் தெளிகவென்பது இவை மூன்றுபாட்டானுங் கூறப்பட்டது. (௩.)

௫௦௪. குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல். ௪.

இ - ள். குணம் நாடி - குணங்குற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகத்தின்மையின் ஒருவன் குணங்களையாராய்ந்து,—குற்றமும் நாடி - ஏனைக்குற்றங்களையுமாராய்ந்து,—அவற்றுள் மிகை நாடி - பின் அவ்விருபகுதியுள்ளும் மிக்கவற்றையாராய்ந்து;—மிக்க கொளல் - அவனை அம்மிக்கவற்றானேயறிக. எ - று.

மிகையுடையவற்றை மிகையென்றார். அவையாவன தலைமையானாக பன்மையானாக உயர்ந்தன. அவற்றானறிதலாவது குணமிக்கதாயின் வினைக்குரியனென்றும், குற்றமிக்கதாயின் அல்லனென்றுமறிதல். குணமேயுடையார் உலகத்தரியராகலின்; இவ்வகை யாவரையுந் தெளிகவென்பது இதனாற் கூறப்பட்டது. (௪)

௫௦௫. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். ௫.

இ - ள். பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் கட்டளைக்கல் - பிறப்புக் குணம் அறிவென்பனவற்றான் மக்களெய்தும் பெருமைக்கும் மற்றைச்சிறுமைக்கும் உரைகல்லாவது—தத்தம் கருமமே - தாந்தாஞ்செய்யுங்கருமமே, பிறிதில்லை. எ - று.

இஃதேகதேசவுருவகம். மக்களது பெருமையுஞ் சிறுமையுந் தப்பாமலறியலுறுவார்க்குப் பிற கருவிகளுமுளவாயினும், முடிந்தகருவி செயலென்பது தேற்றேகாரத்தாற்பெற்றாம். இதனாற் குணங் குற்றங்கள் நாடற்குக் கருவி கூறப்பட்டது. (௫)

௫௦௬. அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி. ௬.

இ - ள். அற்றாரைத் தேறுதல் ஓம்புக - சுற்றமில்லாரைத் தெளிதலையொழிக;—அவர் மற்றுப் பற்று இலர் - அவர் உலகத்தோடு தொடர்பிலர்,—பழிநாணார் - ஆகலாற் பழிக்கஞ்சார். எ - று.

பற்றிலரென்பதனால் சுற்றமென்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பனவொழிதற்கும் புகழ்வன செய்தற்குமேதுவாகிய உலகநடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப்படாரென்பதாம். (௬)

௫௦௭. காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும். ௭.

இ - ள். காதன்மை கந்தா அறிவு அறியார்த்தேறுதல் - அன்புடைமை பற்றுக்கோடாகத் தமக்கறியவேண்டுவன அறியாதாரைத் தெளிதல்—பேதைமை எல்லாம் தரும் - அரசனுக்கு எல்லாவறியாமையையுங் கொடுக்கும். எ - று.

தன்னோடு அவரிடைநின்ற அன்புபற்றி அரசன் அறிவிலார்மேல் வினையை வைப்பின், அஃது அவரறிவின்மையாற் கெடும்; கெட்டால் அவர்க்குளதேயன்றி வினைக்குரியாரை அறியாமை, மேல்விளைவறியாமை முதலாக அவனுக்கு அறியாமை பலவுமுளவாமென்பதாம். (எ)

௫௦அ. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும். அ.

இ - ள். பிறனைத் தேரான் தெளிந்தான் - தன்னோடியையுடையனல்லாதானைப் பிறப்புமுதலியவற்றானும் செயலானும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு—வழிமுறை தீரா இடும்பை தரும் - அத்தெளிவு தன்வழிமுறையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். எ - று.

இயைபு தன் குடியொடு தொடர்ந்தமரபு. இதனானே அதுவும் வேண்டுமென்பது பெற்றாம். தெளிதல் அவன்கண்ணே வினையை வைத்தல். அவ்வினை கெடுதலால் தன் குலத்துப் பிறந்தாரும் பகைவர்கைப்பட்டுக் கீழாய் விடுவரென்பதாம். நான்கனுருபு விகாரத்தாற்றொக்கது. (அ)

௫௦௯. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள். ௯.

இ - ள். யாரையும் தேராது தேறற்க - யாவரையும் ஆராயாது தெளியாதொழிக;—தேர்ந்தபின் தேறும் பொருள் தேறுக - ஆராய்ந்தபின் தெளியும்பொருட்களை ஐயுறாதொழிக. எ - று.

தேறற்கவென்ற பொதுமையான் ஒருவினைக்கண்ணுந் தெளியலாகாதென்பது பெற்றாம். ஈண்டுத் தேறுகவென்றது தாற்பரியத்தால் ஐயுறவினது விலக்கின் மேனின்றது. தேறும்பொருளென்றது அவரவராற்றற்கேற்ற வினைகளை. பொருள் ஆகுபெயர். (௯)

௫௧௦. தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும். ௧௦.

இ - ள். தேரான் தெளிவும் - அரசன் ஒருவனையாராயாது தெளிதலும்—தெளிந்தான்கண் ஐயுறவும் - ஆராய்ந்து தெளிந்தவன்மாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும்—தீரா இடும்பை தரும் - அவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். எ - று.

வினை வைத்தபின் ஒருதவறு காணாதுவைத்து ஐயுறுமாயின், அதனை அவனறிந்து இனி இது நில்லாதென்னுங்கருத்தான் அவ்வினையை நெகிழ்த்துவிடும், அதுவேயன்றிப் பகைவரால் எளிதிற் பிரிக்கவும்படும், ஆகலாற் றெளிந்தான்கண் ஐயுறவுமாகாதாயிற்று. தெளிவிற்கெல்லை கூறியவாறு. இவையைந்துபாட்டானும், தெளியப்படாதார் இவரென்பதூஉம், அவரைத் தெளிந்தாற்படுமிழுக்கும், தெளிவிற்கெல்லையும் கூறப்பட்டன. (௧௦)

௫௨ ம் அதி.—தெரிந்துவினையாடல்.

அஃதாவது அத்தெளியப்பட்டாரை அவர் செய்யவல்ல வினைகளையறிந்து அவற்றின்கண்ணேயாளுந்திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

ருகக. நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா னாளப் படும். க.

இ - ள். நன்மையும் தீமையும் நாடி - அரசன் முதற்கண் ஒருவினையைத் தன் கண்வைத்தால், அதன்கணுவனவும் ஆகாதனவுமாய செயல்களையாராய்ந்தறிந்து—நலம் புரிந்த தன்மையான் - அவற்றுள் ஆவனவற்றையே விரும்பிய வியல்பினையுடையான்—ஆளப்படும் - பின் அவனாற் சிறந்த வினைகளிலேயாளப்படும். எ - று.

தன்னையுரிமையறிதற்பொருட்டு அகம்புறங்கட்கு நடுவாயதோர் வினையை அரசன்றன்கண்வைத்தவழி அதன்கண் ஆஞ்செயல்களையேசெய்தவன் பின்னும் அவ்வியல்பினனாதல்பற்றி அகமாய வினைக்கண்ணேயாளப்படுவனென்பதாயிற்று. புரிந்தவென்ற இறந்தகாலத்தான், முன்னுரிமையறிதற்பொருட்டு வைத்த வினையாதல் பெற்றும். (க)

ருகஉ. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை. உ.

இ - ள். வாரி பெருக்கி - பொருள்வரு வாயில்களை விரியச்செய்து—வளம்படுத்து - அப்பொருளாற் செல்வங்களை வளர்த்து—உற்றவை ஆராய்வான் - அவ்வாயில்கட்கும் பொருட்குஞ் செல்வங்கட்கு முற்ற இடையூறுகளை நாடோறுமாராய்ந்து நீக்கவல்லவன்—வினை செய்க - அரசனுக்கு வினைசெய்க. எ - று.

வாயில்களாவன மேல் இறைமாட்சியுள் "இயற்றலும்*" என்புழி யுரைத்தனவும், உழவு, பசுக்காவல், வாணிகமென்னும் வார்த்தையு † மாம். செல்வங்களாவன ஆண்டுப் பொருளுமின்பமுமாக உரைக்கப்பட்டன. இடையூறுகளாவன அரசன் வினைசெய்வார், சுற்றத்தார், பகைவர், கள்வரென்றிவரான் வரு நலிவுகள். (உ)

ருகங. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு. ங.

இ - ள். அன்பு - அரசன்மாட் டன்பும்—அறிவு - அவனுக்காவனவறியுமறிவும்—தேற்றம் - அவைசெய்தறகட் கலங்காமையும்—அவாவின்மை - அவற்றாற் பொருள் கையுற்றவழி அதன்மேலவாவின்மையுமாகிய—இந்நான்கும் நன்கு உடையான்கட்டே தெளிவு - இந்நான்கு குணங்களையும் நிலைபெறவுடையான் மேலதே வினையை விட்டிருக்குந் தெளிவு. எ - று.

இந்நான்கு நன்குடைமை இவன் செய்கின்ற வினைக்கண் யாதுமாராயவேண்டுவதில்லையென்று அரசன் றெளிதற்கேதுவாகலின், அவனை அதன் பிறப்பிடனுக்கிக்கூறினார். இவைமூன்று பாட்டானும் ஆடற்குரியானதிலக்கணங் கூறப்பட்டது. (ங)

ருகச. எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர். ச.

இ - ள். எனைவகையான் தேறியக்கண்ணும் - எல்லாவகையானுமாராய்ந்து தெளிந்து வினை வைத்தபின்னும்—வினைவகையான் வேறாகும் மாந்தர் பலர் - அவ்வினையினியல்பானே வேறுபடுமாந்தர் உலகத்துப் பலர். எ - று.

---

* திருக்குறள் - ஙஅ௬. † வார்த்தை - விர்த்தி, தொழில்.

கட்டியங்காரன் * போல அரசவின்பத்தினை வெஃகி விகாரப்படுவதல்லது அத னைக் குற்றமென்றொழிந்து தம்மியல்பினிற்பார் அரியராகலின், வேறுகுமாந்தர் பல ரென்றார். வினை வைப்பதற்குமுன் எல்லாக்குணங்களுமுடையராய் வைத்தபின் விகா ரப்படுவாரை இடையாயதொருவினையை வைத்தறிந்து ஒழிக்கவென்பதாம். இதனான் ஒருவகையாலொழிக்கப்படுவார் இவரென்பது கூறப்பட்டது. (௪)

௫௰௫. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. ௫.

இ - ள். அறிந்து ஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் - செய்யுமுபாயங்களையறிந்து செயலானும் இடையூறுகளானும் வருந்துன்பங்களைப்பொறுத்து முடிவுசெய்யவல்லா னையல்லது—வினைதான் சிறந்தான் என்று ஏவற்பாற்றன்று - வினைதான் இவன் நம் மாட்டு அன்புடையனென்று பிறனொருவனையேவுமியல்புடைத்தன்று. எ - று.

செய்கிற்பாற்கென்பது வேற்றுமைமயக்கம். அறிவாற்றல்களானல்லது அன் பான் முடியாதென இதனால் வினையினதியல்பு கூறப்பட்டது. (௫)

௫௰௬. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல். ௬.

இ - ள். செய்வானை நாடி - முதற்கண்ணே செய்வான திலக்கணத்தையா ராய்ந்து,—வினை நாடி - பின் செய்யப்படும் வினையினதியல்பை யாராய்ந்து;—காலத் தோடு எய்த உணர்ந்து செயல் - பின் அவனையும் அதனையுங் காலத்தொடு படுத்துப் பொருந்தவறிந்து அவனை அதன்கண் ஆடலைச்செய்க. எ - று.

செய்வானதிலக்கணமும் வினையினதியல்பும் மேலே கூறப்பட்டன. காலத்தோ டெய்தவுணர்தலாவது இக்காலத்து இவ்விலக்கணமுடையான் செய்யின் இவ்வியல் பிற்றாயவினை முடியுமென்று கூட்டியுணர்தல். (௬)

௫௰௭. இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல். ௭.

இ - ள். இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து - இவ்வினையை இக் கருவியால் இவன் முடிக்கவல்லனெனக் கூறுபடுத்தாராய்ந்து,—அதனை அவன்கண் விடல் - மூன்றுந் தம்முளியைந்தவழி அவ்வினையை அவன்கண்ணே விடுக. எ - று.

கருவி துணைவரும், பொருளும் முதலாயின. வினைமுதலும் கருவியும் வினையுந் தம்முளியைதலாவது ஓரொன்றோடு ஏனையவிரண்டற்கும் பொருத்தமுண்டாதல். விடு தல் அதற்கு அவனையுரியனாக்குதல். (௭)

௫௰௮. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல். ௮.

இ - ள். வினைக்கு உரிமை நாடிய பின்றை - ஒருவனை அரசன் தன்வினைசெய்தற் குரியனாகவாராய்ந்து துணிந்தால்,—அவனை அதற்கு உரியனாகச் செயல் - பின்னவனை அதற்குரியனாமாறு உயரச்செய்க. எ - று.

* கட்டியங்காரன் சீவகசிந்தாமணியிற் கூறப்படும் சச்சந்தனென்னும் அரசனுடைய மந்திரி.

உயரச்செய்தலாவது அதனைத் தானே செய்துமுடிக்குமாற்றலுடையனுக்குதல். அது செய்யாக்காலுங் கெடுமென்பது கருத்து. (அ)

ருகக. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு. கூ.

இ - ள். வினைக்கண் வினை உடையான் கேண்மை - எப்பொழுதுந் தன்வினையின் கண்ணே முயறலையுடையான் அவ்வுரிமையாற்றனக்குக் கேளாயொழுகுகின்ற தன்மையை—வேறாக நினைப்பானைத் திரு நீங்கும் - அது பொறாதார்சொற்கேட்டு அரசன் மாறுபடக் கருதுமாயின், திருமகள் அவனைவிட்டு நீங்கும். எ - று.

கேளாயொழுகுகின்ற தன்மையாவது தான் பிறனாய் நில்லாது கேளிர்செய்யு முரிமையெல்லாஞ் செய்தொழுகுதல். அவனை அவமதிப்பாகக்கொண்டு செறக்கருது மாயிற் பின்னொருவருமுட்பட்டு முயல்வாரில்லையாம், ஆகவே, தன்செல்வங்கெடு மென்பது கருத்து. இந்நான்குபாட்டானும் ஆடற்குரியானையாளுந்திறங் கூறப் பட்டது. (கூ)

ருஉ0. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. க0.

இ - ள். வினை செய்வான் கோடாமை உலகு கோடாது - வினைசெய்வான் கோடாதொழிய உலகங் கோடாது;—மன்னன் நாடோறும் நாடுக - ஆதலான் அரசன் அவன்செயலை நாடோறு மாராய்க. எ - று.

அஃதொன்றனையுமாராயவே அதன்வழித்தாய உலகமெல்லா மாராய்ந்தானும், அதனால் அவனுரிமை அழியாமற் றன்னுள்ளே யாராய்ந்து போதுகவென்பதாம். இதனான் ஆண்டவழிச்செய்வது கூறப்பட்டது. (க0)

ருகூ ம் அதி.—சுற்றந்தழால்.

அஃதாவது அரசன் தன்கிளைஞரைத் தன்னினீங்காமல் அணைத்தல். வினை செய்வாரைக் கூறி எனைச்சுற்றங்கூறுகின்றாராகலின் இது தெரிந்து வினையாடலின் பின் வைக்கப்பட்டது.

ருஉக. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. க.

இ - ள். பற்று அற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் - ஒருவன் செல்வந் தொலைந்து வறியனாயவழியும் விடாது தம்மோடு அவனிடைப் பழைமையை எடுத்துக் கொண்டாடு மியல்புகள்—சுற்றத்தார்கண்ணே உள - சுற்றத்தார்மாட்டே உளவா வன. எ - று.

சிறப்பும்மை வறியனாயவழிப் பாராட்டப்படாமை விளக்கி நின்றது. பழைமை பற்றாக்காலத்துத் தமக்குச் செய்த உபகாரம். பிறரெல்லாம் அவன் பற்றற்ற பொழுதே தாமும் அவனோடு பற்றறுவராகலின், ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது. இதனாற் சுற்றத்தது சிறப்புக் கூறப்பட்டது. (க)

ருஉஉ. விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
வாக்கம் பலவுந் தரும். உ.

இ - ள். விருப்பு அறாச் சுற்றம் இயையின் - அன்பறாத சுற்றம் ஒருவற்கெய்து மாயின்,—அருப்பு அறா ஆக்கம் பலவும் தரும் - அஃது அவற்குக் கிளைத்தலறாத செல் வங்கள் பலவற்றையுங் கொடுக்கும். எ - று.

உட்பகையினீக்குதற்கு விருப்பறாச்சுற்றமென்றும், தானே வளர்க்குமொருதலை யாய செல்வத்தினீக்குதற்கு அருப்பறாவாக்கமென்றும், விசேடித்தார். தொடை நோக்கி விகாரமாயிற்று. இயையினென்பது அதனதருமை விளக்கி நின்றது. ஆக்க மென்பது ஆகுபெயர். பலவுமென்றது அங்கங்களாறனையுநோக்கி. பலர்கூடி வளர்த் தலின், அவை மேன்மேற் கிளைக்குமென்பது கருத்து. (உ)

ருஉங. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. ங.

இ - ள். அளவளாவு இல்லாதான் வாழ்க்கை-அச்சுற்றத்தோடு நெஞ்சுகலத்தலில் லாதவன் வாழ்க்கை—குள வளாக் கோடு இன்றி நீர் நிறைந்தற்று - குளப்பரப்புக் கரையின்றி நீர்நிறைந்தாற்போலும். எ - று.

சுற்றத்தோடென்பது அதிகாரத்தான் வந்தது. நெஞ்சுகலப்புத் தன்னளவும் அதனளவுமுசாவுதலான் வருவதாகலின், அளவளாவென்பது ஆகுபெயர். வாழ்க்கை யென்றதூஉம் அதற்கேதுவாய செல்வங்களை. நிறைதலென்னும் இடத்துநிகழ்பொரு ளின் றொழில் இடத்தின்மேனின்றது. சுற்றமில்லாதான் செல்வங்கள் தாங்குவாரின் மையிற் புறத்துப் போமென்பதாம். (ங)

ருஉச. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். ச.

இ - ள். செல்வம் பெற்றத்தான் பெற்ற பயன் - செல்வம் பெற்றவதனால் ஒரு வன் பெற்ற பயனாவது—சுற்றத்தான் தான் சுற்றப்பட ஒழுகல் - தன்சுற்றத்தால் தான் சூழப்படும்வகை அதனைத் தழீஇ யொழுகுதல். எ - று.

பெற்றவென்பதனுள் அகரமும் அதனானென்பதனுள் அன்சாரியையும் தொடை நோக்கி விகாரத்தாற் றொக்கன. இவ்வொழுக்குப் பகையின்றி அரசாடற் கேதுவாக லின், இதனைச் செல்வத்திற்குப் பயனென்றார். இவைமூன்றுபாட்டானும் சுற்றந் தழால் செல்வத்திற்கேதுவும் அரணும் பயனுமாமென்பது கூறப்பட்டது. (ச)

ருஉரு. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும். ரு.

இ - ள். கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின்-ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொற்சொல்லுதலையும் வல்லனாயின்,—அடுக்கிய சுற்றத்தான் சுற்றப்படும் - தம்மிற்றொடர்ந்த பலவகைச் சுற்றத்தானே சூழப்படும். எ - று.

இரண்டும் அளவறிந்தாற்றுதலரிதென்பதுதோன்ற, ஆற்றினென்றார். தம்மிற் றொடர்தலாவது சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமுமாய் அவற்றாற் பிணிப்புண்டு வருதல். இவ்வுபாயங்களை வடநூலார் தானமுஞ் சாமமுமென்ப. (ரு)

ருஉசா. பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில். சா.

இ - ள். பெருங்கொடையான் வெகுளி பேணுன் - ஒருவன்மிக்க கொடையை யுடையனுமாய் வெகுளியை விரும்பானுமாயின்;—அவனின் மருங்கு உடையார் மாநிலத்து இல் - அவன்போலக் கிளையுடையார் இவ்வுலகத்தில்லை. எ - று.

மிக்ககொடை ஒன்றுனும் வறுமையெய்தாமற் கொடுத்தல். விரும்பாமை இஃதாசற்று வேண்டுவதொன்றென்று அளவிறந்து செய்யாமை. (சு)

ருஉஎ. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள.   எ.

இ - ள். காக்கை கரவா கரைந்து உண்ணும் - காக்கைகள் தமக்கிரையாயின கண்டவழி மறையாது இனத்தையழைத்து அதனோடுங்கூடவுண்ணுநிற்கும்;—ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள - சுற்றத்தானெய்தும் ஆக்கங்களும் அப்பெற்றித்தாய இயல்பினையுடையார்க்கே உளவாவன. எ - று.

அவ்வாக்கங்களாவன பகையின்மையும், பெருஞ்செல்வமுடைமையும் முதலாயின. எச்சவும்மையான் அறமுமின்பமுமேயன்றிப் பொருளுமெய்துமென்பது பெறுதும். அப்பெற்றித்தாயவியல்பென்றது தாம் நுகர்வனவெல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல். (எ)

ருஉஅ. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.   அ.

இ - ள். பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின் - எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காது அரசன் தத்தந்தகுதிக்கேற்ப நோக்குமாயின்,—அது நோக்கி வாழ்வார் பலர் - அச்சிறப்புநோக்கி அவனைவிடாது வாழுஞ்சுற்றத்தார் பலர். எ - று.

உயர்ந்தார் நீங்குதனோக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடாதொழுகுதனோக்கி வரிசைநோக்கை விதித்தார். இந்நான்குபாட்டானுஞ் சுற்றந்தழுவுமுபாயங் கூறப்பட்டது. (அ)

ருஉகூ. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.   கூ.

இ - ள். தமராகித் தற்றுறந்தார் சுற்றம் - முன்றமராய்வைத்துத் தன்னோடு அமராது யாதானுமொரு காரணத்தாற் றன்னைப் பிரிந்துபோயவர் பின்னும் வந்து சுற்றமாதல்—அமராமைக் காரணம் இன்றி வரும் - அவ்வமராமைக்காரணம் தன்மாட்டில்லையாகத் தானேயுளதாம். எ - று.

அமராமைக்காரணமின்றியென்றதனுன், முன் அஃதுண்டாய்த் துறத்தல் பெற்றும்: அஃதாவது அரசன்றுனெறிகெடவொழுகல் வெறுப்பனசெய்தலென்றிவை முதலியவற்றுன் வருவது. ஆக்கம் வருவிக்கப்பட்டது. இயற்கையாகவே அன்புடையராய சுற்றத்தார்க்குச் செயற்கையான் வந்த நீக்கம் அதனையொழிய ஒழியும், ஒழிந்தால் அவர்க்கன்புசெய்துகொள்ளவேண்டா, பழையவியல்பாய் நிற்குமென்பார், வருமென்றுர். (கூ)

ருஙo. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.   கo.

இ - ள்: உழைப் பிரிந்து காரணத்தின் வந்தானை - காரணமின்றித் தன்னிடத்து நின்றும் பிரிந்துபோய்ப் பின் காரணத்தான்வந்த சுற்றத்தானை—வேந்தன் இழைத்து இருந்து எண்ணிக் கொளல் - அரசன் அக்காரணத்தைச் செய்துவைத்து ஆராய்ந்து தழீஇக்கொள்க. எ - று.

வாளா உழைப்பிரிந்தென்றமையின், பிரிதற்குக் காரணமின்மை பெற்றும். வருதற்காரணத்தைச் செய்யாதவழிப் பின்னும் பிரிந்துபோய்ப் பகையோடு கூடுமாகலின் இழைத்திருந்தென்றும், அன்பின்றிப் போய்ப் பின்னுங்காரணத்தான் வந்தமையின் எண்ணிக்கொளலென்றுங்கூறினர். பிரிந்துபோய சுற்றத்தாருள் தீமைசெய்யப்போய் அதனையொழிய வருவானும் அது செய்யாமற்போய்ப் பின் நன்மை செய்ய வருவானும் தழுவப்படுமாகலின், தழுவுமாறு முறையே இவ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது. (௰)

௫௩ ம் அதி.—பொச்சாவாமை.

அஃதாவது உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றான் மகிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தன் முதலிய காரியங்களினும் சோர்தலைச்செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாராற் பயனுள்ளது இச்சோர்வில்வழியாகலின், இது சுற்றந்தழாலின் பின் வைக்கப்பட்டது.

௫௩௧. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு. ௧.

இ - ள். சிறந்த உவகை மகிழ்ச்சியிற் சோர்வு - மிக்கவுவகைக்களிப்பான் வரும் மறவி—இறந்த வெகுளியிற் றீது - அரசனுக்கு அளவிறந்த வெகுளியினுந் தீது. எ-று.

மிக்கவுவகை பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதமென்றிவற்றான் வருவது. அளவு பகைவரையடர்த்தற்கும் கொடியோரை யொறுத்தற்கும் வேண்டுவது. இறந்த வெகுளி ஒரோவழிப் பகைவரையுங்கொல்லும், இஃதன்னதன்றித் தன்னையே கோறலின், அதனினுந் தீதாயிற்று. (௧)

௫௩௨. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. ௨.

இ - ள். புகழைப் பொச்சாப்புக் கொல்லும் - ஒருவன் புகழினை அவன் மறவி கெடுக்கும்,—அறிவினை நிச்சநிரப்புக் கொன்றாங்கு - அறிவினை நிச்சநிரப்புக்கெடுக்குமாறுபோல. எ - று.

நிச்சநிரப்பு நாடோறும் இரவான் வருந்தித் தன்வயிறு நிறைத்தல். அஃது அறிவுடையான்கணுண்டாயின் அவற்கு இளிவரவானும் பாவத்தானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவனன்குமதிப்பினையழிக்கும்; அதுபோல மறவியும் புகழுடையான்கணுண்டாயின் அவற்குத் தற்காவாமையானும் காரியக்கேட்டானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவனன்குமதிப்பினை அழிக்குமென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டானும் பொச்சாப்பினது குற்றங் கூறப்பட்டது. (௨)

௫௩௩. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு. ௩.

இ - ள். பொச்சாப்பார்க்குப் புகழ்மை இல்லை - பொச்சாந் தொழுகுவார்க்குப் புகழுடைமையில்லை;—அது உலகத்து எப்பால் நூலோர்க்கும் துணிவு - அவ்வின்மை இந்நீதிநூலுடையார்க்கே யன்றி உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்தது. எ - று.

அரசர்க்கேயன்றி அறமுதலிய நான்கினும் முயல்வார் யாவர்க்கும் அவை கைகூடாமையிற் புகழில்லையென்பது தோன்ற, எப்பாநூலோர்க்குந் துணிவென்றார்.

நிநுச. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. ச.

இ - ள். அரண் அச்சம் உடையார்க்கு இல்லை - காடு மலை முதலிய அரண்களுள்ளே நிற்பினும், மனத்தின்கணச்சமுடையார்க்கு அவற்றாற்பயனில்லை;—ஆங்கு நன்கு பொச்சாப்பு உடையார்க்கு இல்லை - அதுபோலச் செல்வமெல்லாமுடையராயினும், மனத்தின்கண் மறவியையுடையார்க்கு அவற்றாற் பயனில்லை. எ - று.

நன்மைக்கேதுவாகலின், நன்கென்றார். அச்சமுடையார் நின்ற அரணழியுமாறுபோல மறவியுடையாருடைய செல்வங்களும் அழியுமென்பதாயிற்று. (ச)

நிநுரு. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும். ரு.

இ - ள். முன்னுறக் காவாது இழுக்கியான் - தன்னாற்காக்கப்படுந் துன்பங்களை அவை வருதற்குமுன்னே அறிந்து காவாது மறந்திருந்தான்—பின் ஊறு தன்பிழை இரங்கிவிடும் - பின்வந்துற்றகாலத்துக் காக்கலாகாமையின் அப்பிழைப்பினை நினைந்திரங்கிவிடும். எ - று.

காக்கப்படுந் துன்பங்களாவன சோர்வுபார்த்துப் பகைவர் செய்வன. ஊற்றின்கணென்புழி உருபுஞ்சாரியையும் உடன்றொக்கன. உற்றகாலத்துக் காக்கலாகாமையின், இரங்கிவிடுமென்றார். இவை மூன்று பாட்டானும் பொச்சாப்புடையார்க்கு வருமேதங் கூறப்பட்டது. (ரு)

நிநுசா. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில். சா.

இ - ள். இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின் - அரசர்க்கு மறவாமைக்குணம் யாவர்மாட்டும் எக்காலத்தும் ஒழிவின்றி வாய்க்குமாயின்,—அது ஒப்பது இல் - அதனை யொக்கும் நன்மை பிறிதில்லை. எ - று.

வினைசெய்வார் சுற்றத்தாரென்னுந் தம்பாலார்கண்ணும் ஒப்பவேண்டுதலின் யார்மாட்டுமென்றும், தாம் பெருகியஞான்றும் சுருங்கியஞான்றும் ஒப்பவேண்டுதலின் என்றுமென்றும், எல்லாக்காரியங்களினும் ஒப்பவேண்டுதலின் வழுக்காமையென்றும் கூறினார். வாயினென்பது முதனிலைத்தொழிற்பெயரடியாகவந்த வினையெச்சம். வாய்த்தல் நேர்படுதல். (சா)

நிநுஎ. அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின். எ.

இ - ள். அரிய என்று ஆகாத இல்லை - இவை செய்தற்கரியனவென்று சொல்லப்பட்டு ஒருவற்கு முடியாத காரியங்களில்லை,—பொச்சாவாக் கருவியான் போற்றிச் செயின் - மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப்பெறின். எ - று.

பொச்சாவாத என்பதனிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. அந்தக்கரணமாகலிற் கருவியென்றார்*. இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியுமுடையார்க்கு எல்லாம் எளிதின் முடியுமென்பதாம். இவையிரண்டுபாட்டானும் பொச்சாவாமையது சிறப்புக் கூறப்பட்டது. (எ)

ருஙஅ. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில். அ.

இ - ள். புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் - நீதிநூலுடையார் இவை அரசர்க்குரியனவென்று உயர்த்துக்கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச் செய்க,—செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் - அங்ஙனஞ்செய்யாது மறந்தவர்க்கு எழுமையினும் நன்மையில்லையாகலான். எ - று.

அச்செயல்களாவன † மூவகையாற்றலும், நால்வகையுபாயமும், ஐவகைத்தொழிலும், அறுவகைக்குணமும் முதலாய செயல்கள். சாதிதருமமாகிய இவற்றின் வழீஇயோர்க்கு உள்ளது நிரயத்துன்பமேயாகலின், எழுமையுமில்லென்றார். எழுமை ஆகுபெயர். இதனாற் பொச்சாவாது செய்யவேண்டுவன கூறப்பட்டன. (அ)

ருஙகூ. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. கூ.

இ - ள். தம் மகிழ்ச்சியின் தாம் மைந்து உறும் போழ்து - அரசர் தம்மகிழ்ச்சிக் கட்டாம் வலியுறும்பொழுது,—இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக - முற்காலத்து அதனானாய சோர்வாற் கெட்டவர்களை நினைக்க. எ - று.

காரணங்களோடு அவர்க்குளதாய உரிமையை மகிழ்ச்சிமேலேற்றித் தம்மகிழ்ச்சியினென்றும், இகழ்ச்சியுங் கேடும் உடன்றோன்றுமாகலின் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்தென்றுங் கூறினார். கெட்டாரை உள்ளவே, நாமும் அவ்வாறே கெடுதுமென்று அதன்கண் மைந்துறாரென்பது கருத்து. எண்ணுகவென்று பாடமோதுவாருமுளர். ()

ருசO. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின். கO.

* பொச்சாவாக்கருவி என்பதற்குப் பொச்சாவாமையாகிய கருவியெனப் பொருள்கோடலே சிறப்பு. அது தொல்காப்பியத்து வினையியலுள் "நிலனும்பொருளும்" என்னும் முப்பத்தேழாஞ்சூத்திரத்துரையிலே சேனாவரையர் "நின்முகங்காணுமருந்தினேன் என்புழிக் காட்சியை மருந்தென்றாராகலிற் காணுமருந்தென்பது வினைப்பெயர் கொண்டதாம். பொச்சாவாக் கருவியாற் போற்றிச்செயின் என்புழிப்பொச்சாவாக்கருவி என்பதும் அது" எனக்கூறுமாற்றானுணர்க. இலக்கணவிளக்க நூலார்க்கும் இலக்கணவிளக்கச் சூறாவளியார்க்கும் இதுவே கருத்தென்க.

† மூவகையாற்றல் அறிவு, ஆண்மை, பெருமை என்பன; நால்வகை உபாயம் கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என்பன; ஐவகைத்தொழில் மேற்சேறல், அரண்முற்றல், கோடல், பொருதல், வேறல் என்பன; அறுவகைக்குணம் நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்பன. இவற்றுள் மூவகையாற்றலை சகூகூ ம் குறளுரையினும், நால்வகை உபாயத்தை சகுஎ ம் குறளுரையினும், ஐவகைத்தொழிலை சகூஉ, சஎக ம் குறளுரையினும், அறுவகைக்குணத்தை சஅடு ம் குறளுரையினும் காண்க.

இ - ள். தான் உள்ளியது எய்தல் எளிது மன் - அரசனுக்குத் தானெய்த நினைத்த பொருளை அந்நினைத்த பெற்றியே எய்துதல் எளிதாம்,—மற்றும் உள்ளியது உள்ளப் பெறின் - பின்னும் அதனையே நினைக்கக்கூடுமாயின். எ - று.

அது கூடாதென்பது ஒழிந்து நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அதனையே நினைத்தலாவது மறவியின்றி அதன்கண்ணே முயறல். இவை யிரண்டுபாட்டானும் பொச்சாவாமைக்கு உபாயங் கூறப்பட்டது. (கo)

ருரு ம் அதி.—செங்கோன்மை.

அஃதாவது அரசனாற் செய்யப்படும் முறையினது தன்மை. அம்முறை ஒருபாற்கோடாது செவ்வியகோல்போறலிற் செங்கோலெனப்பட்டது. வடநூலாரும் தண்டமென்ருர். அது சோர்வில்லாத அரசனாற் செயற்பாலதாகலின், இது பொச்சாவாமையின்பின் வைக்கப்பட்டது.

ருசக. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. க.

இ - ள். ஓர்ந்து - தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத்தை நாடி—யார்மாட்டும் கண்ணோடாது - யாவர்மாட்டுங் கண்ணோடாது—இறை புரிந்து - நடுவு நிலைமையைப் பொருந்தி—தேர்ந்து - அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடு மாராய்ந்து—செய்வஃதே முறை - அவ்வளவிற்ருகச் செய்வதே முறையாம். எ - று.

நடுவுநிற்றல் இறைக்கியல்பாகலின் அதனையிறையென்றும், உயிரினுஞ் சிறந்தார் கண்ணுமென்பார் யார்மாட்டுமென்றுங் கூறினர். இறைமை இறையெனவும், செய்வது செய்வஃதெனவும் நின்றன. இதனாற் செங்கோன்மையதிலக்கணங் கூறப்பட்டது. ()

ருசஉ. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. உ.

இ - ள். உலகு எல்லாம் வான் நோக்கி வாழும் - உலகத்துயிரெல்லாம் மழையுளதாயின் உளவாகாநிற்குமேயெனினும்,—குடி மன்னவன் கோல் நோக்கி வாழும் - குடிகள் அரசன்செங்கோலுளதாயின் உளவாகாநிற்கும். எ - று.

நோக்கிவாழ்தல் இன்றியமையாமை. வானினாயவுணவை வானென்றும், கோலினாய ஏமத்தைக் கோலென்றுங் கூறினர். அவ்வேமமில்வழி உணவுளதாயினுங் குடிகட்கு அதனாற்பயனில்லை யென்பதாம். (உ)

ருசந. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். ந.

இ - ள். அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது - அந்தணர்க்குரித்தாய வேதத்திற்கும் அதனாற் சொல்லப்பட்ட அறத்திற்குங் காரணமாய் நிலைபெற்றது—மன்னவன் கோல் - அரசனாற் செலுத்தப்படுகின்ற செங்கோல். எ - று.

அரசர் வணிகரென்னுமேனையோர்க்கு முரித்தாயினும், தலைமைபற்றி அந்தணர் நூலென்ருர். "மாதவர் நோன்பு மடவார்கற்புங்—காவலன் காவ*" லன்றித் தங்கா

* மணிமேகலை, இருபத்திரண்டாவது சிறைசெய்தகாதை, உ0அ, உ0கூ.

வலான் ஆகலின், ஈண்டறமென்றது அவையொழிந்தவற்றை. வேதமும் அறனும் அநாதியாயினுஞ் செங்கோலில்வழி நடவாவாகலின், அதனை அவற்றிற்காதியென்றும், அப்பெற்றியே தனக்காதியாவது பிறிதில்லையென்பார் நின்றதென்றுங்கூறினார். இவை யிரண்டு பாட்டானுஞ் செங்கோலது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

ருசச. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு. ச.

இ - ள். குடிதழீஇக் கோல் ஓச்சும் மாநிலமன்னன் அடி - தன்குடிகளையுமணைத்துச் செங்கோலையுஞ் செலுத்தும் பெருநிலவேந்தனடியை—தழீஇ நிற்கும் உலகு - பொருந்தி விடார் உலகத்தார். எ - று.

அணைத்தல் இன்சொற்சொல்லுதலும், தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும் முதலாயின. இவ்விரண்டனையும் வழுவாமற்செய்வான் நிலமுழுதுமாளுமாகலின் அவனை மாநிலமன்னனென்றும், அவன்மாட்டியர்வரும் நீங்காவன்பினராவராகலின் அடிதழீஇ நிற்குமுலகென்றும், கூறினார். (ச)

ருசரு. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு. ரு.

இ - ள். பெயலும் விளையுளும் தொக்கு - பருவமழையுங் குன்றுதவிளைவும் ஒருங்கு கூடி—இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட - நூல்கள் சொல்லிய வியல்பாற் செங்கோலைச் செலுத்துமரசனது நாட்டின்கண்ணவாம். எ - று.

உளியென்பது மூன்றுவதன்பொருள்படுவ தோரிடைச்சொல். வானும் நிலனுஞ் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக்குமென்பதாம். (ரு)

ருசசு. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். சு.

இ - ள். மன்னவன் வென்றி தருவது வேல் அன்று கோல் - மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக் கொடுப்பது அவனெறியும் வேலன்று கோல்,—அதூஉம் கோடாது எனின் - அஃதும் அப்பெற்றித்தாவது தான் கோடாதாயின். எ - று.

கோல் செவ்விதாயவழியேவேல் வாய்ப்பதென்பார் வேலன்றென்றார்: "மாண்டவறநெறி முதற்றே யரசின் கொற்றம்*" என்றார் பிறரும். கோடானென்பது பாடமாயின், கருவியின்றொழில் வினைமுதன்மேனின்றதாக வுரைக்க. (சு)

ருசஎ. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். எ.

இ - ள். வையகம் எல்லாம் இறை காக்கும் - வையகத்தையெல்லாம் அரசன் காக்கும்;—அவனை முறை காக்கும் - அவன்றன்னை அவனது செங்கோலே காக்கும்,—முட்டாச் செயின் - அதனை முட்டவந்துழியும் முட்டாமற்செலுத்துவனாயின். எ - று.

முட்டாமற் செலுத்தியவாறு மகனை முறைசெய்தான் † கண்ணும் தன்கை குறைத்தான் ‡ கண்ணுங் காண்க. முட்டாதென்பதன் இறுதிநிலை விகாரத்தாற்

* புறநானூறு, ருரு.

† மனுநீதிகண்டசோழன். சிலப்பதிகாரம், உ௦, வழக்குரைகாதை, ருங-ருரு.

‡ பொற்கைப்பாண்டியன். சிலப்பதிகாரம், உங, கட்டுரைகாதை, சஉ-ருங.

ருக்கது. இவை நான்கு பாட்டானும் அதனைச் செலுத்தினானெய்தும் பயன் கூறப்பட்டது. (எ)

ருசஅ. எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தாற் றானே கெடும். அ.

இ - ள். எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன் - முறைவேண்டினார்க்கு எளிய செவ்வியையுடையனாய் அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோடுமாராய்ந்து நின்றவுண்மைக்கொப்ப முறை செய்யாதவரசன்—தண்பதத்தான் தானே கெடும் - தாழ்ந்த பதத்திலே நின்று தானே கெடும். எ - று.

எண்பதத்தானென்னும் முற்றுவினையெச்சமும், ஓராவென்னும் வினையெச்சமும், செய்யாவென்னும் பெயரெச்சவெதிர்மறையுட் செய்தல்வினைகொண்டன. தாழ்ந்த பதம் பாவமும் பழியுமெய்திநிற்குநிலை. "அல்லவைசெய்தாற் கறங்கூற்றம்*" ஆகலின், பகைவரின்றியுங்கெடுமென்றார். இதனான் முறைசெலுத்தாதானது கேடு கூறப்பட்டது. (அ)

ருசகூ. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். கூ.

இ - ள். குடி புறங்காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் - குடிகளைப் பிறர் நலியாமற் காத்துத் தானும் நலியாது பேணி, அவர் மாட்டுக் குற்றநிகழின் அதனை பொறுப்பாளாழித்தல்—வேந்தன் வடு அன்று தொழில் - வேந்தனுக்குப் பழியன்று, தொழிலாகலான். எ - று.

துன்பஞ்செய்தல், பொருட்கோடல், கோறலென ஒறுப்பு மூன்று; அவற்றுள் ஈண்டைக்கெய்துவன முன்னையவென்பது குற்றங்கடிதலென்பதனாற் பெற்றாம். தன் கீழ் வாழ்வாரை யொறுத்தல் அறனன்மையின் வடுவாமென்பதனை யாசங்கித்து, அஃதாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தினீக்கித் தூயராக்குதலுஞ் சாதிதருமமென்றார். (கூ)

ருரு௦. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். க௦.

இ - ள். வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல் - அரசன் கொடியவர்களைக் கொலையானொறுத்துத் தக்கோரைக் காத்தல்—பைங்கூழ் களை கட்டதனொடு நேர் - உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்ததனோடொக்கும். எ - று.

கொடியவரென்றது தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற்கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில் விழைவாரென்றிவர் முதலாயினாரை. இவரை வடநூலார் ஆததாயிகளென்ப. இப்பெற்றியாரைக் கண்ணோடிக் கொல்லாவழிப் புற்களைக்கு அஞ்சாநின்ற பைங்கூழ்போன்று நலிவுபடுவெய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதிதருமமென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டானுஞ் செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தற்குத் தீயார்மாட்டு மூவகையொறுப்பும் ஒழியற்பால வல்லவென்பது கூறப்பட்டது. (க௦)

---

* நான்மணிக்கடிகை, அ௫. மேலே உகூ-ம் பக்கத்திற்காண்க.

௫௬-ம் அதி.—கொடுங்கோன்மை.

அஃதாவது அம்முறையினது கோடுதற்றன்மை. ஈண்டும் உவமையின் பெயர் பொருண்மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறாகலின், இஃததன்பின் வைக்கப்பட்டது.

௫௫௧. கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து. ௧.

இ - ள். கொலை மேற்கொண்டாரிற் கொடிது - பகைமைபற்றிக் கொல்லுதற்றொழிலைத் தம்மேற்கொண்டொழுகுவாரினுங்கொடியன்—அலை மேற்கொண்டு அல்லவை செய்து ஒழுகும் வேந்து - பொருள் வெஃகிக் குடிகளையலைத்தற்றொழிலைத் தன்மேற்கொண்டு முறையல்லவற்றைச் செய்தொழுகும் வேந்தன். எ - று.

அவர் செய்வது ஒருபொழுதைத் துன்பம், இவன் செய்வது எப்பொழுதுந் துன்பமாமென்பதுபற்றி, அவரினுங் கொடியனென்றார். பான்மயக்குறழ்ச்சி. வேந்தென்பது உயர்திணைப்பொருட்கண்வந்த அஃறிணைச்சொல். அலை கொலையினுங் கொடிதென்பதாயிற்று. (௧)

௫௫௨. வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு. ௨.

இ - ள். வேலொடு நின்றான் - ஆறலைக்குமிடத்துத் தனியே வேல்கொண்டு நின்ற கள்வன்—இடு என்றது போலும் - ஆறுசெல்வானை நின்கைப்பொருடாவென்று வேண்டுதலோ டொக்கும்—கோலொடு நின்றான் இரவு - ஒறுத்தற்றொழிலோடு நின்றவரசன் குடிகளைப் பொருள் வேண்டுதல். எ - று.

வேலொடு நின்றானென்றதனாற் பிறரோடு நில்லாமையும், இரவென்றதனால் இறைப்பொருளன்மையும், பெற்றாம். தாராக்கால் ஒறுப்பலென்னுங் குறிப்பினனாகலின், இரவாற்கோடலும் கொடுங்கோன்மையாயிற்று. இவையிரண்டுபாட்டானுங் கொடுங்கோன்மையது குற்றங் கூறப்பட்டது. (௨)

௫௫௩. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும். ௩.

இ - ள். நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன் - தன்னாட்டு நிகழுந் தீமைகளை நாடோறுமாராய்ந்து அதற்கொக்க முறைமையைச் செய்யாதவரசன்—நாடொறும் நாடு கெடும் - நாடோறும் நாடிழக்கும். எ - று.

அரசனுக்கு நாடு உறுப்பாகலின், அதன்வினை அவன்மேனின்றது. இழத்தல் பயனெய்தாமை. மன்னவனொடு நாடொறுங் கெடுமென்றுரைப்பாருமுளர். (௩)

௫௫௪. கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு. ௪.

இ - ள். சூழாது கோல் கோடிச் செய்யும் அரசு - மேல் விளைவதெண்ணாது முறைதப்பச் செய்யுமரசன்—கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் - அச்செயலான் முன்னீட்டிய பொருளையும் பின்னீட்டுதற்கேதுவாகிய குடிகளையுஞ் சேரவிழக்கும். எ - று.

கோடவென்பது திரிந்து நின்றது. முன்னீட்டியபொருள் இழத்தற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப. (௪)

ருருரு. அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. ரு.

இ - ள். அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண்ணீர் அன்றே - அரசன் முறைசெய்யாமையாற் குடிகள் துன்பமுற்று அதனைப் பொறுக்கமாட்டாது அழுத கண்ணீரன்றே—செல்வத்தைத் தேய்க்கும் படை - அவன் செல்வத்தைக் குறைக்குங் கருவி. எ - று.

அழுதகண்ணீர் அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தையென்னுமையின், இஃதேகதேசவுருவகம். அல்லற்படுத்திய பாவத்தது தொழில் அதற்கேதுவாகிய கண்ணீர்மேனின்றது. அக்கண்ணீரிற் கொடிது பிறிதின்மையின், செல்வங் கடிதிற்றேயுமென்பது கருத்து. (ரு)

ருருசு. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி. சு.

இ - ள். மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை - அரசர்க்குப் புகழ்கடாம் நிலைபெறுதல் செங்கோன்மையானும்;—அஃது இன்றேல் மன்னர்க்கு ஒளி மன்னுவாம் - அச்செங்கோன்மையில்லையாயின், அவர்க்கு அப்புகழ்கடாம் உளவாகா. எ-று.

விகாரத்தாற்ருெக்க மூன்ருவது விரித்து ஆக்கம் வருவித்துரைக்கப்பட்டது. மன்னுதற்கேது புகழாதல் "இந்நிலத்து மன்னுதல் வேண்டி னிசைநடுக*" என்பதனுனுமறிக. மன்னுமை ஒருகாலு நிலையாமை. பழிக்கப்பட்டால் ஒளி மன்னுவாம், ஆகவே, தாமுமன்னுரென்பதாயிற்று. வென்றி, கொடை முதலிய வேதுக்களாற் புகழ் பகுதிப்படுதலின், பன்மையாற் கூறினுர். அவையெல்லாம் செங்கோன்மையில்வழி இலவாமென்பதாம். இவைநான்குபாட்டானுங் கொடுங்கோலனுயினுன் எய்துங் குற்றங் கூறப்பட்டது. (சு)

ருருஎ. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு. எ.

இ - ள். துளியின்மை ஞாலத்திற்கு எற்று - மழையில்லாமை வையத்து வாழுமுயிர்கட்கு எவ்வகைத் துன்பம் பயக்கும்,—அற்றே வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு - அவ்வகைத்துன்பம் பயக்கும் அரசன் றண்ணளியில்லாமை அவனாட்டு வாழுங் குடிகட்கு. எ - று.

சிறப்புப்பற்றித் துளியென்பது மழைமேனின்றது; உயிரென்பது குடிகண்மேனின்றது. மேல் வானேக்கிவாழு மென்றதனை எதிர்மறை முகத்தாற் கூறியவாறு. (எ)

ருருஅ. இன்மையி னின்ன துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். அ.

இ - ள். முறை செய்யா மன்னவன் கோற்கீழ்ப் படின் - முறைசெய்யாத அரசனது கொடுங்கோலின்கீழ் வாழின்,—இன்மையின் உடைமை இன்னது - யாவர்க்கும் பொருளினதின்மையினும் உடைமை இன்னது. எ - று.

தனக்குரிய பொருளோடு அமையாது மேலும் வெஃகுவோனது நாட்டுக் கைக்கோவ யாப்புண்டல் முதலிய வருவது பொருளுடையார்க்கே யாகலின், அவ்வுடைமை

* நான்மணிக்கடிகை.

இன்மையினுமின்னாதாயிற்று. இவையிரண்டு பாட்டானும் அவனாட்டு வாழ்வார்க்கு வருங்குற்றங் கூறப்பட்டது. (௮)

௫௫௯. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல். ௯.

இ-ள். மன்னவன் முறை கோடிச் செய்யின் - மன்னவன் தான் செய்யும் பொருளை முறை தப்பச் செய்யுமாயின்,—உறை கோடி வானம் பெயல் ஒல்லாது - அவனாட்டுப் பருவமழை இன்றாம்வகை மேகம் பொழிதலைச்செய்யாது. எ-று.

இரண்டிடத்துங் கோட்டவென்பன திரிந்துநின்றன. உறைகோடுதலாவது பெய்யுங்காலத்துப் பெய்யாமை. அதற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப. (௯)

௫௬௦. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின். ௧௦.

இ-ள். காவலன் காவான் எனின் - காத்தற்குரியவரசன் உயிர்களைக் காவானாயின்—ஆ பயன் குன்றும் - அறனில்லாத அவனாட்டுப் பசுக்களும் பால்குன்றும்,—அறுதொழிலோர் நூல் மறப்பர் - அந்தணரும் நூல்களை மறந்துவிடுவர். எ-று.

ஆபயன் ஆவாற்கொள்ளும் பயன். அறுதொழிலாவன ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலெனவிவை. பசுக்கள் பால்குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற்குரியார் மந்திரங்கற்பமென்பன ஓதாமையானும், வேள்வி நடவாதாம்; ஆகவே, வானம் பெயலொல்லாதென்பதாயிற்று. இவையிரண்டு பாட்டானும் அவனாட்டின்கணிகழுங்குற்றங் கூறப்பட்டது. (௧௦)

௫௭ம் அதி.—வெருவந்தசெய்யாமை.

அஃதாவது குடிகளஞ்சுவதும் பகுதி * யஞ்சுவதும் தானஞ்சுவதுமாய தொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மைப்பாற்படுதலின், இஃததன்பின் வைக்கப்பட்டது.

௫௬௧. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து. ௧.

இ-ள். தக்காங்கு நாடி - ஒருவன் தன்னின்மெலியார்மேற் சென்றவழி அதனை நடுவாக நின்றாராய்ந்து—தலைச்செல்லாவண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - பின்னும் அது செய்யாமற்பொருட்டு அவனை அக்குற்றத்திற்கொப்ப ஒறுப்பானே அரசனாவான். எ-று.

தக்காங்கு ஒத்தாங்கென்பன ஒருசொல். தகுதியென்பது நடுவுநிலைமையாதல் "தகுதி யெனவொன்று நன்றே†" என்பதனானுமறிக. இதனானே தக்காங்கு நாடாமையும், பிறிதோர்காரணம்பற்றி மிகவொறுத்தலும், குடிகளஞ்சும் வினையாதல் பெற்றாம். (௧)

௫௬௨. கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர். ௨.

* பகுதி - மந்திரிமுதலியவர்கள். † குறள், ௧௧௧.

இ - ள். கடிது ஓச்சி - அவ்வொத்தாங்கொறுத்தல் தொடங்குங்கால் அளவிறப் பச்செய்வார்போற் றொடங்கி,—மெல்ல எறிக - செய்யுங்கால் அளவிறவாமற் செய்க—ஆக்கம் நெடிது நீங்காமை வேண்டுபவர் - ஆக்கந் தங்கணெடுங்கால நிற்றலை வேண்டுவார். எ - று.

கடிதோச்சல் குற்றஞ்செய்வார் அதனை யஞ்சுதற் பொருட்டும், மெல்லவெறிதல் யாவரும் வெருவாமைப்பொருட்டுமாம். தொடங்கினவளவிற் குறைதல்பற்றி மென்மை கூறப்பட்டது. ஓச்சுதல் எறிதலென்பனவிரண்டும் உவமைபற்றி வந்தன. இவையிரண்டு பாட்டானும் குடிகள் வெருவந்த செய்யாமைய தியல்பு கூறப்பட்டது.

ருசுந. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னொருவந்த மொல்லைக் கெடும். ந.

இ - ள். வெருவந்த செய்து ஒழுகும் வெங்கோலன் ஆயின் - குடிகள் வெருவிய செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலனுமாயின்,—ஒருவந்தம் ஒல்லைக் கெடும் - அரசன் ஒருதலையாகக் கடிதிற் கெடும். எ - று.

வெங்கோலனென்பது ஈண்டு வாளா பெயராய் நின்றது. ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தமென்பன ஒருபொருட்கிளவி. அச்செயல்களுங் கேடுகளும் முன்னர்க் கூறப்படும். (ந)

ருசுச. இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும். ச.

இ - ள். இறை கடியன் என்று உரைக்கும் இன்னாச்சொல் வேந்தன் - குடிகளான் நம்மிறைவன் கடியனென்று சொல்லப்படும் இன்னாதசொல்லையுடைய வேந்தன்—உறை கடுகி ஒல்லைக்கெடும் - ஆயுளுங்குறைந்து செல்வமுங் கடிதினிழக்கும். எ - று.

நெஞ்சு நொந்து சொல்லுதலான், இன்னாமை பயப்பதாய சொல்லை இன்னாச்சொல்லென்றார். உறையென்பது முதனிலைத் தொழிற்பெயர். அஃது ஈண்டாகுபெயராய் உறைதலைச்செய்யும் நாண்மேனின்றது. அது குறைதலாவது அச்சொல்லில்லாதார்க்கு உள்ளதிற் சுருங்குதல். (ச)

ருசுரு. அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. ரு.

இ - ள். அருஞ்செவ்வி இன்னாமுகத்தான் பெருஞ்செல்வம் - தன்னைக் காண வேண்டுவார்க்குக் காலமரியனாய்க் கண்டால் இன்னாத முகத்தினையுடையானது பெரியசெல்வம்—பேய் கண்டன்னது உடைத்து - பேயாற் காணப்பட்டாற்போல்வதொரு குற்றமுடைத்து. எ - று.

எனவே, இவை யிரண்டும் வெருவந்த செய்தலாயின. இவை செய்வானைச் சார்வாரின்மையின், அவனது செல்வந் தனக்கும் பிறர்க்கும் பயன்படா தென்பதுபற்றிப் பேய்கண்டன்னதுடைத்தென்றார். காணுதல் தன்வயமாக்குதல். (ரு)

ருசுசு. கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும். சு.

இ - ள். கடுஞ்சொல்லன் கண் இலன் ஆயின் - அரசன் கடியசொல்லையுமுடைய னாய்க் கண்ணோட்டமுமிலனாயின்,—நெடுஞ் செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும் - அவனது பெரியசெல்வம் நீடுதலின்றி அப்பொழுதே கெடும். எ - று.

"வேட்டங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதுபொரு—ளீட்டங்கட் காமமோ டேழு" எனப்பட்ட விதனங்களுட் கடுஞ்சொல்லையும் மிகுதண்டத்தையும் இவர் இவ்வெருவந்தசெய்தலுளடக்கினார். கண் ஆகுபெயர். இவை செய்தபொழுதே கெடுஞ்சிறுமைத்தன்றாயினு மென்பார், நெடுஞ்செல்வமென்றார். நீடுதல் நீட்டித்தல்.

ருசாஎ. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம். எ.

இ - ள். கடுமொழியும் கையிகந்த தண்டமும் - கடிய சொல்லுங் குற்றத்தின் மிக்க தண்டமும்—வேந்தன் அடு முரண் தேய்க்கும் அரம் - அரசனது பகை வெல்லு தற்கேற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அரமாம். எ - று.

கடுமொழியாற்றானையுங் கையிகந்த தண்டத்தாற்றேசமுங் கெட்டு முரண் சுருங்கி வருதலின் அவற்றை அரமாக்கி, திண்ணிதாயினுந் தேயுமென்றற்கு அடுமுரணை இரும்பாக்கினார். ஏகதேசவுருவகம். அரமென்பதனைத் தனித்தனி கூட்டுக*. இவை யைந்துபாட்டானும், செவ்வியின்மை, இன்னாமுகமுடைமை, கண்ணோட்டமின்மை, கடுஞ்சொற்சொல்லல், கையிகந்ததண்டமென்றிவைகள் குடிகளஞ்சும் வினையென்ப தூஉம், இவைசெய்தான் ஆயுளும் அடுமுரணுஞ் செல்வமு மிழக்குமென்பதூஉங் கூறப்பட்டன. (எ)

ருசாஅ. இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு. அ.

இ - ள். இனத்து ஆற்றி எண்ணாத வேந்தன் - காரியத்தைப்பற்றி வந்த வெண் ணத்தை அமைச்சர்மேல்வைத்து அவரோடு தானுமெண்ணிச் செய்யாதவரசன்—சினத்து ஆற்றிச் சீறின் - அப்பிழைப்பாற் றன்காரியந் தப்பியவழித் தன்னைச் சின மாகிய குற்றத்தின்கண்ணே செலுத்தி அவரை வெகுளுமாயின்,—திருச் சிறுகும் - அவன்செல்வம் நாடோறுஞ் சுருங்கும். எ - று.

அரசர்பாரம்பொறுத்துய்த்த லொப்புமையான் அமைச்சரை இனமென்றும், தான் பின் பிழைப்பாதலறிந்து அமையாது அதனை அவர்மேலேற்றி வெகுளின் அவர் வெரீஇ நீங்குவர்; நீங்கவே, அப்பிழைப்புத் தீருமாறும் அப்பாரமினிதுய்க்குமாறும் இலனாமென்பது நோக்கித் திருச்சிறுகுமென்றுங் கூறினார். இதனாற் பகுதியஞ்சும் வினையும் அது செய்தானெய்துங் குற்றமுங் கூறப்பட்டன. (அ)

ருசாகூ. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். கூ.

இ - ள். சிறை செய்யா வேந்தன் - செரு வருதற்குமுன்னே தனக்குப் புகலாவ தோரரண் செய்துகொள்ளாதவரசன்—செருவந்த போழ்தில் வெருவந்து வெய்து கெடும் - அது வந்தகாலத்து ஏமமின்மையான் வெருவிக் கடிதிற்கெடும். எ - று.

* இவ்வாறு ஒருமைப்பெயரை வாக்கியபேதமாகத் தனித்தனி கூட்டி முடிப்பதனைத் தேர்வடமிழுப்பார்போலப் பிரத்தியேகபந்தாந்வய மென்பர் வடநூலார்.

பகையைவெருவிச் சேர்ந்தார்நீங்குதலிற் றமியனாய்த் தானும்வெருவி அப்பகை வயத்தனாமென்பதாம். இதனால் தானஞ்சும் வினையும் அது செய்தானெய்தும் பயனுங் கூறப்பட்டன. (௯)

௫௭0. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை. ௧0.

இ - ள். கடுங்கோல் கல்லார்ப் பிணிக்கும் - கடுங்கோலனாயவரசன் நீதிநூன் முதலிய கல்லாதாரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டாநிற்கும்;—அதுவல்லது நிலக்குப் பொறை இல்லை - அக்கூட்டமல்லது நிலத்திற்கு மிகையாய பாரம் பிறிதில்லை. எ - று.

கடுங்கோலென்பது ஈண்டு மிக்க தண்டத்தின்மேற்றன்றி அதனைச் செய்வான் மேற்றாயிற்று. அவன் அது செய்தற்கியைவாரையல்லது கூட்டாமையிற் கல்லார்ப் பிணிக்குமென்றும், ஏனையவற்றையெல்லாம் பொறுக்கின்றதியல்பாகலின் நிலத்திற்குப் பொறை அதுவல்லதில்லையென்றுங் கூறினார். நிலக்கென்பது செய்யுள்விகாரம். இதனால் வெருவந்த செய்தலின் குற்றங் கூறப்பட்டது. (௧0)

௫௮ ம் அதி.—கண்ணோட்டம்.

அஃதாவது தன்னொடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று. மேல் வெருவந்தசெய்யாமையுட் கூறியவதனையே சிறப்புப்பற்றி விரித்துக்கூறுகின்றமையின், இஃததன்பின் வைக்கப்பட்டது.

௫௭௧. கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு. ௧.

இ - ள். கண்ணோட்டம் என்னும் கழி பெருங்காரிகை உண்மையான் - கண்ணோட்டமென்று சொல்லப்படுகின்ற சிறப்புடையவழகு அரசர்மாட்டு உண்டாகலான்,—இவ்வுலகு உண்டு - இவ்வுலகமுண்டாகாநின்றது. எ - று.

கழிபெருங்காரிகையென்புழி ஒருபொருட்பன்மொழி இவ்வுயிரழகது சிறப்புணர நின்றது. இவ்வழகு அதற்குறுப்பாகலின், உண்மையானென நிலைபேறுங்கூறினார். இன்மை வெருவந்தசெய்தலாகலின் அவர்நாட்டு வாழ்வார் புலியையடைந்த புல்வாயினம்போன்று ஏமஞ்சாராமைபற்றி, இவ்வுலகுண்டென்றார். (௧)

௫௭௨. கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை. ௨.

இ - ள். உலகியல் கண்ணோட்டத்து உள்ளது - உலகநடை கண்ணோட்டத்தின் கண்ணே நிகழ்வது—அஃது இலார் உண்மை நிலக்குப் பொறை - ஆகலான், அக்கண்ணோட்டமில்லாதார் உளராதல் இந்நிலத்திற்குப் பாரமாதற்கே, பிறிதொன்றற்கன்று. எ - று.

உலகநடையாவது ஒப்புரவுசெய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தலென்றிவைமுதலாயின. அவைநிகழாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பதுபற்றி, நிலக்குப்பொறையென்றார். ஆதற்கென்பது சொல்லெச்சம். இவையிரண்டுபாட்டானுங் கண்ணோட்டத்தது சிறப்புக் கூறப்பட்டது. (௨)

௫௭௩. பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங்
　　கண்ணோட்ட மில்லாத கண்.　　　　௩.

இ - ள். பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல் - பண் என்னபயத்ததாம் பாடற்றொழிலோடு பொருத்தமின்றாயின்!—கண் என்னும் கண்ணோட்டம் இல்லாத கண் - அதுபோலக் கண் என்னபயத்ததாங் கண்ணோட்டமில்லாதவிடத்து! எ - று.

பண் கண்ணென்பன சாதிப்பெயர். பண்களாவன பாலையாழ்முதலிய நூற்று மூன்று. பாடற்றொழில்களாவன யாழின்கண் வார்தல் முதலியவெட்டும்*, பண்ணல் முதலியவெட்டும்†, மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடில மென்னுமைந்தும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ணமுதலிய வண்ணங் களெழுபத்தாறுமாம். இவற்றொடியையாதவழிப் பண்ணாற்பயனில்லாதவாறுபோலக் கண்ணோட்டத்தியையாதவழிக் கண்ணாற்பயனில்லையென்பதாம். கண் சென்றவழி நிகழ்தல்பற்றி அதனை யிடமாக்கினார். இறுதிக்கட் கண்ணென்பதனைக் "கண்ணகன் ஞாலம்‡" என்புழிப்போலக் கொள்க.　(௩)

௫௭௪. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
　　கண்ணோட்ட மில்லாத கண்.　　　　௪.

இ - ள். முகத்து உளபோல் எவன் செய்யும் - கண்டார்க்கு முகத்தின்கண் உள போற்றோன்றலல்லது வேறென்ன பயனைச் செய்யும்—அளவினான் கண்ணோட்டம் இல்லாத கண் - அளவிறவாத கண்ணோடுதலையுடையவல்லாத கண்கள். எ - று.

தோன்றலல்லதென்னுஞ்சொற்கள் அவாய்நிலையான் வந்தன. கழிகண்ணோட்டத் தினீக்குதற்கு, அளவினானென்றார். ஒருபயனையுஞ் செய்யாவென்பது குறிப்பெச்சம்.

௫௭௫. கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
　　புண்ணென் றுணரப் படும்.　　　　௫.

இ - ள். கண்ணிற்கு அணி கலம் கண்ணோட்டம் - ஒருவன் கண்ணிற்கு அணியுங் கலமாவது கண்ணோட்டம்,—அஃது இன்றேல் புண் என்று உணரப்படும் - அக்கல மில்லையாயின் அஃதறிவுடையாரால் புண்ணென்றறியப்படும். எ - று.

வேறணிகலமின்மையிற் கண்ணிற்கணிகலமென்றும், கண்ணாய்த்தோன்றினும் நோய்களானும் புலன்பற்றலானுந் துயர்விளைத்தனோக்கிப் புண்ணென்றுணரப்படு மென்றுங் கூறினார். இவை மூன்றுபாட்டானும் ஓடாது நின்ற கண்ணின்குற்றங் கூறப்பட்டது.　(௫)

௫௭௬. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
　　டியைந்துகண் ணோடா தவர்.　　　　௬.

* வார்தல் முதலிய இசைக்காரணங்களெட்டாவன வார்தல், வடித்தல், உந்தல், உறழ் தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை எனவிவை.

† பண்ணல் முதலிய கலைத்தொழில்களெட்டாவன பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு எனவிவை.

‡ திரிகடுகம். க.

அதனையேயுபசாரவழக்காற் றொழிலென்றுங் கூறினார். ஒற்றென்பது அதிகாரத் தான் வந்தது. இதனால் ஒற்றினாய பயன் கூறப்பட்டது. (௨)

௫௮௩. ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். ௩.

இ - ள். ஒற்றினான் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் - ஒற்றினானே எல்லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றுவித்து அவற்றானெய்தும் பயனையாராயாதவரசன்—கொற்றம் கொளக் கிடந்தது இல் - வென்றியடையக்கிடந்தது வேறொருநெறியில்லை. எ - று.

அந்நிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்கெளியனாதல் பிறிதிற்றீராமையின், கொற்றங்கொளக்கிடந்ததில்லென்றார். இதற்குக் கொளக்கிடந்ததொரு வென்றியில்லை யென்றுரைப்பினுமமையும். இதனால் அத்தொழில் செய்யாதவழி வருங்குற்றங் கூறப் பட்டது. (௩)

௫௮௪. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று. ௪.

இ - ள். தம் வினை செய்வார் சுற்றம் வேண்டாதார் என்ற அனைவரையும் ஆராய்வது - தங்காரியஞ் செய்வார், சுற்றத்தார், பகைவரென்று சொல்லப்பட்ட அனைவரையும் சொற்செயல்களானாராய்வானே—ஒற்று - ஒற்றனாவான். எ - று.

தம்மென்றது அரசனோடுளப்படுத்தி. அவனுக்குக் காரியஞ்செய்வார் செய்வனவும், சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்துஞ் செய்வனவும், பகைவர் தன்னற்றமாராய்தலும் மேற்றேறப்படுதலும் முன்னிட்டுத் தன்னிடத்துச் செய்வனவுமறிந்து, அவற்றிற்கேற்றன செய்யவேண்டுதலின், இம்மூவகையாரையும் எஞ்சாமலாராய வேண்டுமென்பார், அனைவரையுமாராய்வ தொற்றென்றார். (௪)

௫௮௫. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று. ௫.

இ - ள். கடா உருவொடு - ஒற்றப்பட்டார் கண்டால் ஐயுறாதவடிவோடு பொருந்தி—கண் அஞ்சாது - அவர் ஐயுற்றறியலுறிற் செயிர்த்து நோக்கிய அவர்கண்ணிற்கஞ்சாது நின்று—யாண்டும் உகாமை வல்லதே ஒற்று - நான்குபாயமுஞ் செய்தாலும் மனத்துக்கொண்டவற்றை உமிழாமை வல்லவனே ஒற்றனாவான். எ - று.

கடாவென்பது கடுக்குமென்னும் பெயரெச்சத்தெதிர்மறை. ஐயுறாத வடிவாவன பார்ப்பார், வணிகர் முதலாயினார் வடிவு. (௫)

௫௮௬. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று. ௬.

இ - ள். துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து ஆராய்ந்து - முற்றத்துறந்தாராயும் விரதவொழுக்கினராயும் உள்புகுதற்கரியவிடங்களெல்லாம் உள்புக்கு ஆராயவேண்டுவன வாராய்ந்தறிந்து—என் செயினும் சோர்வு இலது ஒற்று - ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து எல்லாத்துன்பமுஞ்செய்து கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான். எ - று.

விரதவொழுக்கம் தீர்த்தயாத்திரை முதலாயின. செயினுமென்பது அறவோரென்று செய்வாரின்மை விளக்கி நின்றது. மேல் நால்வகையுபாயத்தினுஞ் சோர்வின்மைசொல்லிவைத்து ஈண்டுந் தண்டத்தைப் பிரித்துக் கூறியது அதனது பொறுத்தற்கருமைச்சிறப்பு நோக்கி. இதனுட் படிவமென்றதனை வேடமாக்கித் துறந்தார் வேடத்தாராகியென்றுரைப்பாருமுளர். (௬)

௫௮௭. மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
ஐயப்பா டில்லதே யொற்று. ௭.

இ - ள். மறைந்தவை கேட்க வற்று ஆகி - ஒற்றப்பட்டார் மறையச்செய்த செயல்களை அவர்க்குள்ளாயினாராற் கேட்க வல்லனாய்—அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று - கேட்டறிந்த செயல்களிற் பின் ஐயப்படாது துணியவல்லவனே ஒற்றனாவான். எ - று.

மறைந்தவை சொல்லுவாரையறிந்து, அவரயிராமற்சென்றொட்டித் தாமே சொல்லும்வகை அதற்கேற்ற சொல்லாக செயலாக முன்னே விளைத்து, அத்தொடர்பாற்கேட்குங்காலும் உறுதார்போன்றுநின்று கேட்கவேண்டுதலிற் கேட்கவற்றாகியென்றும், கேட்டறிந்தவற்றைத் தானேயையுற்றுவந்து சொல்லின் அரசனால் அவற்றிற்கேற்ற வினை செய்யலாகாமையின் ஐயப்பாடில்லதே யென்றுங்கூறினார். இவை நான்குபாட்டானும் ஒற்றின திலக்கணங் கூறப்பட்டது. (௭)

௫௮௮. ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினா லொற்றிக் கொளல். ௮.

இ - ள். ஒற்று ஒற்றித் தந்தபொருளையும் - ஓரொற்றன் ஒற்றிவந்தறிவித்தகாரியந்தன்னையும்—மற்றும் ஓரொற்றினால் ஒற்றிக்கொளல் - பிறனோரொற்றனாலும் ஒற்றுவித்து ஒப்புமை கண்டுகொள்க. எ - று.

ஒற்றப்பட்டாரோடொத்துநின்று மாறுபடக்கூறலுங் கூடுமோகலின், ஒருவன் மாற்றந் தேறப்படாதென்பதாம். (௮)

௫௮௯. ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும். ௯.

இ - ள். ஒற்று ஒற்று உணராமை ஆள்க - ஒற்றரையாளுமிடத்து ஒருவனையொருவனறியாமலாள்க;—உடன் மூவர் சொல் தொக்க தேறப்படும் - அங்ஙனமாண்ட வொற்றர்மூவரை ஒருபொருண்மேல் வேறுவேறுவிட்டால் அம்மூவர் சொல்லும் பயனொத்தனவாயின், அது மெய்யென்று தெளியப்படும். எ - று.

ஆயினென்பது வருவிக்கப்பட்டது. ஒருவனையொருவனறியிற் றம்முளியைந்து ஒப்பக்கூறுவராகலின் உணராமையாள்கவென்றும், மூவர்க்கு நெஞ்சொற்றுமைப்படுதலும் பட்டால் நீடுநிற்றலுங்கூடாமையிற் றேறப்படுமென்றுங்கூறினார். இதனானே அஃதொத்தில்வாயிற் பின்னுமாராய்கவென்பதூஉம் பெற்றாம். (௯)

௫௯௦. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை. ௧௦.

இ - ள். ஒற்றின்கண் சிறப்பு அறியச் செய்யற்க - மறைந்தவையறிந்து கூறிய ஒற்றின்கட்செய்யுஞ்சிறப்பினை அரசன் பிறரறியச் செய்யாதொழிக;—செய்யின் மறை

புறப்படுத்தான் ஆகும் - செய்தானாயிற் றன்னகத்தடக்கப்படும் மறையைத் தானே புறத்திட்டானும். எ - று.

மறையாவது அவனெற்றனுயதூஉம், அவன் கூறியதூஉமாம். சிறப்புப்பெற்ற விவன் யாவனென்றும் இது பெறுதற்குக் காரணம் யாதென்றும் வினவுவாரும் இறுப்பாரும் அயலாராகலின், புறப்படுத்தானுகுமென்றார். இவைமூன்றுபாட்டானும் ஒற்றரை யாளுமாறும், அவராணிகழ்ந்தனவறியுமாறும், அறிந்தாற் சிறப்புச் செய்யு மாறுங் கூறப்பட்டன. (கo)

சுo ம் அதி.—ஊக்கமுடைமை.

அஃதாவது மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கட் கிளர்ச்சியுடைத்தாதல். ஒற்றரான் நிகழ்ந்தனவறிந்து அவற்றிற்கேற்ற வினைசெய்வானுக்கு இஃதின்றியமை யாமையின், ஒற்றாடலின்பின் வைக்கப்பட்டது.

ருசுக. உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று. க.

இ - ள். உடையர் எனப்படுவது ஊக்கம் - ஒருவரை உடையரென்று சொல்லச் சிறந்தது ஊக்கம்;—அஃது இல்லார் மற்று உடையது உடையரோ - அவ்வூக்கமில்லா தார் வேறுடையதுதானும் உடையராவரோ, ஆகார். எ - று.

வேறுடையதென்றது முன்னெய்திநின்ற பொருளை. உம்மை விகாரத்தாற்றெக் கது. காக்குமாற்றலிலராகலின், அதுவுமிழப்ப ரென்பதாம். (க)

ருசுஉ. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். உ.

இ - ள். உள்ளம் உடைமை உடைமை - ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலை நின்ற உடைமையாவது;—பொருள் உடைமை நில்லாது நீங்கிவிடும் - மற்றைப் பொருளுடைமை நிலைநில்லாது நீங்கிப்போம். எ - று.

உள்ளம் ஆகுபெயர். ஊக்கம் உள்ளத்துப் பண்பாகலின், அதற்கு நிலைநிற்றலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிதன்மாலைத்தாகலின் அதற்கு நிலை நில்லாமையுங் கூறினார். கூறவே, அஃது உடைமையன்றென்பது பெறப்பட்டது. (உ)

ருசுங. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார். ங.

இ - ள். ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார் - இழந்தாராயினும் யாம் கைப் பொருளையிழந்தேமென் றலமரார்—ஒருவந்தம் ஊக்கம் கைத்து உடையார் - நிலை பெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக வுடையார். எ - று.

ஆக்கம் ஆகுபெயர். ஒருவந்தமாயவூக்கமென்க. கைத்து கையகத்தாயபொருள்: "கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்ம்மின்*" என்றார் பிறரும். அல்லா வாமைக்கேது வருகின்ற பாட்டாற் கூறுப. (ங)

* மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னது—கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்ம்மின்—முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா—னற்கா யுதிர்தலுமுண்டு—நாலடியார், இளமை நிலையாமை.

௫கூச. ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை. ச.

இ - ள். அசைவு இலா ஊக்கம் உடையானுழை - அசைவில்லாத ஊக்கத்தை யுடையான்மாட்டு—ஆக்கம் அதர் வினுய்ச் செல்லும் - பொருள் தானே வழிவின விக்கொண்டு செல்லும். எ - று.

அசைவின்மை இடுக்கண் முதலியவற்ருற்றளராமை. வழிவினவிச் சென்று சார்வார்போலத் தானே சென்று சாருமென்பார், அதர்வினுய்ச்செல்லுமென்ருர். எய்தி நின்ற பொருளினும் அதற்குக் காரணமாயவூக்கஞ் சிறந்ததென்பது இவை நான்கு பாட்டானுங் கூறப்பட்டது. (ச)

௫கூ௫. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு. ௫.

இ - ள். வெள்ளத்து அனைய மலர் நீட்டம் - நின்ற நீரினளவினவாம் நீர்ப்பூக்களின்ருளினது நீளங்கள்,—மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு - அதுபோல் மக்கடம்மூக்கத்தளவினதாம் அவருயர்ச்சி. எ - று.

மலர் ஆகுபெயர். நீர் மிக்கதுணையும் மலர்த்தாள் நீளுமென்பது பட, வெள்ளத் தனையவென்ருர். இவ்வுவமையாற்றலான் ஊக்கமிக்கதுணையும் மக்களுயர்வரென்பது பெறப்பட்டது. உயர்தல் பொருள்படைகளான் மிகுதல். (௫)

௫கூசு. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. சு.

இ - ள். உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் - அரசராயினுர் கருதுவதெல்லாம் தம்முயர்ச்சியையே கருதுக;—அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து - அவ்வுயர்ச்சி பால்வகையாற் கூடிற்றில்லையாயினும், அக்கருத்துத் தள்ளாமை நீர்மையுடைத்து. எ - று.

உம்மை தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. தள்ளியவழியுந் தாளாண்மையிற் றவறின்றி நல்லோராற் பழிக்கப்படாமையின், தள்ளாவியற்கைத் தென்பதாம். மேல் உள்ளத்தனையதுயர்வு என்றதனையே வற்புறுத்தியவாறு. (சு)

௫கூஎ. சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு. எ.

இ - ள். களிறு புதை அம்பின் பட்டுப் பாடு ஊன்றும் - களிறு புதையாகிய அம்பாற் புண்பட்டவிடத்துத் தளராது தன்பெருமையை நிலைநிறுத்தும்;—உரவோர் சிதைவிடத்து ஒல்கார் - அதுபோல ஊக்கமுடையார் தாங்கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்த விடத்துத்தளராது தம்பெருமையை நிலைநிறுத்துவர். எ - று.

புதை அம்புக்கட்டு: பன்மை கூறியவாறு. பட்டாலென்பது பட்டெனத் திரிந்து நின்றது. ஒல்காமை களிற்றுடனும், பாடூன்றுதல் உரவோருடனும், சென்றியைந்தன. தள்ளினுந்தவறுதுள்ளியது முடிப்பரென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஊக்கமுடையாரதுயர்ச்சி கூறப்பட்டது. (எ)

ருகூஅ. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு. அ.

இ - ள். உள்ளம் இலாதவர் - ஊக்கமில்லாதவரசர்—உலகத்து வள்ளியம் என்னும் செருக்கு எய்தார் - இவ்வுலகத்தாருள் யாம் வண்மையுடையேமென்று தம்மைத் தாமதித்தலைப் பெறார். எ - று.

ஊக்கமில்லையாகவே, முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவைமுறையே இல்லாமாகலின், செருக்கெய்தாரென்றார். கொடைவென்றியினுய வின்பம் தமக்கல்லது பிறர்க்குப் புலனாகாமையின் தன்மையாற் கூறப்பட்டது. (அ)

ருகூகூ. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். கூ.

இ - ள். பரியது கூர்ங்கோட்டது ஆயினும் - எல்லாவிலங்கினுந் தான் பேருடம்பினது அதுவேயுமன்றிக் கூரிய கோட்டையுமுடையதாயினும்,—யானை புலி தாக்குறின் வெரூஉம் - யானை தன்னைப் புலியெதிர்ப்படின் அதற்கஞ்சும். எ - று.

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய்வலியுங் கருவிச்சிறப்புமுடைத்தாயினும் யானை ஊக்கமின்மையான் அஃதுடைய அதற்கஞ்சுமென்ற இது, பகைவரின் மிக்க மெய்வலியுங் கருவிச்சிறப்புமுடையராயினும் அரசர் ஊக்கமிலராயின் அஃதுடையவரசர்க்கஞ்சுவரென்பது தோன்றநின்றமையின், பிறிதுமொழிதல். (கூ)

கூOO. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. கO.

இ - ள். ஒருவற்கு உரம் உள்ள வெறுக்கை - ஒருவற்குத் திண்ணியவறிவாவது ஊக்கமிகுதி;—அஃது இல்லார் மரம் - அவ்வூக்கமிகுதியில்லாதார் மக்களாகார், மரங்களாவார்;—மக்களாதலே வேறு - சாதிமரங்களோடு இம்மரங்களிடை வேற்றுமை வடிவு மக்கள்வடிவே, பிறிதில்லை. எ - று.

உரமென்பது அறிவாதல் "உரனென்னுந் தோட்டியான்*" என்பதனுனுமறிக. மரமென்பது சாதியொருமை. மக்கட்குள்ள நல்லறிவுங் காரியமுயற்சியுமின்மைபற்றி மரமென்றும், மரத்திற்குள்ள பயன்பாடின்மைபற்றி மக்களாதலே வேறென்றுங் கூறினர். பயன் பழமுதலியவும், தேவர்கோட்டம், இல்லம், தேர், நாவாய் கட்கு உறுப்பாதலும் முதலிய. இவைமூன்றுபாட்டானும் ஊக்கமில்லாதாரதிழிபு கூறப்பட்டது. (கO)

சுகம் அதி.—மடியின்மை.

அஃதாவது கருதியன செய்யுங்காற் சோம்புதலில்லாமை. ஊக்கமுடையார்க்கு ஒரோவழிக் குணவயத்தான் மடி வருதனோக்கி, இஃதூக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

கூOக. குடியென்னுங் குன்றா விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும். க.

* குறள், உச.

இ - ள். குடி என்னும் குன்றா விளக்கம் - தான் பிறந்த குடியாகிய நந்தா விளக்கு—மடி என்னும் மாசு ஊர மாய்ந்து கெடும் - ஒருவன் மடியாகிய இருளடர நந்திப்போம். எ - று.

உலகநடையுள்ளதுணையும் இடையறாது தன்னுட்பிறந்தாரை விளக்குதலிற் குடியைக்குன்றாவிளக்கமென்றும், தாமதகுணத்தான் வருதலின் மடியை மாசென்றும், அஃது ஏனையிருள்போலாது அவ்விளக்கைத் தானடர்ந்து மாய்க்கும் வலியுடைமையின் மாசூரமாய்ந்துகெடுமென்றுங் கூறினார். கெடுதல் பெயர்வழக்குமில்லையாதல். (௧)

௬௦௨. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். ௨.

இ - ள். குடியைக் குடியாக் வேண்டுபவர் - தாம் பிறந்த குடியை மேன்மேலுயரும் நற்குடியாக வேண்டுவார்—மடியை மடியா ஒழுகல் - மடியை மடியாகவே கருதி முயற்சியோடொழுகுக. எ - று.

முயற்சியோடென்பது அவாய்நிலையான் வந்தது. நெருப்பிற் கொடியது பிறிதின்மைபற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுகவென்றாற்போல மடியிற்றீயது பிறிதின்மைபற்றிப் பின்னும் அப்பெயர்தன்னானே கூறினார். அங்ஙனங்கருதி யதனைக் கடிந்து முயன்றொழுகவே தாமுயர்வர், உயரவே, குடியுயருமென்பார், குடியைக் குடியாக வேண்டியவரென்றார். அங்ஙனமொழுகாக்காற் குடியழியுமென்பது கருத்து. இனி மடியாவென்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுகுகவென்றுரைப்பாருமுளர். ( )

௬௦௩. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து. ௩.

இ - ள். மடி மடிக்கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி - விடத்தகுவதாய மடியைத் தன்னுள்ளே கொண்டொழுகும் அறிவில்லாதான் பிறந்த குடி—தன்னினும் முந்து மடியும் - அவன்றன்னினும் முந்தறவழியும். எ - று.

அழிவு தருவதனை அகத்தே கொண்டொழுகுதலிற் பேதையென்றும், அவனாற் புறந்தரப்படுவதாகலிற் குடி தன்னினுமுந்துற வழியுமென்றுங் கூறினார். ஆக்கத்திற் பிற்படினும் அழிவின் முற்படுமென்பதாம். (௩)

௬௦௪. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு. ௪.

இ - ள். மடி மடிந்து மாண்ட உஞற்று இலவர்க்கு - மடியின்கண்ணே வீழ்தலாற் றிருந்திய முயற்சி யிலராயினார்க்கு—குடி மடிந்து குற்றம் பெருகும் - குடியும் மடிந்து குற்றமும் பல்கும். எ - று.

மடிந்தெனத் திரிந்துநின்ற வினையெச்சம் இலவரென்னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது. குற்றங்கள் முன்னர்க் கூறுப. இவை நான்குபாட்டானும் மடியின்றீமை கூறப்பட்டது. (௪)

௬௦௫. நெடுநீர் மறவி மடிதுயி னான்குங்
கெடுநீரார் காமக் கலன். ௫.

இ - ள். மடி நெடுநீர் மறவி துயில் நான்கும் - மடியும் விரைந்துசெய்வதனை நீட்டித்துச்செய்யுமியல்பும் மறப்பும் துயிலுமாகிய இந்நான்கும்—கெடும் நீரார் காமக் கலன் - இறக்குமியல்பினையுடையார் விரும்பியேறும் மரக்கலம். எ - று.

முன்னிற்கற்பாலதாய மடி செய்யுளோக்கி இடைநின்றது. நெடுமையாகிய காலப்பண்பு அதன்கணிகழ்வதாய செயன்மேனின்றது. காலநீட்டத்தையுடைய செயன்முதல் மூன்றும் தாமதகுணத்திற்றோன்றி உடனிகழ்வனவாகலின், மடியோடு ஒருங்கெண்ணப்பட்டன. இறக்குமியல்பு நாளுலத்தல். இவை துன்புறுநீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி அவர் விரும்பிக் கொண்டவழித் துன்பத்திடை வீழ்த்தலின், நாளுலந்தார்க்கு ஆக்கம் பயப்பதுபோன்றுகாட்டி அவர் விரும்பியேறிய வழிக் கடலிடை வீழ்க்குங் கலத்தினை யொக்குமென்னும் உவமைக்குறிப்புக் காமக்கல னென்னுஞ் சொல்லாற் பெறப்பட்டது. இதற்கு விரும்பிப் பூணுமாபரணமென்றுரைப் பாருமுளர். (ரு)

சூ0சூ. படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது. சூ.

இ - ள். படி உடையார் பற்று அமைந்தக்கண்ணும் - நிலமுழுதுமாண்டாரது செல்வந் தானே வந்தெய்தியவிடத்தும்—மடி உடையார் மாண் பயன் எய்தல் அரிது- மடியுடையார் அதனான் மாண்டபயனை எய்துதலில்லை. எ - று.

உம்மை எய்தாமை விளக்கிநின்றது. மாண்பயன் பேரின்பம். அச்செல்வம் அழியாமற்காக்கும் முயற்சியின்மையின் அழியும், அழியவே, தந்துன்பநீங்காதென்பதாம். இதற்கு நிலமுழுதுமுடையவேந்தர் துணையாதல் கூடியவிடத்துமென் றுரைப் பாருமுளர். (சூ)

சூ0எ. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர். எ.

இ - ள். மடி புரிந்து மாண்ட உஞற்று இலவர் - மடியை விரும்புதலான் மாண்ட முயற்சி யில்லாதார்—இடி புரிந்து எள்ளும் சொற் கேட்பர் - தந்நட்டார் முன் கழறுதலை மிகச்செய்து அதனாற்பயன் காணாமையிற் பின் இகழ்ந்து சொல்லுஞ் சொல்லைக் கேட்பர். எ - று.

இடியென்னும் முதனிலைத்தொழிற்பெயரான், நட்டாரென்பது பெற்றாம். அவரிகழ்ச்சி சொல்லவே, பிறரிகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. அவற்றிற்கெல்லாம் மாறுசொல்லு மாற்றலின்மையின், கேட்பரென்றார். (எ)

சூ0அ. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும். அ.

இ - ள். மடிமை குடிமைக்கண் தங்கின் - மடியினது தன்மை குடிமையுடையான்கண்ணே தங்குமாயின்,—தன் ஒன்னார்க்கு அடிமை புகுத்திவிடும் - அஃதவனைத் தன் பகைவர்க்கு அடியனாந்தன்மையை யடைவித்துவிடும். எ - று.

மடியினதுதன்மை காரியக்கேடு. குடிமை குடிசெய்தற்றன்மை. அஃது அதனையுடையவரசன்மேற்றுதல், தன்னொன்னார்க்கென்றதனான் அறிக. அடியனாந்தன்மை தாழ்ந்துநின்றேவல்கேட்டல். இவைநான்குபாட்டானும் மடிமைக்குற்றங்கள் கூறப் பட்டன. (அ)

௬௦௯. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். ௯.

இ - ள். ஒருவன் மடி ஆண்மை மாற்ற - ஒருவன் தன்மடியாளுந் தன்மையை யொழிக்கவே,—குடி ஆண்மையுள் வந்த குற்றம் கெடும் - அவன் குடியுள்ளும் ஆண் மையுள்ளும் வந்த குற்றங்கள் கெடும். எ - று.

மடியாளுந்தன்மை மடியுடைமைக்கேதுவாய தாமதகுணம். குடியாண்மை யென்பது உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்தகுற்றமென்றது மடியானன்றி முன்னே பிறகாரணங்களான் நிகழ்ந்தவற்றை. அவையும் மடியாண்மையை மாற்றி முயற்சியுடையனாக நீங்குமென்பதாம். (௯)

௬௧௦. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு. ௧௦.

இ - ள். அடி அளந்தான் தாயது எல்லாம் - தன்னடியளவானே எல்லாவுலகை யுமளந்த இறைவன் கடந்த பரப்புமுழுதையும்—மடி இலா மன்னவன் ஒருங்கு எய் தும் - மடியிலாதவரசன் முறையானன்றி ஒருங்கேயெய்தும். எ - று.

அடியளந்தானென்றது வாளா பெயராய் நின்றது. தாவியதென்பது இடைக் குறைந்து நின்றது. எப்பொழுதும் வினையின்கண்ணே முயறலின், இடையீடின்றி யெய்துமென்பதாம். இவையிரண்டுபாட்டானும் மடியிலாதான் எய்தும்பயன் கூறப் பட்டது. (௧௦)

௬௨ ம் அதி.—ஆள்வினையுடைமை.

அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சியுடையனாதல். அஃது ஆளும் வினை யெனக் காரியத்தாற் கூறப்பட்டது. மடிகெடுத்தாலும் வினை முயற்சியானன்றியாளப் படாமையின், இது மடியின்மையின்பின் வைக்கப்பட்டது.

௬௧௧. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். ௧.

இ - ள். அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும் - தஞ்சிறுமை நோக்கி நாமிவ்வினைமுடித்தலருமையுடைத்தென்று கருதித் தளராதொழிக;--பெருமை முயற்சி தரும் - அது முடித்தற்கேற்ற பெருமையைத் தமக்கு முயற்சியுண்டாக் கும். எ - று.

சிறுமைநோக்கி யென்பது பெருமை தருமென்றதனானும், வினைமுடித்தலென் பது அதிகாரத்தானும், வருவிக்கப்பட்டன. விடாதுமுயலத் தாம் பெரியராவர், ஆகவே, அரியனவும் எளிதின் முடியுமென்பதாம். (௧)

௬௧௨. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு. ௨.

இ - ள். வினைக்குறை தீர்ந்தாரின் உலகு தீர்ந்தன்று - வினையாகிய குறையைச் செய்யாது விட்டாரை உலகம் விட்டது;—வினைக்கண் வினைகெடல் ஓம்பல்-ஆதலால், செய்யப்படும் வினைக்கட்டவிர்ந்திருத்தலை யொழிக. எ - று.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET

குறை இன்றியமையாப்பொருள். அது "பயக்குறை யில்லைதாம் வாழுநாளே*" என்பதனானுமறிக. இதற்கு வினைசெய்யவேண்டுங் குறையை நீங்கினானினீங்கற்றென்றுரைப்பாருமுளர். (உ)

சுகங. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. ங.

இ - ள். தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்று - முயற்சியென்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின்கண்ணே நிலைபெற்றது—வேளாண்மை என்னும் செருக்கு - எல்லார்க்கு முபகாரஞ்செய்தலென்னும் மேம்பாடு. எ - று.

பொருள் கைகூடுதலான் உபகரித்தற்குரியார் முயற்சியுடையாரென்பார் அவ்வக் குணங்கண்மேல் வைத்தும், அது பிறர்மாட்டில்லையென்பார் தங்கிற்றேயென்றுங் கூறினார். இவை மூன்றுபாட்டானும் முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

சுகச. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். ச.

இ - ள். தாளாண்மை இல்லாதான் வேளாண்மை - முயற்சி இல்லாதவன் உபகாரியாந்தன்மை—பேடி கை வாள் ஆண்மை போலக் கெடும் - படைகண்டாலஞ்சும் பேடி அதனிடைத் தன்கையில் வாளை ஆளுதற்றன்மைபோல இல்லையாம். எ - று.

ஆளென்பது முதனிலைத்தொழிற்பெயர். பேடி வாளைப்பணி கோடற்கருத்துடையளாயினும் அது தன்னச்சத்தான் முடியாத வாறுபோல முயற்சியில்லாதான் பலர்க்குமுபகரித்தற்கருத்துடையனாயினும் அது தன் வறுமையான் முடியாதென்பதாம். வாளாண்மையென்பதற்கு வாளாற்செய்யுமாண்மையென்றுரைப்பாருமுளர். இதனான் அஃதில்லாதானது குற்றங் கூறப்பட்டது. (ச)

சுகரு. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். ரு.

இ - ள். இன்பம் விழையான் வினை விழைவான் - தனக்கின்பத்தை விரும்பானாகி வினைமுடித்தலையே விரும்புவான்—தன்கேளிர் துன்பம் துடைத்து ஊன்றும் தூண் - தன்கேளிராகிய பாரத்தின்றுன்பத்தினை நீக்கி அதனைத் தாங்குந் தூணும். எ - று.

இஃதேகதேசவுருகம். ஊன்றுமென்றது அப்பொருட்டாதல் "மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்கு†" என்பதனானுமறிக. சுற்றத்தார் நட்டாரது வறுமையுந் தீர்த்து அவர்க்கேமஞ்செய்யுமாற்றலையுடையனுமெனவே, தன்னைக்கூறவேண்டாவாயிற்று. காரியத்தை விழையாது காரணத்தை விழைவான் எல்லாப்பயனு மெய்துமென்றதனால், காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் யாதுமெய்தானென்பது பெற்றும். இதனால் அஃதுடையானது நன்மை கூறப்பட்டது. (ரு)

சுகசு. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும். சு.

---

* புறநானூறு. சுச-ம் குறளில் மேலெடுத்துக் காட்டினும்.

† சிதலை தினப்பட்ட வால மரத்தை—மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்—குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற—புதல்வன் மறைப்பக் கெடும்—நாலடியார், தாளாண்மை.

இ - ள். முயற்சி திருவினை ஆக்கும் - அரசர்மாட்டுளதாய முயற்சி அவரது செல்வத்தினை வளர்க்கும்;—முயற்று இன்மை இன்மை புகுத்திவிடும் - அஃதில்லாமை வறுமையை யடைவித்துவிடும். எ - று.

செல்வம் அறுவகையங்கங்கள். வறுமை அவற்றான் வறியராதல். அதனை யடைவிக்கவே, பகைவரானழிவரென்பது கருத்து. (௬)

௬௧௭. மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
றாளுளா டாமரையி னாள். ௭.

இ - ள். மா முகடி மடி உளாள்-கரியசேட்டை ஒருவன் மடியின்கண்ணே யுறையும்;—தாமரையினாள் மடி இலான் தாள் உளாள் என்ப - திருமகள் மடியிலாதானது முயற்சிக்கண்ணேயுறையுமென்று சொல்லுவர் அறிந்தோர். எ - று.

பாவத்தின் கருமை அதன்பயனாய முகடிமேலேற்றப்பட்டது. மடியும் முயற்சியுமுடையார்மாட்டு நிலையை அவை தம்மேல்வைத்துக் கூறினார். இவையிரண்டுபாட்டானும் அவ்விருமைக்குமேது கூறப்பட்டது. (௭)

௬௧௮. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி. ௮.

இ - ள். பொறி இன்மை யார்க்கும் பழியன்று - பயனைத்தருவதாய விதியில்லாமை ஒருவற்கும் பழியாகாது;—அறிவு அறிந்து ஆள்வினை இன்மை பழி - அறியவேண்டுமவற்றையறிந்து வினைசெய்யாமையே பழியாவது. எ - று.

அறியவேண்டுவன வலி முதலாயின. தெய்வமியையாவழி ஆள்வினையுடைமையாற் பயனில்லையென்பாரை நோக்கி, உலகம் பழவினைபற்றிப் பழியாது ஈண்டைக் குற்றமுடைமைபற்றியே பழிப்பதென்றார். அதனால் விடாது முயல்கவென்பது குறிப்பெச்சம். (௮)

௬௧௯. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். ௯.

இ - ள். தெய்வத்தான் ஆகாது எனினும் - முயன்றவினை பால்வகையாற் கருதிய பயனைத் தாராதாயினும்,—முயற்சி தன்மெய் வருத்தக் கூலி தரும் - முயற்சி தனக்கிடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும், பாழாகாது. எ - று.

தெய்வத்தானாயவழித் தன்னளவின் மிக்க பயனைத்தருமென்பது உம்மையாற் பெற்றாம். இருவழியும் பாழாகலின்மையின் தெய்வநோக்கியிராது முயல்கவென்பது கருத்து. (௯)

௬௨௦. ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். ௧௦.

இ - ள். ஊழையும் உப்பக்கம் காண்பர் - பயனை விலக்குவதாய ஊழினையும் புறங்காண்பர்—உலைவு இன்றித் தாழாது உஞற்றுபவர் - அவ்விலக்கிற் கிளையாது வினையைத் தாழ்வற முயல்வார். எ - று.

தாழ்வறுதல் சூழ்ச்சியினும் வலிமுதலியவறிதலினும், செயலினுங் குற்றமறுதல். ஊழ் ஒருகாலாக இருகாலாகவல்லது விலக்கலாகாமையிற் பலகான் முயல்வார் பய

னெய்துவ ரென்பார், உப்பக்கங்காண்பரென்றார். தெய்வத்தா னிடுக்கண்வரினும் முயற்சி விடற்பாலதன்றென்பது இவை மூன்றுபாட்டானுங் கூறப்பட்டது. (௧௦)

---

௬௩ ம் அதி.—இடுக்கணழியாமை.

அஃதாவது வினையின்கண் முயல்வான், தெய்வத்தானாக, பொருளின்மையானாக, மெய்வருத்தத்தானாகத் தனக்கிடுக்கண் வந்துழி, அதற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௬௨௧. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில். ௧.

இ - ள். இடுக்கண் வருங்கால் நகுக - ஒருவன் வினையாற்றனக்கிடுக்கண் வருமிடத்து அதற்கழியாது உண்மகிழ்க;—அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல் - அவ்விடுக்கணை மேன்மேலடரவல்லது அம்மகிழ்ச்சிபோல்வது பிறிதில்லையாகலான் எ - று.

வினை இனிது முடிந்துழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கிடையே இடுக்கண் வருவழிச் செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியான் அதனைத்தள்ளி அக்குறை முடிக்குமாற்றலுடையனுமாகலின், அதனையடுத்தூர்வதஃதொப்பதில்லென்றார்.

௬௨௨. வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும். ௨.

இ - ள். வெள்ளத்து அனைய இடும்பை - வெள்ளம்போலக் கரையிலவாய இடும்பைகளெல்லாம்,—அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும் - அறிவுடையவன் தன்னுள்ளத்தான் ஒன்றனை நினைக்க, அத்துணையானே கெடும். எ - று.

இடும்பையாவது உள்ளத்து ஓர்கோட்பாடேயன்றிப் பிறிதில்லையென்பதூஉம் அது மாறுபடக்கொள்ள நீங்குமென்பதூஉம் அறிதல்வேண்டுதலின், அறிவுடையானென்றும், அவ்வுபாயத்தெண்மை தோன்ற உள்ளத்தினுள்ளவென்றுங் கூறினார். இவையிரண்டுபாட்டானும் ஊழினானாய இடுக்கணால் அழியாமைக்கு உபாயங் கூறப்பட்டது. (௨)

௬௨௩. இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர். ௩.

இ - ள். இடும்பைக்கு இடும்பை படாதவர் - வினைசெய்யுங்கால் அதற்கிடையே வந்த துன்பத்திற்கு வருந்தாதவர்—இடும்பைக்கு இடும்பை படுப்பர் - அத்துன்பந்தனக்குத் தாந்துன்பம் விளைப்பர். எ - று.

வருந்துதல் இளைத்து விடநினைத்தல். மனத்திட்பமுடையராய் விடாது முயலவே வினை முற்றுப்பெற்றுப் பயன்படும், படவே, எல்லாவிடும்பையுமிலவாமாகலின், இடும்பைக்கிடும்பை படுப்பரென்றார். வருகின்றபாட்டிரண்டினும் இதற்கிவ்வாறே கொள்க. சொற்பொருட்பின்வருநிலை. (௩)

௬௨௪. மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து. ௪.

இ - ள். மடுத்த வாய் எல்லாம் பகடு அன்னான் - விலங்கிய விடங்களெல்லா வற்றினுஞ் சகடமீர்க்கும் பகடுபோல வினையை யெடுத்துக்கொண்டு உய்க்கவல் லானை—உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து - வந்துற்ற இடுக்கண் தானே இடர்ப் படுதலையுடைத்து. எ - று.

மடுத்தவாயெல்லாமென்பது பொதுப்பட நின்றமையின், சகடத்திற்கு அளற்று நிலமுதலியவாகவும், வினைக்கு இடையூறுகளாகவுங் கொள்க. பகடு மருங்கொற்றி யும் மூக்கூன்றியும் தாடவழ்ந்தும் * அரிதினுய்க்குமாறுபோலத் தன்மெய்வருத்த நோக்காது முயன்றுய்ப்பானென்பார், பகடன்னானென்றார். (௪)

சுஉரு. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும். ரு.

இ - ள். அடுக்கி வரினும் - இடைவிடாது மேன்மேல் வந்தனவாயினும்,—அழி விலான் உற்ற இடுக்கண் இடுக்கட்படும் - தன்னுள்ளக்கோட்பாடு விடாதான் உற்ற விடுக்கண்டாம் இடுக்கணிலே பட்டுப்போம். எ - று.

ஒன்றே பலகால் வருதலும் வேறுபட்டன விராய்வருதலுமடங்க, அடுக்கிவரினு மென்றார். அழிவென்னுங்காரணப்பெயர் காரியத்தின்மேனின்றது. இவை மூன்று பாட்டானும் தெய்வத்தானுயதற்கழியாமை கூறப்பட்டது. (ரு)

சுஉசு. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர். சு.

இ - ள். அற்றேம் என்று அல்லற்படுபவோ - வறுமைக்காலத்து யாம் வறிய மாயினேமென்று மனத்தாற் றுயருழப்பரோ—பெற்றேம் என்று ஓம்புதல் தேற்றா தவர் - செல்வக்காலத்து இது பெற்றேமென்று இவறுதலையறியாதார். எ - று.

பெற்றவழி இவறுமை நோக்கி அற்றவழியும் அப்பகுதி விடாதாகலின், அல்லற் பாடில்லையாயிற்று. இதனாற் பொருளின்மையானுயதற்கு அழியாமையும் அதற்கு பாயமுங் கூறப்பட்டன. (சு)

சுஉஎ. இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல். எ.

இ - ள். உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று - நாற்கதியினுமுள்ள வுடம்புகள் இடும்பையென்னும் வாளுக்கிலக்கென்று தெளிந்து,—கலக்கத்தைக் கையாறாக் கொள் ளாதாம் மேல் - தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடை யார். எ - று.

ஏகதேசவுருவகம். உடம்பு சாதிப்பெயர். கலக்கமென்னுங் காரியப்பெயர் கார ணத்தின்மேனின்றது. கையாறென்பது ஒருசொல்; இதற்கு ஒழுக்கநெறியென்றுரைப் பாருமுளர். இயல்பாகக் கொள்வரென்பது குறிப்பெச்சம். (எ)

சுஉஅ. இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன். அ.

* சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம், கஅசு.

இ - ள். இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான் - தன்னுடம்பிற்கு இன்பமாயவற்றை விரும்பாதே வினையாலிடும்பை யெய்துதல் இயல்பென்று தெளிந்திருப்பான்—துன்பம் உறுதல் இலன் - தன்முயற்சியாற் றுன்பமுறான். எ - று.

இன்பத்தை விழையினும், இடும்பையை யியல்பென்னாது காக்கக்கருதினும், துன்பம் விளைதலின், இவ்விரண்டுஞ் செய்யாதானைத் துன்பமுறுதலிலனென்றார். (அ)

சூஉசு. இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன். கூ.

இ - ள். இன்பத்துள் இன்பம் விழையாதான் - வினையாற்றனக்கின்பம் வந்துழி அதனை யனுபவியாநின்றே மனத்தான் விரும்பாதான்—துன்பத்துள் துன்பம் உறுதல் இலன் - துன்பம் வந்துழியும் அதனை யனுபவியாநின்றே மனத்தான் வருந்தான். எ - று.

துன்பம் முயற்சியான் வருமிடுக்கண். இரண்டையும் ஒருதன்மையாகக் கோடலின், பயன்களுமிலவாயின. (கூ)

சூ௩௦. இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு. க௦.

இ - ள். இன்னாமை இன்பம் எனக் கொளின் - ஒருவன் வினை செய்யுமிடத்து முயற்சியான் வருந்துன்பந்தன்னையே தனக்கின்பமாகக் கற்பித்துக்கொள்வனாயின்,—தன் ஒன்னார் விழையும் சிறப்பு ஆகும் - அதனாற் றன்பகைவர் நன்குமதித்தற்கேதுவாய உயர்ச்சியுண்டாம். எ - று.

துன்பந்தானும் உயிர்க்கியல்பன்றிக் கணிகமாய் மனத்திடை நிகழ்வதோர் கோட்பாடாகலின், அதனை மாறுபடக்கொள்ளவே, அதற்கழிவின்றி மனமகிழ்ச்சியுடையனாய் அதனாற் றொடங்கியவினை முடித்தேவிடுமாற்றலுடையனாமென்பது கருத்து. இவை நான்குபாட்டானும் மெய்வருத்தத்தானுயதற்கு அழியாமையும் அதற்குபாயமுங் கூறப்பட்டன. (க௦)

அரசியல் முற்றிற்று.

அங்கவியல்.

இனி முறையானே அரசியனடாத்துதற்கண் ஒன்றற்கொன்று துணையாய அங்கங்களாறனதியல்பு முப்பத்திரண்டதிகாரத்தாற் கூறுவானெடுத்துக்கொண்டு, அவையாறனுள்ளும் "காவற் சாகாடு கைத்தற்*" கண் அவ்வரசற்கிணையாய அமைச்சனதியல்பு பத்ததிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கண் அமைச்சுக் கூறுகின்றார்.

சூசம் அதி.—அமைச்சு.

அஃதாவது அமைச்சனது தன்மை: என்றது அவன்றன் குணங்களையுஞ் செயல்களையும்.

* புறநானூறு, கஅசு.

௬௩௧. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு. ௧.

இ - ள். கருவியும் - வினைசெய்யுங்கால் அதற்கு வேண்டுங் கருவிகளும்—காலமும் - அதற்கேற்றகாலமும்—செய்கையும் - அது செய்யுமாறும்—செய்யும் அருவினையும் - அவ்வாற்றிற்செய்யப்படும் அவ்வரிய வினைதானும்—மாண்டது அமைச்சு - வாய்ப்ப வெண்ண வல்லவனே அமைச்சனாவான். எ - று.

கருவிகள் தானையும் பொருளும். காலம் அது தொடங்குங்காலம். செய்கையெனவே, அது தொடங்குமுபாயமும், இடையூறுநீக்கி முடிவுபோக்குமாறும் அடங்கின. சிறிய முயற்சியாற்பெரிய பயன்றருவதென்பார், அருவினையென்றார். இவையைந்தனையும் வடநூலார் மந்திரத்திற்கங்கமென்ப. (௧)

௬௩௨. வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு. ௨.

இ - ள். வன்கண் - வினைசெய்தற்கண் அசைவின்மையும்—குடி காத்தல் - குடிகளைக் காத்தலும்—கற்று அறிதல் - நீதிநூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வனவறிதலும்—ஆள்வினை - முயற்சியும்—ஐந்துடன் மாண்டது அமைச்சு - மேற்சொல்லிய அவ்வங்கங்களைந்துடனே திருந்தவுடையானே அமைச்சனாவான். எ - று.

எண்ணொடு நீண்டது. அவ்வைந்தெனச் சுட்டு வருவிக்க. இந்நான்கனையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையு மிவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்தென்னுந்தொகை பெறுதற்கும். இனி இதனை ஈண்டெண்ணிய வற்றிற்கே தொகையாக்கிக் குடிகாத்தலென்பதனைக் குடிப்பிறப்பும் அதனையொழுக்கத்தாற் காத்தலுமெனப் பகுப்பாரும், கற்றறிதலென்பதனைக் கற்றலும் அறிதலுமெனப் பகுப்பாருமுளர். அவர் உடனென்பதனை முற்றும்மைப்பொருட்டாக்கியும், குடியென்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப. (௨)

௬௩௩. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. ௩.

இ - ள். பிரித்தலும் - வினை வந்துழிப் பகைவர்க்குத் துணையாயினாரை அவரிற்பிரிக்கவேண்டிற் பிரித்தலும்—பேணிக்கொளலும் - தம்பாலாரை அவர்பிரியாமற் கொடை இன்சொற்களாற் பேணிக்கொள்ளுதலும்—பிரிந்தார்ப் பொருத்தலும் - முன்னே தம்மினுந் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டுப் பொருத்தவேண்டிற் பொருத்தலும்—வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனாவான். எ - று.

இவற்றுள் அப்பொழுதை நிலைக்கேற்ற செயலறிதலும் அதனை அவரறியாமல் ஏற்றவுபாயத்தாற் கடைப்பிடித்தலும் அரியவாதனோக்கி, வல்லதென்றார். வடநூலார் இவற்றுட் பொருத்தலைச்சந்தியென்றும், பிரித்தலை விக்கிரகமென்றுங் கூறுப. (௩)

௬௩௪. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. ௪.

இ - ள். தெரிதலும் - ஒருகாரியச்செய்கை பலவாற்றாற்றோன்றின் அவற்றுள் ஆவதாராய்ந்தறிதலும்—தேர்ந்து செயலும் - அதுசெய்யுங்கால் வாய்க்குந்திறனாடிச் செய்தலும்—ஒருதலையாச்சொல்லலும் - சிலரைப் பிரித்தல் பொருத்தல்செயற்கண்

அவர்க்கு இதுவே செயற்பாலதென்று துணிவுபிறக்கும்வகை சொல்லுதலும்—வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனாவான். எ - று.

தெரிதல் செயன்மேலதாயிற்று, வருகின்றது அதுவாகலின். (௪)

௬௩௫. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை. ௫.

இ - ள். அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான் - அரசனாற் செய்யப்படும் அறங்களையறிந்து தனக்கேற்ற கல்வியானிறைந்தமைந்த சொல்லையுடையனாய்—எஞ்ஞான்றும் திறன் அறிந்தான் - எக்காலத்தும் வினை செய்யுந்திறங்களையறிந்தான்—தேர்ச்சித் துணை - அவர்க்குச் சூழ்ச்சித்துணையாம். எ - று.

தன்னரசன் சுருங்கியகாலத்தும் பெருகியகாலத்தும் இடைநிகராயகாலத்துமென்பார், எஞ்ஞான்றுமென்றார். சொல்லானென்பதனை ஒடுவுருபின்பொருட்டாய ஆனுருபாக்கியுரைப்பாருமுளர். இவையைந்துபாட்டானும் அமைச்சரது குணத்தன்மை கூறப்பட்டது. (௫)

௬௩௬. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. ௬.

இ - ள். மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு - இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய நூலறிவோடு உடையராய அமைச்சர்க்கு—அதிநுட்பம் முன் நிற்பவை யா உள - மிக்கநுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய் முன்னிற்பன யாவையுள! எ - று.

மதிநுட்பமென்பது பின்மொழிநிலையல். அது தெய்வந்தரவேண்டுதலின் முற்கூறப்பட்டது. நூலென்பதூஉம் அதிநுட்பமென்பதூஉம் ஆகுபெயர். அதியென்பது வடசொல்லுள் மிகுதிப்பொருளதோரிடைச்சொல்; அது திரிந்து நுட்பமென்பதனோடு தொக்கது. முன்னிற்றல் மாற்றார் சூழ்ச்சியாயின தஞ்சூழ்ச்சியால் அழியாது நிற்றல். இனி அதினுட்பமென்று பாடமோதி, அதனினுட்பம் யாவென்றுரைப்பாருமுளர்; அவர் சூழ்ச்சிக்கினமாய் முன்சுட்டப்படுவதொன்றில்லாமையும், சுட்டுப்பெயர் ஐந்தாமுருபேற்றவழி அவ்வாறு நில்லாமையுமறிந்திலர். பகைவர் சூழ்வனவற்றைத்தாமறிந்து அழித்து அவரறிந்தழியாதன தாஞ்சூழ்வரென்பது கருத்து. இதனால் அவரது சிறப்புக் கூறப்பட்டது. (௬)

௬௩௭. செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல். ௭.

இ - ள். செயற்கை அறிந்தக்கடைத்தும் - நூனெறியான் வினைசெய்யுந் திறங்களையறிந்த விடத்தும்,—உலகத்து இயற்கை அறிந்து செயல் - அப்பொழுது நடக்கின்ற உலகவியற்கையையறிந்து அதனோடு பொருந்தச் செய்க. எ - று.

கடைத்துமென்புழித் து பகுதிப்பொருள் விகுதி. நூனெறியேயாயினும் உலக நெறியோடு பொருந்தாதன செய்யற்க, செய்யின் அது பழிக்குமென இயற்கையறிவாற் பயன் கூறியவாறு. (௭)

௬௩௮. அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன். ௮.

இ - ள். அறிகொன்று அறியான் எனினும் - அறிந்துசொல்லியாரது அறிவையு மழித்து அரசன் தானுமறியானேயாயினும்,—உறுதி கூறல் உழையிருந்தான் கடன் - அக்குற்ற நோக்கியொழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை. எ - று.

அறியென்பது முதனிலைத்தொழிற்பெயர். கோறல் தான்கொள்ளாமைமேலும் இகழ்ந்துகூறுதல். உழையிருந்தானெனப்பெயர்கொடுத்தார், அமாத்தியரென்னும் வடமொழிப்பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின்*. உறுதி கூறுக்கால் அவனதிறு தியெய்தற்குற்றத்தை உலகந் தன்மேலேற்றுமென்பார், கூறல்கடனென்றார். இவையி ரண்டுபாட்டானும் அவர்செயல் கூறப்பட்டது. (அ)

சுருகூ. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும். கூ.

இ - ள். பக்கத்துள் பழுது எண்ணும் மந்திரியின் - பக்கத்திருந்து பிழைப்ப வெண்ணும் அமைச்சனொருவனில்—ஓரெழுபதுகோடி தெவ் உறும் - அரசனுக்கு எதிர் நிற்பார் ஓரெழுபதுகோடி பகைவருறுவர். எ - று.

எழுபது கோடியென்றது மிகப்பலவாய வெண்ணிற்கொன்று காட்டியவாறு. வெளிப்படநிற்றலான் அவர் காக்கப்படுவர், இவன் உட்பகையாய் நிற்றலாற் காக்கப் படானென்பதுபற்றி, இவ்வாறுகூறினார். எழுபதுகோடிமடங்கு நல்லரென்றுரைப் பாரும், எழுபதுகூறு தலையென்று பாடமோதுவாருமுளர். (கூ)

சுசo. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர். கo.

இ - ள். முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர் - செய்யப்படும் வினை களை முன் அடைவுபடவெண்ணிவைத்தும், செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யாநிற்பர்—திறப்பாடு இலாதவர் - முடித்தற்கேற்ற கூறுபாடில்லாதார். எ - று.

அக்கூறுபாடாவன வந்த வந்த விடையூறுகட்கு ஏற்றவேற்ற பரிகாரமறிந்து செய்தலும், தாந்திண்ணியராதலுமாம். பிழையாமலெண்ண வல்லராய்வைத்தும் செய் துமுடிக்கமாட்டாருமுளரென்பதாம். இவையிரண்டுபாட்டானும் அமைச்சருள் விடப் படுவாரது குற்றங் கூறப்பட்டது. (கo)

சுரு ம் அதி.—சொல்வன்மை.

அஃதாவது தான் கருதிய வினை முடியுமாற்றால் அமைச்சிய னடத்தற்கேது வாய சொற்களைச் சொல்ல வல்லனாதல். மேல் "ஒருதலையாச் சொல்லலும் வல்லது†" தென்றதனையே சிறப்புப்பற்றி விரித்துரைக்கின்றமையின், இஃது அமைச்சின்பின் வைக்கப்பட்டது.

சுசக. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று. க.

இ - ள். நாநலம் என்னும் நலன் உடைமை - அமைச்சர்க்கு இன்றியமையாக் குணமாவது சான்றோரான் நாநலமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலத்தினை

* அமாத்தியரென்பதனுள் அமா என்பதற்குப்பொருள் அண்மை.

† திருக்குறள், சுஙசு.

புடையராதல்,—அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று - அந்நலம் பிறர்க்கும் பிற நலமெல்லாவற்றுள்ளும் அடங்குவதன்றி மிக்கதாகலான். எ - று.

நாவானுளதாய நலமென விரியும். இந்நலம் உலகத்தைத் தம்வயத்ததாக்கும் அமைச்சர்க்கு வேருகவேண்டுமென்னும் நீதிநூல் வழக்குப்பற்றி நாநலமென்னுநல னென்றும், பிறர்க்கும் இதுபோற்சிறந்தது பிறிதின்மையான் அந்நலம் யாநலத்துள்ள தூஉமன்றென்றுங் கூறினர். பிரித்தல் பொருத்தல் முதலிய தொழிலில்லாதார்க்கும் இஃதின்றியமையாதாயபின் அத்தொழிலார்க்குக் கூறவேண்டுமோவென்பது கருத்து.

சுசஉ. ஆக்கமுங் கேடு மதனுல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. உ.

இ - ள். ஆக்கமுங் கேடும் அதனுல் வருதலால் - தம்மரசற்கும் அங்கங்கட்கும் ஆக்கவழிவுகள் தஞ்சொல்லான் வருமாகலான்,—சொல்லின்கண் சோர்வு காத்து ஓம்பல் - அப்பெற்றித்தாய சொல்லின்கட் சோர்தலை அமைச்சர் தங்கணிகழாமற் போற் றிக்காக்க. எ - று.

ஆக்கத்திற்கேதுவாய நற்சொல்லையும் கேட்டிற்கேதுவாய் தீச்சொல்லையும் சொல் லாதலொப்புமைபற்றி அதனுலென்ருர். செய்யுளாகலின், சுட்டுப்பெயர் முன்வந்தது. பிறர் சோர்வுபோலாது உயிர்கட்கெல்லாம் ஒருங்குவருதலால், காத்தோம்பலென்ருர். இவையிரண்டுபொட்டானும் இஃது இவர்க்கின்றியமையாதென்பது கூறப்பட்டது. (உ)

சுசங. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். ங.

இ - ள். கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய் - நட்பாயேற்றுக்கொண்டாரைப் பின் வேறுபடாமற் பிணிக்குங் குணங்களை அவாவி—கேளாரும் வேட்ப மொழிவது- மற்றைப் பகையாய் ஏற்றுக்கொள்ளாதாரும் பின் அப்பகைமையொழிந்து நட் பினைவிரும்பும்வண்ணஞ் சொல்லப்படுவதே—சொல்லாம் - அமைச்சர்க்குச் சொல்லா வது. எ - று.

அக்குணங்களாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன்றருதலென்றிவை முதலாயின. அவற்றை யவாவுதலாவது சொல்லுவான் குறித்தனவேயன்றி வேறு நுண்ணுணர்வுடையோர் கொள்பவற்றின்மேலும் நோக் குடைத்தாதல். அவாயென்னுஞ் செய்தெனெச்சம் மொழிவதென்னுஞ் செயப்பாட்டு வினை கொண்டது. இனிக் கேட்டார் கேளாரென்பதற்கு நூல் கேட்டார் கேளாதா ரெனவும், வினவியார் வினவாதாரெனவுமுரைப்பாருமுளர். தகையவாயென்பதற்கு எல்லாருந் தகுதியையுடையவாயென்றுரைத்தார்; அவர் அப்பன்மை மொழிவதென் னும் ஒருமையோடு இயையாமை நோக்கிற்றிலர். இதனுற் சொல்லின திலக்கணங் கூறப்பட்டது. (ங)

சுசச. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில். ச.

இ - ள். சொல்லைத் திறன் அறிந்து சொல்லுக - அப்பெற்றித்தாய சொல்லை அமைச்சர் தம்முடையவுங் கேட்பாருடையவுமாய திறங்களையறிந்து சொல்லுக,— அதனின் ஊங்கு அறனும் பொருளும் இல் - அங்ஙனஞ் சொல்லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளுமில்லையாகலான். எ - று.

அத்திறங்களாவன குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவ மென்பனவற்றான்வருந் தகுதிவேறுபாடுகள். அவற்றையறிந்து சொல்லுதலாவது அவற்றாற் றமக்கும் அவர்க்குமுளவாய ஏற்றத்தாழ்வுகளை யறிந்து அவ்வம்மரபாற் சொல்லுதல். அஃது உலகத்தோ டொட்டவொழுகலையும் இனிமையையும் பயத்தலின் அறனாயிற்று; தங்காரியமுடித்தலிற் பொருளாயிற்று. அறனும்பொருளுமெனக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறினார். (௪)

௬௪௫. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து. ௫.

இ - ள். சொல்லைப் பிறிது ஓர்சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து - தாஞ் சொல்லக்கருதிய சொல்லைப் பிறிதோர்சொல்லாய் வெல்லவல்லதொருசொல் இல்லாமையறிந்து,—அச்சொல்லைச் சொல்லுக - பின் அச்சொல்லைச் சொல்லுக. எ - று.

பிறிதோர்சொல் மாற்றாரது மறுதலைச்சொல். வெல்லுதல் குணங்களான்மிகுதல். அதுவே வெல்லச்சொல்லுகவென்பதாம். இனிப் பிறிதோர்சொல் வெல்லுஞ் சொல்லெனச் செவ்வெண்ணாக்கி, ஒத்தசொல்லும் மிக்கசொல்லுமுளவாகாமற் சொல்லுகவென்றுரைப்பாருமுளர். இது சொற்பொருட்பின்வருநிலை. (௫)

௬௪௬. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றார் கோள். ௬.

இ - ள். வேட்பத் தாம் சொல்லிப் பிறர் சொற்பயன் கோடல் - பிறர்க்குத் தாஞ்சொல்லுங்கால் அவர் பின்னுங்கேட்டலை விரும்புமாறு சொல்லி, அவர் தமக்குச் சொல்லுங்கால் அச்சொல்லின்பயனைக் கொண்டொழிதல்—மாட்சியின் மாசு அற்றார் கோள் - அமைச்சியலுட் குற்றமற்றாரது துணிபு. எ - று.

பிறர்சொற்களுட் குற்றமுளவாயினும் அவை நோக்கியிகழா ரென்பதாம். வல்லாரையிகழ்தல் வல்லுநர்க்குத் தகுதியன்மையின், இதுவுமுடன் கூறினார். இவை மூன்றுபாட்டானும் அதனைச் சொல்லுமாறு கூறப்பட்டது. (௬)

௬௪௭. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது. ௭.

இ - ள். சொலல் வல்லன் - தானெண்ணிய காரியங்களைப் பிறர்க்கேற்பச் சொல்லுதல்வல்லனாய்—சோர்வு இலன் - அவை மிகப்பலவாயவழி ஒன்றினுஞ் சோர்விலனாய்—அஞ்சான் - அவைக்கஞ்சானாயினான் யாவன்—அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது - அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்குமரிது. எ - று.

ஏற்பச்சொல்லுதல் அவர்க்கு அவை காரியமல்லவாயினும் ஆமெனத் துணியும் வகை சொல்லுதல். சோர்வு சொல்லவேண்டுவதனை மறப்பானொழிதல். இம்மூன்று குணமுமுடையானை மாற்றாராய்ப் பிரித்தல் பொருத்தல் செய்து வெல்வாரில்லை யென்பதாம். (௭)

௬௪௮. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். ௮.

இ - ள். தொழில் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப்பெறின் - சொல்லப்படுங்காரியங்களை நிரல்படக் கோத்து இனிதாகச் சொல்லுதல்வல்லாரைப் பெறின்,—ஞாலம் விரைந்து கேட்கும் - உலகம் அவற்றை விரைந்தேற்றுக்கொள்ளும். எ - று.

தொழில் சாதியொருமை. நிரல்படக் கோத்தல் முன்சொல்வனவும் பின்சொல்வனவுமறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல் கேட்டார்க்கின்பம் பயத்தல். சொல்லுதல்வல்லான் றூறுயிரவருளொருவன் என்ற வடமொழிபற்றிப் பெறினென்றார். ஈண்டுங் கேட்டல் ஏற்றுக்கோடல். இவையிரண்டுபாட்டானும் அவ்வாற்றாற் சொல்லுதல் வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது. (அ)

சூசகூ. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்ற தவர். கூ.

இ - ள். மாசு அற்ற சில சொல்லல் தேற்றுதவர் - குற்றமற்றனவாய்ச் சிலவாய வார்த்தைகளை அவ்வாற்றாற் சொல்லுதலை யறியாதார்—பல சொல்லக் காமுறுவர் - பலவாய வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவர். எ - று.

குற்றம் மேற்சொல்லிய குண்ங்கட்கு * மறுதலையாயின. இடைவிடாது பல சொல்லுதலையுஞ் சொல்வன்மையென்று விரும்புவாருமுளர், அவர் இவ்வாறு சொல்ல மாட்டாதாரே, வல்லார் அதுசெய்யாரென யாப்புறுப்பார், மன்றவென்றார். (கூ)

சூருo. இணரூழ்த்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார். கo.

இ - ள். கற்றது உணர விரித்து உரையாதார் - கற்றுவைத்த நூலைப் பிறரறியும் வண்ணம் விரித்துரைக்கமாட்டாதவர்—இணர் ஊழ்த்தும் நாறு மலர் அனையர் - கொத்தின்கண்ணே மலர்ந்துவைத்தும் நாறுத பூவையொப்பர். எ - று.

செவ்விபெற மலர்ந்துவைத்தும் நாற்றமில்லாத பூச் சூடப்படாதவாறுபோல நூலைக் கற்றுவைத்துஞ் சொல்லமாட்டாதார் நன்குமதிக்கப்படாரென்றமையின், இது தொழிலுவமமாயிற்று. இவை இரண்டுபாட்டானும் அது மாட்டாதாரதிழிபு கூறப்பட்டது. (கo)

சூசூம் அதி.—வினைத்தூய்மை.

அஃதாவது செய்யப்படும் வினைகள் பொருளேயன்றி அறமும் புகழும் பயந்து நல்லவாதல். சொல்லேயன்றிச் செயலும் நன்றாகவேண்டுமென்கின்றமையின், இது சொல்வன்மையின்பின் வைக்கப்பட்டது.

சூருக. துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும். க.

இ - ள். துணை நலம் ஆக்கம் தரூஉம் - ஒருவனுக்குத் துணையது நன்மை செல்வமொன்றனையுங்கொடுக்கும்;—வினை நலம் வேண்டிய எல்லாம் தரும் - அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையுங்கொடுக்கும். எ - று.

வேண்டியவெல்லாமென்றது இம்மைக்கண் அறம் பொருளின்பமுதலாயவற்றையும் மறுமைக்கட்டான்விரும்பிய பதங்களையும். இதனாற் காணப்படுந் துணைநன்மையினுங் கருதப்படும் வினைநன்மை சிறந்ததென வினைத்தூய்மையது சிறப்புக் கூறப்பட்டது. (க)

---

* சொற்குணங்களை சூசுகூ-ம் திருக்குறளுரையிற் காண்க.

௬௫௨. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. ௨.

இ - ள். புகழொடு நன்றி பயவா வினை - தம்மரசனுக்கு இம்மைக்கட் புகழும் மறுமைக்கண் அறமும் பயவாத வினைகளை—என்றும் ஒருவுதல் வேண்டும் - அமைச்சர்க்கு எக்காலத்துமொழிதல்வேண்டும். எ - று.

பெருகல், சுருங்கல், இடைநிற்ற லென்னும் நிலைவேறுபாடு காலத்தான் வருதலின், என்றுமென்றார். வேண்டுமென்பது ஈண்டு இன்றியமையாதென்னும் பொருட்டு.

௬௫௩. ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர். ௩.

இ - ள். ஆதும் என்னுமவர் - மேலாகக்கடவேமென்று கருதுவார்—ஒளிமாழ்கும் வினை செய் ஓதல்வேண்டும் - தம்மொளிகெடுதற்குக் காரணமாய வினையைச் செய்தலைத் தவிர்க. எ - று.

ஓதல்வேண்டுமென்பது ஒருசொன்னீர்மைத்து. ஓவுதலென்பது குறைந்துநின்றது. ஒளி தாமுளகாலத்து எல்லாரானும் நன்குமதிக்கப்படுதல். செய்யென்னும் முதனிலைத்தொழிற்பெயர் மாற்றப்பட்டது. அன்றிச் செய்வினையென வினைத்தொகையாக்கியவழிப் பொருளின்மையறிக. ஒளி கெடவருவது ஆக்கமன்றென்பதாம். (௩)

௬௫௪. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். ௪.

இ - ள். இடுக்கட்படினும் இளிவந்த செய்யார் - தாமிடுக்கணிலேபடவரினும், அது தீர்தற்பொருட்டு முன் செய்தார்க்கு இளி வந்த வினைகளைச்செய்யார்—நடுக்கு அற்ற காட்சியவர் - துளக்கமற்ற தெளிவினையுடையார். எ - று.

சிறிதுபோழ்திற் கழிவதாய இடுக்கணோக்கி என்றுங்கழியாதவிழிவு எய்தற்பாலதன்றென்பதூஉம் அஃதெய்தினாலும் வருவது வருமென்பதூஉம் தெளிவராகலால், செய்யாரென்றார். (௪)

௬௫௫. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று. ௫.

இ - ள். எற்று என்று இரங்குவ செய்யற்க - யான் செய்தது எத்தன்மைத்தென்று பின் றானேயிரங்கும வினைகளை ஒருகாலுஞ் செய்யாதொழிக;—செய்வானேல் மற்று அன்ன செய்யாமை நன்று - அன்றி ஒருகான்மயங்கி அவற்றைச் செய்யுந்தன்மையனாயினானாயின், பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யாதொழிதல் நன்று. எ - று.

இரங்குவவென முன்வந்தமையிற் பின் அன்னவெனச் சுட்டி யொழிந்தார். அவ்வினைகளது பன்மையான், இரக்கமும் பலவாயின. அச்செயற்குப் பின்னிருந்திரங்குவனாயின், அது தீரும் வாயிலறிந்திலனெனவும், திட்பமிலனெனவும், பயனில்லன செய்கின்றானெனவும், தன்பழியைத் தானே தூற்றுகின்றானெனவும், எல்லாருமிகழ்தலிற் பின்னிரங்காமை நன்றென்றார். இதுவும், வினைத்தூயார் செயலாகலின், உடன் கூறப்பட்டது. பிற்றொடருக்குச் செய்வானாயின் அவைபோல்வனவுஞ்செய்யாமை நன்றெனப் பிறரெல்லாம் இயைபறவுரைத்தார். (௫)

சுடுசு. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. சு.

இ - ள். ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் - தன்னைப் பயந்தாளது பசியை வறுமையாற்கண்டிரங்குந் தன்மையனாயினனெனினும்,—சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க - அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யாதொழிக. எ - று.

இறந்த மூப்பினராய இருமுதுகுரவருங் கற்புடைமனைவியுங் குழவியும் பசியான் வருந்துமெல்லைக்கண் தீயனபலவுஞ்செய்தாயினும் புறந்தருகவென்னும் அறநூற் பொதுவிதி பொருணூல்வழி யொழுகுதலும் அரசர் தொழிற்குரியராதலும் நன்கு மதிக்கற்பாடுமுடைய அமைச்சர்க்கெய்தாமைபற்றி, இவ்வாறு கூறினார். இவையைந்து பாட்டானும் பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்க வென்பது கூறப்பட்டது.

சுடுஎ. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. எ.

இ - ள். பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் - சாலாதார் தீயவினைகளைச் செய்து அதனாற் பழியைத் தம்மேற்கொண்டு பெற்ற செல்வத்தின்—சான்றோர் கழி நல்குரவே தலை - அதுமேற்கொள்ளாத சான்றோரனுபவிக்கும் மிக்க நல்குரவே உயர்ந்தது. எ - று.

நிலையாத செல்வத்தின்பொருட்டு நிலையின பழியை மேற்கோடல் சால்போடியையாமையின், சான்றோர்கழிநல்குரவே தலையென்றார். (எ)

சுடுஅ. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும். அ.

இ - ள். கடிந்த கடிந்து ஒரார் செய்தார்க்கு - நூலோர் கடிந்தவினைகளைத் தாமுங்கடிந்தொழியாது பொருணோக்கிச்செய்த அமைச்சர்க்கு—அவைதாம் முடிந்தாலும் பீழை தரும் - அவை தூயவன்மையின் முடியா, ஒருவாற்றான் முடியினும் பின்றுன்பத்தையே கொடுக்கும். எ - று.

முடிதல் கருதியபொருடருதல். பீழைதருதலாகிய பொருளின்றொழில் அதற்குக் காரணமாய வினைகண்மேலேற்றப்பட்டது. (அ)

சுடுக. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை. கூ.

இ - ள். அழக் கொண்ட எல்லாம் அழப் போம் - ஒருவன் தீயவினைகளைச் செய்து பிறரிரங்கக் கொண்ட பொருளெல்லாம் இம்மையிலே அவன்றானிரங்கப்போகாநிற்கும்;—நற்பாலவை இழப்பினும் பிற்பயக்கும் - மற்றைத் தூயவினையான் வந்த பொருள்கள் முன்னிழந்தானாயினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக்கும். எ - று.

பின்னெனவே, மறுமையுமடங்கிற்று. பொருள்களான் அவற்றிற்குக் காரணமாய வினைகளதியல்பு கூறியவாறு. (கூ)

௬௬௦. சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று. ௧௦.

இ - ள். சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் - அமைச்சன் தீயவினைகளாற் பொருள்படைத்து அதனால் அரசனுக்கேமஞ்செய்தல்—பசுமட்கலத்துள் நீர் பெய்து இரீஇயற்று - பசியமட்கலத்துள்ளே நீரைப்பெய்து அதற்கேமஞ்செய்ததனோடொக்கும். எ - று.

முன் ஆக்கம் பயப்பனபோற்றோன்றிப் பின்னழிவே பயத்தலால், அவை சலமெனப்பட்டன. ஏமமார்த்தலென்பது ஏமார்த்தலென்றாயிற்று. ஏமத்தையடையப்பண்ணுதலென்றவாறு. இருத்துதல் நெடுங்காலமிருப்பச்செய்தல். அரசனும்பொருளும் சேரப்போமென்பதாம். பிறரெல்லாம் ஏமாத்தலென்று பாடமோதி, அதற்கு மகிழ்தலென்றும், இரீஇயற்றென்பதற்கு வைத்தாற்போலு மென்றுமுரைத்தார்; அவர் அவை தன்வினையும் பிறிதின்வினையுமாய் உவமையிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர். இவைநான்குபாட்டானும் அதற்குக் காரணம் கூறப்பட்டது. (௧௦)

௬௭ம் அதி.—வினைத்திட்பம்.

அஃதாவது அத்தூய வினை முடிப்பானுக்கு வேண்டுவதாய மனத்திண்மை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௬௬௧. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற. ௧.

இ - ள். வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் - வினைசெய்தற்கட்டிண்மையென்று சொல்லப்படுவது அதனை முடித்தற்குரியானொருவன் மனத்தினது திண்மை;—மற்றைய எல்லாம் பிற - அஃதொழிந்தனவெல்லாம் அதற்குத் திண்மையென்று சொல்லப்படா. எ - று.

ஒழிந்தனவாவன படை, அரண், நட்பு முதலியவற்றின்றிண்மைகள். அவையும் அதற்கு வேண்டுவனவாய் இனமாகலின் மற்றையவென்றும், வேண்டினும் அஃதில்வழிப் பயனில்வாகலிற் பிறவென்றுங் கூறினார். இதனால் வினைத்திட்பமாவது இன்னதென்பது கூறப்பட்டது. (௧)

௬௬௨. ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டி
னாறென்ப ராய்ந்தவர் கோள். ௨.

இ - ள். ஆய்ந்தவர் கோள் - முன் நீதியாராய்ந்த அமைச்சரது துணிபு—ஊறு ஓரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறு என்பர் - பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும் செய்யும்வினை தெய்வத்தாற்பழுதுபட்டவழி அதற்குத் தளராமையுமாகிய இவ்விரண்டன் வழியென்பர் நூலோர். எ - று.

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் * கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைத் தூய்மையும் உடன்கூறினார். உறுதலுடையதனை முன் ஊறென்றமையின், உற்றபினென்றும், இவ்விரண்டின்கண்ணே பட்டதென்பார் இரண்டினாறென்றுங்கூறினார். ஊறொராரென்று பாடமோதுவாருமுளர்; அஃது ஒல்காமையென்னுமெண்ணோடும் இரண்டென்னுந் தொகையோடும் இயையாமை அவரறிந்திலர். (௨)

* ஈண்டு நீதிநூலுடையார் என்றது சாணக்கியரையும் காமந்தகரையும்.

சாசா௩. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்றா விழுமந் தரும். ௩.

இ - ள். கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை - செயப்படும் வினையை முடிவின்கட் புலப்படும்வகை முன்னெல்லாம் மறைத்துச் செய்வதே திட்பமாவது;—இடைக் கொட்கின் எற்றாவிழுமம் தரும் - அங்ஙனமன்றி இடையே புலப்படுமாயின் அப்புலப்பாடு செய்வானுக்கு நீங்காத இடும்பையைக் கொடுக்கும். எ - று.

மறைத்துச் செய்வதாவது அங்கமைந்துமெண்ணியவாறு பிறரறியாமலும்; தானறிந்ததூஉம், தன்னிங்கிதம், வடிவு, செயல், சொற்களான் அவருய்த்துணராமலும் அடக்கிச் செய்தல். அத்திட்பம், ஆண்டன்மையான் வருதலின், ஆண்மையெனப்பட்டது. எற்றாவிழுமமாவன பகைவர் முன்னறிந்து அவ்வினையை விலக்குதல், செய்வானை விலக்குதல் செய்வராகலின், அவற்றான் வருவன. விழுமம் சாதிப்பெயர். இவையிரண்டுபொட்டானும் அதனது பகுதி கூறப்பட்டது. (௩)

சாசா௪. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். ௪.

இ - ள். சொல்லுதல் யார்க்கும் எளிய - யாம் இவ்வினையை இவ்வாற்றாற் செய்துமென நிரல்படச் சொல்லுதல் யாவர்க்குமெளிய;—சொல்லிய வண்ணம் செயல் அரியவாம் - அதனை அவ்வாற்றானே செய்தல் யாவர்க்கு மரியவாம். எ - று.

சொல்லுதல், செயலென்பன சாதிப்பெயர். அரியவற்றையெண்ணிச்சொல்லுதல் திட்பமில்லாதார்க்குமியறலின், எளியவென்றார். இதனால் அதனதருமை கூறப்பட்டது. (௪)

சாசாரு. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும். ரு.

இ - ள். வீறு எய்தி மாண்டார் வினைத்திட்பம் - எண்ணத்தாற் சிறப்பெய்திப் பிறவிலக்கணங்களானும் மாட்சிமைப்பட்ட அமைச்சரது வினைத்திட்பம்,—வேந்தன்கண் ஊறு எய்தி உள்ளப்படும் - வேந்தன்கண்ணே உறுதலையெய்தலான், எல்லாரானும் நன்குமதிக்கப்படும். எ - று.

வேந்தன்கணூறெய்தல் எடுத்தவினை அதனான் முற்றுப்பெற்றுச் செல்வமும் புகழும் அவன்கண்ணவாதல். எய்தலானென்பது திரிந்து நின்றது. உள்ளல் மதிப்பான் மறவாமை. இதனால் அதன்சிறப்புக் கூறப்பட்டது. (ரு)

சாசாசா. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். சா.

இ - ள். எண்ணிய எண்ணியாங்கு எய்துப - தாமெய்த எண்ணிய பொருள்களெல்லாவற்றையும் அவ்வெண்ணியவாறே எய்துவர்;—எண்ணியார் திண்ணியராகப் பெறின் - எண்ணியவர் அவற்றிற்கு வாயிலாகிய வினைக்கட் டிண்மையுடையராகப் பெறின். எ - று.

எளிதினெய்துபவென்பார், எண்ணியாங்கெய்துப வென்றார். அவர் அவ்வாறல்லதெண்ணாமையிற் றிண்ணியராகவே வினைமுடியும், அது முடிய அவையாவையுங் கைகூடுமென்பது கருத்து. இதனால் அஃதுடையாரெய்தும் பயன் கூறப்பட்டது. (சா)

௬௬௭. உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து. ௭.

இ - ள். உருள் பெருந்தேர்க்கு அச்சு ஆணி அன்னார் உடைத்து - உருளாநின்ற பெரிய தேர்க்கு அச்சின்கணாணிபோல வினைக்கட்டிண்ணியாரையுடைத்து உலகம்;—உருவு கண்டு எள்ளாமை வேண்டும் - அதனால் அவரை வடிவின் சிறுமைநோக்கி இகழ்தலை யொழிக. எ - று.

சிறுமை, எள்ளாமைவேண்டுமென்பதனானும், உவமையானும் பெற்றாம். அச்சு உருள்கோத்த மரம். ஆணி உருள் கழலாது அதன்கடைக்கட் செருகுமது. அது வடிவாற் சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைக் கொண்டுய்க்குந்திட்பமுடைத்து, அதுபோல, வடிவாற்சிறியராயிருந்தே பெரிய வினைகளைக் கொண்டுய்க்குந் திட்பமுடைய அமைச்சருமுளர், அவரை அத்திட்பநோக்கி அறிந்துகொள்க வென்பதாம். இதனால் அவரை யறியுமாறு கூறப்பட்டது. (௭)

௬௬௮. கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல். அ.

இ - ள். கலங்காது கண்ட வினைக்கண் - மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண்—துளங்காது தூக்கம் கடிந்து செயல் - பின்னசைதலின்றி நீட்டித்தலையொழிந்து செய்க. எ - று.

கலங்கியவழி ஒழிவதும் செய்வதுபோறலான்றுமாகலின், தெளிந்து பலகாலாராய்ந்து தாஞ்செய்வதாக ஓர்த்த வினையைக் கலங்காது கண்டவினையென்றார். துளங்காமை திட்பமுடைமை. (அ)

௬௬௯. துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை. கூ.

இ - ள். துன்பம் உற வரினும் - முதற்கண் மெய்ம்முயற்சியாற் றமக்குத் துன்பம் மிக வருமாயினும்,—இன்பம் பயக்கும் வினை துணிவு ஆற்றிச் செய்க - அது நோக்கித் தளராது முடிவின்கண் இன்பம் பயக்கும் வினையைத் திட்பமுடையராய்ச் செய்க. எ - று. (கூ)

துணிவு கலங்காமை. அஃதுடையார்க்கல்லது கணிகமாய முயற்சித்துன்ப நோக்காது நிலையுதலுடைய * பரிணாமவின்பத்தை நோக்கிச் செய்தல் கூடாமையின், துணிவாற்றிச்செய்கவென்றார். இவ்வயிரண்டுபாட்டானும் அவர் வினைசெய்யுமாறு கூறப்பட்டது. (கூ)

௬௭௦. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு. ௰.

இ - ள். வினைத்திட்பம் வேண்டாரை - வினைத்திட்பத்தை இது நமக்குச் சிறந்ததென்று கொள்ளாத அமைச்சரை,—எனைத்திட்பம் எய்தியக்கண்ணும் - ஒழிந்த திட்பங்களெல்லாமுடையராயவிடத்தும்,—வேண்டாது உலகு - நன்குமதியார் உயர்ந்தோர். எ - று.

மனத்தின்கட் டிட்பமில்லாதார்க்குப் படை, அரண், நட்பு முதலியவற்றின்றிட்பங்களெல்லாம் உளவாயினும், வினை முடியாதாம், ஆகவே, அவையெல்லாங் கெடு

* பரிணாமவின்பம் = முடிவிலுளதாகுஞ்சுகம்,

மென்பதுபற்றி உலகு வேண்டாதென்றார். இதனால் வினைத்திட்பமில்லாதாரதிழிபு கூறப்பட்டது. (௧௦)

௬௭-ம் அதி.—வினைசெயல்வகை.

அஃதாவது அத்திட்பமுடையவமைச்சன் அவ்வினையைச்செய்யுந்திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௬௭௧. சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத றீது. ௧.

இ - ள். சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல் - விசாரத்திற்கெல்லையாவது விசாரிக்கின்றான் இனி இது தப்பாதென்னுந் துணிவினைப் பெறுதல்;—அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது-அங்ஙனந் துணிவுபெற்ற வினை பின் நீட்டிப்பின்கட்டங்குமாயின், அது குற்றமுடைத்து. எ - று.

சூழ்ச்சிமுடிவு துணிவெய்தலெனவே, துணிவெய்துமளவுஞ் சூழவேண்டுமென்பது பெற்றாம். பின்னர்த் துணிவு ஆகுபெயர். நீட்டிப்பு செய்யுங்காலத்துச் செய்யாமை. அஃதுள்வழிக் காலக்கழிவாகலானும் பகைவர் அறிந்தழித்தலானும் முடியாமையின், அதனைத் தீதென்றார். (௧)

௬௭௨. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. ௨.

இ - ள். தூங்கிச் செயற்பால தூங்குக - நீட்டித்துச் செய்யும் பகுதியவாய வினைகளுள் நீட்டிக்க;—தூங்காது செய்யும் வினை தூங்கற்க - நீட்டியாது செய்யும் வினைகளுள் நீட்டியாதொழிக. எ - று.

இருவழியும் இறுதிக்கட்டொக்க ஏழாவது விரிக்கப்பட்டது. இருவகை வினைகளும் வலியானுங் காலத்தானும் அறியப்படும். மாறிச்செய்யின், அவை வாயாவென்பது கருத்து. மேற்றூங்காமையென்றார்*, ஈண்டதனைப் பகுத்துக்கூறினார். இவையிரண்டுபாட்டானும் பொதுவகையால் வினைசெய்யுந்திறங் கூறப்பட்டது. (௨)

௬௭௩. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல். ௩.

இ - ள். ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்று - வினைசெய்யுங்கால் இயலுமிடத்தெல்லாம் போராற்செய்தல் நன்று;—ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கிச் செயல்-அஃதியலாவிடத்து ஏனை மூன்றுபாயத்துள்ளும் அது முடிவதோருபாயநோக்கிச் செய்க. எ - று.

இயலுமிடம் பகையிற்றன்வலியனாய காலம். அக்காலத்துத்தண்டமே நன்றென்றார், அஞ்சுவது அதற்கேயாகலின். இயலாவிடம் ஒத்தகாலமும் மெலியகாலமும். அவ்விரண்டு காலத்துஞ் சாம பேத தானங்களுள் அது முடியுமுபாயத்தாற் செய்கவென்றார், அவை ஒன்றற்கொன்று வேறுபாடுடையவேனும் உடம்படுத்தற்பயத்தாற் றம்முளொக்குமாகலின். இதனான் வலியான், ஒப்பான், மெலியானென நிலை மூவகைத்தென்பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும், கூறப்பட்டன. (௩)

* திருக்குறள், ௩௮௩.

௬௭௪. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும். ௪.

இ - ள். வினை பகை என்ற இரண்டின் எச்சம் - செய்யத்தொடங்கிய வினையும் களையத்தொடங்கிய பகையுமென்று சொல்லப்பட்ட இரண்டனதொழிவும்—நினையுங் கால் தீயெச்சம்போலத் தெறும்-ஆராயுங்காற் றீயினதொழிவுபோலப் பின் வளர்ந்து கெடுக்கும். எ - று.

இனி இக்குறை என்செய்வதென்று இகழ்ந்தொழியற்க, முடியச்செய்கவென்ப தாம். பின் வளர்தலொப்புமைபற்றிப் பகையெச்சமும் உடன் கூறினர். இதனான் வலியான் செய்யுந்திறங் கூறப்பட்டது. (௪)

௬௭௫. பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்து
மிருடீர வெண்ணிச் செயல். ௫.

இ - ள். பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும் - வினைசெய்யுமிடத் துப் பொருளுங் கருவியுங் காலமும் வினையும் இடனுமாகிய இவ்வைந்தனையும்— இருள் தீர எண்ணிச் செயல் - மயக்கமறவெண்ணிச் செய்க. எ - று.

எண்ணொடு பிறவழியுங் கூட்டப்பட்டது. பொருள் அழியும் பொருளும் ஆகும் பொருளும். கருவி தன்றானையும் மாற்றார்தானையும். காலம் தனக்காங்காலமும் அவர்க் காங்காலமும். வினை தான்வல்லவினையும் அவர் வல்லவினையும். இடம் தான் வெல்லு மிடமும் அவர் வெல்லுமிடமும். இவற்றைத் தான் வென்றியெய்துந்திறத்திற் பிழை யாமலெண்ணிச் செய்கவென்பதாம். (௫)

௬௭௬. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். ௬.

இ - ள். முடிவும் - வினைசெய்யுங்கால் அது முடிதற்குளதாம் முயற்சியும்— இடையூறும் - அதற்கு வருமிடையூறும்—முற்றியாங்கு எய்தும் படுபயனும் - அது நீங்கி முடிந்தாற் றானெய்தும் பெரும்பயனும்—பார்த்துச் செயல் - சீர்தூக்கிச் செய்க. எ - று.

முடிவு ஆகுபெயர். முயற்சியிடையூறுகளதளவிற் பயனதளவு பெரிதாயிற் செய் கவென்பதாம். (௬)

௬௭௭. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல். ௭.

இ - ள். செய்வினை செய்வான் செயன்முறை-அவ்வாற்றாற் செய்யப்படும் வினை யைத் தொடங்கினான் செய்யுமுறைமையாவது—அவ்வினை உள் அறிவான் உள்ளம் கொளல் - அதனதுளப்பாட்டினை யறிவான் கருத்தினைத் தானறிதல். எ - று.

அவ்வாறென்றது பொருண் முதலியவெண்ணலையும் முடிவுமுதலிய தூக்கலையும். உள்ளறிவான் முன்செய்து போந்தவன். அவன் கருத்து அவன் செய்து போந்த உபாயம். அதனை யறியவே, தானும் அதனாற்செய்து பயனெய்துமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஒப்பான் செய்யுந்திறங் கூறப்பட்டது. (௭)

௬௭௮. வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று. ௮.

இ - ள். வினையான் வினை ஆக்கிக்கோடல் - செய்கின்றவினையாலே அன்னது பிறிதுமோர்வினையை முடித்துக்கொள்க;—நனைகவுள் யானையால் யானை யாத்தற்று - அது மதத்தானனைந்த கபோலத்தினையுடைய யானையாலே அன்னது பிறிதுமோர் யானையைப்பிணித்ததனோ டொக்கும். எ - று.

பிணித்தற் கருமை தோன்ற நனைகவுளென்பது பின்னுங் கூட்டப்பட்டது. தொடங்கிய வினையானே பிறிதுமோர்வினையை முடித்தற் குபாயமாமாறு எண்ணிச் செய்க, செய்யவே, அம்முறையான் எல்லாவினையும் எளிதின் முடியுமென்பதாம். (௮)

௬௭௯. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல். ௯.

இ - ள். நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே - வினைசெய்வானுற் றன்னட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படும்—ஒட்டாரை ஒட்டிக் கொளல் - தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல். எ - று.

அவ்வினை வாய்த்தற்பயத்தவாய இவ்விரண்டும் பகைவர்க்குத் தன்மெலிவு புலனாவதன்முன்னே செய்கவென்பார், விரைந்த தென்றார். விரைந்து செய்யப்படுவ தென்றவாறு. வினைசெய்யுந் திறமாகலிற் பகைவரோ டொட்டாராயிற்று. தன்னொட்டார் பிறருட் கூடாமல் மாற்றிவைத்த லெனினு மமையும். (௯)

௬௮௦. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. ௧௦.

இ - ள். உறை சிறியார் - ஆளுமிடஞ் சிறியராய அமைச்சர்;—உள் நடுங்கல் அஞ்சி - தம்மின்வலியார் எதிர்ந்தவழித் தம்பகுதி நடுங்கலையஞ்சி,—குறை பெறின் பெரியார்ப் பணிந்து கொள்வர் - அந்நிலைக்கு வேண்டுவதாய சந்து கூடுமாயின், அவரைத் தாழ்ந்து அதனையேற்றுக் கொள்வர். எ - று.

இடம் நாடும் அரணும். அவற்றது சிறுமை ஆள்வார் மேலேற்றப்பட்டது. மெலியாரோடு சந்திக்கு வலியார் இயைத லரிதாகலின், பெறினென்றார். அடியிலே மெலியராயினார் தம்பகுதியு மஞ்சிநீங்கின் முதலொடுங் கெடுவராகலின், அது வாராமற் சிறிது கொடுத்துஞ் சந்தினை யேற்றுக்கொள்க வென்பதாம். பணிதல் மானமுடையார்க்குக் கருத்தன்மையின், கொள்வரென உலகியலாற் கூறினார். இவை மூன்றுபாட்டானும் மெலியான் செய்யுந்திறங் கூறப்பட்டது. (௧௦)

௬௯ம் அதி.—தூது.

அஃதாவது சந்தி விக்கிரகங்கட்கு வேற்று வேந்தரிடைச் செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும் மேல் வினைசெயல்வகை யென்றமையின், இஃததன்பின் வைக்கப்பட்டது. தான் வகுத்துக்கூறுவான், கூறியது கூறுவானெனத் தூது இருவகைப்படும். அவருள் முன்னோன் அமைச்சனோ டொப்பானாகலானும், பின்னோன் அவனிற் காற்கூறு குணங் குறைந்தோனாகலானும், இஃதமைச்சியலாயிற்று.

௬௮௧. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. ௧.

இ - ள். அன்பு உடைமை - தன் சுற்றத்தார்மாட்டு அன்புடையனாதலும்—ஆன்ற குடிப்பிறத்தல் - அமைச்சுப் பூணற்கமைந்த குடியின்கட்பிறத்தலும்—வேந்து அவாம் பண்பு உடைமை - அரசர்சாதி விரும்பும் பண்புடையனாதலும்—தூது உரைப்பான் பண்பு - தூதுவார்த்தை சொல்லுவானுக் கிலக்கணம். எ - று.

முன்னையவிரண்டானும், முறையே சுற்றத்தார்க்குத் தீங்குவாராமற் றன்பேணியொழுகலும், தன்முன்னோர் தூதியல் கேட்டறிதலும் பெற்றாம். வேந்தவாம்பண்புடைமை முன்னர் மன்னரைச் சேர்ந்தொழுகற்கட் பெறப்படும். அதனால் வேற்றரசரும் அவன் வயத்தராதல் பெறுதும். (க)

சுஅஉ. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று. உ.

இ - ள். அன்பு - தம்மரசன் மாட்டன்புடைமையும்—அறிவு - அவனுக்கு ஆவனவறியுமறிவுடைமையும்—ஆராய்ந்த சொல்வன்மை - அவற்றை வேற்றரசரிடைச் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லுதல் வன்மையுமென—தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று - தூதுரைக்க வுரியார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று. எ - று.

ஆராய்தல் அவற்றிற் குடம்படுஞ் சொற்களைத் தெரிதல். இன்றி யமையாத மூன்றெனவே, அமைச்சர்க்குச் சொல்லிய பிறகுணங்களும் வேண்டுமென்பது பெற்றாம். இவை யிரண்டுபாட்டானும் இருவகையார்க்கும் பொதுவிலக்கணங் கூறப்பட்டது. ()

சுஅங. நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. ங.

இ - ள். வேலாருள் வென்றி வினை உரைப்பான் பண்பு - வேலையுடைய வேற்றரசரிடைச் சென்று தன்னரசனுக்கு வென்றிதரும் வினையைச் சொல்லுவானுக்கு இலக்கணமாவது—நூலாருள் நூல் வல்லன் ஆகுதல் - நீதிநூலையுணர்ந்த அமைச்சரிடைத் தான் அந்நூலை வல்லனாதல். எ - று.

கோறன்மாலையரென்பது தோன்ற வேலாரென்றும், தூது வினை * யிரண்டுமடங்கவென்றிவினை யென்றுங் கூறினார். வல்லனாதல் உணர்வுமாத்திர முடையராய அவர் முன் வகுக்குமாற்றலுடையனாதல். (ங)

சுஅச. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. ச.

இ - ள். அறிவு - இயற்கையாகிய வறிவும்—உரு - கண்டார் விரும்புந் தோற்றப் பொலிவும்—ஆராய்ந்த கல்வி - பலரோடும் பலகாலு மாராயப்பட்ட கல்வியுமென—இம்மூன்றன் செறிவு உடையான் - நன்குமதித்தற் கேதுவாய இம்மூன்றனது கூட்டத்தை யுடையான்—வினைக்குச் செல்க - வேற்றுவேந்தரிடைத் தூது வினைக்குச் செல்க. எ - று.

இம்மூன்றும் ஒருவன்பாற் கூடுதலரிதாகலின், செறிவுடையா னென்றார். இவற்றான் நன்குமதிப்புடையனாகவே, வினை இனிதுமுடியு மென்பது கருத்து. (ச)

சுஅரு. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது. ரு.

* தூதுவினை - சந்திவிக்கிரகம்.

இ - ள். தொகச் சொல்லி - வேற்றரசர்க்குப் பல காரியங்களைச் சொல்லும் வழிக் காரணவகையாற் றொகுத்துச்சொல்லியும்—தூவாத நீக்கி நகச் சொல்லி - இன்னாத காரியங்களைச் சொல்லும்வழி வெய்ய சொற்களை நீக்கி இனிய சொற்களான் மனமகிழச் சொல்லியும்—நன்றி பயப்பது தூதாம் - தன்னரசனுக்கு நன்மையைப் பயப்பவனே தூதனாவான். எ - று.

பலகாரியங்கட் குடம்படாதார் பரம்பரையான் அவற்றிற்குக் காரணமாய தொன்றைச் சொல்ல அதனால் அவை விளையுமாறுய்த்துணர வருமையானுஞ் சுருக்கத்தானு முடம்படுவர், இன்னாதவற்றிற் குடம்படாதார் தம்மன மகிழச்சொல்ல அவ் வின்னாமை காணாது உடம்படுவராதலின், அவ்விருவாற்றானும் தன்காரியந் தவறாமல் முடிக்கவல்லா னென்பதாம். எண்ணும்மைகள் விகாரத்தாற்றொக்கன. (ரு)

சூஅசு. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது. சு.

இ - ள். கற்று - நீதிநூல்களைக் கற்று—செலச் சொல்லி - தான் சென்றகருமத்தைப் பகைவேந்தர் மனங்கொளச் சொல்லி—கண் அஞ்சான் - அவர் செயிர்த்து நோக்கின் அந்நோக்கிற் கஞ்சாது—காலத்தால் தக்கது அறிவது தூதாம் - காலத்தோடு பொருந்த அது முடிக்கத்தக்க வுபாயமறிவானே தூதனாவான். எ - று.

அவ்வுபாய மறிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், அதனானன்றிப் பிறிதொன்றான் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்கவேண்டுதலிற் காலத்தாற்றக்கதறிதலும், இலக்கணமாயின. (சு)

சூஅஎ. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை. எ.

இ - ள். கடன் அறிந்து - வேற்றரசரிடத்துத் தான்செய்யுமுறைமை யறிந்து—காலம் கருதி - அவர்செவ்வி பார்த்து—இடன் அறிந்து - சென்ற கருமஞ் சொல்லுதற் கேற்ற இடமறிந்து—எண்ணி - சொல்லுமாற்றை முன்னே விசாரித்து—உரைப்பான் தலை - அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான். எ - று.

செய்யுமுறைமையாவது அவர்நிலையும் தன்னரசனிலையும் தன்னிலையும் தூக்கி அவற்றிற்கேற்பக் காணுமுறைமையும் சொல்லுமுறைமையும் முதலாயின. செவ்வி தன்சொல்லை யேற்றுக்கொள்ளும் மனமகிழ்ச்சி. அது காலவயத்ததாகலிற் காலமென்றார். இடம் தனக்குத் துணையாவாருடனாயவிடம். எண்ணுதல் தான் அது சொல்லுமாறும் அதற்கு அவர்சொல்லு முத்தரமும் அதற்குப் பின்றான் சொல்லுவனவுமாக இவ்வாற்றான் மேன்மேற் றானே கற்பித்தல். வடநூலார் இவ்விருவகையாருடன் ஓலை கொடுத்து நிற்பாரையுங் கூட்டித் தூதரைத் தலை, இடை, கடையென்று வகுத்துக்கூறினாராகலின், அவர் மதமுந்தோன்றத் தலையென்றார். தூதென்பது அதிகாரத்தான் வந்தது. இவை யைந்துபாட்டானும் தான் வகுத்துக்கூறுவா னிலக்கணங் கூறப்பட்டது.

சூஅஅ. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. அ.

இ - ள். வழி உரைப்பான் பண்பு - தன்னரசன் வார்த்தையை அவன் சொல்லியவாறே வேற்றரசர்க்குச் சென்று சொல்லுவானிலக்கணமாவன—தூய்மை-பொருள் காமங்களாற் றூயனாதலும்—துணைமை - தனக்கு அவரமைச்சர் துணையாந்தன்மையும்—துணிவுடைமை - துணிதலுடைமையும்—இம்மூன்றின் வாய்மை - இம்மூன்றோடு கூடிய மெய்ம்மையுமென விவை. எ - று.

பொருள் காமங்கள்பற்றி வேறுபடக் கூறுமைப்பொருட்டுத் தூய்மையும், தன்னரசனுக்கு உயர்ச்சிகூறியவழி எம்மனோர்க் கஃதியல்பெனக்கூறி அவர் வெகுளி நீக்குதற்பொருட்டுத் துணைமையும், இது சொல்லின் இவரேதஞ்செய்வரென் றொழியாமைப்பொருட்டுத் துணிவுடைமையும், யாவரானுந் தேறப்படுதற்பொருட்டு மெய்ம்மையும், வேண்டப்பட்டன. இன் ஏதுவின்பொருட்கண் வந்தது. (அ)

௬அ௯. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். ௯.

இ - ள். விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் - தன்னரசன் சொல்லிவிட்ட வார்த்தையை வேற்றரசர்க்குச் சென்று சொல்லவுரியான்—வடு மாற்றம் வாய்சோரா வன்கணவன் - தனக்கு வருமேதத்திற்கஞ்சி அவனுக்குத் தாழ்வான வார்த்தையை வாய்சோர்ந்துஞ் சொல்லாத திண்மையை யுடையான். எ - று.

தாழ்வு சாதிதருமமன்மையின், வடுவென்றார். வாய்சோராவெனக் காரியங் காரணத்துளடக்கப்பட்டது. (௯)

௬௯௦. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது. ௧௦.

இ - ள். இறுதி பயப்பினும் எஞ்சாது - அவ்வார்த்தை தன்னுயிர்க்கிறுதி தருமாயினும் அதற்கஞ்சி யொழியாது—இறைவர்க்கு உறுதிபயப்பது தூதாம் - தன்னரசன் சொல்லியவாறே அவனுக்கு மிகுதியை வேற்றரசரிடைச் சொல்லுவானே தூதனுவான். எ - று.

இறுதிபயப்பினு மென்றதனால், ஏனைய பயத்தல் சொல்லவேண்டாவாயிற்று. இவை மூன்றுபாட்டானுங் கூறியது கூறுவானதிலக்கணங் கூறப்பட்டது. (௧௦)

எ௦ம் அதி.—மன்னரைச்சேர்ந்தொழுகல்.

அஃதாவது அமைச்சர் அரசரைப் பொருந்தி யொழுகுமாறு. இது, வேந்தவாம் பண்புடைமை * யென மேலே வேண்டப்பட்டமையின், தூதின்பின் வைக்கப்பட்டது.

௬௯௧. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். ௧.

இ - ள். இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - மாறுபடுதலையுடைய அரசரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர்—அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க - அவரை மிக நீங்குவதும் மிகச்செறிவதுஞ் செய்யாது தீக்காய்வார்போல இடைநிலத்திலே நிற்க. எ - று.

கடிதின் வெகுளுந் தன்மையரென்பது தோன்ற, இகல்வேந்தரென்றார். மிகவகலிற் பயன் கொடாது மிகவணுகின் அவமதிபற்றித் தெறும் வேந்தர்க்கு, மிகவகலிற் குளிர் நீக்காது மிகவணுகிற் சுடுவதாய தீயோடுளதாய தொழிலுவமம் பெறப்பட்டது. (௧)

---

* திருக்குறள், ௬அ௧.

சுகூஉ. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும். உ.

இ - ள். மன்னர் விழைப விழையாமை - தம்மாற் சேரப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதொழிதல்—மன்னரான் மன்னிய ஆக்கம் தரும் - அமைச்சர்க்கு அவரானே நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும். எ - று.

ஈண்டு விழைபவென்றது அவர்க்குச் சிறப்பாக வுரியவற்றை. அவை நுகரப்படுவன, ஒப்பனை, மேன்மையென்றிவை முதலாயின. இவற்றை ஒப்பிற்கஞ்சித் தாம் விழையாதொழியவே, அவ்வச்சநோக்கி யுவந்து அவர்தாமே எல்லாச் செல்வமும் நல்குவரென்பது கருத்து. எனவே, அவற்றை விரும்பிற் கேடுதரு மென்பதாம். (உ)

சுகூ௩. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது. ௩.

இ - ள். போற்றின் அரியவை போற்றல் - அமைச்சர் தம்மைக் காக்கக் கருதின் அரிய பிழைகள் தங்கண்வாராமற் காக்க,—கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது - அவற்றை வந்தனவாகக்கேட்டு அவ்வரசர் ஐயுற்றால் அவரைப் பின்றெளிவித்தல் யாவர்க்கு மரிதாகலான். எ - று.

அரிய பிழைகளாவன அவராற் பொறுத்தற்கரிய அறைபோதல், உரிமையொடு மருவல், அரும்பொருள் வெளவலென் றிவை முதலாயின. அவற்றைக் காத்தலாவது ஒருவன் சொல்லியக்கால், தகுமோ வென்றையுறாது தகாதென்றே அவர் துணியவொழுகல். ஒருவாற்றாற் றெளிவித்தாலும் கடன்கொண்டான் றோன்றப் பொருடோன்று மாறுபோலக் கண்டுழியெல்லாம் அவை நினைக்கப்படுதலின் யார்க்கு மரிதென்றார். இவை மூன்றுபாட்டானும் அது பொதுவகையாற் கூறப்பட்டது. (௩)

சுகூ௪. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து. ௪.

இ - ள். ஆன்ற பெரியாரகத்து - அமைந்தவரச ரருகிருந்தால்,—செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல் - அவர்காண ஒருவன் செவிக்கட்சொல்லுதலையும் ஒருவன் முகநோக்கி நகுதலையுந் தவிர்ந்தொழுகுக. எ - று.

சேர்தல் பிறனொடு சேர்தல். செய்தொழுகின், தங்குற்றங் கண்டு செய்தனவாகக் கொள்வரென்பது கருத்து. (௪)

சுகூரு. எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை. ரு.

இ - ள். மறை - அரசனுக்குப் பிறரோடு மறை நிகழ்வுழி—எப்பொருளும் ஓரார் - யாதொரு பொருளையுஞ் செவிகொடுத்துக் கேளாது,—தொடரார் - அவனை முடுகி வினவுதலுஞ் செய்யாது,—அப்பொருளை விட்டக்கால் கேட்க - அம்மறைப்பொருளை அவன்றானே அடக்காது சொல்லியக்காற் கேட்க. எ - று.

ஓர்தற்கேற்கும் பொருளாயினு மென்பார், எப்பொருளு மென்றார். மற்று வினைமாற்றின்கண் வந்தது. (ரு)

சுகூசு. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். சு.

இ - ள். குறிப்பு அறிந்து - அரசனுக்குக் காரியஞ்சொல்லுங்கால் அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினையறிந்து—காலம் கருதி - சொல்லுதற்கேற்ற காலத்தையும் நோக்கி,—வெறுப்பு இல வேண்டுப வேட்பச் சொலல்-வெறுப்பிலவுமாய் வேண்டுவனவுமாய காரியங்களை அவன் மனம் விரும்பும்வகை சொல்லுக. எ - று.

குறிப்புக் காரியத்தின்கணன்றிக் காமவெகுளி யுள்ளிட்டவற்றி னிகழ்வுழியும் அதற்கேலாக்காலத்துஞ் சொல்லுதல் பயனின்றாகலிற் குறிப்பறிந்து காலங்கருதியென்றும், அவனுடம்படாதன முடிவுபோகாமையின் வெறுப்பிலவென்றும், பயனில்லவும் பயன்சுருங்கியவுஞ் செய்தல் வேண்டாமையின் வேண்டுப வென்றும், அவற்றை இனியவாய்ச் சுருங்கி விளங்கிய பொருளவாய சொற்களாற் சொல்லுக வென்பார் வேட்பச் சொலலென்றுங் கூறினர். (௬)

௬௯௭. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல். எ.

இ - ள். வேட்பன சொல்லி - பயன் பெரியனவுமாய் அரசன் விரும்புவனவுமாய காரியங்களை அவன் கேட்டிலனாயினுஞ் சொல்லி,—எஞ்ஞான்றும் வினை இல கேட்பினும் சொல்லாவிடல் - எஞ்ஞான்றும் பயனிலவாயவற்றைத் தானே கேட்டாலுஞ் சொல்லாதுவிடுக. எ - று.

வினையிலவெனவுங் கேட்பினுமெனவும் வந்த சொற்களான், அவற்றின் மறுதலைச்சொற்கள் வருவிக்கப்பட்டன. வினையான் வருதலின் வினையென்றும், வறுமைக் காலமுமடங்க எஞ்ஞான்று மென்றுங் கூறினர். சொல்லுவனவுஞ் சொல்லாதனவும் வகுத்துக் கூறியவாறு. இவைநான்குபாட்டானும் சிறப்புவகையாற் கூறப்பட்டது. ()

௬௯௮. இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும். அ.

இ - ள். இளையர் இன முறையர் என்று இகழார் - இவர் எம்மினிளையரென்றும் எமக்கின்ன முறையினையுடையரென்றும் அரசரையவமதியாது,—நின்ற ஒளியோடு ஒழுகப்படும் - அவர்மாட்டு நின்றவொளியோடு பொருந்த ஒழுகுதல் செயப்படும். எ - று.

ஒளி—உறங்காநிற்கவுந் தாமுலகங்காக்கின்ற அவர் கடவுட்டன்மை. * அதனோடு பொருந்தவொழுகலாவது அவர் கடவுளருந் தாம் மக்களுமாயொழுகுதல். அவ்வொளியாற் போக்கப்பட்ட விளமையும் முறையும்பற்றி இகழ்வராயின், தாமும் போக்கப்படுவரென்பது கருத்து. (அ)

௬௯௯. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். ௯.

இ - ள். கொளப்பட்டேம் என்று எண்ணிக் கொள்ளாத செய்யார் - அரசனால் யாம் நன்குமதிக்கப் பட்டேமென்று கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்யார்—துளக்கு அற்ற காட்சியவர் - நிலைபெற்ற வறிவினையுடையார். எ - று.

* உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி—கறங்கு தெண்டிரை வையகங் காக்குமா—விறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்—தறங்கள் வௌவ வதன்புறங் காக்கலார்—சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், உ௪௯.

கொள்ளாதனசெய் தழிவெய்துவார் கொளப்பாட்டிற்குப்பின் றம்மை வேறொரு வராகக் கருதுவராகலின், முன்னேயராகவே கருதி யஞ்சியொழுகுவாரைத் துளக்கற் றகாட்சியவரென்றார். (கூ)

எ00. பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும். க0.

இ - ள். பழையம் எனக் கருதிப் பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை - அரச னுக்கு யாம் பழையமெனக் கருதித் தமக்கியல்பல்லாதவற்றைச் செய்யுமுரிமை— கேடு தரும் - அமைச்சர்க்குக் கேட்டினைப் பயக்கும். எ - று.

அவன் பொறுது செறும்பொழுதின் அப்பழமைநோக்கிக் கண்ணோடாது உயிரை வௌவுதலான், அவன்வேண்டாதன செய்தற்கேதுவாய கெழுதகைமை கேடுதரு மென்றார். இவை மூன்றுபாட்டானும் பொறுப்பரென்று அரசர் வெறுப்பன செய்யற் கவென்பது கூறப்பட்டது. (க0)

எகம் அதி.—குறிப்பறிதல்.

அஃதாவது அரசர் கருதியவதனை அவர் கூறாமலறிதல். இது மன்னரைச் சேர்ந்தொழுகற்கு இன்றியமையாதாகலின், அதன்பின் வைக்கப்பட்டது.

எ0க. கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக் கணி. க.

இ - ள். குறிப்புக் கூறாமை நோக்கி அறிவான் - அரசனாற் குறித்த கருமத்தை அவன் கூறவேண்டாவகை அவன்முகத்தானுங் கண்ணானுநோக்கி அறியுமமைச்சன்.— எஞ்ஞான்றும் மாறா நீர் வையக்கு அணி - எஞ்ஞான்றும் வற்றாத நீராற்சூழப்பட்ட வையத்துள்ளார்க்கு ஓராபரணமாம். எ - று.

ஒட்பமுடையனாய் எல்லார்க்கும் அழகுசெய்தலான், வையக்கணியென்றார். குறிப்பும் வையமும் ஆகுபெயர். வையத்திற்கென்பது விகாரப்பட்டு நின்றது. (க)

எ0உ. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். உ.

இ - ள். அகத்தது ஐயப்படாது உணர்வானை - ஒருவன் மனத்தின்கணிகழ்வதனை ஐயப்படாது ஒருதலையாகவுணரவல்லானை—தெய்வத்தோடு ஒப்பக் கொளல் - மகனே யாயினும், தெய்வத்தோடொப்ப நன்குமதிக்க. எ - று.

உடம்பு முதலியவற்றான் ஒவ்வானாயினும் பிறர் நினைத்ததுணருந் தெய்வத்தன்மை யுடைமையின், தெய்வத்தோ டொப்பவென்றார். (உ)

எ0ங. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். ங.

இ - ள். குறிப்பின் குறிப்பு உணர்வாரை - தங்குறிப்பு நிகழுமாறறிந்து அதனாற் பிறர்குறிப்பறியுந்தன்மையாரை,—உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல் - அரசர் தம்முறுப்புக்களுள் அவர் வேண்டுவதொன்றனைக் கொடுத்தாயினும், தமக்குத் துணை யாகக் கொள்க. எ - று.

உண்ணிகழுநெறி யாவர்க்குமொத்தலின், பிறர்குறிப்பறிதற்குத் தங்குறிப்புக் கருவியாயிற்று. உறுப்புக்களாவன பொருளும் நாடும் யானைகுதிரைகளும் முதலிய புறத்துறுப்புக்கள். இதற்குப்பிறர் முகக்குறிப்பானே அவர் மனக்குறிப்புணர்வாரை யென்றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானுங் குறிப்பறிவாரது சிறப்புக் கூறப்பட்டது. (௩)

எ0௪. குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு. ௪.

இ - ள். குறித்தது கூறாமைக் கொள்வாரோடு - ஒருவன் மனத்துக் கருதியவதனை அவன் கூறவேண்டாமல் அறியவல்லாரோடு—ஏனை உறுப்பு ஓரனையர் - மற்றை மாட்டாதார் உறுப்பாலொருதன்மையராக வொப்பாராயினும்,—வேறு - அறிவான் வேறு. எ - று.

கொள்ளாதாரென்பதூஉம், ஆயினுமென்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. சிறந்த வறிவின்மையின், விலங்கென்னுங்கருத்தான் வேறென்றார். (௪)

எ0௫. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண். ௫.

இ - ள். குறிப்பின் குறிப்பு உணராவாயின் - குறித்தது காணவல்ல தங்காட்சியாற் பிறர்குறிப்பினையுணரமாட்டாவாயின்,—உறுப்பினுள் கண் என்ன பயத்தவோ - ஒருவனுறுப்புக்களுட் சிறந்த கண்கள் வேறென்ன பயனைச் செய்வன! எ - று.

முதற்கட் குறிப்பு ஆகுபெயர். குறிப்பறிதற்கட் டுணையாதற் சிறப்புப்பற்றி உயிரதுணர்வு கண்மேலேற்றப்பட்டது. அக்கண்களாற் பயனில்லையென்பதாம். இவையிரண்டுபாட்டானுங் குறிப்பறியாரதிழிபு கூறப்பட்டது. (௫)

எ0௬. அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம். ௬.

இ - ள். அடுத்தது காட்டும் பளிங்குபோல் - தன்னையடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டுகாட்டும் பளிங்குபோல—நெஞ்சங் கடுத்தது முகம் காட்டும் - ஒருவனெஞ்சத்து மிக்கதனை அவன் முகந் தானே கொண்டு காட்டும். எ - று.

அடுத்ததென்பது ஆகுபெயர். கடுத்ததென்பது கடியென்னு முரிச்சொலடியாய் வந்த தொழிற்பெயர். உவமை ஒருபொருள் பிறிதொருபொருளின்பண்பைக் கொண்டு தோற்றுதலாகிய தொழில்பற்றி வந்தது. (௬)

எ0எ. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும். எ.

இ - ள். உவப்பினும் காயினும் தான் முந்துறும் - உயிர் ஒருவனையுவத்தலானுங் காய்தலானுமுறின், தானறிந்து அவற்றின்கண் அதனின்முற்பட்டு நிற்குமாகலான்,—முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ - முகம்போல அறிவுமிக்கது பிறிதுண்டோ இல்லை. எ - று.

உயிர்க்கே அறிவுள்ளது ஐம்பூதங்களானியன்ற முகத்திற்கில்லையென்பாரை நோக்கி, உயிரது கருத்தறிந்து அஃதுவக்குறின் மலர்ந்துங் காய்வுறிற் கருகியும் வரலான், உண்டென மறுப்பார் போன்று, குறிப்பறிதற்குக் கருவி கூறியவாறு. (எ)

எ0அ. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின். அ.

இ - ள். அகம் நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின் - குறையுறுவானும் தன் மனத்தைக் குறிப்பானறிந்து தானுற்றவதனைத் தீர்ப்பாரைப் பெறின்,—முகம் நோக்கி நிற்க அமையும் - அவர் தன்முகம் நோக்கும்வகை தானும் அவர்முகநோக்கி அவ்வெல் லைக்கணிற்க வமையும். எ - று.

உணர்வாரெனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினார். அவ்வெல்லையைக் கடந்து சொல்லுமாயின் இருவர்க்குஞ் சிறுமையா மாகலின், அது வேண்டாவென்ப தாம். குறையுறுவானியல்பு கூறுவார்போன்று கருவி கூறியவாறு. இவை மூன்று பாட்டானுங் குறிப்பறிதற்கருவி முகமென்பது கூறப்பட்டது. (அ)

எ0கூ. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின். கூ.

இ - ள். கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின் - வேந்தர்தம் நோக்கு வேறு பாட்டின்றன்மையை அறியவல்ல அமைச்சரைப்பெறின்,—பகைமையும் கேண்மை யும் கண் உரைக்கும் - அவர்க்கு மனத்துக்கிடந்த பகைமையையும் ஏனைக்கேண்மை யையும் வேற்று வேந்தர் சொல்லிற்றிலராயினும் அவர்கண்களே சொல்லும். எ - று.

இறுதிக்கட் கண் ஆகுபெயர். நோக்குவேறுபாடாவன வெறுத்தநோக்கமும் உவந்தநோக்கமும். உணர்தல் அவற்றை அவ்வக் குறிகளானறிதல். (கூ)

எக0. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற. க0.

இ - ள். நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் - யாம் நுண்ணறிவுடையே மென்றிருக்கும் அமைச்சர் அரசர்கருத்தினையளக்குங் கோலாவது—காணுங்கால் கண்ணல்லது பிற இல்லை - ஆராயு மிடத்து அவர்கண்ணல்லது பிறவில்லை. எ - று.

அறிவினுண்மை அஃதுடையார்மேலேற்றப்பட்டது. இங்கிதம், வடிவு, தொழில், சொல்லென்பன முதலாகப் பிறர்கருத்தளக்குமளவைகள் பல, அவையெல்லாம் மூன் னறிந்தவழி அவரான் மறைக்கப்படும், நோக்கம் மனத்தொடுகலத்தலான் ஆண்டு மறைக்கப்படாதென்பதுபற்றி, அதனையே பிரித்துக் கூறினார். இனி அலைக்குங்கோ லென்று பாடமோதி, நுண்ணியமென்றிருக்கும் அமைச்சரை அரசரலைக்குங்கோலா வது கண்ணெனவுரைத்து, தன்வெகுளிநோக்கால் அவர் வெகுடற்குறிப்பறிகவென் பது கருத்தாக்கு வாருமுளர். இவையிரண்டுபாட்டானும் நுண்கருவி நோக்கென்பது கூறப்பட்டது. (க0)

எஉ ம் அதி.—அவையறிதல்.

அஃதாவது அரசனோடிருந்த அவையினதியல்பையறிதல். காரியஞ்சொல் லுங்கால் அவன் குறிப்பறிதலேயன்றி இதுவும் வேண்டுதலின், இஃததன்பின் வைக்கப்பட்டது.

எகக. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர். க.

இ - ள். சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல்லின் குழுவினை யறிந்த தூய்மையினையுடையார்—அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக - தாமொன்று சொல்லுங்கால் அப்பொழுதையவையினையறிந்து ஆராய்ந்து சொல்லுக. எ - று.

சொல்லின்குழுவெனவே, செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல்லென்னும் மூவகைச்சொல்லுமடங்கின*. தூய்மை அவற்றுள் தமக்காகாதனவொழித்து ஆவன கோடல். அவையென்றது ஈண்டதனளவை. அது மிகுதி, ஒப்பு, தாழ்வென மூவகைத்து. அறிதல் தம்மொடு தூக்கியறிதல். ஆராய்தல் இவ்வவைக்கட் சொல்லுங் காரியம் இது, சொல்லுமாறிது, சொன்னால் அதன்முடி விதுவென்று இவையுள் ளிட்டனவாராய்தல். (க)

எகஉ. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர். உ.

இ - ள். சொல்லின் நடைதெரிந்த நன்மையவர் - சொற்களினடையினை ஆராய்ந் தறிந்த நன்மையினையுடையார்—இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக - அவைக்கண் ஒன்றுசொல்லுங்கால் அதன்செவ்வியையாராய்ந்தறிந்து வழுப்படாமல் மிகவுந்தெளிந்துசொல்லுக. எ - று.

சொற்களினடையாவது அம்மூவகைச் சொல்லும் செம்பொருள், இலக்கணைப் பொருள், குறிப்புப்பொருளென்னும் பொருள்களைப் பயக்குமாறு†. செவ்வி கேட்டற் கண் விருப்புடைமை. வழு சொல்வழுவும் பொருள்வழுவும். இவையிரண்டுபாட்டா னும் ஒன்று சொல்லுங்கால் அவையறிந்தே சொல்லவேண்டுமென்பது கூறப்பட்டது.

எகங. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில். ங.

இ - ள். அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின் வகை அறி யார் - அவையின தளவையறியாது ஒன்று சொல்லுதலைத் தம்மேற்கொள்வார் அச் சொல்லுதலின் கூறுபாடும் அறியார்,—வல்லதூஉம் இல் - கற்றுவல்ல கலையும் அவர்க் கில்லை. எ - று.

அம்மூவகைச்சொற்களால் வருஞ் சொல்லுதல்வகைமை கேட்பாரதுணர்வுவகை மைபற்றி வருதலாற் சொல்லின்வகையறியா ரென்றும், இஃதறியார் யாதுமறியா ரென்று எல்லாரானுமிகழப்படுதலின் வல்லதூஉமில்லென்றுங்கூறினார். இதனால் அவையறியாக்கால் வருங்குற்றங் கூறப்பட்டது. (ங)

எகச. ஒளியார்முன் னொள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல். ச.

இ - ள். ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் - அறிவாலொள்ளியாரவைக்கட் டாமு மொள்ளியராக,—வெளியார்முன் வான்சுதை வண்ணம் கொளல் - ஏனை வெள்ளை களவைக்கட் டாமும் வாலிய சுதையினிறத்தைக் கொள்க. எ - று.

ஒள்ளியாரென்றது மிக்காரையும் ஒத்தாரையும். அது விகாரத்தால் ஒளியாரென நின்றது. ஒள்ளியராதல் தந்நூலறிவுஞ் சொல்வன்மையுந்தோன்ற விரித்தல். அவை

* செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல்லென்பனவற்றை முறையே வாசகம், லக்ஷகம், வியஞ்சகம் எனவும்; † அவை பொருளை உணர்த்தும் வகையினை முறையே அபிதை, இலக்கணை, வியஞ்சனவிருத்தியெனவும் கூறுவர் வடநூலார்.

யறியாத புல்லரை வெளியாரென்றது, வயிரமின்மரத்தை வெளிறென்னும் வழக்குப் பற்றி. அவர் மதிக்கும்வகை அவரினும் வெண்மையுடையராகவென்பார், வான்சுதை வண்ணங்கொளலென்ருர். அவையளவறிந்தார் செய்யுந்திறம் இதனுற் ருெகுத்துக் கூறப்பட்டது. முன்னர் விரித்துக்கூறுப. (ச)

எகரு. நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு. ரு.

இ - ள். நன்று என்றவற்றுள்ளும் நன்றே - ஒருவற்கு இது நன்றென்று சிறப்பித்துச்சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நன்றே—முதுவருள் முந்து கிளவாச் செறிவு - தம்மின் மிக்காரவைக்கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாதவடக்கம். எ - று.

தங்குறைவும் அவர்மிகுதியும் முந்துகிளந்தாற்படுமிழுக்கும் கிளவாக்காலெய்து நன்மையும் அறிந்தேயடங்கினமையின், அவ்வடக்கத்தினை நன்றென்றவற்றுள்ளுநன்றென்ருர். முன்கிளத்தலையே விலக்கினமையின், உடன்கிளத்தலும் பின்கிளத்தலுமாமென்பது பெற்ரும். இதனுன் மிக்காரவைக்கட்செய்யுந்திறங் கூறப்பட்டது. (ரு)

எகசூ. ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு. சூ.

இ - ள். ஆற்றின் நிலை தளர்ந்தற்று - வீடெய்தற்பொருட்டு நன்னெறிக்கணின்ருனொருவன் அந்நெறியினின்றும் நிலை தளர்ந்து வீழ்ந்தாலொக்கும்—வியன் புலம் ஏற்று உணர்வார்முன்னர் இழுக்கு - அகன்ற நூற்பொருள்களையுட்கொண்டு அவற்றின் மெய்ம்மையுணரவல்லாரவைக்கண் வல்லாளுெருவன் சொல்லிழுக்குப்படுதல். எ - று.

நிலைதளர்ந்து வீழ்தல் "உரனென்னுந் தோட்டியானுேரைந்துங்கா" த்தொழுகியான் பின்னிழுக்கிக் கூடாவொழுக்கத்தனுதல். பயனிழத்தலேயன்றி இகழவும்படுமென்பதாம். இதனுன் அதன்கணிழுக்கியவழிப் படுங்குற்றங் கூறப்பட்டது. (சூ)

எகஎ. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. எ.

இ - ள். கசடு அறச் சொற்றெரிதல் வல்லாரகத்து - வழுப்படாமற் சொற்களை யாராய்தல் வல்லாரவைக்கட்சொல்லின்,—கற்று அறிந்தார் கல்வி விளங்கும் - பல நூல்களையுங்கற்று அவற்றினுய பயனையறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும். எ - று.

சொல்லினென்பது அவாய்நிலையான் வந்தது. ஆண்டே சொல்லுகவென்பதாம்.

எகஅ. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று. அ.

இ - ள். உணர்வது உடையார்முன் சொல்லல் - பிறருணர்த்தலின்றிப் பொருள்களைத் தாமேயுணரவல்ல அறிவினையுடையாரவைக்கட் கற்ருர் ஒன்றனைச் சொல்லுதல்—வளர்வதன் பாத்தியுள் நீர்சொரிந்தற்று - தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக்கண் நீரினைச் சொரிந்தாற்போலும். எ - று.

தானேயும் வளர்தற்குரிய கல்வி மிக வளருமென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் ஒத்தாரவைக்கண் எவ்வழியுஞ்சொல்லுகவென்பது கூறப்பட்டது. (அ)

எகக. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார். கூ.

இ - ள். நல்லவையுள் நன்கு செலச் சொல்லுவார் - நல்லாரிருந்தவவைக்கண் நல்லபொருள்களை அவர்மனங்கொள்ளச் சொல்லுதற்குரியார்—புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க - அவையறியாத புல்லரிருந்த அவைக்கண் அவற்றை மறந்துஞ் சொல்லாதொழிக. எ - று.

சொல்லின், தம்மை அவையறியாமை நோக்கி நல்லவையும், பொருளறியாமையாற் புல்லவைதானும் இகழ்தலின், இரண்டவைக்குமாகாரென்பது கருதிப் பொச்சாந்துஞ் சொல்லற்கவென்றார். (கூ)

எஉ0. அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல். க0.

இ - ள். தம் கணத்தர் அல்லார்முன் கோட்டி கொளல் - நல்லார் தம்மினத்தரல்லாதாரவைக்கண் ஒன்றனையுஞ்சொல்லற்க;—அங்கணத்துள் உக்க அமிழ்தற்று - சொல்லின், அது தூய்தல்லாத முற்றத்தின்கணுக்க அமிழ்தினையொக்கும். எ - று.

கொள்ளென்னும் முதனிலைத்தொழிற்பெயர் முன்னின்று பின்னெதிர்மறையல் விகுதியோடு கூடி "மகனெனல்*" என்பது போனின்றது. சொல்லின் அது என்பன அவாய்நிலையான் வந்தன. பிறரெல்லாங் கொளலென்பதனைத் தொழிற்பெயராக்கியுரைத்தார்; அவர் அத்தொழில் அமிழ்தென்னும் பொருளுவமையோடு இயையாமை நோக்கிற்றிலர். சாவாமருந்தாதலறிந்து நுகர்வார் கையினும் படாது அவ்வங்கணத்துக்கு மியைபின்றிக்கெட்டவாறு தோன்ற, உக்கவமிழ்தென்றார். அச்சொற்பயனில் சொல்லாமென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டானும் தாழ்ந்தாரவைக்கண் ஒருவழியுஞ் சொல்லற்கவென்பது கூறப்பட்டது. (க0)

எசு ம் அதி.—அவையஞ்சாமை.

அஃதாவது சொல்லுதற்குரிய அவையினையறிந்து சொல்லுங்கால் அதற்கஞ்சாமை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

எஉக. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர். க.

இ - ள். வகை அறிந்து வல்லவை வாய்சோரார் - கற்றுவல்லவவை, அல்லாவவையென்னும் அவைவகையினையறிந்து வல்லவவைக்கண் ஒன்றுசொல்லுங்கால் அச்சத்தான் வழுப்படச்சொல்லார்—சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல்லின்றொகையெல்லாமறிந்த தூய்மையினையுடையார். எ - று.

இருந்தாரது வன்மை அவைமேலேற்றப்பட்டது. வல்லவை யென்பதற்குத் தாங்கற்றுவல்ல நூற்பொருள்களையென்றுரைப்பாருமுளர். அச்சத்தானென்பது அதிகாரத்தான் வந்தது. சொல்லின்றொகை, தூய்மை என்பன † வற்றிற்கு மேலுரைத்தாங்குரைக்க. (க)

---

* திருக்குறள், ககசு.

† திருக்குறள், எகக.

எ௨௨. கற்றருட் கற்ற ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார். ௨.

இ - ள். கற்றருள் கற்றர் எனப்படுவர் - கற்றரெல்லாரினும் இவர் நன்குகற்ற ரென்று உலகத்தாராற் சொல்லப்படுவார்—கற்றார்முன் கற்ற செலச் சொல்லுவார் - கற்றரவைக்கண் அஞ்சாதே தாங்கற்றவற்றை அவர்மனங்கொள்ளும்வகை சொல்ல வல்லார். எ - று.

உலகமறிவது அவரையேயாகலின், அதனாற் புகழப்படுவாரும் அவரென்பதாம்.

எ௨௩. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர். ௩.

இ - ள். பகையகத்துச் சாவார் எளியர் - பகையிடையஞ்சாது புக்குச் சாவவல்லார் உலகத்துப் பலர்;—அவையகத்து அஞ்சாதவர் அரியர் - அவையிடையஞ்சாது புக்குச் சொல்லவல்லார் சிலர். எ - று.

அஞ்சாமை சாவாரென்பதனேடுங்கூட்டி, அதனாற் சொல்லவல்லாரென்பது வருவித்துரைக்கப்பட்டது. இவை மூன்றுபாட்டானும் அவையஞ்சாரது சிறப்புக் கூறப்பட்டது. (௩)

எ௨௪. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல். ௪.

இ - ள். கற்றார்முன் கற்ற செலச் சொல்லி - பலநூல்களையுங் கற்றரவைக்கட் டாங்கற்றவற்றை அவர்மனம் கொள்ளுமாற்றற் சொல்லி—தாம் கற்ற மிக்க மிக்காருள் கொளல் - அவற்றின் மிக்கபொருள்களை அம்மிகக் கற்றரிடத்தறிந்து கொள்க. எ - று.

எல்லாம் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறுவேறய கல்வியுடையார் பலரிருந்த அவைக்கட் டாங்கற்றவற்றை அவர்க்கேற்பச் சொல்லுக; சொல்லவே, அவரும் அவையெல்லாஞ் சொல்லுவராகலான், ஏனைக்கற்கப்பெறுதன கேட்டறியலாமென்பதாயிற்று. இதனல் அதனதொருசார்பயன் கூறப்பட்டது. (௪)

எ௨௫. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. ௫.

இ - ள். ஆற்றின் அளவு அறிந்து கற்க - சொல்லிலக்கண நெறியானே அளவை நூலை அமைச்சர் உட்பட்டுக் கற்க,—அவை அஞ்சா மாற்றம் கொடுத்தற்பொருட்டு - வேற்றுவேந்தரவையிடையஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரஞ் சொல்லுதற் பொருட்டு. எ - று.

அளவைநூல் சொன்னூல் கற்றே கற்கவேண்டுதலின், அதற் கேதாறெனப்பட்டது. அளக்குங் கருவியை அளவென்றார், ஆகுபெயரான். அவர்சொல்லை வெல்வதொருசொற் சொல்லலாவது நியாயத்து வாத செற்ப விதண்டைகளும் சலசாதிகளும் முதலிய கற்றார்க்கேயாகலின், அவற்றைப் பிழையாமற் கற்கவென்பதாம். இதனல் அதன்காரணங் கூறப்பட்டது. (௫)

எ௨௬. வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடெ
னுண்ணவை யஞ்சு பவர்க்கு. ௬.

இ - ள். வன்கண்ணரல்லார்க்கு வாளொடு என் - வன்கண்மையுடையரல்லாதார்க்கு வாளோடென்ன வியைபுண்டு—நுண்ணவை அஞ்சுபவர்க்கு நூலொடு என் - அதுபோல நுண்ணியாரதவையை யஞ்சுவார்க்கு நூலோடென்ன வியைபுண்டு. எ-று.

இருந்தாரது நுண்மை அவைமேலேற்றப்பட்டது. நூற்குரியரல்லரென்பதாம்.

எஉஎ. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல். எ.

இ - ள். பகையகத்துப் பேடி கை ஒள்வாள் - எதியப்படும் பகைநடுவண் அதனை யஞ்சும் பேடி பிடித்த கூர்வாளை யொக்கும்—அவையகத்து அஞ்சுமவன் கற்ற நூல் - சொல்லப்படும் அவைநடுவண் அதனை யஞ்சுமவன் கற்றநூல். எ - று.

பேடி பெண்ணியல்புமிக்கு ஆணியல்புமுடையவள். களமும்வாய்த்துத் தானும் நன்றாயிருந்ததேயாயினும் பிடித்தவள் குற்றத்தால் வாள் சிறப்பின்றாயினாற்போல, அவையும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்ததேயாயினுங் கற்றவன் குற்றத்தால் நூல் சிறப்பின்றாயிற்று. (எ)

எஉஅ. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார். அ.

இ - ள். நல்லவையுள் நன்கு செலச் சொல்லாதார் - நல்லாரிருந்தவவைக்கண் நல்லசொற்பொருள்களைத் தம்மச்சத்தான் அவர்க்கேற்கச் சொல்லமாட்டாதார்—பல்லவை கற்றும் பயம் இலரே - பலநூல்களைக் கற்றாராயினும் உலகிற்குப் பயன்படுதலிலர். எ - று.

அறிவார்முற்சொல்லாமையிற் கல்வியினுண்மையறிவாரில்லை யென்பதாம். இனிப் பயமிலரென்பதற்குக் கல்விப்பயனுடையரல்லரென்றுரைப்பாருமுளர். (அ)

எஉ௯. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார். ௯.

இ - ள். கற்று அறிந்தும் நல்லார் அவை அஞ்சுவார் - நூல்களைக் கற்றுவைத்தும் அவற்றாற் பயனறிந்துவைத்தும் நல்லாரிருந்த அவையினையஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை—கல்லாதவரின் கடை என்ப - உலகத்தார் கல்லாதவரினுங் கடையரென்று சொல்லுவர். எ - று.

அக்கல்வியறிவுகளாற்பயன் றாமுமெய்தாது பிறரையெய்துவிப்பதுஞ்செய்யாது கல்வித்துன்பமே யெய்திநிற்றலின், கல்லாதவரிற் கடையென உலகம்பழிக்குமென்பதாம். (௯)

எ௩0. உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். ௧0.

இ - ள். களன் அஞ்சிக் கற்ற செலச் சொல்லாதார் - அவைக்களத்தையஞ்சித் தாங்கற்றவற்றை அதற்சேற்கச் சொல்லமாட்டாதார்,—உளர் எனினும் இல்லாரொடு ஒப்பர் - உயிர் வாழ்கின்றாராயினும், உலகத்தாராலெண்ணப்படாமையின் இறந்தாரோடொப்பர். எ - று.

ஈண்டுக் களனென்றது ஆண்டிருந்தாரை. இவையைந்துபாட்டானும் அவையஞ்சுவாரதிழிபு கூறப்பட்டது. (கo)

அங்கவியலில் அமைச்சியல் முற்றிற்று.

எசம் அதி.—நாடு.

இனி அவ்வரசனாலும் அமைச்சனாலுங் கொண்டுய்க்கப்படுவதாய் ஏனையரண் முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றாய நாடு ஓரதிகாரத்தாற் கூறுகின்றார்.

எகூக. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. க.

இ - ள். தள்ளா விளையுளும் - குன்றாத விளையுளைச் செய்வோரும்—தக்காரும் - அறவோரும்—தாழ்வு இலாச் செல்வரும் - கேடில்லாத செல்வமுடையோரும்—சேர்வது நாடு - ஒருங்கு வாழ்வதே நாடாவது. எ - று.

மற்றையுயர்திணைப் பொருள்களோடுஞ் சேர்தற்றொழிலோடும் இயையாமையின், விளையுளென்பது உழவர்மேனின்றது. குன்றாமை எல்லாவுணவுகளும் நிறையவுளவாதல். இதனான் வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது. அறவோர் துறந்தோர், அந்தணர் முதலாயினார். "நற்றவஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய்வார்க்கு மஃதிடம்*" என்றார் பிறரும். இதனால் அழிவின்மை பெறப்பட்டது. கேடில்லாமை வழங்கத்தொலையாமை. செல்வர் கலத்தினுங் காலினும் அரும்பொருடரும் வணிகர். இதனால் அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள் வாய்த்தல் பெறப்பட்டது. (க)

எகூஉ. பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு. உ.

இ - ள். பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி - அளவிறந்த பொருளுடைமையாற் பிறதேயத்தாரானும் விரும்பத்தக்கதாய்—அருங்கேட்டால் ஆற்றவிளைவது நாடு - கேடின்மையோடு கூடி மிக விளைவதே நாடாவது. எ - று.

அளவிறப்புப் பொருள்களது பன்மைமேலும் தனித்தனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது. கேடாவது மிக்கபெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மையென்றிவற்றான் வருவது. "மிக்கபெய லோடுபெய லின்மையெலி விட்டில்கிளி - யக்கணர சண்மையோ டாறு." இவற்றை வடநூலார் ஈதிகளென்ப. இவற்றுண் முன்னையவற்றதின்மை அரசனறத்தானும், பின்னையதின்மை அவன்மறத்தானும், வரும். இவ்வின்மைகளான் மிக விளைவதாயிற்று. (உ)

எகூங. பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு. ங.

இ - ள். பொறை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி - பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே தன்கண்வருங்கால் அவற்றைத் தாங்கி—இறைவற்கு இறை

---

* நற்ற வஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய் வார்க்கு மஃதிட—நற்பொ ருள்செய் வார்க்கிடம் பொருள்செய் வார்க்கு மஃதிடம்—வெற்ற வின்பம் விளைவிப்பான் விண்ணு வந்து வீழ்ந்தென—மற்றை நாடு வட்ட மாக வைகு மற்றந் நாடரோ—சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், சஅ.

ஒருங்கு நேர்வது நாடு - அதன்மேற்றன்னரசனுக்கு இறைப்பொருண் முழுதையும் உடம்பட்டுக்கொடுப்பதே நாடாவது. எ - று.

பாரங்கள் மக்கட்டொகுதியும் ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும். தாங்குதல் அவை தத்தந்தேயத்துப் பகை வந்திறுத்ததாக, அரசு கோல்கோடியதாக, உணவின்மையானுகத் தன்கண் வந்தால் அவ்வத்தேயங்களைப்போல. இனிதிருப்பச் செய்தல். அச்செயலால் இறையைக் குறைபடுத்தாது தானே கொடுப்பதென்பார் இறையொருங்கு நேர்வதென்முர். (௩)

எஙச. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு. ௪.

இ - ள். உறு பசியும் - மிக்க பசியும்—ஓவாப் பிணியும் - நீங்காத நோயும்—செறுபகையும் சேராது - புறத்து நின்றுவந் தழிவுசெய்யும் பகையுமின்றி—இயல்வது நாடு - இனிது நடப்பதே நாடாவது. எ - று.

உறுபசி உழவருடைமையானும் ஆற்றவிளைதலானும் சேராதாயிற்று. ஓவாப்பிணி தீக் காற்று மிக்ககுளிர் வெப்பங்களும் நுகரப்படுமவற்றது தீமையுமின்மையிற் சேராதாயிற்று. செறுபகை அரசனுற்றலும் நிலைப்படையும் அடவியும் அரணுமுடைமையிற் சேராதாயிற்று. (௪)

எஙரு. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு. ரு.

இ - ள். பல் குழுவும் - சங்கேதவயத்தான் மாறுபட்டுக் கூடும் பலகூட்டமும்—பாழ் செய்யும் உட்பகையும் - உடனுறையாநின்றே பாழாகச் செய்யுமுட்பகையும்—வேந்து அலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு - அளவுவந்தால் வேந்தனையலைக்குங் கொல்வினைக்குறும்பரு மில்லாததே நாடாவது. எ - று.

சங்கேதம் சாதிபற்றியும் கடவுள் பற்றியும் பலர்க்குளதாமொருமை. உட்பகை ஆறலைப்பார், கள்வர், குறளைகூறுவார் முதலியமக்களும், பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும். உட்பகை குறும்பென்பன ஆகுபெயர். இம்மூன்றும் அரசனுலும் வாழ்வாராலுங் கடியப்பட்டு நடப்பதே நாடென்பதாம். (ரு)

எஙசு. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை. சு.

இ - ள். கேடு அறியா - பகைவராற் கெடுதலறியாததாய்—கெட்டவிடத்தும் வளம் குன்றாநாடு - அரிதிற்கெட்டதாயினும் அப்பொழுதுந் தன்வளங்குன்றாத நாட்டினை—நாட்டின் தலை என்ப - எல்லாநாட்டினுந் தலையென்றுசொல்லுவர் நூலோர். எ - று.

அறியாத குன்முதவென்னும் பெயரெச்சங்களினிறுதிநிலைகள் விகாரத்தாற்றொக்கன. கேடறியாமை அரசனுற்றலானுங் கடவுட்பூசையறங்களென்றிவற்றது செயலானும் வரும். வளம் ஆகரங்களிற்படுவனவும் வயலினுந் தண்டலையினும் விளைவனவுமாம். குன்முமை அவை செய்யவேண்டாமல் இயல்பாகவேயுளவாயும் முன்னீட்டப் பட்டுங்குறைவறுதல். இவையாறுபாட்டானும் நாட்டிலக்கணங் கூறப்பட்டது. (சு)

எஙஎ. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு. எ.

இ - ள். இருபுனலும் - கீழ்நீர் மேனீரெனப்பட்ட தன்கணீரும்—வாய்ந்தமலையும் - வாய்ப்புடைத்தாய மலையும்—வருபுனலும் - அதனினின்றும் வருவதாய நீரும்—வல்லரணும் - அழியாத நகரியும்—நாட்டிற்கு உறுப்பு - நாட்டிற்கவயவமாம். எ - று.

ஈண்டுப் புனலென்றது தரவு கேணிகளும் ஏரிகளும் ஆறுகளுமாகிய ஆதாரங்களை, அவயவமாதற்குரியன அவையேயாகலின். அவற்றான் வானம் வறப்பினும் வளனுடைமை பெறப்பட்டது. இடையதன்றியொருபுடையதாகலும் தன்வளந் தருதலும் மாரிக்கணுண்டநீர் கோடைக்கணுமிழ்தலுமுடைமைபற்றி வாய்ந்த மலையென்றார். அரண் ஆகுபெயர். இதனான் அதனவயவங் கூறப்பட்டது. (எ)

எருஅ. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. அ.

இ - ள். பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ்வைந்து - நோயின்மையுஞ் செல்வம் விளைதல் இன்பம் காவலென்றிவை யுடைமையுமாகிய இவ்வைந்தினையும்—நாட்டிற்கு அணி என்ப - நாட்டிற்கழகென்று சொல்லுவர் நூலோர். எ - று.

பிணியின்மை நிலநலத்தான் வருவது. செல்வம் மேற்சொல்லியன. இன்பம் விழவும் வேள்வியுஞ் சான்றோருமுடைமையானும், நுகர்வனவுடைமையானும், நிலநீர்களது நன்மையானும், வாழ்வார்க்கு உண்ணிகழ்வது. காவலெனவே அரசன்காவலும் வாழ்வோர் காவலும் அரண்காவலு மடங்கின. பிறதேயங்களினுள்ளாரும் விழைந்து பின் அவையுள்ளாமைக்கேதுவாய அதனழகு இதனாற் கூறப்பட்டது. (அ)

எருகூ. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. கூ.

இ - ள். நாடா வளத்தன நாடு என்ப - தங்கண்வாழ்வார்தேடி வருந்தாமல் அவர்பாற்றானே யடையுஞ் செல்வத்தையுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர்;—நாட வளம் தரும் நாடு நாடு அல்ல - ஆதலாற் றேடிவருந்தச் செல்வமடைவிக்கும் நாடுகள் நாடாகா. எ - று.

நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மேனின்றது. "பொருள் செய்வார்க்குமஃதிடம்*" என்றார் பிறரும். நூலோர் விதிபற்றி எதிர்மறைமுகத்தாற் குற்றங்கூறிய வாறு. இவ்வாறன்றி என்பவென்பதனைப் பின்னுங்கூட்டி இருபொருள்பட வுரைப்பின், அனுவாதமாம். (கூ)

எசுO. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. கO.

இ - ள். வேந்து அமைவு இல்லாத நாடு - வேந்தனோடு மேவுதலில்லாத நாடு—ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம் இன்றே - மேற்சொல்லிய குணங்களெல்லாவற்றானும் நிறைந்திருந்ததாயினும் அவற்றாற் பயனுடைத்தன்று. எ - று.

வேந்தமைவெனவே, குடிகள் அவன்மாட்டன்புடையராதலும் அவன்றான் இவர்மாட்டருளுடையனாதலும் அடங்கின. அவையில்வழி வாழ்வோரின்மையின், அவற்றாற் பயனின்றாயிற்று. இவையிரண்டுபாட்டானும் அதன்குற்றங் கூறப்பட்டது. (கO)

---

* மேலே உகO-ம் பக்கத்திற் காட்டிய நற்றவஞ்செய்வார்க்கிடம் என்னுஞ் செய்யுளின் உள்ளது.

எரு ம் அதி.—அரண்.

இனி அந்நாட்டிற்குறுப்பாயடங்குமாயினும் பகைவராற்றொலைவு வந்துழி அது தனக்கும் அரசன்றனக்கும் ஏமமாதற்சிறப்புப்பற்றிப் பிறிதோரங்கமாக வோதப் பட்ட அரண் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.

எசக. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். க.

இ - ள். ஆற்றுபவர்க்கும் அரண் பொருள் - மூவகையாற்றலுமுடையராய்ப் பிறர்மேற் செல்வார்க்கும் அரண் சிறந்தது;—அஞ்சித் தற்போற்றுபவர்க்கும் (அரண்) பொருள் - அவையின்றித் தம்மேல் வருவார்க்கஞ்சித் தன்னையேயடைவார்க்கும் அரண்சிறந்தது. எ - று.

பிறர்மேற்செல்லுங்கால் உரிமை பொருண் முதலியவற்றைப் பிறனொருவன் வௌவாமல் வைத்துச் செல்லவேண்டுமாகலானும், அப்பெருமை தொலைந்திறுதி வந்துழிக் கடனடுவனுடைக்கலத்தார்போன்று ஏமங்காணாதிருவராகலானும், ஆற்றுபவர்க்கும் போற்றுபவர்க்கும் அரண் பொருளாயிற்று. ஆற்றலுடையராயினும் அரணில்வழி அழியும் பாலராகலின், அவரை முற்கூறினார். இதனால் அரணினது சிறப்புக் கூறப்பட்டது.

எசஉ. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண். உ.

இ - ள். மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழற்காடும் உடையது அரண் - மணிபோலு நிறத்தினையுடைய நீரும் வெள்ளிடை நிலமும் மலையுங் குளிர்ந்த நிழலையுடைய காடுமுடையதே அரணாவது. எ - று.

எஞ்ஞான்றும் வற்றாத நீரென்பார் மணிநீரென்றும், நீருநிழலுமில்லா மருநிலமென்பார் மண்ணென்றும், செறிந்த காடென்பார் அணிநிழற்காடென்றுங் கூறினார். மதிற்புறத்து மருநிலம்பகைவர் அரண்பற்றாமைப்பொருட்டு. நீரரண், நிலவரண், மலையரண், காட்டரணென இயற்கையுஞ் செயற்கையுமாய இந்நான்கரணுஞ் சூழப்படுவது அரணென்பதாம். (உ)

எசங. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல். ங.

இ - ள். உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின் அமைவு - உயர்ச்சியும் அகலமுந் திண்மையும் அருமையுமென்று சொல்லப்பட்ட இந்நான்கின் மிகுதியையுடைய மதிலை—அரண் என்று உரைக்கும் நூல் - அரணென்று சொல்லுவர் நூலோர். எ - று.

அமைவு நூலென்பன ஆகுபெயர். உயர்வு ஏணியெய்தாதது. அகலம் புறத்தோர்க்கு அகழலாகா அடியகலமும், அகத்தோர்க்குநின்று வினைசெய்யலாந் தலையகலமும். திண்மை கல்லிட்டிகைகளாற் செய்தலிற் குத்தப்படாமை. அருமை பொறிகளான் அணுகற்கருமை. பொறிகளாவன "வளைவிற் பொறியு மயிற்செறி நிலையுங்—கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்—பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியுங்—காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுந்—தூண்டிலுந் தொடக்கு மாண்டலை யடுப்புங்—கவையுங் கழுவும் புதையும் புழையு—மையவித் துலாமுங் கைபெய ரூசியுஞ் - சென்றெறி சிரலும் பன்றியும் பணையு—மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங்—கோலுங் குந்தமும் வேலுஞ் சூலமும்*" என்றிவை முதலாயின. (ங)

* சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, உ0எ-உகசு.

எசச. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண். ச.

இ - ள். சிறுகாப்பிற் பேர் இடத்தது ஆகி - காக்கவேண்டுமிடஞ்சிறிதாய் அகன்றவிடத்தை யுடைத்தாய்—உறு பகை ஊக்கம் அழிப்பது அரண் - தன்னைவந்து முற்றிய பகைவரது மனவெழுச்சியைக் கெடுப்பதே அரணாவது. எ - று.

வாயிலும் வழியுமொழிந்த விடங்கள் மலை, காடு, நீர்நிலையென்றிவற்றுள் ஏற்பன வுடைத்தாதல்பற்றிச் சிறுகாப்பினென்றும், அகத்தோர் நலிவின்றியிருத்தல்பற்றிப் பேரிடத்ததாகியென்றும், தம்வலி நோக்கி இதுபொழுதே யழித்துமென்று வரும் பகைவர் வந்து கண்டால் அவ்வூக்கமொழிதல்பற்றி ஊக்க மழிப்ப தென்றுங் கூறினார். (ச)

எசரு. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண். ரு.

இ - ள். கொளற்கு அரிதாய் - புறத்தாராற் கோடற்கரிதாய்—கொண்டகூழ்த்தாகி - உட்கொண்ட பலவகையுணவிற்றாய்—அகத்தார் நிலைக்கு எளிதாம் நீரது அரண் - அகத்தாரது போர்நிலைக் கெளிதாய நீர்மையையுடையதே அரணாவது. எ-று.

கோடற்கருமை இளை கிடங்குகளானும் பொறிகளானும் இடங்கொள்ளுதற் கருமை. உணவு தலைமைபற்றிக் கூறினமையின், மற்றுள்ள நுகரப்படுவனவுமடங்கின. நிலைக்கெளிதா நீர்மையாவது அகத்தார் விட்டவாயுதமுதலிய புறத்தார்மேலெளிதிற்சேறலும், அவர்விட்டன அகத்தார்மேற் செல்லாமையும், பதணப்பரப்பும் முதலாயின. (ரு)

எசசா. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண். சா.

இ - ள். எல்லாப்பொருளும் உடைத்தாய் - அகத்தோர்க்கு வேண்டும் பொருள்களெல்லாவற்றையும் உள்ளே யுடைத்தாய்—இடத்து உதவும் நல்லாள் உடையது அரண் - புறத்தோரால் அழிவெய்து மெல்லைக்கண் அஃதெய்தாவகையுதவிக் காக்கும் நல்ல வீரரையுமுடையதே அரணாவது. எ - று.

அரசன்மாட்டன்பும் மானமும் மறமும் சோர்வின்மையும் முதலிய நற்குணங்களுடைமைபற்றி நல்லாளென்றார். (சா)

எசஎ. முற்றியு முற்று தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். எ.

இ - ள். முற்றியும் - புகலொடு போக்கொழியும்வகை நெருங்கிச் சூழ்ந்தும்—முற்றாது எறிந்தும் - அங்ஙனஞ்சூழாது நெகிழ்ந்த விடநோக்கி ஒருமுகமாகப் பொருதும்—அறைப்படுத்தும் - அகத்தோரை அவர் தெளிந்தோரைவிட்டுக் கீழறுத்துத் திறப்பித்தும்—பற்றற்கு அரியது அரண் - புறத்தோராற் கொள்ளுதற்கரியதே அரணாவது. எ - று.

இம்மூன்றுபாயத்துள்ளும் முதலாவது எல்லாப்பொருளுமுடைமையானும், ஏனைய நல்லாளுடைமையானும், வாயாவாயின. (எ)

எசஅ. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண். அ.

இ - ள். முற்று ஆற்றி முற்றியவரையும் - தானைப்பெருமையாற் சூழ்தல்வல்லராய் வந்து சூழ்ந்த புறத்தோரையும்—பற்றியார் பற்று ஆற்றி வெல்வது அரண் - தன்னைப்பற்றியவகத்தோர்தாம் பற்றியவிடம் விடாதே நின்று பொருது வெல்வதே அரணாவது. எ - று.

உம்மை சிறப்பும்மை. பற்றின்கண்ணேயாற்றியெனவிரியும். பற்று ஆகுபெயர். வெல்வதென உடையார்தொழில் அரண்மேனின்றது. பெரும்படையானைச் சிறுபடையான் பொறுத்து நிற்குந் துணையேயன்றி வெல்லுமியல்பினதென்பதாம். இதற்குப் பிறிதுரைப்பாருமுளர். இவையேழுபாட்டானும் அதனதிலக்கணங் கூறப்பட்டது. ()

எசகூ. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். கூ.

இ - ள். முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறு எய்தி - போர்தொடங்கினவளவிலே பகைவர் கெடும்வண்ணம் அகத்தோர் செய்யும் வினைவேறுபாடுகளான் வீறுபெற்று—மாண்டது அரண் - மற்றும் வேண்டுமாட்சியையுடையதே அரணாவது. எ - று.

தொடக்கத்திற் கெட்டார் பின்னுங் கூடிப் பொருதல் கூடாமையின், முனைமுகத்துச்சாயவென்றார். வினைவேறுபாடுகளாவன பகைவர் தொடங்கிய போரினையறிந்து எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதலென்றிவை முதலாய வினைகளுள் அதனைச் சாய்ப்பனசெய்தல். மற்றும் வேண்டுமாட்சியென்றது புறத்தோரறியாமற் புகுதல் போதல் செய்தற்குக் கண்ட சுருங்கைவழி முதலாயின வுடைமை. (கூ)

எருய. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண். கய.

இ - ள். அரண் - அரண்,—எனைமாட்சித்து ஆகியக்கண்ணும் - மேற்சொல்லப்பட்ட மாட்சியெல்லாமுடைத்தாய விடத்தும்,—வினைமாட்சி இல்லார்கண் இல்லது - வினைசெய்தற்கண் மாட்சியில்லாதார்மாட்டு அவையிலதாம். எ - று.

வாளாவிருத்தலும் அளவறியாது செய்தலும் ஏலாதது செய்தலுமெல்லாம் அடங்க வினைமாட்சியில்லாரென்றும், ஏற்றவினையை யளவறிந்துசெய்து காவாக்கால் அம்மாட்சிகளாற் பயனின்றி யழியுமென்பார் அவையுடைத்தன்றென்றுங் கூறினார். இவை யிரண்டு பாட்டானுங் காப்பாரையின்றியமையாதென்பது கூறப்பட்டது. (கய)

எகூம் அதி.—பொருள்செயல்வகை.

இனிப் பெரும்பான்மையும் நாட்டானும் அரணானும் ஆக்கவுங் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின் றிறம் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.

எருக. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். க.

இ - ள். பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது - ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் படுவாராகச் செய்யவல்ல பொருளையொழிய— பொருள் இல்லை - ஒருவனுக்குப் பொருளாவதில்லை. எ - று.

மதிக்கப்படாதார் அறிவிலாதார், இழிகுலத்தார். இழிவுசிறப்பும்மை விகாரத் தாற்றொக்கது. மதிக்கப்படுவாராகச் செய்தல் அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற்சென்று நிற்கப் பண்ணுதல். அதனால் ஈட்டப்படுவது அதுவே பிறிதில்லை யென்பதாம். (க)

எருஉ. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.* உ.

இ - ள். இல்லாரை எல்லாரும் எள்ளுவர் - எல்லாநன்மையு முடையராயினும் பொருளில்லாரை யாவருமிகழ்வர்;—செல்வரை எல்லாரும் சிறப்புச் செய்வர் - எல் லாத்தீமையுமுடையராயினும் அஃதுடையாரை யாவருமுயரச்செய்வர். எ - று.

உயரச்செய்தல் தாந்தாழ்ந்து நிற்றல். இகழ்தற்கண்ணுந் தாழ்தற்கண்ணும் பகை வர், நட்டார், நொதுமலரென்னும் மூவகையாருமொத்தலின், யாவருமென்றார். பின் னுங் கூறியது அதனை வலியுறுத்தற்பொருட்டு. (உ)

எருந. பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று. ந.

இ - ள். பொருள் என்னும் பொய்யா விளக்கம் - பொருளென்று எல்லாராலுஞ் சிறப்பிக்கப்படும் நந்தாவிளக்கு—எண்ணியதேயத்துச் சென்று இருள் அறுக்கும் - தன்னைச் செய்தவர்க்கு அவர் நினைத்த தேயத்துச் சென்று பகையென்னுமிருளைக் கெடுக்கும். எ - று.

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய் வருதல் பற்றிப் பொய்யா விளக்கமென்றும், ஏனை விளக்கோடு இதனிடை வேற்றுமைதோன்ற எண்ணியதேயத் துச்சென்றென்றுங் கூறினார். ஏகதேசவுருவகம். இவைமூன்றுபாட்டானும் பொருளது சிறப்புக் கூறப்பட்டது. (ந)

எருச. அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். ச.

இ - ள். திறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள் - செய்யுந்திறத்தினையறிந்து அரசன் கொடுங்கோன்மையிலனாக உளதாயபொருள்—அறன் ஈனும் இன்பமும் ஈனும் - அவனுக்கு அறத்தையுங்கொடுக்கும், இன்பத்தையுங்கொடுக்கும். எ - று.

செய்யுந்திறம் தான் பொருள்செய்தற்குரிய நெறி. இலனாகவென்பது இன்றி யெனத் திரிந்துநின்றது. செங்கோலனென்று புகழப்படுதலானும் கடவுட்பூசை தானங்களாற் பயனெய்தலானும் அறனீனுமென்றும், நெடுங்காலநின்று துய்க்கப்படு தலான் இன்பமுமீனுமென்றுங் கூறினார். அதனன் அத்திறத்தானீட்டுக வென்பதாம்.

எருரு. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். ரு.

---

* இத்திருக்குறள் சேரமான்பெருமாணயனர் திருக்கைலாய ஞானவுலாவில் எடுத்தாளப் பட்டது.

இ - ள். அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம் - தாங்குடிகண் மாட்டுச் செய்யுமருளோடும் அவர் தம்மாட்டுச் செய்யுமன்போடுங்கூடி வாராதபொருளீட்டத்தை—புல்லார் புரளவிடல் - அரசர் பொருந்தாது கழியவிடுக. எ - று.

அவற்றோடு கூடிவருதலாவது ஆறிலொன்றாய் வருதல். அவ்வாறு வாராதபொருளீட்டம் பசுமட்கலத்துணீர்போலச் செய்தானையுங்கொண்டிறத்தலின், அதனைப் புல்லாரென்றொழியாது புரளவிடலென்றுங் கூறினார். (ரு)

எருசு. உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். சு.

இ - ள். உறு பொருளும் - உடையாரின்மையிற் றானேவந்துற்ற பொருளும்—உல்கு பொருளும் - சுங்கமாகிய பொருளும்—தன் ஒன்னார்த் தெறுபொருளும் - தன் பகைவரைத் திறையாகக்கொள்ளும் பொருளும்—வேந்தன் பொருள் - அரசனுக்குரிய பொருள்கள். எ - று.

உறுபொருள் வைத்தாரிறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கட் கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறுததூஉமாம். சுங்கம் கலத்தினுங் காலினும் வரும் பண்டங்கட்கிறையாயது. தெறுபொருள் தெறுதலான் வரும் பொருளெனவிரியும். ஆறிலொன்றொழியவும் உரியன கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் அஃதீட்டு நெறி கூறப்பட்டது. (சு)

எருஎ. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு. எ.

இ - ள். அன்பு ஈன் அருள் என்னும் குழவி - அன்பினாலீனப்பட்ட அருளென்னுங்குழவி—பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு - பொருளென்று உயர்த்துச்சொல்லப்படுஞ் செல்வத்தையுடைய செவிலியான் வளரும். எ - று.

தொடர்புபற்றாதே வருத்தமுற்றார்மேற் செல்வதாய அருள் தொடர்புபற்றிச் செல்லுமன்பு முதிர்ந்துழி உளதாவதாகலின் அதனை அன்பீன்குழவியென்றும், அது வறியார்மேற்செல்வது அவ்வறுமை களையவல்லார்க்காதலிற் பொருளை அதற்குச் செவிலியென்றும், அஃது உலகிற்செவிலியர்போலாது தானேயெல்லாப்பொருளு முதவி வளர்த்தலிற் செல்வச்செவிலியென்றுங் கூறினார். (எ)

எருஅ. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. அ.

இ - ள். தன் கைத்து உண்டாக ஒன்று செய்வான் வினை - தன் கையதாகிய பொருளுண்டாக ஒருவினையையெடுத்துக்கொண்டான் அதனைச் செய்தல்—குன்று ஏறி யானைப்போர் கண்டற்று - ஒருவன் மலைமே லேறிநின்று யானைப்போரைக் கண்டாலொக்கும். எ - று.

ஒன்றென்பது வினையாதல் செய்வானென்றதனாற் பெற்றாம். குன்றேறியான் அச்சமும் வருத்தமுமின்றி நிலத்திடை யானையும் யானையும் பொருபோரைத் தானினிதிருந்து காணுமதுபோலக், கைத்துண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமுமின்றி வல்லாரையேவித் தானினிதிருந்து முடிக்குமென்பதாம். (அ)

எடுகூ. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில். கூ.

இ - ள். பொருளைச் செய்க - தமக்கொன்றுண்டாகக் கருதுவார் பொருளையுண்டாக்குக;—செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு - தம்பகைவர் தருக்கினையறுக்கும் படைக்கலம் அதுவாம்;—அதனிற் கூரியது இல் - அதற்கதுபோலக் கூரிய படைக்கலம் பிறிதில்லை. எ - று.

அதுவாம், அதற்கென்பன அவாய்நிலையான் வந்தன. பொருளைச் செய்யவே பெரும்படையும் நட்புமுடையராவர், ஆகவே, பகைவர் தருக்கொழிந்து தாமேயடங்குவரென்பார் செறுநர்செருக்கறுக்குமெஃகென்றும், ஏனையெஃகுகள் அதுபோல அருவப்பொருளையறுக்கமாட்டாமையின் அதனிற்கூரிய தில்லென்றுங்கூறினர். (கூ)

எசுO. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு. கO.

இ - ள். ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு - நெறியான்வரும் பொருளை இறப்ப மிகப் படைத்தார்க்கு—ஏனை இரண்டும் ஒருங்கு எண்பொருள் - மற்றையறனுமின்பமும் ஒருங்கேயெளிய பொருள்களாம். எ - று.

காழ்த்தல் முதிர்தல். பயன்கொடுத்தல்லது போகாமையின் ஒண்பொருளென்றும், ஏனையிரண்டும் அதன் விளைவாகலிற் றாமே யொருகாலத்திலேயுளவாமென்பார் எண்பொருளென்றுங்கூறினர். இவை நான்குபாட்டானும் அதனான் வரும்பயன் கூறப்பட்டது. (கO)

எளம் அதி.—படைமாட்சி.

இனி அப்பொருளினனுவதாய் வெல்வதாய படை இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் படைமாட்சி கூறுகின்றார். அஃதாவது படையினது நன்மை.

எசுக. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை. க.

இ - ள். உறுப்பு அமைந்து ஊறு அஞ்சா வெல்படை - யானை முதலிய நான்குறுப்பானும் நிறைந்து போரின்கணூறுபடுதற்கஞ்சாது நின்று பகையை வெல்வதாய படை—வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை - அரசன் செல்வங்களெல்லாவற்றுள்ளுந் தலையாய செல்வம். எ - று.

ஈண்டுப் படையென்றது அந்நான்கன்றொகுதியை. ஊறஞ்சியவழி வேறல்கூடாமையின் ஊறஞ்சாவென்றும், ஒழிந்தவங்கங்கட்கும் அரசன்றனக்குங் காவலாகலின் வெறுக்கையுளெல்லாந் தலையென்றுங் கூறினர். (க)

எசுஉ. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது. உ.

இ - ள். தொலைவிடத்து உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண் - தான் சிறிதாய வழியும் அரசற்குப் போரின்கணுலைவுவந்தால் தன்மேலுறுவதற்கஞ்சாது நின்று தாங்

கும் வன்கண்மை—தொல்படைக்கல்லால் அரிது - அவன் முன்னோரைத் தொடங்கி வரும் படைக்கல்லது உளதாகாது. எ - று.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. மூலப்படை, கூலிப்படை, நாட்டுப் படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படையென்னும் அறுவகைப்படையுள்ளுஞ் சிறப்புடையது மூலப்படையாகலான், அதனை அரசன் "வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுங்—கொல்களிறுமாவுங் கொடுத்தளிக்க*" என்பது குறிப்பெச்சம். இப்படையை வடநூலார் மௌலமென்ப. (உ)

எசுங. ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். ங.

இ - ள். எலிப்பகை உவரி ஒலித்தக்கால் என்னும் - எலியாயபகை திரண்டு கடல் போலவொலித்தால் நாகத்திற்கு என்னவேதம் வரும்!—நாகம் உயிர்ப்பக் கெடும் - அந்நாகமுயிர்த்ததுணையானே அதுதானே கெடும். எ - று.

உவமைச்சொற் றொக்குநின்றது. இத்தொழிலுவமத்தாற் றிரட்சிபெற்றும். வீரரல்லாதார் பலர் திரண்டார்த்தால் அதற்கு வீரனஞ்சான் அவன் கிளர்ந்ததுணையானே அவர் தாங்கெடுவரென்பது தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னு மலங்காரம். வீரரல்லாதார்பலரினும் வீரனொருவனையாடல் நன்றென்பதாம். இவை மூன்றுபாட்டானும் முறையே அரசனுக்குப் படை ஏனையங்கங்களுட் சிறந்ததென்பதூஉம், அதுதன்னுள்ளும் மூலப்படை சிறந்ததென்பதூஉம், அதுதன்னுள்ளும் வீரன் சிறந்தானென்பதூஉங் கூறப்பட்டன. (ங)

எசுச. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. ச.

இ - ள். அழிவு இன்று - போரின்கட்கெடுதலின்றி—அறைபோகாதாகி - பகைவராற் கீழறுக்கப்படாததாய்—வழிவந்த வன்கணதுவே படை - தொன்றுதொட்டு வந்த தறுகண்மையையுடையதே அரசனுக்குப் படையாவது. எ - று.

அழிவின்மையான் மறமானங்களுடைமையும், அறைபோகாமையான் அரசன் மாட்டன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன்கண்மை "கன்னின்ற னெந்தை கணவன் களப்பட்டான்—முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர் - பின்னின்று—கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி—யெய்போற் கிடந்தானென் னேறு†." என்பதனானறிக. குற்றியலுகரத்தின் முன்னர் உடம்படுமெய் விகாரத்தான் வந்தது. இது வருகின்றபாட்டுள்ளுமொக்கும். (ச)

எசுரு. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை. ரு.

இ - ள். கூற்று உடன்று மேல்வரினும் - கூற்றுவன்றானே வெகுண்டு மேல் வந்தாலும்—கூடி எதிர்நிற்கும் ஆற்றலதுவே படை - நெஞ்சொத்து எதிர்நின்று தாங்குமாற்றலையுடையதே படையாவது. எ - று.

---

* வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுங்—கொல்களிறு மாவுங் கொடுத்தளித்தான் - பல்புரவி—நன்மணித் திண்டேர் நயவார் தலைபனிப்பப்—பன்மணிப் பூணான் படைக்கு—வெண்பாமாலை, தும்பைப்படலம், உ.

† வெண்பாமாலை, வாகைப்படலம், உஉ.

மருந்தில் கூற்றுகலின்*, உம்மை சிறப்பும்மை. மிகப்பலர் நெஞ்சொத்தற்குக் காரணம் அரசன்மேலன்பு. ஆற்றல் மனவலி. (௫)

எசுசு. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு. சு.

இ - ள். மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம் எனநான்கே - தறுகண்மையும் மானமும் முன் வீரராயினர் சென்ற நன்னெறிக்கட்சேறலும் அரசனாற்றேறப் படுதலுமென இந்நான்கு குணமுமே—படைக்கு ஏமம் - படைக்கு அரணாவது. எ-று.

இவற்றுள் முறையே பகைவரைக் கடிதிற்கொன்றுநிற்றலும், அரசனுக்குத் தாழ்வுவாராமற்காத்தலும், "அழியுநர்புறக்கொடையயில்வாளோச்சா†" மை முதலியவும், அறைபோகாமையுமாகிய செய்கைகள் பெறப்பட்டன. இச்செய்கையார்க்குப் பகைவர் நணுகாராகலின், வேறரண் வேண்டாவென்பதாம். (சு)

எசுஎ. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து. எ.

இ - ள். தலைவந்த போர் தாங்கும் தன்மை அறிந்து - மாற்றரால் வகுக்கப்பட்டுத் தன்மேல்வந்த படையின்போரை விலக்கும் வகுப்பறிந்து வகுத்துக்கொண்டு—தார் தாங்கிச் செல்வது தானை - அவர் தூசியைத் தன்மேல் வாராமற்றடுத்துத் தான் அதன்மேற் செல்வதே படையாவது. எ - று.

படைவகுப்பாவது வியூகம்; அஃது எழுவகையுறுப்பிற்றாய், வகையானான்காய், விரியான்முப்பதாம்.‡ உறுப்பேழாவன உரமுதற்கோடியீறாயின. வகைநான்காவன தண்டம், மண்டலம், அசங்கதம், போகமெனவிவை§. விரி முப்பதாவன தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண்டும், அசங்கதவிரியாறும், போகவிரியைந்துமென விவை○. இவற்றின்பெயர்களும் இலக்கணமும் ஈண்டுரைப்பிற்பெருகும்; அவையெல்லாம் வடநூல்களுட்கண்டுகொள்க. இவைநான்குபாட்டானும் படையினதிலக்கணங் கூறப்பட்டது. (எ)

எசுஅ. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும். அ.

---

* மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயா—புறநானூறு, ௩.

† வெண்பாமாலை, வஞ்சிப்படலம், ௨௦.

‡ உறுப்பேழாவன:—உரம், இறக்கையிரண்டு, மத்தியம், பிரதிக்கிரகம், பிரிஷ்டம், கோடி எனவிவை.

§ தண்டம்:—சேனையைக்குறுக்காக நிறுத்துவது. மண்டலம்:—பாம்பு மண்டல மிடுவதுபோலச் சேனையை நிறுத்துவது. அசங்கதம்:—சேனையை வேறுவேறாக நிறுத்துவது. போகம்:—சதுரங்கசேனையை ஒன்றுக்குப்பின் ஒன்றாக நிறுத்துவது.

○ தண்டவிரி பதினேழாவன:—பிரதரம், திருடகம், சியாவஸ்தம், குக்ஷி, பிரதிட்டம், சுப்பிரதிட்டம், சியேநம், விஜயம், சஞ்சயம், விசாலம், நிஜயம், சூசி, ஸ்தூணு, கர்ணம், சமூமுகம், ரதாசியம், வலயம் எனவிவை. மண்டலவிரியிரண்டாவன:—சர்வதோபத்திரம், துர்ஜயம் எனவிவை. அசங்கதவிரியாறாவன:—அர்த்தசந்திரம், உத்தானம், சிருங்காடம், கர்க்கடக சிருங்காரி, காகபாரி, கோதிகா எனவிவை. போகவிரியைந்தாவன:—கோமூத்திரிகை, கிம்சகம், சஞ்சாரி, சகடம், பந்தம் எனவிவை. இவற்றைக் காமந்தகமென்னு நூலுட் கண்டுகொள்க.

இ - ள். தானை - தானை,—அடற்றகையும் ஆற்றலும் இல் எனினும் - பகைமேற் றான்சென்றடுந்தறுகண்மையும் அது தன்மேல்வந்தாற் பொறுக்குமாற்றலும் இல்லையாயினும்,—படைத்தகையால் பாடு பெறும் - தன்றோற்றப்பொலிவானே பெருமையெய்தும். எ - று.

இல்லெனினுமெனவே, அவற்றதின்றியமையாமை பெறப்பட்டது. படைத்தகையென்றது ஒருபெயர்மாத்திரமாய் நின்றது. தோற்றப்பொலிவாவது அலங்கரிக்கப்பட்ட தேர், யானை, குதிரைகளுடனும் பதாகை, கொடி, குடை, பல்லியம், காகளமுதலியவற்றுடனும் அணிந்து தோன்றுமழகு. பாடு கண்டவளவிலே பகைவரஞ்சும் பெருமை. (அ)

எசுகூ. சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை. கூ.

இ - ள். சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும் இல்லாயின் - தான் றேய்ந்து சிறிதாகலும் மனத்தினின்று நீங்காத வெறுப்பும் நல்குரவும் தனக்கில்லையாயின்,—படை வெல்லும் - படை பகையை வெல்லும் எ - று.

விட்டுப்போதலும் நின்றது நல்கூர்தலும் அரசன் பொருள் கொடாமையான் வருவன. செல்லாத்துனியாவது மகளிரை வௌவல், இளிவரவாயினசெய்தன் முதலியவற்றான் வருவது. இவையுள்வழி அவன்மாட்டன்பின்றி உற்றுப்பொராமையின், இல்லாயின் வெல்லுமென்றார். (கூ)

எஎ0. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில். க0.

இ - ள். நிலைமக்கள் சால உடைத்து எனினும் - போரின்கணிலையுடைய வீரரை மிகவுடைத்தேயாயினும்,—தலைமக்கள் இல்வழித் தானை இல் - தனக்குத் தலைவராகிய வீரரில்லாதவழித் தானை நில்லாது. எ - று.

படைத்தலைவர் நிலையுடையரன்றிப் போவாராயிற் காண்போரில்லெனப் பொராது தானும் போமென்பார், தலைமக்களில்வழியில்லென்றார். இவை மூன்றுபாட்டானும் முறையே படைத்தகையின்மையானும், அரசன்கொடைத் தாழ்வுகளானும், தலைவரின்மையானும், தாழ்வு கூறப்பட்டது. (க0)

எஅம் அதி.—படைச்செருக்கு.

அஃதாவது அப்படையது மறமிகுதி. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

எஎக. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர். க.

இ - ள். தெவ்விர் என் ஐ முன் நின்று கல் நின்றவர் பலர் - பகைவீர், இன்றினூங் கென்றலைவனெதிர் போரேற்று நின்று அவன்வேல்வாய் வீழ்ந்து பின் கல்லின் கண்ணே நின்றவீரர் பலர்;—என் ஐ முன் நில்லன்மின் - நீவிர் அதன்கணின்றி நும் முடற்கணிற்றல்வேண்டின், என்றலைவனெதிர் போரேற்று நிற்றலையொழிமின். எ - று.

என்னையெனத் தன்னொடு தொடர்புபடுத்துக் கூறினமையின், அவன்வேல்வாய் வீழ்தல்பெற்றும். கல் நடுகல்*. "நம்பன் சிலைவாய் நடக்குங்கணை மிச்சி லல்லா—லம்பொன் முடிப்பூ ணரசும்மிலை†" எனப் பதுமுகன்கூறினாற்போல ஒருவீரன் தன் மறம் அரசன்மேல்வைத்துக் கூறியவாறு. இப்பாட்டு நெடுமொழிவஞ்சி‡. (௧)

எஎஉ. கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது. உ.

இ - ள். கான முயல் எய்த அம்பினில் - கானத்தின்கணோடும் முயலைப் பிழையாமலெய்த அம்பையேந்தலினும்—யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது - வெள்ளிடைநின்ற யானையையெறிந்து பிழைத்த வேலையேந்துதல் நன்று. எ - று.

கானமுயலென்றதனால் வெள்ளிடைநின்றவென்பதும், பிழைத்தவென்றதனாற் பிழையாமலென்பதும், முயற்குத் தக எய்தவென்றதனான் யானைக்குத்தக எறிதலும், வருவிக்கப்பட்டன. இது மாற்றரசன்படையொடு பொருதானோர் வீரன் அது புறங்கொடுத்ததாக நாணிப் பின்னவன்றன்மேற் செல்லலுற்றானது கூற்று. (உ)

எஎங. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு. ங.

இ - ள். தறுகண் பேராண்மை என்ப - பகைவர்மேற் கண்ணோடாது செய்யும் மறத்தை நூலோர் மிக்கவாண்டன்மையென்று சொல்லுவர்,—ஒன்று உற்றக்கால் ஊராண்மை அதன் எஃகு (என்ப) - அவர்க்கு ஒருதாழ்வு வந்ததாயிற் கண்ணோடி அது தீர்த்துக்கோடற்பொருட்டு ஊராண்மைசெய்தலை நூலோர் அதற்குக் கூர்மையென்று சொல்லுவர். எ - று.

என்பவென்பது பின்னுமியைந்தது. ஊராண்மை உபகாரியாந்தன்மை. அஃதாவது இலங்கையர்வேந்தன் போரிடைத் தன்றானை முழுதும்படத் தமியனாயகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியரிறை மேற்செல்லாது இன்றுபோய்நாளை நின்றானையோடு வாவென விட்டாற்போல்வது. இவையிரண்டுபாட்டுந்தழிஞ்சி§. (ங)

எஎச. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். ச.

இ - ள். கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் - தன்கைப் படையாயவேலைத் தன்மேல்வந்த களிற்றொடு போக்கி வருகின்ற களிற்றுக்கு வேறாடித்திரிவான்—மெய் வேல் பறியா நகும் - தன்மார்பின்கணின்ற வேலைக்கண்டு பறித்து மகிழும். எ - று.

---

* நடுகல்லிலக்கணம், தொல், பொருள், புறம், ரு-ம் சூத்திரத்துட்காண்க.

† பைம்பொற் புளகப் பருமக்களி யானை யீட்டஞ்—செம்பொ னெடுந்தேர்த் தொகை மாக்கடற் றானை வெள்ள—நம்பன் சிலைவாய் நடக்குங்கணை மிச்சி லல்லா—லம்பொன் மணிப்பூ ணரசும்மிலை யென்று நக்கான்—சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், ௩௧௭.

‡ நெடுமொழிவஞ்சியென்பது ஒன்னாதார் படைகெழுமித்—தன்னாண்மை யெடுத்துரைத் தன்று—வெண்பாமாலை, வஞ்சிப்படலம், ௧உ.

§ தழிஞ்சியென்பது அழிபவர் புறக்கொடை யயில்வா ளோச்சாக்—கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று—வெண்பாமாலை, வஞ்சிப்படலம். ௩.

களிற்றொடு போக்கல் களிற்றினதுயிரைக் கொடுபோமாறுவிடுதல். மகிழ்ச்சி தேடியதெய்தலான். இதனுட் களிற்றையல்லதெறியானெனன்பதூஉம், சினமிகுதியான் வேலிடைபோந்ததறிந்திலனென்பதூஉம், பின்னும் போர்மேல் விருப்பினனென்பதூஉம், பெறப்பட்டன. நூழிலாட்டு*. (௪)

எஎ௫. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
ேனாட்டன்றோ வன்க ணவர்க்கு. ௫.

இ - ள். விழித்த கண் - பகைவரை வெகுண்டுநோக்கியகண்—வேல்கொண்டு எறிய அழித்து இமைப்பின் - அவர் வேலைக்கொண்டெறிய அஃதாற்றாது அந்நோக்கையழித்து இமைக்குமாயின்,—வன்கணவர்க்கு ஓட்டு அன்றோ - அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம். எ - று.

அவ்வெகுளிநோக்கமீட்டலும் போரின்கண்மீட்சியெனக்கருதி அதுவுஞ்செய்யாரென்பதாம். (௫)

எஎ௬. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து. ௬.

இ - ள். தன் நாளை எடுத்து - தனக்குச் சென்ற நாள்களையெடுத்தெண்ணி,—விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்வைக்கும் - அவற்றுள் விழுப்புண்படாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்தநாளுள்ளே வைக்கும் வீரன். எ - று.

விழுப்புண் முகத்தினும் மார்பினும் பட்ட புண். போர்பெற்றிருக்கவும் அது பெறாத நாள்களோடுங் கூட்டுமென்பதாம். இவைமூன்றுபாட்டானும் ஊறஞ்சாமை கூறப்பட்டது. (௬)

எஎஎ. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. எ.

இ - ள். சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார் - துறக்கத்துத் தம்மொடு செல்லாது வையத்தைச் சூழ்ந்து நிற்கும் புகழைவேண்டி உயிர்வாழ்தலை வேண்டாத வீரர்—கழல் யாப்புக் காரிகை நீர்த்து - கழல்கட்டுதல் அலங்கார நீர்மையையுடைத்து. எ - று.

வையத்தைச் சூழுமெனவே, அதன் பெருமை பெற்றாம். செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. சூழ்தல் அகத்திடல். துறக்கமும் புகழும் எளிதினெய்துவராகலின், ஆபரணமாவது அதுவேயென்பதாம். (எ)

எஎஅ. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர். அ.

இ - ள். உறின் உயிர் அஞ்சா மறவர் - போர்பெறிற் றம்முயிர்ப்பொருட்டஞ்சாது அதன் மேற்செல்லும் வீரர்—இறைவன் செறினும் சீர் குன்றல் இலர் - தம்மிறைவன் அது வேண்டாவென்று முனியினும் அவ்வீரமிகுதி குன்றார். எ - று.

* நூழிலாட்டென்பது களங்கழுமிய படையிரிய—வுளங்கழிந்தவேல் பறித்தோச்சின்று—வெண்பாமாலை, தும்பைப்படலம், ௧௬.

போர்பெற்றறியாமையின், அது பெற்றால் அரசன்றடுப்பினும் நில்லாரென்பதாம். பிறரும் "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்*" என்றும் "புட்பகைக்—கேவா னாகலிற் சாவேம் யாமென - நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப†" என்றுங் கூறினார். (அ)

எஎகூ. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். கூ.

இ - ள். இழைத்தது இகவாமைச் சாவாரை - தாங்கூறின வஞ்சினந்தப்பாமற் பொருட்டுச் சென்று சாவவல்ல வீரரை—பிழைத்தது ஒறுக்கிற்பவர் யார் - அது தப்பியவாறு சொல்லியெள்ளுதற்குரியார் யாவர்! எ - று.

இழைத்தல் இன்னது செய்யேனாயின் இன்னனாகுகவெனத் தான் வகுத்தல். சொல்லியென்பது அவாய்நிலையான் வந்தது. வஞ்சினமுடிப்பான்புக்கு முன்னே சாவினுந் தொலைவன்மையின், அதுமுடித்தாராவரெனச் சாதற்சிறப்புக் கூறியவாறு.

எஅ௦. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. க௦.

இ - ள். புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின் - தமக்குச் செய்தநன்றிகளை நினைந்து ஆண்டவரசர் கண்கள் நீர் மல்கும்வகை போரிடைச் சாவப்பெறின்,—சாக்காடு இரந்துகோட்டக்கது உடைத்து - அச்சாக்காடு இரந்தாயினுங்கொள்ளுந்தகுதியையுடைத்து. எ - று.

மல்குதலாகிய இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது. கிளையழ இல்லிடை நோயால் விளிவார் பழவினைப்பயனேயெய்தலின், அடுத்தவினையாற் றுறக்கமெய்துஞ்சாதலை இரந்துகோட்டக்கதுடைத்தென்றார். இவை நான்குபாட்டானும் உயிரோம்பாமை கூறப்பட்டது. (க௦)

எகூம் அதி.—நட்பு.

இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்துதவுவதாய நட்பினை ஐந்ததிகாரம் விதிமுகத்தானும் பன்னிரண்டதிகாரம் எதிர்மறைமுகத்தானுங் கூறுவான்றொடங்கி, விதிமுகவதிகாரமைந்தனுள்ளும் முதற்கண் நட்புக்கூறுகின்றார். அஃதாவது இன்னதென்பதூஉம் அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும்.

எஅக. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. க.

இ - ள். நட்பின் செயற்கரிய யா உள - நட்புப்போலச் செய்துகோடற்கரிய பொருள்கள் யாவையுள!—அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள - செய்துகொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கரியகாவலாவன யாவையுள! எ - று.

நட்புச்செய்தற்காவாரைப் பெறுதலும் பெற்றாற் செய்யுமுபாயமும் செய்தாற் பிரிவின்றி நிற்றலுமுதலிய அரியவாகலின் நட்பிற் செயற்கரியன வில்லையென்றும், செய்தாற் பகைவரஞ்சி வினைதொடங்காராகலின் அதுபோல வினைவாராமைக்கு

* புறநானூறு, ஙக. † புறநானூறு, கூஅ.

அரிய காவலில்லையென்றுங் கூறினார். நட்புத்தான் இயற்கை செயற்கையென இரு வகைப்படும். அவற்றுள் இயற்கை பிறப்புமுறையானாயதூஉம் தேயமுறையானாய தூஉமென விருவகைப்படும். அவற்றுண் முன்னையது சுற்றமாகலின் அது சுற்றந்தழா லினடங்கிற்று; ஏனையது பகையிடையிட்டதேயத்ததாகலின், அது துணைவலியென வலியறிதலுளடங்கிற்று. இனி ஈண்டுச் சொல்லப்படுவது முன்செய்தவுதவிபற்றி வருஞ் செயற்கையேயாகலின், அதன்சிறப்பு இதனாற் கூறப்பட்டது. (க)

எஅஉ. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. உ.

இ - ள். நீரவர் கேண்மை பிறை நிறை நீர - அறிவுடையார் நட்புக்கள் பிறை நிறையுந்தன்மைபோல நாடோறு நிறையுந்தன்மையவாம்;—பேதையார் நட்பு மதிப் பின் நீர - மற்றைப்பேதைமையுடையார் நட்புக்கள் நிறைந்தமதி பின் குறையுந்தன் மைபோல நாடோறுங்குறையுந்தன்மையவாம். எ - று.

நீரவரென்றார், இனிமைபற்றி. கேண்மை, நட்பென்பன ஒருபொருட்கிளவி. செய்தாரது பன்மையான் நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாருஞ் செய்தன முன்சுருங்கிப் பின்பெருகற்கும், பேதையாரும் பேதையாருஞ்செய்தன முன்பெருகிப் பின்சுருங்கற்குங் காரணம் தம்முண் முன்னறியாமையும் பின்னறி தலுமாம். (உ)

எஅரு. நவிற்றொறு நூனயம் போலும் பயிற்றொறும்
பண்புடை யாளர் தொடர்பு. ரு.

இ - ள். பண்பு உடையாளர் தொடர்பு பயிற்றொறும் - நற்குணமுடையமக்கள் தம்முட்செய்த நட்புப் பயிலுந்தோறும் அவர்க்கின்பஞ்செய்தல்—நூல் நவிற்றொறும் நயம்போலும் - நூற்பொருள் கற்குந்தோறுங் கற்றார்க்கின்பஞ்செய்தலை யொக்கும். எ - று.

நயத்தினைச் செய்தலான், நயமெனப்பட்டது. இருமையினும் ஒருகாலைக்கொரு கால் மிகுமென்பதாம். இவையிரண்டுபாட்டானும் அச்சிறப்பிற்கேது கூறப்பட்டது.

எஅச. நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. ச.

இ - ள். நட்டல் நகுதற்பொருட்டன்று - ஒருவனோடொருவன் நட்புச்செய்தல் தம்முணகுதற்கியைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று,—மிகுதிக்கண் மேற் சென்று இடித்தற்பொருட்டு - அவர்க்கு வேண்டாதசெய்கையுளதாயவழி முற்பட்டுக் கழறுதற்பொருட்டு. எ - று.

பழியும் பாவமுந்தருஞ்செய்கை துன்பமே பயத்தலான் வேண்டப்படுவதன்மை யின் அதனை மிகுதியென்றும், அதுசெய்தற்கு முன்னே மீட்டல்வேண்டுதலின் மேற் சென்றென்றும், இன்சொற்கு மீளாமையின் இடித்தற்பொருட்டென்றுங் கூறினார். இதனான் நட்பின்பயன் கூறப்பட்டது. (ச)

எஅரு. புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும். ரு.

இ - ள். புணர்ச்சி பழகுதல் வேண்டா - ஒருவனேடொருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை,—உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் - இருவர்க்குமொத்தவுணர்ச்சிதானே நட்பாமுரிமையைக் கொடுக்கும். எ - று.

புணர்ச்சி ஒருதேயத்தாராதல்; "இன்றே போல்கநும் புணர்ச்சி*" என்றதும் அதனை. பழகுதல் பலகாற்கண்டுஞ் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டுமின்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சியொப்பின், அதுவே உடனுயிர்நீங்கு முரிமைத்தாய நட்பினைப் பயக்குமென்பதாம்†. நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தலென்னுங் காரணமூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்தென்பது இதனாற் கூறப்பட்டது. (ரு)

எஅகூ. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. சூ.

இ - ள். முகம் நக நட்பது நட்பு அன்று - கண்டவழி அகமொழிய முகமாத்திரமே மலரும்வகை நட்குமது நட்பாகாது;—நெஞ்சத்தகம் நக நட்பது நட்பு - அன்பால் அகமுமலர நட்குமதே நட்பாவது. எ - று.

நெஞ்சின்கணிகழ்வதனை நெஞ்சென்றார். இறந்ததுதழீஇய வெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. இதனால் இரண்டும் ஒருங்கே மலரவேண்டுமென்பது பெற்றாம். ()

எஅஎ. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு. எ.

இ - ள். அழிவினவை நீக்கி ஆறு உய்த்து - கேட்டினைத்தருந் தீநெறிகளைச் செல்லுங்கால் விலக்கி ஏனை நன்னெறிகளைச் செல்லாக்காற் செலுத்தி—அழிவின்கண் அல்லல் உழப்பது நட்பாம் - தெய்வத்தாற்கேடுவந்துழி அது விலக்கப்படாமையின் அத்துன்பத்தை உடனனுபவிப்பதே ஒருவனுக்கு நட்பாவது. எ - று.

ஆறெனவருகின்றமையின், அழிவினைத்தருமவையென்றெழிந்தார். "தெருண்டவறிவினவர்‡" என்புழிப்போல இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. இனி நவையென்று பாடமோதி, அதற்குப் போரழிவினுஞ் செல்வவழிவினும் வந்த துன்பங்களென்றும், அழிவின்க ணென்பதற்கு யாக்கை யழிவின்கணென்றும் உரைப்பாருமுளர். (எ)

எஅஅ. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு. அ.

இ - ள். உடுக்கை இழந்தவன் கைபோல - அவையிடை ஆடைகுலைந்தவனுக்கு அப்பொழுதே கைசென்றுதவி அவ்விளிவரல் களையுமாறுபோல,—ஆங்கே இடுக்கண் களைவது நட்பாம் - நட்டவனுக்கு இடுக்கண் வந்துழி அப்பொழுதே சென்றுதவி அதனைக்களைவதே நட்பாவது. எ - று.

அற்றங்காத்தற்கட் கை தன்மனத்தினு முற்படுதலின், அவ்விரைவு இடுக்கண்களைவுழியும் அதற்கொத்த தொழிலுவமையினும் வருவிக்க. உடையவன்றெழில் நட்பின் மேலேற்றப்பட்டது. (அ)

* புறநானூறு, ருஅ. † புறநானூறு, உகஎ. ‡ நாலடியார், இரவச்சம், க.

௭அ௯. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை. ௯.

இ - ள். நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் - நட்பினுக்கு அரசிருக்கையாதெனின்,—கொட்பு இன்றி ஒல்லும் வாய் ஊன்றும் நிலை - அஃது எஞ்ஞான்றுந் திரிபின்றி இயலுமெல்லை யெல்லாம் அறம்பொருள்களிற் றளராமைத் தாங்குந் திண்மை. எ - று.

ஒருஞான்றும் வேறுபடாது மறுமையிம்மைகட்கு உறுதியாய அறம்பொருள் களிற்றளர்ந்தழி அத்தளர்ச்சி நீக்கி அவற்றின்கணிறுத்துதற்குமேல் ஒருசெயலுமின் மையின், அதனை நட்பிற்கு முடிந்தவெல்லையென்றார். (௯)

௭௯௦. இனைய ரிவமரமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு. ௧௦.

இ - ள். இவர் எமக்கு இனையர் யாம் இன்னம் என்று புனையினும் - இவர் நமக் கித்துணையன்பினர் யாமிவர்க்கித்தன்மையமென்று ஒருவரையொருவர் புனைந்துசொல் லினும்,—நட்புப் புல்லென்னும் - நட்புப் புல்லிதாய்த் தோன்றும். எ - று.

இவர்க்கென்பது வருவிக்கப்பட்டது. தாம் அவரென்னும் வேற்றுமையின்றி வைத்துப் புனைந்துரைப்பினும் வேற்றுமையுண்டாமாகலின், நட்புப் புல்லென்னு மென்றார். இவையைந்துபாட்டானும் நட்பினதிலக்கணங் கூறப்பட்டது. (௧௦)

அ௦ ம் அதி.—நட்பாராய்தல்.

அஃதாவது மேற்சொல்லிய விலக்கணத்தாரை யாராய்ந்தறிந்தே நட்கவேண் டுதலின், அவரையாராயுந்திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௭௯௧. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. ௧.

இ - ள். நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை - நட்பினைவிரும்பி அதன் கண்ணே நிற்பார்க்கு ஒருவனோடு நட்புச்செய்தபின் அவனை விடுதலுண்டாகாது;— நாடாது நட்டலிற் கேடு இல்லை - ஆகலான், ஆராயாது நட்புச் செய்தல்போலக் கேடு தருவது பிறிதில்லை. எ - று.

ஆராய்தல் குணஞ்செய்கைகளது நன்மையையாராய்தல். கேடு ஆகுபெயர். நட் கிற் றமவரென்னும் வேற்றுமையின்மையின் வீடில்லையென்றும், அவ்வேற்றுமை யின்மையான் அவன்கட் பழிபாவங்கள் தமவாமாகலின் இருமையுங்கெடுவரென்பது நோக்கி நாடாது நட்டலிற் கேடில்லையென்றுங் கூறினார். (௧)

௭௯௨. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும். ௨.

இ - ள். ஆய்ந்து ஆய்ந்து கேண்மை கொள்ளாதான் - குணமுஞ் செய்கையும் நல்லனென்பது பலகாலும் பலவாற்றானுமாராய்ந்து ஒருவனோடு நட்புக்கொள்ளாத வன்—கடைமுறை தான் சாம் துயரம் தரும் - முடிவிற் றான் சாதற்கேதுவாய துன் பத்தினைத் தன்மாற்றார் விளைக்கவேண்டாமற் றானே விளைக்கும். எ - று.

கடைமுறைக்கண்ணென இறுதிக்கட்டொக்க ஏழாவது விரிக்க. குணமுஞ் செயலுந் தீயானொடு கொள்ளின் அவற்கு வரும்பகைமை யெல்லாந் தன்மேலவாய்ப் பின் அவற்றானிறந்துவிடு மென்பதாம். இவையிரண்டுபாட்டானும் ஆராயாவழிப்படுமிழுக்குக் கூறப்பட்டது. (உ)

எகூங. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு. ங.

இ - ள். குணனும் குடிமையும் குற்றமும் குன்றா இனனும் அறிந்து - ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும் குறைவற்ற சுற்றத்தினையுமாராய்ந்தறிந்து,—நட்பு யாக்க - அவனோடு நட்புச்செய்க. எ - று.

குற்றமில்லாதார் உலகத்தின்மையின் உள்ளது பொறுக்கப்படுவதாயின் அவர் நட்பு விடற்பாற்றன்றென்பார் குற்றமுமென்றும், சுற்றப்பிணிப்புடையார் நட்டாரோடும் பிணிப்புண்டு வருதலிற் குன்றாவினனுமென்றும், விடப்படிற் றங்குறையாமென்பார் அறிந்தியாக்கவென்றுங் கூறினார். (ங)

எகூச. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு. ச.

இ - ள். குடிப்பிறந்து தன்கட் பழி நாணுவானை - உயர்ந்தகுடியின்கட்பிறந்து தன்மாட்டு உலகர்சொல்லும் பழிக்கஞ்சுவானை—கொடுத்தும் நட்புக் கொளல் வேண்டும் - சில கொடுத்தாயினும் நட்புக்கோடல் சிறந்தது. எ - று

குடிப்பிறப்பாற் றான் பிழைசெய்யாமையும், பழிக்கஞ்சலாற் பிழைத்தன பொறுத்தலும் பெற்றாம். இவை யிரண்டுமுடையானைப் பெறுதலருமையின், அவனட்பை விலைகொடுத்துங்கொள்க வென்பதாம். (ச)

எகூரு. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். ரு.

இ - ள். அல்லது அழச் சொல்லி - தாம் உலகவழக்கல்லது செய்யக் கருதிற் சோகம்பிறக்கும்வகை சொல்லி விலக்கியும்—இடித்து - செய்தக்காற் பின்னுஞ் செய்யாவகை நெருக்கியும்—வழக்கு அறியவல்லார் - அவ்வழக்குச் செய்யாவழிச் செய்விக்கவும் வல்லாரை—ஆய்ந்து நட்புக் கொளல் - ஆராய்ந்து நட்புக்கொள்க. எ - று.

அழச்சொல்லி யிடித்தெனவந்த பரிகாரவினைகளான் அவற்றிற்கேற்ற குற்றவினைகள் வருவிக்கப்பட்டன. வழக்கு உலகத்தார் அடிப்படச் செய்துபோந்த செயல். தம்மொடு நட்டாரும் அறியும்வகை அறிவித்தலரிதாகலின், அறியவல்லாரென்றார். இரண்டாவது இறுதிக்கட்டொக்கது. (ரு)

எகூசா. கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல். சா.

இ - ள். கிளைஞரை நீட்டி அளப்பது ஓர்கோல் - ஒருவனுக்குக் கேடென்பது தன்னட்டாராகிய புலங்களை யெஞ்சாமலளப்ப தோர்கோல்;—கேட்டினும் ஒருறுதி உண்டு - ஆகலின் அதன்கண்ணும் அவனாற் பெறப்படுவதோர் நல்லறிவுண்டு. எ - று.

தத்த நட்பெல்லைகள் சுருங்கியிருக்கவும் செல்வக்காலத்துப் புறத்துத் தோன்று மற்போனந்தார் பின் கேடுவந்துழிச் செயல்வேறுபடுதலின் அக்கேட்டால் அவை வரையறுக்கப்படுமென்பது பற்றிக் கேட்டினைக்கோலாக்கியும், அதனால் அவரையளந்தறிந்தால் ஆவாரையே கோடலின் அவ்வறிவை உறுதியென்றுங் கூறினார். கிளைஞர் ஆகுபெயர். இஃதேகதேசவுருவகம். இவை நான்குபாட்டானும் ஆராயுமாறும், ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவரென்பதூஉங் கூறப்பட்டன. (௬)

எகூஎ. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல். எ.

இ - ள். ஒருவற்கு ஊதியமென்பது - ஒருவனுக்குப் பேறென்று சொல்லப்படுவது—பேதையார் கேண்மை ஒரீஇ விடல் - அறிவிலாரோடு நட்புக்கொண்டானாயின் அதனை யொழிந்து அவரினீங்குதல். எ - று.

நட்பொழிந்தாலும் நீங்காக்கால் "வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வே*" மாறுபோலத் தீங்கு வருதலின் விடலென்றும், நீங்கியவழித் தீங்கொழிதலேயன்றி இருமையின்பத்திற் குரிமை யெய்தலுமுடைமையின் அதனை யூதியமென்றுங் கூறினார்.

எகூஅ. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணாற்றறுப்பார் நட்பு. அ.

இ - ள். உள்ளம் சிறுகுவ உள்ளற்க - தம்மூக்கஞ் சுருங்குதற்குக் காரணமாய வினைகளைச் செய்யநினையாதொழிக,—அல்லற்கண் ஆற்று அறுப்பார் நட்புக் கொள்ளற்க - அதுபோலத் தமக்கொருதுன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளாதொழிக. எ - று.

உள்ளஞ்சிறுகுவவாவன தம்மின்வலியாரோடு தொடங்கியனவும் பயனில்லனவுமாம். ஆற்றென்பது முதனிலைத்தொழிற்பெயர். முன்னெல்லாம் வலியராவார் போன்று ஒழிதலின், வலியறுப்பாரென்றார். எடுத்துக்காட்டுவமை. கொள்ளின் அழிந்தே விடுமென்பதாம். (அ)

எகூகூ. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும். கூ.

இ - ள். கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை - ஒருவன் கெடுங்காலத்து அவனை விட்டு நீங்குவார் முன் அவனோடு செய்தநட்பு;—அடுங்காலை உள்ளினும் உள்ளம் சுடும் - தன்னைக் கூற்றடுங்காலத்து ஒருவனினைப்பினும், அந்நினைத்த வுள்ளத்தைச் சுடும். எ - று.

நினைத்ததுணையானே இடையில்லாத பிறனுக்குங் கூற்றினுங் கொடிதாமெனக் கைவிடெண்ணிச் செய்த நட்பின் கொடுமை கூறியவாறு. இனி அவன்றனே ஆக்கிய கேடு தன்னையடுங்காலையுள்ளினும் அக்கேட்டினுஞ்சுடுமென் றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் ஆராய்ந்தால் நட்கப்படாதார் இவரென்பது கூறப்பட்டது. (கூ)

அ00. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு. க0.

* நாலடியார், நல்லினஞ்சேர்தல், க0.

இ - ள். மாசு அற்றார் கேண்மை மருவுக - உலகோடொத்துக் குற்றமற்றார் நட்பினையே பயில்க;—ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக - உலகோடொத்தலில்லார் நட்பினை அறியாது கொண்டாராயின், அவர்வேண்டியதொன்றனைக் கொடுத்தாயினும் விடுக. எ - று.

உலகோடொத்தார் நட்பு இருமையின்பமும் பயத்தலின் மருவுகவென்றும், அதனோடு மாறாயினார் நட்புத் துன்பமே பயத்தலின் அதனொழிவை விலைகொடுத்துங் கொள்கவென்றுங் கூறினார். இதனால் அவ்விருமையுந் தொகுத்துக் கூறப்பட்டன. ()

அக ம் அதி.—பழைமை.

அஃதாவது நட்டாரது பழையராந்தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். காரணப்பெயர் காரியத்திற்காயிற்று. ஆராய்ந்து நட்கப்பட்டாரெனினும் பொறுக்கப்படுங் குற்றமுடையராகலானும் ஊழ்வகையானும் நட்டார்மாட்டுப் பிழையுளதாமென்பது அறிவித்தற்கு, இது நட்பாராய்தலின்பின் வைக்கப்பட்டது.

அ௦க. பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. க.

இ - ள். பழைமை எனப்படுவது யாதெனின் - பழைமையென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்,—கிழமையை யாதும் கீழ்ந்திடா நட்பு-அது பழமையோர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறிதுஞ் சிதையாது அவற்றிற்குடம்படும் நட்பு.எ-று.

கிழமை ஆகுபெயர். கெழுதகைமையென வருவனவுமது. உரிமையாற்செய்வனவாவன கருமமாயின செய்யுங்காற் கேளாதுசெய்தல், கெடும்வகைசெய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவச்சங்களின்மையென்றிவை முதலாயின. சிதைத்தல் விலக்கல். இதனாற் பழைமையாவது காலஞ்சென்றதன்று இப்பெற்றித்தாய நட்பென்பது கூறப்பட்டது. (க)

அ௦உ. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன். உ.

இ - ள். நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை - நட்பிற் கவயவமாவன நட்டார் உரிமையாற்செய்வன,—அதற்கு உப்பாதல் சான்றோர் கடன் - அதனால் அவ்வுரிமைக்கு இனியராதல் அமைந்தார்க்கு முறைமை. எ - று.

வேறன்மைதோன்ற உறுப்பென்றார். உறுப்பென்பது ஈண்டிலக்கணையடியாக வந்த குறிப்புச்சொல். அவயவமாதலறிந்தே இனியவராவரென்பது தோன்றச் சான்றோர்மேல் வைத்தார். (உ)

அ௦௩. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. ௩.

இ - ள். கெழுதகைமை செய்தாங்கு அமையாக்கடை - தாமுடம்படாதனவே னும் நட்டார் உரிமையாற் செய்தனவற்றிற்குத் தாஞ்செய்தாற்போல உடம்படாராயின்,—பழகிய நட்பு எவன்செய்யும் - அவரோடு பழையதாய் வந்த நட்பு என்ன பயனைச் செய்யும். எ - று.

செய்தாற்போலவுடம்படுதலாவது தாமும் அவரிடத்துரிமையாலுடம்படுதல். இவையிரண்டுபாட்டானும் பழைமையான்வரு முரிமையது சிறப்புக் கூறப்பட்டது.()

அ0ச. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின். ச.

இ-ள். நட்டார் கெழுதகையால் கேளாது செயின் - தங்கருமத்தை நட்டார் உரிமையாற்கேளாது செய்தாராயின்,—விழைதகையான் வேண்டியிருப்பர் - அச்செயலது விழையப்படுந்தன்மைபற்றி அதனை விரும்புவர் அறிவுடையார். எ-று.

ஒருவர்க்குத் தங்கருமந் தாமறியாமன் முடிந்திருத்தலினூஉங்கு நன்மையின்மையின், அச்செயல் விழையத்தக்கதாயிற்று. அதனை அவ்வாறறிந்து விரும்புதல் அறிவுடையார்க்கல்லதின்மையின், அவர்மேல்வைத்துக்கூறினார். வேண்டியிருப்பரென்பது எழுந்திருப்பரென்பதுபோல ஒருசொன்னீர்மைத்து. இதனாற் கேளாதுசெய்துழி அதனை விரும்புகவென்பது கூறப்பட்டது. (ச)

அ0ரு. பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். ரு.

இ-ள். நோதக்க நட்டார் செயின் - தாம் வெறுக்கத்தக்கனவற்றை நட்டார் செய்தாராயின்,—பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்று உணர்க - அதற்குக் காரணம் ஒன்றிற்பேதைமையென்றுதல் ஒன்றின்மிக்கவுரிமையென்றுதல் கொள்க. எ-று.

ஒன்றோவென்பது எண்ணிடைச்சொல். செயினெனவே, தம்மியல்பாற் செய்யாமை பெற்றாம். இது வருகின்றவற்றுள்ளுமொக்கும். இழவூழான் வரும் பேதைமை யாவர்க்கு முண்மையிற் றமக்கேதங்கொண்டாரென்றுதல் ஊழ்வகையான் எம்மின்வரற்பாலது ஒற்றுமை மிகுதிபற்றி அவரின்வந்ததென்றுதல் கொள்வதல்லது அன்பின்மையென்று கொள்ளப்படா தென்பதாம். கெடும்வகைசெய்யின் அதற்குக் காரணம் இதனாற் கூறப்பட்டது. (ரு)

அ0சா. எல்லைக்க ணின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு. சா.

இ-ள். எல்லைக்கண் நின்றார் - நட்புவரம்பிகவாது அதன்கண்ணே நின்றவர்—தொல்லைக்கண் நின்றார் தொடர்பு தொலைவிடத்தும் துறவார் - தம்மொடு பழைமையிற்றிரியாது நின்றாரது நட்பினை அவராற்றொலைவுவந்தவிடத்தும் விடார். எ-று.

பழைமையிற்றிரியாமை உரிமையொழியாமை. தொலைவு பொருட்கேடும் போர்க்கேடும். (சா)

அ0எ. அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். எ.

இ-ள். அழிவந்த செய்யினும் அன்பு அறார் - நட்டார் தமக்கழிவுவந்தவற்றைச் செய்தாராயினும் அவர்மாட்டன்பொழியார்—அன்பின் வழி வந்த கேண்மையவர் - அன்புடனே பழையதாய்வந்த நட்பினையுடையார். எ-று.

அழியென்பது முதனிலைத்தொழிற்பெயர். அழிவு மேற்சொல்லிய கேடுகள். இவை இரண்டுபொட்டானுங் கேடுசெய்தக்கண்ணும் நட்பு விடற்பாற்றன்றென்பது கூறப்பட்டது. (எ)

அ0அ. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின். அ.

இ - ள். கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு - நட்டார் செய்த பிழையைத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னாலுங்கொள்ளாத உரிமையறியவல் லார்க்கு—நட்டார் இழுக்கம் செயின் நாள் - அவர் பிழை செய்வாராயின், அதுபயன் பட்ட நாளாம். எ - று.

பிழையாவன சொல்லாது நற்பொருள்வௌவல், பணியாமை, அஞ்சாமை முத லாயின. கேட்டல் உட்கோடல். கெழுதகைமை வல்லாரென்பது ஒருபெயராய்க் கேளாதவென்னு மெச்சத்திற்கு முடிபாயிற்று. செய்துபோந்துழியல்லது அவ்வுரிமை வெளிப்படாமையின், செய்யாதன நாளல்லவாயின. இதனாற் பிழைபொறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது. (அ)

அ0கூ. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு. கூ.

இ - ள். கெடா வழி வந்த கேண்மையார் கேண்மை - உரிமையறாது பழையதாய் வந்த நட்பினையுடையாரது நட்பினை—விடார் உலகு விழையும் - அவர் பிழைநோக்கி விடுதல்செய்யாதாரை உலகம் நட்புக்குறித்து விரும்பும். எ - று.

கெடாதென்பதனிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. விடாதாரையெனவே, விடு தற்காரணங் கூறப்பட்டது. நம்மாட்டும் இவரித்தன்மையராவரென்று யாவருந் தாமே வந்து நட்பாவரென்பதாம். கெடாரென்று பாடமோதி, நட்புத்தன்மையிற் கெடாராகி யென்றுரைப்பாருமுளர். (கூ)

அகO. விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார். கO.

இ - ள். பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார் - பழைய நட்டார் பிழைசெய் தாராயினும் அவர்மாட்டுத் தம்பண்பினீங்காதார்—விழையார் விழையப்படுப - பகை வரானும் விரும்பப்படுவர். எ - று.

தம்பண்பாவது செய்யாதமுன்போல அன்புடையராதல். மூன்றனுருபுஞ் சிறப் பும்மையும் விகாரத்தாற் றொக்கன. அத்திரிபின்மை நோக்கிப் பகைவரும் நட்டா ராவரென்பதாம். இவையிரண்டுபாட்டானும் பழைமையறிவார் எய்தும் பயன் கூறப்பட்டது. (கO)

அஉம் அதி.—தீநட்பு.

இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையின் விடற்பாலதாய நட்பு நட்பா ராய்தற்கட் சுருங்கச்சொல்லியதுணையா னடங்காமையின் அதனை யிருவகைப்படுத்து இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட்டீநட்புக் கூறுகின்றார். அஃதா வது தீக்குணத்தாரோடு உளதாய நட்பு. குணத்தின்றீமை ஒற்றுமைபற்றி உடையார் மேற்றாய், அது பின் அவரோடுசெய்த நட்பின்மேற்றாயிற்று. அதிகாரமுறைமை கூறு மையே விளங்கும்.

அகக. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது. க.

இ-ள். பருகுவார் போலினும் பண்பு இலார் கேண்மை - காதன்மிகுதியாற் பருகுவார்போன்றாராயினுந் தீக்குணமுடையார் நட்பு—பெருகலின் குன்றல் இனிது-வளர்தலிற் றேய்தனன்று. எ-று.

"பருகு வன்ன வருகா நோக்கமொடு*" என்றார் பிறரும். நற்குணமில்லா ரெனவே, தீக்குணமுடையாரென்பது அருத்தாபத்தியான் வந்தது. பெருகினல் வருங் கேடு குன்றினல் வாராமையின், குன்றலினிதென்றார். இதனாற்றீநட்பினது ஆகாமை பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப. (க)

அகஉ. உறினட் டறினொரூஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென். உ.

இ-ள். உறின் நட்டு அறின் ஒரூஉம் ஒப்பு இலார் கேண்மை - தமக்குப் பயனுள்வழி நட்புச்செய்து அஃதில்வழி ஒழியும் ஒப்பிலாரது நட்பினை—பெறினும் இழப்பினும் என் - பெற்றால் ஆக்கமியாது! இழந்தாற் கேடியாது! எ-று.

தமக்குற்றனபார்ப்பார் பிறரோடு பொருத்தமிலராகலின், அவரை ஒப்பிலாரென்றார். அவர்மாட்டு நொதுமற்றன்மையே அமையுமென்பதாம். (உ)

அகங. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர். ங.

இ-ள். உறுவது சீர்தூக்கும் நட்பும் - நட்பளவு பாராது அதனால் வரும் பயனளவு பார்க்கும் நட்டாரும்—பெறுவது கொள்வாரும் - கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக்கொள்ளும் பொதுமகளிரும்—கள்வரும் - பிறர்கேடு நோக்காது அவர் சோர்வு நோக்குங் கள்வரும்—நேர் - தம்முளொப்பர். எ-று.

நட்பு ஆகுபெயர். பொருளையேகுறித்து வஞ்சித்தொழுகலின், கணிகையர் கள்வ ரென்றிவரோடொப்ப ரென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டானுந் தமக்குறுவது பார்ப்பார் நட்பின்றீமை கூறப்பட்டது. (ங)

அகச. அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை. ச.

இ-ள். அமரகத்து ஆற்று அறுக்கும் கல்லா மா அன்னார் தமரின் - அமர் வாராதமுன்னெல்லாந் தாங்குவதுபோன்று வந்துழிக் களத்திடை வீழ்த்துப்போங் கல்வியில்லாத புரவிபோல்வாரது தமர்மையில்—தனிமை தலை - தனிமை சிறப்புடைத்து. எ-று.

கல்லாமை கதியைந்தும் † சாரிபதினெட்டும் பொருமுரணுற்றலும் அறியாமை. துன்பம் வாராதமுன்னெல்லாந் துணையாவார்போன்று வந்துழி விட்டுநீங்குவரென்பது உவமையாற் பெற்றாம். அவர் தமரானல் வருமிறுதி தனியானல் வாராமையின், தனிமையைத் தலையென்றார்: எனவே, அதுவுந்தீதாதல் பெறுதும். (ச)

அகரு. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று. ரு.

---

* பொருநராற்றுப்படை, அடி, எஅ.

† விக்கிரமம் வல்கிதம் வெல்லு முபகண்டம்—மத்திமஞ் சாரியோ டைந்து. மல்லகதி முதலியவாக வேறு கூறுவதுமுண்டு.

இ - ள். செய்து ஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை - செய்துவைத்தாலும் அரணாகாத கீழ்மக்களது தீநட்பு—எய்தலின் எய்தாமை நன்று - ஒருவர்க்குண்டாதலின் இல்லையாதல் நன்று. எ - று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. அரணாகாமை தொலைவின்கண் விட்டு நீங்குதல். எய்தலினெய்தாமை நன்றென்பதற்கு மேலுரைத்தாங்குரைக்க. சாராதவென்னும் பெயரெச்சங் கேண்மையென்னும் பெயர்கொண்டது; சிறியவரென்பதனைக் கொள்ளின், செய்தென்பது நின்று வற்றும். இவையிரண்டுபாட்டானுந் தொலைவிற் றுணையாகாத நட்பின்றீமை கூறப்பட்டது. (௫)

௮௧௬. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும். ௬.

இ - ள். பேதை பெருங்கெழீஇ நட்பின் - அறிவிலானது மிகச்செறிந்தநட்பின்—அறிவுடையார் ஏதின்மை கோடி உறும் - அறிவுடையானது பகைமை கோடிமடங்கு நன்று. எ - று.

கெழீஇயவென்பதனிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. பன்மை உயர்த்தற்கண்வந்தது. அறிவுடையான்பகைமை ஒருதீங்கும் பயவாமையானும், பேதைநட்பு எல்லாத் தீங்கும் பயத்தலானும், கோடியுறுமென்றார். பெருங்கழிநட்பென்று பாடமோதுவாருமுளர். (௬)

௮௧௭. நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும். ௭.

இ - ள். நகை வகையர் ஆகிய நட்பின் - தாமறிதல்வகையராகாது நகுதல்வகையராதற்கேதுவாகிய நட்பான் வருவனவற்றின்—பகைவரால் பத்து அடுத்த கோடி உறும் - பகைவரான் வருவன பத்துக்கோடிமடங்கு நல்ல. எ - று.

நட்பு ஆகுபெயர். அந்நட்பாவது விடமருந் தூர்த்தரும் வேழம்பரும்போன்று பலவகையானகுவித்துத் தாம் பயன்கொண்டொழிவாரோடு உளதாயது. பகைவராலென்பது அவாய்நிற்றலின், வருவனவென்பது வருவிக்கப்பட்டது. பத்தடுத்தகோடி பத்தாகத்தொகுத்தகோடி. அந்நட்பான் வருமின்பங்களின் அப்பகைவரான் வருந் துன்பங்கள் இறப்பநல்லவென்பதாம். இதற்குப் பிறரெல்லாஞ் சொல்லிலக்கணத்தோடு மாறுகொளவுரைத்தார். (௭)

௮௧௮. ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். ௮.

இ - ள். ஒல்லுங் கருமம் உடற்றுபவர் கேண்மை - தம்மான்முடியுங்கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரோடு கொண்ட நட்பினை—சொல்லாடார் சோரவிடல் - அது கண்டால் அவரறியச் சொல்லாதே சோரவிடுக. எ - று.

முடியாதாக்குதல் முடியாதாகநடித்தல். சோரவிடல் விடுகின்றவாறுதோன்றாமல் ஒருகாலைக்கொருகா லோயவிடுதல். அறியச்சொல்லினும் விடுகின்றவாறுதோன்றினும் அதுபொழுது பரிகரித்துப் பின்னு நட்பாயொழுகக்கருதுவராகலின், சொல்லாடாரென்றுஞ் சோரவிடலென்றுங் கூறினார். இவைமூன்றுபாட்டானும் முறையே பேதையார், நகுவிப்பார், இயல்வதுசெய்யாதாரென்றிவர்கணட்பின்றீமை கூறப்பட்டது. (௮)

அககூ. கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. கூ.

இ - ள். வினை வேறு சொல் வேறு பட்டார் தொடர்பு - வினையுஞ்சொல்லு மொவ்வாது வேறுவேறாயிருப்பார்நட்பு—கனவினும் இன்னாது - நனவின்கண்ணே யன்றிக் கனவின்கண்ணு மின்னாது. எ - று.

வினை சொற்களதொவ்வாமை முதன்மேலேற்றப்பட்டது. அஃதாவது வினையிற் பகைவராய்ச் சொல்லின் நட்டாராயிருத்தல். நிகழ்வின்கண் உளதாயிருத்தலால், கனவினுமின்னாதென்றார். உம்மை எச்சவும்மை; இழிவுசிறப்பும்மையுமாம். மன்னும் ஓவும் அசைநிலை. (கூ)

அஉ௦. எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு. க௦.

இ - ள். மனைக் கெழீஇ மன்றிற் பழிப்பார் தொடர்பு - தனியே மனைக்கணிருந்துழி நட்பாடிப் பலரோடு மன்றின்கணிருந்துழிப் பழிகூறுவார்நட்பு—எனைத்தும் குறுகுதல் ஓம்பல் - சிறிதாயினுந் தம்மை நணுகுதலைப் பரிகரிக்க. எ - று.

மனைக்கட்கெழுமலும் மன்றின்கட்பழித்தலுந் தீதாகலின், அவர் ஒருகாலுந் தம்மை நணுகாவகை குறிக்கொண்டு காக்கவென்பார், அவர் நட்பின்மேல் வைத்துக் கூறினார். இவையிரண்டுபாட்டானும் வஞ்சர்நட்பின்றீமை கூறப்பட்டது. (க௦)

அகூம் அதி.—கூடாநட்பு.

இனி எனைக்கூடாநட்புக் கூறுகின்றார். அஃதாவது பகைமையான் அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந்துணையும் புறத்தாற் கூடியொழுகுவார் நட்பு.

அஉக. சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. க.

இ - ள். நேரா நிரந்தவர் நட்பு - கூடாதிருந்தே தமக்குவாய்க்குமிடம் பெறுந்துணையுங்கூடியொழுகுவார் நட்பு—சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை - அது பெற்றால், அறவெறிதற்குத் துணையாய பட்டடையாம். எ - று.

எறியுமெல்லை வாராமுனெல்லாந் தாங்குவதுபோன்றிருந்து வந்துழி அறவெறிவிப்பதாய பட்டடைக்கும் அத்தன்மைத்தாய நட்பிற்குந் தொழிலொப்புமையுண்மையான், அதுபற்றி அந்நட்பினைப் பட்டடையாகவுபசரித்தார். சீர்விடமென்றுபாடமோதி முடிவிடமென்றுரைப்பாருமுளர். (க)

அஉஉ. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். உ.

இ - ள். இனம்போன்று இனமல்லார் கேண்மை - தமக்குற்றார்போன்று உறாதாரோடு உளதாய நட்பு—மகளிர் மனம்போல வேறுபடும் - இடம்பெற்றாற் பெண்பாலார்மனம்போல வேறுபடும். எ - று.

அவர்மனம் வேறுபடுதல் "பெண்மனம் பேதின் றொருப்படுப்பேனென்னு—மெண்ணி லொருவன்*" என்பதனானுமறிக. நட்பு வேறுபடுதலாவது பழையபகையேயாதல். இவையிரண்டுபாட்டானும் கூடாநட்பினது குற்றங் கூறப்பட்டது. (௨)

அ௨௩. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணார்க் கரிது. ௩.

இ - ள். நல்ல பல கற்றக்கடைத்தும் - நல்லன பலநூல்களைக்கற்றவிடத்தும்—மனம் நல்லர் ஆகுதல் மாணார்க்கு அரிது - அதனான் மனந்திருந்தி நட்பாதல் பகைவர்க்கில்லை. எ - று.

நல்லன மனக்குற்றங்கெடுப்பன. மனநல்லரெனச் சினைவினை முதன்மேனின்றது. நல்லராகுதல் செற்றம் விடுதல். உள்ளே செற்றமுடையாரைக் கல்வியுடைமை பற்றி நட்பென்று கருதற்க வென்பதாம். (௩)

அ௨௪. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும். ௪.

இ - ள். முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்னா வஞ்சரை - கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து எப்பொழுதும் மனத்தாலின்னாராய வஞ்சரை—அஞ்சப்படும் - அஞ்சல்வேண்டும். எ - று.

நகையது வகைபற்றி இனியவென்றும், அகத்துச் செற்றம் நிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்து விளைத்தலின் வஞ்சரென்றும், அச்செற்றங் குறிப்பறிதற் கருவியாய முகத்தானுந் தோன்றாமையின் அஞ்சுதல் செய்யப்படுமென்றுங் கூறினார். இவையிரண்டுபாட்டானுங் குற்றத்திற்கேதுவாய அவர்கொடுமை கூறப்பட்டது. (௪)

அ௨௫. மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று. ௫.

இ - ள். மனத்தின் அமையாதவரை - மனத்தாற் றம்மொடு மேவாதாரை—எனைத்தொன்றும் சொல்லினால் தேறற்பாற்று அன்று - யாதொரு கருமத்தினுஞ் சொல்லாற் றெளிதன்முறைமைத் தன்று நீதிநூல். எ - று.

நீதிநூலென்பது அவாய்நிலையான் வந்தது. பகைமைமறைத்தற்பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச்சொல்லைச் செவ்விய சொல்லெனக்கருதி அவரைக்கருமங்களிற்றெளிதல் நீதிநூன்முறைமையன்றென்பதாம். (௫)

அ௨௬. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும். ௬.

இ - ள். நட்டார்போல் நல்லவை சொல்லினும் - நட்டார்போன்று நன்மைபயக்குஞ் சொற்களைச் சொன்னாராயினும்,—ஒட்டார் சொல் ஒல்லை உணரப்படும் - பகைவர் சொற்கள் அது பயவாமை அச்சொல்லியபொழுதே யறியப்படும். எ - று.

சொல்லினுமெனவே, சொல்லாமையே பெற்றும். ஒட்டாராதலாற் றீமைபயத்தல் ஒருதலையென்பார், ஒல்லையுணரப்படுமென்றார். (௬)

* வளையாபதி.

அஉஎ. சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான். எ.

இ - ள். வில்வணக்கம் தீங்கு குறித்தமையான் - வில்லினது வணக்கம் ஏற்றவர்க்குத் தீமைசெய்தலைக் குறித்தமையால்,—ஒன்னார்கண் சொல்வணக்கம் கொள்ளற்க - பகைவர்மாட்டுப் பிறக்குஞ் சொல்லினது வணக்கத்தையும் தமக்கு நன்மை செய்தலைக்குறித்ததென்று கருதற்க. எ - று.

தம்வணக்கமன்றென்பது தோன்றச் சொல்வணக்கமென்றும், வில்வணக்கம் வேறாயினும் வணங்குதலொப்புமைபற்றி அதன்குறிப்பையேதுவாக்கியுங் கூறினார். வில்லியது குறிப்பு அவனுடைய வில்வணக்கத்தின்மேனிற்றலான், ஒன்னாரது குறிப்பும் அவருடைய சொல்வணக்கத்தின்மேலதாயிற்று. இதுவுந் தீங்குகுறித்த வணக்கமென்றேகொண்டு அஞ்சிக்காக்க வென்பதாம். இவைமூன்றுபாட்டானும் அவரைச் சொல்லாற்றெளியற்கவென்பது கூறப்பட்டது. (எ)

அஉஅ. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுதகண் ணீரு மனைத்து. அ.

இ - ள். ஒன்னார் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் - ஒன்னார் குறிப்பையுணரவல்லார்க்கு அவர் தொழுத கையகத்தும் படைக்கலம் மறைந்திருக்கும்;—அழுத கண்ணீரும் அனைத்து - அவரழுதகண்ணீரும் அவ்வாறே அதுமறைந்திருத்தற்கிடனாம். எ - று.

தாநட்பென்பதனைத் தங்கையானுங் கண்ணானுந் தேற்றிப் பின் கோறற்கு வாங்கவிருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித் தேற்றுகின்றபொழுதே அவற்றுள்ளே தோன்றுமென்பார், ஒடுங்குமென்றார். பகைவர் தம்மென்மைகாட்டித் தொழினுமழினும், அவர் குறிப்பையே நோக்கிக் காக்கவென்பதாம். இதனால் அவரைச் செயலாற்றெளியற்கவென்பது கூறப்பட்டது. (அ)

அஉ௯. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று. ௯.

இ - ள். மிகச் செய்து தம் எள்ளுவாரை - பகைமை தோன்றாமற் புறத்தின்கண் நட்பினை மிகச்செய்து அகத்தின்கட் டம்மையிகழும் பகைவரை—நட்பினுள் நகச் செய்து சாப் புல்லற்பாற்று - தாமும் அந்நட்பின்கண்ணே நின்று புறத்தின்கண் அவர் மகிழும் வண்ணஞ்செய்து அகத்தின்கண் அதுசாம்வண்ணம் பொருந்தற்பான்மையுடைத்து அரசநீதி. எ - று.

நின்றென்பதூஉம் அரசநீதியென்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. அகனொன்று புறனொன்றாதல் ஒருவற்குத் தகாதெனினும் பகைவர்மாட்டாயிற் றகுமென்பது நீதிநூற்றுணிபென்பார், அதன்மேல்வைத்துக் கூறினார். சாவவென்பதனிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது, "கோட்டின்வாய்ச்சாக்குத்தி*" என்புழிப்போல. எள்ளுவாரைப் புல்லலெனக் கூட்டுக. (௯)

அ௩0. பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல். ௧0.

* கலி, முல்லை, ௫.

இ - ள். பகை நட்பாம் காலம் வருங்கால் - தம்பகைவர் தமக்கு நட்டாரா யொழுகுங்காலம் வந்தால்,—முகம் நட்டு அகம் நட்பு ஒரீஇ விடல் - தாமும் அவரோடு முகத்தால் நட்புச்செய்து அகத்தால் அதனைவிட்டுப் பின்னதுவுந்தவிர்க. எ - று.

அக்காலமாவது தம்மானும் பகையென்று வெளிப்பட நீக்கலாகாதவளவு. இதனானே ஆமளவெல்லாம் நீக்குகவென்பது பெற்றும். இவையிரண்டுபாட்டானும் அந்நட்பிடையொழுகுமாறு கூறப்பட்டது. (௧0)

அசும் அதி.—பேதைமை.

இனி அந்நட்பினை யெதிர்மறுத்துப் பகைமுகத்தாற் கூறியதொடங்கினர். அப்பகைதான் முற்றக்கடியுங்குற்றமன்மையினுளவாய வெகுளியானுங் காமத்தானும் வருவதாம். அவற்றுள் வெகுளியான் வருவன ஐந்ததிகாரத்தானும் காமத்தான் வருவன ஐந்ததிகாரத்தானுங் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இருவகைப்படுத்து, இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட்பேதைமை கூறுகின்றார். அஃதாவது யாதுமறியாமை.

அ௩௧. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல். ௧.

இ - ள். பேதைமை என்பது ஒன்று - பேதைமையென்று சொல்லப்படுவது ஒருவனுக்கு ஏனைக்குற்றங்களெல்லாவற்றினும் மிக்கதொன்று;—யாது எனின் ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல் - அதுதான் யாதென்று வினவின், தனக்குக்கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல். எ - று.

கேடு வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம் செல்வம், புகழ், அறங்கள். தானே தன்னிருமையுங் கெடுத்துக்கோடலென்பதாம். (௧)

அ௩௨. பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல். ௨.

இ - ள். பேதைமையுள் எல்லாம் பேதைமை - ஒருவனுக்குப் பேதைமையெல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது—கையல்லதன்கண் காதன்மைசெயல் - தனக்காகாத ஒழுக்கத்தின்கட் காதன்மை செய்தல். எ - று.

இருமைக்கும் ஆகாவென்று நூலோர் கடிந்த செயல்களை விரும்பிச் செய்தலென்பதாம். இவையிரண்டுபாட்டானும் பேதைமையதிலக்கணங் கூறப்பட்டது. (௨)

அ௩௩. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். ௩.

இ - ள். நாணாமை - நாணவேண்டுமவற்றுக்கு நாணாமையும்—நாடாமை - நாடவேண்டுமவற்றை நாடாமையும்—நார் இன்மை - யாவர்மாட்டும் முறிந்தசொற்செயலுடைமையும்—யாதொன்றும் பேணாமை - பேணவேண்டுமவற்றுள் யாதொன்றனையும் பேணாமையும்—பேதை தொழில் - பேதையது தொழில். எ - று.

நாணவேண்டுமவை பழி பாவங்கள். நாடவேண்டுமவை கருமங்களிற்செய்வன தவிர்வன. முறிதல் கண்ணறுதல். பேணவேண்டுமவை குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்க முதலாயின. இவை பேதைக்கு எஞ்ஞான்றுமியல்பாய் வருதலின், தொழிலென்றார்.()

அ௩௪. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். ௪.

இ - ள். ஓதி - மனமொழிமெய்களடங்குதற்கேதுவாய நூல்களை யோதியும்,—உணர்ந்தும் - அவ்வடக்கத்தான் வரும் பயனையுணர்ந்தும்,—பிறர்க்கு உரைத்தும் - அதனையறியலுறப் பிறர்க்குரைத்தும்,—தான் அடங்காப் பேதையின் - தான் அவை யடங்கி யொழுகாத பேதைபோல—பேதையார் இல் - பேதையார் உலகத் தில்லை. எ - று.

உம்மை முன்னுங் கூட்டப்பட்டது. இப்பேதைமை தனக்கு மருந்தாய இவற்றாற் றீராமையானும், வேற்றுமருந்தின்மையானும், பேதையிற்பேதையாரில்லென்றார். இவையிரண்டுபாட்டானும் பேதையது தொழில் பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப. (௪)

அ௩௫. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு. ௫.

இ - ள். பேதை - பேதையாயினான்—எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு - வரும்பிறவிகளெல்லாந் தான்புக்கழுந்தும் நிரயத்தினை—ஒருமைச் செயல் ஆற்றும் - இவ்வொருபிறப்புள்ளே செய்துகொள்ள வல்லனாம். எ - று.

எல்லாப்பிறப்பும் ஏழாயடங்குதல் அறியப்பட்டமையின், முற்றும்மை கொடுத்தார். அழுந்துதற்கிடனாய நிரயம். ஈண்டைப்பிறப்புக்களினுங் கொடுவினைவயத்தால் அந்நிரயத்துன்பமேயுழந்துவருதலின், எழுமையுந் தான் புக்கழுந்து மளறென்றார். முடிவில்காலமெல்லாம் தான் நிரயத்துன்பமுழத்தற்கேதுவாங் கொடுவினைகளையே யறிந்து சிலகாலத்துள்ளே செய்துகோடல் பிறர்க்கரிதாகலின், ஆற்றுமென்றார். இத னான் அவன் மறுமைச்செயல் கூறப்பட்டது. (௫)

அ௩௬. பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். ௬.

இ - ள். கை அறியாப் பேதை வினைமேற்கொளின் - செய்யுமுறைமை யறியாத பேதை ஒருகருமத்தை மேற்கொள்வனாயின்,—பொய்படும் ஒன்றோ புனைபூணும் - அது வும் புரைபடும், தானுந் தளைபூணும். எ - று.

புரைபடுதல் பின் ஆகாவகை உள்ளழிதல். ஒன்றோவென்பது எண்ணிடைச் சொல். அதனையுங்கெடுத்துத் தானுங்கெடுமென்பதாம். இதனான் அவன் செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது. (௬)

அ௩௭. ஏதிலா ரார்த் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை. ௭.

இ - ள். பேதை பெருஞ் செல்வம் உற்றக்கடை - பேதையாயினான் பெரிய செல் வத்தைத் தெய்வத்தானெய்தியவழி,—ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் - தன்னோடோரி யைபுமில்லாதார் நிறைய, எல்லாவியைபுமுடைய தமராயினார் பசியாநிற்பர். எ - று.

எல்லா நன்மையுஞ்செய்து கோடற்கருவியென்பது தோன்றப்பெருஞ்செல்வ மென்றும், அதனைப் படைக்குமாற்றலில்லாமைதோன்ற உற்றக்கடையென்றும், எல்

லாம் பெறுதரேன்ற ஆரவென்றும், உணவும்பெருமை தோன்றப் பசிப்பரென்றுங் கூறினார். (எ)

அருஅ. மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின். அ.

இ - ள். பேதை தன்கை ஒன்று உடைமை பெறின் - பேதையாயினான் தன்கைக்கண்ணே ஒன்றனையுடைமையாகப் பெற்றானாயின்,—மையல் ஒருவன் களித்தற்று - அவன் மயங்குதல் முன்னே பித்தினையுடையானொருவன் அம்மயக்கத்தின்மேலே மதுவுண்டு மயங்கினாற்போலும். எ - று.

பெறினெனவே, தெய்வத்தானன்றித் தன்னாற்பெறுமை பெற்றும். பேதைமையுஞ் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால் அவன் செய்வினை மையலும் மதுக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோற் றலைதடுமாறுமென்பதாம். இவையிரண்டுபாட்டானும் அவன் செல்வமெய்தியவழிப் பயன்கொள்ளுமாறு கூறப்பட்டது. (அ)

அருகூ. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில். கூ.

இ - ள். பிரிவின்கண் தருவது பீழை ஒன்று இல் - பின் பிரிவுவந்துழி அஃதிருவர்க்குந் தருவதொருதுன்பமில்லை;—பேதையார் கேண்மை பெரிது இனிது - ஆகலாற் பேதையாயினார் தம்முட்கொண்ட நட்பு மிகவினிது. எ - று.

நாடோறுந் தேய்ந்து வருதலின், துன்பந்தாராதாயிற்று. புகழ்வார்போன்று பழித்தவாறு. இதனால் அவரது நட்பின்குற்றங் கூறப்பட்டது. (கூ)

அசுO. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். கO.

இ - ள். சான்றோர் குழாத்துப் பேதை புகல் - சான்றோரவையின்கட் பேதையாயினான் புகுதல்—கழாக்கால் பள்ளியுள் வைத்தற்று - தூயவல்ல மிதித்தகாலை இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற்போலும். எ - று.

கழுவாக்காலென்பது இடக்கரடக்கு. அதனால் அவ்வமளியும் இழிக்கப்படுமாறுபோல இவனால் அவ்வவையும் இழிக்கப்படு மென்பதாம். இதனால் அவன் அவையிடை இருக்குமாறு கூறப்பட்டது. (கO)

அரு ம் அதி.—புல்லறிவாண்மை.

இனி ஏனைப்புல்லறிவாண்மை கூறுகின்றார். அது புல்லிய வறிவினையாடற்றன்மையென விரியும். அஃதாவது தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப்பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொற்கொள்ளாமை.

அசுக. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு. க.

இ - ள். இன்மையுள் இன்மை அறிவின்மை - ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்கவில்லாமையாவது அறிவில்லாமை;—பிறிதின்மை இன்மையா வையாது

உலகு - மற்றைப்பொருளில்லாமையோவெனின், அதனை அப்பெற்றித்தாய இல்லாமையாகக் கொள்ளார் உலகத்தார். எ - று.

அறிவென்பது ஈண்டுத் தலைமைபற்றி நல்லறிவின்மேனின்றது. புல்லறிவாளர் செல்வமெய்தியவழியும் இம்மைமறுமைப்பய னெய்தாமையின் அதனை இன்மையுளின்மையென்றும், நல்லறிவாளர் வறுமையெய்தியவழியும் அஃதிழவாமையின் அதனை இன்மையா வையாதென்றுங் கூறினர். இதனாற் புல்லறிவினது குற்றங் கூறப்பட்டது. (க)

அசஉ. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம். உ.

இ - ள். அறிவிலான் நெஞ்சு உவந்து ஈதல் - புல்லறிவுடையான் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின், —பெறுவான் தவம் பிறிது யாதும் இல்லை - அதற்குக் காரணம் பெறுகின்றவனல்வினையே, வேறொன்று மில்லை. எ - று.

ஒரோவழி நெஞ்சுவந்தீதல்கூடலிற் புல்லறிவாளரும் நல்வினைசெய்ப என்பார்க்குப், பெறுவான் வீழ்பொருளெய்தியான்போல்வதல்லது இம்மை நோக்கியாக மறுமை நோக்கியாக ஈகின்றாரல்லரெனக் கூறியவாறு. கூடிற்றாயின் அதற்குக்காரண மென்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன. இதனால் அஃதுடையார் தம்மாட்டு நல்லன செய்தலறியாமை கூறப்பட்டது. (உ)

அசங. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது. ங.

இ - ள். அறிவிலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை - புல்லறிவுடையார் தாமே தம்மை வருத்தும் வருத்தம்—செறுவார்க்கும் செய்தல் அரிது - அதுசெய்தற்குரியராய தம்பகைவர்க்குஞ் செய்தலரிது. எ - று.

பகைவர் தாம் அறிந்ததொன்றனைக் காலம் பார்த்திருந்து செய்வதல்லது வறுமை, பழி, பாவமுதலிய பலவற்றையும் எக்காலத்துஞ் செய்யமாட்டாமையின், அவர்க்குஞ் செய்தலரிதென்றார். இதனால் அவர் தம்மாட்டுந் தீயன செய்தலறிவரென்பது கூறப்பட்டது. (ங)

அசச. வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு. ச.

இ - ள். வெண்மை எனப்படுவது யாது எனின் - புல்லறிவுடைமையென்று சொல்லப்படுவது யாதென்று வினவின், —யாம் ஒண்மை உடையம் என்னும் செருக்கு - அது தம்மைத்தாமே யாம்நல்லறிவுடையமென்று நன்குமதிக்கும் மயக்கம். எ - று.

வெண்மையாவது அறிவுமுதிராமை. ஒண்மையெனக் காரியப்பெயர் காரணத்திற்காயிற்று. உலகத்தாரிகழ்தல் அறிந்துவைத்தும் அவ்வாறு மதித்தலான், மயக்கமென்றார். (ச)

அசரு. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும். ரு.

இ - ள். கல்லாத மேற்கொண்டு ஒழுகல் - புல்லறிவாளர் தாங் கல்லாத நூல்களையுங் கற்றாராகத் தாம் மேலிட்டுக்கொண்டு ஒழுகுதல், —கசடு அற வல்லதூஉம்

ஐயம் தரும் - கசடறக் கற்றதொரு நூலுண்டாயின், அதன் கண்ணும் பிறர்க்கையத்தை விளைக்கும். எ - று.

வல்லதென ஏழாவது இறுதிக்கட்டொக்கது. உண்டாயினென்பது அவாய்நிலையான் வந்தது. ஐயம் அது வல்லரென்பதூஉம் இவ்வாறுகொல்லோவென்பது. (ரு)

அசசு. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி. சு.

இ - ள். தம் வயின் குற்றம் மறையாவழி - புல்லறிவாளர் தங்கணிகழுங் குற்றங்களையறிந்து கடியாராயின்,—அற்றம் மறைத்தலோ புல்லறிவு - ஆடையால் அற்ற மறைத்தாராகத் தம்மைக் கருதுதலும் புல்லறிவாம். எ - று.

குற்றமறைத்தலாவது அவற்றை இலவாக்குதல். மறைக்கப்படுவன பலவற்றுள்ளும் உயர்ந்தவற்றையெல்லாம் மறையாது தாழ்ந்ததொன்றனையே மறைத்து அவ்வளவாற் றம்மையு முலகவொழுக்கினராக மதித்தலும் புல்லறிவென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அவர் தம்மை வியத்தற்குற்றங் கூறப்பட்டது. (சு)

அசஎ. அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. எ.

இ - ள். அருமறை சோரும் அறிவிலான் - பெறுதற்கரிய உபதேசப்பொருளைப் பெற்றும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன்—தானே தனக்குப் பெருமிறை செய்யும் - அவ்வுறுதி யறியாமையாற் றானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்துகொள்ளும். எ - று.

சோருமென இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது. மிக்க வருத்தம் பொறுத்தற்கரிய துன்பங்கள். இனி அருமறைசோரு மென்பதற்குப் பிறரெல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண்ணத்தை வாய்சோர்ந்து பிறர்க்குரைக்குமென்றுரைத்தார்; அது பேணாமை யென்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மையன்மையறிக. (எ)

அசஅ. ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். அ.

இ - ள். ஏவவும் செய்கலான் - புல்லறிவாளன் தனக்குறுதியாயவற்றை அறிவுடையார் சொல்லாநிற்கவுஞ் செய்யான்,—தான் தேறான் - அதுவன்றித் தானுகவும் இவை செய்வனவென்றறியான்,—அவ்வுயிர் போமளவும் ஓர் நோய் - அவ்வுயிர் யாக்கையினீங்குமளவும் நிலத்திற்குப் பொறுத்தற்கரியதொரு நோயாம். எ - று.

உயிர் தான் உணர்தற்றன்மைத்தாயிருந்தும் நின்ற யாக்கைவயத்தான் மருடற்றன்மைத்தாய் வேறுபடுதலின் அவ்வுயிரென்றும், அதனினீங்கியபொழுதே அதற்கு இரண்டனுளொன்று கூடுதலிற் போமளவுமென்றும், குலமலைமுதலிய பொறுக்கின்ற நிலத்திற்குப் பாவயாக்கை பெரும்பொறையாய்த் துன்பஞ்செய்தலின் ஒருநோயென்றுங்கூறினார். (அ)

அசகூ. காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு. கூ.

இ - ள். காணுதாற் காட்டுவான் தான் காணுன் - தன்னை எல்லாமறிந்தானுக மதித்தலாற் பிறரால் ஒன்றறியுந் தன்மையிலாதானை அறிவிக்கப்புகுவான் அவனுற் பழிக்கப்பட்டுத் தான் அறியானுய் முடியும்;—காணுதான் தான் கண்டவாறு கண்டானும் - இனி அவ்வறியுந்தன்மையில்லாதான் கொண்டது விடாமையாற் ருனறிந்த வாற்ருல் அதனை அறிந்தானுய் முடியும். எ - று.

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்ருனும் இயைவதன்றென்பதாம். (கூ)

அருO. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும். கO.

இ - ள். உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் - உயர்ந்தோர் பலரும் உண்டென்பதோர் பொருளைத் தன் புல்லறிவானில்லையென்று சொல்லுவான்—வையத்து அலகையா வைக்கப்படும் - மகனென்று கருதப்பட்டான், வையத்துக் காணப்படுவதோர் பேயென்று கருதப்படும். எ - று.

கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் முதலாக அவர் உளவென்பன பலவேனுஞ் சாதிபற்றி உண்டென்பதென்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும் வடிவால் ஒவ்வாமையுமுடைமையிற் றன்யாக்கை கரந்து மக்கள்யாக்கையுட் டோன்றுதல்வல்ல அலகையென்றுங் கூறினர். இவை நான்குபாட்டானும் உறுதிச்சொற் கொள்ளாமையது குற்றங் கூறப்பட்டது. (கO)

அசுஎம் அதி.—இகல்.

இனி அவற்ருன் வரும் வெகுளி காமங்களுள் அரசர்க்கு வெகுளி பெரும்பான்மைத்தாகலின், அதனுன் வருவன கூறுவான் ருெடங்கி, முதற்கண் இகல் கூறுகின்ருர். அஃதாவது இருவர் தம்முட் பொருது வலிதொலைதற்கேதுவாய மாறுபாடு.

அருக. இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய். க.

இ - ள். எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பு இன்மை பாரிக்கும் நோய் - எல்லாவுயிர்கட்கும் பிறவுயிர்களோடு கூடாமையென்னுந் தீக்குணத்தை வளர்க்குங் குற்றம்—இகல் என்ப - இகலென்று சொல்லுவர் நூலோர். எ - று.

மக்களையும் விலங்குகளோடொப்பிப்பதென்பது தோன்ற எல்லாவுயிர்க்குமென்றும், பகுதிக்குணத்தை இடைநின்று விளைத்தலிற் பகலென்னும் பண்பின்மையென்றுங் கூறினர். நற்குணமின்மை அருத்தாபத்தியாற் றீக்குணமாயிற்று. இதனுல் இகலது குற்றங் கூறப்பட்டது. (க)

அருஉ. பகல்கருதிப் பற்ருு செயினு மிகல்கருதி
யின்னுசெய் யாமை தலை. உ.

இ - ள். பகல் கருதிப் பற்ருு செயினும் - தம்மொடு கூடாமையைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தானாயினும்,—இகல் கருதி இன்னு செய்யாமை தலை - அவனொடு மாறுபடுதலைக் குறித்துத் தாமவனுக்கு இன்னுதவற்றைச் செய்யாமை உயர்ந்தது. எ - று.

செய்யிற் பகைமைவளரத் தாந்தாழ்ந்துவரலானும், ஒழியின் அப்பற்றுதன தாமே யோய்ந்துபோகத் தாம் ஓங்கிவரலானும், செய்யாமை தலையென்றார். பற்றுதவென்பது விகாரமாயிற்று. (உ)

அருந. இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும். ந.

இ - ள். இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின் - மாறுபாடென்று சொல்லப் படுகின்ற துன்பத்தைச்செய்யு நோயை ஒருவன் தன்மனத்தினின்று நீக்குமாயின்,— தவல் இல்லாத் தாவில் விளக்கம் தரும் - அவனுக்கு அந்நீக்குதல் எஞ்ஞான்றும் உள ளுதற் கேதுவாய புகழைக் கொடுக்கும். எ - று.

தவலில்லாமை அருத்தாபத்தியான் அப்பொருட்டாயிற்று. தாவில்விளக்கம் வெளிப்படை. யாவருநண்பராவர், ஆகவே எல்லாச்செல்வமுமெய்திக் கொடை முதலிய காரணங்களாற் புகழ்பெறுமென்பதாம். (ந)

அருச. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். ச.

இ - ள். இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - மாறுபாடென்று சொல்லப்படுகின்ற துன்பங்களெல்லாவற்றினும் மிக்க துன்பம் ஒருவனுக்கில்லையா யின்,—இன்பத்துள் இன்பம் பயக்கும் - அவ்வின்மை அவனுக்கு இன்பங்களெல்லா வற்றினும் மிக்கவின்பத்தினைக் கொடுக்கும். எ - று.

துன்பத்துட்டுன்பம் பலரொடு பொருது வலிதொலைதலான் யாவர்க்குமெளி யனாயுறுவது. அதனை இடையின்றியே பயத்தலின், இகலென்னுமென்றார். இன்பத் துளின்பம் யாவருநட்பாகலின் எல்லாப்பயனுமெய்தியுறுவது. (ச)

அருரு. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். ரு.

இ - ள். இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை - தம்முள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனையேற்றுக்கொள்ளாது சாய்ந்தொழுகவல்லாரை,—மிகல் ஊக் கும் தன்மையவர் யார் - வெல்லக்கருதுந்தன்மையுடையார் யாவர்! எ - று.

இகலையொழிந்தொழுகல் வேந்தர்க்கு எவ்வாற்றானும் அரிதாகலின் வல்லாரை யென்றும், யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருதுவார் யாவருமில்லை யென்றுங் கூறினார். இவை நான்குபாட்டானும் இகலாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது. (ரு)

அருசு. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து. சு.

இ - ள். இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை - பிறரொடு மாறுபடுதற் கண் மிகுதல் எனக்கு இனிதென்று அதனைச் செய்வானது உயிர்வாழ்க்கை—தவ லும் கெடலும் நணித்து - பிழைத்தலும் முற்றக்கெடுதலுஞ் சிறிதுபொழுதுள் உள வாம். எ - று.

மிகுதல் மேன்மேலூக்குதல். இனிதென்பது தான் வேறல்குறித்தல். பிழைத்தல் வறுமையானின்னுதாதல். முற்றக்கெடுதல் இறத்தல். இவற்றோடு நணித்தென்பதனைத்

தனித்தனிகூட்டி, உம்மைகளை எதிரதும் இறந்ததுந் தழீஇய வெச்சவும்மைகளாகவுரைக்க. பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதேயுளவாமென்பதாம். (சு)

அருஎ. மிகன்மேவன் மெய்ப்பொருள் காணா ரிகன்மேவ
லின்னா வறிவி னவர். எ.

இ - ள். இகல் மேவல் இன்னா அறிவினவர் - இகலோடு மேவுதலையுடைய இன்னாதவறிவினையுடையார்—மிகல் மேவல் மெய்ப்பொருள் காணார் - வெற்றி பொருந்துதலையுடைய நீதிநூற்பொருளை யறியமாட்டார். எ - று.

இன்னாவறிவு தமக்கும் பிறர்க்குந் தீங்கு பயக்குமறிவு. வெற்றி வழிநின்றார்க்கு உளதாவது. காணப்படும்பயத்ததாகலின், மெய்ந்நூலெனப்பட்டது. இகலால் அறிவு கலங்குதலின், காணாரென்றார். இவையிரண்டுபாட்டானும் இகலினார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது. (எ)

அருஅ. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு. அ.

இ - ள். இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம் - தன்னுள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை யெதிர்தலையொழிதல் ஒருவனுக்கு ஆக்கமாம்;—அதனை மிகல் ஊக்கின் கேடு ஊக்குமாம் - அது செய்யாது அதன்கண்மிகுதலை மேற்கொள்வானாயிற் கேடுந் தன்கண் வருதலை மேற்கொள்ளும். எ - று.

எதிர்தல் ஏற்றுக்கோடல். சாய்ந்தபொழுதே வருதலின், சாய்தல் ஆக்கமென்றார். இகலிற்கெனவும் அதனையெனவும் வந்தன வேற்றுமைமயக்கம். (அ)

அருகூ. இகல்காணா னாக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு. கூ.

இ - ள். ஆக்கம் வருங்கால் இகல் காணான் - ஒருவன் தன்கணாக்கம் வரும்வழிக் காரணமுண்டாயினும் இகலை நினையான்,—கேடு தரற்கு அதனை மிகல் காணும் - தனக்குக் கேடுசெய்து கோடற்கட் காரணமின்றியும் அதன்கண் மிகுதலை நினைக்கும். எ - று.

இகலான் வருங்கேடு பிறரானன்றென்பது தோன்றத் தரற்கென்றார். நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வந்தன. ஆக்கக்கேடுகட்கு முன்னடப்பன இகலினது இன்மை உண்மைகளென்பதாம். (கூ)

அசுo. இகலானா மின்னாத வெல்லா நகலானா
நன்னய மென்னுஞ் செருக்கு. கo.

இ - ள். இகலான் இன்னாத எல்லாம் ஆம் - ஒருவனுக்கு மாறுபாடொன்றானே இன்னாதனவெல்லாம் உளவாம்;—நகலான் நன்னயம் என்னும் செருக்கு ஆம் - நட்பொன்றானே நல்ல நீதியென்னும் பெருஞ்செல்வம் உளதாம். எ - று.

இன்னாதன வறுமை, பழி, பாவமுதலாயின. நகல் மகிழ்தல். நகலென்பதூஉஞ் செருக்கென்பதூஉம் தத்தங்காரணங்கட்காயின. நயமென்னுஞ் செருக்கெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். இவைமூன்றுபாட்டானும் அவ்விருமையுங் கூறப்பட்டன. (கo)

அஎம் அதி.—பகைமாட்சி.

அஃதாவது அறிவின்மை முதலிய குற்றங்களுடைமையாற் பகையை மாட்சிப் படுத்தல். அரசர்க்கு எவ்வாற்றானும் பகையின்மை கூடாமையின் மேற்பொதுவகையான் விலக்கப்பட்ட இகலை ஈண்டுச் சிறப்புவகையான் விதிக்கின்றாராகலின், இஃததன்பின் வைக்கப்பட்டது.

அசுக. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை. க.

இ - ள். வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக - தம்மின்வலியார்க்குப் பகையாயெதிர்தலை ஒழிக;—மெலியார்மேல் பகை ஓம்பா மேக - ஏனை மெலியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்புக. எ - று.

வலியாரென்புழித் துணைவலியு மடங்கலின், மெலியாரென்புழித் துணைவலி யின்மையுங் கொள்ளப்படும். அத்துணைதான் படை பொருண்முதலிய வேற்றுமைத்துணையும் நல்லறிவுடைமை நீதிநூல்வழியொழுகன் முதலிய ஒற்றுமைத்துணையுமென விரண்டாம். அவ்விரண்டுமில்லாரை வெல்வார்க்கு வலிதொலையாமையின் அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. சிங்கநோக்காகிய இதனுட் பகைமாட்சி பொதுவகையாற் கூறப்பட்டது. (க)

அசுஉ. அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு. உ.

இ - ள். அன்பு இலன் - ஒருவன் தன்சுற்றத்தின்மேலன்பிலன்,—ஆன்ற துணை இலன் - அதுவேயன்றி வலிய துணையிலன்,—தான் துவ்வான் - அதன்மேற் றான்வலியிலன்,—ஏதிலான் துப்பு என் பரியும் - அப்பெற்றியான் மேல்வந்த பகைவன் வலியினை யாங்ஙனந்தொலைக்கும்! எ - று.

சுற்றமும் இருவகைத்துணையும் தன்வலியுமிலனாகலின், அவன்மேற் செல்வார்க்கு வலி வளர்வதன்றித் தொலையாதென்பதாம். துவ்வான் துவ்வினைச் செய்யான். (உ)

அசுங. அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு. ங.

இ - ள். அஞ்சும் - ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சாநிற்கும்,—அறியான் - அறியவேண்டுமவற்றை யறியான்,—அமைவு இலன் - பிறரோடு பொருத்தமிலன்,—ஈகலான் - இவற்றின்மேலும் யாவர்மாட்டும் இவறன்மாலையன்,—பகைக்குத் தஞ்ச மெளியன் - இப்பெற்றியான் பகைவர்க்கு மிகவெளியன். எ - று.

தஞ்சமெளியனென்பன ஒருபொருட்பன்மொழி*. இந்நான்கு குற்றமுமுடையான் பகையின்றியுமழியுமாகலின், தஞ்சமெளியனென்றார். (ங)

அசுச. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது. ச.

இ - ள். வெகுளி நீங்கான் - ஒருவன் வெகுளியினீங்கான்,—நிறை இலன் - அதுவேயன்றித் தான் நிறையுடையனல்லன்,—எஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கும் எளிது - அவன்மேற்சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்கு மெளிது. எ - று.

* தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே. தொல்காப்பியம், சொல், உகசு.

* நிறை மறைபிறரறியாமை. வெகுடன்மாலையனாகலானும், மறை வெளிப்படுத்தலானும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியுமறிந்து சேறல்வேண்டாதாயிற்று. இனி இனிதென்று பாடமோதி அவன்பகைமை இனிதென்றுரைப்பாருமுளர்.

அசுரு. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது. ரு.

இ - ள். வழி நோக்கான் - ஒருவன் நீதிநூலையோதான்,—வாய்ப்பன செய்யான் - அது விதித்ததொழில்களைச் செய்யான்,—பழி நோக்கான் - தனக்கு வரும் பழியைப் பாரான்,—பண்பு இலன் - தான் பண்புடையனல்லன்,—பற்றார்க்கு இனிது - அவன் பகைவர்க்கு அப்பகைமையினிது. எ - று.

தொல்லோரடிப்பட வழங்கிவந்ததாகலான் வழியென்றும், தப்பாது பயன்படுதலின் வாய்ப்பனவென்றும், இக்குற்றங்களுடையான் றானேயழிதலிற் பற்றார்க்கினிதென்றுங் கூறினார். (ரு)

அசுசு. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். சு.

இ - ள். காணாச் சினத்தான் - தன்னையும் பிறரையுந் தானறியாமைக்கேதுவாகிய வெகுளியையுடையான் யாவன்,—கழி பெருங்காமத்தான் - மேன்மேல் வளரா நின்ற மிக்க காமத்தையுடையான் யாவன்,—பேணாமை பேணப்படும் - அவரது பகைமை விரும்பிக் கொள்ளப்படும். எ - று.

காணாதசினமென்பது விகாரமாயிற்று. முன்னோனுக்கு யாவரும் பகையாகலானும், ஏனோனுக்குக் காரியந் தோன்றாமையானும், தாமே யழிவரென்பது பற்றி, இவர் பேணாமை பேணப்படுமென்றார். (சு)

அசுஎ. கொடுத்துங் கொளல் வேண்டுமன்ற வடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. எ.

இ - ள். அடுத்து இருந்து மாணாத செய்வான் பகை - வினையைத் தொடங்கியிருந்து அதற்கேலாதன செய்வான் பகைமையை—கொடுத்தும் கொளல் மன்ற வேண்டும் - சிலபொருளழியக்கொடுத்தாயினுங் கோடல் ஒருதலையாகவேண்டும். எ - று.

ஏலாதன மெலியனாய்வைத்துத் துணிதலும், வலியனாய்வைத்துத் தணிதலும் முதலாயின. அப்பொழுது அதனாற் சிலபொருளழியினும் பின் பலபொருளெய்தற்கு ஐயமின்மையின், கொளல் வேண்டுமன்றவென்றார். இவையாறுபாட்டானும் அது சிறப்புவகையாற் கூறப்பட்டது. (எ)

அசுஅ. குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனா மேமாப் புடைத்து. அ.

இ - ள். குணன் இலனாய்க் குற்றம் பலவாயின் இனன் இலனாம் - ஒருவன் குணனொன்றுமிலனாய் உடைய குற்றம் பலவாயவழி, அவன் துணையிலனாம்;—மாற்றார்க்கு ஏமாப்பு உடைத்து - அவ்விலனாதறானே அவன்பகைவர்க்குத் துணையாதலையுடைத்து. எ - று.

* நிறையெனப்படுவது மறைபிறரறியாமை. கலி, நெய்தல், கசு.

குணம் இறைமாட்சியுட்சொல்லியன. குற்றம் இவ்வதிகாரத்துச் சொல்லியன வும் மற்றுமத்தன்மையனவும். துணை சுற்றம், நட்பு, பொருள், படைமுதலாயின. பகைவர்க்கு இவற்ருனுளதாம் பயன்ருனே யுளதாமாகலின், ஏமாப்புடைத்தென் ருர். இலனுயென்னுஞ் செய்தெனெச்சம் உடையவென வந்த பெயரெச்சக்குறிப்புக் கொண்டது. (அ)

அசுகூ. செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின். கூ.

இ - ள். அறிவு இலா அஞ்சும் பகைவர்ப் பெறின் - நீதியையறிதலில்லாத அஞ் சும் பகைவரைப் பெற்ருல்,—செறுவார்க்குச் சேண் இன்பம் இகவா - அவரைச்செறு வார்க்கு உயர்ந்தவின்பங்கள் நீங்கா. எ - று.

உபாயமறிதலும் அறிந்தாற்செய்துமுடிக்குந் திண்மையுமில்லாதாரே பகைவரா தல் கூடாமையிற் பெறினென்றும், 'அவரையறிந்து மேற்சென்றபொழுதே பகையின் மையுஞ் செல்வமும் ஒருங்கேயெய்தலிற் சேணுடையின்பங்கள் இகவாவென்றுங் கூறினுர். (கூ)

அஎO. கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லானை யொல்லா தொளி. கO.

இ - ள். கல்லான் வெகுளும் சிறுபொருள் ஒல்லானை - நீதிநூலைக் கல்லாதா ெனுடு பகைத்தலான் வரும் எளியபொருளை மேவாதானை—எஞ்ஞான்றும் ஒளி ஒல் லாது - எஞ்ஞான்றும் புகழ் மேவாது. எ - று.

சிறுபொருள் முயற்சி சிறிதாய பொருள். நீதியறியாதானை வேறல் எளிதாயிருக் கவும் அது மாட்டாதானை வெற்றியான் வரும் புகழ் கூடாதென்பதாம்; ஆகவே, இச் சிறிய முயற்சியாற் பெரிய பயனெய்துகவென்றவாருயிற்று. இதற்குப் பிறரெல்லாம் அதிகாரத்தோடு மாருதன்மேலும் ஓர் பொருட்டொடர்புபடாமலுரைத்தார். இவை மூன்றுபாட்டானும் அதனினுய பயன் கூறப்பட்டது. (கO)

அஅம் அதி.—பகைத்திறந்தெரிதல்.

அஃதாவது மாணுத பகையை ஆக்குதற்குற்றமும், முன் ஆகின்ற பகையுள் நட்பாக்கற்பாலதும், நொதுமலாக்கற்பாலதும், அவற்றின்கட் செய்வதும், ஏனைக்களை தற்பாலதன்கட் செய்வனவும், களையும் பருவமும், களையாக்காற்படுமிழுக்கும் என்று இத்திறங்களை ஆராய்தல், இரட்டுறமொழிதலென்பதனுற் பகையது திறமும் பகை யிடத்தாக்குந் திறமுமென விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாணுப் பகையவாக லின், இது பகைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

அஎக. பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று. க.

இ - ள். பகை என்னும் பண்பு இலதனை - பகையென்று சொல்லப்படுந் தீமை பயப்பதனை—ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று - ஒருவன் விளையாட்டின் கண்ணேயாயினும் விரும்புதலியற்கைத்தன்று நீதிநூல். எ - று.

மாணுதபகையையாக்கிக்கோடல் எவ்வாற்ருனுந் தீமையேபயத்தலிற் பண்பில தென்றும், அதனை விளையாட்டின்கண் வேண்டினுஞ் செற்றமே விளைந்து மெய்யாமா

கலின் நகையேயுமென்றும், வேண்டாமை தொல்லையோரது துணிவென்பார் நீதி நூன்மேல்வைத்துங் கூறினர். அப்பெயர் அவாய்நிலையான் வந்தது. (க)

அஎஉ. வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. உ.

இ - ள். வில் ஏர் உழவர் பகை கொளினும் - ஒருவன் வில்லை ஏராகவுடைய உழவரோடு பகைகொண்டானாயினும்,—சொல் ஏர் உழவர் பகை கொள்ளற்க - சொல்லை ஏராகவுடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக. எ - று.

சொல் ஆகுபெயரான் நீதிநூன்மேனின்றது. வீரம் சூழ்ச்சியென்னும் ஆற்றல்களுள் வீரமேயுடையாரோடு பகைகொண்டாற் கேடுவருதல் ஒருதலையன்று, வந்ததாயினுந் தனக்கேயாம், ஏனைச் சூழ்ச்சியுடையாரோடாயிற் றன்வழியினுள்ளார்க்குந் தப்பாது வருதலின், அது கொள்ளினும் இது கொள்ளற்க வென்றார். உம்மையான் அதுவுமாகாமை பெறுதும். இரண்டு முடையாரோடு கொள்ளலாகாமை சொல்ல வேண்டாவாயிற்று. உருவகவிசேடம். (உ)

அஎங. ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். ங.

இ - ள். தமியனாய்ப் பல்லார் பகைகொள்பவன் - தான் தனியனாய்வைத்துப் பலரோடு பகைகொள்வான்—ஏமுற்றவரினும் ஏழை - பித்துற்றாரினும் அறிவிலன். எ - று.

தனிமை சுற்றம் நட்புப் படைமுதலியவின்மை. மயக்கத்தால் ஒப்பாராயினும் ஏமுற்றவர் அதனாற்றீங்கெய்தாமையின், தீங்கெய்துதலுமுடைய இவனை அவரினும் ஏழையென்றார். தீங்காவது துணையுள்வழியும் வேறல் ஐயமாயிருக்க அஃதின்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறுவேறு பொருதற்கண்ணும் ஒருங்கு பொருதற்கண்ணும் அழிந்தே விடுதல். இவைமூன்றுபாட்டானும் பகைகோடற்குற்றம் பொதுவினுஞ் சிறப்பினுங் கூறப்பட்டது. (ங)

அஎச. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு. ச.

இ - ள். பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் - வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகச்செய்துகொண்டொழுகும் இயல்பினையுடைய அரசனது பெருமையுள்ளே—தங்கிற்று உலகு - அடங்கிற்று இவ்வுலகு. எ - று.

வேண்டியவழியென்பது ஆக்கத்தான் வந்தது. வேறுபடுத்தல் பகைநிலைமையினீக்குதல். ஒழுகல் நீதிவழியொழுகல். பெருமை பொருள், படையென இருவகைத்தாய ஆற்றல். அதன்வழித்தாதற்கு எஞ்ஞான்றுந் திரிபின்மையின், அத்துணிவுபற்றித் தங்கிற்றென்றார். (ச)

அஎரு. தன்றுணை யின்றாற் பகையிரண்டாற் றானொருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னொன்று. ரு.

இ - ள். தன்றுணை இன்று - தனக்குதவுந் துணையோவெனின் இல்லை,—பகை இரண்டு - நலிவுசெய்யும் பகையோவெனின் இரண்டு,—ஒருவன் தான் அவற்றின்

ஒன்று இன்றுணையாக் கொள்க - அங்ஙனமாய் நின்றவழி ஒருவனுகிய தான் அப்ப கையிரண்டனுட் பொருந்தியதொன்றை அப்பொழுதைக்கு இனிய துணையாகச் செய்துகொள்க. எ - று.

பொருந்தியது ஏனையதனை வேறற்கு ஏற்றது. அப்பொழுது அவ்வெல்லும் பொழுது. திரிபின்றுகச் செய்துகொள்கவென்பார், இன்றுணையாவென்றூர். ஆல்கள் அசை. இவையிரண்டுபாட்டானும் நட்பாக்கற்பாலது கூறப்பட்டது. (ரு)

அஎசு. தேறினுந் தேறா விடினு மழிவின்கட்
டேறான் பகாஅன் விடல். சு.

இ - ள். தேறினும் தேறாவிடினும் - பகைவனை முன் தெளிந்தாயினும் தெளிந் திலனாயினும்—அழிவின்கண் தேறான் பகான் விடல் - தனக்குப் புறத்தொருவினை யாற் றுழ்வுவந்துழிக் கூடாது நீக்காது இடையே விட்டுவைக்க. எ - று.

முன்றெளிந்தானாயினும் அப்பொழுது கூடாதொழிகவென்றது, உள்ளாய் நின்று கெடுத்தலேனோக்கி. தெளிந்திலனாயினும் அப்பொழுது நீக்காதொழிகவென்றது, அவ்வழி விற்குத் துணையாதலேனோக்கி. இதனான் நொதுமலாக்கற்பாலது கூறப்பட்டது. (சு)

அஎஎ. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து. எ.

இ - ள். நொந்தது அறியார்க்கு நோவற்க - நொந்ததனைத் தாமாகவறியாத நட் டார்க்குத் தன்னேவு சொல்லற்க;—மென்மை பகைவரகத்து மேவற்க - வலியின்மை பார்த்திருக்கும் பகைவர்மாட்டு அவ்வலியின்மையை மேலிட்டுக் கொள்ளற்க. எ - று.

நோவென்னும் முதனிலைத்தொழிற்பெயர் ஈண்டு அது சொல்லுதற்கணுயிற்று. பகைவர்கட் டவிர்வது கூறுவார், நட்டார்கட் டவிர்வதும் உடன்கூறினூர். இதனல் அவ்விருபகுதிக்கண்ணுஞ் செய்வது கூறப்பட்டது. (எ)

அஎஅ. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு. அ.

இ - ள். வகை அறிந்து தற்செய்து தற்காப்ப - தான் வினைசெய்யும்வகையை அறிந்து அது முடித்தற்கேற்பத் தன்னைப் பெருக்கி மறவி புகாமற் றன்னைக்காக் கவே,—பகைவர்கண் பட்ட செருக்கு மாயும் - தன்பகைவர்மாட்டுளதாய களிப்புக் கெடும். எ - று.

வகை வலியனாய்த் தானெதிரே பொருமாறும், மெலியனுயவளவிற் போர் விலக் குமாறும் முதலாயின. பெருக்கல் பொருள் படைகளாற் பெருகச்செய்தல். களிப்பு இவற்றுன் வேறுமென்றெண்ணி மகிழ்ந்திருத்தல். இவ்விறுகுதலறிந்து தாமே அடங் குவரென்பதாம். இதனாற் களைதற்பாலதன்கட் செய்வன கூறப்பட்டது. (அ)

அஎகூ. இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. கூ.

இ - ள். முள் மரம் இளைதாகக் கொல்க - களையவேண்டுவதாய முண்மரத்தை இளைதாய நிலைமைக்கட் களைக;—காழ்த்தவிடத்துக் களையுநர் கைகொல்லும்-அன்றியே முதிர்ந்த நிலைமைக்கட் களையலுறிற் களைவார்கையினை அதுதான் களையும். எ - று.

களையப்படுவதாய தம்பகையை அது மெலிதாய காலத்தே களைக அன்றியே வலிதாயகாலத்துக் களையலுறிற் றம்மை அதுதான் களையுமென்பது தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதல். இதனாற் களையும்பருவங் கூறப்பட்டது. (கூ)

அஅ௦. உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். க௦.

இ - ள். செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலாதார் - தம்மொடு பகைப்பாரது தருக்கினைக் கெடுக்கலாயிருக்க இகழ்ச்சியான் அது செய்யாதவரசர்—உயிர்ப்ப உளரல்லர் மன்ற - பின் உயிர்க்குமாத்திரத்திற்கும் உளரல்லர் ஒருதலையாக. எ - று.

அவர் வலியராய்த் தம்மைக் களைதல் ஒருதலையாகலின், இறந்தாரேயாவரென்பதாம். அவருயிர்த்த துணையானே தாமிறப்பரெனினுமமையும். இதனாற் களையாவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது.

அசுஅம் அதி.—உட்பகை.

அஃதாவது புறப்பகைக்கு இடனாக்கிக் கொடுத்து அது வெல்லுந் துணையும் உள்ளாய்நிற்கும் பகை. இதுவும், களையப்படுவதன் பாலதாகலின், பகைத்திறந்தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

அஅக. நிழனீரு மின்னாத வின்னா தமர்நீரு
மின்னாவா மின்னா செயின். க.

இ - ள். நிழல் நீரும் இன்னாத இன்னா - ஒருவனுக்கு அனுபவிக்கவேண்டுவனவாய நிழலும் நீரும் முன் இனியவேனும் பின் நோய்செய்வன இன்னாவாம்;—தமர் நீரும் இன்னாசெயின் இன்னாவாம் - அதுபோலத் தழுவவேண்டுவனவாய தமரியல்புகளும் முன் இனியவேனும் பின் இன்னாசெய்வன இன்னாவாம். எ - று.

நோய் பெருங்கால், பெருவயிறு முதலாயின. தமரென்றதனால் உட்பகையாதற்குரியராய ஞாதியரென்பதறிக. இன்னாசெயல் முன்வெளிப்படாமைநின்று துணைபெற்றவழிக் கெடுத்தல். (க)

அஅஉ. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. உ.

இ - ள். வாள்போல் பகைவரை அஞ்சற்க - வாள்போல எறிதுமென்று வெளிப்பட்டுநிற்கும் பகைவர் பகையினை அஞ்சாதொழிக;—கேள்போல் பகைவர் தொடர்பு அஞ்சுக - அங்ஙனம் நில்லாது கேள்போல மறைந்துநிற்கும் பகைவர் நட்பினை அஞ்சுக. எ - று.

பகைவர் ஆகுபெயர். முன்னேயறிந்து காக்கப்படுதலான் அஞ்சற்கவென்றும், அங்ஙனம் அறியவும் காக்கவும்படாமையிற் கெடுதல் ஒருதலையென்பதுபற்றி அஞ்சுகவென்றுங்கூறினார். பின்செய்யும் பகையினுங்கொடிதாகலானும், காக்கலாகாததாகலானும், அஞ்சப்படுவது முன்செய்த அவர்தொடர்பாயிற்று. இவையிரண்டுபாட்டானும் உட்பகை ஆகாதென்பது கூறப்பட்டது. (உ)

அஅஙு. உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். ங.

இ - ள். உட்பகை அஞ்சித் தற்காக்க - உட்பகையாயினரையஞ்சித் தன்னைக் காத்துக்கொண்டொழுகுக;—உலைவிடத்து மட்பகையின் மாணத் தெறும் - அங்ஙன மொழுகாதவழித் தனக்கோர் தளர்ச்சி வந்தவிடத்துக் குயவன் மட்கலத்தை யறுக் குங்கருவிபோல அவர் தப்பாமற்கெடுப்பர். எ - று.

காத்தல் அவரணையாமலும் அவர்க்குடம்படாமலும் பரிகரித்தல். மண்ணைப் பகுக்குங்கருவி மட்பகையெனப்பட்டது. பகைமைதோன்றாமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலின், கெடுதல் தப்பாதென்பதாம். (ங)

அஅச. மனமாணா வுட்பகை தோன்றி னினமாணா
ஏதம் பலவுந் தரும். ச.

இ - ள். மனம் மாணா உட்பகை தோன்றின் - புறந்திருந்தியதுபோன்று அகந் திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின்,—இனம் மாணா ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்குச்சுற்றம் வயமாகாமைக்கேதுவாகிய குற்றம்பலவற்றையுங் கொடுக்கும். எ - று.

அவை சுற்றத்தாரை உள்ளாய்நின்று வேறுபடுத்தலும், அதனால் அவர் வேறு பட்டவழித் தான்றேறாமையும், பின் அவற்றான் விளைவனவுமாம். (ச)

அஅரு. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுந் தரும். ரு.

இ - ள். உறல் முறையான் உட்பகை தோன்றின் - புறத்து உறவுமுறைத்தன் மையோடு கூடிய உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின்,—இறல் முறையான் ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்கு இறத்தன்முறையோடு கூடிய குற்றம்பலவற்றையுங் கொடுக்கும். எ - று.

அவை புறப்பகைத் துணையாய் நின்றே அது தோன்றாமற் கோறன்முதலிய வஞ் சனை செய்தலும், அமைச்சர்முதலிய உறுப்புக்களைத் தேய்த்தலும் முதலாயின. (ரு)

அஅசு. ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்ற லரிது. சு.

இ - ள். ஒன்றாமை ஒன்றியார்கண் படின் - பகைமை தனக்குள்ளாயினார் மாட்டே பிறக்குமாயின்,—பொன்றாமை ஒன்றல் எஞ்ஞான்றும் அரிது - அரசனுக்கு இறவாமை கூடுதல் எஞ்ஞான்றுமரிது. எ - று.

பொருள் படை முதலிய உறுப்புக்களாற் பெரியனாயகாலத்து மென்பார், எஞ் ஞான்றுமென்றார். இவை நான்குபாட்டானும் அதனாற் றனக்குவருந் தீங்கு கூறப் பட்டது. (சு)

அஅஎ. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி. எ.

இ - ள். செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் - செப்பினது புணர்ச்சி போலப் புறத்து வேற்றுமை தெரியாமற் கூடினாராயினும்,—உட்பகை உற்ற குடி கூடாது - உட்பகை உண்டாயகுடியிலுள்ளார் அகத்துத் தம்முட்கூடார். எ - று.

செப்பினதுபுணர்ச்சி செப்பு மூடியோடு புணர்ந்த புணர்ச்சி. உட்பகையான் மனம் வேறுபட்டமையிற் புறப்பகை பெற்றுழி வீற்றுவீற்றுவரென்பதாம். குடி கூடாதென்பதனை நாடு வந்ததென்பதுபோலக் கொள்க. உட்பகை தானுற்றகுடியோடு கூடாதென்றும், உட்பகை யுண்டாயகுடி அப்பகையோடு கூடாதென்றும் உரைப்பாருமுளர். (எ)

அஅஅ. அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி. அ.

இ - ள். உட்பகை உற்றகுடி - முன் வளர்ந்துவந்ததாயினும் உட்பகையுண்டாய குடி—அரம் பொருத பொன் போலப் பொருது உரம் தேயும் - அரத்தாற் பொரப்பட்ட இரும்புபோல அதனாற் பொரப்பட்டு வலிதேயும். எ - று.

பொருதென்னுஞ் செயப்பாட்டுவினையெச்சம் தேயுமென்னும் வினைகொண்டது. அஃது உரத்தின்றொழிலாயினுங் குடிமேலேற்றுதலின், வினைமுதல்வினையாயிற்று. காரியஞ்செய்வதுபோன்று பொருந்தி மெல்லமெல்லப் பிரிவித்தலான், வலி தேய்ந்து விடுமென்பதாம். இவையிரண்டுபாட்டானும் அவன்குடிக்குவருந் தீங்கு கூறப்பட்டது. (அ)

அஅ௯. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு. ௯.

இ - ள். உட்பகை எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும் - அரசனது உட்பகை அவன் பெருமையை நோக்க எள்ளின்பிளவை யொத்த சிறுமையுடைத்தேயாயினும்,— கேடு உள்ளதாம் - பெருமையெல்லாம் அழியவருங்கேடு அதனகத்ததாம். எ - று.

எத்துணையும் பெரிதாயகேடு தனக்கெல்லைவருந்துணையும் எத்துணையுஞ்சிறிதாய உட்பகையுள்ளேயடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டுநிற்குமென்பதாம். இதனால் அது சிறிதென்று இகழப்படாதென்பது கூறப்பட்டது. (௯)

அ௯௰. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று. ௧௰.

இ - ள். உடம்பாடு இலாதவர் வாழ்க்கை - மனப்பொருத்தமில்லாதாரோடு கூட ஒருவன் வாழும்வாழ்க்கை—குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தற்று - ஒரு குடிலுள்ளே பாம்போடுகூட உறைந்தாற்போலும். எ - று.

குடங்கமென்னும் வடசொற்றிரிந்து நின்றது. இடச்சிறுமையானும் பயிற்சியானும் பாம்பாற்கோட்படல் ஒருதலையாம்; ஆகவே, அவ்வுவமையால் அவனுயிர்க்கு இறுதிவருதல் ஒருதலையென்பது பெற்றாம். இதனாற் கண்ணோடாதவரைக் கடிகவென்பது கூறப்பட்டது. (௧௰)

௯௰ ம் அதி.—பெரியாரைப்பிழையாமை.

அஃதாவது பெரியராயினாரை அவமதித்து ஒழுகாமை. இரட்டுறமொழிதலென்பதனாற் பெரியாரென்பது ஆற்றலாற்பெரியாராய வேந்தர்மேலும் தவத்தாற் பெரியாராய முனிவர்மேலும் நின்றது. மேற்சொல்லாது எஞ்சிநின்றதாகலின், இது வெகுளியான் வருவனவற்றதிறுதிக்கண் வைக்கப்பட்டது.

அகூக. ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை. க.

இ - ள். ஆற்றுவார் ஆற்றல் இகழாமை - எடுத்துக்கொண்டன யாவும் முடிக்க வல்லாருடைய ஆற்றல்களை அவமதியாமை—போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை - தங்கட்டீங்குவாராமற்காப்பார் செய்யுங் காவல்களெல்லாவற்றினும் மிக்கது. எ - று.

ஆற்றலென்பது பெருமை, அறிவு, முயற்சியென்னும் மூன்றன்மேலும் நிற்றலிற் சாதியொருமை. இகழ்ந்தவழிக் களையவல்லாரென்பது தோன்ற ஆற்றுவாரென்றும், அரண், படை, பொருள், நட்பு முதலிய பிறகாவல்கள் அவரானழியுமாகலின் அவ்விகழாமையைத் தலையாய காவலென்றுங் கூறினார். பொதுவகையால் அவ்விருதிறத்தாரையும் பிழையாமையது சிறப்பு இதனாற் கூறப்பட்டது. (க)

அகூஉ. பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும். உ.

இ - ள். பெரியாரைப் பேணாது ஒழுகின் - ஆற்றல்களாற் பெரியாராயினாரை வேந்தர் நன்குமதியாது அவமதித்து ஒழுகுவாராயின்,—பெரியாரால் பேரா இடும்பை தரும் - அவ்வொழுக்கம் அப்பெரியாரால் அவர்க்கு எஞ்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும். எ - று.

அத்துன்பங்களாவன இருமையினும் இடையறாது வரும் மூவகைத் துன்பங்களுமாம். அவையெல்லாந் தாமே செய்துகொள்கின்றனரென்பது தோன்ற, ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியுங்கூறினார். பொதுவகையால் அவரைப் பிழைத்தற்குற்றம் இதனாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப.

அகூங. கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னாற்று பவர்க ணிழுக்கு. ங.

இ - ள். அடல் வேண்டின் ஆற்றுபவர்கண் இழுக்கு - வேற்றுவேந்தரைக் கோறல்வேண்டியவழி அதனை அப்பொழுதே செய்யவல்ல வேந்தர்மாட்டுப் பிழை யினை—கெடல் வேண்டின் கேளாது செய்க - தான் கெடுதல்வேண்டினானாயின் ஒருவன் நீதிநூலைக் கடந்துசெய்க. எ - று.

அப்பெரியாரைக் "காலனுங் காலம் பார்க்கும் பாராது—வேலீண்டு தானை விழுமியோர் தொலைய—வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்*" தர் என்றார் பிறரும். நீதிநூல் செயலாகாதென்று கூறலின், கேளாதென்றார். (ங)

அகூச. கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல். ச.

இ - ள். ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செயல் - மூவகையாற்றலுமுடையார்க்கு அவையில்லாதார் தாம் முற்பட்டு இன்னாதவற்றைச் செய்தல்—கூற்றத்தைக் கையால் விளித்தற்று - தானேயும் வரற்பாலனாய கூற்றுவனை அதற்குமுன்னே கைகாட்டி அழைத்தாலொக்கும். எ - று.

* புறநானூறு, சக.

கையால் விளித்தல் இகழ்ச்சிக்குறிப்பிற்று. தாமேயும் உயிர்முதலிய கோடற்குரியாரை அதற்குமுன்னே விரைந்து தம்மேல் வருவித்துக்கொள்வார் இறப்பினது உண்மையும் அண்மையுங்கூறியவாறு. இவையிரண்டுபாட்டானும் வேந்தரைப்பிழைத்தலின் குற்றங் கூறப்பட்டது. (௪)

அ௯௫. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். ௫.

இ - ள். வெந்துப்பின் வேந்து செறப்பட்டவர் - பகைவர்க்கு வெய்தாய வலியினையுடைய வேந்தனாற்செறப்பட்ட அரசர்—யாண்டுச் சென்று யாண்டும் உளராகார் - அவனைத் தப்பி எங்கேபோயுளராவர், ஓரிடத்தும் உளராகார். எ - று.

இடைவந்த சொற்கள் அவாய்நிலையான் வந்தன. வெந்துப்பின் வேந்தாகலால் தன்னிலம் விட்டுப்போயவர்க்கு இடங்கொடுப்பாரில்லை, உளராயின் இவர் இனியாகாரென்பது நோக்கி அவனோடு நட்புக்கோடற்பொருட்டும் தானே வந்தெய்திய அவருடைமை வௌவுதற்பொருட்டுங் கொல்வர், அன்றெனின் உடனே யழிவரென்பன நோக்கி, யாண்டுச்சென்றியாண்டுமுளராகாரென்றார். இதனால் அக்குற்றமுடையார் அருமையுடைய அரண் சேர்ந்தும் உய்யாரென்பது கூறப்பட்டது. (௫)

அ௯௬. எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். ௬.

இ - ள். எரியால் சுடப்படினும் உய்வு உண்டாம் - காட்டிடைச் சென்றொருவன் ஆண்டைத் தீயாற்சுடப்பட்டானாயினும் ஒருவாற்றான் உயிருய்தல்கூடும்;—பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார் உய்யார் - தவத்தாற் பெரியாரைப்பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றானும் உயிருய்யார். எ - று.

தீ முன் உடம்பினைக் கதுவி அதுவழியாக உயிர்மேற்சேறலின் இடையே உய்யவுங்கூடும், அருந்தவர்வெகுளி அன்னதன்றித் தானிற்பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்குங் காத்தலரி * தாகலின், அது கூடாதாகலான், அதற்கேதுவாய பிழைசெய்யற்க வென்பதாம். (௬)

அ௯௭. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுந்
தகைமாண்ட தக்கார் செறின். ௭.

இ - ள். தகை மாண்ட தக்கார் செறின் - சாப வருள்கட்கேதுவாய பெருமை மாட்சிமைப்பட்ட அருந்தவர் அரசனை வெகுள்வராயின்,—வகை மாண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என்னும் - உறுப்பழகுபெற்ற அவனரசாட்சியும் ஈட்டிவைத்த பெரும்பொருளும் என்பட்டுவிடும்! எ - று.

உறுப்பு அமைச்சு, நாடு, அரண், படையெனவிவை. செறினென்பது அவர் செறாமை தோன்ற நின்றது. இவ்வெச்சத்தான் முன் வருவனவற்றிற்கும் இஃதொக்கும். அரசர் தஞ்செல்வக்களிப்பான் அருந்தவர்மாட்டுப் பிழை செய்வராயின், அச்செல்வம் அவர் வெகுளித்தீயான் ஒருகணத்துள்ளே வெந்துவிடுமென்பதாம். (௭)

அ௯அ. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. அ.

* திருக்குறள், உ௯.

இ - ள். குன்று அன்னார் குன்ற மதிப்பின் - குன்றத்தை யொக்கும் அருந்தவர் கெட நினைப்பாராயின்,—நிலத்து நின்றன்னார் குடியொடு மாய்வர் - அப்பொழுதே இந்நிலத்து நிலைபெற்றாற்போலுஞ் செல்வர் தங்குடியொடும் மாய்வர். எ - று.

வெயில் மழை முதலிய பொறுத்தலுஞ் சலியாமையும் உள்ளிட்ட குணங்களுடைமையின், குன்றன்னாரென்றார்: "மல்லன் மலையனைய மாதவர்*" என்றார் பிறரும். நிலைபெற்றாற்போறலாவது இறப்பப்பெரியராகலின் இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லையென்று கண்டாராற் கருதப்படுதல். (அ)

அ௯௯. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். ௯.

இ - ள். ஏந்திய கொள்கையார் சீறின் - காத்தற்கருமையான் உயர்ந்த விரதங்களை உடையார் வெகுள்வராயின்,—வேந்தனும் இடை வேந்து முரிந்து கெடும் - அவராற்றலான் இந்திரனும் இடையே தன்பதம் இழந்துகெடும். எ - று.

"வேந்தன் மேய தீம்புன லுலகமும்†" என்றார் பிறரும். நகுடனென்பான் இந்திரன்பதம்பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்புமிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர்பிழை செய அதனாற்சாபமெய்தி அப்பதம் இடையே இழந்தானென்பதனையுட்கொண்டு, இவ்வாறு கூறினார். இவைநான்குபாட்டானும் முனிவரைப் பிழைத்தலின்குற்றங் கூறப்பட்டது. (௯)

௯00. இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். க0.

இ - ள். சிறந்து அமைந்த சீரார் செறின் - கழியமிக்க தவத்தினையுடையார் வெகுள்வராயின்,—இறந்து அமைந்த சார்பு உடையராயினும் உய்யார் - அவரான் வெகுளப்பட்டார் கழியப் பெரிய சார்பு உடையராயினும், அதுபற்றி உய்யமாட்டார். எ - று.

சார்பு அரண், படை, பொருள், நட்பெனவிவை. அவையெல்லாம் வெகுண்டவரது ஆற்றலாற்றிரிபுரம்போல அழிந்துவிடுமாகலின், உய்யாரென்றார். சீருடையது சீரெனப்பட்டது. இதனால் அக்குற்றமுடையார் சார்பு பற்றியும் உய்யாரென்பது கூறப்பட்டது. (க0)

௯௧ம் அதி.—பெண்வழிச்சேறல்.

இனிக் காமத்தான் வருவன நேரே பகையல்லவாயினும் ஆக்கஞ்சிதைத்தல் அழிவுதலைத் தருதலென்னுந் தொழில்களாற் பகையோடொத்தலிற் பகைப்பாற்படுவனவாமாகலான், அவற்றைப் பகைப்பகுதியதிறுதிக்கட் கூறுவான்றொடங்கி, முதற்கட் பெண்வழிச்சேறல் கூறுகின்றார். அஃதாவது தன்வழியொழுகற்பாலளாய இல்லாள்வழியே தான் ஒழுகுதல்.

௯0க. மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது. க.

* சீவகசிந்தாமணி, முத்தி இலம்பகம், க௯க.

† தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல், ரு.

இ - ள். மனை விழைவார் மாண் பயன் எய்தார் - இன்பங்காரணமாகத் தம் மனையாளை விழைந்து அவடன்மையராய் ஒழுகுவார் தமக்கு இன்றுணையாய அறத்தினையெய்தார்;—வினை விழைவார் வேண்டாப் பொருளும் அது—இனிப் பொருள் செய்தலைமுயல்வார் அதற்கிடையீடென்று இகழும்பொருளும் அவ்வின்பம். எ - று.

மனையும் விழைதலும் பயனும் ஆகுபெயர். அவ்வின்பம் அவடன்மையராதற்கு ஏதுவாயவின்பம். அஃது அவளாற்பயனுயவறத்தினும் அவ்வறத்திற்குந் தனக்கும் ஏதுவாய பொருளினுஞ் செல்லவிடாமையின், விடற்பாற்றென்பதாம். (௧)

௯0௨. பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். ௨.

இ - ள். பேணாது பெண் விழைவான் ஆக்கம் - தன்னாண்மையை விட்டு மனையாளது பெண்மையை விழைவான் எய்திநின்ற செல்வம்—பெரியது ஓர் நாண் ஆக நாணுத் தரும் - இவ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம் பெரியதோர் நாணுண்டாகத் தனக்கும் நாணுதலைக் கொடுக்கும். எ - று.

எய்திநின்றதாயிற்று, படைக்கும் ஆற்றலிலனாகலின். அச்செல்வத்தால் ஈதலுந் துய்த்தலும் முதலிய பயன்கொள்வாள் அவளாகலின், அவ்வாண்மைச் செய்கை அவள்கண்ணதாயிற்றென்று ஆண்பாலார் யாவரும் நாண அதனாற் றன்னாண்மை யின்மை அறிந்து பின் தானும் நாணுமென்பதுநோக்கிப் பெரியதோர் நாணாக நாணுத் தருமென்றார். இவையிரண்டுபாட்டானும் மனைவிழைதற் குற்றங் கூறப்பட்டது. (௨)

௯0௩. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும். ௩.

இ - ள். இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை - ஒருவன் இல்லாண்மாட்டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம்—நல்லாருள் நாணு எஞ்ஞான்றும் தரும் - அஃதிலராய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்துங் கொடுக்கும். எ - று.

அவடான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளையஞ்சுதல் இயல்பின்மையாயிற்று. அங்ஙனமஞ்சியொழுகுதலின், அவளை நியமிப்பாரில்லையாம், ஆகவே, எல்லாக்குற்றமும் விளையுமென்பதுநோக்கி, எஞ்ஞான்றும் நாணுத்தருமென்றார். (௩)

௯0௪. மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று. ௪.

இ - ள். மனையாளை அஞ்சும் மறுமை இலாளன் - தன்மனையாளையஞ்சி ஒழுகுகின்ற மறுமைப்பயனில்லாதானுக்கு—வினை ஆண்மை வீறு எய்தல் இன்று - வினையை ஆளுந்தன்மை உண்டாயவழியும் நல்லோராற் கொண்டாடப்படாது. எ-று.

உண்டாயவழியுமென்பது அவாய்நிலையான் வந்தது. இல்லறஞ்செய்தற்குரிய நன்மையின்மையின் மறுமையிலாளனென்றும், வினையையாளுந்தன்மை தன்றன்மையில்லாத அவனுன் முடிவுபோகாமையின் வீறெய்தலின்றென்றுங் கூறினார். (௪)

௯0௫. இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல். ௫.

இ - ள். இல்லாளை அஞ்சுவான் - தன்மனையாளையஞ்சுவான்—நல்லார்க்கு நல்ல செயல் எஞ்ஞான்றும் அஞ்சும் - தான்றேடிய பொருளேயாயினும் அதனால் நல்லார்க்கு நல்லனசெய்தலை எஞ்ஞான்றும் அஞ்சாநிற்கும். எ - று.

நல்லார் தேவர், அருந்தவர், சான்றோர், இருமுதுகுரவர் முதலாயினாரும் நல்விருந்தினரும். நல்லனசெய்தல் அவர்விரும்புவனகொடுத்தல். அது செய்யவேண்டும் நாள்களினுமென்பார், எஞ்ஞான்றுமென்றார். "இல்லாளை யஞ்சிவிருந்தின்முகங் கொன்றநெஞ்சிற்—புல்லாளனாக*" என்றார் பிறரும். (௫)

௯௦௬. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர். ௬.

இ - ள். இல்லாள் அமை ஆர் தோள் அஞ்சுபவர் - தம்மில்லாளுடைய வேய்போலுந்தோளினை அஞ்சுவார்,—இமையாரின் வாழினும் பாடு இலர் - வீரத்தாற்றுறக்கமெய்திய அமரர்போல இவ்வுலகத்து வாழ்ந்தாராயினும், ஆண்மையிலர். எ - று.

அமரர்போல வாழ்தலாவது பகைத்த வீரர் தோள்களையெல்லாம் வேறலான் நன்குமதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையின், வாழினுமென்றார். அமையார் தோளெனவே, அஞ்சுதற்காரணத்தது எண்மை கூறியவாறு. வீரர்தோள்களை வென்றாராயினும் இல்லாடோள்களை அஞ்சுவார் ஆண்மையிலரென்பதாம். இவைநான்கு பாட்டானும் அவளையஞ்சுதற்குற்றங் கூறப்பட்டது. (௬)

௯௦௭. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து. ௭.

இ - ள். பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் - நாணின்றித் தன்னில்லாளது ஏவற்றொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண்டன்மையின்—நாண் உடைப் பெண்ணே பெருமை உடைத்து - நாணினையுடைய அவள் பெண்டன்மையே மேம்பாடுடைத்து. எ - று. †

நாணுடைப் பெண்ணென வேண்டாது கூறியது அவளேவல் செய்வானது நாணின்மை முடித்தற்காதலின், அம்மறுதலைத்தொழில் வருவிக்கப்பட்டது. ஏவல் ஆகுபெயர். இறுதிக்கட் பெண்ணென்பதூஉம் அது. ஏவல்செய்வித்துக் கோடற்சிறப்புத் தோன்றப் பெண்ணேயெனப் பிரித்தார். (௭)

௯௦௮. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். ௮.

இ - ள். நன்னுதலாள் பெட்டாங்கு ஒழுகுபவர் - தாம்வேண்டியவாறன்றித் தம் மனையாள் வேண்டியவாறு ஒழுகுவார்—நட்டார்குறை முடியார் - தம்மொடு நட்புச் செய்தார் உற்ற குறை முடிக்கமாட்டார்,—நன்று ஆற்றார் - அதுவேயன்றி மறுமைக்குத் துணையாய அறஞ்செய்யவுமாட்டார். எ - று.

---

* இல்லாளை யஞ்சி விருந்தின்முகங் கொன்ற நெஞ்சிற்—புல்லாளனாக மறநோக்கி வெப்பு கைந்து—வில்லா ளழுவம் பிளந்திட்டு வெகுண்டு நோக்கிக்—கொல்யானை யுந்திக் குடைமேலுமோர் கோறொடுத்தான்—சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், ௨௬௭.

† பெண்மை ஆண்மைகட்குப் பொருள் கட்புலனாகிய அமைதித்தன்மை, ஆளுந்தன்மை என்பர் நச்சினார்க்கினியர்.

நன்னுதலாளென்பதனை "அமையார்தோள்*" என்புழிப்போலக் கொள்க. அவ டாளே அறிந்து ஏவலும் பொருள்கொடுத்தலுங் கூடாமையின், இருமைக்கும் வேண் டுவன செய்யமாட்டாரென்பதாம். (அ)

கூ0கூ. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில். கூ.

இ - ள். அறவினையும் - அறச்செயலும்—ஆன்ற பொருளும் - அது முடித்தற்கு ஏதுவாயபொருட்செயலும்—பிறவினையும் - அவ்விரண்டின் வேறாய இன்பச்செயல் களும்—பெண் ஏவல் செய்வார் கண் இல் - தம்மனையாள் ஏவல் செய்வார்மாட்டு உள வாகா. எ - று.

புலன்களைந்தாகலின், பிறவினை யெனப் பன்மையாயிற்று. அவைநோக்கி அறச் செயல் பொருட்செயல்கள் முன்னேயொழிந்தார்க்குத் தலைமை அவள்கண்ணதாக லின், பின் அவைதாமும் இலவாயினவென்பது தோன்ற, அவற்றைப் பிரித்துக் கூறி னார். இவை மூன்றுபாட்டானும் அவளேவல்செய்தற்குற்றங் கூறப்பட்டது. (கூ)

கூக0. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில். க0.

இ - ள். எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு - கருமச்சூழ்ச்சிக்கட் சென்ற நெஞ்சத்தினையும் அதனானாய செல்வத்தினையும் உடையராய வேந்தர்க்கு— பெண் சேர்ந்து ஆம் பேதைமை எஞ்ஞான்றும் இல் - மனையாளைச் சேர்தலான் விளை யும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது. எ - று.

"இடனில்பருவத்தும்†" எனவும் "இடனின்றியிரந்தோர்க்கு‡" எனவும் வந் தமையான், இடனென்பது அப்பொருட்டாதலறிக. இளமைக்காலத்து மென்பார், எஞ்ஞான்றுமென்றார். அப்பேதைமையாவது மேற்சொல்லிய விழைதல், அஞ்சல், ஏவல்செய்தலென்னும் மூன்றற்குங் காரணமாயது. எதிர்மறைமுகத்தான் அம்மூன் றும் இதனாற்றொகுத்துக் கூறப்பட்டன. (க0)

கூஉ ம் அதி.—வரைவின்மகளிர்.

அஃதாவது தந்நலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவார் ஆகாதாரென்னும் வரைவிலாத மகளிரது இயல்பு; ஆதலால் தமக்குரிய மகளி ரான் வருங்குற்றத்தின்பின் வைக்கப்பட்டது.

கூகக. அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும். க.

இ - ள். அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய் தொடியார் - ஒருவனை அன்புபற்றி விழையாது பொருள்பற்றி விழையும் மகளிர்—இன்சொல் இழுக்குத் தரும் - அது கையுறுந்துணையும் தாம் அன்புபற்றி விழைந்தாராகச் சொல்லும் இனியசொல் அவனுக்குப் பின் இன்னாமையைப் பயக்கும். எ - று.

பொருளென்புழி இன் ஒிகாரத்தாற் றொக்கது. ஆய்ந்ததொடியினையுடையா ரென்றதனானும், இனியசொல்லென்றதனானும், அவர் கருவி கூறப்பட்டது. அச்

* திருக்குறள், கூ0கூ. † திருக்குறள், உகஅ. ‡ கலி, பாலை, க.

சொல் அப்பொழுதைக்கு இனிதுபோன்று பின் வறுமை பயத்தலின், அது கொள்ளற்க வென்பதாம். (௧)

௯௧௨. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல். ௨.

இ - ள். பயன் தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர் - ஒருவனுக்கு உள்ளபொருளை அளந்தறிந்து அஃதெய்துந்துணையும் தம்பண்புடைமை சொல்லும் பண்பில்லாத மகளிரது—நயன் தூக்கி நள்ளா விடல் - ஒழுகலாற்றினை ஆராய்ந்தறிந்து அவரைப் பொருந்தாது விடுக. எ - று.

பண்பு சொல்லின்கணல்லது தங்கட்கிடவாமைதோன்றப் பண்பின்மகளிரென்றும், அவர்க்கு அது சாதிதருமமாதல் நூலானேயன்றி அவர்செயலானுமறிந்தென்பார் நயன்றூக்கியென்றும், அவ்வறிவு அவரை விடுதற்கு உபாயமென்பது தோன்றப் பின் நள்ளாவிடலென்றும் கூறினார். (௨)

௯௧௩. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று. ௩.

இ - ள். பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் - கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையையுடைய முயக்கம்—இருட்டு அறையில் ஏதில் பிணம் தழீஇயற்று - பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற்போலும். எ - று.

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்துஞ்செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதானை முயங்குங்கால் அவர்குறிப்புக் கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாததோரிடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் அவர்குறிப்போடொக்குமெனவே, அகத்தால் அருவராநின்றும் பொருணோக்கிப் புறத்தாற்றழுவுவர்; அதனை யொழிகவென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அவர்சொல்லும் செயலும் பொய்யென்பது கூறப்பட்டது. (௩)

௯௧௪. பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர். ௪.

இ - ள். பொருட்பொருளார் புன்னலம் - இன்பமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லியநலத்தை—அருட்பொருள் ஆயும் அறிவினவர் தோயார் - அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்துசெய்யும் அறிவினையுடையார் தீண்டார். எ - று.

அறமுதலிய நான்கும் பொருளெனப்படுதலின், பொருட்பொருள் அருட்பொருளென விசேடித்தார். புன்மை இழிந்தார்க்கே உரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவர் மெய்ந்நலம் மறுதலையாகலின், தோயாரென்பதாம். (௪)

௯௧௫. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர். ௫.

இ - ள். மதி நலத்தின் மாண்ட அறிவினவர் - இயற்கையாகிய மதிநன்மையான் மாட்சிமைப்பட்ட செயற்கையறிவினையுடையார்—பொது நலத்தார் புன்ன

லம் தோயார் - பொருள்கொடுப்பார்க்கெல்லாம் பொதுவாய ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார். எ - று.

மதிநன்மை முற்பிறப்புக்களிற் செய்த நல்வினைகளான் மனந்தெளிவுடைத் தாதல். அதனானன்றிக் கல்வியறிவு மாட்சிமைப்படாமையின் மதிநலத்தின் மாண்டவறிவினவரென்றும், அவ்வறிவுடையார்க்கு அவராசையது பொதுமையும் மெய்ந் நலத்தது புன்மையும் விளங்கித் தோன்றலின் தோயாரென்றுங் கூறினார். (௫)

௯௧௬. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். ௬.

இ - ள். தகை செருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள் - ஆடல், பாடல், அழகென்பனவற்றாற் களித்துத் தம்புல்லிய நலத்தை விலைகொடுப்பார் யாவர்மாட்டும் பரப்பும் மகளிர்தோளினை—தம் நலம் பாரிப்பார் தோயார் - அறிவொழுக்கங்களானாய தம்புகழை உலகத்துப் பரப்புதற்குரிய உயர்ந்தோர் தீண்டார். எ - று.

ஆடன்முதலிய மூன்றுமுடைமை அவர்க்கு மேம்பாடாகலின் தகையென்றும், தோயின் அறிவொழுக்கங்கள் அழியுமாகலின் அவற்றாற் புகழ்பரப்புவார் தோயாரென்றுங் கூறினார். தந்நலமென்புழி நலம் ஆகுபெயர். இவைமூன்றுபாட்டானும் அவரை உயர்ந்தோர் தீண்டாரென்பது கூறப்பட்டது. (௬)

௯௧௭. நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள். எ.

இ - ள். நெஞ்சின் பிறபேணிப் புணர்பவர் தோள் - நெஞ்சினாற் பிறவற்றை ஆசைப்பட்டு அவை காரணமாகக் கொடுப்பாரை மெய்யாற்புணரும் மகளிர் தோள்களை—நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் - நிறையாற்றிருந்திய நெஞ்சமில்லாதார் தோய்வர். எ - று.

பொருளும் அதனாற் படைக்கப்படுவனவும் விரும்பும் நெஞ்சு அவற்றின்மேலதாகலின், புணர்வது உடம்புமாத்திரமென்பதறிந்து அதுவழி ஓடாதுநிற்கும் நெஞ்சினையுடையார் தோயாமையின், அஃதிலார் தோய்வரென்றார். (எ)

௯௧௮. ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. அ.

இ - ள். மாய மகளிர் முயக்கு - உருவுசொற்செயல்களான் வஞ்சித்தலை வல்ல மகளிரது முயக்கத்தை—ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப - அவ்வஞ்சனை ஆராய்ந்தறியுமறிவுடைய ரல்லார்க்கு அணங்குதாக்கென்று சொல்லுவர் நூலோர். எ - று.

அணங்கு காமநெறியான் உயிர்கொள்ளும் தெய்வமகள். தாக்குத் தீண்டல். இவ்வுருவகத்தான் அம்முயக்கம் முன் இனிதுபோன்று பின் உயிர்கோடல்பெற்றாம். இது நூலோர் துணிவென்பதுதோன்ற அவர்மேல்வைத்துக் கூறினார். அப்பெயர் அவாய்நிலையான் வந்தது. (அ)

௯௧௯. வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு. ௯.

இ - ள். வரைவு இலா மாண் இழையார் மென்றோள் - உயர்ந்தோர் இழிந்தோரென்னாது விலைகொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லியதோள்கள்—புரை இலாப் பூரியர்கள் ஆழும் அளறு - அக்குற்றத்தையறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக்கழுந்து நிரயம். எ - று.

உயர்தற்கேதுவாகலின், புரையெனப்பட்டது. சாதியானிழிந்தாரினீக்குதற்குப் புரையிலாப்பூரியர்களென்றும், அவர் ஆழ்தற்கேது உருவமுதலிய மூன்றுமென்பது தோன்ற மாணிழையார்மென்றோளென்றும், அவர்க்கு அளற்றினையிடையின்றிப் பயக்குமென்பது தோன்ற உருவகமாக்கியுங்கூறினார். (௯)

௯௨௦. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. ௧௦.

இ - ள். இருமனப் பெண்டிருங் கள்ளும் கவறும் - கவர்த்த மனத்தினையுடைய மகளிரும் கள்ளும் சூதுமென இம்மூன்றும்—திரு நீக்கப்பட்டார் தொடர்பு - திருமகளாற்றுறக்கப்பட்டார்க்கு நட்பு. எ - று.

இருமனம் ஒருவனோடு புணர்தலும் புணராமையும் ஒருகாலத்தேயுடையமனம். கவறு ஆகுபெயர். ஒத்தகுற்றத்தவாகலின், கள்ளும் சூதும் உடன்கூறப்பட்டன. வடநூலாரும் இக்கருத்தான் விதனமென உடன்கூறினார்*. வருகின்ற அதிகார முறைமையும் இதனானறிக. திணைவிராயெண்ணியவழிப் பன்மைபற்றி முடிபுகோடலின், ஈண்டு, அஃறிணையாற்கொண்டது. திருநீக்கப்பட்டமை இக்குறிகளான் அறியப்படுமென்பதாம். இவைநான்குபாட்டானும் சேர்வார் இழிந்தோரென்பது கூறப்பட்டது. (௧௦)

---

௯௩ ம் அதி.—கள்ளுண்ணாமை.

இனி ஒழுக்கமும் உணர்வுமழித்தற்கண் அவ்வரைவின்மகளிரோடொப்பதாய கள்ளினையுண்ணாமையது சிறப்பு எதிர்மறைமுகத்தாற் கூறுகின்றார்.

௯௨௧. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார். ௧.

இ - ள். கட்காதல் கொண்டு ஒழுகுவார் - கள்ளின்மேற்காதல் செய்தொழுகுமரசர்—எஞ்ஞான்றும் உட்கப்படார் - எஞ்ஞான்றும் பகைவரானஞ்சப்படார்;—ஒளி இழப்பர் - அதுவேயன்றி முன்னெய்தி நின்ற ஒளியினையுமிழப்பர். எ - று.

அறிவின்மையால் பொருள் படை முதலியவற்றாற் பெரியராயகாலத்தும் பகைவர் அஞ்சார், தம்முன்னோரானெய்திநின்ற ஒளியினையும் இகழற்பாட்டான் இழப்பரென்பதாம். இவையிரண்டானும் அரசு இனிதுசெல்லாதென்பது இதனாற் கூறப்பட்டது. (௧)

௯௨௨. உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
னெண்ணப் படவேண்டா தார். ௨.

இ - ள். கள்ளை உண்ணற்க - அறிவுடையராயினார் அஃதிலராதற்கு ஏதுவாய கள்ளினை உண்ணாதொழிக,—உணில் சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார்

---

* காமந்தகம், அத்தியாயம், ௧௧, சுலோகம், ௧௨௪.

உண்க - அன்றியே உண்ணல் வேண்டுவார் உளராயின், நல்லோரால் எண்ணப்படுதலை வேண்டாதார் உண்க. எ - று.

பெறுதற்கரிய அறிவைப் பெற்றுவைத்தும் கள்ளானழித்துக்கொள்வாரை இயல்பாகவே அஃதில்லாத விலங்குகளுடனும் எண்ணாராகலின், சான்றோரா னெண்ணப் பட வேண்டாதாருண்கவென்றார். (௨)

௯௨௩. ஈன்றாள் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. ௩.

இ - ள். ஈன்றாள் முகத்தேயும் களி இன்னாது - யாதுசெய்யினும் உவக்குந்தாய் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்;—மற்றுச் சான்றோர்முகத்து என் - ஆனபின், குற்றம்யாதும்பொறாத சான்றோர்முன்பு களித்தல் அவர்க்கியாதாம்! எ-று.

மனமொழிமெய்கள் தம்வயத்தவன்மையான் நாணழியும், அழியவே, ஈன்றாட்கும் இன்னாதாயிற்று; ஆனபின், கள் இருமையுங் கெடுத்தலறிந்து சேய்மைக்கண்ணே கடியுஞ் சான்றோர்க்கு இன்னாதாதல் சொல்லவேண்டுமோ வென்பதாம். (௩)

௯௨௪. நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. ௪.

இ - ள். கள் என்னும் பேணாப் பெருங்குற்றத்தார்க்கு - கள்ளென்று சொல்லப் படுகின்ற யாவருமிகழும் மிக்க குற்றத்தினையுடையாரை—நாண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் - நாணென்று சொல்லப்படுகின்ற உயர்ந்தவள் நோக்குதற்கஞ்சி அவர்க்கெதிர்முகமாகாள். எ - று.

காணுதற்குமஞ்சி உலகத்தார் சேய்மைக்கண்ணே நீங்குவராகலிற் பேணாவென்றும், பின் ஒருவாற்றானுங் கழுவப்படாமையிற் பெருங்குற்றமென்றும், இழிந்தோர் பானில்லாமையின் நல்லாளென்றும் கூறினார். பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி.* இவைமூன்றுபாட்டானும் ஒளியிழத்தற்காரணங் கூறப்பட்டது. ()

௯௨௫. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். ௫.

இ - ள். பொருள் கொடுத்து மெய் அறியாமை கொளல் - ஒருவன் விலைப் பொருளைக்கொடுத்துக் கள்ளாற்றனக்கு மெய்ம்மறப்பினைக் கொள்ளுதல்—கை அறியாமை உடைத்து - அவன்பழவினைப்பயனாய செய்வதறியாமையைத் தனக்குக் காரணமாகவுடைத்து. எ - று.

தன்னையறியாமை சொல்லவே, ஒழிந்தன யாவுமறியாமை சொல்லல்வேண்டா வாயிற்று. கை அப்பொருட்டாதல் "பழனுடைப்பெருமரம் வீழ்ந்தெனக் கையற்று†" என்பதனானுமறிக. அறிவார் விலைகொடுத்து ஒன்றனைக்கொள்ளுங்காற் றீயதுகொள்ளாமையின் மெய்யறியாமைகொளல் முன்னையறியாமையான் வந்ததென்பதாம். (௫)

௯௨௬. துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். ௬.

* பிரயோகவிவேகம், திங்குப்படலம், ௧௫.

† புறநானூறு, ௨௦௧.

இ - ள். துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் - உறங்கினார், செத்தாரின் வேறுதலுடையரேனும், அக்காலத்தறிவின்மையான் வேறெனப்படார்;—கள் உண்பவர் எஞ்ஞான்றும் நஞ்சு உண்பார் - அவ்வாறே கள்ளுண்பார், நஞ்சுண்பாரின் வேறுதலுடையரேனும், எக்காலத்துமறிவின்மையான் வேறெனப்படார், அவர்தாமேயாவர். எ - று.

உறங்கினார்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை உயிர்ப்புநிற்றல். வேறுதலும் வேறன்மையுமுடைமை காட்டற்கு உவமை புணர்க்கப்பட்டது. இதனை நிரனிறையாக்கி, திரிக்கப்படுதலால் உறங்கினாரும் நஞ்சுண்பாருமொப்பர், கைவிடப்படுதலாற் செத்தாருங் கள்ளுண்பாருமொப்பரென்றுரைப்பாருமுளர்; அதிகாரப்பொருள் பின்னதாயிருக்க யாதுமியைபில்லாத நஞ்சுண்பார்க்கு உவமைபுணர்த்து ஈண்டுக்கூறல் பயனின்றாகலானும், சொற்கிடக்கை நிரனிறைக்கேலாமையானும், அஃதுரையன்மையறிக. இவையிரண்டுபாட்டானும் அவரதறிவிழத்தற்குற்றங் கூறப்பட்டது. (கூ)

கூஉஎ. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். எ.

இ - ள். கள் ஒற்றிக் கண் சாய்பவர் - கள்ளை மறைந்துண்டு அக்களிப்பாற்றம் மறிவு தளர்வார்—உள்ளூர் உள் ஒற்றி எஞ்ஞான்றும் நகப்படுவர் - உள்ளூர் வாழ்பவரான் உண்ணிகழ்கின்றதுய்த்துணர்ந்து எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படுவர். எ - று.

உள்ளூர் ஆகுபெயர். உண்டென்பது அவாய்நிலையான் வந்தது. உய்த்துணர்தல் தளர்ச்சியாற்களிப்பினையுணர்ந்து அதனாற் கள்ளுண்டதுணர்தல். (எ)

கூஉஅ. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும். அ.

இ - ள். களித்து அறியேன் என்பது கைவிடுக - மறைந்துண்டுவைத்து யான் கள்ளுண்டறியேனென்று உண்ணாதபொழுது தம்மொழுக்கங் கூறுதலையொழிக;—நெஞ்சத்து ஒளித்ததும் ஆங்கே மிகும் - அவ்வுண்டபொழுதே பிறரறியின் இழுக்காமென்று முன்னெஞ்சத்தொளித்த குற்றமும் முன்னையளவின்மிக்கு வெளிப்படுதலான். எ - று.

களித்தறியேனெனக் காரியத்தாற் கூறினார். இவையிரண்டுபாட்டானும் அது மறைக்கப்படாதென்பது கூறப்பட்டது. (அ)

கூஉகூ. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. கூ.

இ - ள். களித்தானைக் காரணம் காட்டுதல் - கள்ளுண்டு களித்தானொருவனை இஃதாகாதென்று பிறனொருவன் காரணங்காட்டித் தெளிவித்தல்—நீர்க் கீழ்க் குளித்தானைத் தீத்துரீஇயற்று - நீருண்மூழ்கினானொருவனைப் பிறனொருவன் விளக்கினால் நாடுதலையொக்கும். எ - று.

களித்தானையென்னுமிரண்டாவது "அறிவுடை யந்தண னவளைக்காட் டென்றானோ*" என்புழிப்போல நின்றது. நீருள் விளக்குச் செல்லாதாற்போல அவன்

* கலி, மருதம், எ.

மனத்துக் காரணஞ்செல்லாதென்பதாம். இதனான் அவனைத்தெளிவித்தல் முடியா தென்பது கூறப்பட்டது. (க)

கூஙo. கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு. கo.

இ - ள். கள் உண்ணுப் போழ்தில் களித்தானை - கள்ளுண்பானொருவன் தான் அஃதுண்ணாது தெளிந்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணு மன்றே,— காணுங்கால் உண்டதன் சோர்வு உள்ளான்கொல்-காணுங்கால் தானுண்ட பொழுது உளதாஞ்சோர்வினை அவன் சோர்வால் அதுவுமிற்றென்று கருதான் போலும்! எ - று.

சோர்வு மனமொழிமெய்கள் தன்வயத்தவல்லவாதல். கருதலளவையான் அதனிழுக்கினை யுய்த்துணரின் ஒழியுமென இதனால் அஃதொழிதற்காரணங் கூறப் பட்டது. (கo)

கூசம் அதி.—சூது.

இனி அக்கள்ளுண்டல்போல அறம் பொருள் இன்பங்கட்கு இடையீடாகிய சூதாடலும் பிணியுழத்தலுங் கூறுவான்றொடங்கி, முதற்கட் சூதினதியல்பு கூறுகின்றார்.

கூஙக. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. க.

இ - ள். வென்றிடினும் சூதினை வேண்டற்க - தான்வெல்லுமாற்றலுடையனாயினும் சூதாடலை விரும்பாதொழிக;—வென்றதூஉம் தூண்டிற்பொன் மீன் விழுங்கியற்று - வென்று பொருளெய்துவார் உளராலெனின் அவ்வென்றபொருடானும் இரையான் மறைந்த தூண்டிலிரும்பினை இரையெனக்கருதி மீன் விழுங்கினாற்போலும். எ - று.

வேறல் ஒருதலையன்மையின் வென்றிடினுமென்றும், கருமங்கள்பலவுங்கெடுதலின் வேண்டற்கவென்றுங் கூறினர். எய்தியபொருள் சூதாடுவார் நீங்காமைக்கு இட்டதோர் தளையென்பதூஉம், அதனாற்பின் றுயருழத்தலும், உவமையாற் பெற்றாம்.

கூஙஉ. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு. உ.

இ - ள். ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும்-அத்தூண்டிற்பொன் போன்ற ஒன்றனை முன்பெற்று இன்னும் பெறுதுமென்னுங்கருத்தால் நூற்றினையிழந்து வறியராஞ் சூதர்க்கும்—நன்று எய்தி வாழ்வது ஓராறு உண்டாங்கொல் - பொருளால் அறனுமின்பமுமெய்தி வாழ்வதொரு நெறியுண்டாமோ ஆகாது. எ - று.

அவ்வாற்றாற் பொருளிழந்தே வருதலான், அதனாலெய்தும்பயனும் அவர்க்கில்லை யென்பதாம். (உ)

கூஙஙு. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். ங.

இ - ள். உருள் ஆயம் ஓவாது கூறின் - உருளுங்கவற்றின்கட்பட்ட ஆயத்தை இடைவிடாது கூறிச் சூதாடுமாயின்,—பொருள் ஆயம் போய்ப் புறமே படும் - அரசனீட்டியபொருளும் அவன்பொருள்வருவாயும் அவனைவிட்டுப்போய்ப் பகைவர் கண்ணே தங்கும். எ - று.

கவற்றின துருட்சியை அதனினாய ஆயத்தின்மேலேற்றியும், சூதாடலை அது கூற லாகிய காரணத்தின்மேலிட்டுங்கூறினார். பொருளாயமென்பது உம்மைத்தொகை. ஆயம் வடமொழித்திரிசொல். காத்தற்கண்ணும் இயற்றற்கண்ணும் கருத்திலனாகலின், அவையிரண்டும் பகைவர்பாற் செல்லுமென்பதாம். (௩)

கூ௩௪. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். ௪.

இ - ள். சிறுமை பல செய்து சீர் அழிக்கும் சூதின் - தன்னை விழைந்தார்க்கு முன்னில்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்து உள்ளபுகழையுங் கெடுக்குஞ் சூதுபோல்—வறுமை தருவது ஒன்று இல் - நல்குரவினைக் கொடுக்கவல்லது பிறி தொன்றில்லை. எ - று.

அத்துன்பங்கள் முன்னர்க் கூறுப. நல்வினைகளையும் நல்லினத்தையும் நீக்கித் தீவினைகளையுந் தீயினத்தையுங் கூட்டுதலால், சீரழிக்குமென்றார். வறுமைக்கு எல்லை யாவரென்பதாம். (௪)

கூ௩௫. கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார். ௫.

இ - ள். இல்லாகியார் - முற்காலத்துத் தாமுளராகியே இலராகியொழுகினார்— கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார் - கவற்றினையும் அஃதாடுங்களத்தினை யும் அவ்வாடற்குவேண்டுங் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாத வேந் தர். எ - று.

கைத்தொழில் வெல்லுமாயம்படப் பிடித்தெறிதல். அவ்விவறுதலாற் பாண்ட வர் தம்மரசுவிட்டு வனத்திடைப்போய் ஆண்டுமறைந்தொழுகினாரென அனுபவங் காட்டியவாறு. இவையைந்துபாட்டானும் அதனது வறுமைபயத்தற்குற்றங் கூறப் பட்டது. (௫)

கூ௩௬. அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார். ௬.

இ - ள். சூது என்னும் முகடியான் மூடப்பட்டார் - தன்பெயர்சொல்லல் மங் கலமன்மையிற் சூதென்று சொல்லப்படும் முகடியான் விழுங்கப்பட்டார்—அகடு ஆரார் அல்லல் உழப்பர் - இம்மைக்கண் வயிறாரப்பெறார், மறுமைக்கண் நிரயத் துன்பமுழப்பர். எ - று.

செல்வங்கெடுத்து நல்குரவுகொடுத்தற்றொழில் வேறுபடாமையிற் சூதென்னு முகடியென்றும், வெற்றிதோல்விகளேக்கி ஒருபொழுதும் விடாராகலின் ஈண்டு அகடாராரென்றும், பொய்யுங்களவும் முதலிய பாவங்களீட்டலின் ஆண்டு அல்லலு ழப்பரென்றுங்கூறினார். வயிறாராமை சொல்லவே, ஏனைப்புலன்களுகரப்பெறாமை சொல்லவேண்டாவாயிற்று. உழப்பரென்பது எதிர்காலவினை. (௬)

௯௩௭. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின். ௭.

இ - ள். காலை கழகத்துப் புகின் - அறம் பொருளின்பங்கட்கடைத்தகாலம் அரசனுக்குச் சூதாடுகளத்தின்கட்கழியுமாயின்,—பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் - அக்கழிவு தொன்றுதொட்டுவந்த அவன்செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கும். எ - று.

பழகியவென்பது பண்புடனுமியையும். தான் செய்துகொள்ளும் அறமுதலிய வேயன்றி முன்னோரைத்தொடங்கி வருகின்றசெல்வமும் முன்செய்த நல்வினையின் பயனாய பண்பும் இலவாமென்பதாம். (௭)

௯௩௮. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது. ௮.

இ - ள். சூது - சூது—பொருள் கெடுத்து - தன்னைப்பயின்றவன்பொருளைக்கெடுத்து,—பொய் மேற்கொளீஇ - பொய்யை மேற்கொள்ளப்பண்ணி,—அருள் கெடுத்து - மனத்தெழும் அருளைக்கெடுத்து,—அல்லல் உழப்பிக்கும் - இவ்வாற்றான் அவனை இருமையினுந் துன்பமுறுவிக்கும். எ - று.

இத்தொழில்கண்மூன்றற்கும் சூது வினைமுதலாகவும், தோல்வி, வெற்றி, செற்றமென்பன முறையே கருவிகளாகவுங்கொள்க. முன்னதனான் இம்மையினும், ஏனையவற்றான் மறுமையினுமாம். பொருள்கொடுத்தென்பது பாடமாயின், அவ்வெச்சத்திற்குமுடிவு மேற்கொளீஇயென்புழி மேற்கோடலாகிய வினைமுதல்வினை. (௮)

௯௩௯. உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின். ௯.

இ - ள். ஆயம் கொளின் - அரசன் சூதினைத் தனக்கு வினோதத்தொழிலாக விரும்புமாயின்,—ஒளி கல்வி செல்வம் ஊண் உடை என்று ஐந்தும் அடையாவாம் - அவனை ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையுமென்றிவ்வைந்துஞ் சாராவாம். எ - று.

ஆயம் ஆகுபெயர். இச்சிறப்புமுறை செய்யுளோக்கிப் பிறழநின்றது. செல்வம் அறுவகையுறுப்புக்கள். ஊணுடையென்பனவற்றால் துப்புரவுகளெல்லாங் கொள்ளம்படும். காலமும் கருத்தும் பெருமையின், இவையுளவாகாவென்பதாம். இவை நான்குபாட்டானும் சிறுமைபலசெய்து அவற்றானிருமையுங்கெடுத்தல் கூறப்பட்டது.

௯௪௦. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதே போற்றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர். ௰.

இ - ள். இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் - சூதாடலான் இருமைப் பயன்களையுமிழக்குந்தோறும் அதன்மேற் காதல்செய்யுஞ் சூதன்போல—துன்பம் உழத்தொறூஉம் காதற்று உயிர் - உடம்பான் மூவகைத்துன்பங்களையும் அனுபவிக்குந்தோறும் அதன்மேற் காதலையுடைத்து உயிர். எ - று.

சூது ஆகுபெயர். உயிரினதறியாமை கூறுவார்போன்று சூதனதறியாமை கூறுதல் கருத்தாகலின், அதனை யாப்புறுத்தற்பொருட்டு உவமமாக்கிக்கூறினார். இதனெதிர் மறைமுகத்தாற் சூதினைவெறுத்தொழிவானையொக்கும் உடம்பினை வெறுத்தொழியு

ழுயிரெனவுங்கொள்க. இதனான் அஃதொழிதற்கருமையும் ஒழிந்தாரதுபெருமையுங் கூறப்பட்டன. (கo)

கூரு ம் அதி.—மருந்து.

பழவினையானும் காரணங்களானும் மக்கட்கு வாதமுதலிய பிணிகள்வரும்; அவற்றுட் பழவினையான் வருவன அதன்கழிவின்கணல்லது தீராமையின் அவையொழித்து, ஏனைக்காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின்றிறங்கூறுகின்றார். காரணங்களாவன உணவுசெயல்களதொவ்வாமையாகலின், பிணிகளுங் காரணத்தான் வருவனவாயின.

கூசக. மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று. க.

இ - ள். மிகினும் குறையினும் - உணவுஞ் செயல்களும் ஒருவன்பகுதிக்கொத்தவளவினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும்,—நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்றும் நோய் செய்யும் - ஆயுள்வேதமுடையாரால் வாதமுதலாக வெண்ணப்பட்ட மூன்றுநோயும் அவனுக்குத் துன்பஞ்செய்யும். எ - று.

நூலோரெண்ணியவெனவே, அவர் அவற்றான்வகுத்த வாதப்பகுதி பித்தப்பகுதி ஐப்பகுதியென்னும் பகுதிப்பாடும் பெற்றாம். அவற்றிற்குணவொத்தலாவது சுவை வீரியங்களானும் அளவானும்பொருந்துதல். செயல்களொத்தலாவது மனமொழி மெய்களாற்செய்யுந் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னேயொழிதல். இவை இரண்டும் இங்ஙனமன்றி மிகுதல் குறைதல்செய்யின், அவை தத்தநிலையினில்லாவாய் வருத்துமென்பதாம். காரணமிரண்டும் அவாய்நிலையான் வந்தன. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. இதனால் யாக்கைகட்கியல்பாகிய நோய் மூவகைத்தென்பதூஉம், அவை துன்பஞ்செய்தற்காரணம் இருவகைத்தென்பதூஉம் கூறப்பட்டன. இன்பஞ்செய்தற்காரணம் முன்னர்க்கூறுப. (க)

கூசஉ. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். உ.

இ - ள். அருந்தியது அற்றது போற்றி உணின் - ஒருவன் முன்னுண்டது அற்றபடியைக் குறிகளாற்றெளியவறிந்து பின்னுண்ணுமாயின்,—யாக்கைக்கு மருந்து என வேண்டாவாம் - அவன் யாக்கைக்கு மருந்தென்று வேறுவேண்டாவாம். எ - று.

குறிகளாவன யாக்கைநொய்ம்மை, தேக்கின்றூய்மை, கரணங்கடொழிற்குரியவாதல், பசிமிகுதலெனவிவை முதலாயின. பிணிகள் யாக்கையவாகலின், யாக்கைக்கென்றார். உணினென்பது அதனருமை தோன்ற நின்றது. (உ)

கூசங. அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு. ங.

இ - ள். அற்றால் அளவு அறிந்து உண்க - முன்னுண்டது அற்றாற் பின்னுண்பதனை அறுமளவறிந்து அவ்வளவிற்றாக உண்க,—உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு அஃது - இறப்பவும்பலவாய பிற யாக்கைகளிற்பிழைத்துப் பெறற்கரிய இம்மானுடயாக்கையைப் பெற்றான் அதனை நெடுங்காலங்கொண்டு செலுத்துநெறி அதுவாகலான். எ - று.

இம்மை மறுமை வீடுபேறுகளெய்தற்பாலது ஈதொன்றுமேயாகலின் உடம்பு பெற்ருனென்றும், அது நெடிதுநின்றுழி அவைபெருகச்செய்துகொள்ளலாமாகலின் நெடிதுய்க்குமாறென்றுங்கூறினுர். பெற்றுலென்று பாடமோதுவாருமுளர். (ங)

கூசச. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. ச.

இ-ள். அற்றது அறிந்து - முன்னுண்டது அற்றபடியையறிந்து,—துவரப் பசித்து - பின் மிகப்பசித்து,—மாறல்ல கடைப்பிடித்துத் துய்க்க - உண்ணுங்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டுண்க. எ-று.

அற்றதறிந்தென்னும் பெயர்த்துரை* அதனை யாப்புறுத்தற்பொருட்டு. உண்டது அற்ருலும் அதன்பயனுகிய இரதமருதாகலான் அதுவுமறல்வேண்டுமென்பார், மிகப் பசித்தென்ருர். பசித்தல்வினை ஈண்டு உடையான்மேனின்றது. மாறுகொள்ளாமையாவது உண்பான் பகுதியோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களாற்றம்முண்மாறு கொள்ளாமையுமாம். அவையாவன முறையே வாதபித்த ஐகளானுய பகுதிக்கடாதவற்றைச் செய்வனவாதலும், பெரும்பொழுது சிறுபொழுதென்னுங் காலவேறுபாடுகளுள் ஒன்றற்காவன பிறிதொன்றற்காகாமையும், தேனுநெய்யுந் தம்முளளவொத்து நஞ்சாதல் போல்வனவுமாம். அவற்றைக் குறிக்கொள்ளாது மனம்பட்டவாற்ருற்றுய்ப்பின் அதனுனே நோயும் மரணமும் வருதலின், கடைப்பிடித்தென்ருர். (ச)

கூசரு. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு. ரு.

இ-ள். மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின் - அம்மூவகை மாறுகோளுமில்லாத உணவைத் தன்னுள்ளம் வேண்டியவளவினுனன்றிப் பிணிவாராவளவினுல் ஒருவனுண்ணுமாயின்,—உயிர்க்கு ஊறுபாடு இல்லை - அவனுயிர்க்குப் பிணிகளாற்றுன்பம் விளைதலுண்டாகாது. எ-று.

உறுவதனை ஊறென்ருர்; அஃது இன்பத்திற்செல்லாதாயிற்று, இல்லையென்பது தொடர்பாகலின். துன்பமுறுவது உயிரேயாதலின், அதன்மேல்வைத்துக் கூறினுர். மாறுபாடில்வழியுங் குறைதல் நன்றென்பதாம். இவைநான்குபாட்டானும் உண்ணப்படுவனவும், அவற்றதளவும், காலமும், பயனுங் கூறப்பட்டன. (ரு)

கூசசு. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய். சு.

இ-ள். இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல் - அக்குறைதலை நன்றென்றறிந்து அவ்வாறேயுண்பவன்மாட்டு இன்பம் நீங்காது நிலைநிற்குமாறுபோல்,—கழிபேர் இரையான்கண் நோய் நிற்கும் - மிகப்பெரியவிரையை விழுங்குவான்மாட்டு நோய் நீங்காது நிலைநிற்கும். எ-று.

அவ்வாறேயுண்டல் உண்ணலாமளவிற் சிறிது குறையவுண்டல். இன்பமாவது வாதமுதலியமூன்றும் தத்தநிலையிற்றிரியாமையின் மனமொழிமெய்கள் அவன் வயத்தவாதலும் அதனுன் அறமுதலிய நான்குமெய்தலுமாம். இரையையளவின்றியெடுத்து அதனுன் வருந்தும் விலங்கோடொத்தலின், இரையானென்ருர். விதியெதிர்மறைகளை உவமமும் பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு. (சு)

* பெயர்த்துரை - அநுவாதம்.

கூசஎ. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும். எ.

இ - ள். தெரியான் தீ அளவு அன்றிப் பெரிது உண்ணின் - தன்பகுதியும் அதற்கேற்றவுணவும் காலமுமாராயாது வேண்டியதோருணவை வேண்டியதோர் காலத்து வயிற்றுத்தீயளவன்றி ஒருவன் மிகவுண்ணுமாயின்,—நோய் அளவு இன்றிப் படும் - அவன்மாட்டு நோய்கள் எல்லையற வளரும். எ - று.

தெரியாமை வினைக்குச் செயப்படுபொருள்கள் அதிகாரத்தான் வந்தன. நோய் சாதியொருமை. இவையிரண்டுபாட்டானும் அவ்வகையுண்ணுவழிப்படு மிழுக்குக் கூறப்பட்டது. (எ)

கூசஅ. நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். அ.

இ - ள். நோய் நாடி - மருத்துவனாயினான் ஆதுரன்மாட்டு நிகழ்கின்ற நோயை அதன் குறிகளான் இன்னதென்று துணிந்து,—நோய் முதல் நாடி - பின் அது வருதற் காரணத்தை ஆராய்ந்து தெளிந்து,—அது தணிக்கும் வாய் நாடி - பின் அதுதீர்க்குமுபாயத்தினையறிந்து,—வாய்ப்பச் செயல் - அதனைச் செய்யும்வழிப் பிழையாமற் செய்க. எ - று.

காரணம் உணவுசெயலென முற்கூறியவிரண்டும். அவற்றை ஆயுள்வேதமுடையார் நிதானமென்ப. அவை நாடுதற்பயன் நோயினையும் வாயினையும் ஐயமறத்துணிதல். மருந்துசெய்தல், உதிரங்களைதல், அறுத்தல், சுடுதன்முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு, அதுதணிக்கும்வாயென்றார். "கழுவாயுமுள*" என்றார்பிறரும். பிழையாமை பழைய மருத்துவர் செய்துவருகின்ற முறைமையிற்றப்பாமை. (அ)

கூசகூ. உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல். கூ.

இ - ள். கற்றான் - ஆயுள்வேதத்தினைக் கற்றமருத்துவன்,—உற்றான் அளவும் பிணி அளவும் காலமும் கருதிச் செயல் - அவ்வுபாயத்தினைச் செய்யுங்கால், ஆதுரனளவினையும் அவன்கணிகழ்கின்ற நோயினளவினையும் தன்செயற்கேற்ற காலத்தினையும் அந்நூனெறியால் நோக்கி, அவற்றோடு பொருந்தச்செய்க. எ - று.

ஆதுரனளவு பகுதி பருவம் வேதனை வலிகளினளவு; பிணியளவு சாத்தியம், அசாத்தியம், யாப்பியமென்னுஞ் சாதிவேறுபாடும்†, தொடக்க நடுவீறென்னும் அதன் பருவ வேறுபாடும், வன்மைமென்மைகளுமுதலாயின. காலம் மேற்சொல்லியன. இம்மூன்றும் பிழையாமல் நூனெறியானும் உணர்வுமிகுதியானும் ஆராய்ந்து செய்கவென்பார், கற்றான்கருதிச்செயலென்றார். இவையிரண்டுபாட்டானும் அவ்விழுக்குப் பட்டுழி மருத்துவன்றீர்க்குமாறு கூறப்பட்டது. (கூ)

கூரு0. உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து. க0.

---

* புறநானூறு, ஙச.

† சாத்தியம் தீர்க்கத்தக்கது. அசாத்தியம் தீர்க்கத்தகாதது. யாப்பியம் பெரும்பான்மை தீர்க்கத்தக்கதும் சிறுபான்மை தீர்க்கத்தகாததுமெனக் கொள்ளத்தக்கது.

இ - ள். மருந்து - பிணிக்கு மருந்தாவது—உற்றவன் - அதனையுற்றவன்,—தீர்ப்பான் - அதனைத் தீர்க்குமருத்துவன்,—மருந்து - அவனுக்குக் கருவியாகிய மருந்து,—உழைச் செல்வான் என்ற அப்பால் நாற்கூற்று - அதனைப்பிழையாமல் இயற்றுவானென்று சொல்லப்பட்ட நான்குபதியையுடைய நான்கு திறத்தது. எ - று.

நான்கென்னு மெண்வருகின்றமையின், அதுநோக்கி அப்பாலென்றொழிந்தார். நாற்கூற்றதென்பது விகாரமாயிற்று. அவற்றுள் உற்றவன்வகை நான்காவன பொருளுடைமை, மருத்துவன்வழிநிற்றல், நோய்நிலையுணர்த்தல்வன்மை, மருத்துத்துன்பம் பொறுத்தலெனவிவை. தீர்ப்பான்வகைநான்காவன நோய்கண்டஞ்சாமை, ஆசிரியனைவழிபட்டோதிய கல்வியுநுண்ணறிவுமுடைமை, பலகாலுந்தீர்த்துவருதல், மனமொழிமெய்கடுயேவாதலெனவிவை. மருந்தின்வகைநான்காவன பலபிணிகட்குமேற்றல், சுவை வீரியம் விளைவாற்றல்களான்மேம்படுதல், எளிதினெய்தப்படுதல், பகுதியோடுபொருந்துதலெனவிவை. இயற்றுவான்வகை நான்காவன ஆதுரன்மாட்டன்புடைமை, மனமொழிமெய்கடுயேவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல் வன்மை, அறிவுடைமையெனவிவை. இவையெல்லாங்கூடியவழியல்லது பிணி தீராமையின், இத்தொகுதியையும் மருந்தென்றார். ஆயுள்வேதமுடையாரும் இவை கால்களாக நடக்குமென்பதுபற்றிப் பாதமென்றும், இவை மாறுபட்டவழிச் சாத்தியமுமுதிர்ந்து அசாத்தியமாமென்றுங் கூறினார். இதனால் அதனைத் தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டன. (௧௦)

அங்கவியல் முற்றிற்று.

ஒழிபியல்.

இனி அவ்வரசியலினும் அங்கவியலினும் அடங்காதொழிந்தவற்றதியல்பு பதின்மூன்றதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் குடிமை கூறுகின்றார்.

௯௬ம் அதி.—குடிமை.

அஃதாவது உயர்ந்த குடியின்கட்பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகைவருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின், அச்சிறப்புப்பற்றி இது முன்வைக்கப்பட்டது.

௯௫௧. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு. ௧.

இ - ள். செப்பமும் நாணும் ஒருங்கு - செம்மையும் நாணும் சேர—இற்பிறந்தார் கண் அல்லது இயல்பாக இல்லை - குடிப்பிறந்தார்மாட்டல்லது பிறர்மாட்டியற்கையாக உளவாகா. எ - று.

இல்லுக் குடி குலமென்பன ஒருபொருள; ஈண்டுயர்ந்தவற்றின்மேல. செம்மை கருத்துஞ் சொல்லுஞ் செயலுந் தம்முண் மாறுகாமை. நாண் பழிபாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்காயின் ஒருவர் கற்பிக்கவேண்டாமற் றுமேயுளவாம், பிறர்க்காயிற் கற்பித்தவழியும் நெடிதுநில்லாவென்பதாம். (௧)

௯௫௨. ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார். ௨.

இ - ள். குடிப் பிறந்தார் - உயர்ந்தகுடியின்கட் பிறந்தார்—ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும் இழுக்கார் - தமக்குரிய ஒழுக்கம் மெய்ம்மை நாணெனப்பட்ட இம்மூன்றன்கண்ணும் கல்வியானன்றித் தாமாகவே வழுவார். எ - று.

ஒழுக்கமுதலியன மெய்ம்மொழிமனங்களினவாகலின், அம்முறையவாயின. இழுக்குதல் அறியாது வருகின்றமையின், இழுக்காரென்றார். (௨)

௯௫௩. நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. ௩.

இ - ள். வாய்மைக் குடிக்கு - எக்காலத்துந் திரிபில்லாத குடியின்கட்பிறந்தார்க்கு—நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகை என்ப - வறியார் சென்றவழி முகமலர்ச்சியும், உள்ளனகொடுத்தலும், இன்சொற்சொல்லுதலும், இகழாமையுமாகிய இந்நான்கும் உரிய கூறென்று சொல்லுவர் நூலோர். எ - று.

பொய்ம்மை திரிபுடைமையிற் றிரிபின்மையை வாய்மையென்றும், *இல்லாரையெல்லாருமெள்ளுவராகலின் இகழாமையை அவர் கூறுக்கியுங்கூறினார். குடி ஆகுபெயர். நான்கின்வகையென்பதுபாடமாயின், வாய்மைக்குடிப்பிறந்தார்க்குப் பிறரின் வேறுபாடு இந்நான்கானுளதாமென்றுரைக்க. இவைமூன்று பாட்டானுங் குடிப்பிறந்தாரதியல்பு கூறப்பட்டது. (௩)

௯௫௪. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர். ௪.

இ - ள். அடுக்கிய கோடி பெறினும் - பலவாகவடுக்கிய கோடியளவிற்றாய பொருளைப் பெற்றாராயினும்,—குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர் - உயர்ந்த குடியின்கட்பிறந்தார் தம்மொழுக்கங் குன்றுந் தொழில்களைச் செய்யார். எ - று.

அடுக்கியகோடியென்பது ஈண்டெண்ணப்படும் பொருண்மேனின்றது. குன்றுந்தொழில்கள் குன்றுதற்கேதுவாய தொழில்கள். (௪)

௯௫௫. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று. ௫.

இ - ள். பழங்குடி - தொன்றுதொட்டுவருகின்ற குடியின்கட்பிறந்தார்—வழங்குவது உள்வீழ்ந்தக்கண்ணும் - தாங்கொடுக்கும்பொருள் பண்டையிற் சுருங்கியவிடத்தும்—பண்பின் தலைப்பிரிதல் இன்று - தம்பண்புடைமையின் நீங்கார். எ - று.

தொன்றுதொட்டுவருதல் சேர சோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டுவருதல். அவர்க்கு நல்குரவாவது வழங்குவது உள்வீழ்வதாகலின், அதனையே கூறினார். (௫)

௯௫௬. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார் ௬.

இ - ள். மாசு அற்ற குலம் பற்றி வாழ்தும் என்பார் - வசையற்று வருகின்ற நற்குடிமரபினோடொத்து வாழக்கடவேமென்றுகருதி அவ்வாறு வாழ்வார்,—சலம்

* திருக்குறள், ௭௫௨.

பற்றிச் சால்பு இல செய்யார் - வறுமையுற்றவழியும், வஞ்சனையைப்பொருந்தி, அமைவிலவாய தொழில்களைச் செய்யார். எ - று.

அமைவின்மை அம்மரபிற் கேலாமை. இவை மூன்றுபாட்டானும் அவர் வறுமையுற்றவழியும் அவ்வியல்பின் வேறுபடாரென்பது கூறப்பட்டது. (௬)

௯௫௭. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து. ௭.

இ - ள். குடிப் பிறந்தார்கண் குற்றம் - உயர்ந்தகுடியின்கட்பிறந்தார்மாட்டுள தாங்குற்றம்—விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து விளங்கும் - தான்சிறிதேயாயினும் விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல ஓங்கித்தோன்றும். எ - று.

உயர்குடிமுதலிய பொருள்வகைமூன்றற்கும் விசும்பு முதலிய உவமைவகையொத்துப் பான்மாறுபட்டது. குடியதுயர்ச்சியானும், மதிபோன்ற அவர் நற்குணங்களோடு மாறுதலானும், உலகெங்கும் பரந்து வெளிப்படுமென்பதாம். (௭)

௯௫௮. நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும். ௮.

இ - ள். நலத்தின்கண் நார் இன்மை தோன்றின் - குலநலமுடையனாய் வருகின்றவன்கண்ணே ஈரமின்மையுளதாமாயின்,—அவனைக் குலத்தின்கண் ஐயப்படும் - அவனை அக்குலப்பிறப்பின்கண்ணே ஐயப்படும் உலகம். எ - று.

நலமும் குலமும் ஆகுபெயர். நாரின்மையாற் கொடாமையுங் கடுஞ்சொல்லுமுதலிய கூறப்பட்டன. தோன்றினென்பது தோன்றுமை விளக்கிநின்றது. நலனுடையனாய்வருதலினிடையே இவைதோன்றலின், உள்ளது ஐயமாயிற்று. உலகமென்பது அவாய்நிலையான் வந்தது. ஐயப்படலென்பது பாடமாயின், ஐயப்படுகவென விதியாக்கியுரைக்க. இவையிரண்டுபாட்டானும் வேறுபட்டவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது. (௮)

௯௫௯. நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். ௯.

இ - ள். நிலத்திற் கிடந்தமை கால் காட்டும் - நிலத்தினியல்பை அதன்கண் முளைத்த முளை காட்டும்;—குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல் காட்டும் - அதுபோலக் குலத்தினியல்பை அதன்கட்பிறந்தார்வாயிற் சொற்காட்டும். எ - று.

கிடந்தமை உள்ளபடி. முளைத்தமாத்திரத்தானே நன்மையுந் தீமையுந்தெரிதலின், இலைமுதலிய கூறாராயினர்; ஆகவே, பொருளினுஞ் செயன்முதலியன வேண்டாவாயின, குலத்தியல்பறிதற்கருவி கூறுவார்போன்று, இன்சொல் வேண்டுமென்றவாறாயிற்று. (௯)

௯௬௦. நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. ௧௦.

இ - ள். நலம் வேண்டின் நாண் உடைமை வேண்டும் - ஒருவன் தனக்கு நலனுடைமையை வேண்டுவனாயின், தானாணுடையனாதலை வேண்டுக;—குலம்வேண்டின்

யார்க்கும் பணிவு வேண்டுக - குலனுடைமையை வேண்டுவனுயின், பணியப்படுவார் யாவர்மாட்டும் பணிதலை வேண்டுக. எ - று.

நலம் புகழ் புண்ணியங்கள். வேண்டுமென்பது விதிப்பொருட்டாய் நின்றது, "வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்*" என்புழிப்போல. அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாயென்றிவ †ரெல்லாருமடங்க, யார்க்கு மென்றார். பணிவு இருக்கையெழலும் எதிர்செலவும் முதலாயின. இவையிரண்டுபாட்டானும் குடிமைக்கு வேண்டுவன கூறப்பட்டன. (கய)

சுஎ ம் அதி.—மானம்.

இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறுவான்றொடங்கி, முதற்கண் மானங்கூறுகின்றார். அஃதாவது எஞ்ஞான்றுந் தந்நிலையிற்றாழாமையும், தெய்வத்தாற்றாழ்வுவந்துழி உயிர்வாழாமையுமாம். இஃது, அக்குடிப்பிறப்பினை நிறுத்துதலுடைமையின், அச்சிறப்புப்பற்றி முன் வைக்கப்பட்டது.

சுசுக. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல். க.

இ - ள். இன்றி அமையாச் சிறப்பின ஆயினும் - செய்யாதவழித் தாம் அமையாத சிறப்பினையுடையவேயெனினும்,—குன்ற வருப விடல் - தங்குடிப்பிறப்புத் தாழ வருஞ்செயல்களையொழிக. எ - று.

அமையாமை இறத்தல். குடிப்பிறப்பென்பது அதிகாரமுறைமையான் வந்தது. இறப்பவருவழி இளிவந்தன செய்தாயினும் உய்கவென்னும் வடநூன்‡ முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையுந்தூக்கி அவை செய்யற்கவென்பதாம். (க)

சுசுஉ. சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். உ.

இ - ள். சீரினும் சீர் அல்ல செய்யார் - புகழ் செய்யுமிடத்துந் தங்குடிமைக்கொவ்வாத இளிவரவுகளைச் செய்யார்—சீரொடு பேராண்மை வேண்டுபவர் - புகழுடனே மானத்தை நிறுத்துதலை விரும்புவார். எ - று.

எவ்விடத்தும் நிலைகுலையாத திண்மையான் உளதாதல்பற்றிப் பேராண்மையெனப்பட்டது. நிலையுடைய புகழின்பொருட்டாகவுஞ் செய்யாரென்பதாம். (உ)

சுசுங. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு. ங.

இ - ள். பெருக்கத்துப் பணிதல் வேண்டும் - குடிப்பிறந்தார்க்கு நிறைந்த செல்வமுளதாயவழி யாவர்மாட்டும் பணிவு வேண்டும்;—சிறிய சுருக்கத்து உயர்வு வேண்டும் - குறைந்த நல்குரவுளதாயவழிப் பணியாமை வேண்டும். எ - று.

---

* தொல்காப்பியம், கிளவியாக்கம், ஙங.

† வெண்பாமாலை, பாடாண்படலம், ஙங. ‡ மனுஸ்மிருதி, அத், கய, சுலோ, கயச.

பணியாமை தாழ்வு வாராமற் பழையவுயர்ச்சிக்கண்ணே நிற்றல். செல்வக்காலை அஃதுயர்ச்சி செய்யத் தாந்தாழ்தலும், அல்லற்காலை அது தாழ்வுசெய்யத் தாமுயர்தலும், வேண்டுமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் தாந்தாழ்தற்கேதுவாயின செய்யாமைச் சிறப்புக் கூறப்பட்டது. (ங)

கூசுச. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை. ச.

இ - ள். மாந்தர் - குடிப்பிறந்த மாந்தர்,—நிலையின் இழிந்தக்கடை - தம்முயர்ந்த நிலையை விட்டு அதனினின்றுந்தாழ்ந்தவழி,—தலையின் இழிந்த மயிர் அனையர் - தலையைவிட்டு அதனினின்றும் வீழ்ந்த மயிரினையொப்பர். எ - று.

அந்நிலையை விடாதுநின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத்தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும், உவமையாற்பெற்றாம். (ச)

கூசுரு. குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின். ரு.

இ - ள். குன்றின் அனையாரும் - குடிப்பிறப்பான் மலைபோலவுயர்ந்தோரும்—குன்றுவ குன்றி அனைய செயிற் குன்றுவர் - தாழ்தற்கேதுவாகிய செயல்களை ஒரு குன்றியளவாயினுஞ் செய்வராயிற்றாழ்வர். எ - று.

குன்றியனையவுமென்னும் இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தாழ்தற்கேதுவாய செயல்களாவன இளிவந்தன. சொற்பின்வருநிலை. (ரு)

கூசுசு. புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. சு.

இ - ள். இகழ்வார்பின் சென்று நிலை - மானத்தை விட்டுத் தன்னையவமதிப்பார் பின்னே ஒருவன்சென்று நிற்கின்றநிலை—புகழ் இன்று - இவ்வுலகத்துப் புகழ் பயவாது;—புத்தேள் நாட்டு உய்யாது - ஏனைப் புத்தேளுலகத்துச் செலுத்தாது,—மற்று என் - இனி அவனுக்கு அது செய்வதியாது! எ - று.

புகழ் பயப்பதனைப் புகழென்றார். பயனுய இவ்விரண்டுமின்றிக் கொன்னே மானங்கெடுகின்றது என்னையென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அவை செய்தற் குற்றங் கூறப்பட்டது. (சு)

கூசுஎ. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று. எ.

இ - ள். ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின் - தன்னையிகழ்வார்பின்னே சென்று பொருள்பெற்று அதனாலொருவன் உயிர்வாழ்தலின்,—அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று - அது செய்யாது இறந்தானென்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று. எ - று.

ஒட்டுதல் பொருந்துதல். அந்நிலையேயென்றது செல்லாத முன்னைநிலைக்கண்ணே நின்றென்றவாறு; அப்பொழுதேயென்றுமாம். புகழும் புத்தேணாடும் பயவாதேனும் பொருள்பெற்று உயிர்வாழ்வாமென்பாரை நோக்கிக் கூறியது. (எ)

கூசுஅ. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. அ.

இ - ள். பெருந்தகைமை பீடு அழிய வந்தவிடத்து - உயர்குடிப்பிறப்புத் தன் வலியாகிய மானம் அழியவந்துழி,—ஊன் ஓம்பும் வாழ்க்கை மற்று மருந்தோ - இறத்தலொழிந்து பயனில்லாதவுடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னுமிறவாமைக்கு மருந்தாமோ! எ - று.

மற்றென்பது மேற்சொல்லிய இறப்பினை மாற்றிநின்றது. நற்குணங்கட்கெல்லாம் இடனாதற்சிறப்புப்பற்றிப் பெருந்தகைமையென்றும், அவையெல்லாவற்றுள்ளும் அதற்கு வலியாதற்சிறப்புப்பற்றிப் பீடென்றும், அஃதழிந்தால் நின்றவெற்றுடம்பு இழிக்கப்படுதலின் அதனை ஊனென்றும், பின்னுமிறத்தல் ஒருதலையென்பார் மருந்தோவென்றுங் கூறினார். மானத்தின்றாழில் அதற்கிடனாகிய குடிப்பிறப்பின் மேனின்றது. (அ)

கூசுகூ. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின். கூ.

இ - ள். மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் - தன்மயிர்த்திரளின் ஒருமயிர் நீங்கினும் உயிர்வாழாத கவரிமாவையொப்பார்,—மானம் வரின் உயிர் நீப்பர் - உயிர் நீக்கத்தான் மானமெய்துமெல்லைவரின், அதனைத் தாங்காதிறப்பர். எ - று.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. உயிரும் மானமும் உடனில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரைநீத்து எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தையெய்துவரென்பதாம். உவமை அவர்க்கு அஃதியல்பென்பது விளக்கி நின்றது. (கூ)

கூஎ0. இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு. க0.

இ - ள். இளி வரின் வாழாத மானம் உடையார் ஒளி - தமக்கோரிழிவுவந்துழிப் பொறுத்து உயிர்வாழாது அதனைநீத்த மானமுடையாரது புகழ்வடிவினை—தொழுது ஏத்தும் உலகு - எஞ்ஞான்றுந்தொழுது துதியாநிற்பர் உலகத்தார். எ - று.

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்—வலவ னேவா வான வூர்தி - யெய்து*" வராகலின், துறக்கச்செலவு சொல்லவேண்டாவாயிற்று. இவைநான்கு பாட்டானும் மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப்பட்டது. (க0)

கூஅ ம் அதி.—பெருமை.

அஃதாவது செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர்குற்றங் கூறாமை என்றிவை முதலிய நற்குணங்களாற் பெரியாரது தன்மை. நிலையின மேன்மேலுயர்த்தற் பயத்தவாயவிவை உளவாவது நிலையிற் றாழாமையுள்வழியாகலின், இது மானத்தின் பின் வைக்கப்பட்டது.

கூஎக. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல். க.

* புறநானூறு, உஎ.

இ - ள். ஒருவற்கு ஒளி உள்ள வெறுக்கை - ஒருவனுக்கொளியாவது பிறராற் செயற்கரிய செய்வேமென்று கருதும் ஊக்கமிகுதி;—ஒருவற்கு இளி அஃது இறந்து வாழ்தும் எனல் - ஒருவனுக்கு மாசாவது அச்செயலையொழிந்து உயிர்வாழக்கடவே மென்று கருதுதல். எ - று.

ஒளி தானுளனாயகாலத்து மிக்குத் தோன்றுதலுடைமை. "ஒளிநிறீ ஞேங்கு புகழ் செய்யான்*" என்றார் பிறரும். மேலும் † செயற்கரியசெய்வார் பெரியரென்றா ராயினும், ஈண்டு அவை அளவிறந்த வொப்புரவு ஈகை முதலியவாம். அவற்றினுடைய பெருமையை அதன்காரணத்தின்மேலிட்டு உள்ளவெறுக்கையென்றும், அதுதன் னையே அதன்காரியமாகிய ஒளியாக்கியுங் கூறினார். இவ்வாறு இதனெதிர்மறைக்கண் ணுமொக்கும். இதனாற் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது. (க)

கூளஉ. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். உ.

இ - ள். எல்லாவுயிர்க்கும் பிறப்பு ஒக்கும் - எல்லா மக்களுயிர்க்கும் பொது வாகிய பிறப்பியல்பு ஒக்குமேயெனினும்,—சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமை யான் - பெருமை சிறுமையெனப்பட்ட சிறப்பியல்புகளொவ்வா, அவைசெய்யுந் தொழில்களது வேறுபாட்டான். எ - று.

வேறுபாடு நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும், இரண்டுமல்லவாயினவு மாய அளவிறந்த பாகுபாடுகள். வினைவயத்தாற் பஞ்சபூதபரிணாமமாகிய யாக்கை யைப் பொருந்திநின்று அதன்பயனனுபவித்தல் எல்லாவருணத்தார்க்கு மொத்தலிற் பிறப்பொக்குமென்றும், பெருமைசிறுமைகட்குக் கட்டளைக்கல்லாகிய தொழிற்பாகு பாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலிற் சிறப்பொவ்வாவென்றுங் கூறினார். (உ)

கூளங. மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர். ங.

இ - ள். மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர் - செயற்கரிய செய்க † லாது சிறியராயினார், உயர்ந்த வமளிமுதலியவற்றின் மிசையிருந்தாராயினும், பெரிய ராகார்;—கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழ் அல்லார் - அவைசெய்து பெரியராயினார், தாழ்ந்த வறுநிலத்திருந்தாராயினும், சிறியராகார். எ - று.

மேலிருத்தல் கீழிருத்தல்களாற் செல்வநல்குரவுகளும், மேல்கீழ்களாற் பெருமை சிறுமைகளும், கருதப்பட்டன. இவையிரண்டுபாட்டானும் முறையே குடிமைமாத்தி ரத்தானுஞ் செல்வமாத்திரத்தானும் அஃதுளதாகாமை கூறப்பட்டது. (ங)

கூளச. ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு. ச.

இ - ள். ஒருமை மகளிரே போல - கவராதமனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாமற் றம்மைத் தாங்காத்துக்கொண்டொழுகுமாறுபோல,—பெருமையும் தன்

* உண்ணு னொளி நிறீ ஞேங்கு புகழ்செய்யான்—றுன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே—வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ—விழந்தானென் றெண்ணப் படும்—நாலடியார், செல்வநிலையாமை, கூ.

† திருக்குறள், உகூ.

னைத் தான் கொண்டு ஒழுகின் உண்டு - பெருமைக்குணனும், ஒருவன் நிறையின்வழு வாமற் றன்னைத் தான் காத்துக்கொண்டொழுகுவானாயின், அவன்கணுண்டாம். எ-று.

பொருளின்றொழில் உவமையினும் வந்தது. கற்புண்டாதல் தோன்றநின்றமையின், உம்மை எச்சவும்மை. ஒழுகுதல் மனமொழிமெய்களையொடுக்கி ஒப்புரவு முதலிய செய்துபோதல். இதனால் அஃதுளதாமாறு கூறப்பட்டது. (ச)

கூஎரு. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
அருமை யுடைய செயல். ரு.

இ - ள். பெருமை உடையவர்-அவ்வாற்றாற் பெருமையுடையராயினார்—அருமை உடைய செயல் ஆற்றின் ஆற்றுவார் - தாம் வறியராயவழியும் பிறராற்செய்தற்கரியவாய தஞ்செயல்களை விடாது அவைசெய்யுநெறியாற் கடைபோகச்செய்தலை வல்லராவர். எ - று.

வறியராயவழியுமென்பது, முன்செய்து போந்தமை தோன்றப் பெருமையுடையவரென்றதனானும், ஆற்றுவாரென்றதனானும் பெற்றாம். இதனால் அதனையுடையார் செய்தி கூறப்பட்டது. (ரு)

கூஎசு. சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு. சு.

இ - ள். பெரியாரைப் பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு - அப்பெற்றியராய பெரியாரை வழிபட்டு அவரியல்பினை யாங் கோடுமென்னுங்கருத்து—சிறியார் உணர்ச்சியுள் இல்லை - மற்றைச் சிறியராயினார் மனத்தின்கண் உளதாகாது. எ - று.

குடிமை, செல்வம், கல்வியென்றிவற்றது உண்மைமாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு அவை நமக்கியல்பென்று அமைந்திருப்பாரை வழிபட்டு அஃதுடையராதல் கூடாதென்பதாம். (சு)

கூஎஎ. இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின். எ.

இ - ள். சிறப்புத் தானும் - தனக்கொக்கும்பெரியாரிடத்து அமைந்திருத்தலைச் செய்வதாய சிறப்புத்தானும்,—சீர் அல்லவர்கட் படின் - தனக்கொவ்வாத சிறியாரிடத்துப் படுமாயின்,—இறப்பே புரிந்த தொழிற்றாம் - அதனையொழிந்து தருக்கின்கண்ணே மிக்க செயலையுடைத்தாம். எ - று.

தருக்கினை மிகச்செய்யுமென்பதாயிற்று. சிறப்பு குடிமை, செல்வம், கல்விகளினாய மிகுதி. இவை யிரண்டுபாட்டானும் அஃதிலார் செய்தி கூறப்பட்டது. (எ)

கூஎஅ. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து. அ.

இ - ள். பெருமை என்றும் பணியும் - பெருமையுடையார் அச்சிறப்புண்டாயஞான்றுந் தருக்கின்றி அமைந்தொழுகுவர்;—சிறுமை (என்றும்) தன்னை வியந்து அணியும் - மற்றைச் சிறுமையுடையார் அஃதில்லாதஞான்றுந் தம்மை வியந்து புனையாநிற்பர். எ - று.

பொருளின்றொழில்கள் பண்பின்மேலேற்றப்பட்டன. இஃது * அற்றமறைக்கும் பெருமையென்புழியுமொக்கும். என்றுமென்பது பின்னும் வந்தியைந்தது. ஆமென்பனவிரண்டும் அசை. புனைதல் பிறரிற் றமக்கோர்மிகுதியை யேற்றிக்கோடல். இதற்கு உயர்ந்தார் தாழ்வார் தாழ்ந்தார் உயர்வார் இஃதொரு விரோதமிருந்தவாறென்னென உலகியலை வியந்து கூறிற்றாக்குவாருமுளர். (௮)

௯௭௯. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல். ௯.

இ - ள். பெருமை பெருமிதம் இன்மை - பெருமைக்குணமாவது காரணமுண்டாயவழியும் அஃதியல்பாதனோக்கித் தருக்கின்றியிருத்தல்;—சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல் - சிறுமைக்குணமாவது அஃதில்வழியும் அதனையேற்றிக்கொண்டு தருக்கின்முடிவின்கண்ணே நின்றுவிடுதல். எ - று.

அளவறத்தருக்குதலென்பதாயிற்று. விடுமென்று பாடமோதுவாருமுளர்; முற்றுத்தொடரும் எழுவாய்த்தொடரும் தம்முளியையாமையின், அது பாடமன்மையுணர்க. (௯)

௯௮௦. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். ௧௦.

இ - ள். பெருமை அற்றம் மறைக்கும் - பெருமையுடையார் பிறர்மானத்தையே கூறி அவமானத்தை மறையாநிற்பர்;—சிறுமை குற்றமே கூறிவிடும் - மற்றைச்சிறுமையுடையார் பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறிவிடுவர். எ - று.

மறைத்தலுங் கூறலும் ஏனையிடத்துமியைந்தன. அற்றம் ஆகுபெயர். தானென்பது அசை. இவைமூன்றுபாட்டானும் இருவர் செயலும் ஒருங்கு கூறப்பட்டன. (௧௦)

---

௯௯ ம் அதி.—சான்றாண்மை.

அஃதாவது பலகுணங்களானுநிறைந்து அவற்றையாடற்றன்மை. பலகுணங்களானுமென்பது சாலுதற்றொழிலாற் பெறப்படுதலின், அவற்றையென்பது வருவிக்கப்பட்டது. பெருமையுளடங்காத குணங்கள் பலவற்றையுந் தொகுத்துக்கொண்டு நிற்றலின், இஃததன்பின் வைக்கப்பட்டது.

௯௮௧. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. ௧.

இ - ள். கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு—நமக்குத் தகுவது இதுவென்றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு—நல்லவை எல்லாம் கடன் என்ப - நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்குமென்று சொல்லுவர் நூலோர். எ - று.

சில குணங்களில்லவாயவழியும் உள்ளன செய்துகொண்டனவாயவழியுஞ் சான்றாண்மையென்னுஞ் சொற்பொருள் கூடாமையின், நூலோர் இவ்வேதுப்பெயர்பற்றி அவரிலக்கணம் இவ்வாறு கூறுவரென்பதாம். (௧)

* திருக்குறள், ௯௮௦.

௯அஉ. குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று. உ.

இ-ள். சான்றோர் நலன் குணநலமே - சான்றோர்நலமாவது குணங்களானாய நலமே;—பிற நலம் எந்நலத்தும் உள்ளது அன்று - அஃதொழிந்த வுறுப்புக்களானாய நலம் ஒருநலத்தினுமுள்ளதன்று. எ-று.

அகநலத்தை முன்னே பிரித்தமையின் ஏனைப்புறநலத்தைப் பிறநலமென்றும், அது குடிப்பிறப்புங்கல்வியுமுதலாக நூலோரெடுத்த நலங்களுட் புகுதாமையின் எந்நலத்துள்ளதூஉமன்றென்றுங் கூறினார். இவையிரண்டுபாட்டானும் சால்பிற்கேற்ற குணங்கள் பொதுவகையாற் கூறப்பட்டன. (உ)

௯அ௩. அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண். ௩.

இ-ள். அன்பு - சுற்றத்தார்மேலேயன்றிப் பிறர்மேலுமுளதாய வன்பும்—நாண் - பழிபாவங்களினாணலும்—ஒப்புரவு - யாவர்மாட்டுமொப்புரவு செய்தலும்—கண்ணோட்டம் - பழையார்மேற்கண்ணோடலும்—வாய்மை - எவ்விடத்தும் மெய்ம்மைகூறலுமென—சால்பு ஊன்றிய தூண் ஐந்து - சால்பென்னும் பாரத்தைத் தாங்கிய தூண்களைந்து. எ-று.

எண்ணொடு முன்னவற்றோடுங் கூடிற்று. இக்குணங்களில்வழிச் சால்பு நிலைபெறாமையின், இவற்றைத் தூணென்றார். ஏகதேசவுருவகம். (௩)

௯அ௪. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. ௪.

இ-ள். நோன்மை கொல்லா நலத்தது - பிறவறங்களும் வேண்டுமாயினுந் தவம் ஒருயிரையுங் கொல்லாத வறத்தின்கண்ணதாம்;—சால்பு பிறர் தீமை சொல்லா நலத்தது - அதுபோலப் பிறகுணங்களும் வேண்டுமாயினுஞ் சால்பு பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தின் கண்ணதாம். எ-று.

நலமென்னும் ஆகுபெயர்ப்பொருளிரண்டனையுந் தலைமை தோன்ற இவ்விரண்டற்குமதிகாரமாக்கிக் கூறினார். தவத்திற்குக் கொல்லாவறஞ் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர் குற்றஞ்சொல்லாக்குணஞ் சிறந்ததென்பதாம். (௪)

௯அ௫. ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. ௫.

இ-ள். ஆற்றுவார் ஆற்றல் பணிதல் - ஒருகருமத்தைச் செய்து முடிப்பாராதற்றலாவது அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல்;—சான்றோர் மாற்றாரை மாற்றும் படை அது - இனிச் சால்புடையார் தம்பகைவரைப் பகைமையொழிக்குங்கருவியும் அது. எ-று.

ஆற்றல் அது வல்லராந்தன்மை. இறந்ததுதழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. சால்பிற்கேற்ற பணிதற்குணத்தது சிறப்புக்கூறுவார், ஏனையதுமுடன் கூறினார். (௫)

௯௮௬. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல். ௬.

இ - ள். சால்பிற்குக் கட்டளை யாது எனின் - சால்பாகிய பொன்னினளவறிதற்கு உரைகல்லாகிய செயல் யாதெனின்,—தோல்வி துலை அல்லார்கண்ணும் கொளல் - அது தம்மினுயர்ந்தார் மாட்டுக்கொள்ளுந் தோல்வியை இழிந்தார்மாட்டுங் கோடல். எ - று.

துலை ஒப்பு. எச்சவும்மையான் இருதிறத்தார்கண்ணும் வேண்டுதல் பெற்றாம். கொள்ளுதல் வெல்லுமாற்றலுடையராயிருந்தே ஏற்றுக்கொள்ளுதல். இழிந்தாரை வெல்லுதல்கருதித் தம்மோடொப்பித்துக்கொள்ளாது தோல்வியான் அவரினுயர்வராயின், அதனாற் சால்பளவறியப்படுமென்பதாம். (௬)

௯௮௭. இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு. ௭.

இ - ள். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் - தமக்கின்னாதவற்றைச் செய்தார்க்குஞ் சால்புடையார் இனியவற்றைச் செய்யாராயின்,—சால்பு என்ன பயத்தது - அச்சால்பு வேறென்ன பயனையுடைத்து! எ - று.

சிறப்பும்மை அவர் இன்னாசெய்தற்கிடனாதல் விளக்கிநின்றது. ஓகாரம் அசை. வினா எதிர்மறைப்பொருட்டு. தாமுமின்னாசெய்வராயின், சால்பாலொருபயனுமில்லையென்பதாம். இவையைந்துபாட்டானுஞ் சிறப்புவகையாற் கூறப்பட்டது. (௭)

௯௮௮. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். ௮.

இ - ள். சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் - சால்பென்று சொல்லப்படும் வலியுண்டாகப்பெறின்,—ஒருவற்கு இன்மை இளிவு அன்று - ஒருவனுக்கு நல்குரவு இளிவாகாது. எ - று.

தளராமை நாட்டுதலின், வலியாயிற்று. இன்மையான் வருவதனை இன்மைதானாக உபசரித்துக்கூறினார். சால்புடையார் நல்கூர்ந்தவழியும் மேம்படுதலுடையரென்பதாம். (௮)

௯௮௯. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். ௯.

இ - ள். சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார் - சால்புடைமையாகிய கடற்குக் கரையென்று சொல்லப்படுவார்,—ஊழி பெயரினும் தாம் பெயரார் - ஏனைக்கடலுங் கரையுணில்லாமற் காலந்திரிந்தாலும் தாந்திரியார். எ - று.

சான்றாண்மையது பெருமைதோன்ற அதனைக் கடலாக்கியும், அதனைத் தாங்கிக்கொண்டுநிற்றலின் அஃதுடையாரைக் கரையாக்கியுங்கூறினார்; "பெருங்கடற் காழியனையன் மாதோ*" என்றார் பிறரும். ஏகதேசவுருவகம். (௯)

௯௯0. சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்
றாங்காது மன்னோ பொறை. ௧0.

* புறநானூறு, ௩௩0.

இ - ள். சான்றவர் சான்றாண்மை குன்றின் - பலகுணங்களானுநிறைந்தவர் தந்தன்மை குன்றுவராயின்,—இருநிலந்தான் பொறை தாங்காது - மற்றையிருநிலந்தானுந் தன்பொறையைத் தாங்காதாய்முடியும். எ - று.

தானுமென்னுமெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அவர்க்கது குன்றாமையும் அதற்கது தாங்கலும் இயல்பாகலான், அவை யென்ஞான்று முளவாகாவென்பது தோன்றநின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. ஓகாரம் அசை. இதற்கு இருநிலம் பொறை தாங்குவது சான்றவர் துணையாகவருதலான் அதுவும் அது தாங்கலாற்றாதென்றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் அவற்றானிறைந்தவரது சிறப்புக் கூறப்பட்டது. (௧௦)

---

௧௦௦ ம் அதி.—பண்புடைமை.

அஃதாவது பெருமை சான்றாண்மைகளிற்றாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளுமறிந்தொத்தொழுகுதல்; "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்*" என்றார் பிறரும். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௯௯௧. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. ௧.

இ - ள். யார்மாட்டும் எண்பதத்தால்-யாவர்மாட்டுமெளிய செவ்வியராதலால்—பண்புடைமை என்னும் வழக்கு எய்தல் எளிது என்ப - அரிதாய பண்புடைமையென்னும் நன்னெறியினை யெய்துதல் எளிதென்று சொல்லுவர் நூலோர். எ - று.

குணங்களானிறைந்து செவ்வியெளியருமாயக்காற் பண்புடைமை தானே உளதாமாகலின், எண்பதத்தாலெய்தலெளிதென்றும், அஃதுலகத்தையெல்லாம் வசிகரித்தற்பயத்ததாகலின் அதனைத் தொல்லோர்சென்ற நன்னெறியாக்கியும், அதனையெளிதினெய்துதற்கு இது நூலோரோதியவுபாயமென்பார் அவர்மேல் வைத்துங்கூறினார்.()

௯௯௨. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. ௨.

இ - ள். அன்புடைமை ஆன்ற குடிப் பிறத்தல் இவ்விரண்டும் - பிறர்மேலன்புடையனாதலும் உலகத்தோடமைந்த குடியின்கட் பிறத்தலுமாகிய இவ்விரண்டும்—பண்புடைமை என்னும் வழக்கு - ஒருவனுக்குப் பண்புடைமையென்று உலகத்தார் சொல்லும் நன்னெறி. எ - று.

அமைதல் ஒத்துவருதல். குடிப்பிறத்தலென்றது பிறந்தார் செயலை. தனித்தவழி ஆகாது இரண்டுங்கூடியவழியே ஆவதென்பது தோன்ற, முற்றும்மை கொடுத்தார். காரணங்கள் காரியமாக வுபசரிக்கப்பட்டன. இவையிரண்டுபாட்டானும் பண்புடையராதற்காரணங் கூறப்பட்டது. (௨)

௯௯௩. உறுப்பொத்தன் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு. ௩.

---

* கலி, நெய்தல், ௧௬.

இ - ள். உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்று - செறியத்தகாதவுடம்பாலொத்தல் ஒருவனுக்கு நன்மக்களோடொப்பாகாமையின் அது பொருந்துவதன்று;—ஒப்பதாம் ஒப்பு வெறுத்தக்க பண்பு ஒத்தல் - இனிப் பொருந்துவதாய வொப்பாவது செறியத்தக்க பண்பாலொத்தல். எ - று.

வடநூலார் அங்கமென்றமையின், உறுப்பென்றார். ஒருவனுக்கு நன்மக்களோடு பெறப்படுமொப்பாவது உயிரின்வேறாய் நிலையுதலில்லாவுடம்பொத்தலன்று, வேறன்றி நிலையுதலுடைய பண்பொத்தலாகலான், அப்பெற்றித்தாய அவர் பண்பினையுடையனாக வென்பதாம். (௩)

௯௯௪. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு. ௪.

இ - ள். நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார் பண்பு - நீதியையும் அறத்தையும் விரும்புதலாற் பிறர்க்குந்தமக்கும் பயன்படுதலுடையாரது பண்பினை—உலகு பாராட்டும் - உலகத்தார் கொண்டாடாநிற்பர். எ - று.

புரிந்தவென்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப்பொருட்டு. நயனொடுநன்றி புரிதலும் பயனுடைமையும் பண்புகாரணமாக வந்தமையின், அதனைப்பாராட்டுமென்றார். (௪)

௯௯௫. நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. ௫.

இ - ள். இகழ்ச்சி நகையுள்ளும் இன்னாது - தன்னையிகழ்தல் ஒருவற்கு விளையாட்டின்கண்ணும் இன்னாது;—பாடு அறிவார்மாட்டுப் பகையுள்ளும் பண்பு உள - ஆகலாற் பிறர் பாடறிந்தொழுகுவார்மாட்டுப் பகைமையுள்வழியும் அஃதுளதாகாது இனியவாய பண்புகளே உளவாவன. எ - று.

பாடறிவாரெனவே, அவ்வின்னாமையறிதலும் பெற்றாம். அதனையறிந்தவர் பின் அது செய்யார் இனியவே செய்வாரென்பதுகருத்து. இதற்குப் பிறரெல்லாம் இரண்டு தொடருந்தம்முளியையாமலுரைப்பாரும், இன்னாதென்னுஞ்சொற்குப் பிறவாதென்றுரைப்பாருமாயினார். (௫)

௯௯௬. பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். ௬.

இ - ள். பண்பு உடையார்ப் பட்டு உலகம் உண்டு - பண்புடையார்கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்றுமுண்டாய் வாராநின்றது;—இன்றேல் அது மண்புக்கு மாய்வது - ஆண்டுப்படுதலில்லையாயின், அது மண்ணின்கட்புக்கு மாய்ந்துபோவதாம். எ - று.

படவென்பது திரிந்துநின்றது. உலகு ஆகுபெயர். மற்றைப் பண்பில்லார் சார்பன்மையின் ஓர்சார்புமின்றி மண்ணின்கட்புக்கு மாயுமது வேண்டாவாயிற்றென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. இவைநான்குபாட்டானும் அதனையுடையாரதுயர்ச்சி கூறப்பட்டது. (௬)

௯௯௭. அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். ௭.

இ - ள். மக்கட்பண்பு இல்லாதவர் - நன்மக்கட்கேயுரிய பண்பில்லாதவர்,— அரம்போலும் கூர்மையரேனும் - அரத்தின் கூர்மைபோலுங் கூர்மையையுடையரே யாயினும்,—மரம் போல்வர் - ஓரறிவிற்றாய மரத்தினையொப்பர். எ - று.

அரம் ஆகுபெயர். ஓரறிவு ஊற்றினையறிதல். உவமையிரண்டனுள், முன்னது தான் மடிவின்றித் தன்னையுற்ற பொருள்களை மடிவித்தலாகிய தொழில்பற்றி வந்தது; ஏனையது விசேடவறிவின்மையாகிய பண்புபற்றி வந்தது. அவ்விசேடவறிவிற்குப் பயனாய மக்கட்பண்பின்மையின், அதுதானுமில்லையென்பதாயிற்று. (எ)

கூகூஅ. நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை. அ.

இ - ள். நண்பு ஆற்றாராகி நயம் இல செய்வார்க்கும் - தம்மொடு நட்பினைச் செய்யாது பகைமையைச் செய்தொழுகுவார்மாட்டும்,—பண்பு ஆற்றாராதல் கடை - தாம் பண்புடையராயொழுகாமை அறிவுடையார்க்கிழுக்காம். எ - று.

நயம் ஈரம். சிறப்பும்மை அவர் பண்பாற்றாமைக்கிடனாதல் தோன்றநின்றது. அதனைச்செய்யிற்றாமும் அவர்தன்மையராவரென்பார், கடையென்றார். (அ)

கூகூகூ. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். கூ.

இ - ள். நகல் வல்லர் அல்லார்க்கு - பண்பின்மையான் ஒருவரோடுங்கலந்து உண்மகிழ்தன்மாட்டாதார்க்கு,—மாயிரு ஞாலம் பகலும் இருட்பாற் பட்டன்று - மிகவும் பெரியஞாலம் இருளில்லாத பகற்பொழுதினும் இருளின்கட்கிடந்ததாம். எ - று.

எல்லாரோடுங் கலந்தறியப்பெறாமையிற் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாதென்பார், உலகமிருளின்கட்பட்டதென்றார். பாழ்பட்டன்றிருளென்று பாடமோதி, இருணீங்கிற்றன் றென்றுரைப்பாருமுளர். (கூ)

க000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று. க0.

இ - ள். பண்பு இலான் பெற்ற பெருஞ்செல்வம் - பண்பில்லாதவன் முன்னைநல்வினையானெய்திய பெரிய செல்வம் அக்குற்றத்தால் ஒருவற்கும் பயன்படாது கெடுதல்,—நன்பால் கலந்தீமையால் திரிந்தற்று - நல்லவான்பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன்சுவைத்தாகாது கெட்டாற்போலும். எ - று.

கலத்தீமையென்பது மெலிந்துநின்றது. தொழிலுவமமாகலின் பொருளின்கண் ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. படைக்குமாற்றலிலனாதறோன்றப் பெற்றவென்றும், எல்லாப்பயனுங்கோடற்கேற்ற இடனுடைமைதோன்றப் பெருஞ்செல்வமென்றுங்கூறினார். அச்செல்வமும் பயன்படாதென்ற இதனான் வருகின்ற அதிகாரப் பொருண்மையுந் தோற்றுவாய் செய்யப்பட்டது. இவை நான்குபாட்டானும் அஃதில்லாரதிழிவு கூறப்பட்டது. (க0)

க0கம் அதி.—நன்றியில்செல்வம்.

அஃதாவது ஈட்டியார்க்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினதியல்பு. உடையானதுகுற்றஞ் செல்வத்தின்மேலேற்றப்பட்டது. அதிகாரமுறைமை மேற்றோற்றுவாய் செய்தவனாதற் பெற்றாம்.

௧00௧. வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில். ௧.

இ - ள். வாய் சான்ற பெரும்பொருள் வைத்தான் அஃது உண்ணான் - தன்மனையகலமெல்லாம் நிறைதற்கேதுவாய பெரும்பொருளையீட்டிவைத்து உலோபத்தால் அதனையுண்ணாதவன்—செத்தான் செயக் கிடந்தது இல் - உளனாயினுஞ் செத்தானும், அதன்கண் அவனாற் செயக்கிடந்ததோருரிமையின்மையான். எ - று.

வைத்தானென்பது முற்றெச்சம். உண்ணுதல் அதனானைம்புலன்களையும் நுகர்தல். வாய்சான்றபெரும்பொருளை வைத்தானொருவன் அதனையுண்ணாது செத்தவழி அதன்கண் அவனாற்செயக்கிடந்ததோருரிமையில்லையாகலான், வையாது பெற்றபொழுதே நுகர்கவென்றுரைப்பினுமமையும். இதற்குச் செத்தானென்பது எச்சம். இதனால் ஈட்டியானுக்குப் பயன்படலின்மை கூறப்பட்டது. (௧)

௧00௨. பொருளானா மெல்லாமென் றீயா திவறு
மருளானா மாணாப் பிறப்பு. ௨.

இ - ள். பொருளான் எல்லாம் ஆம் என்று - பொருளொன்றுமுண்டாக அதனாலெல்லாமுண்டாமென்றறிந்து அதனையீட்டி—ஈயாது இவறும் மருளான் - பின் பிறர்க்கீயாது பற்றுள்ளஞ்செய்யு மயக்கத்தாலே—மாணாப் பிறப்பு ஆம் - ஒருவனுக்கு நிறைதலில்லாத பேய்ப்பிறப்புண்டாம். எ - று.

இருமையினு மெய்து மின்பங்கள் பலவுமடங்க எல்லாமென்றும், ஈட்டுதற்கு முன்னுண்டாயவறிவு பின் மயங்குதலின் மருளென்றும், பொருளுண்டாயிருக்கப் பிறர்பசி கண்டிருந்த தீவினைபற்றி உணவுகளுளவாயிருக்கப் பசித்துவருந்தும் பிறப்புளதாமென்றுங் கூறினார். (௨)

௧00௩. ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை. ௩.

இ - ள். ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர் தோற்றம் - யாம் பிறரின்மிக வீட்டுதுமென்று பொருளினீட்டன் மாத்திரத்தையே விரும்பி அதன்பயனாய புகழை விரும்பாத மக்களது பிறப்பு—நிலக்குப் பொறை - நிலத்திற்குப் பாரமாமத்துணையே. எ - று.

இசை இருமைக்குமுறுதியாய அறமாகலின் ஈகையான் அதனையே வேண்டல் செய்யாது ஈட்டற்றுன்பத்தையும் காத்தற்றுன்பத்தையும் வேண்டியவறிவின்மை பற்றி, நிலக்குப்பொறையென்றார். பிறப்பென்றது அதற்குரியவுடம்பினை. (௩)

௧00௪. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன். ௪.

இ - ள். ஒருவரால் நச்சப்படாதவன் - ஒருபொருளுமீந்தறியாமையின் ஒருவராலும் நச்சப்படுதலில்லாதவன்—எச்சமென்று என் எண்ணுங்கொல் - தானிறந்தவழி ஈண்டொழிந்து நிற்பதாக யாதனைக்கருதுமோ! எ - று.

ஈண்டொழிந்து நிற்கும்புகழ் ஈவான்மேலன்றி நில்லாமையின் அவனுக் கதனோடியாதுமியைபில்லை யென்பார், எனென்னுங் கொல்லோவென்றார். ஓகாரம் அசை. இவை மூன்றுபாட்டானும் பிறர்க்குப் பயன்படலின்மை கூறப்பட்டது. (௪)

௧௦௦௫. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில். ௫.

இ - ள். கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு - பிறர்க்கீவதும் தானுகர்வதுமாய இரண்டு செய்கையுமுடையரல்லாதார்க்கு - அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - பலவாகவடுக்கிய கோடி பொருளுண்டாயினும் ஒன்றுமில்லை. எ - று.

இன்பத்தினும் அறஞ்சிறந்தமையின், கொடுத்தற்றொழில் முற்கூறப்பட்டது. அடுக்கியகோடியென்றது ஈண்டெண்ணப்படும் பொருண்மேனின்றது. ஒன்றுமில்லார்போலப் பயனிரண்டுமிழத்தலின், இல்லென்றார். (௫)

௧௦௦௬. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீத லியல்பிலா தான். ௬.

இ - ள். தான் துவ்வான் தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பிலாதான் - தானுகரானாய் அதன்மேலுந் தகுதியுடையார்க்கு அவர் வேண்டியதொன்றனை ஈதலியற்கையிலனாயினான்—பெருஞ் செல்வம் ஏதம் - இரண்டுஞ் செய்தற் கிடனுடைத்தாய செல்வத்திற்கு ஒருநோய். எ - று.

தகுதி தானங்கோடற்கேற்புடைமை. ஏதம் ஆகுபெயர். நுகரப்படுதலும் ஈயப்படுதலுமாகிய தொழிற்குரியதனை அன்றாக்கினமையின், நோயென்றார். ஈதலியல்பிலாதானது பெருஞ்செல்வம் அவனுக்கு ஈட்டல் காத்தன்முதலியவற்றால் துன்பமேயாமென்றுரைப்பாருமுளர். இவையிரண்டுபாட்டானும் அவ்விருமையும் உடன் கூறப்பட்டன. (௬)

௧௦௦௭. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றா டமியண்மூத் தற்று. ௭.

இ - ள். அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் - ஒருபொருளுமிலராயினார்க்கு அவர் வேண்டியதொன்றனைக் கொடாதானது செல்வம் கொன்னே கழிதல்—மிகநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று - பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றாளொருத்தி கொடுப்பாரின்மையிற் கொழுநனின்றித் தமியளாய் மூத்ததன்மைத்து. எ - று.

நலம் வடிவினன்மையும் குணத்தினன்மையும். இரண்டுமொருங்கு பெறுதலரிதாகலின், பெற்றாளென்றார். கொடுப்பாருங் கொழுநனுமேயன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரியோடுவமை கூறினமையின், தானுமேற்பானுமேயன்றிச் செல்வமும் பயனிழந்து கழியுமென்பதாயிற்று. (௭)

௧௦௦௮. நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று. ௮.

இ - ள். நச்சப்படாதவன் செல்வம் - வறியார்க்கணியனாயிருந்தும் ஒன்றுங்கொடாமையின் அவரானச்சப்படாதவன் செல்வமெய்துதல்—ஊர் நடுவுள் நச்சுமரம் பழுத்தற்று - ஊரிடை நிற்பதோர் நச்சுமரம் பழுத்தாற்போலும். எ - று.

நடுவூரென்பது பின்முன்னாகத்தொக்க வாறாம்வேற்றுமைத்தொகை. அண்மையுடைமைகளாற் பயனில்லையென்பதாம். (௮)

௧00௯. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர். ௯.

இ - ள். அன்பு ஒரீஇ - ஒருவன் கொடாமைப்பொருட்டுச் சுற்றத்தார் நட்டார்கண் அன்பு செய்தலையொழிந்து—தற்செற்று - வேண்டுவன நுகராது தன்னைச்செறுத்து—அறம் நோக்காது - வறியார்க்கு ஈதன் முதலியவறத்தை நினைப்பதுஞ்செய்யாது—ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர் - ஈட்டிய வொள்ளிய பொருளைக் கொண்டுபோய்ப் பயன்பெறுவார் பிறர். எ - று.

பயனுய அறனும் இன்பமுஞ் செய்துகொள்ளாதானுக்குப் பொருளாலுள்ளது ஈட்டற்றுன்பமேயென்பது தோன்ற ஈட்டியவென்றும், அவன்வழியினுள்ளார்க்கும் உதவாதென்பது தோன்றப் பிறரென்றுங் கூறினார். (௯)

௧0௧0. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. ௧0.

இ - ள். சீர் உடைச் செல்வர் சிறுதுனி - புகழுடைத்தாய செல்வத்தினையுடையவரது நிற்குங்காலஞ் சிறிதாய வறுமை—மாரி வறங்கூர்ந்தனையது உடைத்து - உலகத்தையெல்லாம் நிலைநிறுத்துமேகம் வறுமை மிக்காற்போல்வதோரியல்பினையுடைத்து. எ - று.

துனி வெறுப்பு; அதனைச்செய்தலாற் றுனியெனப்பட்டது. யாவர்க்கும் பயன் பட்டார் அதனுன் வறியராயவழியும் அவ்வறுமை கடிதினீங்குதலிற் பின்புஞ் செல்வராய்ப் பயன்படுவரென்பது உவமையாற் பெறப்பட்டது; படவே, நன்றியில்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன்படாதென்பதாயிற்று. இதற்குச் சீருடைச்செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில்வெறுப்பு மாரிவறங்கூர்ந்தனைய தன்மையையுடைத்தென அதிகாரத்தோடு பொருந்தாமை மேலும் ஓர்பொருட்டொடர்புபடாமலுரைப்பாருமுளர். இவை நான்குபாட்டானும் அச்செல்வத்தது குற்றங் கூறப்பட்டது. (௧0)

---

௧0௨ ம் அதி.—நாணுடைமை.

அஃதாவது மேற்சொல்லிய சால்பு பண்புமுதலிய குணங்களானுயர்ந்தோர் தமக்கொவ்வாத கருமங்களில் நாணுதலுடையராந்தன்மை. அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

௧0௧௧. கருமத்தா னாணுத னாணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற. ௧.

இ - ள். நாணுக் கருமத்தால் நாணுதல் - நன்மக்களுணுவது இழிந்த கருமங்காரணமாக நாணுதல்;—பிற திருநுதல் நல்லவர் நாணு - அஃதன்றி மனமொழிமெய்கள தொடுக்கத்தான் வருவனவோவெனின், அவை அவரளவல்ல அழகிய நுதலினையுடைய குலமகளிர் நாண்கள். எ - று.

பிற குலமகளிர்நாணென்றதனுன் ஏனையது நன்மக்களுணென்பதும், நாணுதலென்றதனுற் கருமத்ததிழிவும் பெற்றும். திருநுத னல்லவரென்பது புகழ்ச்சிக்குறிப்பு. ஏதுப்பன்மைபற்றிப் பிறவென்றார். இனி அற்றமறைத்தன்முதலியன பொதுமகளிர் நாணேடொக்குமென்றுரைப்பாருமுளர்; அவர்க்கு நாண் கேடுபயக்குமென விலக்

கப்பட்டமையானும், அவர்பெயராற் கூறப்படாமையானும் அஃதுரையன்மையறிக. இதனான் நாணினதிலக்கணங் கூறப்பட்டது. (க)

கOகஉ. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. உ.

இ - ள். ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறு அல்ல - ஊணும் உடையும் அவையொழிந்தனவும் மக்களுயிர்க்கெல்லாம் பொது;—மாந்தர் சிறப்பு நாணுடைமை- நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே, அவையல்ல. எ - று.

ஒழிந்தன உறக்கமும் அச்சமுங் காமமும். சிறப்பு அவ்வுயிர்களின்வேறுபாடு. அச்சமென்று பாடமோதுவாருமுளர். (உ)

கOகங. ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு. ங.

இ - ள். உயிரெல்லாம் ஊனைக் குறித்த - எல்லாவுயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனைவிடா;—சால்பு நாண் என்னும் நன்மை குறித்தது - அதுபோலச் சால்பு நாணென்னு நன்மைக்குணத்தைத் தனக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனை விடாது. எ - று.

உடம்பென்பது சாதியொருமை. நன்மை ஆகுபெயர். உயிர் உடம்போடு கூடியல்லது பயனெய்தாதவாறுபோலச் சால்பு நாணோடுகூடியல்லது பயனெய்தாதென்பதாம். ஊணைக்குறித்தவென்று பாடமோதுவாருமுளர். (ங)

கOகச. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றோ பீடு நடை. ச.

இ - ள். சான்றோர்க்கு நாணுடைமை அணியன்றோ - சான்றோர்க்கு நாணுடைமை ஆபரணமாம்;—அஃது இன்றேல் பீடு நடை பிணியன்றோ - அவ்வாபரணமில்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம். எ - று.

அழகுசெய்தலின் அணியென்றும், பொறுத்தற் கருமையிற் பிணியென்றுங் கூறினார். ஓகாரவிடைச்சொற்கள் எதிர்மறைக்கண் வந்தன. இவைமூன்றுபாட்டானும் அதன் சிறப்புக் கூறப்பட்டது. (ச)

கOகரு. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு. ரு.

இ - ள். பிறர் பழியும் தம்பழியும் நாணுவார் - பிறர்க்கு வரும் பழியையுந் தமக்கு வரும்பழியையும் ஒப்பமதித்து நாணுவாரை—உலகு நாணுக்கு உறைபதி என்னும் - உலகத்தார் நாணுக்குறைவிடமென்று சொல்லுவர். எ - று.

ஒப்பமதித்தல் அதுவுந்தமக்கு வந்ததாகவே கருதுதல். அக்கருத்துடையார் பெரியராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வரென்பதாம். இதனால் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது. (ரு)

கOகசு. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். சு.

இ - ள் மேலாயவர் - உயர்ந்தவர்,—வேலி நாண் கொள்ளாது - தமக்கேமமாக நாணினைக் கொள்வதன்றி,—வியன் ஞாலம் பேணலர் - அகன்ற ஞாலத்தைக்கொள்ள விரும்பார். எ - று.

பழிபாவங்கள் புகுதாமற்காத்தலின், வேலியென்றார். நாணும் ஞாலமுந் தம்முண் மாறாயவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவைபுகுது நெறியாய ஞாலத்தினைக் கொள்ள விரும்பாரென்பதாம். மன்னும் ஓவும் அசை. நாணாகிய வேலியைப் பெற்றல்லது ஞாலம்பெற விரும்பாரென்றுரைப்பாருமுளர். (கூ)

க0கஎ. நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
நாண்டுறவார் நாணாள் பவர். எ.

இ - ள். நாண் ஆள்பவர் - நாணினது சிறப்பறிந்து அதனை விடாதொழுகுவார்—நாணால் உயிரைத் துறப்பர் - அந்நாணுமுயிருந்தம்முண் மாறாயவழி நாண் சிதையாமற்பொருட்டு உயிரை நீப்பர்;—உயிர்ப்பொருட்டு நாண் துறவார் - உயிர் சிதையாமற்பொருட்டு நாணினை நீக்கார். எ - று.

உயிரினும் நாண்சிறந்ததென்பதாம். இவையிரண்டுபாட்டானும் அவர்செயல் கூறப்பட்டது. (எ)

க0கஅ. பிறர்நாணத் தக்கது தானாணா னாயி
னறநாணத் தக்க துடைத்து. அ.

இ - ள். பிறர் நாணத்தக்கது தான் நாணாயின் - கேட்டாருங்கண்டாரு நாணத்தக்க பழியை ஒருவன் தானாணாது செய்யுமாயின்,—அறம் நாணத்தக்கது உடைத்து - அந்நாணாமை அவனை அறம் விட்டுநீங்கத்தக்க குற்றத்தினையுடைத்து. எ - று.

தானெனச் செய்வானைப் பிரிக்கின்றாராகலின், பிறரென்றார். நாணுடைமையில்லாதானை அறஞ்சாராதென்பதாம். (அ)

க0ககூ. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை. கூ.

இ - ள். கொள்கை பிழைப்பிற் குலம் சுடும் - ஒருவனுக்கொழுக்கம் பிழைக்குமாயின் அப்பிழைப்பு அவன் குடிப்பிறப்பொன்றனையுங் கெடுக்கும்,—நாணின்மை நின்றக்கடை நலம் சுடும் - ஒருவன்மாட்டு நாணின்மை நின்றவழி அந்நிலை அவனலம் யாவற்றையுங் கெடுக்கும். எ - று.

நிற்றல் ஒருபொழுது நீங்காமை. நலம் சாதியொருமையாகலின், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனமென்றிவற்றான் வந்தனவெல்லாங்கொள்ளப்படும். ஒழுக்கவழியினும் நாணழிவு இறப்பத் தீதென்பதாம். (கூ)

க0உ0. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று. க0.

இ - ள். அகத்து நாண் இல்லார் இயக்கம் - தம்மனத்தின்கண் நாணில்லாத மக்கள் உயிருடையார்போன்றியங்குகின்ற வியக்கம்—மரப்பாவை நாணால் உயிர் மருட்டியற்று - மரத்தாற்செய்த பாவை இயந்திரக்கயிற்றினானாய தன்னியக்கத்தால் உயிருடைத்தாக மயக்கினாற்போலும். எ - று.

கருவியே கருத்தாவாயிற்று. நாணில்லாத மக்களியக்கம் நாணுடைய பாவை யியக்கம்போல்வதல்லது உயிரியக்கமன்றென்பதாம். இவை மூன்று பாட்டானும் நாணில்லாரதிழிவு கூறப்பட்டது. (௧0)

---

௧0௩ ம் அதி.—குடிசெயல்வகை.

அஃதாவது ஒருவன்றான் பிறந்த குடியை உயரச்செய்தலின்றிறம். இது தாழ்வின்கணுணுதலுடையார்க்குளதாவதாகலின் நாணுடைமையின்பின் வைக்கப்பட்டது.

௧0௨௧. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில். ௧.

இ - ள். கருமம் செயக் கைதூவேன் என்னும் பெருமையின் - தன்குடி செய்தற் பொருட்டுத் தொடங்கிய கருமமுடியாமையின் எண்ணியகருமஞ் செய்தற்கியான் கையொழியேனென்னும் ஆள்வினைப் பெருமைபோல—ஒருவன் பீடு உடையது இல் - ஒருவனுக்கு மேம்பாடுடைய பெருமை பிறிதில்லை. எ - று.

குடிசெய்தற்கென்பது அதிகாரத்தான் வந்தது. பலவகைத்தாய கருமச்செயலாற் செல்வமும் புகழுமெய்திக் குடியுயருமாகலின், பீடுடையதில்லென்றார். குடிசெய்தற் கருமமே நடத்தலால், தன்கருமஞ்செய்யவென்றும் பிறர்கருமஞ் செய்யவென்று முரைப்பாருமுளர்; தன்கருமமும் அதுவேயாகலானும், பிறரேவல் செய்தல் தலைமை யன்மையானும், அவையுரையன்மையறிக. (௧)

௧0௨௨. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி. ௨.

இ - ள். ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள்வினையான் - முயற்சியும் நிறைந்த வறிவுமென்று சொல்லப்பட்ட இரண்டினையுமுடைய இடையறாத கருமச்செயலால்—குடி நீளும் - ஒருவன் குடியுயரும். எ - று.

நிறைதல் இயற்கையறிவு செயற்கையறிவோடுகூடி நிரம்புதல். ஆள்வினை மடிபுகுதாமற்பொருட்டு. ஆன்றவறிவு உயர்தற்கேற்ற செயல்களும் அவை முடிக்குந்திறமும் பிழையாமலெண்ணுதற்பொருட்டு. இவையிரண்டுபாட்டானும் அச்செயற்குக் காரணங் கூறப்பட்டது. (௨)

௧0௨௩. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும். ௩.

இ - ள். குடி செய்வல் என்னும் ஒருவற்கு - என்குடியினையுயரச்செய்யக் கடவேனென்றுகொண்டு அதற்கேற்ற கருமங்களின் முயலும் ஒருவனுக்கு—தெய்வம் மடி தற்றுத் தான் முந்துறும் - தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும். எ - று.

முயற்சியை அதன் காரணத்தாற் கூறினார். தற்றுதல் இறுகவுடுத்தல். முன்னடப் பார்செயல் நியதிமேலேற்றப்பட்டது. (௩)

௧0௨௪. சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு. ௪.

இ - ள். தங்குடியைத் தாழாது உஞற்றுபவர்க்கு - தங்குடிக்காம் வினையை விரைந்து முயல்வார்க்கு—சூழாமல் தானே முடிவெய்தும் - அவ்வினை முடிக்குந் திறம் அவர் சூழவேண்டாமற்றானே முடிவெய்தும். எ - று.

குடி ஆகுபெயர். தெய்வமுந்துறுதலாற் பயன்கூறியவாறு. இவையிரண்டுபாட்டானும் அதற்குத் தெய்வந்துணையாதல் கூறப்பட்டது. (௪)

க0௨௫. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு. ௫.

இ - ள். குற்றம் இலனாய்க் குடி செய்து வாழ்வானை - குற்றமாயின செய்யாது தன்குடியையுயரச்செய்தொழுகுவானை—சுற்றமாச் சுற்றும் உலகு - அவனுக்குச் சுற்றமாகவேண்டித் தாமே சென்று சூழ்வர் உலகத்தார். எ - று.

குற்றமாயின அறநீதிகட்கு மறுதலையாய செய்கைகள். தாமும் பயனெய்ததனோக்கி யாவருஞ்சென்று சார்வரென்பதாம். (௫)

க0௨௬. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல். ௬.

இ - ள். ஒருவற்கு நல்லாண்மை என்பது - ஒருவனுக்கு நல்ல வாண்மையென்று உயர்த்துச்சொல்லப்படுவது—தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல் - தான் பிறந்த குடியினையாளுந் தன்மையைத் தனக்குளதாக்கிக்கோடல். எ - று.

போர்த்தொழிலினீக்குதற்கு நல்லாண்மையென விசேடித்தார். குடியினையாளுந் தன்மை குடியிலுள்ளாரையுயரச்செய்து தன்வழிப்படுத்தல். அதனைச்செய்து கோடல் நல்லாண்மையாமாறு வருகின்ற பாட்டாற் பெறப்படும். (௬)

க0௨௭. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை. ௭.

இ - ள். அமரகத்து வன்கண்ணர்போல - களத்தின்கட்சென்றார் பலராயினும் போர்தாங்குதல் வன்கண்ணர்மேலதானாற்போல,—தமரகத்தும் பொறை ஆற்றுவார் மேற்றே - குடியின்கட்பிறந்தார் பலராயினும் அதன் பாரம் பொறுத்தல் அதுவல்லார்மேலதாம். எ - று.

பொருட்கொக்க வேண்டுஞ்சொற்கள் உவமைக்கண் வருவிக்கப்பட்டன. நன்கு மதிக்கப்படுவார் அவரேயென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அதுசெய்வாரெய் துஞ் சிறப்புக் கூறப்பட்டது. (௭)

க0௨௮. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும். ௮.

இ - ள். மடி செய்து மானம் கருதக் கெடும் - தங்குடியினையுயரச்செய்வார் அச்செயலையே நோக்காது காலத்தை நோக்கி மடியினைச்செய்துகொண்டு மானத்தையுங்கருதுவராயிற் குடிகெடும்;—குடி செய்வார்க்குப் பருவம் இல்லை - ஆகலான் அவர்க்குக் காலநியதியில்லை. எ - று.

காலத்தைநோக்கி மடிசெய்தல் வெயின்மழைபனியென்பன வுடைமைநோக்கிப் பின்னர்ச்செய்துமென்றொழிந்திருத்தல். மானங்கருதுதல் இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்பமுறுவேன் யானோவென்று உட்கோடல். மேல் "இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும்பொழு*" தென்றதுட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோவென்று கருதினும் அது கருதற்கவென்று மறுத்தவாறு. (அ)

கoஉகூ. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு. கூ.

இ - ள். குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு - மூவகைத் துன்பமுமுறற் பாலதாய தன்குடியை அவையுறாமற்காக்க முயல்வானது உடம்பு—இடும்பைக்கே கொள்கலங்கொல் - அம்முயற்சித்துன்பத்திற்கே கொள்கலமாமத்துணையோ, அஃதொழிந்து இன்பத்திற்காதலில்லையோ! எ - று.

"†உறைப்பெய லோலை போல—மறைக்குவன் பெருமநிற்குறித்து வருவேலே" என்புழியும் மறைத்தல் இப்பொருட்டாயிற்று. என்குடிமுழுது மின்புற்றுயரவே நானிருமையுமெய்துதலான் இம்மெய்வருத்தமாத்திரம் எனக்கு நன்றென்று முயலு மறிவுடையான் அஃதொருஞான்றுமொழியாமைநோக்கி, இடும்பைக்கே கொள்கலங் கொல்லோவென்றார். இது குறிப்புமொழி. இவையிரண்டுபாட்டானும் அவர் அது செய்யுமியல்பு கூறப்பட்டது. (கூ)

கoநo. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி. கo.

இ - ள். இடுக்கண் கால் கொன்றிட வீழும் - துன்பமாகிய நவியம் புகுந்து தன்முதலை வெட்டிச் சாய்க்க ஒருபற்றின்றி வீழாநிற்கும்—அடுத்து ஊன்றும் நல்லாள் இலாத குடி - அக்காலத்துப் பற்றுவன கொடுத்துத் தாங்கவல்ல நல்லவாண் மகன் பிறவாத குடியாகிய மரம். எ - று.

முதல் அதன்வழிக்குரியார். வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்துபயன்படுதலும் அல்லாவழிக் கெடுதலுமுடைமையின், மரமாக்கினார்; "தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளன்ன—வோங்குகுல நையவத னுட்பிறந்த வீரர்—தாங்கல்கடன்‡" என்றார் பிறரும். இது குறிப்புருவகம். இதனான் அவரில்லாத குடிக்குளதாங் குற்றங் கூறப்பட்டது. (கo)

கoசு ம் அதி.—உழவு.

அஃதாவது சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கு முரித்தாய உழுதற்றொழில். செய்விக்குங்கால் ஏனையோர்க்குமுரித்து. இது, மேற் குடியுயர்தற்கேதுவென்ற ஆள்வினைவகையாகலின், குடிசெயல்வகையின் பின் வைக்கப்பட்டது.

கoநக. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை. க.

* திருக்குறள், சஅக. † புறநானூறு, உகூo.

‡ சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், சு.

இ - ள். சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் - உழுதலான்வரும் மெய்வருத்தநோக்கிப் பிறதொழில்களைச் செய்துதிரிந்தும், முடிவில் ஏருடையார் வழியதாயிற்று உலகம்;—அதனால் உழந்தும் தலை உழவே - ஆதலான் எல்லாவருத்தமுற்றும், தலையாய தொழில் உழவே. எ - று.

ஏர் ஆகுபெயர். பிறதொழில்களாற் பொருளெய்தியவழியும் உணவின்பொருட்டு உழுவார்கட்செல்லவேண்டுதலிற் சுழன்று மேர்ப்பின்னதுலகமென்றும், வருத்தமில வேனும் பிறதொழில்கள் கடையென்பது போதர உழந்துமுழவேதலையென்றுங் கூறினார். இதனால் உழவினது சிறப்புக் கூறப்பட்டது. (௧)

௧௦௩௨. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து. ௨.

இ - ள். அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து - அவ்வுழுதலைச் செய்ய மாட்டாது பிறதொழில்கண்மேற்செல்வார் யாவரையுந் தாங்குதலால்,—உழுவார் உலகத்தார்க்கு ஆணி - அதுவல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர். எ-று.

"*காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்" டென்றாற்போல உழுவாரென்றது உழுவிப்பார்மேலுஞ்செல்லும். உலகத்தாரென்றது ஈண்டிவரையொழிந்தாரை. கலங்காமனிறுத்தற்கண் ஆணிபோறலின், ஆணியென்றார். பொறுத்தலானென்பது திரிந்துநின்றது. ஏகதேசவுருவகம். அஃதாற்றார் தொழுவாரேயெல்லாம் பொறுத்தென்று பாடமோதி, அதுமாட்டாதார் புரப்பார்செய்யும் பரிபவமெல்லாம் பொறுத்து அவரைத் தொழுவாரேயாவரென்றுரைப்பாருமுளர். (௨)

௧௦௩௩. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். ௩.

இ - ள். உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் - யாவரு முண்ணும் வகை உழுதலைச்செய்து அதனாற்றாமுமுண்டு வாழ்கின்றாரே தமக்குரியராய் வாழ்கின்றவர்;—மற்றெல்லாம் தொழுது உண்டு பின்செல்பவர் - மற்றையாரெல்லாம் பிறரைத்தொழுது அதனாற் றாமுண்டு அவரைப் பின்செல்கின்றவர். எ - று.

மற்றென்பது வழக்குப்பற்றி வந்தது. தாமுமக்கட்பிறப்பினராய்வைத்துப் பிறரைத்தொழுது அவர் சிலகொடுப்பத் தம்முயிரோம்பி அவர்பின்செல்வார் தமக்குரியரல்லரென்பது கருத்து. (௩)

௧௦௩௪. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர். ௪.

இ - ள். அலகு உடை நீழலவர் - உழுதற்றொழிலான் நெல்லினையுடையராய தண்ணளியுடையோர்—பலகுடைநீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர் - பலவேந்தர் குடைநிழலதாய மண்முழுதினையுந் தம்மரசன் குடைக்கீழே காண்பர். எ - று.

அலகு கதிர்; அஃதீண்டாகுபெயராய் நென்மேலதாயிற்று. உடையவென்பது குறைந்துநின்றது. நீழல்போறலின், நீழலெனப்பட்டது. நீழலவரென்றது இரப்போர்க்கெல்லாம் ஈதனோக்கி. ஒற்றுமைபற்றித் தங்குடையென்றார். குடைநீழலென்பதூஉம் ஆகுபெயர்; "ஊன்றுசால் மருங்கி னீன்றதன் பயனே†" என்றதனால் தம்மரசு

* பட்டினப்பாலை. † புறநானூறு, ௩௫.

னுக்குக் கொற்றம்பெருக்கி மண்முழுதும் அவனதாகக்கண்டிருப்பரென்பதாம்; "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமு முழவிடை விளைப்போர்*" என்றார் பிறரும்.

கOஙரு. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். ரு.

இ - ள். கைசெய்து ஊண் மாலையவர் இரவார் - தங்கையாலுழுதுண்டலை யியல்பாகவுடையார் பிறரைத் தாமிரவார்;—இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவர் - தம்மையிரப்பார்க்கு அவர்வேண்டியதொன்றனைக் கரவாது கொடுப்பர். எ - று.

செய்தென்பதற்கு உழுதலையெனவருவிக்க. கைசெய்தூண் மாலையவரென்பது ஒருஞான்றும் அழிவில்லாதசெல்வமுடையரென்னும் ஏதுவையுட்கொண்டுநின்றது.()

கOஙசு. உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. சு.

இ - ள். உழவினார் கை மடங்கின் - உழுதலையுடையார்கை அதனைச்செய்யாது மடங்குமாயின்,—விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு நிலை இல்லை - யாவரும்விழையுமுணவும் யாந்துறந்தோமென்பார்க்கு அவ்வறத்தின்கணிற்றலுமுளவாகா. எ - று.

உம்மை இறுதிக்கண்ணும் வந்தியைந்தது. உணவின்மையால், தாமுண்டலும் இல்லறஞ்செய்தலும் யாவர்க்குமில்லையாயின. அவருறுப்புமாத்திரமாய கை வாளாவிருப்பின் உலகத்து இம்மை மறுமை வீடென்னும் பயன்கள் நிகழாவென்பதாம். ஒன்றனை மனத்தால் விழைதலு மொழிந்தேமென்பார்க்கெனவுரைப்பாருமுளர். இவையைந்துபாட்டானும் அதனைச் செய்வாரது சிறப்புக் கூறப்பட்டது. (சு)

கOஙஎ. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். எ.

இ - ள். தொடிப்புழுதி கஃசா உணக்கின் - ஒருநிலத்தினையுழுதவன் ஒருபலப்புழுதி கஃசாம்வண்ணம் அதனைக் காயவிடுவனாயின்,—பிடித்து எருவும் வேண்டாது சாலப் படும் - அதன்கட்செய்த பயிர் ஒருபிடியின்கணடங்கிய எருவுமிடவேண்டாமற் பணைத்து விளையும். எ - று.

பிடித்து பிடியின்கண்ணது. பிடித்தவென்பதன்விகாரமென்பாருமுளர். வேண்டாமல், சான்று என்பன திரிந்துநின்றன. (எ)

கOஙஅ. ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு. அ.

இ - ள். ஏரினும் எரு இடுதல் நன்று - அப்பயிர்க்கு அவ்வுழுதலினும் எருப்பெய்தல் நன்று;—கட்டபின் அதன்காப்பு நீரினும் நன்று - இவ்விரண்டுஞ் செய்து களைகட்டால் அதனைக் காத்தல் அதற்கு நீர்கால்யாத்தலினுநன்று.

ஏர் ஆகுபெயர். காத்தல் பட்டிமுதலியவற்றான் அழிவெய்தாமற்காத்தல். உழுதல், எருப்பெய்தல், களைகட்டல், நீர்கால்யாத்தல், காத்தலென்றிம்முறையவாய இவ்வைந்தும் வேண்டுமென்பதாம். (அ)

* சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, கசகூ.

௧0௩௯. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும். ௯.

இ - ள். கிழவன் செல்லான் இருப்பின் - அந்நிலத்திற்குரியவன் அதன்கணு டோறுஞ்சென்று பார்த்து அடுத்தன செய்யாது மடிந்திருக்குமாயின்,—நிலம் இல்லாளிற் புலந்து ஊடிவிடும் - அஃது அவனில்லாள்போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின்னவனோடூடிவிடும். எ - று.

செல்லுதல் ஆகுபெயர். பிறரையேவியிராது தானேசேறல்வேண்டுமென்பது போதரக் கிழவனென்றார். தன்கட்சென்று வேண்டுவன செய்யாது வேறிடத்திருந்தவழி மனையாளூடுமாறுபோலவென்றது அவன் போகமிழத்தலைநோக்கி. இவை மூன்று பாட்டானும் அதுசெய்யுமாறு கூறப்பட்டது. (௯)

௧0௪0. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும். ௧0.

இ - ள். இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின் - யாம் வறியேமென்று சொல்லி மடிந்திருப்பாரைக் கண்டால்,—நிலம் என்னும் நல்லாள் நகும் - நிலமகளென்று உயர்த்துச்சொல்லப்படுகின்ற நல்லாள் தன்னுள்ளே நகாநிற்கும். எ - று.

உழுதன்முதலிய செய்வார் யாவர்க்குஞ் செல்வங்கொடுத்துவருகின்றவாறு பற்றி நல்லாளென்றும், அதுகண்டுவைத்தும் அதுசெய்யாது வறுமையுறுகின்ற பேதைமை பற்றி நகுமென்றுங் கூறினார். இரப்பாரையென்று பாடமோதுவாருமுளர். இதனான் அதுசெய்யாதவழிப்படுமிழுக்குக் கூறப்பட்டது. வருகின்றவதிகாரமுறைமைக்குக் காரணமுமிது. (௧0)

---

௧0௫ ம் அதி.—நல்குரவு.

அஃதாவது நுகரப்படுவனயாவுமில்லாமை.

௧0௪௧. இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது. ௧.

இ - ள். இன்மையின் இன்னாதது யாது எனின் - ஒருவனுக்கு வறுமைபோல வின்னாதது யாதென்று வினவின்,—இன்மையின் இன்னாதது இன்மையே - வறுமை போல வின்னாதது வறுமையே, பிறிதில்லை. எ - று.

இன்னாதது துன்பஞ்செய்வது. ஒப்பதில்லையெனவே, மிக்கதின்மை சொல்ல வேண்டாவாயிற்று. (௧)

௧0௪௨. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும். ௨.

இ - ள். இன்மையென ஒருபாவி - வறுமையென்று சொல்லப்படுவதொரு பாவி—மறுமையும் இம்மையும் இன்றி வரும் - ஒருவனுழை வருங்கால் அவனுக்கு மறுமையின்பமும் இம்மையின்பமுமில்லையாக வரும். எ - று.

இன்மையென வொருபாவியென்பதற்கு மேல் "அழுக்காறெனவொருபாவி*" யென்புழியுரைத்தாங்குரைக்க. மறுமை இம்மையென்பன ஆகுபெயர். ஈயாமையா னுந் துவ்வாமையானும் அவையிலவாயின. இன்றிவிடுமென்று பாடமோதிப் பாவி யாலெனவிரித்துரைப்பாருமுளர். (உ)

௧0௪௩. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை. ௩.

இ - ள். நல்குரவு என்னும் நசை - நல்குரவென்றுசொல்லப்படுமாசை—தொல் வரவும் தோலும் தொகையாக் கெடுக்கும் - தன்னாற்பற்றப்பட்டாருடைய பழைய குடிவரவினையும் அதற்கேற்ற சொல்லினையும் ஒருங்கே கெடுக்கும். எ - று.

நசையில்வழி நல்குரவு மில்லையாகலின் நல்குரவையே நசையாக்கி, அஃது அக் குடியிற்றொல்லோர்க்கில்லாத இழிதொழில்களையும் இளிவந்த சொற்களையுமுளவாக்க லான் அவ்விரண்டனையுமொருங்கு கெடுக்குமென்றார்: "குடிப்பிறப் பழிக்கும் விழுப் பங் கொல்லும்†" என்றார் பிறரும். தோலாவது "இழுமென் மொழியால் விழுமியது நுவறல்‡" என்றார் தொல்காப்பியனாரும். இதற்கு உடம்பென்றுரைப்பாருமுளர்; அஃததற்குப் பெயராயினும் உடம்பு கெடுக்குமென்றற்கோர் பொருட்சிறப்பில்லா மையறிக. (௩)

௧0௪௪. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும். ௪.

இ - ள். இற்பிறந்தார் கண்ணேயும் - இளிவந்த சொற்பிறவாத குடிப்பிறந்தார் மாட்டேயும்—இளிவந்த சொற்பிறக்கும் சோர்வு இன்மை தரும் - அது பிறத்தற்கேது வாகிய சோர்வினை நல்குரவு உண்டாக்கும். எ - று.

சிறப்பும்மை அவர்மாட்டு அது பிறவாமை தோன்றநின்றது. இளிவந்தசொல் இளிவருதற் கேதுவாகியசொல். அஃதாவது எமக்கியவேண்டுமென்றல். சோர்வு தாமுறுகின்றதுன்பமிகுதிபற்றி ஒரோவழித் தம்பிறப்பினை மறந்து அது சொல்லுவ தாக நினைத்தல். (௪)

௧0௪௫. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். ௫.

இ - ள். நல்குரவு என்னும் இடும்பையுள் - நல்குரவென்று சொல்லப்படுந் துன் பமொன்றனுள்ளே—பல் துன்பங்கள் சென்றுபடும் - பலதுன்பங்களும் வந்து விளை யும். எ - று.

குரை இசைநிறை. செலவு விரைவின்கண்வந்தது. துன்பமுந்தானு முடனே நிகழ்தலின் நல்குரவைத்துன்பமாக்கியும், அத்துன்பமடியாகச் செல்வர்தலைநோக் கிச் சேறற்றுன்பமும், அவரைக்காண்டற்றுன்பமும், கண்டான்மறுத்துழி நிகழுந்துன் பமும், மறுவழியும் அவர்கொடுத்தது வாங்கற்றுன்பமும், அதுகொடுவந்து நுகர்வன கூட்டற்றுன்பமு முதலாயின நாடோறும் வேறுவேறாக வருதலின் எல்லாத்துன்பங் களுமுளவாமென்றுங்கூறினார். இவையைந்துபாட்டானும் நல்குரவின் கொடுமை கூறப்பட்டது. (௫)

* திருக்குறள், ௧௬௮. † மணிமேகலை, ௧௧-வது பாத்திரம்பெற்றகாதை.

‡ பொருள், செய்யுளியல், உ௩௯.

௧௦௪௬. நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். ௬.

இ - ள். நற்பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும் - மெய்ந்நூற்பொருளைத் தெளியவறிந்து சொன்னாராயினும்,—நல்கூர்ந்தார் சொற் பொருள் சோர்வு படும் - நல்கூர்ந்தார் சொல்லுஞ்சொற் பொருளின்மையைத் தலைப்படும். எ - று.

பொருளின்மையைத் தலைப்படுதலாவது யாமிவர்சொல்லியன விரும்பிக்கேட்குமாயிற் கண்ணோடி இவருறுகின்ற குறைமுடிக்கவேண்டுமென்றஞ்சி யாவருங்கேளாமையிற் பயனில்சொல்லாய்முடிதல். கல்வியும் பயன்படாதென்பதாம். (௬)

௧௦௪௭. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். ௭.

இ - ள். அறம் சாரா நல்குரவு - அறத்தோடியைபில்லாத நல்குரவுடையான்—ஈன்ற தாயானும் பிறன்போல நோக்கப்படும் - தன்னையீன்றதாயானும் பிறனைக் கருதுமாறுபோலக் கருதி நோக்கப்படும். எ - று.

அறத்தோடுகூடாமை காரணகாரியங்களுளொன்றாயியையாமை. நல்குரவு ஆகுபெயர். சிறப்பும்மை அவளதியற்கையன்புடைமை விளக்கிநின்றது. கொள்வதின்றுதலையன்றிக் கொடுப்பதுண்டாதலுமுடைமையின், அதுநோக்கிச் சுற்றத்தார் யாவருந் துறப்பரென்பதாம். (௭)

௧௦௪௮. இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு. ௮.

இ - ள். நெருநலும் கொன்றதுபோலும் நிரப்பு - நெருநற்றுங் கொன்றது போன்று எனக்கின்னாதவற்றைச்செய்த நல்குரவு—இன்றும் வருவதுகொல் - இன்றும் என்பால் வரக்கடவதோ, வந்தால் இனி யாதுசெய்வேன்! எ - று.

அவ்வின்னாதனவாவன மேற் * சொல்லிய துன்பங்கள். நெருநன்மிக வருந்தித் தன்வயிறுநிறைத்தானொருவன் கூற்று. (௮)

௧௦௪௯. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது. ௯.

இ - ள். நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் - மந்திரமருந்துகளான் ஒருவனுக்கு நெருப்பிடையே கிடந்துறங்கலுமாம்,—நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது - நிரப்புவந்துழி யாதொன்றானு முறக்கமில்லை. எ - று.

நெருப்பினும் நிரப்புக்கொடிதென்றவாறாயிற்று. இதுவுமவன்கூற்று. இவைநான்குபாட்டானும் நல்கூர்ந்தார்க்குளதாங்குற்றங் கூறப்பட்டது. (௯)

௧௦௫௦. துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று. ௰.

இ - ள். துப்புரவு இல்லார் துவரத் துறவாமை - நுகரப்படும் பொருள்களில்லாதார் தம்மாற்செயற்பாலது முற்றத்துறத்தலேயாகவும் அதுசெய்யாதொழிதல்—

* திருக்குறள், ௧௦௪௫.

உப்பிற்கும் காடிக்கும் கூற்று - பிறரில்லினுள்ளவாய உப்பிற்குங் காடிக்குங் கூற்றாம். எ - று.

மானமழியாமையிற் செயற்பாலது அதுவேயாயிற்று. முற்றத்துறத்தல் சுற்றந்தானே விட்டமையின் ஒருவாற்றாற்றுறந்தாராயினார் நின்ற தம்முடம்பினையுந்துறத்தல். அதுசெய்யாதுகொண்டிருத்தல் இரண்டனையு மாளப்பண்ணுதலின், அதனை அவற்றிற்குக் கூற்றென்றார். இனி முற்றத்துறத்தலாவது துப்புரவில்லாமையின் ஒருவாற்றாற்றுறந்தாராயினார் பின்னவற்றை மனத்தாற்றுறவாமையென்றுரைப்பாருமுளர். இதனான் அஃதுளதாயவழிச் செய்வது கூறப்பட்டது. (கO)

கOசுஎ ம் அதி.—இரவு.

இனி மானந்தீராவிரவு இரவாமையோடொத்தலின், அதனானும் வீடெய்தற் பயத்ததாய உடம்போம்பப்படுமென்னும் அறநூல் வழக்குப்பற்றி மேலெய்திய துவரத்துறத்தல் விலக்குதற்பொருட்டு இரவு கூறுகின்றார். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கOருக. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
 னவர்பழி தம்பழி யன்று. க.

இ - ள். இரத்தக்கார்க் காணின் இரக்க - நல்கூர்ந்தார் இரத்தற்கேற்புடையாரைக் காணில், அவர்மாட்டிரக்க;—கரப்பின் அவர்பழி தம்பழி அன்று - இரந்தால் அவர் கரந்தாராயின் அவர்க்குப்பழியாவதல்லது தமக்குப் பழியாகாமையான். எ-று.

இரவென்னுமுதனிலைத்தொழிற்பெயரதிறுதிக்கண் நான்கனுருபு விகாரத்தாற்றொக்கது. இரத்தற்கேற்புடையராவார் உரையாமை முன்னுணருமொண்மையுடையராய் மாற்றாதீவார். அவர் உலகத்தரியராகலிற் காணினென்றும், அவர்மாட்டிரந்தார்க்கு இரவான்வருமிழிவின்மையின் இரக்கவென்றும், அவர் ஈதலிற் குறைகாட்டாமையிற் கரப்பினென்றும், காட்டுவராயின் அப்பழி தூவெள்ளறுவைக்கண் மாசுபோல அவர்கட் கடிதுசேறலின் அவர்பழியென்றும், ஏற்பிலார் மாட்டிரவன்மையிற் றம்பழியன்றென்றுங் கூறினார். (க)

கOருஉ. இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
 துன்ப முறுஅ வரின். உ.

இ - ள். ஒருவற்கு இரத்தல் இன்பம் - ஒருவற்கு இரத்தலும் இன்பத்திற்கேதுவாம்,—இரந்தவை துன்பம் உறு வரின் - இரந்தபொருள்கள் ஈவாரதுணர்வுடைமையாற் றுன்றுன்புறாமல் வருமாயின். எ - று.

இன்பம் ஆகுபெயர். உறாமலென்பது கடைக்குறைந்துநின்றது. துன்பம் சாதியொருமைப்பெயர். அவையாவன ஈவார்கட் காலமுமிடனுமறிந்துசேறலும், அவர் குறிப்பறிதலும், அவரைத்தம்வயத்தராக்கலும், அவர் மனநெகிழ்வன நாடிச்சொல்லலு முதலியவற்றான் வருவனவும், மறுத்துழி வருவனவுமாம். அவையுறாமல் வருதலாவது அவர் முன்னுணர்ந்தீயக்கோடல். இரந்தவர் துன்பமுறுவரினென்று பாடமோதி, இரக்கப்பட்டவர் பொருளின்மை முதலியவற்றாற்றுன்புறாது எதிர்வந்தீவராயினென்றுரைப்பாருமுளர். இவை யிரண்டுபொட்டானும் நல்குரவானுயிர்நீங்குமெல்லைக்கண் இளிவில்லாவிரவு விலக்கப்படாதென்பது கூறப்பட்டது. (உ)

௧0௫௩. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து. ௩.

இ - ள். கரப்பிலா நெஞ்சிற் கடன் அறிவார் முன் நின்று இரப்பும் - கரத்தலில்லாத நெஞ்சினையுடைய மானமறிவார்முன்னர் நின்று அவர்மாட்டொன்றிரத்தலும்—ஓரேர் உடைத்து - நல்கூர்ந்தார்க்கு ஓரழகுடைத்து. எ - று.

"சிறியசுருக்கத்துவேண்டுமுயர்*" வென்றதனால், அவர்க்கு அது கடனெனப்பட்டது. அதனையறிதல் சொல்லுதலுற்றுரைக்கலாகாமைக்கேதுவாய அதனியல்பினையறிதல். அவ்வறிவுடையார்க்கு முன்னிற்றன் மாத்திரமேயமைதலின் முன்னின்றென்றும், சொல்லுதலான்வருஞ் சிறுமையெய்தாமையின் ஓரேருடைத்தென்றுங் கூறினார். உம்மை அதனிழிபு விளக்கிநின்றது. (௩)

௧0௫௪. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு. ௪.

இ - ள். கரத்தல் கனவிலும் தேற்றாதார்மாட்டு இரத்தலும் - தமக்குள்ளது கரத்தலைக் கனவின்கண்ணு மறியாதார்மாட்டுச் சென்றொன்றனையிரத்தலும்—ஈதலே போலும் - வறியார்க்கீதலேபோலும். எ - று.

உம்மை ஈண்டுமவ்வாறுநின்றது. தான் புகழ்பயவாதாயினும் முன்னுளதாய புகழ் கெட வாராமையின், ஈதலேபோலுமென்றார். ஏகாரம் ஈற்றசை. (௪)

௧0௫௫. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது. ௫.

இ - ள். கண்ணின்று இரப்பவர் மேற்கொள்வது - சொல்லுதன்மாட்டாது முன்னிற்றன்மாத்திரத்தான் இரப்பார் உயிரோம்பற்பொருட்டு அதனை மேற்கொண்டு போதுகின்றது—கரப்பிலார் வையகத்து உண்மையான் - அவர்க்கு உள்ளது கரவாது கொடுப்பார் சிலர் உலகத்துளாராய தன்மையானே, பிறிதொன்றானன்று. எ - று.

அவரில்லையாயின், மானநீக்கமாட்டாமையின் உயிர்நீப்பரென்பதாம். (௫)

௧0௫௬. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும். ௬.

இ - ள். கரப்பிடும்பை இல்லாரைக் காணின் - உள்ளதுகரத்தலாகிய நோயில்லாரைக் கண்டால்,—நிரப்பிடும்பை எல்லாம் ஒருங்கு கெடும் - மானம்விடா திரப்பார்க்கு நிரப்பான் வருந்துன்பங்களெல்லாஞ் சேரக்கெடும். எ - று.

கரத்தல் ஒருவற்கு வேண்டுவதொன்றன்மையின் அதனை நோயென்றும், அஃதில்லாத இரக்கத்தக்காரைக் கண்டபொழுதே அவர் கழியுவகையராவராகலின் எல்லா மொருங்கு கெடுமென்றுங்கூறினார். இடும்பை ஆகுபெயர். முழுதுங் கெடுமென்று பாடமோதி, எஞ்சாமற்கெடுமென்றுரைப்பாருமுளர். (௬)

௧0௫௭. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து. ௭.

* திருக்குறள், ௯௬௯.

இ - ள். இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின் - தம்மையவமதித்திழிவு சொல்லாது பொருள்கொடுப்பாரைக்கண்டால்,—உள்ளம் மகிழ்ந்து உள்ளுள் உவப்பது உடைத்து - அவ்விரப்பாரது உள்ளமகிழ்ந்து உள்ளுள்ளேயுவக்குந் தன்மையுடைத்து. எ - று.

இகழ்ந்தெள்ளாதெனவே, நன்குமதித்தலும் இனியவைகூறலும் பெறுதும். நிரப்பிடும்பை கெடுதலளவேயன்றி ஐம்புலன்களானும் பேரின்பமெய்தினாராகக் கருதலான், உள்ளுளுவப்பதுடைத்தென்றார். இவையைந்துபாட்டானும் அவ்விரத்தக்காரதியல்பு கூறப்பட்டது. (எ)

௧0௫அ. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று. அ.

இ - ள். இரப்பார் இல்லாயின் - வறுமையுற்றிரப்பாரில்லையாயின்,—ஈர்ங்கண் மா ஞாலம் - குளிர்ந்தவிடத்தையுடைய பெரிய ஞாலத்துள்ளார் செலவு வரவுகள்—மரப்பாவை சென்று வந்தற்று - உயிரில்லாத மரப்பாவை இயந்திரக்கயிற்றாற் சென்று வந்தாற்போலும். எ - று.

ஐகாரம் அசைநிலை. ஞாலமென்னும் ஆகுபெயர்ப்பொருட்கு உவமையோடொத்த தொழில் வருவிக்கப்பட்டது. ஞாலத்துள்ளாரென்றது அவரையொழிந்தாரை. அவர்க்கீதலைச்செய்து புகழும் புண்ணியமுமெய்தாமையின், உயிருடையரல்லரென்பதாம்; "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து—வாழ்வாரேவன்க ணவர்." என்றார் பிறரும். இத்தொடையின்பநோக்காது இரப்பவரில்லாயினென்று பாடமோதுவாருமுளர். (அ)

௧0௫௯. ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண்
மேவா ரிலாஅக் கடை. ௯.

இ - ள். இரந்துகோள் மேவார் இலாக்கடை - அவர்பாற்சென்று ஒன்றனை யிரந்துகோடலை விரும்புவாரில்வழி—ஈவார்கண் தோற்றம் என் உண்டாம் - கொடுப்பார்மாட்டு என்னபுகழுண்டாம்! யாதுமில்லை. எ - று.

தோற்றம் ஆகுபெயர். மேவுவாரென்பது விகாரமாயிற்று. கொடுத்தல்வன்மை வெளிப்படாமையின், அதனாற்புகழெய்தாரென்பதாம். இவையிரண்டுபாட்டானும் உலகிற்கிரப்பார்வேண்டுமென்பது கூறப்பட்டது. (௯)

௧0௬0. இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி. ௧0.

இ - ள். இரப்பான் வெகுளாமை வேண்டும் - ஈவானுக்குப் பொருளுதவாவழி இவனெனக்கீகின்றிலனென்று அவனை யிரப்பான் வெகுளாதொழிதல்வேண்டும்;—நிரப்பிடும்பை தானேயும் கரிசாலும் - அது வேண்டியபொழுது உதவாதென்பதற்கு வேறுசான்று வேண்டா, நிரப்பாகிய தன்னிடும்பை தானேயுஞ் சான்றாதலமையும். எ - று.

யாவர்க்கும் தேடவேண்டுதலும் நிலையின்மையுமுதலிய பிறசான்று முண்டென்பதுபட நின்றமையின், உம்மை எச்சவும்மை. தனக்கேயன்றி மற்றையிரந்தார்க்கும் அற்றைக்கன்று பொருள் கடைக்கூட்டற்கு அவனுறுந்துன்பத்தைத் தனக்கேயாக

வைத்துத் தானுறுந்துன்பந் தானறிந்து வெகுளற்கவென்பதாம். இதனால் அவர்க்கின்றியமையாததோரியல்பு கூறப்பட்டது. (௧௦)

---

௧௦௭ ம் அதி.—இரவச்சம்.

அஃதாவது மானந்தீரவருமிரவிற்கஞ்சுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௧௦௬௧. கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும். ௧.

இ - ள். கரவாது உவந்து ஈயும் கண் அன்னார் கண்ணும் இரவாமை - தமக்குள்ளது கரவாது இவர் வரப்பெற்றேமென்று உண்மகிழ்ந்து கொடுக்கும் கண்போலச் சிறந்தார்மாட்டும் இரவாதே ஒருவன் வறுமைகூர்தல்—கோடி உறும் - இரந்து செல்வமெய்தலிற் கோடிமடங்கு நன்று. எ - று.

நல்குரவு மறைக்கப்படாத நட்டார்மாட்டும் ஆகாதென்பதுபட நின்றமையின், உம்மை உயர்வுசிறப்பின்கண்வந்தது. அவ்விரவான் மானந் தீராதென்னுந் துணையல்லது அதற்கு மிகுதி கூடாமையின், வல்லதோர் முயற்சியானுயிரோம்பலே நல்லதென்பது கருத்து. (௧)

௧௦௬௨. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான். ௨.

இ - ள். உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் - இவ்வுலகத்தைப் படைத்தவன் இதன்கண் வாழ்வார்க்கு முயன்றுயிர்வாழ்தலையன்றி இரந்துமுயிர்வாழ்தலை வேண்டி விதித்தானாயின்,—பரந்து கெடுக - அக்கொடியோன்றானும் அவரைப்போன்று எங்குமலமந்து கெடுவானாக. எ - று.

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாயவுண்டியும் அதற்கேதுவாய செய்தொழிலும் பழவினைவயத்தாற் கருவொடுகலந்தவன்றே அவன் கற்பிக்குமன்றே, அவற்றுட் சிலவுயிர்க்கு இரத்தலையும் ஒருசெய்தொழிலாகக் கற்பித்தானாயின் அத்தீவினையாற் றானும் அத்துன்பமுறல்வேண்டுமென்பதாம். இவையிரண்டு பாட்டானும் அவ்விரவின் கொடுமை கூறப்பட்டது. (௨)

௧௦௬௩. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில். ௩.

இ - ள். இன்மை இடும்பை இரந்து தீர்வாம் என்னும் வன்மையின் - வறுமையான் வருந்துன்பத்தை முயன்று நீக்கக்கடவேமென்று கருதாது இரந்து நீக்கக்கடவேமென்று கருதும் வன்மைபோல—வன்பாட்டது இல் - வலிமைப்பாடுடையது பிறிதில்லை. எ - று.

நெறியாய முயற்சி நிற்க நெறியல்லாத இரவாற்றீர்க்கக்கருதுதலின், வன்மையாயிற்று. வன்பாடு முருட்டுத்தன்மை; அஃதாவது ஓராதுசெய்துநிற்றல். இதனான் வறுமை தீர்தற்கு நெறி இரவன்றென்பது கூறப்பட்டது. (௩)

௧௦௬௪. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு. ௪.

இ-ள். இடம் இல்லாக்காலும் இரவு ஒல்லாச் சால்பு - நுகரவேண்டுவன வின்றி நல்கூர்ந்தவழியும் பிறர்பாற்சென்றிரத்தலையுடம்படாத அமைதி—இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே - எல்லாவுலகும் ஒருங்கியைந்தாலுங் கொள்ளாத பெருமையுடைத்து. எ-று.

அவ்விரத்தலைச் சால்பு விலக்குமாகலின், இரவொல்லாமை அதன்மேலேற்றப் பட்டது. இதனான் அந்நெறியல்லதனைச் சால்புடையார் செய்யாரென்பது கூறப் பட்டது. (௪)

௧0௬௫. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில். ௫.

இ-ள். தாள் தந்தது தெண்ணீர் அடுபுற்கையாயினும் - நெறியாய முயற்சி கொடுவந்து தந்தது தெளிந்தநீர்போலும் அடுபுற்கையேயாயினும்,—உண்ணலின் ஊங்கு இனியது இல் - அதனையுண்டற்குமேலினியதில்லை. எ-று.

தாடந்தகூழ் செறிவின்றித் தெண்ணீர் போன்றதாயினும் இழிவாய இரவான்வந்ததன்றித் தம்முடைமையாகலின், அமிழ்தத்தோடொக்குமென்பதாம். இதனால் நெறியினாயது சிறிதேனும் அதுசெய்யுமின்பம் பெரிதென்பது கூறப்பட்டது. (௫)

௧0௬௬. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில். ௬.

இ-ள். ஆவிற்கு நீரென்று இரப்பினும் - தண்ணீர்பெறாது இறக்குநிலைமைத்தாயதோராவினைக் கண்டு அறனோக்கி இதற்குத் தண்ணீர் தரல்வேண்டுமென்றிரந்து சொல்லுங்காலும்,—இரவின் நாவிற்கு இளிவந்தது இல் - அவ்விரவுபோல ஒருவனாவிற்கிளிவந்தது பிறிதில்லை. எ-று.

ஆ காத்தோம்பல் பேரறமாகலின் ஆவிற்கென்றும், பொருள்கொடுத்துக் கொள்ள வேண்டாத் எண்மைத்தாகலின் நீரென்றும், இரக்கின்றானுக்கு இளிவு அச் சொல்லளவேயாகலின் நாவிற்கென்றும், அதுதான் எல்லாவிளிவினும் மேற்படுதலின் இளிவந்ததில்லென்றுங்கூறினார். இதனான் அறனும் முயன்றுசெய்வதல்லது இரந்து செய்யற்கவென்பது கூறப்பட்டது. (௬)

௧0௬௭. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று. ௭.

இ-ள். இரப்பாரை எல்லாம் இரப்பன் - இரப்பாரையெல்லாம் யானிரவாநின்றேன்,—இரப்பிற் கரப்பார் இரவன்மின் என்று - யாது சொல்லியெனின், நுமக்கிரக்கவேண்டுமாயிற் நமக்குள்ளது கரப்பாரையிரவாதொழிமினென்று சொல்லி. எ-று.

இரண்டாவது விகாரத்தாற்றொக்கது. இவ்விளிவந்த செயலான் ஊட்டியவழியும் உடம்பு நில்லாதாகலின் இது வேண்டாவென்பது தோன்ற, இரப்பனென்றார். இதனான் மானந்தீரவருமிரவு விலக்கப்பட்டது. (௭)

௧0௬௮. இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். ௮.

இ-ள். இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி - இவ்வறுமையென்னும் கடலை இதனாற்கடத்துமென்றுகருதி ஒருவனேறிய இரவென்னுஞ் சேமமற்ற தோணி—கரவு

என்னும் பார் தாக்கப்பக்குவிடும் - அதன்கண்ணேடுங்காற் கரத்தலென்னும் வன்னிலத்தோடு தாக்குமாயிற் பிளந்துபோம். எ - று.

முயற்சியாற் கடப்பதனை இரவாற்கடக்கலுற்றான் அதன்கரை காணுமையின், ஏமாப்பிலேணியென்றார். ஏமாப்பின்மை தோணிமேலேற்றப்பட்டது. அதுகடத்தற்கேற்றதன்மையானும், நிலமறியாது செலுத்தியவழி உடைதலானும், அதன்கணேறற்கவென்பதாம். இஃதவயவவுருவகம். (அ)

௧௦௬௯. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும். ௯.

இ - ள். இரவு உள்ள உள்ளம் உருகும் - உடையார்முன் இல்லார்சென்றிரந்து நிற்றலின் கொடுமையை நினைந்தால் எம்முள்ளங் கரைந்துருகாநிற்கும்;—கரவு உள்ள உள்ளதூஉம் இன்றிக்கெடும் - இனி அந்நிலையைக்கண்டுவைத்தவர் இல்லையென்றலின் கொடுமையை நினைந்தால் அவ்வுருகுமளவுதானுமின்றிப் பொன்றிவிடும். எ - று.

"இரவினை—யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ—கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு*." என்றார் பிறரும். இரவினுங்கரவு கொடிதென்பதாம். இதற்குப் பிறரெல்லாம் இரக்கின்றவருள்ள முருகுமென்றுரைத்தார். (௯)

௧௦௭௦. கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர். ௰.

இ - ள். சொல்லாட இரப்பவர் உயிர் போம் - கரப்பார் இல்லையென்றுசொல்லாடிய துணையானே இரப்பார்க்கு உயிர்போகாநின்றது;—கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங்கொல் - இனிச் சொல்லாடுகின்ற அவர்தமக்கு உயிர் பின்னு நிற்றலான் அப்பொழுது எப்புரையுட் புக்கொளித்துநிற்கும்! எ - று.

உயிர்போகலாவது இனி யாமென்செய்துமென்றேங்கிச் செயலற்றுநிற்றல்; "அந்நிலையே—மாயானோ மாற்றி விடின்†" என்றார் பிறரும். கேட்டாரைக்கொல்லவற்றாய சொற் சொல்வாரைக்கோறல் சொல்லவேண்டாவாயினும் அது காண்கின்றிலம் இஃதென்னோவென்பதாம். வறுமையுற்றுழி மறையாது இரக்கப்படுவாராய கேளிர்கட்கும் அதனைச்சொல்லாட உயிர்போம், ஆனபின் மறைக்கப்படுவாராய பிறர்க்குச் சொல்லாடியக்காற் போகாதெங்கேயொளித்துநிற்கும் இரண்டானும் போமேயன்றோவென இரவஞ்சினானொருவன் கூற்றாக்கியுரைப்பாருமுளர். இவைமூன்றுபாட்டானும் அவ்விரவின்குற்றமும் கரவின்குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன. (௰)

௧௦௮ம் அதி.—கயமை.

அஃதாவது மேல் அரசியலுள்ளும் அங்கவியலுள்ளுஞ் சிறப்புவகையாற் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினால் யாவர்க்குமெய்தவைத்தமையின் ஆண்டுக் குறிப்பாற் கூறியனவும் ஈண்டொழிபியலுள் வெளிப்படக்கூறியனவுமாய

* கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணு—மிரவாது வாழ்வதாம் வாழ்க்கை - யிரவினை—யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ—கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு—நாலடியார், இரவச்சம்.

† புறத்துத்தன் னின்மை நலியு வகத்துத்தன்,—னன்ஞான நீக்கி நிறீஇ யொருவனை—யீயா யெனக்கென் றிரப்பானே லந்நிலையே—மாயானோ மாற்றி விடின் — நாலடியார், இரவச்சம்.

குணங்கள் யாவுமிலராய கீழோரது தன்மை. அதனால் இஃதெல்லாவற்றிற்கும் பின் வைக்கப்பட்டது.

௧௦௭௧. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில். ௧.

இ - ள். மக்களே போல்வர் கயவர் - வடிவான் முழுதும் மக்களையொப்பர் கயவர்;—அவர் அன்ன ஒப்பாரி யாம் கண்டது இல் - அவர் மக்களையொத்தாற்போன்ற வொப்பு வேறிரண்டு சாதிக்கண் யாங்கண்டதில்லை. எ - று.

முழுதுமொத்தல் தேற்றேகாரத்தாற்பெற்றாம். அவரென்றது அவர்மாட்டுளதாய வொப்புமையை. மக்கட்சாதிக்குங் கயச்சாதிக்கும் வடிவொத்தலிற் குணங்களது உண்மையின்மைகளானல்லது வேற்றுமையறியப்படாதென்பதாம். இதனாற் கயவரது குற்றமிகுதி கூறப்பட்டது. (௧)

௧௦௭௨. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். ௨.

இ - ள். நன்று அறிவாரிற் கயவர் திரு உடையர் - தமக்குறுதியாவனவறிவாரின் அவையறியாத கீழ்மக்கள் நன்மையுடையர்,—நெஞ்சத்து அவலம் இலர் - அவர்போல அவைகாரணமாகத் தந்நெஞ்சத்தின்கட் கவலையிலராகலான். எ - று.

நன்றென்பது சாதியொருமை. உறுதிகளாவன இம்மைமறுமைவீடுகட்குரியவாய புகழறஞானங்கள். இவற்றையறிவார் இவை செய்யாநின்றே மிகச்செயப்பெறுகின்றிலேமென்றும், செய்கின்றவிவைதமக்கு இடையூறுவருங்கொலென்றும், இவற்றின் மறுதலையாய பழிபாவமறியாமையென்பனவற்றுள் யாதுவிளையுமோவென்றும், இவ்வாற்றாற் கவலையெய்துவர்; கயவர் அப்புகழ்முதலியவொழித்துப் பழிமுதலிய செய்யாநின்றும் யாதுங்கவலையுடையரல்லராகலாற் றிருவுடையரெனக் குறிப்பானிகழ்ந்தவாறு. இதனாற் பழிமுதலியவற்றிற்கஞ்சாரென்பது கூறப்பட்டது. (௨)

௧௦௭௩. தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான். ௩.

இ - ள். தேவர் அனையர் கயவர் - தேவருங்கயவரும் ஒருதன்மையர்,—அவரும் தாம் மேவன செய்து ஒழுகலான் - அஃதியாதனானெனின், தேவரைப்போன்று தம்மை நியமிப்பாரின்றிக் கயவருந் தாம் விரும்புவனவற்றைச் செய்தொழுகலான். எ - று.

உயர்ச்சியும் இழிவுமாகிய தங்காரணவேறுபாடு குறிப்பாற்றோன்றநின்றமையின்; இது புகழ்வார்போன்று பழித்தவாறாயிற்று. இதனால் விலக்கற்பாடின்றி வேண்டிய செய்வரென்பது கூறப்பட்டது. (௩)

௧௦௭௪. அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ். ௪.

இ - ள். கீழ் - கீழாயினான்,—அகப்பட்டி ஆவாரைக் காணின் - தன்னிற் சுருங்கிய பட்டியாயொழுகுவாரைக் கண்டானாயின்,—அவரின் மிகப்பட்டுச் செம்மாக்கும் - அவ்வொழுக்கத்தின்கண் அவரிற் றான்மேம்பட்டு அதனாற்றன்மிகுதிகாட்டி யிறுமாக்கும். எ - று.

அகப்பட்டி அகமாகியபட்டி. பட்டிபோன்று வேண்டியவாறேயொழுகலின், பட்டியென்றார்; "நோதக்கசெய்யுஞ் சிறுபட்டி*" என்றார் பிறரும். இதனால் அவர் மேம்படுமாறு கூறப்பட்டது. (௪)

கoஎரு. அச்சமே கீழ்களா தாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது. ரு.

இ - ள். கீழ்களது ஆசாரம் அச்சமே - கயவரதாய வாசாரங் கண்டதுண்டாயின் அதற்குக் காரணம் அரசனான் ஏதம் வருமென்றஞ்சுமச்சமே;—எச்சம் அவா உண்டேல் சிறிது உண்டாம் - அஃதொழிந்தால், தம்மால் அவாவப்படும் பொருள் அதனானுண்டாமாயிற் சிறிதுண்டாம். எ - று.

ஆசாரத்தின் காரணத்தை ஆசாரமென்றும், அவாவப்படுவதனை அவாவென்றுங் கூறினார். எச்சத்தின் எண்ணென்னுமேழாவது இறுதிக்கட்டொக்கது. பெரும்பான்மை அச்சம், சிறுபான்மை பொருட்பேறு இவ்விரண்டானுமன்றி இயல்பாகவுண்டாகா தென்பதாம். வேண்டியசெய்தலே இயல்பு, ஆசாரஞ்செய்தல் இயல்பன்றென்பது இதனாற் கூறப்பட்டது. (ரு)

கoஎகூ. அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். கூ.

இ - ள். தாம் கேட்ட மறை உய்த்துப் பிறர்க்கு உரைக்கலான் - தாங்கேட்ட மறைகளை இடந்தோறுந் தாங்கிக்கொண்டு சென்று பிறர்க்குச் சொல்லுதலான்,—கயவர் அறை பறை அன்னர் - கயவர் அறையப்படும் பறையினையொப்பர். எ - று.

மறை வெளிப்படிற் குற்றம்விளையுமென்று பிறரைமறைத்து ஒருவன்சொல்லிய சொல். பிறர் அம்மறைத்தற்குரியார். உய்த்தென்றார், அவர்க்கது பெரும்பாரமாதனோக்கி. பறை ஒருவன்கையாற் றன்னையறிவித்ததொன்றனை இடந்தோறுங்கொண்டு சென்று யாவரையுமறிவிக்குமாகலான், இது தொழிலுவமம். இதனால் அவரது செறிவின்மை கூறப்பட்டது. (கூ)

கoஎஎ. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு. எ.

இ - ள். கயவர் கொடிறு உடைக்கும் கூன் கையர் அல்லாதவர்க்கு - கயவர் தங் கதுப்பினை நெரிப்பதாக வளைந்த கையினையுடையரல்லாதார்க்கு—ஈர்ங்கை விதிரார் - தாமுண்டு பூசிய கையைத்தெறித்தல் வேண்டுமென்றிரந்தாலுந் தெறியார். எ - று.

வளைந்தகை முறுக்கியகை. மெலிவார்க்கு யாதுங்கொடார், நலிவார்க்கு எல்லாங் கொடுப்பரென்பதாம். (எ)

கoஎஅ. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். அ.

இ - ள். சொல்லப் பயன்படுவர் சான்றோர் - மெலியார் சென்று தங்குறையைச் சொல்லியதுணையானே இரங்கிப் பயன்படுவர் மேலாயினார்;—கீழ் கரும்புபோல்

* கலி, குறிஞ்சி, கசு.

கொல்லப் பயன்படும் - மற்றைக் கீழாயினார் கரும்புபோல வலியார் நைய நெருக்கிய வழிப் பயன்படுவர். எ - று.

பயன்படுதல் உள்ளதுகொடுத்தல். கீழாயினாரதிழிவுதோன்ற, மேலாயினாரையும் உடன்கூறினார். இவையிரண்டுபாட்டானும் அவர் கொடுக்குமாறு கூறப்பட்டது. (௮)

௧0௭௯. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ். ௯.

இ - ள். உடுப்பதூஉம் உண்பதூஉம் கீழ் காணின் - பிறர்செல்வத்தாற் பட்டுந் துகிலுமுடுத்தலையும் பாலோடடிசிலுண்டலையுங் கீழாயினான் காணுமாயின்,—பிறர் மேல் வடுக் காண வற்றாகும் - அவற்றைப் பொறாது அவர்மாட்டு வடுவில்லையாகவும் உண்டாக்க வல்லனாம். எ - று.

உடுப்பது உண்பதென்பன ஈண்டவ்வத்தொழின்மேனின்றன: அவற்றாற் பூண்டல் ஊர்தன்முதலிய பிறதொழில்களுங்கொள்ளப்படும். அவற்றைக் கண்டதுணையானே பொறாமையெய்தலிற் காணினென்றும், கேட்டார் இது கூடுமென்றியையப் படைத்தல் அரிதாகலின் வற்றாகுமென்றுங்கூறினார். இதனாற் பிறர்செல்வம்பொறாமை கூறப்பட்டது. (௯)

௧0௮0. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து. ௧0.

இ - ள். கயவர் ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர் - கயவர் தம்மை யாதானுமொரு துன்பமுற்றக்கால் அதுவே பற்றுக்கோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விற்றற்குரியர்;—எற்றிற்கு உரியர் - அதுவன்றி வேறெத்தொழிற்குரியர்! எ - று.

உணவின்மையாகப் பிறிதாக ஒன்று வந்துற்றதுணையானென்பது தோன்ற ஒன்றுற்றக்காலென்றும், கொள்கின்றார் தங்கயமையறிந்து வேண்டாவென்றற்கு முன்னே விற்றுநிற்றலின் விரைந்தென்றுங்கூறினார். ஒருதொழிற்கு முரியரல்லரென்பது குறிப்பெச்சம். இதனாற்றாம் பிறர்க்கடிமையாய் நிற்பரென்பது கூறப்பட்டது. (௧0)

ஒழிபியல் முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று.

காமத்துப்பால்.

களவியல்.

இனி அப்பொருளைத் துணைக்காரணமாகவுடைத்தாய் இம்மையே பயப்பதாய வின்பங்கூறுவானெடுத்துக்கொண்டார். ஈண்டின்பமென்றது ஒருகாலத்தொருபொருளான் ஐம்புலனுநுகர்தற்சிறப்புடைத்தாய காமவின்பத்தினை. இச்சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனுஞ் சுவைபலவென்று கூறுவார் கூறுக யாங்கூறுவதின்பச்சுவை யொன்றனையுமேயென இதனையே மிகுத்துக்கூறினான். இது புணர்ச்சி பிரிவெனவிருவகைப்படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடலென்பனவோவெனின், இவர் பொருட்பாகுபாட்டினை அறம்பொருளின்பமென வடநூல்வழக்குப்பற்றியோதுதலான், அவ்வாறேயவற்றைப் பிரிவின்கணடக்கினாரென்க. இனி அவைதம்மையே தமிழ்நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற்றைச் சுவைமிகுதிபயப்ப உலகநடையோடு ஒப்புமொவ்வாமையு முடையவாக்கிக் கூறுகின்றார். அக் கைகோளிரண்டனுள்ளுங் களவாவது பிணிமூப்பிறப்புக்களின்றி எஞ்ஞான்று மொருதன்மையராய் உருவுந்திருவும் பருவமுங் குலனுங்குணனு மன்புமுதலியவற்றாற் றம்முளொப்புமையுடையராய தலைமகனுந் தலைமகளும் பிறர்கொடுப்பவுமடுப்பவுமன்றிப் பால்வகையாற்றாமே யெதிர்ப்பட்டுப் புணர்ந்துவருவது. அதனையேழதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட்டகையணங்குறுத்தல் கூறுகின்றார்.

௧௦௯ம் அதி.—தகையணங்குறுத்தல்.

அஃதாவது பொழில்விளையாட்டுவிருப்பான் ஆயநீங்க அதன்கட்டமியளாய் நின்றாளை வேட்டைவிருப்பான் இளையார்நீங்கத் தமியனாய்வந்து கண்ணுற்ற தலைமகன் அவள் வனப்புத் தன்னை வருத்தமுறுவித்தலைச் சொல்லுதல். இது, கண்ணுற்ற பொழுதே நிகழ்வதாகலின், முதற்கட் கூறப்பட்டது.

௧௦௮௧. அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு. ௧.

தலைமகளுருவுமுதலியன முன்கண்டறிவனவன்றிச் சிறந்தமையின்
அவளைத் தலைமகன் ஐயுற்றது.

இ - ள். கனங்குழை - இக்கனவியகுழையையுடையாள்—அணங்குகொல் - இப்பொழிற்கணுறைவாளோர் தெய்வமகளோ,—ஆய் மயில்கொல் - அன்றி யொருமயில்விசேடமோ,—மாதர்கொல் - அன்றியொருமானுடமாதரோ,—என் நெஞ்சு மாலும் - இவளையின்னளென்று துணியமாட்டாது என்னெஞ்சு மயங்காநின்றது. எ - று.

ஓ அசை. ஆய்மயில் படைத்தோன் விசேடமாகவாய்ந்துபடைத்த மயில்; மயிற் சாதியுட்டெரிந்தெடுத்த மயிலென்றுமாம். கனங்குழை ஆகுபெயர்*. கணங்குழை யென்று பாடமோதிப் பலவாய்த்திரண்ட குழையென்றுரைப்பாருமுளர். எழுதலா காவுருவுந் தன்வருத்தமும்பற்றி அணங்குகொலென்றும், சாயலும் பொழில்வயினிற் றலும்பற்றி ஆய்மயில்கொலென்றும், தன்னெஞ்சஞ் சென்றமையும் அவளெதிர்நோக் கியவாறும்பற்றி மாதர்கொலென்றுங் கூறினான். (௧)

௧௦௮௨. நோக்கினா ளோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து. ௨.

மானுடமாதராதறேளிந்த தலைமகன் அவணோக்கினாயவருத்தங்கூறியது.

இ - ள். நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் - இப்பெற்றித்தாய வனப்பினை யுடையாள் என்னோக்கிற்கெதிர்நோக்குதல் - தாக்கு அணங்கு தானைக்கொண்டன் னது உடைத்து - தானேதாக்கிவருத்துவதோரணங்கு தாக்குதற்குத் தானையையுங் கொண்டுவந்தாற்போலுந் தன்மையையுடைத்து. எ - று.

மேலும் அணங்குகொலாய்மயில்கொலென்றமையான், இகரச்சுட்டு வருவிக்கப் பட்டது. எதிர்நோக்குதலென்றமையின், அதுகுறிப்புநோக்காயிற்று. வனப்பால் வருந்துதன்மேலுங் குறிப்புநோக்கால் வருந்துதல் கூறியவாறு. நோக்கினாளென் பதற்கு என்னானோக்கப்பட்டாளென்றுரைப்பாருமுளர். (௨)

௧௦௮௩. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு. ௩.

இதுவுமது.

இ - ள். கூற்று என்பதனைப் பண்டு அறியேன் - கூற்றென்று நூலோர்சொல் வதனைப் பண்டு கேட்டறிவதல்லது கண்டறியேன்,—இனி அறிந்தேன் - இப்பொழுது கண்டறிந்தேன்,—பெண்டகையால் பேர் அமர்க் கட்டு - அது பெண்டகையுடனே பெரியவாய் அமர்த்த கண்களையுடைத்து. எ - று.

பெண்டகை நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னுங் குணங்கள். அவை அவ் வக்குறிகளானறியப்பட்டன. அமர்த்தல் அமர்செய்தல், பெயரடியாயவினை. பெண் டகையால் இன்பம்பயத்தலுமுண்டேனும் துன்பம்பயத்தன்மிகுதிபற்றிக் கூற்றாக்கிக் கூறினான். (௩)

௧௦௮௪. கண்டாருயி ருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண். ௪.

இதுவுமது.

இ - ள். பெண்டகைப் பேதைக்குக் கண் - பெண்டகையையுடைய விப்பே தைக்கு உளவாய கண்கள்—கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான் அமர்த்தன - தம்மைக்கண்டாருயிருண்ணுந் தோற்றத்துடனேகூடி அமர்த்திருந்தன. எ - று.

* கனங்குழையென்றதனை ஆகுபெயரன்றென மறுத்து, அன்மொழித்தொகையெனக் கொள்வர் இலக்கணவிளக்கச்சூறாவளியார். ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் வேற் றுமை தொல்காப்பியச் சூத்திரவிருத்தியிற் காண்க.

அமர்த்தல் மாறுபடுதல். குணங்கட்கும் பேதைமைக்குமேலாது கொடியவாயி ருந்தனவென்பதாம். (௪)

௧௦௮௫. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவர
னோக்கமிம் மூன்று முடைத்து. ௫.

இதுவுமது.

இ - ள். கூற்றமோ - என்னை வருத்துதலுடைமையாற் கூற்றமோ,—கண்ணோ - என்மேலோடுதலுடைமையாற் கண்ணோ,—பிணையோ - இயல்பாக வெருவுதலுடைமையாற் பிணையோ, அறிகின்றிலேன்;—மடவரல் நோக்கம் இம்மூன்றும் உடைத்து - இம்மடவரல் கண்களினோக்கம் இம்மூன்றன் றன்மையையு முடைத்தாயிராநின்றது. எ - று.

இன்பமுந் துன்பமும் ஒருங்குசெய்யாநின்றதென்பதாம். தொழில்பற்றிவந்த ஐயநிலையுவமம். (௫)

௧௦௮௬. கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண். ௬.

இதுவுமது.

இ - ள். கொடும் புருவம் கோடா மறைப்பின் - பிரியாநட்பாய கொடும்புருவங்கடாஞ் செப்பமுடையவாய் விலக்கினவாயின்,—இவள் கண் நடுங்கு அஞர் செய்யல - அவற்றைக்கடந்து இவள்கண்கள் எனக்கு நடுங்குந்துயரைச் செய்யமாட்டா. எ - று.

நட்டாரைக்கழறுவார்க்குத் தாஞ்செம்மையுடையராதல் வேண்டலிற் கோடா வென்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்றதனக்கும் இடைநின்று விலக்குங்காலுஞ் சிறிதிடைபெறின் அதுவழியாக வந்து அஞர்செய்யுமாகலின் மறைப்பினென்றுங் கூறினான். நடுங்கஞர் நடுங்கற்கேதுவாயவஞர். தாமியல்பாகக் கோடுதலுடைமையான் அவற்றை மிகுதிக்கண்மேற்சென்றிடிக்கமாட்டாவாயினவென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. (௬)

௧௦௮௭. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில். ௭.

அவண்முலைகளினாய வருத்தங்கூறியது.

இ - ள். மாதர் படா முலைமேற்றுகில் - இம்மாதர் படாமுலைகளின்மேலிட்ட துகில்,—கடாக் களிற்றின்மேற் கட்படாம் - அவை கொல்லாமற் காத்தலின், கொல்வதாய மதக்களிற்றின்மேலிட்ட முகபடாத்தினையொக்கும். எ - று.

கண்ணை மறைத்தல்பற்றிக் கட்படாமென்றான். துகிலான்மறைத்தல் நாணுடை மகளிர்க்கியல்பாகலின், அத்துகிலூடே அவற்றின் வெம்மையும் பெருமையுங்கண்டு இத்துணையாற்றலுடையன இனியெஞ்ஞான்றுஞ் சாய்விலவெனக் கருதிப் படாமுலை யென்றான். உவமை சிறிதுமறையாவழி உவை கொல்லுமென்பது தோன்ற நின்றது.

௧௦௮௮. ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணாரு முட்குமென் பீடு. ௮.

நுதலினைய வருத்தங்கூறியது.

இ-ள். ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு-போர்க்களத்துவந்து நேராத பகைவரும் நேர்ந்தார்வாய்க்கேட்டஞ்சுதற்கேதுவாய என்வலி—ஒண்ணுதற்கு உடைந்ததே - இம்மாதரதொள்ளிய நுதலொன்றற்குமே அழிந்துவிட்டது. எ - று.

மாதரென்பது அதிகாரத்தான் வந்தது. ஞாட்பினுளென்றதனாற் பகைவராதல் பெற்றாம். பீடென்ற பொதுமையான் மனவலியுங் காயவலியுங்கொள்க. ஓவென்னும் வியப்பின்கட்குறிப்பு அவ்வலிகளது பெருமையும் நுதலது சிறுமையுந்தோன்ற நின்றது. கழிந்ததற்கிரங்கலிற் றற்புகழ்தலன்றாயிற்று. (அ)

௧௦அகூ. பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனோ வேதில தந்து. கூ.

அணிநலத்தானைய வருத்தங்கூறியது.

இ-ள். பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு - புறத்து மான்பிணையொத்த மடநோக்கினையும் அகத்து நாணினையுமுடையளாயவிவட்கு—ஏதில தந்து அணி எவன் - ஒற்றுமையுடைய இவ்வணிகளேயமைந்திருக்க வேற்றுமையுடையவணிகளைப்படைத்தணிதல் என்ன பயனுடைத்து! எ - று.

மடநோக்கு வெருவுதலுடையநோக்கு. இவட்குப் பாரமாதலும் எனக்கண்ங்காதலுங் கருதாமையின், அணிந்தார் அறிவிலரென்பதாம். (கூ)

௧௦கூ௦. உண்டார் கணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று. ௧௦.

தலைமகள் குறிப்பறிதலுற்றான் சொல்லியது.

இ-ள். அடுநறா - அடப்படு நறா,—உண்டார்கண் அல்லது - தன்னை யுண்டார் மாட்டு மகிழ்ச்சியைச் செய்வதல்லது,—காமம்போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று - காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச்செய்தலுடைத்தன்று. எ - று.

அடுநறா வெளிப்படை. காமமென்றது ஈண்டு அதுநுகர்தற்கிடனாகியாளை. கண்டார்கணென்னு மேழாவது இறுதிக்கட்டொக்கது. மகிழ்செய்தற்கட் காமம் நறவினுஞ்சிறந்ததே யெனினும் இவள்குறிப்பாராய்ந் தறியாமையின் யானதுபெற்றிலேனெனக் குறிப்பெச்சம் வருவித்துரைக்க, "அரிமயிர்த்திரண்முன்கை*" என்னும் புறப்பாட்டிற் குறிப்புப்போல. (௧௦)

ககம் அதி.—குறிப்பறிதல்.

அஃதாவது தலைமகன் தலைமகள் குறிப்பினையறிதலும், தோழிகுறிப்பினையறிதலும், அவடான் அவ்விருவர்குறிப்பினையுமறிதலுமாம். தகையணங்குற்ற தலைமகன் றலைமகளைக்கூடுங்கால் இது வேண்டுமாகலின், தகையணங்குறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

௧௦கூக. இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. க.

* புறநானூறு, கக.

தலைமகன்றலைமகளுளப்பாட்டுக்குறிப்பினை அவனோக்கினானறிந்தது.

இ - ள். இவள் உண்கண் உள்ளது இருநோக்கு - இவளுடைய வுண்கணகத்ததாய நோக்கு இதுபொழுது என்மேலிரண்டு நோக்காயிற்று;—ஒருநோக்கு நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து - அவற்றுள் ஒருநோக்கு என்கணோய்செய்யுநோக்கு, ஏனையது அந்நோய்க்கு மருந்தாய நோக்கு. எ - று.

உண்கண் மையுண்டகண். நோய்செய்யுநோக்கு அவண்மனத்தினாய காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு. மருந்தாய நோக்குத் தன்கணிகழ்கின்ற அற்புநோக்கு. நோய்செய்யுநோக்கினைப் பொதுநோக்கென்பாருமுளர்: அது நோய்செயிற்கைக்கிளையாவதல்லது அகமாகாமையறிக. இவ்வருத்தந் தீரும் வாயிலுமுண்டாயிற்றென்பதாம். (க)

க0கூஉ. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது. உ.

இதுவுமது.

இ - ள். கண் களவுகொள்ளும் சிறுநோக்கம் - இவள்கண்கள் யான்காணாமல் என்மேனோக்குகின்ற அருகியநோக்கம்—காமத்தில் செம்பாகம் அன்று பெரிது - மெய்யுறுபுணர்ச்சியின் ஒத்த பாதியளவன்று, அதனினுமிகும். எ - று.

தானோக்கியவழி நாணியிறைஞ்சியும் நோக்காவழி உற்றுநோக்கியும் வருதலாற் களவுகொள்ளுமென்றும், அஃதுளதாங்காலஞ் சிறிதாகலிற் சிறுநோக்கமென்றும், அஃது உளப்பாடுள்வழி நிகழ்வதாகலின் இனிப்புணர்தல் ஒருதலையென்பான் செம்பாகமன்று பெரிதென்றுங் கூறினான். (உ)

க0கூ௩. நோக்கினா னோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர். ௩.

நோக்கினானுநாணினானுமறிந்தது.

இ - ள். நோக்கினாள் - யானோக்காவளவிற் றானென்னையன்போடு நோக்கினாள்,—நோக்கி இறைஞ்சினாள் - நோக்கி ஒன்றனையுட்கொண்டு நாணி இறைஞ்சினாள்,—அஃது யாப்பினுள் அவள் அட்டிய நீர் - அக்குறிப்பு இருவேமிடையுந் தோன்றிய அற்புப்பயிர்வளர அதன்கணவள் வார்த்த நீராயிற்று. எ - று.

அஃதென்னுஞ்சுட்டுப்பெயர் அச்செய்கைக்கேதுவாய குறிப்பின்மேனின்றது. யாப்பினாயதனை யாப்பென்றார். ஏகதேசவுருவகம். (௩)

க0கூச. யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும். ச.

நாணினாலுமகிழ்ச்சியினாலுமறிந்தது.

இ - ள். யான் நோக்குங் காலை நிலன் நோக்கும் - யான்றன்னை நோக்குங்காற் றானெதிர்நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்காநிற்கும்,—நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும் - அஃதறிந்தியானோக்காக்காற் றானென்னைநோக்கித் தன்னுள்ளே மகிழாநிற்கும். எ - று.

மெல்ல வெளிப்படாமல். மகிழ்ச்சியாற் புணர்தற்குறிப்பினிது விளங்கும். மெல்லநகுமென்பதற்கு முறுவலிக்குமென்றுரைப்பாருமுளர். (௪)

கoசுரு. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும். ரு.

இதுவுமது.

இ - ள். குறிக்கொண்டு நோக்காமை அல்லால் - நேரே குறிக்கொண்டு நோக்காத்துணையல்லது—ஒருகண் சிறக்கணித்தாள் போல நகும் - ஒருகண்ணைச் சிறங்கணித்தாள்போல என்னை நோக்கிப் பின்றன்னுள்ளே மகிழாநிற்கும். எ - று.

சிறக்கணித்தாளென்பது செய்யுள் விகாரம். சிறங்கணித்தல் சுருங்குதல். அது தானும் வெளிப்பட நிகழாமையிற் போலவென்றான். நோக்கியென்பது சொல்லெச்சம். இனியிவளை யெய்துதல் ஒருதலையென்பது குறிப்பெச்சம். (ரு)

கoசுசு. உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ
லொல்லை யுணரப் படும். சு.

தோழிசேட்படுத்தவழி அவள்குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். உறுதவர்போல் சொலினும் - புறத்து நொதுமலர்போலக் கடுஞ்சொற் சொன்னாராயினும்,—செறார் சொல் ஒல்லை உணரப்படும் - அகத்துச் செறுதலிலார்சொற் பிற்பயத்தல் குறையுற்றாரால் கடிதினறியப்படும். எ - று.

கடுஞ்சொலென்பது இவ்விடங்காவன்மிகுதியுடைத்து வரற்பாலிரல்லீரென்றன் முதலாயின. செறாரெனவே, அருளுடைமை பெறப்பட்டது. தன்குறை முடிக்கக்கருதியே சேட்படுக்கின்றமை குறிப்பானறிந்து, உலகியன்மேலிட்டுக் கூறியவாறு. இது வருகின்ற பாட்டிற்கு மொக்கும். (சு)

கoசுஎ. செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு
முறாஅர்போன் றுற்றார் குறிப்பு. எ.

இதுவுமது.

இ - ள். செறாச் சிறுசொல்லும் - பின்னினிதாய் முன்னின்னாதாயசொல்லும்—செற்றார்போல் நோக்கும் - அகத்துச் செறாதிருந்தே புறத்துச் செற்றார்போன்ற வெகுளிநோக்கும்—உறார்போன்று உற்றார் குறிப்பு—நொதுமலர் போன்று நட்பாயினார்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவன. எ - று.

குறிப்பு ஆகுபெயர். இவை உள்ளேயொருபயன்குறித்துச் செய்கின்றன இயல்பல்லவாகலான், இவற்றிற்கஞ்சவேண்டாவென்பதாம். (எ)

கoசுஅ. அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப்
பசையினள் பைய நகும். அ.

தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக்கண்டு தலைமகன் கூறியது.

இ - ள். யான் நோக்கப் பசையினள் பைய நகும் - என்னையகற்றுகின்ற சொற்காற்றுதியானிரந்துநோக்கியவழி அஃதறிந்து நெகிழ்ந்து உள்ளே மெல்ல நகாநின்

ருள்,—அசை இயற்கு ஆண்டு ஓரேர் உண்டு - அதனால் நுடங்கிய வியல்பினையுடையாட்கு அந்நகையின்கண்ணே தோன்றுகின்றதோர் நன்மைக்குறிப்புண்டு. எ - று.

ஏர் ஆகுபெயர். அக்குறிப்பு இனிப்பழுதாகாதென்பதாம். (அ)

க0௬௯. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள. ௯.

தோழி மதியுடம்படுவோடன்னுள்ளேசொல்லியது.

இ - ள். ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் - முன்னறியாதார்போல ஒருவரையொருவர் பொதுநோக்கத்தானோக்குதல்—காதலார் கண்ணே உள - இக்காதலையுடையார்கண்ணே யுளவாகாநின்றன. எ - று.

பொதுநோக்கு யாவர்மாட்டும் ஒருதன்மைத்தாய நோக்கு. நோக்குதற்றொழில், ஒன்றேயாயினும் இருவர்கண்ணு நிகழ்தலானும், ஒருவர்கட்டானுங் குறிப்பு வேறுபாட்டாற்பலவாமாதலானும், உளவெனப்பன்மையாற் கூறப்பட்டது. இருவரும் "மது மறைந்துண்டோர் மகிழ்ச்சிபோல உள்ளத்துள்ளே மகிழ்*" தலின் அதுபற்றிக் காதலாரென்றும், அது புறத்து வெளிப்படாமையின் ஏதிலார்போலவென்றுங் கூறினார்.

கக00. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில. க0.

இதுவுமது.

இ - ள். கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் - காமத்திற்குரிய விருவருள் ஒருவர்கண்களோடு ஒருவர்கண்கள் நோக்காலொக்குமாயின்,—வாய்ச்சொற்கள் என்னபயனும் இல - அவர் வாய்மைதோன்றச் சொல்லுகின்ற வாய்ச்சொற்கள் ஒருபயனுமுடையவல்ல. எ - று.

நோக்காலொத்தல் காதனோக்கினவாதல். வாய்ச்சொற்கள் மனத்தின்கணின்றி வாயளவிற்றோன்றுகின்ற சொற்கள். இருவர்சொல்லுங்கேட்டு உலகியன்மேல்வைத்துக் கூறியவாறு. இருவர்சொல்லுமாவன அவள் புனங்காவன்மேலும் அவன் வேட்டத்தின்மேலுஞ்சொல்லுவன. பயனில்சொற்களாகலின், இவை கொள்ளப் படாவென்பதாம். இவை புணர்தனிமித்தம். (க0)

கககம் அதி.—புணர்ச்சிமகிழ்தல்.

அஃதாவது அங்ஙனங்குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப்புணர்ச்சியினை மகிழ்ந்துகூறல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கக0க. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள. † க.

இயற்கைப்புணர்ச்சியிறுதிக்கட்சொல்லியது.

இ - ள். கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் - கண்ணாற் கண்டும் செவியாற்கேட்டும் நாவாலுண்டும் மூக்கான்மோந்தும் மெய்யாற்றீண்டியும்

---

* "ஏனல் காவ லிவளு மல்லள்" என்றபாட்டு.

† இத்திருக்குறள் சேரமான்பெருமாணயனர் திருக்கைலாய ஞானவுலாவிலெடுத்துரைக்கப்பட்டது.

அனுபவிக்கப்படுமைம்புலனும்—ஒண்டொடி கண்ணே உள - இவ்வொள்ளிய தொடியையுடையாள்கண்ணே யுளவாயின. எ - று.

உம்மை முற்றும்மை. தேற்றேகாரம் வேறிடத்தின்மை விளக்கிநின்றது. வேறு வேறு காலங்களில் வேறுவேறு பொருள்களானனுபவிக்கப்படுவன ஒருகாலத்து இவள்கண்ணேயனுபவிக்கப்பட்டனவென்பதாம். வடநூலார் இடக்கர்ப்பொருளவாகச் சொல்லிய புணர்ச்சித்தொழில்களும் ஈண்டடக்கிக் கூறப்பட்டன. (க)

கக0உ. பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து. உ.

இடந்தலைப்பாட்டின்கட்சொல்லியது.

இ - ள். பிணிக்கு மருந்து பிற - வாதமுதலிய பிணிகட்கு மருந்தாவன அவற்றிற்கு நிதானமாயினவன்றி மாறுயவியல்பினையுடையனவாம்;—அணியிழை தன் நோய்க்கு மருந்து தானே - அவ்வாறன்றி இவ்வணியிழையினையுடையாள் தன்னினாய பிணிக்குமருந்துந் தானேயாயினாள். எ - று.

இயற்கைப்புணர்ச்சியை நினைந்து முன் வருந்தினானாகலிற் றன்னோயென்றும், அவ்வருத்தந் தமியாளையிடத்தெதிர்ப்பட்டுத் தீர்ந்தானாகலிற் றானேமருந்தென்றுங் கூறினான். இப்பிணியும் எளியவாயவற்றாற்றீரப்பெற்றிலமென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. (உ)

கக0௩. தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணா னுலகு. ௩.

நிரதிசயவின்பத்திற்றுரியநீ இச்சிற்றின்பத்திற்கின்னையாதல்
தகாதென்ற பாங்கற்குச் சொல்லியது.

இ - ள். தாம் வீழ்வார் மென்றோட்டுயிலின் இனிதுகொல் - ஐம்புலன்களையுநுகர்வார்க்குத் தாம்விரும்புமகளிர் மெல்லிய தோளின்கட்டுயிலுந் துயில்போல வருந்தாமலெய்தலாமோ—தாமரைக்கண்ணான் உலகு - அவற்றைத் துறந்த தவயோகிகளெய்துஞ் செங்கண்மாலுலகம். எ - று.

ஐம்புலன்களையுநுகர்வாரென்னும்பெயர் அவாய்நிலையான் வந்தது. இப்பெற்றித்தாய துயிலைவிட்டுத் தவயோகங்களான் வருந்தவேண்டுதலின், எம்மனோர்க்காகாதென்னுங் கருத்தால் இனிதுகொலென்றான். இந்திரனுலகென்றுரைப்பாருமுளர்: தாமரைக்கண்ணானென்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃதுரையன்மையறிக. ()

கக0௪. நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள். ௪.

பாங்கற்கூட்டத்திறுதிக்கட்சொல்லியது.

இ - ள். நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும் தீ - தன்னையகன்றுழிச் சுடாநிற்கும், அணுகுழிக் குளிராநிற்கும் இப்பெற்றித்தாய தீயை—இவள் யாண்டுப் பெற்றாள் - என்கட்டருதற்கு இவளெவ்வுலகத்துப்பெற்றாள்! எ - று.

கூடாமுன் றன்புறுதலின் நீங்கிற்றெறூஉமென்றும், கூடியபின்னின்புறுதலிற் குறுகுங்காற்றண்ணெனுமென்றும், இப்பெற்றியதோர் தீ உலகத்தில்லையாமாகலின் யாண்டுப்பெற்றாளென்றுங் கூறினன். தன்காமத்தீத்தன்னையே அவடந்தாளாகக் கூறினன், அவளான் அது வெளிப்படுதலின். (௪)

கக0௫. வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள். ௫.

தோழியிற்கூட்டத்திறுதிக்கட்சொல்லியது.

இ - ள். வேட்டபொழுதின் அவையவை போலுமே - மிகவினியவாயபொருள்களைப் பெறாது அவற்றின்மேல் விருப்பங்கூர்ந்தபொழுதின்கண் அவையவைதாமே வந் தின்பஞ்செய்யுமாறுபோல இன்பஞ் செய்யும்,—தோட்டார் கதுப்பினாள் தோள்- எப்பொழுதும் பெற்றுப்புணரினும், பூவினையணிந்த தழைந்த கூந்தலினையுடையாடோள்கள். எ - று.

தோடு ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டத்துக்கண் முன்னரே நிகழ்ந்திருக்கப் பின்னரும் புதியவாய் நெஞ்சம் பிணித்தலின், அவ் வாராமைபற்றி இவ்வாறுகூறினன். தொழிலுவமம். (௫)

கக0௬. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள். ௬.

இதுவுமது.

இ - ள். உயிர் உறுதோறு தளிர்ப்பத் தீண்டலால் - தன்னைப்பெறாது வாடிய என்னுயிர் பெற்றுறுந்தோறுந் தளிர்க்கும்வகை தீண்டுதலான்;—பேதைக்குத் தோள் அமிழ்தின் இயன்றன - இப்பேதைக்குத் தோள்கள் தீண்டப்படுவதோரமிழ்தினாற் செய்யப்பட்டன. எ - று.

ஏதுவாகலாற் றீண்டல் அமிழ்திற்குமெய்திற்று. வாடியவுயிரைத் தளிர்ப்பித்தல் பற்றி, அவையமிழ்தினியன்றனவென்றான். தளிர்த்தல் இன்பத்தாற் றழைத்தல். (௬)

கக0௭. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு. ௭.

இவளை நீவரைந்துகொண்டு உலகோர் தம்மில்லிருந்து தமதுபாத்துண்ணு மில்லறத்தோடுபடல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். அம் மா அரிவை முயக்கு - அழகிய மாமைநிறத்தையுடைய அரிவையது முயக்கம்—தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்று - இன்பம்பயத்தற்கட் டமக்குரிய இல்லின்கணிருந்து உலகோர் தந்தாளான்வந்தபொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்கட்குப் பகுத்துத் தங்கூற்றை யுண்டாற்போலும். எ - று.

தொழிலுவமம். இல்லறஞ்செய்தாரெய்துந் துறக்கத்தின்பம் எனக் கிப்புணர்ச்சியே தருமென வரைவுடன்படான் கூறியவாறாயிற்று. (௭)

கக0௮. வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. ௮.

ஒத்தவன்புடைய நமக்கு ஒருபொழுதும் விடாத முயக்கமே
இனியதென வரைவுகடாயதோழிக்குச் சொல்லியது.

இ - ள். நீசொல்லுகின்றதொக்கும்,—வளி இடை போழப்படா முயக்கு - ஒரு பொழுது நெகிழாமையிற் காற்றாலிடையறுக்கப்படாதமுயக்கம்—வீழும் இருவர்க்கு இனிதே - ஒருவரையொருவர் விழைவாரிருவர்க்குமினிதே. எ - று.

முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஈண்டு இருவரில்லை, இன்மையான் இஃதொவ்வாதென்பது கருத்து. களவிற்புணர்ச்சியை மகிழ்ந்து வரைவுடன்படான் கூறியவாறு. (அ)

௧௧0௯. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன். ௯.

கரத்தல்வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப்
பயனுடைத்தென வரைவுகடாவியாட்குச் சொல்லியது.

இ - ள். ஊடல் உணர்தல் புணர்தல் இவை - புணர்ச்சியினிதாதற்பொருட்டு வேண்டுவதாயவூடலும் அதனை யளவறிந்து நீங்குதலும் அதன்பினிகழ்வதாயவப் புணர்ச்சிதானுமென விவையன்றே—காமம் கூடியார் பெற்ற பயன் - வரைந்து கொண்டு காமத்தை யிடைவிடாதெய்தியவர் பெற்ற பயன்கள். எ - று.

ஆடவர்க்குப் பிரிவென்பதொன்றுளதாதன்மேலும் அதுதான் பரத்தையர்மாட்டாதலும் அதனையறிந்து மகளிருடிநிற்றலும் அவ்வூடலைத் தவறுசெய்தவர்தாமே தந்தவறின்மைகூறி நீக்கலும் பின்னுமவ்விருவரும் ஒத்தவன்பினராய்க்கூடலுமன்றே முன்வரைந்தெய்தினார் பெற்றபயன், அப்பயன் இருதலைப்புள்ளினோருயிராய உழுவலன்புடைய வெமக்கு வேண்டாவென அவ்வரைந்தெய்தலையிகழ்ந்து கூறியவாறு. ()

௧௧௧0. அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. ௧0.

புணர்ந்துடன்போகின்றான் றன்னுள்ளே சொல்லியது.

இ - ள். அறிதோறு அறியாமை கண்டற்று - நூல்களானும் நுண்ணுணர்வானும் பொருள்களை யறியவறிய முன்னையறியாமை கண்டாற்போலக் காணப்படாநின்றது—சேயிழைமாட்டுச் செறிதோறும் காமம் - சிவந்தவிழையினையுடையாளை இடைவிடாது செறியச்செறிய இவண்மாட்டுக் காதல். எ - று.

களவொழுக்கத்திற் பலவிடையீடுகளானெய்தப்பெறாது அவாவுற்றான் இதுபொழுது நிரந்தரமாகவெய்தப் பெற்றமையின், செறிதோறுமென்றான். அறிவிற்கெல்லையின்மையான் மேன்மேலறியவறிய முன்னையறிவு அறியாமையாய்முடியுமாறு போலச் செறிவிற் கெல்லையின்றி மேன்மேற்செறியச்செறிய முன்னைச்செறிவு செறியாமையாய் முடியாநின்றதெனத் தன்னாராமை கூறியவாறு. இப்புணர்ச்சிமகிழ்தல் தலைமகட்குமுண்டேனும் அவண்மாட்டுக்குறிப்பானிகழ்வதல்லது கூற்றானிகழாமையறிக. (௧0)

ககஉ ம் அதி.—நலம்புனைந்துரைத்தல்.

அஃதாவது தலைமகன்றலைமகணலத்தைப் புனைந்து சொல்லியது. இது, புணர்ச்சிமகிழ்ந்துழி நிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தலின்பின் வைக்கப்பட்டது.

ககககக. நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள். க.

இயற்கைப்புணர்ச்சியிறுதிக்கட்சொல்லியது.

இ - ள். அனிச்சமே வாழி நன்னீரை - அனிச்சப்பூவே, வாழ்வாயாக, மென்மையால் நீயெல்லாப்பூவினு நல்லவியற்கையையுடையை,—யாம் வீழ்பவள் நின்னினும் மென்னீரள் - அங்ஙனமாயினும் எம்மால் விரும்பப்பட்டவள் நின்னினுமெல்லியவியற்கையையுடையள். எ - று.

அனிச்சம் ஆகுபெயர். வாழியென்பது உடன்பாட்டுக்குறிப்பு. இனி யானே மெல்லியனென்னுந்தருக்கினையொழிவாயாகவென்பதாம். அதுபொழுது துற்றறிந்தானாகலின், ஊற்றினினிமையையே பாராட்டினான். இன்னீரளென்று பாடமோதுவாருமுளர். (க)

கககஉ. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று. உ.

இடந்தலைப்பாட்டின்கட்சொல்லியது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—இவள் கண் பலர்காணும் பூ ஒக்கும் என்று - யானே காணப்பெற்ற இவள் கண்களைப் பலரானுங் காணப்படும் பூக்கள் ஒக்குமென்று கருதி—மலர்காணின் மையாத்தி - தாமரை, குவளை, நீலமுதலிய மலர்களைக் கண்டால் மயங்காநின்றாய்; நின்னறிவிருந்தவாறென்! எ - று.

மையாத்தல் ஈண்டு ஒவ்வாதவற்றையொக்குமெனக்கோடல்: இறுமாத்தல், செம்மாத்தலென்பனபோலவொருசொல். இயற்கைப்புணர்ச்சி நீக்கமுதலாகத் தலைமகள் கண்களைக் காணப்பெறுமையின் அவற்றோடொருபுடையொக்குமலர்களைக் கண்டுழியெல்லாம் அவற்றின்கட் காதல்செய்துபோந்தான், இதுபொழுது அக்கண்களினலமுழுதுந் தானேதமியாளையிடத்தெதிர்ப்பட் டனுபவித்தானாகலின் அம்மலர்கள் ஒவ்வாமைகண்டு ஒப்புமைகருதிய நெஞ்சையிகழ்ந்து கூறியவாறு. (உ)

ககக௩. முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. ௩.

கூட்டுதலுற்றபாங்கற்குத் தலைமகன்றலைமகளதியல்பு கூறியது.

இ - ள். வேய்த்தோளவட்கு - வேய்போலுந் தோளினையுடையவட்கு—மேனி முறி - நிறந் தளிர்நிறமாயிருக்கும்,—முறுவல் முத்தம் - பல்லு முத்தமாயிருக்கும்,—நாற்றம் வெறி - இயல்பாய நாற்றம் நறுநாற்றமாயிருக்கும்,—உண்கண் வேல் - உண்கண்கள் வேலாயிருக்கும். எ - று.

பெயரடையானும் ஓரியல்பு கூறப்பட்டது. முறி, முறுவலென்பன ஆகுபெயர். உருவகவகையாற் கூறினமையின், புனைந்துரையாயிற்று. நின்னாற் கருதப்பட்டாளையறியேனென்று சேட்படுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியதூஉமாம். (௩)

௧௧௧௪. காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு
மாணிழை கண்ணொவ்வே மென்று. ௪.

பாங்கற்கூட்டத்துச்சென்றுசார்தலுறுவான் சொல்லியது.

இ - ள். குவளை - குவளைப்பூக்கடாமும்,—காணின் - காண்டற்றொழிலையுடைய வாயின்,—மாண் இழை கண் ஒவ்வேம் என்று கவிழ்ந்து நிலன் நோக்கும் - மாண்டவிழையினையுடையாள்கண்களை யாமொவ்வேமென்று கருதி அந்நாணினாலிறைஞ்சி நிலத்தினை நோக்கும். எ - று.

பண்பானேயன்றித் தொழிலானுமொவ்வாதென்பான் காணினென்றும், கண்டால் அவ்வொவ்வாமையால் நாணுடைத்தாமென்பது தோன்றக் கவிழ்ந்தென்றுங் கூறினான். காட்சியுநாணுமின்மையிற் செம்மாந்து வானைநோக்கினவென்பதாம். (௪)

௧௧௧௫. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. ௫.

பகற்குறிக்கட் பூவணிகண்டு சொல்லியது.

இ - ள். அனிச்சப்பூக் கால் களையாள் பெய்தாள் - இவள் தன் மென்மைகருதாது அனிச்சப்பூவை முகிழ்களையாது சூடினாள்,—நுசுப்பிற்கு நல்ல பறை படா - இனியிவளிடைக்கு நல்ல பறைகளொலியா. எ - று.

அம்முகிழ்ப்பாரம் பொறாமையின் இடை முரியும், முரிந்தால் அதற்குச் செத்தார்க்குரிய நெய்தற்பறையே படுவதென்பதாம். மக்கட்குரிய சாக்காடும் பறைபடுதலும் இலக்கணக்குறிப்பால் நுசுப்பின்மேலேற்றப்பட்டன.* (௫)

௧௧௧௬. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன். ௬.

இரவுக்குறிக்கண் மதிகண்டு சொல்லியது.

இ - ள். மீன்-வானத்து மீன்கள்,—மதியும் மடந்தைமுகனும் அறியா-வேறுபாடு பெரிதாகவும் தம்மதியினையும் எம்மடந்தைமுகத்தினையும் இதுமதி இதுமுகமென்றறியமாட்டாது,—பதியின் கலங்கிய - தந்நிலையினின்றுங்கலங்கித் திரியாநின்றன. எ-று.

ஓரிடத்து நில்லாது எப்பொழுதுமியங்குதல்பற்றிப் பதியிற்கலங்கியவென்றான். வேறுபாடு வருகின்றபாட்டாற்பெறப்படும். இனி இரண்டனையும் பதியிற்கலங்காத மீன்களறியுமல்லது கலங்கின மீன்கள் அறியாவென்றுரைப்பினுமமையும். (௬)

௧௧௧௭. அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. எ.

இதுவுமது.

இ - ள். அம்மீன்கள் அங்ஙனங்கலங்குதற்குக் காரணம்யாது?—அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப்போல - முன்குறைந்தவிடம் வந்துநிரம்பியே விளங்குமதிக்கட்போல—மாதர் முகத்து மறு உண்டோ - இம்மாதர்முகத்து மறுவுண்டோ! எ - று.

---

* இவ்விலக்கணையடியாகத் தோன்றியகுறிப்பை வடநூலார் இலக்கணாமூலத் தொனியென்பர்.

இடம் கலை. மதிக்கென்பது வேற்றுமைமயக்கம். தேய்தலும் வளர்தலும் மறுவுடைமையுமின்மைபற்றி வேறுபாடறியலாயிருக்க அறிந்திலவென விகழ்ந்து கூறியவாறு. (எ)

ககக௮. மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி. ௮.

இதுவுமது.

இ - ள். மதி வாழி - மதியே, வாழ்வாயாக;—மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல் காதலை - இம்மாதர்முகம்போல யான்மகிழும்வகை ஒளிவீசவல்லையாயின், நீயுமென்காதலையுடையையாதி. எ - று.

மறுவுடைமையின் அதுமாட்டாய், மாட்டாமையின் என்னாற் காதலிக்கவும்படாயென்பதாம். வாழியென்பது இகழ்ச்சிக்குறிப்பு. (௮)

கககக. மலரன்ன கண்ணாண் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி. க.

இதுவுமது.

இ - ள். மதி - மதியே,—மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்தியாயின் - இம்மலர்போலுங் கண்ணினையுடையாண்முகத்தை நீயொக்கவேண்டுதியாயின்,—பலர் காணத் தோன்றல் - இதுபோல யான்காணத் தோன்று, பலர்காணத்தோன்றொழி. எ - று.

தானே முகத்தினலமுழுதுங்கண்டனுபவித்தானாகலின் ஈண்டும் பலர்காணத்தோன்றலையிழித்துக்கூறினான். தோன்றின் நினக்கவ்வொப்புண்டாகாதென்பதாம்.()

ககஉ0. அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம். க0.

உடன்போக்குரைத்த தோழிக்கு அதனருமைகூறி மறுத்தது.

இ - ள். அனிச்சமும் அன்னத்தின் தூவியும் - உலகத்தாரான் மென்மைக்கெடுக்கப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப்புள்ளின் சிறகுமாகியவிரண்டும்—மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம் - மாதரடிக்கு நெருஞ்சிப்பழம்போல வருத்தஞ்செய்யும். எ - று.

முள் வலிதாதலுடைமையிற் பழமென்றான். இத்தன்மைத்தாயவடி "பாத்தியன்னகுடுமிக்கூர்ங்கற்*" களையுடைய வெஞ்சுரத்தை யாங்ஙனங் கடக்குமென்பது குறிப்பாற்பெறப்பட்டது. செம்பொருளேயன்றிக் குறிப்புப்பொருளும் அடிநலனழியாமையாகலின், இதுவுமிவ்வதிகாரத்ததாயிற்று. (க0)

ககரு ம் அதி.—காதற்சிறப்புரைத்தல்.

அஃதாவது தலைமகன் தன்காதன்மிகுதிகூறலும், தலைமகள் தன்காதன்மிகுதி கூறலுமாம். இது, புணர்ச்சியும் நலனும்பற்றி நிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தல் நலம்புனைந்துரைத்தல்களின் பின் வைக்கப்பட்டது.

* அகநானூறு, களிற்றியானைநிரை, ௫.

ககஉக. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். க.

இயற்கைப்புணர்ச்சி யிறுதிக்கட்டலைமகன் றன்னயப்புணர்த்தியது.

இ - ள். பணிமொழி வால் எயிறு ஊறிய நீர் - இம்மெல்லியமொழியினையுடையாளது வாலியவெயிறூறியநீர்—பாலொடு தேன்கலந் தற்று - பாலுடனே தேனைக் கலந்த கலவைபோலும். எ - று.

கலந்ததற்றென்பது விகாரமாயிற்று, கலக்கப்பட்டதென்றவாறு. பாலொடு தேனென்றவதனால் அதன்சுவைபோலுஞ் சுவையினையுடைத்தென்பதாயிற்று. எயிறூறியவென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது. வேறுவேறறியப்பட்டசுவையவாய பாலுந்தேனுங்கலந்துழி அக்கலவை யின்னதென்றறியலாகாத இன்சுவைத்தாமாகலின், அது பொருளாகிய நீர்க்குமெய்துவிக்க. (க)

ககஉஉ. உடம்பொ டுயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு. உ.

பிரிவச்சங்கூறியது.

இ - ள். உடம்பொடு உயிரிடை என்ன அன்ன - உடம்போடுயிரிடையுளவாய நட்புக்கள் எத்தன்மைய அத்தன்மைய—மடந்தையொடு எம்மிடை நட்பு - இம்மடந்தையோடு எம்மிடையுளவாய நட்புக்கள். எ - று.

என்னவெனப் பன்மையாற்கூறியது, இரண்டுந் தொன்றுதொட்டு வேற்றுமையின்றிக் கலந்துவருதல், இன்பத்துன்பங்களொக்க வனுபவித்தல், இன்றியமையாமையென்றிவற்றை நோக்கி. தெய்வப்புணர்ச்சியாகலான் அதுபொழுது உணர்ச்சியிலளாகியாள் பின்னுடையளாமன்றே, ஆயவழி இவன் யாவன்கொலெனவும் என்கணன்புடையன்கொலெனவும் இன்னுமிவனைத் தலைப்பெய்தல் கூடுங்கொலெனவும் அவண் மனத்தின்கணிகழும்; அந்நிகழ்வனவற்றைக் குறிப்பானறிந்து அவைதீரக்கூறியவாறு. என்னையென்று பாடமோதுவாருமுளர். (உ)

ககஉ௩. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம். ௩.

இடந்தலைப்பாட்டின்கட் டலைமகனீக்கத்துச் சொல்லியது.

இ - ள். கருமணியிற் பாவாய் நீபோதாய் - என்கண்ணிற்கருமணியின்கணுறையும் பாவாய், நீயங்குநின்றும் போதருவாயாக;—யாம் வீழும் திருநுதற்கு இடம் இல்லை - போதராதிருத்தியாயின், எம்மால் விரும்பப்பட்ட திருநுதலையுடையாட்கு இருக்கவிடமில்லையாம். எ - று.

யான்காணுதமையாமையின் இவள்புறத்துப் போகற்பாலளன்றி என்கண்ணுளிருக்கற்பாலள், இருக்குங்கால் நின்னேடொருங்கிருக்க இடம்போதாமையின் நின்னினுஞ்சிறந்தவிவட்கு அவ்விடத்தைக்கொடுத்து நீபோதுவாயாகவென்பதாம். (௩)

ககஉச. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து. ச.

பகற்குறிக்கட்புணர்ந்துநீங்குவான் சொல்லியது.

இ - ள். ஆயிழை உயிர்க்கு வாழ்தல் அன்னள் - தெரிந்தவிழையினையுடையாள் எனக்குப் புணருமிடத்து உயிர்க்குடம்போடுகூடிவாழ்தல்போலும்;—நீங்குமிடத்து அதற்குச் சாதல் அன்னள் - பிரியுமிடத்து அதற்கு அதனினீங்கிப்போதல்போலும். எ - று.

எனக்கென்பதும் புணருமிடத்தென்பதும் அவாய்நிலையான்வந்தன. வாழுங் காலத்து வேற்றுமையின்றி வழிநிற்றலானும், சாங்காலத்து வருத்தஞ்செய்தலானும், அவற்றை அவள் புணர்வு பிரிவுகட்குவமையாக்கினான். (௪)

௧௧௨௫. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ளமர்க் கண்ணாள் குணம். ௫.

ஒருவழித்தணந்துவந்த தலைமகன் நீயிர்தணந்தஞான்று
எம்மையுள்ளியுமறிதிரோவென்ற தோழிக்குச்சொல்லியது.

இ - ள். ஒள்ளமர்க் கண்ணாள் குணம் யான் மறப்பின் உள்ளுவன் - ஒள்ளிய வாய் அமரைச்செய்யுங் கண்ணினையுடையாள் குணங்களை யான் மறந்தேனாயின், நினைப்பேன்;—மறப்பு அறியேன் - ஒருபொழுதும் மறத்தலையறியேன், ஆகலான் நினைத்தலையுமறியேன். எ - று.

மன் ஒழியிசைக்கண் வந்தது. குணங்கள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின. இத்துணையுந் தலைமகன் கூற்று; மேற்றலைமகள் கூற்று. (௫)

௧௧௨௬. கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர். ௬.

ஒருவழித்தணப்பின்கட்டலைமகனைத் தோழி இயற்பழிக்குமென்றஞ்சி
அவள்கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். தாங்காணாமைபற்றிச் சேய்மைக்கட்போயினாரென்று கருதுவார் கருதுக,—எங்காதலவர் கண்ணுள்ளிற் போகார் - எம்முடையகாதலர் எங்கண்ணகத்து நின்றும் போகார்,—இமைப்பிற் பருவரார் - யாமறியாதிமைத்தேமாயின் அதனால் வருந்துவதுஞ்செய்யார்,—நுண்ணியர் - ஆகலாற் காணப்படா நுண்ணியர். எ - று.

இடைவிடாத நினைவின்முதிர்ச்சியான் எப்பொழுதும் முன்னே தோன்றலிற் கண்ணுள்ளிற்போகாரென்றும், இமைத்துழியும் அது நிற்றலான் இமைப்பிற் பருவராரென்றுங் கூறினாள். (௬)

௧௧௨௭. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து. ௭.

இதுவுமது.

இ - ள். காதலவர் கண் உள்ளாராகக் கண்ணும் எழுதேம் - காதலர் எப்பொழுதுமெங்கண்ணினுள்ளாராகலாற் கண்ணினை அஞ்சனத்தாலெழுவதுஞ் செய்யேம்,—கரப்பாக்கு அறிந்து - அத்துணைக்காலமும் அவர் மறைதலையறிந்து. எ - று.

இழிவுசிறப்பும்மை மாற்றப்பட்டது. கரப்பாக்கென்பது வினைப்பெயர். வருகின்ற வேபாக்கென்பதுமது. யானிடையீடின்றிக் காண்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறென்னையென்பது குறிப்பெச்சம். (எ)

ககஉஅ. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து. அ.

இதுவுமது.

இ - ள். காதலவர் நெஞ்சத்தாராக வெய்து உண்டல் அஞ்சுதும் - காதலர் எந்நெஞ்சினுள்ளாராகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலையஞ்சாநின்றேம்,—வேபாக்கு அறிந்து - அவர் அதனான் வெய்துறலையறிந்து. எ - று.

எப்பொழுதும் எந்நெஞ்சின்கணிருக்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறென்னையென்பது குறிப்பெச்சம். (அ)

ககஉகூ. இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர். கூ.

வரைவிடை வைத்துப் பிரிவின்கட் டலைமகளாற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனையியற்பழித்தவழி அவளியற்பட மொழிந்தது.

இ - ள். இமைப்பிற் கரப்பாக்கு அறிவல் - என்கண்ணிமைக்குமாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலையறிந்து இமையேன்;—அனைத்திற்கே ஏதிலர் என்னும் இவ்வூர் - அவ்வளவிற்கு அவரைத் துயிலாநோய்செய்தார் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர். எ - று.

தன்கருத்தறியாமைபற்றிப் புலந்து சொல்லுகின்றாளாகலின், தோழியை வேறுபடுத்து இவ்வூரென்றாள். ஒருபொழுதும் பிரியாதவரைப் பிரிந்தாரென்று பழிக்கற்பாலையல்லையென்பதாம். (கூ)

ககங0. உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர். க0.

இதுவுமது.

இ - ள். என்றும் உள்ளத்துள் உவந்து உறைவர் - காதலர் எஞ்ஞான்றும் என்னுள்ளத்துள்ளேயுவந்துறையாநிற்பர்;—இகந்து உறைவர் ஏதிலர் என்னும் இவ்வூர் - அதனையறியாது அவரைப் பிரிந்துறையாநின்றார் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர். எ - று.

உவந்துறைவரென்றதனால் அன்புடைமை கூறினாள். பிரியாமையும் அன்புமுடையாரை இலரெனப் பழிக்கற்பாலையல்லையென்பதாம். (க0)

ககச ம் அதி.—நாணுத்துறவுரைத்தல்.

அஃதாவது சேட்படுக்கப்பட்டு ஆற்றாளாய தலைமகன் தோழிக்குத் தன்னாண்டுறவுரைத்தலும், அறத்தொடு நிற்பிக்கலுற்ற தலைமகள் அவட்குத் தன்னாண்டுறவுரைத்

தலுமாம். இது, காதன்மிக்குழி நிகழ்வதாகலின், காதற்சிறப்புரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

ககருக. காம முழந்து வருந்தினுர்க் கேம
மடலல்ல தில்லை வலி. க.

சேட்படுக்கப்பட்ட ஆற்றுனய தலைமகன் சொல்லியது.

இ - ள். காமம் உழந்து வருந்தினுர்க்கு - அரியராய மகளிரோடு காமத்தையனுபவித்துப் பின்னதுபெருது துன்புற்றவாடவர்க்கு—ஏம மடல் அல்லது வலி இல்லை - பண்டும் ஏமமாய் வருகின்ற மடலல்லது இனியெனக்கு வலியாவதில்லை. எ - று.

ஏமமாதல் அத்துன்பநீங்கும்வகை அவவனுபவத்தினைக்கொடுத்தல். வலி ஆகுபெயர். பண்டுமேட்டவராயினுர் இன்பமெய்திவருகின்றவாறுநிற்க, நின்னையதற்குத் துணையென்று கருதிக் கொன்னே முயன்ற யான் இதுபொழுது அல்லாமையையறிந்தேனுகலான் இனி யானுமவ்வாற்ருன் அதனையெய்துவலென்பது கருத்து. (க)

ககருஉ. நோனு வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து. உ.

நாணுடையநுமக்கு அது முடியாதேன மடல்விலக்க லுற்றட்குச் சொல்லியது.

இ - ள். நோனு உடம்பும் உயிரும் மடல் ஏறும் - அவ்வருத்தத்தினைப்பொருத வுடம்புமுயிரும் அதற்கேமமாய மடன்மாவினையூரக் கருதாநின்றன,—நாணினை நீக்கிநிறுத்து - அதனை விலக்குவதாய நாணினையகற்றி. எ - று.

வருந்தினுர்க்கென மேல்வந்தமையிற் செயப்படுபொருள் ஈண்டுக் கூருராயினுர். மடல் ஆகுபெயர். நீக்கிநிறுத்தென்பது ஒருசொன்னீர்மைத்து. அறிவுநிறையோர்ப்புக் கடைப்பிடி முதலிய முன்னே நீங்கவும் நாணீங்காது நின்றது, அதுவுமிதுபொழுது நீங்கிற்றென்பான், உடம்புமுயிருமென்ருன். அவைதாந் தம்முணீங்காமற்பொருட்டு மடலேறுமென்றது. அவள் தன்ஞற்ருமையறிந்து கடிதிற் குறைநேர்தனேக்கி. (உ)

ககருங. நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்ருர் ேறு மடல். ங.

நாணையன்றி நல்லாண்மையு முடைமையின்
முடியாதேன்றட்குச் சொல்லியது.

இ - ள். நாணெடு நல்லாண்மை பண்டு உடையேன் - நாணும்மிக்கவாண்டகைமையும் யான் பண்டுடையேன்;—காமுற்ருர் ஏறும் மடல் இன்று உடையேன் - அவை காமத்தானீங்குதலான், அக்காமமிக்காரேறும் மடலினையின்றுடையேன். எ-று.

நாண் இழிவாயினசெய்தற்கண்விலக்குவது. ஆண்மை ஒன்றற்குந் தளராதுநிற்றல். அவை பண்டுள்ளன, இன்றுள்ளது இதுவேயாகலிற் கடிதின்முடியுமென்பதாம்.

ககருச. காமக் கடும்புன லுய்க்குமே நாணெடு
நல்லாண்மை யென்னும் புணை. ச.

நாணுநல்லாண்மையுங் காமவெள்ளத்திற்குப் புணையாகலின் அதனால் அவை நீங்குவனவல்ல வென்றாட்குச் சொல்லியது.

இ - ள். நாணொடு நல்லாண்மை என்னும் புணை - யான்றன்னைக் கடத்தற்குக் கொண்ட நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை—காமக்கடும்புனல் உய்க்குமே - என்னிற்பிரித்துக் காமமாகிய கடிய புனல் கொண்டுபோகாநின்றது. எ - று.

அதுசெய்யமாட்டாத ஏனைப்புனலினீக்குதற்குக் கடும்புனலென்றான். இப்புனற்கு அவை புணையாகா, அதனான் அவை நீங்குமென்பதாம். (௪)

௧௧௩௫. தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர். ௫.

இவ்வாற்றமையும் மடலும் நுமக்கெவ்வாறுவந்தன வென்றாட்குச் சொல்லியது.

இ - ள். மாலை உழக்கும் துயர் மடலொடு - மாலைப்பொழுதின்கணனுபவிக்குந் துயரினையும் அதற்குமருந்தாய மடலினையும் முன்னறியேன்;—தொடலைக் குறுந்தொடி தந்தாள் - இதுபொழுது எனக்கு மாலைபோலத் தொடர்ந்த சிறுவளையினையுடையாடந்தாள். எ - று.

காமம் ஏனைப்பொழுதுகளினுமுளதேனும் மாலைக்கண்மலர்தலுடைமையின் மாலையுழக்குந்துயரென்றும், மடலும் அதுபற்றி வந்ததாகலின் அவ்விழிவும் அவளாற்றரப்பட்டதென்றும், அவடான் நீ கூறியதே கூறுமிளமையளென்பது தோன்றத் தொடலைக்குறுந்தொடியென்றுங்கூறினான். அப்பெயர் உவமைத்தொகைப்புறத்துப்பிறந்த வன்மொழித்தொகை. இவை அவடந்தனவாகலின் நின்னானீங்குமென்பது கருத்து. (௫)

௧௧௩௬. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண். ௬.

மடலூரும்பொழுது இற்றைக்குங் கழிந்ததென்றாட்குச் சொல்லியது.

இ - ள். பேதைக்கு என் கண் படல் ஒல்லா - நின்பேதைகாரணமாக என்கண்கள் ஒருகாலுந் துயிறலைப்பொருந்தா;—யாமத்தும் மன்ற மடலூர்தல் உள்ளுவேன் - அதனால் எல்லாருந் துயிலுமிடையாமத்தும் யானிருந்து மடலூர்தலையே கருதாநிற்பேன். எ - று.

பேதையென்றது பருவம்பற்றியன்று மடமைபற்றி. இனிக்குறைமுடிப்பது நாளையெனவேண்டாவென்பதாம். (௬)

௧௧௩௭. கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். ௭.

பேதைக் கென்கண் படலொல்லா வென்பதுபற்றி அறிவிலராய மகளிரினும் அஃதுடையராய வாடவரன்றே ஆற்றற்பால ரென்றாட்குச் சொல்லியது.

இ - ள். கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப் பெண்ணின் - கடல்போலக் கரையற்ற காமநோயினையனுபவித்தும் மடலூர்தலைச்செய்யாது ஆற்றியிருக்கும்

பெண்பிறப்புப்போல—பெருந்தக்கது இல் - மிக்க தகுதியினையுடையபிறப்பு உலகத்தில்லை. எ - று.

பிறப்புவிசேடத்தால் அவ்வடக்கம் எனக்கில்லையாகாநின்றது, நீயஃதறிகின்றிலையென்பதாம். இத்துணையுந் தலைமகன்கூற்று, மேற்றலைமகள் கூற்று. (எ)

ககஞ௮. நிறையரியர் மன்னளிய ரென்னுது காம
மறையிறந்து மன்று படும். ௮.

காப்புச்சிறைமிக்குக் காமம்பெருகியவழிச் சொல்லியது.

இ - ள். நிறை அரியர் (என்னுது) - இவர் நிறையால் நாமீதூர்தற்கரியரென் றஞ்சுதல்செய்யாது,—மன் அளியர் என்னுது - மிகவு மளிக்கத்தக்காரென் றிரங்குதல்செய்யாது,—காமம் மறை இறந்து மன்றுபடும் - மகளிர்காமமும் அவர்மறைத்தலைக் கடந்து மன்றின்கண்ணே வெளிப்படுவதாயிருந்தது. எ - று.

என்னுதென்பது முன்னுங்கூட்டி மகளிரென்பது வருவிக்கப்பட்டது. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. மன்றென்பது தந்தைதன்னையரைநோக்கி, உலகத்துப் பெண்பாலார் காமத்தியல்பு கூறுவாள்போன்று, தன்காமம் பெருகியவாறும் இனியறத்தொடு நிற்றல்வேண்டுமென்பதுங் குறிப்பாற் கூறியவாறாயிற்று. (அ)

ககஞ௯. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு. ௯.

இதுவுமது.

இ - ள். எல்லாரும் அறிகிலார் என்று - யான்முன்னடங்கிநிற்றலான் எல்லாருமென்னையறிதலிலர் இனியவ்வாறு நில்லாதியானே வெளிப்பட்டறிவிப்பலென்று கருதி,—என்காமம் மறுகில் மருண்டு மறுகும் - என்காமம் இவ்வூர்மறுகின்கண்ணே மயங்கிச்சுழலாநின்றது. எ - று.

மயங்குதல் அம்பலாதல். மறுகுதல் அலராதல். அம்பலுமலருமாயிற்று, இனியறத்தொடுநிற்றல்வேண்டுமென்பதாம். அறிவிலாரென்பதூஉம் பாடம். (௯)

கக௪0. யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. ௧0.

செவிலிக்கறத்தோடு நின்றுவைத்து யானிற்றுமாறென்னையென்று நகையாடிய தோழியோடு புலந்து தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். யாம் கண்ணிற்காண அறிவில்லார் நகுப - யாங்கேட்குமாறுமன்றிக் கண்ணுற்காணுமாறு எம்மையறிவிலார் நகாநின்றார்,—யாம் பட்ட தாம் படாவாறு - அவரங்ஙனஞ் செய்கின்றது யாமுற்றநோய்கள் தாமுறாமையான். எ - று.

கண்ணினென்றது முன்கண்டறியாமையுணரநின்றது. அறத்தொடுநின்றமையறியாது வரைவு மாட்சிமைப்படுகின்றிலனெனப்புலக்கின்றாளாகலின், ஏதிலாளாக்கிக் கூறினாள். இது, நகாநின்று சேட்படுக்குந்தோழிக்குத் தலைமகன் கூறியதாங்கால், அதிகாரத்திற்கேலாமையறிக. (௧0)

௧௧௫ ம் அதி.—அலரறிவுறுத்தல்.

அஃதாவது களவொழுக்கம்வேண்டிய தலைமகன் பிறர்கூறுகின்றவலர் தனக்காகின்றவாற்றைத் தோழிக்கறிவுறுத்தலும், வரைவாக உடன்போக்காக ஒன்றுவேண்டிய தலைமகளும் தோழியும் அவ்வலரையவன்றனக் கறிவுறுத்தலுமாம். இது, நாணுத்துறந்தவழி நிகழ்வதாகலான், நாணுத்துறவுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

௧௧௪௧. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால். ௧.

அல்ல குறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி
யலர்கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது.

இ - ள். அலர் எழ ஆருயிர் நிற்கும் - மடந்தையொடெம்மிடைநட்பு ஊரின்கணலராயெழுதலான் அவளைப்பெறாது வருந்துமென்னரியவுயிர் பெற்றதுபோன்று நிலைபெறும்;—அதனைப் பாக்கியத்தால் பலர் அறியார் - அந்நிலைபேற்றைத் தெய்வத்தால் யானே யறிவதல்லது கூறுகின்ற பலருமறியார். எ - று.

அல்லகுறிப்பட்டுத் தலைமகளை யெய்தப்பெறாத வருத்தமெல்லாந்தோன்ற அரியவுயிரென்றும், அங்ஙனமரியாளை எளியளாக்கி யெடுக்கின்றமையின், அஃதவ்வாருயிர்க்குப் பற்றுக்கோடாகநின்றதென்பான் அலரெழவாருயிர் நிற்குமென்றும், பற்றுக்கோடாதலை அவ்வேதிலாரறியிற்றூற்றுதொழிவர், ஒழியவே ஆருயிர் போமாகலான் அவரறியாதொழிகின்றது தெய்வத்தானென்றுங் கூறினான். முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. (௧)

௧௧௪௨. மலரன்ன கண்ணா ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர். ௨.

இதுவுமது.

இ - ள். மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது - மலர்போலுங்கண்ணையுடையாளது எய்தற்கருமையறியாது,—இவ்வூர் அலர் எமக்கு ஈந்தது - இவ்வூர் அவளையெளியளாக்கி அவளோடலர்கூறலை எமக்குபகரித்தது. எ - று.

அருமை அல்லகுறிப்பாட்டானும் இடையீடுகளானும் ஆயது. ஈந்ததென்றான், தனக்குப் பற்றுக்கோடாகலின், அலர்கூறுவாரை அவர்செய்தவுதவிபற்றி இவ்வூரென்றான். (௨)

௧௧௪௩. உறாஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து. ௩.

இதுவுமது.

இ - ள். ஊர் அறிந்த கௌவை உறாதோ - எங்கட்குக் கூட்டமுண்மை இவ்வூரறிதலான் விளைந்தவலர் எனக்குறுவதொன்றன்றோ,—அதனைப் பெறாது பெற்றன்ன நீர்த்து - அதுகேட்டவென்மனம் அக்கூட்டத்தைப் பெறாதிருந்தே பெற்றாற்போலு நீர்மையையுடைத்தாகலான். எ - று.

பெற்றன்னநீர்மை பெற்றவழியுளதாமின்பம்போலுமின்பமுடைமை. நீர்த்தென்பதற்கேற்ற மனமென்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது. (௩)

௧௧௪௪. கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து. ௪.

இதுவுமது.

இ - ள். காமம் கவ்வையால் கவ்விது - என்காமம் இவ்வூரெடுக்கின்ற அலரானே யலர்தலையுடைத்தாயிற்று;—அது இன்றேல் தன்மை இழந்து தவ்வென்னும் - அவ்வலரில்லையாயின், தன்னியல்பிழந்து சுருங்கும். எ - று.

அலர்தல் மேன்மேன்மிகுதல். செவ்வையுடையதனைச் செவ்விதென்றாற்போலக் கவ்வையுடையதனைக் கவ்விதென்றார். இயல்பு இன்பம் பயத்தல். தவ்வென்னுமென்பது குறிப்புமொழி; "நூல்கால் யாத்த மாலை வெண்குடை—தவ்வென் றசைஇத் தாழ்துளி மறைப்ப*" என்புழியுமது. (௪)

௧௧௪௫. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது. ௫.

இதுவுமது.

இ - ள். களித்தொறும் கள் உண்டல் வேட்டற்று - கள்ளுண்பார்க்குக் களிக்குந்தோறுங்கள்ளுண்டல் இனிதாமாறுபோல,—காமம் வெளிப்படுந்தோறும் இனிது - எனக்குக் காமம் அலராந்தோறும் இனிதாகாநின்றது. எ - று.

வேட்கப்பட்டற்றாலென்பது வேட்டற்றாலென நின்றது. வேட்கைமிகுதியால் அலரும் இன்பஞ்செய்யாநின்றதென்பதாம். (௫)

௧௧௪௬. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. ௬.

இடையீடுகளானும் அல்லதறியானுந் தலைமகனையெய்தப்பெறாத தலைமகள்
அவன்சிறைப்புறத்தானாகத் தோழிக்குச்சொல்லுவாளாய்
அலரறிவுறீஇ வரைவுகடாயது.

இ - ள். கண்டது ஒருநாள் - யான் காதலரைக் கண்ணுறப்பெற்றது ஒருஞான்றே;—அலர் திங்களைப் பாம்புகொண்டற்று - அதனானுயவலர் அவ்வளவிற்றன்றித் திங்களைப்பாம்பு கொண்டவலர்போன்று உலகெங்கும் பரந்தது. எ - று.

காரியத்தைக் காரணமாகவுபசரித்துப் பாம்புகொண்டற்றென்றாள். இருவழியும் மன்னும் உம்மையும் அசைநிலை. காட்சியின்றியும் அலர்பரக்கின்ற இவ்வொழுக்கம் இனியாகாது, வரைந்துகோடல்வேண்டுமென்பதாம். (௬)

௧௧௪௭. ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந் நோய். ௭.

வரைவுநீட ஆற்றளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தானாதலறிந்த தோழி
ஊரவரலரும் அன்னைசொல்லுநோக்கி யாற்றல்வேண்டுமெனச்
சொல்லெடுப்பியவழி அவள் சொல்லியது.

* நெடுநல் வாடை, அடி ௧௮௪ - ௧௮௫.

இ - ள். இந்நோய் - இக்காமநோயாகிய பயிர்,—ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல் நீராக நீளும் - இவ்வூரின்மகளிரெடுக்கின்ற அலர் எருவாக, அது கேட்டு அன்னை வெகுண்டுசொல்லுகின்ற வெஞ்சொல் நீராக, வளராநின்றது. எ - று.

ஊரவரென்பது தொழிலான் ஆணொழித்துநின்றது. ஏகதேசவுருவகம். சுருங்குதற்கேதுவாவனதாமே விரிதற்கேதுவாகாநின்றன வென்பதாம். வரைவானுதல் பயன். (எ)

ககசஅ. நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல். அ.

இதுவுமது.

இ - ள். கௌவையால் காமம் நுதுப்பேமெனல் - ஏதிலாரெடுக்கின்ற அலரால் நாங்காமத்தையவித்துமென்று கருதுதல்—நெய்யால் எரி நுதுப்பேமென்றற்று - நெய்யாலெரியையவித்துமென்று கருதுதலோடொக்கும். எ - று.

மூன்றனுருபுகள் கருவிக்கண்வந்தன. கிளர்தற்காரணமாய அலரால் அவித்தல் கூடாதென்பதாம். (அ)

ககசகூ. அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை. கூ.

வரைவிடைவைத்துப்பிரிவின்க ணாற்றளாய தலைமகள் அவன்வந்து சிறைப்புறத்தானாதலறிந்து அலரஞ்சியாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். அஞ்சலோம்பு என்றார் பலர் நாண நீத்தக்கடை - தம்மையெதிர்ப்பட்டஞான்று நின்னிற்பிரியேன் அஞ்சலோம்பென்றவர்தாமே இன்று கண்டார் பலரும் நாணும்வகை நம்மைத்துறந்தபின்—அலர் நாண ஒல்வதோ - நாமேதிலார் கூறுமலருக்கு நாணக்கூடுமோ கூடாது. எ - று.

நாணவென்னும் வினையெச்சம் ஒல்வதென்னுந் தொழிற்பெயருள் ஒல்லுதற்றொழிலோடு முடிந்தது. கண்டார் நாணுநிலைமையமாய யாம் நாணுதல் யாண்டையதென்பதாம். (கூ)

கக௫0. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்கு மிவ்வூர். க0.

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச் சொல்லியது.

இ - ள். யாம் வேண்டும் கௌவை இவ்வூர் எடுக்கும் - உடன்போகற்கேதுவாகநோக்கி யாம் பண்டேவிரும்புவதாயவலரை இவ்வூர்தானேயெடாநின்றது—காதலர்தாம் வேண்டின் நல்குவர் - இனிக்காதலர்தாமும் யாம்வேண்டியக்கால் அதனையினிதினேர்வர், அதனால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது. எ - று.

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. நங்கட்காதலுடைமையின் மாறாரென்பது தோன்றக் காதலரென்றாள். இவ்விருபதுபாட்டும் புணர்தனிமித்தம். (க0)

களவியல் முற்றிற்று.

கற்பியல்.

இனிக் கற்புப் பதினெட்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் பிரிவாற்றாமை கூறுகின்றார்.

ககசு ம் அதி.—பிரிவாற்றாமை.

அஃதாவது வரைந்தெய்தியபின் தலைமகன் அறம்பொருளின்பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினுந் தலைமகளைப் பிரிந்துசெல்லும்; செல்லுஞான்று அப்பிரிவினை அவளாற்றாளாந்தன்மை. அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழிகூறலும், அவடனக்குத் தலைமகடானே அவன்குறிப்பானுணர்ந்துகூறலும், பிரிவுணர்த்தியவழிக்கூறலும், தலைமகன்பிரிந்துழி ஆற்றுவிக்குந் தோழிக்குத் தலைமகள் மறுத்துக்கூறலுமென நால்வகையாற் கூறப்படும்.

ககநுக. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. க.

பிரிந்து கடிதின்வருவலென்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

இ - ள். செல்லாமை உண்டேல் எனக்கு உரை - நீயெம்மைப் பிரியாமையுண்டாயின் அதனையெனக்குச்சொல்,—மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்கு உரை - அஃதொழியப் பிரிந்துபோய் விரைந்து வருதல் சொல்லையாயின் அதனை அப்பொழுது உயிர்வாழ்வார்க்குச் சொல். எ - று.

தலைமகளையொழித்து எனக்கென்றாள், தானவளென்னும் வேற்றுமையின்மையின். அக்காலமெல்லாமாற்றியிருந்து அவ்வரவு காணவல்லளல்லள், பிரிந்தபொழுதேயிறந்துபடுமென்பதாம். அழுங்குவித்தல் பயன். இதனைத் தலைமகள் கூற்றாக்கியுரைப்பாருமுளர். (க)

ககநுஉ. இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு. உ.

பிரிவு தலைமகன்குறிப்பானறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ - ள். அவர் பார்வல் இன்கண் உடைத்து - தழையுங்கண்ணியுங்கொண்டு பின்னின்றஞான்று அவர்நோக்குமாத்திரமும் புணர்ச்சி குறித்தமையான் நமக்கின்பமுடைத்தாயிருக்கும்,—புணர்வு பிரிவஞ்சும் புன்கண் உடைத்து - இன்று அப்புணர்ச்சிதான் நிகழாநிற்கவும் அது பிரிவரென்றஞ்சுமச்சத்தினையுடைத்தாயிற்று, அவரன்பினிலைமையிது. எ - று.

பார்வலென்றதனாற் புணர்ச்சிபெறாத பின்னிலைக்காலம் பெறப்பட்டது. புன்கணென்னுங்காரணப்பெயர் காரியத்தின்மேலாயிற்று. அவ்வச்சத்தினையுடைத்தாதலாவது "முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக்—கள்ளினு மகிழ்செய்யு மெனவுரைத்து மமையாரென்—ஞெள்ளிழை திருத்தும்*" பண்டையிற் சிறப்பால் அவன் பிரிதற்குறிப்புக்காட்டி அச்சஞ்செய்தலுடைமை. அழுங்குவித்தல் பயன். (உ)

ககநுங. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். ங.

---

* கலி, பா, ங.

இதுவுமது.

இ - ள். அறிவு உடையார் கண்ணும் - பிரியேனென்ற தஞ்சொல்லும் நம்பிரிவாற்றுமையும் அறிதலுடையராய காதலர்கண்ணும்,—ஓரிடத்துப் பிரிவு உண்மையான் - ஒரோவழிப் பிரிவு நிகழ்தலான்,—தேற்றம் அரிது - அவர்சொல்லும் தலையளியும்பற்றி நம்மாட்டன்புடையரெனத் தேறுந்தேற்றம் அரிதாயிருந்தது. எ - று.

அரோ அசைநிலை. உம்மை உயர்வுசிறப்பின்கண் வந்தது. (௩)

ககருச. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு. ச.

இதுவுமது.

இ - ள். அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின் - எதிர்ப்பட்டஞான்றே தலையளிசெய்து நின்னிற்பிரியேன் அஞ்சலென்றவர்தாமே பின் பிரிவராயின்,—தெளித்த சொல் தேறியார்க்குத் தவறு உண்டோ - அவர்க்கன்றி அவர் தெளிவித்த சொல்லை மெய்யெனத் தெளிந்தார்க்குக் குற்றமுண்டோ! எ - று.

தேறியாரென்பது தன்னைப் பிறர்போற்கூறல். சொல்லுஞ் செயலுமொவ்வாமைக்குற்றம் அவர்க்கெய்தும், அஃதெய்தாவகையழுங்குவியென்பது கருத்து. (ச)

ககருரு. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு. ரு.

இதுவுமது.

இ - ள். ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல் - என்னுயிரைச் செல்லாமற்காத்தியாயின், அதனையாளுதற்கமைந்தாருடைய செலவினை அழுங்குவிப்பாயாக;—மற்று அவர் நீங்கிற் புணர்வு அரிது - அழுங்குவிப்பாரின்றி அவர்செல்வராயின் அவராலாளப்பட்டவுயிருஞ்செல்லும், சென்றாற் பின்னவரைக்கூடுதல் எனக்கரிதாம். எ - று.

ஆளுதற்கமைதல் இறைவராதற்குத் தெய்வத்தாலேற்புடையராதல். மற்று வினைமாற்றின்கண் வந்தது. (ரு)

ககருசூ. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்
நல்குவ ரென்னு நசை. சூ.

தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்துசொல்லிய தோழிக்குச் சொல்லியது.

இ - ள். அவர் பிரிவு உரைக்கும் வன்கண்ணராயின் - நங்கவவுக்கடுமையறிந்த தலைவர்தாமே நம்முனின்று தம்பிரிவினையுணர்த்தும் வன்கண்மையுடையராயின்,—நல்குவர் என்னும் நசை அரிது - அத்தன்மையார் பின்பு நம்மாற்றுமையறிந்துவந்து தலையளிசெய்வரென்றிருக்குமாசை விடப்படும். எ - று.

அருமை பயன்படுதலில்லாமை. கூடியிருந்தே அன்பின்றிப்பிரிவெண்ணுதலும் உணர்த்தலும் வல்லராயினார் பிரிந்துபோய் அன்புடையராய் நம்மை நினைத்துவந்து நல்குதல் யாண்டையதென்பதாம். அழுங்குவித்தல் பயன். (சூ)

ககருஎ. துறைவன் றுறந்தமை தூற்றுகொன் முன்கை
யிறையிறவா நின்ற வளை. எ.

இதுவுமது.

இ - ள். துறைவன் துறந்தமை - துறைவன் என்னைப் பிரியலுற்றமையை— முன்கையிறை இறவாநின்ற வளை தூற்றாகொல் - அவனுணர்த்தாமற்றாமேயுணர்ந்து என்முன்கையினிறையினின்றுங்கழலாநின்ற வளைகள் எனக்கறிவியாவோ, அவனுணர்த்தவுணர்ந்துவந்து நீயறிவித்தல்வேண்டுமோ! எ - று.

முன்னே நிகழ்ந்தமையிற் றுறந்தமையென்றும், கேட்டதுணையான் மெலிந்து ஆற்றாமையின் இறவாநின்றவென்றுங் கூறினாள். அழுங்குவித்துவந்து கூறற்பாலையல்லையாய் நீயும் இவ்வளைகள்செய்தெனவே செய்தாயெனப் புலந்து கூறியவாறு. (எ)

ககருஅ. இன்னா தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னா தினியார்ப் பிரிவு. அ.

இதுவுமது.

இ - ள். இனன் இல் ஊர் வாழ்தல் இன்னாது - மகளிர்க்குத்தங்குறிப்பறியுந் தோழியரில்லாத வேற்றூரின்கண் வாழ்தலின்னாது;—இனியார்ப்பிரிவு அதனினும் இன்னாது - அதன்மேலுந் தங்காதலரைப்பிரிதல் அதனினுமின்னாது. எ - று.

தலைவன் செலவினையழுங்குவித்து வாராது உடன்பட்டுவந்தமைபற்றிப் புலக்கின்றாளாகலின், இனனில்லூரென்றாள். உலகியல் கூறுவாள்போன்று தனக்கவ்விரண்டு முண்மை கூறியவாறு. (அ)

ககருகூ. தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ. கூ.

காமந் தீயேபோன்று தானின்றவிடத்தைச் சுடுமோகலான்
நீயாற்றல்வேண்டுமேென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். தீத்தொடிற் சுடிற் சுடலல்லது - தீத் தன்னைத்தொட்டாற் சுடுமாயிற் சுடுதலல்லது—காமநோய்போல விடிற் சுடல் ஆற்றுமோ - காமமாகிய நோய் போலத் தன்னையகன்றாற் றப்பாது சுடுதலை வற்றோ, மாட்டாது. எ - று.

சுடுமாயினென்பது மந்திரமருந்துகளாற்றம்பிக்கப்படாதாயி னென்றவாறு. காமத்திற்கதுவுமில்லையென்பாள் வாளா சுடலென்றாள். அகறல் நுகராமை. சுடலென்பது முன்னுங் கூட்டப்பட்டது. தீயினுங்கொடியதனை யானாற்றுமாறென்னை யென்பதாம். (கூ)

கககூ0. அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர். க0.

தலைவியர்பலரும் பிரிவாற்றியிருப்பர், அது நீசெய்கின்றிலை யென்ற
தோழிக்குச் சொல்லியது.

இ - ள். நீசொல்லுகின்றதொக்கும்,—அரிது ஆற்றி அல்லல்நோய் நீக்கி - பிரிவுணர்த்தியவழி அதற்குடம்பட்டுப் பிரியுங்கால்நிகழும் அல்லனோயினையு நீக்கி—பிரிவு ஆற்றிப் பின் இருந்து வாழ்வார் பலர் - பிரிந்தால் அப்பிரிவுதன்னையுமாற்றிப் பின்னுமிருந்து உயிர்வாழுமகளிர் உலகத்துப் பலர். எ - று.

பண்டையிற்சிறப்பத் தலையளிபெற்றின்புறுகின்ற வெல்லைக்கண்ணே அஃதி ழந்து துன்புறுதற்குடம்படுதல் அரியதொன்றாகலின் அரியதனைச்செய்தென்றும், செல்லுந்தேயத்து அவர்க்கியாது நிகழுமென்றும் வருந்துணையும் யாமாற்றியிருக்கு மாறென்னென்றும் அவ்வரவுதான் எஞ்ஞான்று வந்தெய்துமென்றும் இவ்வாற்றா னிகழுங்கவலை மனத்துநீங்காதாகலான் அல்லனோய் நீக்கியென்றும், பிரிந்தால் வருந் துணையும் அகத்து நிகழுங் காமவேதனையும் புறத்து யாழிசை, மதி, தென்றலென் றிவைமுதலாக வந்து அதனை வளர்ப்பனவும் ஆற்றலரியவாகலிற் பிரிவாற்றியென் றும், தங்காதலரை யின்றியமையா மகளிருள் இவையெல்லாம் பொறுத்துப் பின்னு மிருந்து உயிர்வாழ்வார் ஒருவருமில்லையென்பது குறிப்பாற்றோன்றப் பின்னிருந்து வாழ்வார் பலரென்றுங் கூறினாள். அரிதென்பது வினைக்குறிப்புப்பெயர். பிரிவின்க ணிகழ்வனவற்றைப் பிரிவென்றாள். செய்து, நீக்கி, ஆற்றியென்பன ஓசைவகையான் அவ்வவற்றதருமையுணர நின்றன. சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. யானுமிறந்து படுவலென்பது கருத்து. (௧௦)

௧௧௭ ம் அதி.—படர்மெலிந்திரங்கல்.

அது படரான்மெலிந்திரங்கலெனவிரியும். அஃதாவது பிரிவாற்றாளாயதலை மகள் தானுறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலின் அந்நினைவான் மெலிந் திரங்குதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௧௧௬௧. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும். ௧.

காமநோயை வெளிப்படுத்தல் நின்னாணுக்கேலாதென்ற
தோழிக்குச் சொல்லியது.

இ-ள். நோயை யான் மறைப்பேன் - இந்நோயைப் பிறரறிதனாணி யான் மறையாநின்றேன்;—இஃதோ இறைப்பவர்க்கு ஊற்றுநீர்போலமிகும் - நிற்பவும் இஃது அந்நாண்வரை நில்லாது நீர் வேண்டுமென்றிறைப்பவர்க்கு ஊற்றுநீர் மிகுமாறு போன் மிகாநின்றது. எ-று.

அம்மறைத்தலாற் பயனென்னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. "இஃதோ செல்வர்க்கொத்தனென்யான்" என்புழிப்போல ஈண்டுச் சுட்டுப் பெயரீறு திரிந்துநின்றது. இஃதோர் நோயையென்று பாடமோதுவாருமுளர்; அது பாடமன்மையறிக. இனி அதற்கடுத்தது நீ செயல்வேண்டுமென்பதாம். (௧)

௧௧௬௨. கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும். ௨.

ஈண்டையாரறியாமன் மறைத்தல் ஆண்டையாரறியத் தூதுவிடுதலென்னு
மிரண்டனுள் ஒன்றுசெயல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ-ள். இந்நோயைக் கரத்தலும் ஆற்றேன் - இந்நோயை ஈண்டையாரறியா மன் மறைத்தலும் வல்லேனாகின்றிலேன்;—நோய் செய்தார்க்கு உரைத்தலும் நாணுத் தரும் - ஆகாக்கால், நோய்செய்தவர்க்குரைக்கவெனின், அதுவும் எனக்கு நாணினைத்தாராநின்றது, இனியென் செய்கோ! எ-று.

ஒருகாலைக் கொருகான் மிகுதலிற் கரத்தலுமாற்றேனென்றும், சேயிடைச் சென்றவர்க்கு இதுசொல்லித் தூதுவிட்டால் இன்னுமிருந்தேனென்பது பயக்கு மென்னுங் கருத்தால் நாணுத் தருமென்றுங் கூறினாள். (உ)

கககங. காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனா வுடம்பி னகத்து. ௩.

இதுவுமது.

இ - ள். காமமும் நாணும் - காமநோயும் அதனைச் செய்தவர்க்கு உரைக்க லொல்லாத நாணும்—நோனா என் உடம்பின் அகத்து - தம்மைப் பொறாத என்னு டம்பின்கண்ணே—உயிர் காவாத்தூங்கும் - உயிர் காத்தண்டாக அதனிருதலையினுந் தூங்காநின்றன. எ - று.

பொறுமை மெலிவானுயது. தூங்குமென்பது, ஒன்றினொன்று மிகாது இரண் டும் ஒத்தசீரவென்பது தோன்ற நின்றது. தூதுவிடவும் ஒழியவும் பண்ணுவனவாய காமநாண்கள் தம்முளொத்து உயிரினையிறுவியாநின்றன, யான் அவற்றுளொன்றின்க ணிற்கமாட்டாமையின் இஃதிற்றேவிடுமென்பதாம். (௩)

கககச. காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில். ச.

தலைவியர் காமக்கடற்படார், படினும் அதனை ஏற்றபுணையானீந்திக் கடப்பரென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். உண்டு காமக்கடலே - யாவர்க்கும் உளவாய்வருகின்ற இவ்விரண்ட னுள்ளும் எனக்குண்டாகின்றது காமக்கடலே;—அது நீந்தும் ஏமப் புணை இல்-அதனை நீந்தும் அரணுகிய புணையில்லை. எ - று.

இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலை. தூதுவிட்டு இதற்குப் புணையாகற்பாலை யாயநீயும் ஆயிற்றிலையென்பது கருத்து. (ச)

கககரு. துப்பி னெவனாவர் மற்கொ றுயர்வரவு
நட்பினு ளாற்று பவர். ரு.

தூதுவிடாமைநோக்கித் தோழியோடு புலந்து சொல்லியது.

இ - ள். நட்பினுள் துயர்வரவு ஆற்றுபவர் - இன்பஞ்செய்தற்குரிய நட்பின் கண்ணே துன்பவரவினைச் செய்யவல்லவர்—துப்பின் எவனாவர்கொல் - துன்பஞ்செய் தற்குரிய பகைமைக்கண் என்செய்வர்கொல்லோ! எ - று.

துப்புப் பகையுமாதல் "துப்பெதிர்ந்தோர்க்கே யுள்ளாச் சேய்மைய—னட் பெதிர்ந் தோர்க்கே யங்கையண்மையன் *" என்பதனுனுமறிக. அப்பகைமை ஈண் டுக் காணுமையின் அவர்செய்வதுமறியப் பெற்றிலேமென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. துயர்வருதலை விலக்கலாயிருக்க அதுசெய்கின்றிலையெனப் புலக்கின்றமையின், துயர்வரவு செய்தாளாக்கியும் பிறளாக்கியுங் கூறினாள். (ரு)

* புறநானூறு, ௩௮௦.

௧௧௬௬. இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது. ௬.

காமத்தானின்பமுற்றற்கு அதனினய துன்பமும் வருமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். காமம் இன்பம் கடல் - காமம் புணர்வாலின்பஞ்செய்யுங்கால், அவ்வின்பங்கடல்போலப் பெரிதாம்;—மற்றஃது அடுங்கால் துன்பம் அதனிற்பெரிது - இனி அதுதானே பிரிவாற்றுன்பஞ்செய்யுங்கால், அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம். எ - று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. அடுங்காலென வந்தமையின், மறுதலையெச்சம் வருவிக்கப்பட்டது. பெற்றவின்பத்தோடொத்துவரின் ஆற்றலாம்; இஃததனளவன்றென்பது கருத்து. (௬)

௧௧௬௭. காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன். ௭.

காமக்கடல் நிறைபுணையாக நீந்தப்படுமென்றட்குச் சொல்லியது.

இ - ள். காமக் கடும்புனல் நீந்திக் கரை காணேன் - காமமாகிய கடலை நீந்தாதேனல்லேன், நீந்தியும் அதற்குக் கரைகாண்கின்றிலேன்;—யாமத்தும் யானே உளேன் - அக்காணாமைக்காலந்தான் எல்லாருந்துயிலும் அரையிருளாயிற்று, அவ்வரையிருட்கண்ணும் அதற்கொருதுணை யின்றி யானேயாயினேன், ஆயும் இறந்துபட்டுய்ந்துபோகாதுளேனாகாநின்றேன், ஈதொரு தீவினைப்பயனிருந்தவாறென்! எ - று.

கடுமை ஈண்டு மிகுதிக்கணின்றது. உம்மை முன்னுங்கூட்டப்பட்டது. யானேயாயினேனென்பது நீ துணையாயிற்றிலையென்னுங் குறிப்பிற்று. (௭)

௧௧௬௮. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லை துணை. ௮.

இரவின்கொடுமைசொல்லியிரங்கியது.

இ - ள். இரா அளித்து - இவ்விரா அளித்தாயிருந்தது;—மன் உயிர் எல்லாம் துயிற்றி என்னல்லது துணை இல்லை - உலகத்து நிலைபெறுகின்ற உயிர்களையெல்லாந் தானே துயிலப்பண்ணுதலான் என்னையல்லது வேறு துணையுடைத்தாயிற்றில்லை. எ-று.

துயிற்றியெனத் திரிந்துநின்ற வினையெச்சம் அவாய்நிலையான்வந்த உடைத்தாதலோடுமுடிந்தது. துணையோடொன்றுகின்ற உயிர்களெல்லாம் விட்டு இறந்துபடுமெல்லையேனாய என்னையே துணையாகக்கோடலின் அறிவின்றென்பது பற்றி அளித்தென்றாள்; இகழ்ச்சிக்குறிப்பு. (௮)

௧௧௬௯. கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா. ௯.

இதுவுமது.

இ - ள். இந்நாள் நெடிய கழியும் இரா - காதலரொடு நாமின்புற்ற முன்னாள்களிற் குறியவாய் அவர்பிரிவாற்றேமாகின்ற இந்நாள்களிலே நெடியவாய்ச்செல்கின்ற

கங்குல்கள்—கொடியார் கொடுமையின் தாம் கொடிய - அக்கொடியாரது கொடுமைக்கு மேலே தாங்கொடுமை செய்யாநின்றன. எ - று.

தன்னாற்றாமை கருதாது பிரிதலின், கொடியாரென்றாள். கொடுமை கடிதின் வாராது நீட்டித்தல். அவர் பிரிவானும் நீட்டிப்பானுமுளதாய ஆற்றாமைக்குக் கண்ணோடாமைமேலும் பண்டையினெடியவாய்க் கொடியவாகாநின்றனவென்பதாம்.(௯)

௧௧௭0. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண். ௧0.

நின்கண்கள் பேரழகழிகின்றனவாகலின் அழற்பாலையல்லையென்றாட்குச் சொல்லியது.

இ - ள். உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் - மனம்போலக் காதலருள்ளதேயத்துக் கடிதிற்செல்லவல்லனவாயின்,—என் கண் வெள்ளநீர் நீந்தல - என் கண்கள் இங்ஙனம் வெள்ளமாகிய தந்நீரை நீந்தா. எ - று.

அது மாட்டாமையின் இனி அவற்றிற்கு நீந்துதலேயுள்ளதென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. மனத்திற்குச் செலவாவது நினைவேயாகலின் உள்ளம்போன்றென்றும், மெய்க்கு நடந்துசெல்லவேண்டுதலிற் கண்கள் அதனொடு சென்று காதலரைக்காண்டல் கூடாதென்னுங் கருத்தாற் செல்கிற்பினென்றுங் கூறினாள். இதனான் வருகின்றவதிகாரமுந் தோற்றுவாய் செய்யப்பட்டது. (௧0)

௧௧௮ ம் அதி.—கண்விதுப்பழிதல்.

அஃதாவது கண்கள் தங்காட்சிவிதுப்பான் வருந்துதல். காட்சிவிதுப்புத் தலைமகனைக் காண்டற்கு விரைதல். இது படரான்மெலிந்தவழி நிகழ்வதாகலின், படர்மெலிந்திரங்கலின்பின் வைக்கப்பட்டது.

௧௧௭௧. கண்டாங் கலுழ்வதெவன் கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது. ௧.

நின்கண்கள் கலுழ்ந்து தம்மழகிழவாநின்றன நீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

இ - ள். தண்டா நோய் யாம் கண்டது தாம் காட்ட - இத்தணியாநோயை யாமறிந்தது தாமெமக்குக் காதலரைக் காட்டலானன்றே;—கண் தாம் கலுழ்வது எவன்கொல் - அன்று அத்தொழிலவாய கண்கள் இன்று எம்மைக் காட்டச்சொல்லியழுகின்றது என்கருதி! எ - று.

காட்டவென்பதற்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. இன்றுந்தாமேகாட்டுதலல்லது யாங்காட்டுதல் யாண்டையதென்பதாம். (௧)

௧௧௭௨. தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்ப தெவன். ௨.

இதுவுமது.

இ - ள். தெரிந்து உணரா நோக்கிய உண்கண் - மேல்விளைவதனை யாராய்ந்தறியாது அன்று காதலரை நோக்கிநின்ற உண்கண்கள்—பரிந்து உணராப் பைதல் உழப்

பது எவன் - இன்று இது நம்மால் வந்ததாகலிற் பொறுத்தல் வேண்டுமெனக் கூறு படுத்துணராது துன்பமுழப்பது என்கருதி! எ - று.

விளைவது பிரிந்துபோயவர் வாராமையிற் காண்டற்கரியராய் வருத்துதல். முன்னே வருவதறிந்து அது காவாதார்க்கு அது வந்தவழிப் பொறுத்தலன்றேயுள்ளது. அதுவுஞ்செய்யாது வருந்துதல் கழிமடச்செய்கையென்பதாம். (௨)

௧௧௭௩. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து. ௩.

இதுவுமது.

இ - ள். தாம் கதுமென நோக்கித் தாமே கலுழும் இது - இக்கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்துநோக்கி இன்றுந் தாமே யிருந்தழுகின்றவிது—நகத்தக்கது உடைத்து - நம்மாற்சிரிக்கத்தச்க வியல்பினையுடைத்து. எ - று.

கண்களென்பது அதிகாரத்தான் வந்தது. இதுவென்றது மேற்கூறிய கழிமடச் செய்கையை. அது வருமுன்னர்க்காப்பார்க்கு நகைவிளைக்குமாகலான், நகத்தக்கதுடைத்தென்றாள். (௩)

௧௧௭௪. பெயலாற்றா நீருலந்த வுண்க ணுயலாற்றா
வுய்வினோ யென்க ணிறுத்து. ௪.

இதுவுமது.

இ - ள். உண்கண் - உண்கண்கள்,—உயலாற்றா உய்வு இல் நோய் என்கண் நிறுத்து - அன்று யானுய்யமாட்டாமைக் கேதுவாய ஒழிவில்லாத நோயை என் கண்ணே நிறுத்தி,—பெயலாற்றா நீர் உலந்த - தாமுமழுதலைமாட்டாவண்ணம் நீர் வற்றிவிட்டன. எ - று.

நிறுத்தல் பிரிதலும் பின்கூடாமையுமுடையாரைக் காட்டி அதனால் நிலைபெறச் செய்தல். முன் எனக்கின்னாதனசெய்தலாற் பின் தமக்கின்னாதன தாமே வந்தன வென்பதாம். (௪)

௧௧௭௫. படலாற்றா பைத லுழக்குங் கடலாற்றாக்
காமநோய் செய்தவென் கண். ௫.

இதுவுமது.

இ - ள். கடல் ஆற்றாக் காமநோய் செய்த என்கண் - எனக்குக் கடலுஞ் சிறிதாம்வண்ணம் பெரிதாய காமநோயைச் செய்த என்கண்கள்—படல் ஆற்றா பைதல் உழக்கும் - அத்தீவினையாற் றாமுந் துயில்கிலவாய்த் துன்பத்தையு முழவாநின்றன. எ - று.

காமநோய் காட்சியான் வந்ததாகலின், அதனைக் கண்களே செய்ததாக்கிக் கூறினாள். துன்பம் அழுதலானாயது. (௫)

௧௧௭௬. ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது. ௬.

இதுவுமது.

இ - ள். எமக்கு இந்நோய் செய்த கண் தாம் இதற்பட்டது - எமக்கிக்காம நோயினைச் செய்த கண்கடாமும் இத்துயிலாதழுதற் கண்ணே பட்டது—ஓஒ இனிதே - மிகவுமினிதாயிற்று. எ - று.

ஓவென்பது மிகுதிப்பொருட்கண்வந்த குறிப்புச்சொல். தம்மால் வருத்தமுற்ற வெமக்கு அது தீர்ந்தாற்போன்றதென்பதாம். (௬)

ககளஎ. உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண். எ.

இதுவுமது.

இ - ள். விழைந்து இழைந்து வேண்டி அவர்க் கண்ட கண் - விழைந்து உண்ணெகிழ்ந்து விடாதே அன்று அவரைக் கண்ட கண்கள்—உழந்துழந்து உள்நீர் அறுக - இன்று இத்துயிலாதழுங்கலாய துன்பத்தினை யுழந்துழந்து தம்மகத்துள்ளநீர் அற்றே போக. எ - று.

அடுக்கு இடைவிடாமைக்கண் வந்தது. அறுதலாகிய இடத்துநிகழ்பொருளின் றொழில் இடத்தின்மேனின்றது. (எ)

ககள௮. பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண். ௮.

காதலர் பிரிந்துபோயினாரல்லர் அவரீண்டுளர் அவரைக்காணுமளவும் நீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். பேணாது பெட்டார் உளர் - நெஞ்சால் விழையாதுவைத்துச் சொன் மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தேயுளர்;—மற்று அவர்க் கண் காணாது அமைவில - அவ்வுண்மையாற் பயன்யாது, அவரைக் கண்கள் காணாதமைகின்றன வில்லையாயின. எ - று.

செயலாற் பிரிந்துநின்றமையிற் பேணாதென்றும், முன்னலம்பாராட்டிப் பிரிவச்சமும் வன்புறையுங் கூறினாராகலிற் பெட்டாரென்றுங்கூறினாள். மன் ஒழியிசைக்கண் வந்தது. மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஓகாரம் அசைநிலை. யானாற்றவுங் கண்கள் அவரைக் காண்டற்கு விரும்பாநின்றன வென்பதாம். இனிக்கொண்கனையென்று பாடமாயின், என்கண்கள் தம்மைக் காணாதமைகின்ற கொண்கனைத் தாங்காணாதமைகின்றனவில்லை இவ்வாறே தம்மையொருவர் விழையாதிருக்கத் தாமவரை விழைந்தார் உலகத்துளரோவென்றுரைக்க. இதற்கு மன் அசைநிலை. (௮)

ககள௯. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண். ௯.

நீயுமாற்றி நின்கண்களுந் துயில்வனவாதல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். வாராக்கால் துஞ்சா - காதலர் வாராதஞான்று அவர் வரவுபார்த்துத் துயிலா,—வரின் துஞ்சா - வந்தஞான்று அவர் பிரிவஞ்சித்துயிலா,—ஆயிடைக் கண்

ஆரனுர் உற்றன - ஆகலான் அவ்விருவழியும என்கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தினையுடைய. எ - று.

ஆயிடையெனச் சுட்டு நீண்டது. இனி அவற்றிற்குத் துயில் ஒருஞான்று மில்லையென்பதாம். (௯)

௧௧௮௦. மறைபெற லூரார்க் கரிதன்று லெம்போ
லறைபறை கண்ணா ரகத்து. ௧௦.

காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர்கொடுமையை
மறைக்கவேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். எம்போல் அறைபறை கண்ணார் அகத்து மறை பெறல் - எம்மைப் போலும் அறைபறையாகிய கண்ணினையுடையார் தந்நெஞ்சின்கணடக்கிய மறையையறிதல்—ஊரார்க்கு அரிதன்று - இவ்வூரின்கணுள்ளார்க்கு எளிது. எ - று.

மறையென்றது ஈண்டு மறைக்கப்படுவதனை. அகத்து நிகழ்வதனைப் புறத்துள்ளார்க் கறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமையுண்மையின், அறைபறையாகிய கண்ணென்றாள். இங்ஙனஞ்செய்யுள்விகாரமாக்காது அறைபறைக் கண்ணாரென்று பாடமோதுவாருமுளர். யான் மறைக்கவும் இவை வெளிப்படுத்தாநின்றன வென்பதாம்.

௧௧௯ம் அதி.—பசப்புறுபருவரல்.

அது பசப்புற்ற பருவரலென விரியும். அஃதாவது பசப்புறுதலானாய வருத்தம். இதனைப் "பந்தெறிந்தவயர்*" வென்பதுபோலக்கொள்க. பசப்பாவது பிரிவாற்றாமையான் வருவதோர் நிறவேறுபாடு. இது, தலைமகனைக் காணப்பெறாதவழி நிகழ்வதாகலின், கண்விதுப்பழிதலின்பின் வைக்கப்பட்டது.

௧௧௮௧. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற. ௧.

முன் பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்றாது பசந்தவழித்
தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் - என்னை நயந்தவர்க்கு அதுபொழுது பிரிவையுடம்பட்ட நான்—பசந்த என் பண்பு யார்க்கு உரைக்கோ - அதனையாற்றாது இதுபொழுது பசந்தவென்னியல்பினை யார்க்குச் சொல்வேன்! எ - று.

பிறவென்பது அசைநிலை. உடம்படாவழி ஒழிதல்குறித்துப் பிரிவுணர்த்தினராகலின் அவரன்புடையரென்னுங் கருத்தான் நயந்தவரென்றும், இதுவேயுடம்பாடாகமேலும் பிரிவு நிகழுமாகலின் இனி அவரைக் கூடுதலரிதென்னுங்கருத்தான் நல்காமையென்றும், முன்னருடம்படுதலும் பின்னராற்றாது பசத்தலும் பிறர்செய்தனவல்லவென்பாள் பசந்தவென்பண்பென்றும், யான் செய்துகொண்ட துன்பத்தினை இனியொருவர்க்குச் சொல்லலும் பழியாமென்னுங் கருத்தால் யார்க்குரைக்கோவென்றுங் கூறினாள். (௧)

௧௧௮௨. அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு. ௨.

---

* கலி.

ஆற்றளெனக் கவன்றதோழிக்கு ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.

இ-ள். யானாற்றியுளேனாகவும்,—பசப்பு - இப்பசப்புத்தான்,—தந்தார் அவர் என்னும் தகையால் - என்னையுண்டாக்கினார் அவரென்னும் பெருமிதத்தான்,—என் மேனிமேல் இவர்தந்து ஊரும்-என்மேனியை மேல்கொண்டு செலுத்தாநின்றது.எ-று.

"குருதிகொப் புளிக்கும் வேலான் கூந்தன்மா விவர்ந்து செல்ல*" என்புழியும் இவர்தல் இப்பொருட்டாதலறிக. இஃது உரிமைபற்றியூர்கின்றது, இதற்கு நீ கவலல் வேண்டாவென்பதாம். (௨)

ககஅ௩. சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து. ௩.

அழகுநாணுமழியாமல் நீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ-ள். கைம்மாறு நோயும் பசலையுந் தந்து - பிரிகின்றஞான்றே அவ்விரண்டற்குந் தலைமாறாக இக்காமநோயினையும் பசலையையும் எனக்குத் தந்து,—சாயலும் நாணும் அவர் கொண்டார் - என்மேனியழகினையும் நாணினையும் அவர் கொண்டு போயினார். எ-று.

எதிர்நிரணிறை. அடக்குந்தோறும் மிகுதலான், நோய் நாணிற்குத் தலைமாறாயிற்று. இனி அவர் தந்தாலல்லது அவையுளவாகலும் இவையிலவாகலுங் கூடாவென்பதாம். (௩)

ககஅ௪. உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு. ௪.

பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையு மறிதியாகலின் நீட்டியாது வருவரென்றவழிச் சொல்லியது.

இ-ள். யான் உள்ளுவன் - அவர் சொற்களை யான் மனத்தானினையாநிற்பேன்,—உரைப்பது அவர்திறம் - வாக்காலுரைப்பதும் அவர் நற்றிறங்களையே;—பசப்புக் கள்ளம் - அங்ஙனஞ் செய்யாநிற்கவும், பசப்பு வந்து நின்றது, இது வஞ்சனையாயிருந்தது. எ-று.

பிறவும் ஓவும் அசைநிலை. மெய் மற்றை மனவாக்குக்களின் வழித்தாகலின் அதன்கண்ணும் வரற்பாற்றன்றாயிருக்க வந்தமையின், இதன்செயல் கள்ளமாயிருந்ததெனத் தானாற்றுகின்றமை கூறியவாறாயிற்று. (௪)

ககஅ௫. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது. ௫.

காதலர் பிரிந்தணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலையென்றதோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது.

இ-ள். எங்காதலர் உவக்காண் செல்வார் - பண்டும் நங்காதலர் உங்கேசெல்வாராக,—என்மேனி பசப்பூர்வது இவக்காண் - என்மேனி பசப்பூர்வதிங்கேயன்றே! அப்பெற்றியது இன்று பிறிதொன்றாமோ! எ-று.

---

* சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், ௧.

உவக்காண் இவக்காணென்பன ஒட்டிநின்ற விடைச்சொற்கள். தேயவண்மையாற் காலவண்மை கருதப்பட்டது. அவர்செலவும் பசப்பினதுவரவும் பகலிரவுகளின்செலவும் வரவும்போல்வதறிந்துவைத்து அறியாதாய்போல நீ சொல்லுகின்ற தென்னையென்பதாம். (௫)

௧௧அ௬. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. ௬.

இதுவுமது.

இ - ள். விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல் - விளக்கினது மெலிவு பார்த்து நெருங்கிவரு மிருளேபோல—கொண்கன் முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு - கொண்கன்முயக்கினது மெலிவுபார்த்து நெருங்கிவரும் இப்பசப்பு. எ - று.

பார்க்குமென்பன இலக்கணைச்சொல். முன் பிரியாதிருக்கவும் தனக்கவகாசம் பார்த்துவரும் பசப்புப் பிரிவுபெற்றால் என்செய்யாதென்பதாம். (௬)

௧௧அ௭. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு. ௭.

இதுவுமது.

இ - ள். புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன் - முன்னொருஞான்று காதலரைப் புல்லிக்கிடந்த யான் அறியாது புடைபெயர்ந்தேன்;—அவ்வளவில் பசப்பு அள்ளிக்கொள்வற்று - அப்புடைபெயர்ந்தவளவிலே பசப்பு அள்ளிக்கொள்வது போல வந்து செறிந்தது. எ - று.

கொள்வதென்பது குறைந்துநின்றது. அள்ளிக்கொள்வது அள்ளிக்கொள்ளப்படும் பொருள். அப்புடைபெயர்ச்சி மாத்திரத்துக்கு அவ்வாறாயது இப்பிரிவின்கணு மாறு சொல்லவேண்டுமோ வென்பதாம். (௭)

௧௧அ௮. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில். ௮.

நீயிங்ஙனம் பசக்கற்பாலையல்லையென்ற தோழியோடுபுலந்து சொல்லியது.

இ - ள். இவள் பசந்தாள் என்பது அல்லால் - இவள் ஆற்றியிராது பசந்தாளென்று என்னைப் பழிகூறுவதல்லது—இவளை அவர் துறந்தார் என்பார் இல் - இவளையவர் துறந்துபோயினாரென்று அவரைக் கூறுவாரொருவமில்லை. எ - று.

என்பாரென வேறுபடுத்துக்கூறினாள், தன்னையே நெருங்குதல்பற்றிப் புலக்கின்றமையின். (௮)

௧௧அ௯. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின். ௯.

இதுவுமது.

இ - ள். நயப்பித்தார் நன்னிலையராவர் எனின் - இப்பிரிவை யானேயுடம்படும் வகை சொல்லியவர் இன்று நின்கருத்தான் நல்ல நிலையினராவராயின்,—என்மேனி பட்டாங்கு பசக்க - என்மேனி பட்டதுபடப் பசப்பதாக. எ - று.

நன்னிலையராதல் நன்மைக்கண்ணே நிற்றலையுடையராதல். பட்டாங்காகவென ஆக்கம் விரித்துரைக்க. முன் இப்பிரிவின் கொடுமையறியாதவென்னை இதற்குடம் படுத்திப் பிரிந்தவர் தவறிலராகவேவேண்டுவது, என்மேனியும் பசப்பும் யாதுசெய்யி னென்னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. (௯)

ககக௯0. பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின். க0.

தலைமகளாற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகனையியற்பழித்தவழி அவள் இயற்படமொழிந்தது.

இ - ள். நயப்பித்தார் நல்காமை தூற்றாரெனின் - அன்று தாங் குறைநயப்பித்துக் கூடினவர்க்கு இன்று நல்காமையை நட்டோர் தூற்றாராயின்,—பசப்பெனப் பேர் பெறுதல் நன்றே - பசப்புற்றாளென்ன வேற்றுமையானன்றிப் பசப்புத்தானாயினாளென ஒற்றுமையாற்றாஞ்சொல்லி அப்பெயரைப் பெறுதல் எனக்கு நன்று. எ - று.

நட்டாரென்பது அவாய்நிலையான் வந்தது. இயற்பழித்தல்பொறாது புலக்கின் றாளாகலின், இகழ்ச்சிக்குறிப்பாற் கூறினாள். அவரை அருளிலரென்னாது இன்னும் பசந்தாளிவளென்கையே யானாற்று நெறியாவதென்பதாம். (க0)

கஉ0 ம் அதி.—தனிப்படர்மிகுதி.

அது தனியாகிய படர்மிகுதியென விரியும். அஃதாவது படர்மிகுதி தலைவன் கணின்றித் தன்கண்ணதேயாதல் கூறுதல். அறமும் பொருளுநோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லையாயிற்று. இது, பசப்புற்று வருந்தியாட்குரியதாகலின், பசப்புறுப ருவரலின்பின் வைக்கப்பட்டது.

கககூக. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி. க.

காதலநும் நின்னினுமாற்றராய்க் கடிதின்வருவர் நீயவரோடு பேரின்பநுகர்தியென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர் - தம்மாற்காதலிக்கப்படுங்கணவர் தம்மைக் காதலிக்கப்பெற்ற மகளிர்—பெற்றாரே காமத்துக் காழ் இல் கனி - பெற்றா ரன்றே காமநுகர்ச்சியென்னும் * பரலில்லாத கனியை. எ - று.

காமம் ஆகுபெயர். அத்து அல்வழிக்கண் வந்தது. முன்னை நல்வினை இல்வழிப் பெறப்படாமையிற் பெற்றாரென்றும், அவராற் றடையின்றி நுகரப்படுதலிற் காழில் கனியென்றுங்கூறினாள். நங்காதலர் பிரிதலையன்றிப் பின் வாராமையுமுடைமை யின், அக்கனி யாம் பெற்றிலேமென்பதாயிற்று. (க)

கககூஉ. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கு மளி. உ.

இதுவுமது.

இ - ள். வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி - அறமும் பொருளுநோக்கிப் பிரிந்தாற் றம்மையின்றியமையா மகளிர்க்கு அவரையின்றியமையாக்கணவர் அளவ

* பரல்—விதை.

ROJA MUTHIAH

றிந்து வந்து செய்யுந்தலையளி—வாழ்வார்க்கு வானம் பயந்தற்று - தன்னையே நோக்கி உயிர்வாழ்வார்க்கு வானம் அளவறிந்து பெய்தாற்போலும். எ - று.

நங்காதலர் நம்மை விழையாமையின் அத்தலையளியில்லையாகலான், மழை வறந்துழி அதனுன் வாழ்வார்போல இறந்துபடுதலே நமக்குள்ளதென்பதாம். (உ)

கககூந. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு. ௩.

இதுவுமது.

இ - ள். வீழுநர் வீழப்படுவார்க்கு அமையுமே - தாம்விழையுங் கணவரான் விழையப்படுமகளிர்க்கு ஏற்புடைத்து—வாழுநம் என்னும் செருக்கு-காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதின்வருவர் வந்தால் நாமின்புற்று வாழ்துமென்றிருக்குந்தருக்கு. எ - று.

நாம் அவரான் வீழப்படாமையின், நமக்கமைவது இறந்துபாடென்பதாம். (௩)

கககூச. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின். ௪.

காதலரையியற்பழித்தலையஞ்சி அவரருளின்மை மறைத்த நீ
கடவுட் கற்பினையாகலிற் கற்புடைமகளிரால் நன்கு
மதிக்கப்படுதியென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். வீழப்படுவார் - கற்புடைமகளிரால் நன்குமதிக்கப்படுவாரும்—தாம் வீழ்வார் வீழப்படாரெனிற் கெழீஇயிலர் - தாம் விரும்புங்கணவரான் விரும்பப்படாராயிற் றீவினையாட்டியர். எ - று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கெழீஇயின்மை நல்வினையின்மை; அஃது அருத்தாபத்தியாற் றீவினையுடைமையாயிற்று. தீவினையுடையேற்கு அந்நன்குமதிப்பாற் பயனில்லையென்பதாம். (௪)

கககூரு. நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை. ரு.

அவர்மேற்காதலுடைமையின் அவர்கருத்தறிந்தாற்றினை
யென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். நாம் காதல் கொண்டார் நமக்கு எவன் செய்ப - நம்மாற்காதல்செய்யப்பட்டவர் நமக்கென்னவின்பத்தைச் செய்வர்,—தாம் காதல் கொள்ளாக்கடை - அவ்வாறே தாமும் நங்கட் காதல் செய்யாவழி. எ - று.

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அக்காதலுடைமையால் நாம் பெற்றது துன்பமே யென்பதாம். (ரு)

கககூசா. ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது சா.

இதுவுமது.

இ - ள். காமம் ஒருதலையான் இன்னாது - மகளிர் ஆடவரென்னு மிருதலையினும் வேட்கை ஒருதலைக்கண்ணேயாயின் அஃதின்னாது;—காப்போல இருதலையானும் இனிது - காவினது பாரம்போல இருதலைக்கண்ணுமொப்பின், அஃதினிது. எ - று.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன. கா ஆகுபெயர். என்மாட்டுண்டாய வேட்கை அவர்மாட்டுமுண்டாயின், யானிவ்வாறு துன்பமுழத்தல் கூடுமோ வென்பதாம். (கூ)

ககக௭. பருவரலும் பைதலுங் காணான்கொல் காம
னொருவர்க ணின்றொழுகு வான். எ.

இதுவுமது.

இ - ள். ஒருவர்கண் நின்று ஒழுகுவான் காமன் - காமநுகர்தற்குரிய விருவரிடத்தும் ஒப்பநிற்றலொழிந்து ஒருவரிடத்தே நின்று பொருகின்ற காமக்கடவுள்—பருவரலும் பைதலும் காணான்கொல் - அவ்விடத்துப் பசப்பானாய பருவரலும் படர்மிகுதியும் அறியான்கொலோ! எ - று.

விழைவும் வெறுப்புமின்றி எல்லார்கண்ணு நிகழ்ந்தனவறிதற்குரிய கடவுளும் என்கண் வேறுபட்டான், இனியானுய்யுமாறென்னை யென்பதாம். (எ)

ககக௮. வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணா ரில். அ.

தலைமகன் றூதுவரக்காணாது சொல்லியது.

இ - ள். வீழ்வாரின் இன்சொற் பெறாது வாழ்வாரின் - தம்மால் விரும்பப்படுங் காதலர்திறத்துநின்றும் ஓரின்சொல்லளவும்பெறாதே பிரிவாற்றி உயிர்வாழ்கின்ற மகளிர்போல—வன்கணார் உலகத்து இல் - வன்கண்மையுடையார் இவ்வுலகத் தில்லை. எ - று.

காதலர்திறத்துச்சொல் யாதானும் எனக்கினிதென்னுங் கருத்தால், இன்சொலென்றாள். இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. யான் வன்கண்ணேனாகலின் அதுவும் பெறாது உயிர்வாழாநின்றே னென்பதாம். (அ)

ககக௯. நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு. கூ.

இதுவுமது.

இ - ள். நசைஇயார் நல்கார் எனினும் - என்னால் நச்சப்பட்ட காதலர் என்மாட்டன்பிலரேயாயினும்,—அவர்மாட்டு இசையும் செவிக்கு இனிய - அவர்திறத்தியாதானுமோர்சொல்லும் என்செவிக்கினியவாம். எ - று.

இழிவுசிறப்பும்மை, அவர் வாரலரென்னுஞ் சொல்லாயினும் அமையுமென்பது பட நின்றது. அதுவும் பெற்றிலேனென்பதாம். (கூ)

கஉ00. உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு. க0.

தலைமகன் றூதுவரப்பெறாது தான்றூதுவிடக்கருதியாள் நெஞ்சொடு சொல்லியது.

இ - ள். உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் நெஞ்சு - நின்னோடுறாதார்க்கு நின்னுறுநோயையுரைக்கலுற்ற நெஞ்சே,—கடலைச் செறாஅய் - நீயாற்றாயாயினும் அரிதாய அதனையொழிந்து, நினக்குத்துயரஞ்செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக, அஃதெளிது. எ - று.

உரைக்கலுற்றது அளவிறந்த நோயாகலானும் கேட்பார் உறவிலராகலானும் அது முடிவதொன்றன்று, முடிந்தாலும் பயனில்லையென்பது கருதாது, முயலாநின்றாயென்னுங்குறிப்பான், வாழியவென்றாள். (௧௦)

௧௨௧-ம் அதி.—நினைந்தவர்புலம்பல்.

அஃதாவது முன்கூடிய ஞான்றையின்பத்தினை நினைந்து தலைமகடனிமையெய்தலும், பாசறைக்கட்டலைமகன்றனிமையெய்தலுமாம். இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல்பற்றிப் பன்மைப்பாலாற் கூறப்பட்டது. இது, படர்மிகுதி தன்கண்ணதாக நினைந்த தலைமகட்கு முரித்தாகலின், அவ்வியைபுபற்றித் தனிப்படர்மிகுதியின்பின் வைக்கப்பட்டது.

௧௨௦௧. உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது. ௧.

தூதாய்ச்சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.

இ - ள். உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால் - முன் கூடியஞான்றையின் பத்தினைப் பிரிந்துழி நினைந்தாலும் அதுபொழுது பெற்றாற்போல நீங்காத மிக்கமகிழ்ச்சியைத் தருதலால்,—கள்ளினும் காமம் இனிது - உண்டுழியல்லது மகிழ்ச்சி செய்யாத கள்ளினுங் காமம் இன்பம்பயத்தலுடைத்து. எ - று.

தன்றனிமையுந் தலைமகளை மறவாமையுங் கூறியவாறு. (௧)

௧௨௦௨. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். ௨.

இதுவுமது.

இ - ள். தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல் - தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவின்கணினைத்தால் அந்நினைவார்க்கு அப்பிரிவான் வருவதோர் துன்பமில்லையாம்;—காமம் எனைத்து இனிது ஒன்றேகாண் - அதனாற்காமம் எத்துணையேனுமினிதொன்றே காண். எ - று.

புணர்ந்துழியும் பிரிந்துழியும் ஒப்பவினிதென்பான், எனைத்துமினிதென்றான். சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தானாற்றியவகை கூறியவாறு. (௨)

௧௨௦௩. நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும். ௩.

தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ - ள். தும்மல் சினைப்பதுபோன்று கெடும் - எனக்குத்தும்மல் எழுவது போன்று தோன்றிக் கெடாநின்றது;—நினைப்பவர்போன்று நினையார்கொல் - அதனாற் காதலர் என்னை நினைப்பார்போன்று நினையாராகல்வேண்டும். எ - று.

சினைத்தல் அரும்புதல். சேய்மைக்கண்ணராய கேளிர் நினைந்துழி அந்நினைக்கப் பட்டார்க்குத் தும்மறோன்றுமென்னுமுலகியல்பற்றித் தலைமகனெடுத்துக்கொண்ட வினை முடிவதுபோன்று முடியாமையுணர்ந்தாள் சொல்லியதாயிற்று. (௩)

௧௨௦௪. யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே யவர். ௪.

இதுவுமது.

இ - ள். எந் நெஞ்சத்து அவர் ஓ உளரே - எம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுதுமுளரேயாயிராநின்றார்;—அவர் நெஞ்சத்து யாமும் உளேங்கொல் - அவ்வகையே அவருடைய நெஞ்சத்தும் யாமுமுளமாதுமோ, ஆகேமோ! எ - று.

ஓகாரவிடைச்சொல் ஈண்டிடைவிடாமையுணர்த்திநின்றது. உளமாயும் வினை முடியாமையின் வாரர்ராயினாரோ, அது முடிந்தும் இலமாகலின் வாராராயினாரோ வென்பது கருத்து. (௪)

௧௨௦௫. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல். ௫.

இதுவுமது.

இ - ள். தந்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் - தம்முடைய நெஞ்சின் கண்ணே யாஞ்செல்லாமல் எம்மைக் காவல்கொண்ட காதலர்—எந்நெஞ்சத்து ஓவா வரல் நாணார்கொல் - தாமெம்முடைய நெஞ்சின்கண் ஒழியாது வருதலை நாணார் கொல்லோ! எ - று.

ஒருவரைத் தங்கண் வருதற்கு ஒருகாலுமுடம்படாது தாமவர்கட் பலகாலுஞ் சேறல் நாணுடையார்செயலன்மையின், நாணார்கொலென்றாள். (௫)

௧௨௦௬. மற்றியா னென்னுளேன் மன்னோ வவரொடியா
னுற்றநா ளுள்ள வுளேன். ௬.

அவரோடு புணர்ந்தஞான்றையின்பத்தை நினைந்து இறந்துபாடெய்தாநின்றாய் அதுமறத்தல்வேண்டுமென்றாட்குச் சொல்லியது.

இ - ள். யான் அவரொடு உற்ற நாள் உள்ள உளேன் - யான் அவரோடு புணர்ந்தஞான்றையின்பத்தை நினைதலான் இத்துன்ப வெள்ளத்தும் உயிர்வாழ்கின்றேன்;—மற்று யான் என்னுளேன் - அதுவின்றாயின், வேறெத்தால் உயிர்வாழ்வேன்! எ - று.

நாள் ஆகுபெயர். உயிர்வாழ்தற்கு வேறுமுள, அவைபெற்றிலேனென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அவை அவன்றூதுவருதல், தன்றூது

சேறன் முதலாயின. அவையாவுமின்மையின், இதுவல்லது எனக்குப் பற்றுக்கோடில்லையென்பது கருத்து. (௬)

கஉ0எ. மறப்பி னெவனுவன் மற்கொன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும். எ.

இதுவுமது.

இ - ள். மறப்பு அறியேன் உள்ளினும் உள்ளம் சுடும் - அவ்வின்பத்தை மறத்தலறியேனாய் இன்றுள்ளாநிற்கவும், பிரிவு என்னுள்ளத்தைச் சுடாநின்றது,—மறப்பின் எவனுவன் - அங்ஙனம் பிரிவாற்றாத யான் மறந்தால் இறந்துபடாது உளேனுவது எத்தால்! எ - று.

மறக்கப்படுவது அதிகாரத்தான்வந்தது. மன் ஈண்டும் 'அதுப்'டநின்று ஒழியிசையாயிற்று. கொல் அசைநிலை. (எ)

கஉ0அ. எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றே
காதலர் செய்யுஞ் சிறப்பு. அ.

இத்துன்பமறிந்துவந்து காதலர் நினக்கின்பஞ்
செய்வரென்றுட்குச் சொல்லியது.

இ - ள். எனைத்து நினைப்பினும் காயார் - தம்மை யானெத்துணையும் மிகநினைந்தாலும் அதற்கு வெகுளார்;—காதலர் செய்யும் சிறப்பு அனைத்து அன்றே - காதலர் எனக்குச் செய்யுமின்பமாவது அவ்வளவன்றே! எ - று.

வெகுளாமை அதற்குடன்பட்டு நெஞ்சின்கணிற்றல். தனக்கு அவ்வின்பத்திற் சிறந்ததின்மையின், அதனைச் சிறப்பென்றுள். காதலர் நம்மாட்டருளென்றும், செய்யுங்குணமென்றும் பாடமோதுவாருமுளர். தோழி கூறியவதனைக் குறிப்பானிகழ்ந்து கூறியவாறு. (அ)

கஉ0௯. விளியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா
ரளியின்மை யாற்ற நினைந்து. ௯.

தலைமகன்றூதுவரக் காணுது வருந்துகின்றள் வற்புறுத்துந்
தோழிக்குச் சொல்லியது.

இ - ள். வேறு அல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து - முன்பெல்லாம் நாமிருவரும் வேறல்லமென்று சொல்லுவாரது அளியின்மையை மிகவுநினைந்து,—என் இன்னுயிர் விளியும் - எனதினியவுயிர் கழியாநின்றது. எ - று.

அளியின்மை பின்வருவராகலுமாய்ப்பிரிதலும், பிரிந்துவாராமையும், ஆண்டுநின்றுழித் தூதுவிடாமையும் முதலாயின. பிரிவாற்றல்வேண்டுமென வற்புறுத்தாட்கு என்னுயிர் கழிகின்றது பிரிவிற்கன்று அவரன்பின்மைக்கென எதிரழிந்துகூறியவாறு.

கஉக0 விடாஅது சென்றுரைக் கண்ணினுற் காணப்
படாஅதி வாழி மதி. க0.

வன்புறையெதிரழிந்தாள் காமமிக்ககழிபடராற் சொல்லியது.

இ - ள். மதி - மதியே,—விடாது சென்றாரைக் கண்ணினால் காணப் படாதி - என்னெஞ்சின் இடைவிடாதிருந்தே விட்டுப்போயினாரை யானென்கண்ணளவானு யினும் எதிர்ப்படும்வகை நீ படாதொழிவாயாக. எ - று.

கண்ணளவானெதிர்ப்படுதலாவது மதி இருவரானுநோக்கப்படுதலின் இருவர் கண்ணும் அதன்கண்ணே சேர்தல். முதலொடு சினைக்கொற்றுமையுண்மையிற் சென் றாரைக்காணவென்றும், குறையுறுகின்றாளாகலின் வாழியென்றுங்கூறினாள். இனிப் படாதென்பது பாடமாயின், கனவிடைக் கண்ணினாற்காணுமாறு மதிபடுகின்றதில்லை யென அதனாற்றுயில்பெறாது வருந்துகின்றாள் கூற்றாக்குக. இப்பொருட்கு வாழி யென்பது அசைநிலை. (க0)

கஉ௩ ம் அதி.—கனவுநிலையுரைத்தல்.

அஃதாவது தலைமகள் தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு நனவின்கணினைவுமிகுதியாற் கண்டதாகலின் இது நினைந்த வர்புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

கஉகக. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாது செய்வேன்கொல் விருந்து. க.

தலைமகன்றூதுவரக்கண்டாள் சொல்லியது.

இ - ள். காதலர் தூதொடு வந்த கனவினுக்கு - யான் வருந்துகின்றதறிந்து அது தீரக் காதலர் விடுத்த தூதினைக்கொண்டு என் மாட்டுவந்த கனவினுக்கு—விருந்து யாது செய்வேன் - யான் விருந்தாக யாதனைச்செய்வேன்! எ - று.

விருந்தென்றது விருந்திற்குச்செய்யுமுபகாரத்தினை. அது கனவிற்கொன்று காணாமையின், யாதுசெய்வேனென்றாள். (க)

கஉகஉ. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன். உ.

தூதுவிடக்கருதியாள் சொல்லியது.

இ - ள். கயல் உண்கண் யான் இரப்பத் துஞ்சின் - துஞ்சாது வருந்துகின்ற என் கயல்போலு முண்கண்கள் யானிரந்தாற்றுஞ்சுமாயின்,—கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன் - கனவிடைக் காதலரைக் காண்பேன், கண்டால் அவர்க்கியா னாற்றியுளேனாயதன்மையை யானே விரியச்சொல்வேன். எ - று.

கயலுண்கணென்றாள், கழிந்தநலத்திற்கிரங்கி. உயல் காமநோய்க்குத் தப்புதல். தூதர்க்குச்சொல்லாது யாமடக்குவனவும் சொல்லுவனவற்றுள்ளுஞ் சுருக்குவனவற் றின்பரப்புந் தோன்றச்சொல்வேனென்னுங் கருத்தாற் சாற்றுவேனென்றாள். இனி அவையுந்துஞ்சா சாற்றலுங்கூடாதென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. முன்னுங்கண்டாள் கூற்றாகலின், கனவுநிலையுரைத்தலாயிற்று. (உ)

கஉக௩. நனவினா னல்கா தீவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர். ௩.

ஆற்றளெனக் கவன்றட்கு ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.

இ - ள். நனவினான் நல்காதவரை - நனவின்கண் வந்து தலையளிசெய்யாதாரை—கனவினாற் காண்டலின் என் உயிர் உண்டு - யான் கனவின்கட்கண்டகாட்சியானே என்னுயிருண்டாகாநின்றது. எ - று.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன. அக்காட்சியானே யானாற்றியுளேனாகின்றேன் நீ கவலல்வேண்டாவென்பதாம். (௩)

கஉகச. கனவினா னுண்டாகுங் காம நனவினா
னல்காரை நாடித் தரற்கு. ௪.

இதுவுமது.

இ - ள். நனவினான் நல்காரை நாடித் தரற்கு - நனவின்கண்வந்து தலையளிசெய்யாதாரை அவர்சென்றுழி நாடிக்கொண்டுவந்து கனவு தருதலான்,—கனவினாற் காமம் உண்டாகும் - அக்கனவின்கண்ணே எனக்கின்பமுண்டாகாநின்றது. எ - று.

காமம் ஆகுபெயர். நான்காவது மூன்றன்பொருண்மைக்கண்வந்தது. இயல்பான் நல்காதவரை அவர்சென்ற தேயமறிந்துசென்று கொண்டுவந்துதந்து நல்குவித்த கனவால் யானாற்றுவலென்பதாம். (௪)

கஉகரு. நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது. ரு.

இதுவுமது.

இ - ள். நனவினாற் கண்டதூஉம் (இனிது) ஆங்கே - முன்னனவின்கண் அவரைக்கண்டு நுகர்ந்தவின்பந்தானுமினிதாயிற்று அப்பொழுதே,—கனவுந்தான் கண்ட பொழுதே இனிது - இன்று கனவின்கட்கண்டு நுகர்ந்தவின்பமும் அக்கண்டபொழுதே யினிதாயிற்று, அதனான் எனக்கிரண்டுமொத்தன. எ - று.

இனிதென்பது முன்னுங்கூட்டப்பட்டது. கனவு ஆகுபெயர். முன்னும் யான் பெற்றதிவ்வளவே, இன்னும் அதுகொண்டாற்றுவலென்பதாம். (ரு)

கஉகசா. நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன். சா.

இதுவுமது.

இ - ள். நனவென ஒன்று இல்லையாயின் - நனவென்றுசொல்லப்படுகின்ற ஒரு பாவியில்லையாயின்,—கனவினாற் காதலர் நீங்கலர் - கனவின்கண் வந்துகூடிய காதலர் என்னைப் பிரியார். எ - று.

ஒன்றென்பது அதன்கொடுமைவிளக்கி நின்றது. அஃது இடையேபுகுந்து கனவைப்போக்கி அவரைப் பிரிவித்ததென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கனவிற்பெற்றுற்றுகின்றமை கூறியவாறு. (சா)

கஉகஎ. நனவினா னல்காக் கொடியார் கனவினா
னென்னெம்மைப் பீழிப் பது. எ.

விழித்துழிக் காணளாயினள் கனவிற்கூட்டநினைந்து ஆற்றளாய்ச் சொல்லியது.

இ - ள். நனவினான் நல்காக் கொடியார் - ஒருஞான்றும் நனவின்கண் வந்து தலையளிசெய்யாத கொடியவர்—கனவினான் எம்மைப் பீழிப்பது என் - நாடோறும் கனவின்கண்வந்து நம்மை வருத்துவது எவ்வினையுபற்றி! எ - று.

பிரிதலும் பின்னினைந்துவாராமையுநோக்கிக் கொடியாரென்றும், கனவிற் றோண்மேலராய் விழித்துழிக் கரத்தலின் அதனானுந் துன்பமாகாநின்றதென்பாள் பீழிப்பதென்றுங்கூறினாள். நனவினில்லது கனவினுமில்லையென்பர், அதுகண்டில மென்பதாம். (எ)

கஉகஅ. துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து. அ.

தானுற்றுதற்பேர்நுட்டுத் தலைமகனையியற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.

இ - ள். துஞ்சுங்கால் தோண்மேலராகி - என்னெஞ்சுவிடாதுறைகின்ற காதலர் யான்துஞ்சும்பொழுது வந்து என்றோண்மேலராய்—விழிக்குங்கால் விரைந்து நெஞ்சத்தராவர் - பின் விழிக்கும்பொழுது விரைந்து பழைய நெஞ்சின்கண்ணரா வர். எ - று.

கலவி விட்டு மறையுங் கடுமைபற்றி விரைந்தென்றாள். ஒருகாலும் என்னினீங்கி யறியாதாரை நீ நோவற்பாலையல்லையென்பதாம். (அ)

கஉகக. நனவினா னல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர். க.

இதுவுமது.

இ - ள். கனவினாற் காதலர்க் காணாதவர் - தமக்கொருகாதலரின்மையின் அவ ரைக் கனவிற்கண்டறியாத மகளிர்—நனவினான் நல்காரை நோவர் - தாமறிய நன வின்கண் வந்து நல்காத நங்காதலரை அன்பிலரென நோவாநிற்பர். எ - று.

இயற்பழித்ததுபொறாது புலக்கின்றாளாகலின், அயன்மைதோன்றக் கூறினாள். தமக்குங்காதலருளராய் அவரைக்கனவிற் கண்டறிவாராயின் நங்காதலர் கனவின்க ணுற்றி நல்குதலறிந்து நோவாரென்பதாம். (க)

கஉஉ௦. நனவினா னந்நீத்தா ரென்பர் கனவினாற்
காணார்கொ லிவ்வூ ரவர். க௦.

இதுவுமது.

இ - ள். இவ்வூரவர் நனவினான் நந்நீத்தார் என்பர் - இவ்வூரின்மகளிர் நனவின் கண் நம்மை நீத்தாரென்று நங்காதலரைக்கொடுமைகூறுநிற்பர்,—கனவினாற் காணார் கொல் - அவர் கனவின்கண் நீங்காதுவருதல் கண்டறியாரோ! எ - று.

என்னொடு தன்னிடை வேற்றுமையின்றாயின் யான்கண்டது தானுங்கண்டமை யும், அதுகாணாது அவரைக்கொடுமை கூறுகின்றமையின் அயலாளேயாமென்னுங் கருத்தால், இவ்வூரவரென்றாள். (க௦)

௧௨௩ம் அதி.—பொழுதுகண்டிரங்கல்.

அஃதாவது மாலைப்பொழுது வந்துழி அதனைக்கண்டு தலைமகளிரங்குதல். கனாமுந்துறாத வினையில்லை * யென்பதுபற்றிப் பகற்பொழுதாற்றியிருந்தாட்கு உரியதாகலின், இது கனவுநிலையுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

௧௨௨௧. மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது. ௧.

பொழுதோடு புலந்து சொல்லியது.

இ - ள். பொழுது - பொழுதே,—நீ மாலையோ அல்லை - நீ முன்னாள்களின் வந்த மாலையோவெனின், அல்லை;—மணந்தார் உயிர் உண்ணும் வேலை - இருந்தவாற்றான் அந்நாட் காதலரை மணந்த மகளிருயிரையுண்ணும் இறுதிக்காலமாயிருந்தாய். எ - று.

முன்னாள் கூடியிருந்தநாள். அந்நாண்மணந்தாரெனவே, பின் பிரிந்தாராதல் பெறுதும். வாழியென்பது குறிப்புச்சொல்; "வாலிழை மகளி ருயிர்ப்பொதி யவிழ்க்குங் காலை†" என்றாற்போல ஈண்டுப் பொதுமையாற் கூறப்பட்டது. வேலையென்பது ஆகுபெயர். வேலையென்பதற்கு வேலாயிருந்தாயென்பாருமுளர். (௧)

௧௨௨௨. புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ண தோநின் றுணை. ௨.

தன்னுட்கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது.

இ - ள். மருண்மாலை - மயங்கிய மாலாய்,—புன்கண்ணை - நீயுமெம்போலப் புன்கணுடையையாயிருந்தாய்,—நின்றுணை எங்கேள்போல் வன்கண்ணதோ - நின்றுணையும் எந்துணைபோல வன்கண்மையுடையதோ, கூறுவாயாக. எ - று.

மயங்குதல் பகலுமிரவுந் தம்முள்ளே விரவுதல்; கலங்குதலுந்தோன்ற நின்றது. புன்கண் ஒளியிழத்தல்; அதுபற்றித் துணையுமுண்டாக்கிக் கூறினாள். எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. எமக்குத் துன்பஞ்செய்தாய், நீயுமின்பமுற்றிலையென்னுங் குறிப்பால் வாழியென்றாள். (௨)

௧௨௨௩. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும். ௩.

ஆற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். பனி அரும்பிப் பைதல்கொள் மாலை - காதலர் கூடிய நாளெல்லாம் என்முன் நடுக்கமெய்திப் பசந்துவந்த மாலை,—துனி அரும்பித் துன்பம் வளர வரும் - இந்நாள் எனக்கிறந்துபாடு வந்துதோன்றி அதற்குளதாந்துன்பம் ஒருகாலைக்கொருகால் மிக வாராநின்றது. எ - று.

குளிர்ச்சி தோன்ற மயங்கிவருமாலையென்னுஞ் செம்பொருள் இக்குறிப்புணர நின்றது. துனி உயிர்வாழ்தற்கண்வெறுப்பு. அதனால் யானாற்றுமாறென்னையென்பது குறிப்பெச்சம். (௩)

௧௨௨௪. காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும். ௪.

---

* பழமொழி, ௨. † கலி, நெய்தல், ௨.

இதுவுமது.

இ - ள். மாலை - காதலருள்ளபொழுதெல்லாம் என்னுயிர்தளிர்ப்ப வந்தமாலை,—காதலர் இல்வழி - அவரில்லாத இப்பொழுது—கொலைக்களத்து ஏதிலர்போல வரும் - அஃதொழிந்துநிற்றலேயன்றிக் கொல்லுங்களரியிற்கொலைஞர் வருமாறுபோல அவ்வுயிரைக்கோடற்கு வாராநின்றது. எ - று.

ஏதிலர் அருள்யாதுமில்லார். முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ்செய்து வந்தபொழுதும் இன்று என்மேற்பகையாய்த் துன்பஞ்செய்து வாராநின்றது, இனி யானாற்றுமாறென்னை யென்பதாம். (௪)

௧௨௨௫. காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. ௫.

இதுவுமது.

இ - ள். காலையும், மாலையும், அவர் கூடியஞான்றுபோலாது இஞ்ஞான்று வேறுபட்டு வாராநின்றன: அவற்றுள்,—யான் காலைக்குச் செய்த நன்று என் - யான் காலைக்குச் செய்தவுபகாரம் யாது?—மாலைக்குச் செய்த பகை எவன் - மாலைக்குச் செய்த அபகாரம் யாது? எ - று.

கூடியஞான்று பிரிவரென்றஞ்சப்பண்ணிய காலை அஃதொழிந்து இஞ்ஞான்று கங்குல்வெள்ளத்திற்குக் கரையாய் வாராநின்றதென்னுங்கருத்தால் நன்றென்கொலென்றும், கூடியஞான்று இன்பஞ்செய்துவந்த மாலை அஃதொழிந்து இஞ்ஞான்று அளவிறுன்பஞ்செய்யாநின்றதென்னுங் கருத்தாற் பகையெவன்கொலென்றுங் கூறினாள். பகை ஆகுபெயர். தன்னோடொத்த காலைபோலாது மாலை தன்கொடுமையாற் றுன்பஞ் செய்யாநின்றதென்பதாம். (௫)

௧௨௨௬. மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன். ௬.

இன்று இன்னையாகின்ற நீ அன்று அவர்பிரிவிற்குடம்பட்ட
தென்னையென்றாட்குச் சொல்லியது.

இ - ள். மாலை நோய் செய்தல் - முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்துபோந்த மாலை இன்று பகையாய்த் துன்பஞ்செய்தலை—மணந்தார் அகலாத காலை அறிந்தது இலேன் - காதலர் பிரிதற்குமுன்னே அறியப்பெற்றிலேன்! எ - று.

இங்ஙனம் வேறுபடுதலறிந்திலேன், அறிந்தேனாயின் அவர் பிரிவிற்குடம்படே னென்பதாம். (௬)

௧௨௨௭. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய். ௭.

மாலைப்பொழுதின்கண் இனையையாதற்குக் காரண
மென்னையென்றாட்குச் சொல்லியது.

இ - ள். இந்நோய் - இக்காமநோயாகிய பூ—காலை அரும்பி - காலைப்பொழுதின் கணரும்பி,—பகல் எல்லாம் போது ஆகி - பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து,—மாலை மலரும் - மாலைப்பொழுதின்கண் மலராநிற்கும். எ - று.

துயிலெழுந்தபொழுதாகலிற் கனவின்கட்கூட்டநினைந்தாற்றுதல்பற்றிக் காலை யரும்பியென்றும், பின் பொழுது செலச்செல அதுமறந்து பிரிவுள்ளியாற்றாதல் பற்றிப் பகலெல்லாம் போதாகியென்றும், தத்தந்துணையையுள்ளி வந்துசேரும் விலங்குகளையும் மக்களையுங்கண்டு தான் அக்காலத்தினுகர்ந்தவின்பநினைந்தாற்றாமைமிகுதி பற்றி மாலைமலருமென்றுங் கூறினாள். பூப்போல இந்நோய் காலவயத்ததாகாநின்ற தென்பது உருவகத்தாற்பெறப்பட்டது. ஏகதேசவுருவகம். (எ)

௧௨௨௮. அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை. அ.

இதுவுமது.

இ - ள். ஆயன் குழல் - முன்னெல்லாம் இனியதாய்ப்போந்த ஆயன்குழல்—அழல்போலும் மாலைக்குத் தூதாகி - இதுபொழுது அழல்போலச் சுடுவதாய மாலைக்குத் தூதுமாய்,—கொல்லும் படை - அது வந்தென்னைக்கொல்வுழிக் கொல்லும் படையுமாயிற்று. எ - று.

பின்னின்ற போலுமென்பது உரையசை. முன்னரே வரவுணர்த்தலிற் றூதாயிற்று, கோறற்கருவியாகலிற் படையாயிற்று. தானே சுடவல்லமாலை இத்துணையும் பெற்றால் என்செய்யாதென்பதாம். (அ)

௧௨௨௯. பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. கூ.

இதுவுமது.

இ - ள். இதற்கு முன்னெல்லாம் யானேமயங்கி நோயுழந்தேன்,—மதி மருண்டு மாலை படர்தரும் போழ்து - இனிக் கண்டாரும் மதிமருளும்வகை மாலை வரும் பொழுது—பதி மருண்டு பைதல் உழக்கும் - இப்பதியெல்லாம் மயங்கி நோயுழக்கும். எ - று.

மதிமருளவென்பது மதிமருண்டெனத் திரிந்துநின்றது. கூற்றமாகக் கருதிக் கூறினாளாகலின் மாலைபடர்தரும் போழ்தென்றாள். யானிறந்து படுவலென்பதாம். மாலை மயங்கிவரும் போழ்து என் பதி நிலைகலங்கி நோயுழக்குமென்றுரைப் பாருமுளர். (கூ)

௧௨௩௦. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர். ௧௦.

இதுவுமது.

இ - ள். மாயா என் உயிர் - காதலர்பிரிவைப் பொறுத்து இறந்துபடாதிருந்த என்னுயிர்—பொருண்மாலையாளரை உள்ளி மருண்மாலை மாயும் - இன்று பொருளியல்பே தமக்கியல்பாகவுடையவரை நினைந்து, இம்மயங்குமாலைக்கண்ணே இறந்துபடா நின்றது. எ - று.

குறித்தபருவங் கழியவும் பொருண்முடிவு நோக்கி வாராமையிற் சொல்வேறுபடாமையாகிய தம்மியல்பொழிந்தவர் அப்பொருளியல்பே தம்மியல்பாயினார், காலமிதுவாயிற்று, இனி நீ சொல்கின்றவாற்றாற் பயனில்லையென்பதாம். (௧௦)

கஉ-ம் அதி.—உறுப்புநலனழிதல்.

அஃதாவது தலைமகடன் கண்ணும், தோளும், நுதலு முதலாய அவயவங்கள் தம்மழகழிதல். இஃது, இரக்கமிக்குழி நிகழ்வதாகலின், பொழுதுகண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.

கஉ௲க. சிறுமை நமக்கொழியச் சேட்சென்றா ருள்ளி
நறுமலர் நாணின கண். க.

ஆற்றமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

இ-ள். சிறுமை நமக்கு ஒழியச் சேட்சென்றார் உள்ளி - இவ்வாற்றாமை நங்கண்ணே நிற்பத் தாஞ்சேணிடைச்சென்ற காதலரை நீ நினைந்தழுதலால்,—கண் நறுமலர் நாணின - நின் கண்கள் ஒளியிழந்து முன்றமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன. எ-று.

நமக்கென்பது வேற்றுமைமயக்கம். உள்ளவென்பது உள்ளியெனத் திரிந்து நின்றது. உள்ளுதலென்பது காரணப்பெயர் காரியத்திற்காயவாகுபெயர். இவைகண்டார் அவரைக் கொடுமைகூறுவர், நீயாற்றல் வேண்டுமென்பது கருத்து. (க)

கஉ௲உ. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண். உ.

இதுவுமது.

இ-ள். பசந்து பனிவாரும் கண் - பசப்பெய்தன்மேனீர்வார்கின்ற நின்கண்கள்—நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும் - நம்மானயக்கப்பட்டவரது நல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவபோலாநின்றன, இனி நீயாற்றல்வேண்டும். எ-று.

சொல்லுவபோறல் அதனையவருணர்தற்கனுமானமாதல். நயந்தவர்க்கென்று பாடமோதுவாருமுளர். (உ)

கஉ௲௩. தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள். ௩.

இதுவுமது.

இ-ள். மணந்த நாள் வீங்கிய தோள் - காதலர் மணந்தஞான்று இன்பமிகுதியாற் பூரித்த நின்றோள்கள்—தணந்தமை சால அறிவிப்பபோலும் - இன்று அவர் பிரிந்தமையை விளங்க உணர்த்துவபோல மெலியாநின்றன, இது தகாது. எ-று.

அன்றுமவ்வாறு பூரித்து இன்றுமிவ்வாறு மெலிந்தால் இரண்டுங் கண்டவர் கடிதினறிந்து அவரைத் தகவின்மை கூறுவரென்பதாம். (௩)

கஉ௲௪. பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். ௪.

இதுவுமது.

இ-ள். துணை நீங்கித் தொல் கவின் வாடிய தோள் - அன்றுந்தந்துணைவர் நீங்குதலான் அவராற்பெற்ற செயற்கையழகேயன்றிப் பழையவியற்கையழகுமிழந்த இத்

தோள்கள்—பணை நீங்கிப் பைந்தொடி சோரும் - இன்றதற்குமேலே தம்பெருமை யிழந்து வளை கழலாநின்றன; இவையிங்ஙனஞ் செயற்பாலவல்ல. எ - று.

பெருமையிழத்தல் மெலிதல். பைந்தொடி பசிய பொன்னாற்செய்த தொடி. சோருமென்னும் வளைத்தொழில் தோண்மேனின்றது. அன்றும் பிரிந்தாரென்று அவரன்பின்மையுணர்த்தி இன்றுங் குறித்தபருவத்து வந்திலரென்று அவர் பொய்மையுணர்த்தாநின்றன; இனி அவற்றைக் கூறுகின்றார்மேற் குறையுண்டோ வென்பதாம்.

௧௨௩௫. கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். ௫.

இதுவுமது.

இ - ள். கொடியார் கொடுமை உரைக்கும் - கவவுக்கை நெகிழினும் ஆற்றாதாட்கு இக்கால நீட்டத்து என்னாமென்று நினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லாநின்றன—தொடியொடு தொல்கவின் வாடிய தோள் - வளைகளுங் கழன்று பழைய வியற்கையழகுமிழந்த இத்தோள்கள், இனியதனை யாமறைக்குமாறென்னை! எ - று.

உரைக்குமென்பது அப்பொருண்மைதோன்ற நின்ற குறிப்புச்சொல். ஒடு வேறுவினைக்கண் வந்தது. அவரொடு கலந்த தோள்களே சொல்லுவனவானால் அயலார் சொல்லுதல் சொல்லவேண்டுமோ வென்பதாம். (௫)

௧௨௩௬. தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக்கூற னொந்து. ௬.

தானாற்றுதற்பொருட்டியற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

இ - ள். தொடியொடு தோள் நெகிழ - யானாற்றவும் என்வயத்தவன்றித் தொடிகள் கழலுமாறு தோள்கண்மெலிய,—அவரைக் கொடியர் எனக் கூறல் நொந்து நோவல் - அவற்றைக் கண்டு நீயவரைக் கொடியரெனக் கூறுதலைப் பொறாது யானென்னுள்ளே நோவாநின்றேன். எ - று.

ஒடு மேல்வந்தபொருண்மைத்து. யானாற்றேனாகின்றது அவர்வாராததற்கன்று, நீ கூறுகின்றதற் கென்பதாம். (௬)

௧௨௩௭. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து. ௭.

அவ்வியற்பழிப்புப்பொறாது தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—கொடியார்க்கு என் வாடுதோட்பூசல் உரைத்து - இவள் கொடியாரென்கின்றவர்க்கு நீசென்று என்மெலிகின்ற தோளினால் விளைகின்ற ஆரவாரத்தைச்சொல்லி—பாடு பெறுதியோ - ஒருமேம்பாடெய்தவல்லையோ, வல்லையாயின் அதனையொப்பதில்லை. எ - று.

கொடியார்க்கென்பது கொடியரல்லரென்பது தோன்றநின்ற குறிப்புச்சொல். வாடுதோளென்பதும் அவை தாமே வாடாநின்றனவென்பது தோன்றநின்றது. பூசல் ஆகுபெயர். அஃது அவள் தோணோக்கியியற்பழித்தன்மேலும் அதனாற் றனக்

காற்ருமை மிகன்மேலும் நின்றது. நின்னுரை கேட்டலும் அவர் வருவர், வந்தால் இவையெல்லாநீங்கும், நீங்க அஃதெனக்குக் காலத்தினுற்செய்த நன்றியாமாகலின், அதன்பயனெல்லாமெய்துதியென்னுங் கருத்தாற் பாடுபெறுதியோவென்ருள். (எ)

௧௨௩௮. முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். ௮.

வினைமுடித்து மீடலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது நினைந்து
தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். முயங்கிய கைகளை ஊக்க-தன்னையிறுக முயங்கிய கைகளை இவட்கு நோமென்று கருதி ஒருஞான்றியானெகிழ்த்தேனுக,—பைந்தொடிப் பேதைநுதல் பசந்தது - அத்துணையும் பொருது பைந்தொடிகளையணிந்த பேதையது நுதல் பசந்தது; அப்பெற்றித்தாய நுதல் இப்பிரிவிற்கியாது செய்யுமோ! எ - று.

இனிக்கடிதிற் செல்லவேண்டுமென்பது கருத்து. (அ)

௧௨௩௯. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். ௯.

இதுவுமது.

இ - ள். முயக்கிடைத் தண் வளி போழ - அங்ஙனங்கைகளை யூக்குதலான் அம்முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக,—பேதை பெருமழைக்கண் பசப்புற்ற - அத்துணையிடையீடும் பொருது, பேதையுடைய பெரியமழைக்கண்கள் பசப்புற்றன; அத்தன்மையவான கண்கள் மலைகளும், காடும், நாடுமாய இவ்விடையீடுகளையெல்லாம் யாங்ஙனம் பொறுத்தன! எ - று.

தண்மை ஈண்டு மென்மைமேனின்றது. போழவென்றது உடம்பிரண்டும் ஒன்ருனதுதோன்ற நின்றது. மழை குளிர்ச்சி. (௯)

௧௨௪௦. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
யொண்ணுதல் செய்தது கண்டு. ௧௦.

இதுவுமது.

இ - ள். கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்று - தண்வளி போழவந்த கண்ணின்பசப்புத் துன்பமுற்றது,—ஒண்ணுதல் செய்தது கண்டு - தனக்கயலாய ஒண்ணுதல் விளைத்த பசப்பைக்கண்டு. எ - று.

அது கைகளையூக்க அவ்வளவிற்பசந்தது, யான் கைகளையுமூக்கி மெய்களுநீங்கிச் சிறுகாற்று ஊடறுக்குந் துணையும் பசந்திலனெனத் தன்வன்மையும் அதன்மென்மையுங்கருதி வெள்கிற்றென்பதாம்: ஆகவே, அவளுறுப்புக்கள் ஒன்றினென்று முற்பட்டு நலனழியும், யாங்கடிதிற் சேறுமென்பது கருத்தாயிற்று. (௧௦)

---

௧௨௬ ம் அதி.—நெஞ்சொடுகிளத்தல்.

அஃதாவது ஆற்ருமை மீதூரத் தனக்கோர் பற்றுக்கோடு காணுத தலைமகள் தன்னெஞ்சொடு செய்திறனறியாது சொல்லுதல். இஃது, உறுப்புக்கள் தந்நலனழிந்தவழி நிகழ்வதாகலின், உறுப்பு நலனழிதலின்பின் வைக்கப்பட்டது.

கஉசக. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து. க.

தன்னுற்றமை தீருந்திறனுடியது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே—எவ்வநோய் தீர்க்கும் மருந்து ஒன்று - இவ்வெவ் வநோயினைத் தீர்க்குமருந்தாவ தொன்றனை—எனைத்து ஒன்றும் நினைத்துச் சொல் லாய் - யானறியுமாற்றலிலன், எத்தன்மையதியாதொன்றுயினும் நீயறிந்தெனக்குச் சொல். எ - று.

எவ்வம் ஒன்றுனுந் தீராமை. உயிரினுஞ் சிறந்த நாணினை விட்டுச் செய்வதியா தொன்றுயினு மென்பாள், எனைத்தொன்று மென்றுள். (க)

கஉசஉ. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு. உ.

தலைமகனைக் காண்டற்கண் வேட்கைமிகுதியாற் சொல்லியது.

இ - ள். என் நெஞ்சு வாழி - என்னெஞ்சே, வாழ்வாயாக;—அவர் காதல் இல ராக நீ நோவது - அவர் நங்கட்காதலிலராகவும் நீயவர்வரவு நோக்கி வருந்துதற் கேது—பேதைமை - நின்பேதைமையே, பிறிதில்லை. எ - று.

நம்மை நினையாமையின் நங்கட்காதலிலரென்ப தறியலாம், அஃதறியாமை மேலும் அவர்பாற்செல்லக் கருதாது அவர்வரவுபார்த்து வருந்தாநின்றுய், இது நீ செய்துகொள்கின்றதென்னுங் கருத்தாற் பேதைமையென்றுள். வாழி இகழ்ச்சிக் குறிப்பு. யாமவர்பாற்சேறலே அறிவாவதென்பதாம். (உ)

கஉசங. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார் கணில். ங.

இதுவுமது.

இ - ள். நெஞ்சே இருந்து உள்ளிப் பரிதல் என் - நெஞ்சே, அவர்பாற்செல் வதுஞ்செய்யாது ஈண்டிறந்துபடுவதுஞ்செய்யாதிருந்து அவர்வரவுநினைந்து நீவருந்து கின்றதென்னை!—பைதல் நோய் செய்தார்கண் பரிந்து உள்ளல் இல் - இப்பையுணோய் செய்தார்மாட்டு நமக்கிரங்கிவரக்கருதுதல் உண்டாகாது. எ - று.

நம்மாட்டருளுடையரன்மையிற் றுமாக வாரார், நாஞ்சேறலே இனித் தகுவ தென்பதாம். (ங)

கஉசச. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று. ச.

இதுவுமது.

இ - ள். நெஞ்சே கண்ணும் கொளச் சேறி - நெஞ்சே, நீயவர்பாற் சேறலுற்று யாயின் இக்கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக;—இவை அவர்க் காணல் உற்று என்னைத் தின்னும் - அன்றி நீயே சேறியாயின், இவைதாங் காட்சிவிதுப்பினல் அவ ரைக் காண்டல்வேண்டி நீகாட்டென்று என்னைத் தின்பனபோன்று நலியாநிற் கும். எ - று.

கொண்டென்பது கொளவெனத் திரிந்துநின்றது. தின்னுமென்பது இலக்கணைக் குறிப்பு. அந்நலிவு தீர்க்கவேண்டுமென்பதாம்: என்றது தான்சேறல்குறித்து. (௪)

௧௨௪௫. செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்றா லுறாஅ தவர். ௫.

இதுவுமது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—யாம் உற்றால் உறாதவர் - யாம் தம்மையுறத் தாமுறாத நங்காதலரை—செற்றாரெனக் கைவிடல் உண்டோ - வெறுத்தாரென்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும்வலி நமக்குண்டோ, இல்லை. எ - று.

உறுதல் அன்புபடுதல். அவ்வலியின்மையின் அவர்பாற்செல்வதே நமக்குத் தகுவ தென்பதாம். (௫)

௧௨௪௬. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு. ௬.

தலைமகன் கொடுமைநினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக் கழறியது.

இ - ள். என் நெஞ்சு - என்னெஞ்சே,—கலந்து உணர்த்தும் காதலர்க் கண்டாற் புலந்து உணராய் - யான்றம்மொடு புலந்தால் அப்புலவியைக் கலவிதன்னானே நீக்க வல்ல காதலரைக் கண்டாற் பொய்யேயாயினும் ஒருகாற் புலந்து பின்னதனை நீங்க மாட்டாய்,—பொய்க் காய்வு காய்தி - அதுவுமாட்டாதநீ இப்பொழுது அவர் கொடிய ரெனப் பொய்க்காய்வு காயாநின்றாய், இனியிதனை யொழிந்து அவர்பாற்செல்லத் துணிவாயாக. எ - று.

கலத்தலானென்னும் பொருட்டாய கலக்கவென்பது திரிந்து நின்றது. அதனா னுணர்த்தலாவது கலவியின்பத்தைக் காட்டி அதனான் மயக்கிப் புலவிக்குறிப்பினை யொழித்தல். பொய்க்காய்வு நிலையில் வெறுப்பு. கண்டான்மாட்டாத நீ காணாதவழி வெறுக்கின்றதனாற் பயனில்லையென்பதாம். (௬)

௧௨௪௭. காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு. ௭.

நாண்டடுத்தலின் அச்சேலவோழிவாள் சோல்லியது.

இ - ள். நன்னெஞ்சே - நல்லநெஞ்சே,—ஒன்று காமம் விடு - ஒன்றின் நாண் விடமாட்டாயாயிற் காமவேட்கையை விடு,—(ஒன்று) நாண் விடு - ஒன்றின் அது விடமாட்டாயாயின் நாணினை விடு,—இவ்விரண்டு யானோ பொறேன் - அன்றியே இரண்டும் விடாமை நின்கருத்தாயின், ஒன்றற்கொன்று மறுதலையாய இவ்விரண் டனையும் உடன்றாங்குமதுகை யானிலன். எ - று.

யானோவென்னும் பிரிநிலை நீ பொறுப்பினு மென்பதுபட நின்றது. நன்னெஞ்சே யென்றது, இரண்டையும் விடாது பெண்மையை நிலைபெறுத்தலின், நல்லையென்னுங் குறிப்பிற்று. அது நன்றேயெனினும் என்னுயிருண்டாதல் சாலாமையின், அதற்கா கின்றிலேனென்பதாம். முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. (௭)

௧௨௪௮. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு. ௮.

இதுவுமது.

இ - ள். என் நெஞ்சு - என்னெஞ்சே,—அவர் பரிந்து நல்காரென்று - அவர் இவ்வாற்றாமையை யறியாமையின் நொந்துவந்து தலையளிசெய்யாராயினரென்று கருதி—பிரிந்தவர்பின் ஏங்கிச் செல்வாய் பேதை - அஃதறிவித்தற்பொருட்டு நம்மைப் பிரிந்துபோயவர்பின் ஏங்கிச்செலலுற்ற நீ யாதுமறியாய். எ - று.

ஆற்றாமைகண்டுவைத்தும் நல்காது போயினாரைக் காணாதவழிச் சென்றறிவித்த துணையானே நல்கவருவரென்று கருதினமையிற் பேதையென்றாள். (அ)

கஉசகூ. உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு. கூ.

இதுவுமது.

இ - ள். என் நெஞ்சு - என்னெஞ்சே,—காதலவர் உள்ளத்தாராக - காதலர் நின்னகத்தாராக,—நீ உள்ளி யாருழைச் சேறி - முன்பெல்லாங் கண்டுவைத்து இப்பொழுது நீ புறத்துத் தேடிச் செல்கின்றது யாரிடத்து! எ - று.

உள்ளமென்புழி அம்முப் பகுதிப்பொருள்விகுதி. நின்னகத்திருக்கின்றவரை அஃதறியாது புறத்துத்தேடிச் சேறல் நகையுடைத்து, அதனையொழியென்பதாம். (கூ)

கஉருo. துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
வின்னு மிழத்துங் கவின். கo.

அவரை மறந்தாற்றல்வேண்டுமென்பதுபடச் சொல்லியது.

இ - ள். துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா - நம்மைக் கூடாவண்ணந் துறந்துபோயினாரை நாம் நம்மகத்துடையேமாக,—இன்னும் கவின் இழத்தும் - முன்னிழந்த புறக்கவினேயன்றி நின்ற அகக்கவினுமிழப்பேம். எ - று.

"குன்றி - னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்*" என்புழிப்போல நெஞ்சென்பது ஈண்டும் அகப்பொருட்டாய் நின்றது. அவர் நம்மைத்துன்னாமற்றுறந்தாராகவும், நாமவரை மறத்தன்மாட்டேமாகவும், போன மெய்க்கவினேயன்றி நின்ற நிறையுமிழப்பேமென்பதாம். (கo)

கஉகூ ம் அதி.—நிறையழிதல்.

அஃதாவது தலைமகள் மனத்தடக்கற்பாலனவற்றை வேட்கைமிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல்: "நிறையெனப்படுவது மறைபிற ரறியாமை†" என்றார் பிறரும். அஃதழிதற்காரணம் நெஞ்சொடுகிளந்தமையின், இது நெஞ்சொடுகிளத்தலின்பின் வைக்கப்பட்டது.

கஉருக. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. க.

நாணுநிறையுமழியாமை நீயாற்றல்வேண்டுமென்ற
தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

* குறுந்தொகை, கடவுள்வாழ்த்து. † கலி, நெய்தல், கசு.

இ - ள். நாணுத் தாழ் வீழ்த்த நிறையென்னுங் கதவு - நாணாகிய தாழினைக் கோத்த நிறையென்னுங்கதவினை—காமக் கணிச்சி உடைக்கும் - காமவேட்கையாகிய கணிச்சி முறியாநின்றது, இனி அவை நிற்றலுமில்லை, யானுற்றலுமில்லை. எ - று.

கணிச்சி கூந்தாலி. நாணுள்ளதுணையும் நிறையழியாதாகலின் அதனைத் தாழாக்கியும், அகத்துக்கிடந்தன பிறர்கொள்ளாமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலியவாய்த் தாமாக நீங்காத அவ்விரண்டனையும் ஒருங்கு நீக்கலிற் றன்காமவேட்கையைக் கணிச்சியாக்கியுங் கூறினாள். (௧)

௧௨௫௨. காம மெனவொன்றோ கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில். ௨.

நெஞ்சின்கட்டோன்றிய காமம் நெஞ்சாலடக்கப்படு
மென்றற்குச் சொல்லியது.

இ - ள். யாமத்தும் என் நெஞ்சத்தைத் தொழில் ஆளும் - எல்லாருந்தொழிலொழியு மிடையாமத்தும் என்னெஞ்சத்தையொறுத்துத் தொழில்கொள்ளாநின்றது,—காமமென ஒன்று கண் இன்று - ஆகலாற் காமமென்றுசொல்லப்பட்டவொன்று கண்ணோட்டமின்றாயிருந்தது. எ - று.

ஓவென்பது இரக்கக்குறிப்பு. தொழிலின்கண்ணேயாடல் தலைமகன்பாற்செலவிடுத்தல். தாயைப்பணிகோடல் உலகியலன்மையிற் காமமெனவொன்றென்றும், அது தன்னைக் கொள்கின்றது அளவறியாது கோடலிற் கண்ணின்றென்றுங்கூறினாள். அடக்கப்படாமை கூறியவாறு. (௨)

௧௨௫௩. மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும். ௩.

மகளிர்காமம் மறைக்கப்படுமென்றற்குச் சொல்லியது.

இ - ள். காமத்தை யான் மறைப்பேன் - இக்காமத்தை யானென்னுள்ளே மறைக்கக்கருதுவேன்;—குறிப்பு இன்றித் தும்மல்போல் தோன்றி விடும் - அதனுலென், இஃதென்கருத்தின் வாராது தும்மல்போல வெளிப்பட்டேவிடாநின்றது. எ - று.

மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் இரங்கற்கண் வந்தது. தும்மலடங்காதாற்போல அடங்குகின்றதில்லையென்பதாம். (௩)

௧௨௫௪. நிறையுடையே னென்பேன்மன் யானோவென் காம
மறையிறந்து மன்று படும். ௪.

இதுவுமது.

இ - ள். யான் நிறையுடையேன் என்பேன் - இன்றினுங்கெல்லாம் யானென்னை நிறையுடையேனென்று கருதியிருந்தேன்;—என் காமம் மறை இறந்து மன்று படும் - அதனுலென், இன்றென்காமம் மறைத்தலைக்கடந்து மன்றின்கண் வெளிப்படாநின்றது. எ - று.

மன்னும் ஓவும் மேலவற்றின்கண் வந்தன. மன்றுபடுதல் பலருமறிதல். இனி என்வரைத்தன்றென்பதாம். (௪)

௧௨௫௫. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றா ரறிவதொன் றன்று. ௫.

நம்மைமறந்தாரை நாமுமறக்கற்பாலமென்றாட்குச் சொல்லியது.

இ - ள். செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை - தம்மையகன்றுசென்றார் பின் செல்லாது தாமும் அகன்றுநிற்குநிறையுடைமை—காமநோய் உற்றார் அறிவது ஒன்று அன்று - காமநோயினையுறாதார் அறிவதொன்றன்றி உற்றார் அறிவதொன்றன்று. எ-று.

இன்பத்தொடு கழியுங்காலத்தைத் துன்பத்தொடு கழியுமாறு செய்தலிற் செற்றாரென்றாள். பின்சேறல் மனத்தால் இடைவிடாது நினைத்தல். பெருந்தகைமை ஈண்டாகுபெயர். காமநோயுறாதார் மானமுடையார். நன்றெனவுணரார் மாட்டுஞ்சென்றேநிற்கும் யானறிவதொன்றன்றென்பதாம். (௫)

௧௨௫௬. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னை யுற்ற துயர். ௬.

இதுவுமது.

இ - ள். செற்றவர்பின் சேறல் வேண்டி - என்னையகன்று சென்றார்பின்னே யான் சேறலைவேண்டுதலான்,—என்னை உற்ற துயர் எற்று அளித்து - என்னை யுற்ற துயர் எத்தன்மையது! சால நன்று. எ - று.

செற்றவரென்றது ஈண்டும் அப்பொருட்டு. வேண்டவென்பது வேண்டியெனத் திரிந்துநின்றது. அளித்தென்பது இகழ்ச்சிக்குறிப்பு. இக்காமநோய் யான் சொல்லவுங்கேட்கவுமாவதொன்றன்று; சாலக்கொடிதென்பதாம். (௬)

௧௨௫௭. நாணென வொன்றோ வறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின். ௭.

பரத்தையிற்பிரிந்துவந்த தலைமகனோடு நிறையழிவாற் கூடியதலைமகள்
நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். பேணியார் காமத்தாற் பெட்ப செயின் - நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செய்யுமளவின்,—நாண் என ஒன்றோ அறியலம் - நாணென்றொன்றையும் அறியமாட்டேமாயிருந்தேம். எ - று.

பேணியாரெனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. விரும்பியன வேட்கைமிகவினாற் கருதியிருந்த கலவிகள். நாண் பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். ஒன்றென்பது ஈண்டுச் சிறிதென்னும் பொருட்டு. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நிறையழிவான் அறியாது கூடிய தன்குற்ற நோக்கி, அவளையுமுளப்படுத்தாள். (௭)

௧௨௫௮. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை. ௮.

இதுவுமது.

இ - ள். நம்பெண்மை உடைக்கும் படை - நந்நிறையாகியவரணையழிக்குந் தானை—பன்மாயக் கள்வன் பணிமொழியன்றோ - பல பொய்களைவல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்களன்றோ! ஆனபின் அதுநிற்குமாறென்னை! எ - று.

பெண்மை ஈண்டுத் தலைமைபற்றி நிறைமேனின்றது. வந்தாற் புலக்கக்கடவே மென்றும் புலந்தால் அவன்சொற்களானுஞ் செயல்களானும் நீங்கேமென்றும் இவை முதலாகவெண்ணிக்கொண்டிருந்தன யாவுங் காணாது கலவிக்கட்டன்னினுமுற்படும் வகை வந்துதோன்றினானென்பாள், பன்மாயக்கள்வனென்றாள். பணிமொழி நம்மினுந்தானன்புமிகுதியுடையனாகச் சொல்லுஞ்சொற்கள். அவன் அத்தன்மையனாக, சொற்கள் அவையாக, நந்நிறையழியாதொழியுமோ வென்பதாம். (அ)

கஉருகூ. புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு. கூ.

இதுவுமது.

இ - ள். புலப்பல் எனச் சென்றேன் - அவர் வந்தபொழுது புலக்கக்கடவே னென்று கருதி முன்னில்லாது பிறிதோரிடத்துப்போயினேன்;—நெஞ்சம் கலத்தலுறுவது கண்டு புல்லினேன் - போயும், என்னெஞ்சம் நிறையினில்லாது அறைபோய் அவரோடு கலத்தற்றொடங்குதலையறிந்து, இனி அது வாயாதென்று புல்லினேன். எ - று.

வாயாமை புலத்தற்கருவியாய நெஞ்சுதானே கலத்தற்கருவியாய் நிற்றலின் அது முடியாமை. (கூ)

கஉகூ0. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல். க0.

இதுவுமது.

இ - ள். நிணம் தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு - நிணத்தைத் தீயின்கண்ணே யிட்டால் அஃதுருகுமாறுபோலத் தங்காதலரைக் கண்டால் நிறையழிந்துருகுநெஞ்சினையுடைய மகளிர்க்கு,—புணர்ந்து ஊடி நிற்பேம் எனல் உண்டோ - அவர் புணராமுடிப் பின்பு உணராது அந்நிலையே நிற்கக்கடவேமென்று கருதுதலுண்டாகுமோ, ஆகாது. எ - று.

புணர்தல் ஈண்டு மிகநணுகுதல்; எதிர்ப்படலுமாம். புணர வென்பது புணர்ந்தெனத் திரிந்து நின்றது. யானத்தன்மையேனாகலின் எனக்கஃதில்லையாயிற்றென்பதாம். (க0)

கஉஎ ம் அதி.—அவர்வயின்விதும்பல்.

அஃதாவது சேயிடைப்பிரிவின்கட்டலைமகனுந் தலைமகளும் வேட்கைமிகவினான் ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல். தலைமகன்பிரிவும் தலைமகளாற்றாமையும் அதிகாரப்பட்டுவருகின்றமையின், இருவரையுஞ்சுட்டிப் பொதுவாகிய பன்மைப்பாலாற் கூறினார். பிறரெல்லாம் இதனைத் தலைமகனைநினைந்து தலைமகள் விதுப்புறலென்றார்: சுட்டுப்பெயர் சொல்லுவான் குறிப்பொடு கூடியபொருளுணர்த்துவதல்லது தானொன்றற்குப் பெயராகாமையானும், கவிகூற்றாய அதிகாரத்துத் தலைமகன் உயர்த்தற்பன்மையாற் கூறப்படாமையானும், அஃதுரையன்மையறிக. இதனுட்டலைமகள் கூற்று நிறையழிவானிசம்நீததாகலின், அவ்வியைபுபற்றி நிறையழிதலின்பின் வைக்கப்பட்டது.

கஉ௬க. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். க.

தலைமகள் காண்டல்விதுப்பினாற் சொல்லியது.

இ - ள். அவர் சென்ற நாள் ஒற்றி விரல் தேய்ந்த - அவர் நம்மைப்பிரிந்துபோய நாள்கள் சுவரின்கணிழைத்தவற்றைத்தொட்டு எண்ணுதலான் என்விரல்கடேய்ந்தன;—கண்ணும் வாள் அற்றுப் புற்கென்ற - அதுவேயன்றி அவர்வரும் வழிபார்த்து என்கண்களும் ஒளியிழந்து புல்லியவாயின; இவ்வாறாயும் அவர்வரவுண்டாயிற்றில்லை. எ - று.

நாள் ஆகுபெயர். புல்லியவாதல் நுண்ணிய காணமாட்டாமை. ஒற்றவென்பது ஒற்றியெனத் திரிந்துநின்றது. இனி யான்காணுமாறென்னையென்பதாம். நாளெண்ணலும் வழிபார்த்தலும் ஒருகாற் செய்தொழியாது இடையின்றிச்செய்தலான், விதுப்பாயிற்று. (க)

கஉ௬உ. இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து. உ.

ஆற்றாமைமிகுதலின் இடையின்றிநினைக்கற்பாலையல்லை சிறிது
மறக்கல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். இலங்கு இழாய் - விளங்காநின்றவிழையினையுடையாய்,—இன்று மறப்பின்-காதலரை இன்று யான் மறப்பேனாயின்,—மேல் காரிகை நீத்து என்றோள் கலங்கழியும் - மேலுங்காரிகையென்னை நீப்ப என்றோள்கள் வளைகழல்வனவாம். எ - று.

இலங்கிழாயென்பது இதற்கு நீ யாதும் பரியலையென்னுங்குறிப்பிற்று. இன்று யானிறந்துபடுகின்றவின்று. மேலும் மறுபிறப்பினும். எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. நீப்பவென்பது நீத்தெனத் திரிந்துநின்றது. கழியுமென்னும் இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது. இவ்வெல்லைக்கணினைந்தால் மறுமைக்கண் அவரையெய்தியின்புறலாம், அதனான் மறக்கற்பாலேனல்லேனென்பதாம். (உ)

கஉ௬௩. உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன். ௩.

இதுவுமது.

இ - ள். உரன் நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் - இன்பநுகர்தலை நச்சாது வேறலை நச்சி நாந்துணையாதலையிகழ்ந்து தம்முக்கந்துணையாகப் போயினார்—வரல் நசைஇ இன்னும் உளேன் - அவற்றையிகழ்ந்து ஈண்டுவருதலை நச்சுதலான், யானிவ்வெல்லையினுமுளேனாயினேன். எ - று.

உரனென்பது ஆகுபெயர். அந்நசையானுயிர்வாழாநின்றேன். அஃதில்லையாயின் இறந்துபடுவலென்பதாம். (உ)

கஉ௬௪. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு. ௪.

இதுவுமது.

இ - ள். பிரிந்தார் கூடியகாமம் வரவு உள்ளி - நீங்கியகாமத்தராய் நம்மைப் பிரிந்துபோயவர் மேற்கூடியகாமத்துடனே நங்கண்வருதலை நினைந்து,—என்னெஞ்சு

கோடுகொடு ஏறும் - என்னெஞ்சு வருத்தமொழிந்து மேன்மேற் பணைத்தெழாநின்றது. எ - று.

வினைவயிற்பிரிவுழிக் காமவின்பநோக்காமையும் அதுமுடிந்துழி அதுவே நோக்கலுந்தலைமகற்கியல்பாகலின், கூடியகாமமொடென்றாள். ஒடுவுருபு விகாரத்தாற்றொக்கது. கோடுகொண்டேறலாகிய மரத்ததுதொழில் நெஞ்சின்மேலேற்றப்பட்டது. கொண்டென்பது குறைந்துநின்றது. அஃதுள்ளிற்றிலேனாயின் இறந்துபடுவலென்பதாம். (௪)

கஉ௬௫. காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு. ௫.

தலைமகன்வரவுகூறி ஆற்றுயாய்ப் பசக்கற்பாலையல்லையென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். கண் ஆரக் கொண்கனைக் காண்க - என்கண்களாரும்வகை என்கொண்கனை யான் காண்பேனாக;—கண்டபின் என் மென்றோட்பசப்பு நீங்கும் - அங்ஙனங் கண்டபின் என் மெல்லியதோளின்கட்பசப்புத் தானே நீங்கும். எ - று.

காண்கவென்பது ஈண்டு வேண்டிக்கோடற்பொருட்டு. அதுவேண்டுமென்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கேட்டதுணையா னீங்காதென்பதாம். (௫)

கஉ௬௬. வருகமற் கொண்க னொருநாட் பருகுவன்
பைதனோ யெல்லாங் கெட. ௬.

இதுவுமது.

இ - ள். கொண்கன் ஒருநாள் வருக - இத்துணைநாளும் வாராக்கொண்கன் ஒருநாள் என்கண் வருவானாக;—பைதல் நோயெல்லாம் கெடப் பருகுவன் - வந்தாற் பையுளைச்செய்கின்ற இந்நோயெல்லாங்கெட அவ்வமிழ்தத்தை வாயில்களைந்தானும் பருகக்கடவேன். எ - று.

வருகவென்பதற்கும் மன்னென்பதற்கும் மேலுரைத்தவாறேகொள்க. அக்குறிப்பு அவ்வொருநாளைக்குள்ளே இனி வரக்கடவ நோய்களுங் கெடுப்பலென்பதாம்.

கஉ௬௭. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின். எ.

இதுவுமது.

இ - ள். கண் அன்ன கேளிர் வரின் - கண்போற்சிறந்த கேளிர் வருவராயின்,—புலப்பேன்கொல் - அவர்வரவு நீட்டித்தமை நோக்கி யான் புலக்கக்கடவேனோ,—புல்லுவேன்கொல் - அன்றி என்னாற்றாமைநோக்கிப் புல்லக்கடவேனோ,—கலப்பேன் கொல் - அவ்விரண்டும் வேண்டுதலான் அவ்விருசெயல்களையும் விரவக்கடவேனோ, யாதுசெய்யக்கடவேன்! எ - று.

புலவியும் புல்லலும் ஓர்பொழுதின்கண் விரவாமையிற் கலப்பேன்கொலென்றாள். மூன்றனையுஞ்செய்தல் கருத்தாகலின், விதுப்பாயிற்று. இனிக் கலப்பேன்கொலென்பதற்கு ஒருபுதுமைசெய்யாது பிரியாதநாட்போலக் கலந்தொழுகுவேனோ வென்றுரைப்பாருமுளர். (எ)

௧௨௬௮. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து. ௮.

வேந்தற்குற்றுழிப்பிரிந்த தலைமகன் வினைமுடிவுநீட்டித்துழித்
தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். வேந்தன் வினை கலந்து வென்றீக - வேந்தன் வினைசெய்தலைப்புரிந்து வெல்வானாக;—மனை கலந்து மாலை விருந்து அயர்கம் - யாமும் மனைவியைச் சென்று கூடி ஆண்டை மாலைப்பொழுதிற்கு விருந்தயர்வேமாக. எ - று.

மனையென்பது ஈண்டாகுபெயர், "மங்கல மென்ப மனைமாட்சி*" என்புழிப் போல. வினைசெய்தற்கண்வந்த மாலைப்பொழுதிற்கு எதிர்கோடல் அலங்கரித்தன் முதலியவின்மையின், மனைகலந்து மாலைக்கு விருந்தயர்கமென்றான். நான்கனுருபு விகாரத்தாற்றொக்கது. இது வினைமுடியாமுன் கூறலான் விதுப்பாயிற்று. பிறரெல்லாம் இதனைத் தலைமகள் கூற்றாக்கியுரைத்தார். தலைமகனைக்கூறாது வேந்தன் வெல்கவென்றும், மனைகலந்தென்றும், மாலைப்பொழுதின்கண் விருந்தயர்கமென்றும் வந்த அவ்வுரைதானே அது கூடாமைக்குக் கரியாயிற்று. (௮)

௧௨௬௯. ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. ௯.

இதுவுமது.

இ - ள். சேண் சென்றார் வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு - சேணிடைச்சென்ற தங்காதலர் மீண்டுவரக்குறித்த நாளையுட்கொண்டு அதுவருந்துணையும் உயிர்தாங்கி வருந்துமகளிர்க்கு—ஒருநாள் எழுநாள்போல் செல்லும் - ஒருநாள் பலநாள்போல நெடிதாகக்காட்டும். எ - று.

ஏழென்பது அதற்குமேலாய மிக்கபன்மைகுறித்து நின்றது, "ஒருவர்கூறை யெழுவருடுத்து" என்றாற்போல. தலைமகள் வருத்தம் பிறர்மேலிட்டுக் கூறியவாறு. இதனான் இதுவுந் தலைமகள் கூற்றாகாமையறிக. இருநாளென்று பாடமோதுவாருமுளர். (௯)

௧௨௭௦. பெறினென்னாம் பெற்றக்கா லென்னா முறினென்னா
முள்ள முடைந்துக்கக் கால். ௧௦.

இதுவுமது.

இ - ள். உள்ளம் உடைந்து உக்கக்கால் - காதலி நம்பிரிவினையாற்றாது உள்ளமுடைந்திறந்துபட்டவழி,—பெறின் என் - நம்மைப் பெறக்கடவளானாலென்,—பெற்றக்கால் என் - அதுவன்றியே பெற்றாலென்,—உறின் என் - அதுவன்றியே மெய்யுறக் கலந்தாற்றானென், இவையொன்றானும் பயனில்லை. எ - று.

இம்மூன்றும் உடம்பொடுபுணர்த்திக் கூறப்பட்டன, அதன்மேலும் முன்னை வழக்குண்மையின். அதற்குமுன்னே யான் செல்லவேண்டுமென்பது கருத்தாகலின், விதுப்பாயிற்று. இது தலைமகள் கூற்றாயவழி இரங்கலாவதல்லது விதுப்பாகாமையறிக. (௧௦)

---

* திருக்குறள், ௬௦.

௧௨௮ம் அதி.—குறிப்பறிவுறுத்தல்.

அஃதாவது தலைமகன், தலைமகள், தோழியென்றிவர் ஒருவர் குறிப்பினை யொருவர்க்கறிவுறுத்தல். இது, பிரிந்துபோய தலைமகன் வந்துகூடியவழி நிகழ்வதாக லின், அவர்வயின்விதும்பலின்பின் வைக்கப்பட்டது.

௧௨௭௧. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க
ணுரைக்க லுறுவதொன் றுண்டு. ௧.

பிரிந்துகூடிய தலைமகன் வேட்கைமிகவினுற் புதுவது பன்னுளும் பாராட்டத் தலைமகள் இதுவோன்றுடைத்தேன வஞ்சியவழி அதனையவள் குறிப்பானறிந்து அவனவட்குச் சொல்லியது.

இ - ள். கரப்பினும் - நீசொல்லாது மறைத்தாயாயினும்,—ஒல்லா கையிகந்து - அதற்குடம்படாதே நின்னைக் கைகடந்து—நின் உண் கண் உரைக்கலுறுவது ஒன்று உண்டு - நின்னுண்கண்களே எமக்குச் சொல்லலுறுவதொரு காரியமுண்டாயிராநின் றது, இனியதனை நீயே தெளியச்சொல்வாயாக. எ - று.

கரத்தல் நாணுனடக்குதல். தன்கட்பிரிதற்குறிப்புளதாகக்கருதி வேறுபட்டா ளது வேறுபாடு குறிப்பானறிந்து அவட்குத் தன்பிரியாமைக்குறிப்பறிவுறுத்தவாறு.

௧௨௭௨. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது. ௨.

நாணுல் அவள் அதுசோல்லாளாயவழி அவன்றேழிக்குச் சோல்லியது.

இ - ள். கண் நிறைந்த காரிகைக் காம்பு ஏர் தோட்பேதைக்கு - என்கண்ணி றைந்தவழகினையும் வேயையொத்த தோளினையுமுடைய நின்பேதைக்கு—பெண் நிறைந்த நீர்மை பெரிது - பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந் தது. எ - று.

இலதாயபிரிவினைத் தன்கணேற்றி அதற்கஞ்சுதலான், இவ்வாறு கூறினுன். (௨)

௧௨௭௩. மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு. ௩.

இதுவுமது.

இ - ள். மணியில் திகழ்தரும் நூல்போல்-கோக்கப்பட்ட பளிக்குமணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுநூல்போல—மடந்தை அணியில் திகழ்வது ஒன்று உண்டு-இம் மடந்தையதணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுகின்ற தொருகுறிப்புண்டு. எ - று.

அணி புணர்ச்சியானுயவழகு. அதனகத்துக்கிடத்தலாவது அதனேடு உடனிகழ் தற்பாலதன்றிவைத்து உடனிகழ்தல். அதனையானறிகின்றிலேன், நீயறிந்து கூறல் வேண்டுமென்பது கருத்து. (௩)

௧௨௭௪. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு. ௪.

இதுவுமது.

இ - ள். முகை மொக்குள் உள்ளது நாற்றம்போல் - முகையது முகிழ்ப்பினுள தாய்ப் புறத்துப் புலனுகாத நாற்றம்போல—பேதை நகை மொக்குள் உள்ளது ஒன்று

உண்டு - நின்பேதை என்னொடு நகக்கருது நகையது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனாகாததோர் குறிப்புண்டு. எ - று.

முகிழ்ப்பு முதிர்ச்சியாற்புடைபடுதல். நகை புணர்ச்சியின்பத்தானிகழ்வது. (௪)

௧௨௭௫. செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து. ௫.

இதுவுமது.

இ - ள். செறி தொடி செய்து இறந்த கள்ளம் - நெருங்கிய வளைகளையுடையாள் என்கண்ணில்லாதொன்றனையுட்கொண்டு அது காரணமாக என்னை மறைத்துப் போன குறிப்பு—உறு துயர் தீர்க்கு மருந்து ஒன்று உடைத்து - என் மிக்கதுயரைத் தீர்க்குமருந் தாவதொன்றனையுடைத்து. எ - று.

உட்கொண்டது பிரிவு. கள்ளம் ஆகுபெயர். மறைத்தற்குறிப்புத் தானுமுடன் போக்குட்கொண்டது. உறுதுயர் நன்றுசெய்யத் தீங்குவிளைதலானும் அதுதான் நீர் திறம்பெருமையானும் உளதாயது. மருந்து அப்பிரிவின்மை தோழியாற்றெளிவித்தல். நீயது செய்தல்வேண்டுமென்பதாம். (௫)

௧௨௭௬. பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து. ௬.

தலைமகன்குறிப்பறிந்த தலைமகள் அதனை அதுதெளிவிக்கச்
சென்ற தோழிக்கறிவுறுத்தது.

இ - ள். பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல் - காதலர் வந்து தம்பிரிவினாய துன்பத்தினை மிகவுமாற்றி நாமகிழும்வண்ணங் கலக்கின்ற கலவி—அரிது ஆற்றி அன்பின்மை சூழ்வது உடைத்து - இருந்தவாற்றான் மேலுமத்துன்பத்தினை அரிதாகவாற்றியிருந்து அவரன்பின்மையை நினையுந்தன்மையுடைத்து. எ - று.

பிரிதற்குறிப்பினாற் செய்கின்றதாகலான், முடிவில் இன்னாதாகா நின்றதென்பதாம். (௬)

௧௨௭௭. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை. ௭.

இதுவுமது.

இ - ள். தண்ணந்துறைவன் தணந்தமை-குளிர்ந்த துறையையுடையவன் நம்மை மெய்யாற்கூடியிருந்தே மனத்தாற்பிரிந்தமையை—நம்மினும் வளை முன்னம் உணர்ந்த-அவன்குறிப்பானறிதற்குரிய நம்மினும் இவ்வளைகள் முன்னேயறிந்தன. எ - று.

கருத்துநிகழ்ந்ததாகலிற் றணந்தமையென்றும், யான்றெளியவுணர்தற்குமுன்னே தோள்கண் மெலிந்தனவென்பாள் அதனை வளைமேலேற்றி அதுதன்னையுணர்வுடைத் தாக்கியுங்கூறினாள். (௭)

௧௨௭௮. நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து. ௮.

இதுவுமது.

இ - ள். எங்காதலர் சென்றார் நெருநற்று - எங்காதலர் பிரிந்துபோயினார் நெருநற்றே;—யாமும் மேனி பசந்து எழுநாளேம் - அப்பிரிவிற்கு யாமும் மேனிபசந்து எழுநாளுடையமாயினேம். எ - று.

நெருநற்றுச்செய்த தலையளியாற் பிரிவு துணியப்பட்டதென்பாள் நெருநற்றுச் சென்றாரென்றும், அதனையையுற்றுச்செல்கின்றது எழுநாளுண்டாகலின் அன்றே மேனிபசந்ததென்பாள் மேனி பசந்தெழுநாளேமென்றுங் கூறினாள். இவ்வாற்றாற் றலைமகனது பிரிதற்குறிப்பினையுணர்த்தினின்றது. (அ)

கஉஎகூ. தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது. கூ.

தலைமக்கள் குறிப்பறிந்ததோழி அதனைத் தலைமகற்கறிவித்தது.

இ - ள். யானது தெளிவித்தவழித் தெளியாது,—தொடி நோக்கி - அவர் பிரியயானீண்டிருப்பின் இவை நில்லாவெனத் தன்றொடியை நோக்கி,—மென்றோளும் நோக்கி - அதற்கேதுவாக இவை மெலியுமெனத் தன்மென்றோள்களையுநோக்கி,—அடி நோக்கி - பின்னிவ்விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல்வேண்டுமெனத் தன்னடியையுநோக்கி,—ஆண்டு அவள் செய்தது அஃது-அங்ஙனம் அவள் செய்த குறிப்பு உடன்போக்காயிருந்தது. எ - று.

செய்தகுறிப்புச் செய்தற்கேதுவாய குறிப்பு. அஃதென்றாள் "செறிதொடி செய்திறந்தகள்ள*" மென்றாளுகலின். பிரிதற்குறிப்புண்டாயின் அஃதழுங்குதல் பயன்.

கஉஅ௦. பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினாற்
காமநோய் சொல்லி யிரவு. க௦.

தலைமகன்பிரியாமைக்குறிப்பினைத் தோழிக்கறிவுறுத்தது.

இ - ள். காமநோய் கண்ணினாற் சொல்லி இரவு - மகளிர் தங்காமநோயினைத் தோழியர்க்கும் வாயாற்சொல்லாது கண்ணினாற்சொல்லி அது தீர்க்கவேண்டுமென்று அவரையிரவாது உடன்போதல் குறித்துத் தம்மடியினையிரத்தல்—பெண்ணினால் பெண்மை உடைத்து என்ப - தயக்கியல்பாகிய பெண்மைமேலும் ஓர்பெண்மையுடைத்தென்று சொல்லுவர் அறிந்தோர். எ - று.

தலைமகளதுடன்போதற்றுணிபு தோழியாற் றெளிந்தானாகலின், தன்பிரிவின்மைக் குறிப்பினையறிவுறுப்பான், அவள்பெண்மையினைப் பிறர்மேலிட்டு வியந்து கூறியவாறு. (க௦)

கஉகூம் அதி.—புணர்ச்சிவிதும்பல்.

அஃதாவது தலைமகனுந் தலைமகளும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். மேற் புணர்ச்சிமிகுதிபற்றித் தலைமகன்பிரிதற்குறிப்பறிவுறுத்த தலைமகள் அவன்மாட்டேநிகழாது வேட்கைமிகவினாற் பின்னுந் தன்கண்ணே நிகழ்தலான், இது குறிப்பறிவுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

---

* திருக்குறள், கஉஎ௫.

௧௨௮௧. உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. ௧.

பிரிதற்குறிப்பினனாகியானோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

இ - ள். உள்ளக் களித்தலும் - நினைந்த துணையானே களிப்பெய்தலும்—காண மகிழ்தலும் - கண்ட துணையானே மகிழ்வெய்தலும்—கள்ளுக்கு இல் காமத்திற்கு உண்டு - கள்ளுண்டார்க்கில்லை, காமமுடையார்க்குண்டு. எ - று.

களித்தல் உணர்வழியாதது. மகிழ்தல் அஃதழிந்தது. இவ்விரண்டும் உண்டுழியல்லதின்மையிற் கள்ளுக்கில்லென்றாள். உண்டென்பது இறுதிவிளக்கு. அப்பெற்றித்தாய காமமுடைய யான்புலத்தல் யாண்டையதென்பதாம். (௧)

௧௨௮௨. தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங்
காம நிறைய வரின். ௨.

இதுவுமது.

இ - ள். காமம் பனைத்துணையும் நிறைய வரின் - மகளிர்க்குக்காமம் பனையளவினும் மிகவுண்டாமாயின்,—தினைத்துணையும் ஊடாமை வேண்டும் - அவரால், தங் காதலரோடு தினையளவுமூடுதல்செய்யாமை, வேண்டப்படும். எ - று.

பனைத்துணையுமென்புழி ஐந்தனுருபு விகாரத்தாற்றொக்கது. ஊடின் வருத்தமிகுமெனப் பிறர்க்குறுதிகூறுவாள்போன்று, தன்விதுப்புக் கூறியவாறு. (௨)

௧௨௮௩. பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணா தமையல கண். ௩.

இதுவுமது.

இ - ள். பேணாது பெட்பவே செய்யினும் - நம்மையவமதித்துத் தான் வேண்டியனவே செய்யுமாயினும்,—கொண்கனைக் கண் காணாது அமையல - கொண்கனை என் கண்கள் காணாதமைகின்றனவில்லை. எ - று.

தன்விதுப்புக் கண்கண்மேலேற்றப்பட்டது. அத்தன்மையேன் அவனோடு புலக்குமாறென்னையென்பதாம். (௩)

௧௨௮௪. ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு. ௪.

இதுவுமது.

இ - ள். தோழி - தோழீ,—ஊடற்கண் சென்றேன் - காதலரைக் காணுமுன் அவர்செய்த தவற்றைத் தன்னொடுநினைந்து யானவரோடூடுதற்கண்ணே சென்றேன்;—என்னெஞ்சு அது மறந்து கூடற்கண் சென்றது - கண்டபின் என்னெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றது. எ - று.

சேறனிகழ்தல் நினைத்தநெஞ்சிற்குமொத்தலின், அது மறந்தென்றாள். அச்செலவாற் பயனென்னெனென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அவ்வெல்லையிலே நெஞ்சு அறைபோகலான், அது முடிந்ததில்லை யென்பதாம். (௪)

௧௨௮௫. எழுதுங்காற் கோல்காணுக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து. ௫.

இதுவுமது.

இ - ள். எழுதுங்கால் கோல் காணுக் கண்ணேபோல் - முன்னெல்லாங்கண்டிருந்தும் எழுதுங்காலத்து அஞ்சனக்கோலினியல்பு காணமாட்டாத கண்ணேபோல,—கொண்கன்பழி கண்டவிடத்துக் காணேன் - கொண்கனது தவறு காணுதவிடத்தெல்லாங்கண்டிருந்து அவனைக்கண்டவிடத்துக் காணமாட்டேன். எ - று.

கோல் ஆகுபெயர். இயல்பு கருமை. என்னியல்பிதுவாகலின் மேலும் அது முடியாதென்பதாம். (௫)

௧௨௮௬. காணுங்காற் காணேன் றவறாய காணுக்காற்
காணேன் றவறல் லவை. ௬.

இதுவுமது.

இ - ள். காணுங்கால் தவறாய காணேன் - கொண்கனை யான் காணும்பொழுது அவன்றவறாயவற்றைக் காண்கின்றிலேன்,—காணுக்கால் தவறல்லவைகாணேன் - காணுதபொழுது அவையேயல்லது பிறவற்றைக் காண்கின்றிலேன். எ - று.

செயப்படுபொருள் அதிகாரத்தான் வந்தது. முன்பு நான் நின்னொடு சொல்லிய தவறுகள் இதுபொழுது காணுமையிற் புலந்திலேனென்பதாம். (௬)

௧௨௮௭. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து. ௭.

இதுவுமது.

இ - ள். உய்த்தல் அறிந்து புனல் பாய்பவரேபோல் - தம்மையீர்த்துக்கொண்டு போதலறிந்துவைத்து ஒழுகுகின்ற புனலுட்பாய்வார் செயல்போல,—பொய்த்தல் அறிந்து புலந்து என் - புலவிமுடிவுபோகாமை யறிந்துவைத்துக் கொண்கனோடு புலந்து பெறுவதென்! எ - று.

பாய்பவரென்பது ஆகுபெயர். பொய்த்தல் புரைபடுதல். புலந்தாலும் பயனில்லையென்பதாம். பொய்த்தலறிந்தேனென்பது பாடமாயின், உய்த்தலறிய ஓடுநீருட்பாயவார்போல முடிவறியப்பண்டொருகாற்புலந்து முடியாமையறிந்தேன் இனி அது செயற்பாற்றன்றெனவுரைக்க. (௭)

௧௨௮௮. இளித்தக்க வின்னு செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. ௮.

தலைமகள்புணர்ச்சிவிதுப்பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது.

இ - ள். கள்வ - வஞ்சகா,—களித்தார்க்கு இளித்தக்க இன்னுசெயினும் கள்ளற்றே - தன்னையுண்டுகளித்தார்க்கு இளிவரத்தக்க இன்னுதவற்றைச் செய்யினும், அவரால் மேன்மேல் விரும்பப்படுவதாய கள்ளுப்போலும்—நின் மார்பு - எங்கட்கு நின் மார்பு. எ - று.

அவ்வின்றனதன நாணின்மை, நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மையென்றிவைமுதலாயின. எங்கட்கு நாணின்மை முதலியவற்றைச் செய்யுமாயினும் எங்களால் மேன்மேல் விரும்பப்படாநின்றதென்பதாம். கள்வவென்றதும் அது நோக்கி. (௮)

௧௨௮௯. மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார். ௯.

உணர்ப்புவயின்வாராவூடற்கட்டலைமகன் சொல்லியது.

இ - ள். காமம் மலரினும் மெல்லிது - காமவின்பம் மலரினு மெல்லிதாயிருக்கும்,—அதன்செவ்வி தலைப்படுவார் சிலர் - அங்ஙனம் மெல்லிதாதலையறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர். எ - று.

தொட்டதுணையானே மணச்செவ்வியழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிதென்பது விளக்கலின், உம்மை சிறப்பின்கண்வந்தது. குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும் ஒருகாலத்தின்கண்ணேயொத்து நுகர்தற்குரியாரிருவர் அதற்கேற்ற இடனுங்காலமும் உபகரணங்களும் பெற்றுக் கூடி நுகரவேண்டுதலின் அதன் செவ்விதலைப்படுவார் சிலரென்றும், அவற்றுள் யாதானுமொன்றனாற் சிறிது வேறுபடினும் வாடுதலின் மலரினுமெல்லிதென்றுங் கூறினான். குறிப்பொவ்வாமையின் யானதுபெறுகின்றிலேனென்பதாம். தலைமகளூடறீர்வது பயன். (௯)

௧௨௯௦. கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுத
லென்னினுந் தான்விதுப் புற்று. ௧௦.

இதுவுமது.

இ - ள். கண்ணின் துனித்தே - காதலி முன்னொருஞான்று புல்லல்விதுப்பினாற் சென்ற என்னொடு தன்கண் மாத்திரத்தானூடி,—புல்லுதல் என்னினும் தான்விதுப்புற்றுக் கலங்கினாள் - புல்லுதலை என்னினுந்தான்விதும்பலால் அதுதன்னையும் அப்பொழுதே மறந்து கூடிவிட்டாள்; அதனால் யானித்தன்மையேனாகவும் விதுப்பின்றியூடிநிற்கின்றவிவள் அவளல்லள். எ - று.

கண்மாத்திரத்தானூடல் சொன்னிகழ்ச்சியின்றி அது சிவந்ததுணையேயாதல். அவளாயின் இங்ஙனமூடற்க ணீடாளென்பது பயன். (௧௦)

---

௧௩௦ ம் அதி.—நெஞ்சொடுபுலத்தல்.

அஃதாவது காரணமுண்டாயவழியும் புலக்கக்கருதாது புணர்ச்சிவிதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும், தலைமகன் புலத்தலுமாம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௧௨௯௧. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது. ௧.

தலைமகன்கட்டவறுண்டாயவழியும் புலவிகருதாத
நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல்கண்டும் - அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவர்க்காய்நிற்றல் கண்டுவைத்தும்,—நீ எமக்கு ஆகாதது எவன் - நீயெமக்காய் நில்லாது அவரை நினைத்தற்காரணம் யாது! எ - று.

அவர்க்காதல் அவர்கருதியதற்குடம்படுதல். எமக்காகாததென்றது புலவிக்குடம்படாமையை. ஒருகருமத்தைத் தாமாகவறிந்து செய்யமாட்டாதார் செய்வாரைக் கண்டாயினுஞ் செய்வர், நீயதுவுஞ் செய்கின்றிலையென்பதாம். (க)

கஉ௯உ. உறாஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
செறாஅரெனச் சேறியென் னெஞ்சு. உ.

இதுவுமது.

இ - ள். என்னெஞ்சு - என்னெஞ்சே,—உறாதவர்க் கண்ட கண்ணும் - மேலும் நம்மாட்டன்புடையராகாதவரை உள்ளவாறறிந்தவிடத்தும்,—செறாரென அவரைச் சேறி - நாஞ்சென்றால் வெகுளாரென்பதுபற்றி நீயவர்மாட்டுச் செல்லாநின்றாய், இப்பெற்றியதுமேலுமோரறியாமையுண்டோ! எ - று.

அவரையென்பது வேற்றுமைமயக்கம். பழங்கண்ணோட்டம்பற்றி வெகுளாரென்பது கந்தாகச் சென்றாய், நீ கருதியது முடியுமோவென்பதாம். (உ)

கஉ௯௩. கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல். ௩.

இதுவுமது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—நீ பெட்டாங்கு அவர்பின்செலல் - என்மாட்டு நில்லாது நீ விரும்பியவாறே அவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம்—கெட்டார்க்கு நட்டார் இல்லென்பதோ - கெட்டார்க்கு நட்டார் உலகத்தில்லையென்னுநினைவோ, நின்னியல்போ, கூறுவாயாக. எ - று.

என்னைவிட்டு அவர்மாட்டுச்சேறல் நீபண்டே பயின்றதென்பாள் பெட்டாங்கென்றும், தானிதுபொழுது மானமில்ளாகலிற் கெட்டார்க்கென்றுங்கூறினாள். பின்னென்பது ஈண்டிடப்பொருட்டு. செலலென்பது ஆகுபெயர். "ஒல்கிடத்துலப்பிலா வுணர்விலார் தொடர்*" பாயிற்று நின்றொடர்பென்பதாம். (௩)

கஉ௯௪. இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று. ௪.

இதுவுமது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—துனி செய்து மற்றுத் துவ்வாய் - நீயவரைக் கண்டபொழுதே இன்பநுகரக் கருதுவதல்லது அவர்தவறுநோக்கி முன் புலவியையுண்டாக்கி அதனையளவறிந்து பின்னுகரக்கருதாய்,—இனி அன்ன நின்னொடு சூழ்வார் யார் - ஆகலான், இனியப்பெற்றிப்பட்டவற்றை நின்னோடெண்ணுவார்யார்! யானதுசெய்யேன். எ - று.

---

* கலி, பாலை, உ௫.

அப்பெற்றிப்பட்டன புலக்குந்திறங்கள். காணென்பது உரையசை. மற்று வினை மாற்றின்கண்வந்தது. முன்னெல்லாம் புலப்பதாகவெண்ணியிருந்து பின் புணர்ச்சி விதும்பலின், இவ்வாறு கூறினாள். (௪)

௧௨௯௫. பெறாஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மறாஅ விடும்பைத்தென் னெஞ்சு. ௫.

வாயிலாகச் சென்ற தோழிகேட்பத் தலைமகள் சொல்லியது.

இ - ள். பெறாமை அஞ்சும் - காதலரைப் பெறாத ஞான்று அப்பெறாமைக்கஞ்சா நின்றது,—பெறின் பிரிவு அஞ்சும் - பெற்றக்கால் வரக்கடவ பிரிவினையுட்கொண்டு அதற்கஞ்சாநின்றது,—என்னெஞ்சு அறா இடும்பைத்து-ஆகலான், என்னெஞ்சம் எஞ் ஞான்றும் நீங்காதவிடும்பையையுடைத்தாயிற்று. எ - று.

காதலரைப் பெற்றுவைத்துக் கலவியிழத்தல் உறுதியன்றென்னுங் கருத்தான் வாயினேர்கின்றாளாகலிற் பெறாமையஞ்சுமென்றும், கலவியாராமையின் இன்னுமிவர் பிரிவராயின் யாதுசெய்துமென்பது நிகழ்தலிற் பெறிற்பிரிவஞ்சு மென்றும், இவ் விரண்டுமல்லது பிறிதின்மையின் எஞ்ஞான்றுமறாவிடும்பைத்தென்றுங் கூறினாள். ()

௧௨௯௬. தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு. ௬.

இதுவுமது.

இ - ள். என்னெஞ்சு இருந்தது-என்னெஞ்சு ஈண்டிருந்தது,—தனியே இருந்து நினைத்தக்கால் - காதலரைப் பிரிந்திருந்து அவர் கொடுமைகளை யான்றன்னொடு நினைத் தக்கால்,—என்னைத் தினிய - அவ்வளவறிந்து என்னைத் தின்பதுபோன்று துன்பஞ் செய்தற்கே. எ - று.

எம்மாட்டிருந்து அன்று அவர்கொடுமைகளையுட்கொண்டு எனக்காற்றாமைசெய் தற்கே, இன்று அவைநோக்கி அவரொடு புலத்தற்கன்றென்பதாம். (௬)

௧௨௯௭. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணா மடநெஞ்சிற் பட்டு. ௭.

இதுவுமது.

இ - ள். அவர் மறக்கல்லா என் மாணா மடநெஞ்சிற் பட்டு - தன்னைமறந்த காத லரைத் தான்மறக்கமாட்டாத என்மாட்சிமையில்லாத மடநெஞ்சுடனே கூடி,— நாணும் மறந்தேன் - என்னுயிரினுஞ்சிறந்த நாண்டன்னையும் மறந்துவிட்டேன். எ-று.

மாணாமை ஒருநிலையினில்லாமை. மடமை கண்டவழி நினைந்து காணாதவழி மறக் கும் தவற்றைக் காணாவழிநினைந்து கண்டவழிமறத்தல். நாண் எஞ்ஞான்றுங் கூடி யொழுகினும் அஞ்ஞான்று கண்டார்போன்றொடுங்குதல். கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலின், அதனையுமறந்தேனென்றாள். (௭)

௧௨௯௮. எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
முள்ளு முயிர்க்காத னெஞ்சு. ௮.

இதுவுமது.

இ - ள். உயிர்க் காதல் நெஞ்சு - உயிர்மேற் காதலையுடைய என்னெஞ்சு,—எள்ளின் இளிவு ஆம் என்று எண்ணி - நம்மையெள்ளிச்சென்றாரென்று நாமுமெள்ளுவேமாயிற் பின்னமக்கிளிவாமென்று கருதி,—அவர் திறம் உள்ளும் - அவர் திறத்தினையே நினையாநின்றது. எ - று.

எள்ளுதல் வாயின்மறுத்தல். இளிவு வழிபடாமையானும், பிரிவாற்றாமையானும், நாணும் நிறையுமுதலியவிழத்தலானும் உளதாவது. திறம் வாயினேர்தலும் வருதலும் கூடலுமுதலாயின. இளிவிற்கஞ்சுதலானும் இறந்துபட மாட்டாமையானும் கூடக் கருதாநின்றதென்பதாம். (அ)

௧௨௯௯. துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி. ௯.

உணர்ப்புவயின்வாராவூடற்கட்டலைமகன் சொல்லியது.

இ - ள். துன்பத்திற்கு - ஒருவர்க்குத்துன்பம்வந்துழி, அது நீக்குதற்கு,—தாம் உடைய நெஞ்சம் துணையல்வழி - தாமுரித்தாகப்பெற்ற தம்முடைய நெஞ்சந் துணையாகாவழி—துணையாவார் யாரே - வேறு துணையாவார் ஒருவருமில்லை. எ - று.

ஈண்டுத் துன்பமாவது ஊடலுணர்ப்புவயின்வாராமை. அதற்கு நெஞ்சந்துணையாகாமையாவது அவளையன்பிலளென்றொழியாது கூடற்கண்ணே விதும்பல். ஒரு துணையுமின்மையின், இஃதுற்றுவிடுதலே யுள்ளதென்பதாம். (௯)

௧௩௦௦. தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி. ௧௦.

இதுவுமது.

இ - ள். தாம் உடைய நெஞ்சம் தமர் அல்வழி - தாமுரித்தாகவுடையநெஞ்சம் ஒருவர்க்குத் தமரல்லாவழி,—ஏதிலார் தமர் அல்லர் தஞ்சம் - அயலார் தமரல்லராதல் சொல்லவேண்டுமோ! எ - று.

பிறளொருத்தியைக் காதலியென்று கருதி என்னெஞ்சே என்னை வருத்தாநின்றபின் அப்பிறள் புலக்கின்றதெளிதென்பதாம். (௧௦)

௧௩௧-ம் அதி.—புலவி.

அஃதாவது இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கக்கருதியவழி ஒருவரோடொருவர் புலத்தல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

௧௩௦௧. புல்லா திராஅப் புலத்தை யவருறு
மல்லனோய் காண்கஞ் சிறிது. ௧.

வாயிலாகச்சென்ற தோழி தலைமகள் வாயினேர்தற்பொருட்டு
அவனோடு நகையாடிச் சொல்லியது.

இ - ள். அவர் உறும் அல்லல் நோய் சிறிது காண்கம் - அங்ஙனம் புலந்தாற் காதலரெய்துமல்லனோயினை யாஞ்சிறிது காணக்கடவேம்;—புல்லாது இராப் புலத்தை - நீயவரை விரைந்துசென்று புல்லாதே இத்தொழிலை மேலிட்டுக்கொண்டிருந்து புலப்பாயாக. எ - று.

அல்லனோய் துன்பத்தைச்செய்யுங் காமநோய். சிறிதென்றாள், புலவியை நீளவிடலாகாதென்பதுபற்றி. புலத்தையென்புழி ஐகாரம் "கடம்பூண்டொருகானீ வந்தை*" என்புழிப்போல முன்னிலைவினைவிகுதி. புலத்தியென்பதூஉம் பாடம். புலவிக்குறிப்புக்கண்டு அவள்வழியளாய் நின்று நாமுற்ற வருத்தம் அவருஞ்சிறிதற்றறிதல் வேண்டுமென நகையாடி நேர்வித்தவாறு. (௧)

௧௩௦௨. உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல். ௨.

புலவியொழிந்து வாயினேநும்வகை அவள் சொல்லியது.

இ - ள். புலவி உப்பு அமைந்தற்று - புலவி கலவி இன்பஞ்செயற்கு வேண்டுமளவிற்றுதல் உப்புத் துய்ப்பனவற்றை இன்சுவையவாக்கற்கு வேண்டுமளவிற்றுதல் போலும்;—சிறிது நீளவிடல் அது மிக்கற்று - இனி அதனையவ்வளவிற்சிறிதுமிக விடுதல் அவ்வுப்பு அளவின்மிக்காற்போலும். எ - று.

நீளவிடல் அளவறிந்துணராது கலவிமேலெழுந்த குறிப்பழுங்குமளவுஞ்செய்தல். சிறிதுநீளவிடலாகாதென்றாள், நேர்விக்கின்றாளாகலின். உப்பு மிக்கவழித் துய்ப்பது சுவையின்றானாற்போலப் புலவிமிக்கவழிக் கலவி இன்பமின்றாமென்றமையின், இது பண்புவமை. (௨)

௧௩௦௩. அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். ௩.

பரத்தையரிடத்துநின்றும் வந்த தலைமகனோடு
தலைமகள் புலந்து சொல்லியது.

இ - ள். தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல் - தம்மைப்பெறாது புலந்த மகளிரைப் புலவிநீக்கிக் கலவாது ஆடவர் சேறல்—அலந்தாரை அல்லல்நோய் செய்தற்று - பண்டே துன்பமுற்றழிந்தாரை அதன்மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற்போலும். எ - று.

பிறர்பாற்சேறலின் நும்மைப்பெறாது புலந்தூடியிருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவிநீக்கிப் புல்லீராயின், அவராற்றாரென்பதாம். (௩)

௧௩௦௪. ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று. ௪.

இதுவுமது.

இ - ள். ஊடியவரை உணராமை - நம்மோடூடிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடாதொழிதல்—வாடிய வள்ளி முதல் அரிந்தற்று - பண்டே நீர்பெறாது வாடிய கொடியை அடியிலேயறுத்தாற்போலும். எ - று.

* கலி, குறிஞ்சி, ௨௭.

நீர் பரத்தையரிடத்திராயவழி எம்புதல்வரைக் கண்டாற்றியிருக்கற்பாலமாய யாம் நும்மோடூடுதற்குரியமல்லம்; அன்மையின் எம்மையுணர்த்தல்வேண்டா, உரியராயூடிய பரத்தையரையே உணர்த்தல்வேண்டுவது, அதனால் ஆண்டுச்சென்மினென்பதாம். (௪)

௧௩௦௫. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து. ௫.

தலைமகளைப் புலவிநீக்கிக் கூடிய தலைமகன் றன்னுள்ளே சொல்லியது.

இ - ள். நலத்தகை நல்லவர்க்கு ஏர் - நற்குணங்களாற் றகுதியுடையராய தலைவர்க்கும் அழகாவது—பூ அன்ன கண்ணார் அகத்துப் புலத்தகை - தம்பூவன்னகண்ணார் நெஞ்சின்கண் நிகழும் புலவிமிகுதியன்றே. எ - று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தவறில்லார்க்கும் புலவி இனிதென்பான், நலத்தகை நல்லவர்க்குமென்றான். அழகு இன்பப்பயனைத்தலைப்படுதல். தானுகர்ந்த வின்பத்திற்கேதுவாகிய புலவியை வியந்து கூறியவாறு. (௫)

௧௩௦௬. துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று. ௬.

இதுவுமது.

இ - ள். துனியும் புலவியும் இல்லாயின் - முதிர்ந்த கலாமாகிய துனியும் இளைய கலாமாகிய புலவியும் இல்லையாயின்,—காமம் கனியும் கருக்காயும் அற்று - காமம் செவ்வி முதிர்ந்தபழமும் இளங்காயும்போலும். எ - று.

மிகமுதிர்ந்திறுமெல்லைத்தாய கனி நுகர்வார்க்கு மிகவுமினிமைசெய்யாதாதலிற் றுனியில்லையாயிற்கனியற்றென்றும், கட்டிளமைத்தாய காய் நுகருஞ்செவ்வித்தன்றாகலிற் புலவியில்லையாயிற் கருக்காயற்றென்றுங் கூறினான். இவ்விரண்டும் வேண்டுமென்று வியந்து கூறியவாறு. (௬)

௧௩௦௭. ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று. ௭.

இதுவுமது.

இ - ள். புணர்வது நீடுவது (கொல்) அன்றுகொல் என்று - இனிப்புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோவென்றுகருதலான்,—ஊடலின் ஓர் துன்பம் உண்டு - இன்பத்திற்கின்றியமையாத ஊடலின்கண்ணேயும் ஒருதுன்பநிகழும். எ - று.

என்றென்னுமெச்சத்திற்குக் கருதலானென்பது வருவிக்கப்பட்டது. சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கொல்லென்பதனை நீடுவதென்பதனுடனுங்கூட்டுக. ஆங்கென்பது அசைநிலை. ஊடல் கூடற்கண் விரைவித்தல் கூறியவாறு. (௭)

௧௩௦௮. நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதல ரில்லா வழி. ௮.

உணர்ப்புவயின்வாராவூடற்கட்டலைமகன் தலைமகளோடு
புலந்து சொல்லியது.

இ - ள். நொந்தாரென்று அஃது அறியும் காதலர் இல்லாவழி - இவர் நம்பொருட்டாக நொந்தாரென்று அந்நோவினையறியு மன்புடையாரைப் பெறாவழி—நோதல் மற்று எவன் - ஒருவர் நோகின்றதனாற்பயனென்! எ - று.

அறிதல் ஈண்டேலையினிதுணர்தல். மற்று வினைமாற்றின்கண் வந்தது. இவள் நங்காதலியல்லள், அன்மையின் இந்நோவறியாள், அறியாமையின் நாம் புலக்கின்றதனாற் பயனில்லையெனத் தன்னாற்றாமையுணர்த்தியவாறு. (அ)

௧௩௦௯. நீரு நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது. ௯.

இதுவுமது.

இ - ள். நீரும் நிழலதே இனிது - உயிர்க்கின்றியமையாத நீரும் நிழலின் கண்ணதே இனிதாவது, ஏனை வெயிலின்கண்ணது ஆகாது;—புலவியும் வீழுநர் கண்ணே இனிது - அதுபோலக் கல்விக்கின்றியமையாத புலவியும் அன்புடையார் கண்ணே இனிதாவது, ஏனையன்பிலார்கண் ஆகாது. எ - று.

நிழற்கணிருந்த நீர் குளிர்ச்சிமிக்குத் தாகந்தணித்தலின் இனிதாயிற்று. வீழுநர் ஆற்றாமைக்கு நோதலுங் கூடுதற்கண் வேட்கையுமுடையராவார். இவள் நம்மாட்டு அவ்விரண்டுமின்மையின் இப்புலவிதானு மின்னாதாகாநின்றதென்பதாம். (௯)

௧௩௧௦. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா. ௧௦.

இதுவுமது.

இ - ள். ஊடல் உணங்க - தானூடற்கண்ணே மெலியாநிற்கவும்,—விடுவாரோடு கூடுவேம் என்பது என்னெஞ்சம் அவா - விட்டிருக்கவல்லாரோடு கூடக் கடவேமென்று என்னெஞ்சம் முயறற்கேது தன்னவாவே, பிறிதில்லை. எ - று.

அன்புமருளுமில்லாதாரை உடையரென்றும் அவரோடியாங் கூடுவமென்றுங் கருதி அதற்கு முயறல் அவாவுற்றார் செயலாகலின், கூடுவேமென்பதவாவென்றான். காரியங் காரணமாக வுபசரிக்கப்பட்டது. இக்கூட்டம் முடியாதென்பதாம். (௧௦)

---

௧௩௨ ம் அதி.—புலவிநுணுக்கம்.

அது புலவியது நுணுக்கமென விரியும். அஃதாவது தலைமகனுந் தலைமகளும் ஓரமளிக்கட் கூடியிருந்துழி அவன்மாட்டுப் புலத்தற்காரணமில்லையாகவுங் காதல் கைம்மிகுதலான் நுண்ணியதோர் காரணமுளதாகவுட்கொண்டு அதனை யவன்மேலேற்றி அவள் புலத்தல். காரணத்தினுணுக்கம் காரியத்தின்மேனின்றது. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

௧௩௧௧. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. ௧.

உலாப்போய்வந்த தலைமகன் பள்ளியிடத்தானாகத் தலைமகள் சொல்லியது.

இ - ள். பரத்த - பரத்தமையுடையாய்,—பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர் - நின்னைப் பெண்ணியல்பினையுடையார் யாவருந் தங்கண்ணாற் பொது

வாகவுண்பர்,—நின் மார்பு நண்ணேன் - அதனால் அவர்மிச்சிலாய நின்மார்பினைப் பொருந்தேன். எ - று.

கற்பு நாண்முதலிய நற்குணங்களின்மையிற் பரத்தையர்க்குள்ளது பெண்ணியற்கைமாத்திரமேயென்னுங் கருத்தாற் பெண்ணியலாரென்றாள். பொதுவாகவுண்டல் தஞ்சேரிச்செலவின் முறையானன்றி ஒருகாலத்தொருங்குநோக்குதல்: அதுவுமோர்குற்றம். தாநோக்கியின்புற்றவாறே அவருநோக்கியின்புறுவரென ஆசங்கித்து அவர்பாற் பொறாமையெய்துதலின், நுணுக்கமாயிற்று. (௧)

௧௩௧௨. ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து. ௨.

தலைமகனீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள்
பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.

இ - ள். ஊடி இருந்தேமாத் தும்மினார் - யாந்தம்மோடேயுரையாடாதிருந்தேமாகக் காதலர் தும்மினார்,—யாம் தம்மை நீடுவாழ்கென்பாக்கு அறிந்து - அது நீங்கித் தம்மை நீடுவாழ்கென்றுரையாடுவேமாகக் கருதி. எ - று.

தும்மியக்கால் வாழ்த்துதல் மரபாகலான், உரையாடல் வேண்டிற்றென்பதாம். இயல்பானிகழ்ந்த தும்மலைக் குறிப்பானிகழ்ந்ததாகக் கோடலின், நுணுக்கமாயிற்று.

௧௩௧௩. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று. ௩.

தலைமகள் புலவிக்குறிப்பினைக் கண்டு நீவிர்கூடியொழுகாநிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

இ - ள். கோட்டுப்பூச் சூடினும் - யான் கோடுதலைச் செய்யுமாலையைச் சூடினேனாயினும்,—ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று காயும் - நும்மாற்காதலிக்கப்பட்டாளொருத்திக்கு இப்பூவணிகாட்டல்வேண்டிச் சூடினீரென்று வெகுளாநிற்கும்; இத்தன்மையாட்கு ஒருகாரணம் வேண்டுமோ! எ - று.

கோடென்பது முதனிலைத்தொழிற்பெயர். பூ ஆகுபெயர். வளையமாகச்சூடினுமென்பதாம்; "கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்*" என்றார் பிறரும். இனி அம்மருதநிலத்துப்பூவன்றி வேற்றுநிலத்துக் கோட்டுப்பூவைச் சூடினேனாயினும் ஈண்டையாள் பிறளொருத்திக்கு அவ்வேற்றுப்பூவணி காட்டல்வேண்டிச் சூடினீரென்று வெகுளுமெனினுமமையும். (௩)

௧௩௧௪. யாரினுங் காதல மென்றேனா வூடினாள்
யாரினும் யாரினு மென்று. ௪.

இதுவுமது.

இ - ள். யாரினும் காதலம் என்றேனா - காமநுகர்தற்குரிய விருவராயினார் யாவரினும் யாம் மிக்க காதலையுடையேமென்பது கருதி யாரினுங் காதலமென்றேனாக,—யாரினும் யாரினும் என்று ஊடினாள் - நின்றோழி அது கருதாது, என்னாற்

* புறநானூறு, ௨௭௬.

காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்கட்காதலுடையே னென்றேனாகக்கருதி, அம்மகளிர் யாரினும் என்கட் காதலுடையராயினீரென்று சொல்லிப் புலந்தாள். எ - று.

தலைமகள் கருத்திற்குத் தன்மைப்பன்மை உயர்ச்சிக்கண் வந்தது. யானன்பு மிகுதியாற் சொல்லியதனைக் கருத்து வேறுபடக்கொண்டதல்லது பிறிதுகாரணமில்லையென்பதாம். (௪)

௧௩௧௫. இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண்ட னள். ௫.

இதுவுமது.

இ - ள். இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனா - காதன்மிகுதியான் இம்மையாகிய பிறப்பின்கண் யாம் பிரியேமென்று சொன்னேனாக,—கண் நிறை நீர்கொண்டனள் - அதனான் ஏனை மறுமையாகிய பிறப்பின்கட் பிரிவலென்னுங் குறிப்பினேனாகக் கருதி, அவள் தன்கண்ணிறைந்த நீரினைக்கொண்டாள். எ - று.

வெளிப்படுசொல்லைக் குறிப்புச்சொல்லாகக் கொள்கின்றதல்லது என்பாற்றவறில்லை யென்பதாம். (௫)

௧௩௧௬. உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். ௬.

இதுவுமது.

இ - ள். உள்ளினேன் என்றேன் - பிரிந்தகாலத்து நின்னை யிடையின்றி நினைந்தேனென்னுங்கருத்தால் யானுள்ளினேனென்றேன்;—மற்று என்மறந்தீர் என்று என்னைப் புல்லாள் புலத்தக்கனள் - என, அதனை ஒருகான் மறந்து பின்னினைந்தேனென்றதாகக்கருதி, என்னையிடையே மறந்தீரென்று சொல்லி முன் புல்லுதற் கமைந்தவள் அஃதொழிந்து புலத்தற்கமைந்தாள். எ - று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. அருத்தாபத்திவகையான் மறத்தலையுட்கொண்டு புலந்தாளென்பதாம். (௬)

௧௩௧௭. வழுத்தினா டும்மினே னாக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று. ௭.

இதுவுமது.

இ - ள். தும்மினேனாக வழுத்தினாள் - கூடியிருக்கின்றவள் யான் றும்பினேனாகத் தன்னியற்கைபற்றி வாழ்த்தினாள்;—அழித்து யார் உள்ளித்தும்மினீர் என்று அழுதாள் - அங்ஙனம் வாழ்த்தியதானே மறித்து, நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் நினைத்தலாற் றும்மினீரென்று சொல்லிப் புலந்தழுதாள். எ - று.

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின், அழித்தென்றான். அன்புடையார் நினைத்தவழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மறோன்றுமென்பது மகளிர்வழக்கு. இவ்வழக்கை உள்வழக்காகக் கருதிப் புலந்தாளென்பதாம். (௭)

௧௩௧௮. தும்முச் செறுப்ப வழுதா ளுமருள்ள
லெம்மை மறைத்திரோ வென்று. அ.

இதுவுமது.

இ - ள். தும்முச் செறுப்ப - எனக்குத் தும்மரூன்றியவழி யாருள்ளித்தும்மினி ரென்று புலத்தலையஞ்சி, அதனை யானடக்கினேன்; அங்ஙனமடக்கவும்,—நுமர் உள்ளல் எம்மை மறைத்திரோ என்று அழுதாள் - நுமர் நும்மை நினைத்தலை எம்மை மறைக்கலுற்றீரோவென்று சொல்லிப் புலந்தழுதாள். எ - று.

தும்முவென்பது முதனிலைத்தொழிற்பெயர். செறுப்பவென்புழி இறந்ததுதழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. எம்மையென்பது நும்மோடியாதுமியைபில்லாத வெம்மையென்பதுபடநின்ற இசையெச்சம். இதனை வடநூலார் காகுவென்ப. தும்மினுங் குற்றம் ஒழியினுங்குற்றமாய்க்காற் செயற்பாலதியாதென்பதாம்.

கஙககூ. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரிந்நீர ராகுதி ரென்று. கூ.

இதுவுமது.

இ - ள். தன்னை உணர்த்தினுங் காயும் - இவ்வாற்றானூடிய தன்னை யான் பணிந்துணர்த்துங்காலும் வெகுளாநிற்கும்,—பிறர்க்கும் நீர் இந்நீரர் ஆகுதிர் என்று - பிறமகளிர்க்கும் அவரூடியவழி இவ்வாறே பணிந்துணர்த்துநீர்மையையுடையீராகுதிரென்று சொல்லி. எ - று.

இவள் தெளிவித்தவழியுந் தெளியாளென்பதுபற்றி என்மேலேற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன், பணிய அதுதானும் புலத்தற்கேதுவாய் முடிந்தது, இனியிவண்மாட்டுச் செய்யத்தகுவதியா தென்பதாம். (கூ)

கஙஉ0. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீ
ரியாருள்ளி நோக்கினீ ரென்று. க0.

இதுவுமது.

இ - ள். நினைத்து இருந்து நோக்கினும் காயும் - என்சொற்களுஞ் செயல்களும் பற்றித் தான் வெகுடலான், அவற்றையொழிந்திருந்து தன்னவயவங்களதொப்பின்மையை நினைந்து அவற்றையே நோக்கினும், என்னை வெகுளாநிற்கும்,—அனைத்தும் நீர் நோக்கினீர் யார் உள்ளி என்று - என்னவயவமனைத்தும் நோக்கினீர் அவற்றதொப்புமையான் எம்மகளிரை நினைந்தென்று சொல்லி. எ - று.

யான் எல்லாவவயவங்களானும் ஒருத்தியோடொத்தல் கூடாமையின் ஒன்றுலொருவராகப் பலரையுநினைக்கவேண்டும்; அவரெல்லாரையும் யானறியச் சொல்லுமினென்னுங் கருத்தால், அனைத்துநோக்கினீர் யாருள்ளியென்றாள். வாளாவிருத்தலுங் குற்றமாயிற்றென்பதாம். (க0)

கஙௗ ம் அதி.—ஊடலுவகை.

அஃதாவது அப்பெற்றித்தாய ஊடலாற் றமக்குக் கூடலின்பஞ் சிறந்துழி அச்சிறப்பிற்கேதுவாய அவ்வூடலைத் தலைமகளுவத்தலும் தலைமகனுவத்தலுமாம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கஙஉக. இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு. க.

தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்டதோழி அங்ஙனநீ
புலக்கின்றதென்னையென்றற்கு அவள் சொல்லியது.

இ - ள். அவர்க்குத் தவறு இல்லையாயினும் - அவர்மாட்டுத்தவறில்லையாயினும்,— அவர் அளிக்குமாறு ஊடுதல் வல்லது - நமக்கவர் தலையளிசெய்கின்றவாறு அவரோ டூடுதலை விளைக்க வற்றாகின்றது. எ - று.

அவர்க்கென்பது வேற்றுமைமயக்கம். அளவிறந்தவின்பத்தராகலின் யானெய் தற்பாலதாய இத்தலையளி ஒழிந்தாருமெய்துவரெனக்கருதி அது பொருமையான் ஊட னிகழாநின்றதென்பதாம். (க)

கந௨உ. ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். உ.

புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃதிழந்து புலவியான்
வருந்துவ தென்னையென்றற்கு அவள் சொல்லியது.

இ - ள். ஊடலின் தோன்றும் சிறுதுனி - ஊடலேதுவாக நங்கட்டோன்றுகின்ற சிறிய துனிதன்னால்—நல்லளி வாடினும் பாடுபெறும் - காதலர்செய்யு நல்ல தலையளி வாடுமாயினும் பெருமையெய்தும். எ - று.

தவறின்றி நிகழ்கின்றவூடல் கடிதினீங்கலின் அத்துன்பமுநில்லாதென்பாள் சிறு துனியென்றும், ஆராமைபற்றி நிகழ்தலின் அதனான் நல்லளி வாடாதென்பாள் வாடி னுமென்றும், பின்னே பேரின்பம்பயக்குமென்பாள் பாடுபெறுமென்றுங்கூறினாள். அது வருத்தமெனப்படாதென்பதாம். (உ)

கந௨ந. புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. ந.

இதுவுமது.

இ - ள். நிலத்தொடு நீர் இயைந்தன்னாரகத்துப் புலத்தலின் - நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர்மாட்டுப் புலத்தல்போல—புத்தேள் நாடு உண்டோ - நமக்கின்பந்தருவதொரு புத்தேளுலகமுண்டோ, இல்லை. எ - று.

நீர் தானின்ற நிலத்தியல்பிற்றாமாறுபோலக் காதலருந் தாங்கூடிய மகளிரியல் பினராகலான் அதுபற்றி அவரோடு புலவி நிகழுமென்பாள் நிலத்தொடு நீரியைந்தன் னாரகத்தென்றும், அவர் நமக்கும் அன்னராகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயவாநின்றதென்பாள் புலத்தலிற் புத்தேணாடுண்டோவென்றுங் கூறினாள். உவமம் பயன்பற்றி வந்தது. (ந)

கந௨ச. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை. ச.

அப்புலவி இனி யாதானீங்குமென்றற்குச் சொல்லியது.

இ - ள். புல்லி விடாப் புலவியுள் தோன்றும் - காதலரைப் புல்லிக்கொண்டு பின் விடாமைக் கேதுவாகிய அப்புலவிக்கண்ணே யுளதாம்—என் உள்ளம் உடைக் கும் படை - அதன்மேற்சென்ற என்னுள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம். எ - று.

புலவியுளென்னுமேழாவது வினைநிகழ்ச்சிக்கண் வந்தது. என்னுள்ளமுடைக் கும்படைக்கலமென்றது வணக்கத்தையும் பணிமொழியையும். படைக்கலமென்றாள், அவற்றான் அப்புலவியுள்ளமழிதலின். புலவிநீங்குந்திறங் கூறியவாறு. (ச)

கஉ௨ரு. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளகறலி னாங்கொன் றுடைத்து. ரு.

தலைமகளையூடலீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகைய
னாய்த் தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். தவறு இலராயினும் தாம் வீழ்வார் மென்றோள் அகறலின் - ஆடவர் தங்கட்டவறிலராயினும் உடையார்போலவூடப்பட்டுத் தாம் விரும்புமகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெறாதவெல்லைக்கண்—ஆங்கு ஒன்று உடைத்து-அவர்க்கு அப்பெற்றியதோரின்பம் பயத்தலுடைத்து. எ - று.

உடையராயக்கால் இறந்தவின்பத்தோடு வருமின்பமுமெய்துவராகலின் அது மிகநன்று. மற்றையிலராயக்காலும் வருமின்பத்தையிகழ்ந்ததில்லையென்னுங் கருத்தால், தவறிலராயினு மாங்கொன்றுடைத்தென்றான். ஊடலினாயவின்பம் அளவிறத்தலிற் கூறற்கரிதென்பான், அப்பெற்றியதொன்றென்றான். தவறின்றியூடியதூஉம் எனக்கின்பமாயிற்றென்பதாம். (ரு)

கஉ௨சு. உணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது. சு.

இதுவுமது.

இ - ள். உணலினும் உண்டது அறல் இனிது - உயிர்க்கு மேலுண்பதனினும் முன்னுண்டதறுதல் இன்பந்தரும்;—காமம் புணர்தலின் ஊடல் இனிது - அதுபோலக் காமத்திற்கு மேற்புணர்தலினும் முன்னைத்தவறுபற்றி யூடுதல் இன்பந்தரும். எ - று.

காமத்திற்கென்புழிச் சாரியையும் நான்கனுருபும் விகாரத்தாற்றொக்கன. பசித்துண்ணும்வழி மிகவுண்ணலுமாய் இன்சுவைத்துமாம் அதுபோல் அகன்றுகூடும்வழி ஆராதுமாய்ப் பேரின்பத்ததுமாமெனத் தன்னனுபவம்பற்றிக் கூறியவாறு. (சு)

கஉ௨எ. ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும். எ.

இதுவுமது.

இ - ள். ஊடலின் தோற்றவர் வென்றார் - காமநுகர்தற்குரிய இருவருள் ஊடலின்கட்டோற்றவர் வென்றாராவர்;—அது கூடலிற் காணப்படும் - அஃதப்பொழுதறியப்படாதாயினும் பின்னைப்புணர்ச்சியின்கண் அவராலறியப்படும். எ - று.

தோற்றவர் எதிர்தலாற்றாது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக்கட் பேரின்பமெய்தலின் வென்றாராயினர். மன்னும் உம்மும் அசைநிலை. யானதுபொழுது சாய்தலின் இதுபொழுது பேரின்பம்பெற்றேனென்பதாம். (எ)

கஉ௨அ. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு. அ.

இதுவுமது.

இ - ள். நுதல் வெயர்ப்பக் கூடலில் தோன்றிய உப்பு - இதுபொழுது இவணுதல் வெயர்க்கும்வகை கலவியின்கணுளதாய இனிமையை—ஊடிப் பெறுகுவங்கொல்லோ - இன்னுமொருகால் இவளூடி யாம்பெறவல்லேமோ! எ - று.

கலவியது விசேடம்பற்றி நுதல்வெயர்ப்பவென்றான். இனிமை கண்டுகேட்டுண் டுயிர்த்துற்றறிதலானுயவின்பம். இனி அப்பேறு கூடாதெனப் பெற்றதன்சிறப்புக் கூறியவாறு. (அ)

கஉ௩௯. ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா. ௯.

இதுவுமது.

இ - ள். ஒளியிழை ஊடுகமன் - ஒளியிழையினையுடையாள் இன்னுமெம்மோடூடு வாளாக;—யாம் இரப்ப இரா நீடுகமன் - அங்ஙனம் அவளூடிநிற்றற்கும் அதனையு ணர்த்துதற்பொருட்டு யாமிரந்து நிற்றற்கும் காலம்பெறும்வகை இவ்விரவு விடியாது நீட்டித்தல்வேண்டுக. எ - று.

ஊடுக நீடுகவென்பன வேண்டிக்கோடற்பொருள. மன்னிரண்டும் ஆக்கத்தின் கண் வந்தன. ஓகாரங்கள் அசைநிலை. கூடலின் ஊடலேயமையுமென்பதாம். (௯)

கஉ௩0. ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். க0.

இதுவுமது.

இ - ள். காமத்திற்கு இன்பம் ஊடுதல் - காமநுகர்ச்சிக்கின்பமாவது அதனை நுகர்தற்குரியராவார் ஆராமைபற்றித் தம்முளூடுதல்;—அதற்கு இன்பம் கூடி முயங் கப் பெறின் - அவ்வூடுதற்கின்பமாவது, அதனையளவறிந்து நீங்கித் தம்முட்கூடி முயங்குதல் கூடுமாயின், அம்முயக்கம். எ - று.

கூடுதல் ஒத்தவளவினராதல். முதிர்ந்ததுனியாயவழித் துன்பம் பயத்தலானும், முதிராத புலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும், இரண்டற்குமிடையாகிய வளவறிந்து நீங்குதலரிதென்பதுபற்றிக் கூடிமுயங்கப்பெறினென்றான். அவ்விரண் டின்பமும் யான் பெற்றேனென்பதாம். (க0)

ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு ஆற்றாமை விதுப்புப் புலவி யென நால்வகைத்தாக்கிக் கூறினார். அவற்றுட்செலவு பிரிவாற்றாமையுள்ளும், ஆற் றாமை படர்மெலிந்திரங்கன் முதல் நிறையழிதலீறாயவற்றுள்ளும், விதுப்பு அவர் வயின்விதும்பன்முதற் புணர்ச்சிவிதும்பலீறாயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடுபுலத் தன்முதல் ஊடலுவகையீறாயவற்றுள்ளுங் கண்டுகொள்க. அஃதேல் வடநூலார் இவற்றுடனே சாபத்தினானும் நீக்கத்தினையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத்தென்றாரா லெனின், அஃது, அறம்பொருளின்பமென்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவன் மையானும், முனிவராணையான் ஒருகாலத்தோர் குற்றத்துளதாவதல்லது உலகியல் பாய் வாராமையானும், ஈண்டொழிக்கப்பட்டதென்க.

கற்பியல் முற்றிற்று.

காமத்துப்பால் முற்றிற்று.

திருவள்ளுவர் பரிமேலழகருரை முற்றுப்பெற்றது.

உரைச்சிறப்புப்பாயிரம்.

திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனு
மன்னு முயர்நாமன் வந்து.

பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்
றெரித்த வுரையாமோ தெளி.

உ

திருக்குறளின்
சிறப்புப்பாயிரமாகிய
திருவள்ளுவமாலை.

அ ச ரீ ரி.

க. திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பல்கை யொக்க—விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

இ - ள். திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோடு - அருட்செல்வத்தையும் அதற்குத்தக்க தெய்வத்தன்மையையுமுடைய திருவள்ளுவரோடு—உருத்தகு நற்பல்கை உருத்திரசன்மர் ஒக்க இருக்க என உரைத்து - அவரிருத்தற்குத் தனது உருவத்தினாலே தக்க நல்ல சங்கப்பலகையிடத்து உருத்திரசன்மர் ஒருவரே ஒப்பவேறியிருக்க வென்று கூறி,—வானில் ஒருக்க ஓர்சொல் ஓவென்றது - ஆகாசத்திலிருந்து அவ்விடத்துள்ள புலவர் கருத்தையெல்லாம் ஒற்றுமைசெய்யும்படி ஒருவாக்கியம் ஓவென்று இரைந்தெழுந்தது. எ - று.

“அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்” என்பவாகலின், திருவென்றதற்கு அப்பொருளுரைக்கப்பட்டது. தெய்வத்தன்மை தெய்வத்தினவதாரமாய் விளங்குகை. தெய்வத்தன்மையில்லார்க்கு அருளுளதாயினும் அதனாலே பெரும்பயன் விளையாமையின், தகுதி சொல்லப்பட்டது. திருவள்ளுவரென்னும் பெயருள், திருவென்பது உயர்வையும், வள்ளுவரென்பது வண்மையையுடைய ரென்பதையும், விளக்கி நின்றனவாகலின், அது வேதத்தில் இலைமறைகாய்கள்போற் பலவிடங்களினும் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களையெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள்செய்தவரென்னுங் காரணம்பற்றி வந்த பெயராயிற்று. வள் முதனிலை, அர் இறுதிநிலை, உ சாரியை. அம்முதனிலைக்குப் பொருள் ஈகை. உருத்திரசன்மர் உருத்திரனால் அடைந்த சன்மத்தையுடையவரென விரியும். அவர் முருகக்கடவுளது திருவவதாரமாய் வணிகர்மரபிற்றோன்றிய மூங்கைப்பிள்ளையார். அசரீரி அருவமாய் எங்குநிறைந்துள்ள முதற்றெய்வம். அரங்கேற்றத் தொடங்கிய காலத்துத் தெய்வப் புலவரோடு ஒப்பவிருந்து கேட்டற்குத் தகுதியுடையோர் யாரென யாவரும் எண்ணமுற்று நின்றவழி இவ்வசரீரிவாக்கியம் பிறந்தது. என்றதெனப் படர்க்கைவினையாகக்கூறலின், ஆண்டு நின்று கேட்ட புலவர்களுள் ஒருவர் அதனை இங்ஙனம் பாடலாகச் செய்தனரென்றறிக. (க)

நா ம க ள்.

உ. நாடா முதனான் மறைநான் முகனாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

இ - ள். கூடாரை எள்ளிய வென்றி இலங்கு இலை வேல் மாற - பகைவரைப் புறங்கொடுக்கச்செய்து இகழ்ந்த வெற்றியை உண்டாக்கி விளங்காநின்ற இலைபோலும் வேற்படையையுடைய பாண்டியராசனே,—நாடா - உலகத்தார் விதிவிலக்குக்களை அறிந்து உய்யும்வழியை நாடி,—முதல் நான்முகன் நாவில் நான்மறை பாடா - படைப்புக்காலத்திலே பிரமனது நாவிலிருந்து இருக்குமுதலாகிய நான்குவேதங்களையும் பாடி,—இடைப் பாரதம் பகர்ந்தேன் - நடுவானகாலத்திலே பாரதமாகிய வேதத்தைக் கூறினேன்;—பின் என்வாக்கு வள்ளுவன் வாயது - அதற்குப் பிற்பட்ட இக்காலத்திலே என்வாக்குத் திருக்குறளாகிய வேதத்தைச்சொல்லி வள்ளுவன் வாயின்கண்ணதாயிற்று. எ - று.

தன்கணவனாகலின் நான்முகனாவிலிருந்தென்றும், அவனவதாரமாகலின், வள்ளுவன்வாயதென் வாக்கென்றும், கூறினாள். பாரதம் வியாசரைக்கொண்டு சொல்லப்பட்டது. இதனால் நான்மறை பூர்வவேதமும், பாரதம் மத்தியவேதமும், திருக்குறள் உத்தரவேதமும், என்றதாயிற்று. வேதம் மூவகைத்தென்பதூஉம், இவற்றது தோற்றமுறையால் இது வாக்கியப்பிரமாணத்திற் சிறப்புடைத்தென்பதூஉம், சொல்லியபடி. (௨)

இறையனார்.

௩. என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

இ - ள். மன் புலவன் வள்ளுவன் வாய்ச்சொல் - புலவர்க்கரசனாகிய வள்ளுவன் வாயிற் பிறந்த திருக்குறளானது,—என்றும் யாணர் புலராது நாட்செல்லுகினும் நின்று அலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மையதாய் - எக்காலத்துந் தன்னழகுகெடாது நெடுங்காலங் கழியினும் நிலைபெற்று மலர்ந்து தேனைச்சொரிகின்ற குணமுடையதாய் விளங்குமாதலால்,—குன்றாத செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத்திருமலர்போன்ம் - குறைவுபடாத செய்ய தளிர்களையுடைய கற்பகத்தினது தெய்வத்தன்மைபொருந்திய உயர்வாகிய மலர்போலும். எ - று.

திருக்குறளுக்கு அழகு சொன்முடிபு பொருண்முடிபின் குணங்களும், அலர்தல் எங்கும் பரவுதலும், தேன் பிலிற்றல் இருமையின்பங்களும் விளைத்தலுமாம். சொல் ஆகுபெயர். இறையனார் கடவுளாகலின், இனி இதிற் சிறப்பதொன்றுளதாவதின்றென்னுந் துணிவுதோன்ற என்றுமென்றும், பின்னும் அதனை வலியுறுத்தற்கு நாட்செல்லுகினுநின்றென்றும், வாழ்த்துப் பொருள்பட இவ்வாறு கூறினார். இஃது அழியாது நின்றுபெருகிப் பயன்படுமாறு சொல்லியபடி. (௩)

உக்கிரப்பெருவழுதியார்.

௪. நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

இ - ள். நான்முகத்தோன் தான் மறைந்து வள்ளுவனாய் நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளாத் தந்து உரைத்த நூன்முறையை - நான்முகன் தான்

தன்னுரு மறைந்து திருவள்ளுவனுயவதரித்து நான்குவேதங்களினுண்மைப்பொருளை அறம் பொருள் இன்பமென்னும் முப்பாற்பொருளாகத் தமிழிற்றந்து கூறிய திருக்குற ளெழுதிய திருமுறையை—சென்னி வந்திக்க - என்றலை வணங்குக,—வாய் வாழ்த்துக - வாய் துதிக்க,—நன்னெஞ்சம் சிந்திக்க - நல்லமனம் தியானிக்க,—செவி கேட்க - காதுகேட்க. எ - று.

முப்பொருள் ஆகுபெயர். இவ்வேதப்பொருள் ஆதியிலே வேதஞ்சொல்லியோனுலேயே சொல்லப்பட்டமையால் உலகத்துச் சமயாசாரியர்களாலும் பிறராலும் ஒன்றற்கொன்று மாறுகக் கொள்ளப்பட்ட பொருள்கள்போல்வதன்றென்பது தோன்ற, மெய்ப்பொருளென்முர். கலையுணர்புலமையிற்றலைமையோனுகி விதிமுறைவழாது முதுநிலம் புரக்கும் பெருந்தகை யுக்கிரப் பெருவழுதியென்னுந் தன்னிக ரில்லா மன்னவர் பெருமான் தான் மேற்கொண்ட சிறப்பைப் பலரும் அறிந்து மேற்கொள்ள, இவ்வாறு வழிபாடுகூறினுன்; "மன்ன னெப்படி மன்னுயி ரப்படி" ஆகலின். இப்புத்தகத்தை முன்னே பூசித்து மெய் மொழி மனங்களால் வணக்கஞ்செய்து பின் கேட்க வேண்டுமென்று சொல்லியபடி. (ச)

க பி ல ர்.

ரு. தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனுர்
வெள்ளைக் குறட்பா விரி.

இ - ள். மனை அளகு வள்ளைக்கு உறங்கும் வளநாட - மனையில் வளர்க்கப்படுகின்ற பறவைப்பேடுகள் உலக்கைப்பாட்டால் கண்ணுறங்குகின்ற வளம்பொருந்திய நாட்டையுடைய அரசனே;—வள்ளுவனுர் வெள்ளைக்குறட்பா விரி - திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட குறள்வெண்பா மிகப்பெரிய பொருளைத் தன்னுட்கொண்டு காட்டுதல்—தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட பனையளவு காட்டும் படித்து - தினையரிசியினளவுக்கும் போதாத சிறிய புல்லினது நுனியின்கணுள்ள பனிநீர் உயர்ந்த பனையினளவான அதன்சாயையைத் தன்னுட்கொண்டு காட்டுங் குணம் போலுங் குணத்தையுடைத்து. எ - று.

பனை ஆகுபெயர். ஆல் அசை. பறவை கிளி முதலியவை. உலக்கைப்பாட்டு மகளிர் பரிமளப்பொடி இடிக்கின்றபோது பாடும்பாட்டு. விரி விரித்தல். எப்படி மிகச்சிறிய பனித்துளியிலே மிகப் பெரிய பனைமரத்தின்சாயை அடங்கி விளங்குகின்றதோ அப்படியே மிகச்சிறிய இக்குறள்வெண்பாவில் மிகப்பெரிய பொருள் அடங்கி விளங்குகின்றதென்பதாம். இது சுருங்கியிருந்தும் விரிவான பொருளை விளக்குமாறு சொல்லியபடி. இது முதலியன சங்கத்துப்புலவராலே பாடப்பட்டன. (ரு)

ப ர ண ர்.

சு. மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

இ - ள். மாலும் குறளாய் வளர்ந்து இரண்டு மாண் அடியால் ஞாலம் முழுதும் நயந்து அளந்தான் - திருமாலும் குறளாய்ப் பிறந்து வளர்ந்து இரண்டு பெரிய அடி

களால் உலகமனைத்தையும் விரும்பி அளந்தான்;—வாலறிவின் வள்ளுவரும் தம் குறள் வெண்பா அடியால் வையத்தார் உள்ளுவ எல்லாம் ஓர்ந்து அளந்தார் - மெய்யறிவினை யுடைய திருவள்ளுவரும் தம்மினின்றுந்தோன்றி அந்நிலைநிற்கின்ற வெண்பாக்குற ளின் இரண்டுசிறிய அடிகளால் அவ்வுலகமனைத்தினுமுள்ளோரால் நினைக்கப்பட்ட வற்றையெல்லாம் ஆராய்ந்து அளந்தார். எ - று.

உம்மையிரண்டும், முறையே தேவரிற் பெரியோனாகியவென்றும், மனிதரிற்சிறிய ராய்க் காணப்பட்டவென்றும், பொருள்பட நின்றன. உவமானத்திலே வளர்தலும் பெருமையும் சொல்லுதலால், உவமேயத்திலே அவற்றுக்கு மாறாகிய நிலைநிற்றலும் சிறுமையும் வருவிக்கப்பட்டன. மாலுக்குத்தானே குறளாதலும் பின்பு அந்நிலை நில் லாது வளர்தலும் பேரடிகளால் அளவுபட்ட உலகத்தையளத்தலும், திருவள்ளுவருக் குத் தம்மினின்றுங் குறளை உண்டாக்குதலும், அது தன்னிலைநிற்றலும் அதன் சிற்றடி களால் அளவுபடாத நினைப்பின்விடயங்களை அளத்தலும், சொல்லப்படுதலாலும், வேற்றுமையறிக. நினைக்கப்பட்டனவெல்லாம் இதனகத்து அளவுசெய்யப்பட்டமை சொல்லியபடி. (சு)

நக்கீரர்.

எ. தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானு வறமுதலா வந்நான்கு—மேனோருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று.

இ - ள். தானே முழுது உணர்ந்து - தானே வேதப்பொருளனைத்தையும் அறிந்து,—தண்டமிழின் வெண்குறளால் ஆனு அறம் முதலா அந்நான்கும் ஏனோருக்கு ஊழின் உரைத்தாற்கும் - தண்ணிய தமிழின் கண் குறள்வெண்பாக்களால் விட்டு நீங்குதல் கூடாத அறமுதலாகிய அந்நான்குபொருள்களையும் அவற்றையறியாதவர்க ளுக்கு அவர் எளிதினறிய முறையாற் சொல்லியருளிய திருவள்ளுவருக்கும்—ஒண் ணீர் முகிலுக்கும் - ஒள்ளிய நீரைத் தந்த மேகத்துக்கும்—உலகு மற்று என் ஆற்றும் - இவ்வுலகம் எதிர்நன்றி யாதுசெய்யும்! செயக்கிடந்தது ஒன்றும் இல்லை;—வாழி - அவரும் அதுவும் வாழ்க. எ - று.

ஆனுமை நீங்காமை. தானே முழுதுணர்ந்தெனவே, ஆசாரியராயிருந்து பிறரறி விக்க அறிந்திலரென்றதாயிற்று. முழுதுமென்னுமும்மை தொக்கது. ஒண்மை இனி மைமேனின்றது. முறை நூலின்முப்பொருள்களின் கிடக்கையொழுங்கு. நாயனார் கொடைச்சிறப்புச் சொல்லியபடி. (எ)

மாமூலனார்.

அ. அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
றிறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

இ - ள். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந்நான்கின் திறம் தெரிந்து செப்பிய தேவை - அறமுதலாகச் சொல்லப்பட்ட அவ்வேதப்பொருள்களாகிய நான் கனது கூறுபாட்டையும் தெரிந்து உலகத்தார்க்குச் சொல்லிய தேவனை—மறந்தேயும் வள்ளுவன் என்பான் பேதை - மறந்தாயினும் ஒருமனிதனாக உட்கொண்டு வள்ளுவ

னென்று சொல்லுதற்கு ஒருவனுளனாயின், அவன் அறிவில்லாதவனாவன்;—அவன் வாய்ச் சொல் அறிவு உடையார் கொள்ளார் - அவனது வாயிற்பிறந்த அச்சொல்லை அறிவுடையார் கொள்ளார். எ - று.

அறமுதலியவற்றின் கூறுபாடு அவற்றினது தொகை வகை விரிகள். மறந்தேயு மென்றதனால், நினைப்புடன் சொல்லுவோன் பேதையிற் பேதையாமென்பதாயிற்று. முன்னும் பின்னுமுள்ள பாட்டுக்களில் இப்பெயர் தெய்வத்தன்மையைக் குறிப்பிக்கும் படி நன்குமதித்து உயர்த்திச் சொல்லப்படுதலால், ஒருமனிதனாக வுட்கொண்டென்பது வருவிக்கப்பட்டது; அன்றி ஒலிக்குறிப்பினாலே சாதியிழிவு தோன்ற வள்ளுவனென்பானெனினுமமையும். இக்குறிப்பொலியை வடநூலார் காகுசுரமென்பர். தெய்வப்புலவரை அவமதிப்பினிழிவு சொல்லியபடி. (௮)

கல்லாடர்.

௯. ஒன்றேபொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

இ - ள். ஆறுசமயத்தார் ஒன்றே பொருள் எனின் வேறு என்ப - அறுவகைமதத்தோரும் ஒருமதத்தார் தமது நூலிலே உலகமும் உயிரும் கடவுளுமாகிய பொருள்கள் ஒன்றேயென்று நாட்டுவராயின், மற்றொருமதத்தார் தமது நூலிலே அதனை மறுத்து அவை வேறுமென்று நாட்டுவர்;—வேறு எனின் அன்று என்ப - அப்படி வேறென்று நாட்டின், பின்னொருமதத்தார் அதனை அன்றென்று மறுப்பர்; ஆதலால், சமயநூல்களெல்லாம் இவ்வாறு மறுக்கப்படுகின்றன.—வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி நன்று என எப்பாலவரும் இயைப - திருவள்ளுவராலே முப்பாலாகச் சொல்லப்பட்ட நூலை நன்றென்று கொள்ளுதற்கு எவ்வகைப்பட்ட பகுதியோரும் உடன்படுவார். எ - று.

மொழி ஆகுபெயர். ஆறுமதமாவன வியாசமதம், சைமினிமதம், பதஞ்சலிமதம், கபிலமதம், கணாதமதம், அக்ஷபாதமதம்; அன்றிச் சைவ வைணவமுதலியவற்றைக் கூறினுமாம். எச்சமயத்தாரு மென்னாது எப்பாலவருமென்றதனால், வேதத்துக்கு உட்பட்ட சமயத்தாரேயன்றிப் புறப்பட்ட சைனம், பௌத்தம் முதலிய மதத்தாரும், பலவகைப்பட்ட சாதியாரும், தேசத்தாரும், காலத்தாரும், பிறரும், தழுவப்படுதலறிக. இதுவே பொதுவேதமென்றபடி. (௯)

சீத்தலைச்சாத்தனார்.

௧௦. மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

இ - ள். வள்ளுவர் பா முறை தேர் முப்பால் - திருவள்ளுவரது பாக்களின் முன்பின் முறைதெரிதற்கிடனாகிய திருக்குறளானது,—மும்மலையும் - கொல்லிமலை நேரிமலை பொதியமலை எனப்படுகின்ற மூன்றுமலைகளையும்—முந்நாடும் - குடநாடு புனனாடு தென்னாடு எனப்படுகின்ற மூன்றுநாடுகளையும்—முந்நதியும் - பொருனை நதி காவிரிநதி வைகைநதி எனப்படுகின்ற மூன்றுநதிகளையும்—முப் பதியும் - கரு

ருக

லூர் உறையூர் மதுரை எனப்படுகின்ற மூன்று பதிகளையும்—மும்முரசும் - மங்கல
முரசு வெற்றிமுரசு கொடைமுரசு எனப்படுகின்ற மூன்றுமுரசுகளையும்—முத்தமி
ழும் - இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படுகின்ற மூன்று தமிழ்களையும்—
முக்கொடியும் - விற்கொடி புலிக்கொடி மீனக்கொடி எனப்படுகின்ற மூன்று கொடி
களையும்—மும்மாவும் - கனவட்டம் பாடலம் கோரம் எனப்படுகின்ற மூன்று குதி
ரைகளையும்—தாம் உடைய மன்னர் தடமுடிமேல் தார் அன்றே - தாம்முறையேயு
டைய சேரசோழபாண்டியர் எனப்படுகின்ற மூவரசருடைய பெரிய முடிகளின்மே
லுங் கொள்ளப்பட்ட மாலையன்றே. எ - று.

அன்றேவென்றது பலரறிதேற்றம். முப்பால் ஆகுபெயர். மும்முரசும் முத்தமி
ழும் அம்மூவரசர்க்கும் பொதுமையவாயினும், இம்முறையுரிமை அவர் குடிமரபிற்கு
இயைந்தனபோலும். அரசர் மூவரும் மேற்கொண்ட சிறப்புச்சொல்லியபடி. (௧௦)

மருத்துவன்றாமோதரனார்.

௧௧. சிந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

இ - ள். காந்தி மலைக்குத்தும் மால் யானை - தன்பகையென வெகுண்டு மலையைக்
குத்துகின்ற பெரிய களிறுபோலுள்ள அரசனே,—சிந்தி நீர்க்கண்டம் தெறி சுக்குத்
தேன் அளாய் மோந்தபின் யார்க்கும் தலைக்குத்து இல் - சிந்தி நீர்ச் சருக்கரையையும்
சிதைக்கப்பட்ட சுக்கையும் தேனோடு கலந்து மோந்தபின் அதனால் தலைக்குத்துடை
யோர் யாவர்க்கும் தலைக்குத்து இல்லையாகும்—வள்ளுவர் முப்பாலால் சாத்தற்குத்
தலைக்குத்துத் தீர்வு - திருவள்ளுவர் அருளிச்செய்த முப்பாலினாலே சீத்தலைச்சாத்த
னார்க்குத் தலைக்குத்து இல்லையாயிற்று. எ - று.

யானைபோல்பவனை யானையெனலால், ஆகுபெயர். முன்கேட்கப்பட்ட நூல்களி
லெல்லாம் பலசொற்குற்றங்களும், பொருட்குற்றங்களும், கண்டு பொறாது தலையில்
அறைந்துகொண்டுவந்தமையால், புண்பட்டுக் குத்தல் உண்டாயிருந்தது; இதன்கண் ஓர்
குற்றமுங்காணப்பெறாமையால் அது நீங்கிற்றென்க. எப்படி அம்மூன்று சரக்கும்
அதற்கு மருந்தாமோ அப்படியே இதற்கு இம்மூன்றுபாலும் மருந்தாயினவென்ப
தாம். தீர்வென்னுந்தொழிற்பெயர் முற்றுப்பொருளில் வந்தது. இதன் குற்றமற்று
விளங்குகை சொல்லியபடி.

நாகன்றேவனார்.

௧௨. தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதா
மப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனார்
முப்பான் மொழிமூழ்கு வார்.

இ - ள். தாள் ஆர் மலர்ப்பொய்கை குடைவார் தண்ணீரை வேளாதொழிதல்
வியப்பு அன்று - நாளத்தோடு பொருந்திய தாமரைமலர்களையுடைய ஒருகுளத்து
நீரின்கண்ணே மூழ்குவோர் வேறுதண்ணீரை விரும்பாதொழிதல் வியப்பைச் செய்வ
தன்று;—வள்ளுவனார் முப்பால் மொழி மூழ்குவார் தாம் வாளா அப்பால் ஒருபாவை
ஆய்பவோ - திருவள்ளுவரது முப்பால்களையுடைய நூலின்கண்ணே மூழ்குவார் தாம்

வீணுக அப்பால் ஒருநூலை விரும்புவரோ! விரும்பார்; ஆகலின், இதுவே வியப்பைச் செய்வதாம். எ - று.

தாளார்மலரெனலால், தாமரைமலரெனப்பட்டது. வியப்பைச் செய்வதை வியப்பென்றார். மூழ்குதல் இங்கே கருத்துமுழுதும் அழுந்திநிற்றன்மேனின்றது. மொழி ஆகுபெயர். ஓகாரம் எதிர்மறை. விரும்புதலாகிய காரணத்தை ஆய்பவோ வெனக் காரியமாக உபசரித்தார். அது வியப்பன்றென்றமையால், இது வியப்பென்றதாயிற்று. உயர்வானபொருள் பெற்றோர்க்கு அதினிழிவான்பொருளையும் பெற விரும்புதல் இயல்பாயிருக்க, குளிர்ச்சி இன்சுவை நறுமணம் முதலிய குணங்களாலே சிறந்த ஒரு தாமரைக்குளத்து நீரைப் பெற்றோர்க்கு அதனுற்றானே அமைதி பெற்று வேறுதண்ணீரைப் பெற விரும்பாமை வியப்பைச் செய்வதாயிற்று; ஆயினும் இதுகாறும் ஒருநூலைக் கற்றோர்க்கு வேறுநூலைக் கற்க விரும்புதலன்றி விரும்பாமையில்லாதிருக்க, இப்போது உளதாகலின், இதுவே பெருவியப்பைச் செய்வதென்றதாயிற்று. இதனால் இந்நூலகத்து எந்நூற்பொருளும் அடங்கியிருக்கின்றமை குறிப்பிக்கப்பட்டது. பலநூல்களையுங் கற்க விரும்புவோர்க்கு இதுவொன்றே அமைதல் சொல்லியபடி. (கஉ)

அரிசில்கிழார்.

கங. பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

இ - ள். பரந்த பொருளெல்லாம் பார் அறிய வேறு தெரிந்து - வேதத்திலே ஒன்றோடொன்று மயங்கிநின்ற நால்வகைப் பொருள்களையும் இப்பூமியிலுள்ளோர் அறிதற்பொருட்டு வேறாகப் பிரித்து—திறந்தொறுஞ் சேரச் சுருங்கிய சொல்லால் பொருள்விளங்க விரித்துச் சொல்லுதல் வல்லார் - அது அது தனது தனது வகையோடு சேரும்படி சுருங்கிய சொல்லால் பொருள் விளங்க விரியும்படி வைத்துச் சொல்லுதல் வல்லார்—வள்ளுவரல்லால் ஆர் - வள்ளுவரல்லது ஒருவருமில்லை. எ-று.

பார் ஆகுபெயர். திறம் அறமுதலியவற்றின் கூறுபாடு. சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தன் முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப்பட்டனவோ அப்படிப் பிறரால் அமைக்கப்படுதல் கூடாமை காட்டியதாயிற்று. நூலுக்கும் நாயனார்க்கும் தகுதி சொல்லியபடி. (கங)

பொன்முடியார்.

கச. கானின்ற தொங்கலாய் காசிபனுர் தந்ததுமுன்
கூநின் றளந்த குறளென்ப—நான்முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனுர்
தாநின் றளந்த குறள்.

இ - ள். கான் நின்ற தொங்கலாய் - மணந்தங்கப்பெற்ற மாலையையுடைய பாண்டியராசனே,—முன் காசிபனுர் தந்தது கூநின்று அளந்த குறள் என்ப - முன் காசிபராலே தரப்பட்ட குறளை மண்ணின்கண்ணே நின்று உலகத்தை அளந்த குறளென்று சொல்லுவர்;—தாம் நின்று வள்ளுவனுர் அளந்த குறள் நான்முறையான் வான் நின்று மண் நின்று அளந்தது - தாம் இங்கே எழுந்தருளித் திருவள்ளுவராலே தரப்

பட்ட குறள் நூலின் முறையோடு கூடி விண்ணின்கண்ணே நின்றும் மண்ணின் கண்ணே நின்றும் உலகத்தை அளந்தது. எ - று.

கு கூ எனநீண்டது. ஆனுருபு ஒடுவுருபின் பொருளில் வந்தது. அக்குறள் வஞ் சித்துப் பெற்றளத்தலால் நூன்முறையோடு கூடாததாயிற்று. இக்குறளுக்கு ஒலிவடி வும் வரிவடிவுமென இரண்டுவடிவுண்மையால், ஒலிவடிவுக்கிடம் வானுகலின் வானின்றென்றும், வரிவடிவுக்கிடம் மண்ணுகலின் மண்ணின்றென்றும், கூறினர். இக்குறளுக்கு நூன்முறையோடு கூடலும் வானிற்றலும் மிகுத்துச் சொல்லி வேற் றுமை செய்யப்பட்டது. முன் மாலுமென்பாட்டிலே நாயனூர்க்கும் மாலுக்கும், இப் பாட்டிலே திருக்குறளுக்கும் மாலவதாரக் குறளுக்கும், ஒப்புமை குறித்துச்சொல்ல லால் வேறுபாடாம். உலகத்துப் பொருளெல்லாம் இஃது அளத்தற் சிறப்புச் சொல்லியபடி. (கச)

கோதமனூர்.

கரு. ஆற்ற லழியுமென் றந்தணர்க ணான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா—ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனூர் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று.

இ - ள். அந்தணர்கள் நான்மறையை உரைத்துப் போற்றி ஆற்றல் அழியும் என்று ஏட்டின்புறத்து எழுதார் - அந்தணர்கள் நான்குவேதங்களையும் வாய்ப்பாட மாகக் காப்பாற்றி, ஏட்டின்கண் எழுதிவைத்தால் வலியில்லாரும் ஓதுவராகலின் அவற்றின் வலிமை குறையுமென்று ஏட்டின்கண் எழுதார்;—வள்ளுவனூர் முப்பாலை ஏட்டு எழுதி வல்லுநரும் வல்லாரும் சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று - திருவள் ளுவரது திருக்குறளை ஏட்டின்கணெழுதிவைத்து வலியுடையவரும் வலியில்லாரும் ஓதினூலும், வலிமை குறைதலில்லை. எ - று.

அவ்வேதத்துக்கு உதாத்தம் அநுதாத்தம் சுவரிதமென்னுஞ் சுரங்களின் வழுவா மல் ஓதல்வேண்டுமென்னும் விதியுளதாகலின், அதற்குத் தகுதியுடைய அந்தணரே அதிகாரிகளாயினூர்; இதற்கு அஃதில்லாமையால் யாவரும் அதிகாரிகளாவரென்ற றிக. சொல்லிடினுமென்றதனுல் பொருளுணர்ச்சிக்கு இதற்கும் வலிமைவேண்டு மென்பது பெறப்பட்டது. ஆற்றல் சொற்செறிவின்றிட்பம். இங்ஙனங்கூறவே, அவ் வேதம் சொல்லின்கண்ணே தலைமையுடைத்தென்பதூஉம், இவ்வேதம் பொருளின் கண்ணே தலைமையுடைத்தென்பதூஉம், பெறப்பட்டன. ஓதப்படுதலின் அவ்வேதத்தி னும் இது சிறப்புடைமை சொல்லியபடி. (கரு)

நத்தத்தனூர்.

கசு. ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

இ - ள். பாயிரத்தினேடு ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது அருங்குறளும் பகர்ந்த தற்பின் போய் ஒருத்தர் வாய்க் கேட்க நூல் உளவோ - பாயிரநான்கதிகாரங்க ளோடு சேர்ந்த தொகையாகிய அரிய ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது குறள்வெண்பாக் களையும் ஓதியுணர்ந்தபின்பு, போய் ஒருவரது வாயாலே கேட்டறிதற்கு நூலுளவோ! இல்லை:—மன்னு தமிழ்ப்புலவராய்க் கேட்க வீற்றிருக்கலாம் - நிலைபெற்ற தமிழிலே புலமை நிரம்பியோராகிப் பிறர் தம்மிடத்து வந்துகேட்க வீற்றிருக்கலாம். எ - று.

வீற்றிருத்தல் ஒரு சபைநடுவிலே உயர்வாகிய ஆதனத்தில் ஏறியிருத்தல். இவற்றுட் பலவகைப்பட்ட நூல்களின் கருத்துக்களெல்லாம் விளங்கிநிற்றலின், கேட்க நூலுளவோ வென்றார். புலவராயெனவே, புலமை நிரம்புதற்கு இவை ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறள்களும் போதுமென்பது பெறப்பட்டது. ஓதியோர்க்கு வரும் இம்மைப்பயன் சொல்லியபடி. (கசு)

முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.

கஎ. உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால—வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா வலரினு மில்.

இ - ள். வள்ளுவனார் முப்பாலின் மிக்க மொழி உண்டு எனப்பகர்வார் எப்பாவலரினும் இல் - திருவள்ளுவரது திருக்குறளின்மேற்பட்ட நூலொன்று உளதென்று சொல்லவல்லவர் எவ்வகைப்பட்ட புலவருள்ளும் இல்லை;—செயற்பால உள்ளுதல் உள்ளி உரைத்தல் உரைத்ததனைத் தெள்ளுதல் அன்றே - ஆதலால், நாம் இந்நூலைக் குறித்துச் செயக்கடவன நாம் இதன்பொருளைச் சிந்தித்துக்கொள்ளுதலும், சிந்தித்துப் பிறர்க்கு அதனைச் சொல்லுதலும், பிறராலே சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும் அன்றே! எ - று.

மொழி ஆகுபெயர். ஒப்பது வடமொழி வேதமிருத்தலின் மிக்கமொழியென்றும், தமிழின்மாத்திரமன்றி வடமொழி முதலியவற்றினுள்ள புலவரையுந் தழுவுதற்கு எப்பாவலரினுமென்றும், அறிவொப்புக்காண்டற்கு உரைத்ததனைத் தெள்ளுதலென்றும், கூறினார். உள்ளுதலெனவே கேட்டலும், தெளிதலெனவே அவ்வாறொழுகலும், அடங்கின. இது பயிற்சி செய்தொழுகுமாறு சொல்லியபடி. (கஎ)

ஆசிரியர் நல்லந்துவனார்.

கஅ. சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்—தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பா
ரெப்பா வலரினு மில்.

இ - ள். சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும் போற்றி உரைத்த பொருளெல்லாம் தோற்ற - அறிவுடையோரால் சொல்லப்பட்ட பலநூல்களாலும் தப்பாத அரிய வேதத்தினாலும் காப்பாற்றிவைத்திருந்து உலகத்தார்க்குச் சொல்லப்பட்ட விடயங்களெல்லாம் தன்னிடத்தே காட்டும்படி—முப்பால் மொழிந்த முதற்பாவலர் ஒப்பார் எப்பாவலரினும் இல் - திருக்குறளைச்சொல்லிய திருவள்ளுவரையொப்பவர் எவ்வகைப்பட்ட பாவலருள்ளும் இல்லை. எ - று.

தம்மாலே சொல்லப்பட்டவற்றில் வழுவுறுமையால் தப்பாவென்றும், பொருளுணர்தற்கேயன்றி ஓதுதற்கும் எளிதன்றாகலின் அருவென்றும், விசேடணஞ் செய்யப்பட்டது. எப்பாவலரினுமில் இதற்கு முன்னுரைக்கப்பட்டபடியேகொள்க. முதற்பாவலர் முதன்மையையுடைய பாவலர்; நால்வகைப்பாக்களில் வெண்பாக்களும் அவற்றுள்ளும் குறள்வெண்பாவும் தலைமைபெற்று நிற்றலின், அக்குறள்வெண்பாவால் நூல்செய்த வல்லமையுடையரென்றுமாம். புலமையிலே நாயனாருக்கு ஒப்பின்மை சொல்லியபடி. (கஅ)

கீரந்தையார்.

௧௯. தப்பா முதற்பாவாற் றமாண்ட பாடலினன்
முப்பாலி னாற்பான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

இ - ள். எப்பாலும் வை வைத்த கூர் வேல் வழுதி மனம்மகிழ - எவ்விடத்தி லும் கூர்மை வைத்த சிறப்புப்பொருந்திய வேலையுடைய பாண்டியராசன் மன மகிழ—தப்பா முதற்பாவால் தாம் மாண்ட பாடலினால் முப்பாலின் நாற்பால் மொழிந்தவர் - சொல்லப்பட்டபொருள் வழுவாமல் முதன்மையுடைய பாவாகிய குறள்வெண்பாக்களாலே தாம் மாட்சிபெற்ற பாடற்றொழிலினாலே மூன்றுபால்க ளிலே அறமுதலிய நான்கு பகுதிப்பொருளையும் திருவாய்மலர்ந்தவர்—தெய்வத் திரு வள்ளுவர் - தெய்வத்தன்மையையுடைய திருவள்ளுவநாயனார். எ - று.

கூர் சிறப்பு. நான்கனுள் மூன்றடங்குவதன்றி மூன்றனுள் நான்கடங்காமை யின், வியந்து கூறப்பட்டதாயிற்று. நூல்செய்த சிறப்பும், அதனால் அரசனை மகிழ் வித்தமையும், சொல்லியபடி. (௧௯)

சிறுமேதாவியார்.

௨௦. வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்றொன்றாழ்—கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

இ - ள். வள்ளுவர் சொன்ன வகை - திருவள்ளுவராலே சொல்லப்பட்ட திருக் குறளின் அதிகாரவகை,—பாயிரம் நான்கு - பாயிரம் நான்கதிகாரத்தையுடைத்து,— அறம் முப்பத்துமூன்று - அறம் முப்பத்துமூன்றதிகாரத்தையுடைத்து,—ஊழ் ஒன்று - ஊழ் ஓரதிகாரத்தையுடைத்து,—பொருள் எழுபது - பொருள் எழுபததிகாரத்தை யுடைத்து,—இன்பம் இருபதிற்றைந்து - காமம் இருபத்தைந்ததிகாரத்தையுடை த்து. எ - று.

அறத்துப்பாலுளடங்காது அதனை விட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின் வீடொன்று பாயிரமென்றும், இம்மை மறுமை வீடு மூன்றும் பயத்தற்சிறப்பிற்றாய மூன்றனுண் முதனிற்றலின் விளங்கறமென்றும், யாவர்க்கும் பொதுப்பட நாடித் தொகுக்கப்பட்ட அறத்தின் கூறுபாடு இவையேயாகலின் நாடிய முப்பத்துமூன்றென் றும், முன்னின்ற அறமும் பின்னின்ற இன்பமும் கைகூடுதற்குத் துணையாய் நிற்ற லின், கூடுபொருளென்றும், அப்பொருளின் பாகுபாடுகளெல்லாம் இவற்றினடங்குத லின் எள்ளிலெழுபதென்றும், கூறினார். எள்ளல் இகழ்தல். சில பழையநூல்களிலே சிலவற்றைச் சாதியாரும் சமயத்தாரும் மிகுத்தும் குறைத்தும் வேறுபடுத்தலால் அப் படிப்பட்ட வேறுபாடு இதற்கும் வரினும் வருமென்று ஆசங்கித்து, இதனதிகாரங் களுக்கு இங்ஙனந் தொகைசெய்தார். பின் இவ்வாறு தொகைசெய்யப்பட்டு வருவன வற்றிற்கும் இதுவே கருத்தாகக்கொள்க. முப்பால்களுக்கும் அதிகாரத்தொகை சொல்லியபடி. (௨௦)

நல்கூர்வேள்வியார்.

௨௧. உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப—விப்பக்க

மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.

இ - ள். உப்பக்கம் நோக்கி உபகேசி தோள் மணந்தான் உத்தரமா மதுரைக்கு அச்சு என்ப - அப்பக்கத்தைக்குறித்துச் சென்றேனாகிய உமாதேவியினது தோளை மணந்த கடவுளை வடமதுரைக்கு ஆதாரமென்றுசொல்லுவர்;—இப்பக்கம் மாதானு பங்கி மறு இல் புலச் செந்நாப்போதார் புனற்கூடற்கு அச்சு-இப்பக்கம் மாதானுபங்கி யெனப்படுகின்ற குற்றமற்ற புலமையாகிய தேனைச்சொரிகின்ற செவ்விய நாவாகிய மலரையுடையவர் நீர்வளத்தையுடைய தென்மதுரைக்கு ஆதாரமாவர். எ - று.

உப்பக்கம் இடைக்காடர் அரசன் தன்பாடலை அவமதித்தமைபற்றிப் பிணங்கிச் சென்றபக்கம். உப்பக்க நோக்கியென்றது வினையாலணையும்பெயர். கேசி திருமால்; இது அக்கடவுள் சகசிரநாமத்திற்கண்டது. கேசிக்குப் பின்னே பிறந்தவள் உபகேசி யென்றாயது, உபேந்திரனென்பதுபோல. மாதா அனுபங்கி மாதாவை நிகராகக் கொண்டு நடக்கின்ற ஒழுங்கினனெனப்படுதலின், அவள் பிள்ளைமேலேபோல் இவர் உலகத்தார்மேல் அருள்செய்தல் சொல்லப்பட்டதாயிற்று. நாப்போதென்றதற் கேற்பப் புலமையிலே தேன் ஆரோபிக்கப்பட்டது. அச்சுப்போற்றாங்குதலால், அச்சென்றார். நாயனாராலே திங்கட்குடையுடைச்சீர்சால்வழுதியுஞ் சங்கப்புலவருந் தழைத்தினிதோங்கிய மதுரைக்கு உண்டான சிறப்புச்சொல்லியபடி. * (உக)

தொடித்தலைவிழுத்தண்டினார்.

உஉ. அறநான் கறிபொரு ளேழொன் று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

இ - ள். அறத்திறம் நான்கு - பாயிரம், இல்லறம், துறவறம், ஊழென அறப்பாலினுட் பிரிவுகள் நான்கும்,—அறி பொருட்டிறம் ஏழ் - அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, ஒழிபென அறியப்பட்ட பொருட்பாலினுட் பிரிவுகள் ஏழும்— காமத்திறம் மூன்று எனப் பகுதிசெய்து - ஆண்பாற்கூற்று, பெண்பாற்கூற்று, அவ் விருபாற்கூற்றெனக் காமத்துப்பாலினுட் பிரிவுகண் மூன்றுமாகப் பகுதிசெய்து— பெறலரிய நாலும் மொழிந்த பெருநாவலரே - பெறுதற்கரிய அறம் பொருள் இன்பம் வீடு எனப்படுகிற நான்குபொருளையும் சொல்லிய பெருநாவலரே—ஒழிந்த பொருள் நன்கு உணர்வார் போலும் - அவற்று ளடங்காது ஒழிந்தபொருள் உளதாயின், அதனை நன்றாக அறியவல்லவர்போலும். எ - று.

திறமென்றது அறமுதலியவற்றோடுங் கூட்டப்பட்டது. நாவல்லரே யென்றமையால், பிறரால் அறியப்படுவ தன்றென்றதாயிற்று. முப்பாலியற்றோகையும், இவற்றி னடங்காதது ஒன்றில்லையென்பதும், சொல்லியபடி. (உஉ)

வெள்ளிவீதியார்.

உங. செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா

* உபகேசி நப்பின்னையென்றும், அவள் தோள் மணந்தான் கண்ணபிரான் என்றும், உத்தரமாமதுரை அவன் அவதரித்த வடமதுரை யென்றும், மாதாநுபங்கி செருக்கொழிதலுடையான் என்றும் பொருள்கொண்டு இச்செய்யுட்குப் பிறிதோருரை கூறுவாருமுளர். செந்தமிழ்ப் பத்திரிகை தொகுதி யொன்று பகுதி யிரண்டிற் காண்க.

வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

இ - ள். செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே - ஒருவராலே செய்யப்படாத மொழியாகிய வேதத்துக்கும் திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட தன்வழியி னொழுகுவோர்க்குப் பயன்விளைவிலே பொய்படாத மொழியாகிய திருக்குறளுக்கும் பொருளொன்றே;—ஆராயிற் செய்யா அதற்கு உரியர் அந்தணரே - ஆராயுங்கால், செய்யப்படாத அவ்வேதமோதுதற் குரியவர் அந்தணரே,—ஏனையிதற்கு உரியர் அல்லாதார் இல் - பொய்படாத இத்திருக்குறளோதுதற்கு உரியவரல்லாதார் உலகத்திலில்லை. எ - று.

பூர்வவேதத்தை நித்தியமென்பார் மதம்பற்றிச் செய்யாமொழி யென்றார். அது வடமொழியும் இது தென்மொழியுமாய் நின்று சில வேறுபாடுடையனபோற் றோன்றினும் நுண்ணுணர்வானோக்குவார்க்குக் கருத்து வேறுபடாமையின், பொருளொன்றேயெனத் தேற்றேகாரங் கொடுத்துக் கூறினார். செய்யாமொழி பொய்யாமொழி அன்மொழித்தொகைகள். இதற்குரியரல்லாதா ரில்லென்றதனானும் பொதுவேதமாதலறிக. அதற்கும் இதற்கும் பொருள்வேறின்றென்றும், இதனையோதற் கதிகாரிகளாவார் யாவரோவென்றும், நிகழ்கின்ற ஐயமொழித்தபடி. (உரு)

மாங்குடி மருதனார்.

உச. ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோ
ருள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

இ - ள். வள்ளுவர் வாய் மொழி மாண்பு - திருவள்ளுவரது வாயினின்றுந் தோன்றிய திருக்குறளினது மாட்சியைச் சொல்லின்,—ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி வேதப்பொருளாய் மிக விளங்கி - அது ஓதப்படுதற்கு எளிய சொற்களையுடையதாகியும் அறியப்படுதற்கு அரிய பொருள்களையுடையதாகியும் வேதமெனப்படுகின்ற பொருளாகியும் அவ்வேதத்தின் மிக விளங்கி,—தீது அற்றோர் உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்கும் - குற்றமற்றோர்கள் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவர்களுடைய மனத்தைக் கரைக்கும். எ - று.

ஓதற்கெளிதாயெனவே நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல்களும், உணர்தற்கரிதாகியெனவே ஆழமுடைமையும், வேதப்பொருளாயென்வே விழுமியதுபயத்தலும், பிறவுமாகிய அழகுகளினமைதி சொல்லப்பட்டதாயிற்று. தீதற்றோர் பொருளாராய்ச்சிக்கேற்ற நுண்ணறிவுடையோர். உள்ளுதொறுள்ளுதொறுள்ளமுருக்குமெனவே, முன் காணப்பட்டதினும் பின் காணப்படும்பொருள் சிறந்தும் விரிந்துந் தோன்றுதலுடைமை பெறப்பட்டது. இதனது அற்புதமான குணமுடைமைச்சிறப்புச் சொல்லியபடி. (உச)

எறிச்சலூர் மலாடனார்.

உரு. பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக—வாய
வறத்துப்பா லுல்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

இ - ள். வள்ளுவனூர் ஆய்ந்த நூலின் திறத்துப்பால் தேர்ந்து - திருவள்ளுவநாயனூர் அவ்வேதத்தின் கருத்துக்களையாராய்ந்து, தம்மாலே செய்யப்பட்ட நூலினது திறத்திற்குத் தக்க நன்மையுடைமையால் இவையே உரியவையென்று தெரிந்து,—பாயிரம் நான்கு - பாயிரம் நான்கதிகாரமும்,—இல்லறம் இருபான் - இல்லறவியல் இருபததிகாரமும்,—துறவறம் பன்மூன்று - துறவறவியல் பதின்மூன்றதிகாரமும்,—ஊழ் ஒன்ருக - ஊழ் ஓரதிகாரமுமுடையனவாக,—ஆய அறத்துப்பால் நால்வகையா உரைத்தார் - இவ்வாருய அறத்துப்பாலைப் பாயிரமுதலிய நால்வகையுடைத்தாகக் கூறினுர். எ - று.

முப்பாற்பொருள்களினும் முத்திக்குக் காரணமாதற் சிறப்புடைமையின், தூய துறவறமென்ருர். தூய்பு நன்மை; அது எல்லாவருணுச்சிரமங்களுக்கும் பொதுவாயிருக்கை. அறப்பாலியலதிகாரத்தொகை சொல்லியபடி. (௨௫)

போக்கியார்.

௨௬. அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
துருவல் லரணிரண்டொன் ருெண்கூ—ழிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
ருெண்பொரு ளேழா மிவை.

இ - ள். அரசியல் ஐயைந்து - அரசியல் இருபத்தைந்ததிகாரமுடைத்து,—அமைச்சியல் ஈரைந்து - அமைச்சியல் பத்ததிகாரமுடைத்து,—அரண் இரண்டு - அரணியல் இரண்டதிகாரமுடைத்து,—கூழ் ஒன்று - பொருளியல் ஓரதிகாரமுடைத்து,—படை இருவியல் - படையியல் இரண்டதிகாரமுடைத்து,—நட்புப் பதினேழ் - நட்பியல் பதினேழதிகாரமுடைத்து,—குடி பதின்மூன்று - ஒழிபியல் பதின்மூன்றதிகாரமுடைத்து,—ஒண்பொருள் இவை ஏழாம் - எண்ணப்பட்ட பொருட்பாலுக்கு இவ்வியல்களேழாம். எ - று.

அரணுக்கு உருத்திட்பம் சிறத்தலின் உருவல்லரணென்றும், பொருளுடையார்க்கே ஒளி அமைவதாகலின் ஒண்பொருளென்றும், படைக்குக் கடும்போரிற் பின்கொடாத திண்மை உரித்தாகலின், திண்படையென்றும், கூறினுர். பிற்காலத்தார் அமைச்சுமுதலியவைந்தையும் அங்கவியலெனை ஓரியலாக்கியும் வழங்குப. பொருட்பாலியலதிகாரத்தொகை சொல்லியபடி. (௨௬)

மோசிகீரனுர்.

௨௭. ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராருக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்ருகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனுர் நன்கு.

இ - ள். ஆண்பால் ஏழ் - ஆண்பாற்கூற்று ஏழதிகாரமும்,—பெண்பால் ஆறிரண்டு - பெண்பாற்கூற்றுப் பன்னிரண்டதிகாரமும்,—அடுத்து அன்பு பூண்பால் இருபால் ஓராருக - ஒருவரையொருவர் அடுத்து அன்பைப் பூணுதற்பகுதியுடைய அவ்விருபாற்கூற்று ஆறதிகாரமுமாக,—மாண்பு ஆய காமத்தின்பக்கம் ஒருமூன்ருக நாமத்தின் வள்ளுவனுர் நன்கு கட்டுரைத்தார் - மாட்சியான காமத்துப் பாலினியல்கள் மூன்ருகப் பெயர்பெற்ற திருவள்ளுவர் நன்குகூறினுர். எ - று.

இவையே பொருளிலக்கணத்துக்கமையக் களவியல் கற்பியலென இரண்டாக்கப் பட்டன. காமத்துப்பாலியலதிகாரத்தொகை சொல்லியபடி. (உஎ)

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

உஅ. ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
யந்தா மரைமே லயன்.

இ-ள். அதிகாரம் நூறும் ஐயாறும் மூன்றுமா - அதிகாரம் நூற்றுமுப்பத்து மூன்றாக,—மெய்யாய வேதப்பொருள் பொய்யாது விளங்க - வடமொழியிலிருந்த மெய்யாகிய வேதப்பொருள் பொய்யுறாது விளங்கும்பொருட்டு,—அந்தாமரைமேல் அயன்தான் வள்ளுவனாகித் தந்தான் - அழகிய தாமரைமலர்மேல் வீற்றிருக்கும் நான்முகக்கடவுள் தான்திருவள்ளுவனாகி உலகத்தார்க்குத் தமிழிற்செய்து தந்தான். எ-று.

உலகு இங்கே மக்களை உணர்த்தி நின்றது. மெய்யாய வேதப்பொருள் பொய்யாது விளங்கவெனவே, இதற்கு முன் மெய்யாயபொருள் பொய்யாய் மறைந்தும், பொய்யாய பொருள் மெய்யாய் விளங்கியும், கிடந்தமை சொல்லப்பட்டதாயிற்று. அதிகாரத்தொகையோடு நூற்பொருளியல்பு சொல்லியபடி. (உஅ)

மதுரைத் தமிழ்நாகனார்.

உகூ. எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையாற்—சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

இ-ள். எல்லாப் பொருளும் இதன்பால் உள - பலவகைநூல்களாலுஞ் சொல்லப்பட்ட எல்லாப்பொருளும் இந்நூலகத்தடங்கி யிருக்கின்றன;—இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை - இதனிடத்தில்லாத யாதொருபொருளும் எந்நூலகத்தும் இல்லை;—சொல்லாற் பரந்த பாவால் பயன் என் - ஆதலால், சொல்லளவினாலே விரிந்த நூல்களாற் பயன் யாது! வள்ளுவனார் சுரந்தபா வையத் துணை - திருவள்ளுவராலே தரப்பட்ட இந்நூலொன்றே மண்ணுலகத்தாருக்குத் துணையாதலைமையும். எ-று.

எல்லாப்பொருள்களுமாவன, முதல் வழிசார்பென மூவகைப்பட்ட அறநூல் பொருணூல் இன்பநூல் வீட்டுநூல் என்பவற்றிற் செம்பொருள் ஆக்கப்பொருள் குறிப்புப்பொருளென இம்மூவகையாற் கொள்ளக்கிடந்த காட்சிப்பொருள்களும் கருத்துப்பொருள்களுமாம். தொழிலும் பண்பும் ஓரோவழிப்பொருளெனற்கேற்புடைமையின், அவையும் இவற்றுள் அடங்குமாறறிக. பின்னும் அதனை வலியுறுத்தற்கு இதன்பாலில்லாத வெப்பொருளு மில்லையென்றார். சொல்லாற் பரந்தவெனவே, அவை பொருளாற்பரப்பின்மை பெறப்பட்டது. பரத்தல் பதினாயிரம் நூறாயிரமுதலிய கிரந்தவளவையால் விரிதல். சொல்லாற்பரந்தநூல்களை ஆய்வோர் மலையகழ்ந்து எலிபிடித்தல்போல மிகவருந்திச் சிறுபயன் கொள்ளுதலால், என்பயனென்றார். ஆல் அசை. பா, வையம் ஆகுபெயர்கள். சின்னாட்பல்பிணிச் சிற்றறிவுடையோர்க்கு விதிவிலக்குக்கண் முற்றும் உள்ளங்கைநெல்லிக்கனிபோலக் கண்டு தெளியுமாறு உணர்த்தித் தடுமாற்றந்தீர்த்தலின், வையத்துணையென்றார். மூற்றெருங்குணர விழைவார்க்கு இஃது இன்றியமையாச் சிறப்பிற்றென்றபடி. (உகூ)

பாரதம்பாடிய பெருந்தேவனார்.

௫௦. எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

இ - ள். பாரதம் சீராமகதை மனுப் பண்டை மறை நேர்வன - பாரதம் பழைய சீராமகதையையும், மனுமிருதி பழையவேதத்தையும், ஒப்பனவாகும்;—எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச் செப்பிய வள்ளுவர் செப்ப வரும் முப்பாற்கு நிகர் இல்லை - எவ்வகைப்பட்ட பொருள்களையும் எவ்வகையோரும் அவற்றின்றன்மையோடு அறிய அவர்க்குச் சொல்லும்படிக்குத் திருவள்ளுவர் சொல்லலால் வந்த திருக்குறளுக்கு உவமானமாகத்தக்கது ஒன்றில்லை. எ - று.

மற்று அசை. அறிதற்கரிய வேதாந்தப்பொருளு மென்றற்கு எப்பொருளுமென்றும், உயர்குலத்தாரே யன்றி ஏனையோருமென்றற்கு யாருமென்றும், ஐயந்திரிபின்றி யறியவென்றற்கு இயல்பினறிவுறவென்றும், இதுவே சுருதிகுருவிரண்டுமாமென்றற்குச் செப்பியவென்றும், கூறினார். பண்டையென்பது சீராமகதைக்குங் கூட்டுக. கதாரூபமாயிருந்து பாரத ராமாயணமெனவும், விதிரூபமாயிருந்து சுருதி மிருதியெனவும், கூட்டிச் சொல்லப்படுதலால், உவமான உவமேயங்களாதலறிக. எப்பொருளும் யாருமியல்பினறிவுறச் செப்புதல் வேதத்திற்கின்மையால், முன் முப்பாலின் மிக்கமொழியென்ற அதனாற்பெறப்பட்ட வேதத்தினொப்புமையை மறுத்தபடி. (௫௦)

உருத்திரசன்மகண்ணர்.

௫௧. மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்முலை யொண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு.

இ - ள். மணற் கிளைக்க நீர் ஊறும் - மணலைத் தோண்டுந்தோறும் நீர் பெருகும்;—மைந்தர்கள் வாய் வைத்து உணத் தாய் முலை ஒண்பால் சுரக்கும் - புதல்வர்கள் வாய்வைத்து உண்ணுந்தோறும் தாயினது முலைக்கண் நல்லபால் பெருகும்;—பிணக்கு இலா வாய்மொழி வள்ளுவர் முப்பால் ஆய்தொறும் மதிப்புலவோர்க்கு அறிவு ஊறும்- அவைபோல, பிணங்குதற்கு ஏதுவில்லாத வாய்மைச்சொல்லையுடைய திருவள்ளுவரது திருக்குறளை ஆராயுந்தோறும், அறிவுடைய புலவர்க்கு அறிவு வளரும். எ - று.

கற்பிதமாகிய சாதிசமயங்களின் மானம்பற்றி உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும், சிறிதைப் பெரிதாகவும் பெரிதைச் சிறிதாகவும், தீயதை நல்லதாகவும் நல்லதைத் தீயதாவும், புனைந்து பிறர் பிணங்கும்படி சொல்லப்பட்டதல்லாமையால், பிணக்கிலா வாய்மொழியென்றார். மதிப்புலவோர்க்கறிவூறு மெனவே, அவர் அவ்வறிவைக்கொண்டு பிறர்க்கெல்லாம் விதிவிலக்குக்களைக் கற்பித்தல் வேண்டுமென்றதாயிற்று. இதனைச் சிலகாற்பயிறலினமையாது பலகாலும் பயிற்சி செயல் வேண்டுமென்றபடி. (௫௧)

பெருஞ்சித்திரனார்.

௫௨. ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினு
லோதிய வொண்பொரு ளெல்லா—முரைத்ததனுற்

ருதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன.

இ-ள். தாது அவிழ் தார் மாற - பொடியொடு விரிந்த பூமாலையையுடைய பாண்டியராசனே,—ஏதம் இல் வள்ளுவர் இன்குறள் வெண்பாவினால் ஓதிய ஒண்பொருளெல்லாம் உரைத்ததனால் - குற்றமில்லாத திருவள்ளுவர் இனிய குறள்வெண்பாக்களாலே நான்குவேதங்களாலுஞ் சொல்லப்பட்ட ஒள்ளியபொருள்களையெல்லாங் கூறினமையால்,—மேதக்கன தாமே தமைப் பயந்த வேதமே - மேம்பாட்டுக்குத் தக்கவை அக்குறள்வெண்பாக்களோ, முதனூலாய் நின்று அவற்றைப் பயந்த வேதங்களோ! நீசொல்வாயாக. எ - று.

தாம் தம்மை எனப்பட்டவை அவை அவற்றை என்னும்பொருளைத் தந்துநின்றன. ஏகாரம் இரண்டும் வினா. பிறநூலாசிரியர்க்கெல்லாம் அவரெதிரிகளாலே மறுக்கப்பட்டுவருங் குற்றம்போல்வது இவர்க்கு இல்லையென்றற்கு ஏதமில்வள்ளுவரென்றும், தாங்குறியவாய் நின்று கற்போர்க்கு வருத்தம் விளையாமைபற்றி இன்குறளென்றும், உணர்வுடையோராலே விரும்பப்பட்ட நற்குணமுடைமைபற்றி ஒண்பொருளென்றும், கூறினார். நூலாசிரியர்க்கும், நூலுக்கும், நூனுதலிய பொருளுக்கும், தகுதி தோன்றச் சொல்லப்பட்ட விசேடணகுணங்களாலே, இவ்வேதம் அவ்வேதத்தினுஞ் சிறப்புடைமை குறிப்பித்தபடி. (௩௨)

நரிவெரூஉத்தலையார்.

௩௩. இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

இ-ள். இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும் மன்பதைகட்கு முன்பு அறியச்சொன்ன முதுமொழிநூல் உள்ள அரிது என்று - இன்பமுதலிய இந்நாற்பொருளியல்புகளையும் மக்கட்பரப்புக்கு அக்காலத்தில் அறியும்வண்ணஞ் சொல்லப்பட்ட பழமொழிவேதமானது ஓதியுணரப்படுதற் கரிதென்று,—வள்ளுவர் அவை உலகம் கொள்ளக் குறள் மொழிந்தார் - திருவள்ளுவர் அவற்றை உலகத்தார் எளிதினுணரும்படி திருக்குறளைக் கூறினார். எ - று.

முன்பறியவெனவே, உற்சர்ப்பிணியாகலின், அக்காலத்தோர்க்கு உணர்தற்கேற்ற ஆயுணீட்சியும் உணர்வுவலியும் இருந்தனவென்பதூஉம், அவசர்ப்பிணியாகலின் இக்காலத்தோர்க்கு அவையிலவென்பதூஉம், பெறப்பட்டன. இவ்விரண்டும் அவாவறுத்தன் முதற்பாட்டுரையிற்காண்க. தேயவழக்கிற்படாததும் வருந்திக் கற்போர்க்குமாத்திரம் புலப்படுவதுமாய் எல்லாமொழிகட்கும் முற்பட்டுக் கடவுண்மொழியாய் நிற்றலின், முதுமொழியென்றார். அறமுதலிய நான்கும் பிரிவுபட்டுத் தோன்றாமையை உடைத்தாகலின், உள்ளவரிதாயிற்று. பழையவேதம் உளதாகவும் வேறிதுசொல்லுதற்குக் காரணம் உணர்த்தியபடி. (௩௩)

மதுரைத்தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்.

௩௪. புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்ப—னிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்.

இ - ள். பூமேல் புலவர் திருவள்ளுவரன்றிச் சிலவர் புலவரெனச் செப்பல் - பூவுலகின்கண்ணே புலவரெனத் திருவள்ளுவரை யன்றி வேறுசிலரையும் புலவ ரென்று சொல்லுதல்—மாலை நிலவு பிறங்கு ஒளி மாலைக்கும் பெயர் மற்றும் கறங்கு இருள் மாலைக்கும் பெயர் (செப்பல்) - மாலையென்பது நிலவால் விளங்குகின்ற அந் திக்கும் பெயராக மற்றும் சூழ்கின்றவிருளையுடைய அந்திக்கும் பெயராகச் சொல்லு தல்போலும். எ - று.

செப்பலென்றது பின்னுங் கூட்டப்பட்டது. புலமையாவது பல வேறுவகைப் பட்ட நூலுணர்ச்சிகளையெல்லாம் ஒருங்கேகொண்ட பேரறிவுடைமையாம். உயர் வொப்பற்ற இவரது புலமையைக்குறித்து நோக்குங்கால் ஏனையோர் புலமை புலமை யன்றாய் முடிதலின், இவ்வாறு கூறினார். புலவரென்பது நாயனார்க்கே காரணப் பெய ராமென்றபடி. (௩௪)

மதுரையறுவைவாணிகன் இளவேட்டனார்.

௩௫. இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மனமகிழ—வன்பொழியா
துள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

இ - ள். இன்பமும் துன்பமும் என்னும் இவை இரண்டும் உள்ளி உணர - பின் வரக்கடவனவாய சுகமுந்துக்கமுமென்னப்பட்ட இவற்றினுடைய இருவகைக் கார ணங்களையும் ஆராய்ந்தறியவும்,—அன்பு ஒழியாது மனம் மகிழ - தம்மேலன்பு நீங்கா மல் உள்ளங்களிகூரவும்,—மன்பதைக்கெல்லாம் ஓது சீர்வள்ளுவர் வாயுறை வாழ்த்து உரைத்தார் - மக்கட்பரப்புக்கெல்லாம் புகழப்படுஞ் சீரையுடைய திருவள்ளுவர் வாயுறைவாழ்த்தாகத் திருக்குறளைக் கூறினார். எ - று.

இன்பத்தின்காரணம் விதிக்குறளாலும், துன்பத்தின்காரணம் விலக்குக்குறளா லும், சொல்லப்பட்டன. முன்பறிதற்குப் பயன் அவற்றைச் செய்தலும் தவிர்தலு மாம். வேண்டுவனவெல்லாந் தொகுத்துணர்தலின், மனமகிழ்தல் சொல்லப்பட்டது. அவ்வேதம் போலாது பலர்க்கும் உபயோகியாகக் கூறலின், மன்பதைக்கெல்லா மென்றார். வாயுறைவாழ்த்தினியல்பு "வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்—வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்—றாங்குத லின்றி வழி நனி பயக்குமென்—றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே*" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக. எதிர்கா லவிளைவுணர்ச்சி பயத்தல் சொல்லியபடி. (௩௫)

கவிசாகரப் பெருந்தேவனார்.

௩௬. பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனத
மாவிற் கருமுனியா யானைக்—கமரரும்ப
றேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

இ - ள். பூவிற்குத் தாமரை - மலர்களுக்குள்ளே தாமரைமலரும்—பொன்னுக் குச் சாம்புனதம் - பொன்களுக்குள்ளே சாம்புனதப்பொன்னும்—ஆவிற்கு அருமுனி ஆ - பசுக்களுக்குள்ளே காமதேனுவும்—யானைக்கு அமரர் உம்பல் - யானைகளுக் குள்ளே ஐராவதமும்—தேவில் திருமால் என - தேவர்களுக்குள்ளே திருமாலும் போல,—பாவிற்கு வள்ளுவர் வெண்பாச் சிறந்தது என்ப - நூல்களுக்குள்ளே திரு வள்ளுவரது குறள்வெண்பாச் சிறந்தது என்று அறிவுடையோர் சொல்லுவர். எ - று.

* பொருள், செய்யுளியல், ககஉ.

ஏ அசை. பா ஆகுபெயர். பொன் ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்புனதம் என நால்வகைப்படும். காமதேனு வசிட்டமுனியிடத்துள்ளதாகலின், அருமுனியா வென்றார். உவமான முகத்தால் இஃது பலநூல்களினும் சிறந்து நிற்கின்ற மாட்சிமை சொல்லியபடி. (௩௬)

மதுரைப் பெருமருதனார்.

௩௭. அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருப்த் தைந்தாற் றெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனு
ரோதவழுக் கற்ற துலகு.

இ-ள். அறத்திறம் முப்பத்தெட்டால் - அறத்தின் கூறுபாடு முப்பத்தெட்டதிகாரங்களாலும்,—பொருட்டிறம் எழுபதால் - பொருட்கூறுபாடு எழுபததிகாரங்களாலும்,—இன்பத்திறம் இருபத்தைந்தால் - காமத்தின் கூறுபாடு இருபத்தைந்ததிகாரங்களாலும்,—தெளிய - தெளியும் பொருட்டு,—முறைமையால் வேதவிழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார் ஓத - காரணகாரிய வொழுங்கால் வேதத்தினுயர்வாகிய பொருளைக் குறள்வெண்பாக்களாலே திருவள்ளுவனார் ஓதலால்—உலகு வழுக்கு அற்றது - உலகமானது வழுவுதலினின்றும் நீங்கிற்று. எ - று.

திறமும் ஆலும் முன்னுங்கூட்டப்பட்டன. உயர்வாகிய பொருள் கருமகாண்டம் பிரமகாண்டமிரண்டினுள்ளும் சிறந்தபொருள். வழுக்குதல் விதியைவிலக்கென்றும் விலக்கை விதியென்றும்கோடல். உலகு மக்களையுணர்த்திநின்றது. துணிவுபற்றி அற்றதென இறந்தகாலத்தாற் கூறினார். முன்னதின் வேறுபட்ட முப்பால்களினதிகாரத் தொகைகளோடு உலகிற்கு விளையும் நன்மை சொல்லியபடி. (௩௭)

கோவூர்கிழார்.

௩அ. அறமுத னான்கு மகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

இ-ள். அறமுதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம் திறம் உறத் தேர்ந்து தெளியக் குறள்வெண்பாப் பன்னிய வள்ளுவனார் பான்முறை - அறமுதலியநான்கு பொருள்களையும் மண்ணுலகத்துள்ளோரெல்லாம் வகைப்பட ஆராய்ந்து தெளியும் பொருட்டுக் குறள் வெண்பாக்களாலே சொல்லப்பட்ட திருவள்ளுவநாயனாரது முப்பால்களையுடைய புத்தகத்தின் கண்ணே—முன்னை முதுவோர் மொழி நேர் ஒவ்வாது - முற்காலத்துள்ள பெரியோரது நூல்களுக்கு நேர்தல் பொருந்தாது. எ - று.

மொழி ஆகுபெயர். பெரியோராவார் வடமொழியினும், தென்மொழியினும், பிறமொழிகளினும், நூல்செய்த முனிவரும், புலவரும், பிறரும். அந்நூல்களாவன மனு முதலியோரலே செய்யப்பட்ட அறநூன்முதலியன. இதன் புத்தகத்தில் முன்னூல்களிலொன்றும் சேர்க்கப்படுதற்குத் தகுவதன்றென்று சொல்லியபடி. (௩அ)

உறையூர் முதுகூற்றனார்.

௩௯. தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்

குயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு.

இ - ள். தேவிற் சிறந்த திருவள்ளுவர் குறள்வெண்பாவிற் சிறந்திடு முப்பால் பகரார் - தெய்வத்தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது குறள்வெண்பாக்களோடு கூடிச் சிறந்து தோன்றுகின்ற முப்பால்களையும் ஓதாரது—நாவிற்கு உயல் இல்லை - வாக்கிற்கு இன்சொற்சொல்லி வாழ்தல் உண்டாகாது,—சொற்சுவை ஓர்வு இல்லை - மனத்திற்குச் சொற்களின்சுவையை அறிதல் உண்டாகாது,—மற்றும் செயல் இல்லை - இவையன்றியும் காயத்துக்கு நல்ல செயலுண்டாகாது—என்னும் திரு - என்று நினைத்துத் திருமகள் அவரிடத்துச் சேராள். எ - று.

சுவையோர்தற்கும் செயலுக்கும் உரிய மனமும், காயமும், வருவிக்கப்பட்டன. திருமகள் சேராமையாகிய காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஓதார்க்குள வாகாமை கூறவே, ஓதுவோர்க்கு இவையுளவாகலின், வாக்கிற்குக் கடுஞ்சொல், பொய், கோள், புறங்கூறல்களும், மனத்திற்குப் பிறனில்விழைதல், பிறன்பொருள் விழைதல், பிறன்பொருட்குக்கேடெண்ணல், பிறவுயிர்க் கிறுதியெண்ணல்களும், காயத்திற்குப்பிறன்மனைபுணர்தல், உயிர்க்கொலைசெய்தல், பழியூணுணல், பிறர் பொருள்வெளவல்களும் ஆகிய குற்றங்களெல்லாம் நீங்குமென்பது பெறப்பட்டது. அறவின்பங்கட்குக் காரணமாதற்சிறப்புடைய பொருட்பேறு இஃதோதலின் உளதா மென்றபடி. (௩௯)

இழிகட்பெருங்கண்ணனார்.

௪0. இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற—மும்மையின்
வீடவற்றி னான்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடின ரின்குறள்வெண் பா.

இ - ள். இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும் செம்மை நெறியின் தெளிவு பெற - இகபரங்கட்காவன விரண்டையும் வினைப்பயன்றொடர்தற்குரிய எழுபிறப்பிற்குமாகச் செவ்வையான வழியால் யாவரும் தெளிதல் பெறவும்,—மும்மையின் அவற்றின் வீடு நான்கின் விதி வழங்க - அறம்பொருள் இன்பமென்னும் முப்பால்களுள் அம்முப்பாற்பொருள்களோடு வீடுமாகிய நாற்பொருள்களது விதிகளும் வழங்கவும்,—வள்ளுவனார் இன் குறள்வெண்பாப் பாடினர் - திருவள்ளுவநாயனார் இனிய குறள்வெண்பாவைப் பாடினர். எ - று.

செவ்வையானவழி விதியும் பத்தியும் ஞானமும் நோயாளிக்கு மருந்தும் அநுபானமும் பத்தியமும்போல் ஒன்றற்கொன்று பூரணமாக கூடி நிற்கும் வழி. வீட்டுவிதி துறவறத்திற்காண்க. இம்மை மறுமை வீடு மூன்றும் பயக்குமாறு சொல்லியபடி. (௪0)

செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார்.

௪௧. ஆவனவு மாகா தனவு மறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

இ - ள். ஆவனவும் ஆகாதனவும் அறிவுடையார் யாவரும் எடுத்தியம்ப வல்லார் - மக்களுக்கு ஆவனவற்றையும் ஆகாதவற்றையும் அறிவுடையார் யாவரும் இனி

இதிலிருந்து எடுத்துச்சொல்லுதற்கு வல்லவராவார்;—தேவர் திருவள்ளுவர் செப்பியவே பொருவில் ஒழுக்கம் பூண்டார் செய்வார் - ஆதலால், தேவராகிய திருவள்ளுவராலே சொல்லப்பட்டவற்றையே ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர் செய்வார். எ - று.

இங்ஙனங்கூறவே, அவ்வேதத்திலிருந்து உள்ளவாறெடுத்துச்சொல்லுதல் அறிவுடையார்க்கு முடியாமையால், ஒழுக்கம் பூண்டார்க்கு அதன்கண்ணே சொல்லப்பட்டபடி வழுவாமற்செய்தல் கூடாமை காட்டப்பட்டது. தாம், உம் அசைகள். அவன இன்பத்தைத் தருவன. ஆகாதன துன்பத்தைத் தருவன. ஒப்பில்லாத வொழுக்கம் கொல்லாமை முதலியன. போதகாசிரியருக்கும்; கேட்டொழுகுவோர்க்கும், வரும் நன்மை சொல்லியபடி. (சக)

செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்.

சஉ. வேதப் பொருளை விரகால் விரித்துலகோ
ரோதத் தமிழா லுரைசெய்தா—ராதலா
லுள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

இ - ள். வேதப்பொருளை உலகோர் ஓத விரகால் விரித்துத் தமிழால் உரைசெய்தார் - வேதத்தின்பொருளை உலகத்தார் ஓதியுணரும்பொருட்டு உபாயத்தால் விரித்துத் தமிழ் மொழியினாலே சொல்லியருளினார்;—ஆதலால் உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் வள்ளுவர் வாய்மொழிமாட்டு உண்டு என்ப - ஆதலால், நினைப்பவர் நினைக்கும் பொருள்களெல்லாம் திருவள்ளுவர் திருவாயிற் பிறந்த திருக்குறளின் கண்ணே உண்டென்று அறிவுடையோர் சொல்லுவர். எ - று.

உபாயத்தால் விரித்தல் சொற்சுருக்கத்தால் ஓதற்கெளிதென மனவெழுச்சியுண்டாக்கிக் கற்போரது அறிவளவிற்கேற்கப் பொருளளவு விரியவைத்தல். நினைக்கப்படும் பொருள்களெல்லாம் இதன்கண்ணே இக்காரணத்தால் தோன்றுநின்றன வென்று கூறியபடி. (சஉ)

வண்ணக்கஞ் சாத்தனார்.

சஙூ. ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதா—லாரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனா
ரோது குறட்பா வுடைத்து.

இ - ள். ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின் இது சீரியது என்று ஒன்றைச் செப்பரிது - வடமொழியையுந் தென்மொழியையும் ஆராய்ந்து இதைக்காட்டிலும் இது சிறப்புடைத்தென்று ஒன்றைத் தெரிந்துசொல்லுதல் கூடாது;—ஆரியம் வேதம் உடைத்துத் தமிழ் திருவள்ளுவனார் ஓது குறட்பா உடைத்து - வடமொழி வேதமுடைத்து, தமிழ்மொழி திருவள்ளுவநாயனார் சொல்லிய குறட்பாவுடைத்து, ஆதலால். எ - று.

ஆல் அசை. வடமொழியும் தென்மொழியும் பிறமொழிகள்போலாது பாணினியாரும் அகத்தியனாருமுதலாகிய முனிவர்களாலே செய்யப்பட்ட இலக்கண நூல்களாலே சீர்திருந்தி நிற்றன் முதலிய குணங்களுடைமையாலும், அது பிராகிருதமுதலியவற்றுக்குப்போல் இது ஆந்திரமுதலியவற்றுக்கு முதலாய் நிற்றலாலும், ஒன்றற்

கொன்று குறைபாடுடைத்தன்றேனும், வேதமுடைமை பற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு தென்மொழிக்கண்ணே திருக்குறள் உண்டாதலின் இனியில்லையென்றற்கு, இதனினிது சீரியதென்றென்றைச் செப்பரிதென்றார். இத்திருக்குறளாலே வடமொழியோடு தென்மொழிக்கு ஒப்புமைநிறைவு சொல்லியபடி. (சங)

களத்தூர்கிழார்.

சச. ஒருவ ரிருகுறளே முப்பாலி னோதுந்
தரும முதனான்குஞ் சாலு—மருமறைக
ளைந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்.

இ - ள். அருமறைகள் ஐந்தும் சமயநூல் ஆறும் நம் வள்ளுவனார் புந்தி மொழிந்த பொருள் - இருக்குமுதற்பாரதமீறாகிய அரிய வேதங்களைந்தும் அவ்வேதத்தின் வழிப்பட்ட சமயநூல்களாறும் நம்முடைய திருவள்ளுவரால் உலகத்தார்க்குப் புத்தியாகச் சொல்லப்பட்ட நூலிலடங்கும்;—ஒருவர் இருகுறளே முப்பாலின் ஓதும் தருமமுதல் நான்கும் சாலும் - ஆதலால், ஒருவர் ஒருவிகற்பமும் இருவிகற்பமுமாகிய இருவகைக்குறள்களையுமே முப்பால்களில் அத்தியயனஞ்செய்து அறியப்படுகின்ற அறமுதலிய நாற்பொருள்களும் அவருக்குப் போதும். எ - று.

ஒருவனுக்கே ஐந்தும் ஓதியுணரமுடிவுபோகாது வேறுவேறான அதிகாரிகளுடைமைபற்றி, அருமறைகளைந்துமென்றார். சமயநூலாறும் ஒன்றேபொருளென்னும் பாட்டுரையிற் காண்க. நமக்கெல்லாம் அறிவொழுக்கங்கொளுத்தி நல்வழிப் படுத்த வந்த பரமாசாரியர் இவரேயென்னு முரிமைதோன்றற்கு நம் வள்ளுவனாரென்றார். மறைகளைந்துஞ் சமயநூலாறும் நம் வள்ளுவனார் புந்திமொழிந்த பொருளெனலால், அவை பலவற்றினும் வேறுவேறு வவைப்பட்டுச் சிறந்துநின்ற கருத்துக்களெல்லாம் இவ்வொருநூற்கண்ணே அடங்கிநிற்கின்றமை சொல்லப்பட்டதாயிற்று. பொருள் ஆகுபெயர். ஒருவரெனப் பொதுப்படக் கூறலால், இதனை ஓதுதற்குப் பெண்பாலாருக்கும் அதிகாரமுண்டென்பது கொள்ளப்பட்டது. இவ்வொரு நூலோதியுணர்ந்தோர் அருமறைகளைந்துஞ் சமயநூலாறும் ஓதியுணர்ந்தோராவரென்றபடி. (சச)

நச்சுமனார்.

சரு. எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ண—மிழுக்கின்றி
யென்றெவர் செய்தன வெல்லா மியம்பின
வின்றிவ ரின்குறள்வெண் பா.

இ - ள். எழுத்து அசை சீர் அடி சொல் பொருள் யாப்பு வழுக்கு இல் வனப்பு அணி வண்ணம் இழுக்கு இன்றி என்று எவர் செய்தன - எழுத்துமுதல் வண்ணமீறாகச் சொல்லப்பட்ட இவற்றுள் வழுவுதலில்லாமல் எக்காலத்தில் எவரால் எவை செய்யப்பட்டன,—எல்லாம் இன்று இவர் இன் குறள்வெண்பா இயம்பின - அவையெல்லாம் இக்காலத்து இத்திருவள்ளுவராலே செய்யப்பட்ட இவ்வினிய குறள் வெண்பாக்களிற் சொல்லப்பட்டன. எ - று.

வனப்பு அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு. அணி சொல்லணி, பொருளணி, ஒலியணி. வண்ணம் குறிலகவற்றூங்கிசை வண்ண முதலியன. ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொருபாவலர் ஒவ்வொருகுணத்தினாலே சிறந்து

விளங்க நூல்செய்தனர், இவரேவெனின் எல்லாக்குணங்களாலும் நிறைந்து சிற ந்து விளங்கச் செய்தமையின், இவ்வாறு கூறினார். இதன் பாக்களின் சிறப்புச் சொல்லியபடி. (சரு)

அக்காரக்கனி நச்சுமனார்.

சசு. கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணி
னிலைநிரம்பு நீர்மைத் தெனினுந்—தொலைவிலா
வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பானூ னயத்தின் பயன்.

இ - ள். கலை நிரம்பிக் காண்டற்கு இனிதாகிக் கண்ணினிலை நிரம்பு நீர்மைத்து எனினும் - மதியமும் முப்பானூலும் பதினாறுகலைகளாலும், அறுபத்துநாலுகலைகளா லும், நிறைந்து, நோக்குதற்கு ஆராய்ச்சிசெய்தற்கு இனிதாகி, முகக்கண்ணினிலையில், அகக்கண்ணினிலையில், நிரம்புகின்ற தண்மையுடைத்தாயினும், குணமுடைத்தாயி னும்,—வள்ளுவர் முப்பானூல் நயத்து இன்பயன் தொலைவு இலா வான் ஊர் மதியந் தனக்கு உண்டோ - திருவள்ளுவரது முப்பானூலினது நயத்தால் விளைவதாகிய இனிய பயனானது ஒழிவின்றி ஆகாசத்தின்கண்ணே திரிகின்ற மதியினிடத்து உண்டோ! எ - று.

மதியந்தனக்கென்றது வேற்றுமைமயக்கம். ஓகாரம் எதிர்மறை. ஆதாரமாகக் கொள்ளுதற்கு ஏற்புடைத்தல்லாத வானை ஆதாரமாகக் கோடலின், இழிவு தோன்றத் தொலைவிலாவானூர்மதிய மென்றார். நயம் மறுப்படாமை, மழுங்காமை, குறைவு றாமை முதலியன. பயன் இம்மை மறுமை வீட்டின்பங்கள். ஒப்புமைசொல்லுதற்கு நூல்களில் ஒன்றும் இன்மையால், ஏனைப்பொருள் பலவற்றினுஞ் சிறந்தமதியையாயி னும் சொல்லுதுமெனப் புகின் அதுவும் இதனாற்றகுவதன்றென்றபடி. (சசு)

நப்பாலத்தனார்.

சஎ. அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு—குறும்பாவா
வள்ளுவனா ரேற்றினார் வையத்து வாழ்வார்க
ளுள்ளிரு ணீக்கும் விளக்கு.

இ - ள். அறம் தகளி - தருமம் அகலும்,—பொருள் திரி - பொருள் திரியும்,— இன்பு நெய் - காமம் நெய்யும்,—செஞ்சொல் தீ - செவ்வியசொல் நெருப்பும்,— குறும்பாத் தண்டா - குறட்பாத் தண்டும் ஆக,—வள்ளுவனார் வையத்து வாழ்வார் கள் உள்ளிருள் நீக்கும் விளக்கு ஏற்றினார் - திருவள்ளுவநாயனார் பூமியின்கண் வாழ் வோரது அகத்திருளை ஒழிப்பதாகிய விளக்கு ஏற்றினார். எ - று.

ஆன்றல் மேம்படுதல். அகத்திருள் அஞ்ஞானம். தீச்சுடர் தகளி முதலியவற் றோடு கூடிப் புறத்திருளை எப்படியோ அப்படி நாயனாரது திருவாயிற் பிறந்த செஞ் சொல் அறமுதலியவற்றோடுகூடி அகத்திருளைக் கெடுத்தலின், இங்ஙனம் உருவகஞ் செயலாயிற்று. மனையகத்தேற்றப்படுகிற விளக்கு அம்மனையகத்துள்ளார்க்கு மாத்தி ரமே உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருளைக் கெடுக்கவல்ல தன்மையாலும், இஃது உலகத்து வாழ்வோர் பலர்க்கும் உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருள் கெடுத்தலாலும், அதனின் இது பலகோடி மடங்கு மிக்குச் சிறந்து நிற்கின்றமை உணர்த்தியபடி. (சஎ)

குலபதி நாயனார்.

சஅ. உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிரு டள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.

இ - ள். உள்ளக்கமலம் மலர்த்தி உளத்து உள்ள தள்ளற்கு அரிய இருள் தள்ளுதலால் - நெஞ்சமாகிய தாமரைமலரை மலர்த்தி மக்களது அகத்திலுள்ள பிறிதொன்றனாலே நீக்கப்படாத அஞ்ஞானவிருளை நீக்குதலால்,—வள்ளுவனார் வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிருங் குணத்தைக்கொண்டு ஒக்கும் எனக் கொள்ளத்தகும் - திருவள்ளுவரது குறள்வெண்பாவும், புறத்துத் தாமரைமலரை மலர்த்திப் புறத்திருளை நீக்குகின்ற சூரியனும், அச்செய்கையைக்கொண்டு ஒக்குமென்று கொள்ளத்தகும். எ - று.

செயலும் தொழிற் பண்பெனப்படுதலின், குணமெனப்பட்டது; அது மலர்த்தலும் தள்ளுதலுமாம். குணத்தைக்கொண்டெனவே, செயப்படுபொருளைக்கொண்டு ஒக்குமெனக் கொள்ளத்தகா தென்றதாயிற்று. உலகுக்கெல்லாம் பேரொளியாகிய சூரியனும் இதற்கு ஒருபுடையொப்பா மென்றபடி. (சஅ)

தேனிக்குடிக் கீரனார்.

சகூ. பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலிற்
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

இ - ள். தெய்வத்திருவள்ளுவர் முப்பாலிற் செப்பிய குறளால் - தெய்வத்தன்மையையுடைய திருவள்ளுவநாயனார் மூன்றுபால்களையுடையதாகக் கூறியகுறணூலைக் கேட்டறிதலால்—வையத்து வாழ்வார் மனத்துப் பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின - உலகின்கண் வாழ்வாருடைய மனத்துப் பொய்யின்பகுதியிற்பட்டவையெல்லாம் பொய்யேயாய்ப் போயின—பொய்யல்லாத மெய்ப்பால மெய்யாய் விளங்கின - பொய்ம்மையல்லாத மெய்யின்பகுதியிற் பட்டவையெல்லாம் மெய்யேயாய் விளங்கின. எ - று.

குறளாற் பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின மெய்ப்பால மெய்யேயாய் விளங்கின எனவே, இதற்கு முன்னெல்லாம் உண்மை துணியப்படாமையின், பொய்ப்பால மெய்ப்பாலபோன்மேற் கொள்ளப்பட்டும், மெய்ப்பால பொய்ப்பால போற் கைவிடப்பட்டும், மயங்கிக்கிடந்தன வென்றதாயிற்று. இதன் மெய்யுணர்வு பயத்தற்சிறப்புச் சொல்லியபடி. (சகூ)

கொடிஞாழன் மாணிபூதனார்.

ருo. அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
றிறனறிந்தேம் வீடு தெளிந்தே—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.

இ - ள். மறன் எறிந்த வாள் ஆர் நெடுமாற - பகைவரையெறிந்த வாட்படைதங்கிய வீரமுங்கும் பாண்டியராசனே,—வள்ளுவனார்தம் வாயாற் கேளாதனவெல்

லாம் கேட்டு அறன்றிறன் அறிந்தேம் - திருவள்ளுவநாயனாரது வாக்கால் இதற்கு முன் கேட்கப்பட்டில்லாதவை யெல்லாம் இப்போது கேட்டு, அறத்தின்றிறத்தை யறிந்தேம்,—பொருட்டிறன் அறிந்தேம் - பொருளின்றிறத்தை அறிந்தேம்,—இன்பின் திறன் அறிந்தேம் - இன்பத்தின்றிறத்தை அறிந்தேம்,—வீட்டுத்திறன் தெளிந்தேம் - வீட்டின்றிறத்தை அறிந்தேம். எ - று.

திறன் அறமுதலியவற்றோடுங் கூட்டப்பட்டது. மறன் ஆகுபெயர். கேளாதன பிறநூலாசிரியர்க்கெல்லாம் அறிந்து சொல்லுதற்கெட்டாதிருந்த அறமுதலியவற்றி னுட்பங்கள். இம்மை மறுமை வீடுகளைக் குறித்துணர்தற்குரிய உறுதிப்பொருணன்கு முணர்தலின், இனி யாதொன்றாலும் குறைவில்லையென்றபடி. (ரு௦)

கவுணியனார்.

ருக. சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள் வெண்பா.

இ - ள். முந்திய நன்னெறி நாம் அறிய நாப்புலமை வள்ளுவனார் பன்னிய இன் குறள்வெண்பா - முற்பட்டதாகிய நல்லவழியை நாமறியும்பொருட்டு நாவால் விளங்குகின்ற புலமையையுடைய திருவள்ளுவநாயனாரற் சொல்லப்பட்ட இனிய குறள் வெண்பாக்கள்—சிந்தைக்கு இனிய - நினைத்தால் மனத்திற்கு இன்பஞ்செய்வன,—செவிக்கு இனிய - கேட்டாற் காதுக்கு இன்பஞ்செய்வன,—வாய்க்கு இனிய - ஓதினால் வாய்க்கு இன்பஞ்செய்வன,—வந்த இருவினைக்கு மா மருந்து - தொடர்ந்து வருகின்ற இருவினைகளாகிய நோய்களுக்குப் பெரிய மருந்துகளாவன. எ - று.

குறட்பாவை மருந்தென்றமைக்கு ஏற்க வினையை நோயென்னாமையால், ஏகதேசரூபகம். நல்வினையும் பிறவிக்கு ஏதுவாகலால் இருவினையென்றார். முற்பட்ட நல்வழி நன்மக்களுக்கு அநாதியாயமைந்துள்ளது; அது சமயத்தாரது பலவகைப் பட்ட கற்பனையினாலே மறைபட்டு நின்றமையின், நாமறியவென்றார். இந்நூலின் பாக்களைச் சிந்தித்தல் முதலியன செய்யுங்காலும் சொற்பொருணயங்களாலே இன்பம் விளைத்துத் தெய்வத்தன்மையால் வினைத்துயரும் ஒழிக்குமென்றபடி. (ருக)

மதுரைப்பாலாசிரியனார்.

ருஉ. வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத்—தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா வகிலத்தோ
ருள்ளிரு ணீக்கு மொளி.

இ - ள். வெள்ளி வியாழம் விளங்கு இரவி வெண்டிங்கள் புறவிருளைப் பொள்ளென நீக்கும் - சுக்கிரன் சுரகுரு சூரியன் சந்திரன் என்பன புறத்திருளை விரைவிலே நீக்கும் ஒளிகளாம்;—தெள்ளிய வள்ளுவர் இன்குறள்வெண்பா அகிலத்தோர் உள்ளிருள் நீக்கும் ஒளி - முற்றுணர்ந்த திருவள்ளுவநாயனாரது இனிய குறள் வெண்பா உலகத்தோரது உள்ளிருளை நீக்கும் ஒளியாம். எ - று.

இங்ஙனங்கூறவே, புறத்திருளுக்கு அவைபலவுள, அகத்திருளுக்கு இஃதொன்றே உளதென்றதாயிற்று. அவற்றுள் ஒன்றாலும் நீக்கப்படாத அகத்திருளை நீக்கவல்லதாகலின், இதற்கு எவ்வாற்றானும் ஒப்பதொன்றின்றென்றபடி. (ருஉ)

ஆலங்குடிவங்கனார்.

ருக. வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் றீஞ்சுவையு மொவ்வாதாற்—றெள்ளமுத
முண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
வண்டமிழின் முப்பான் மகிழ்ந்து.

இ - ள். வள்ளுவர் பாட்டின் வளம் உரைக்கின் வாய்மடுக்கும் தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாது - திருவள்ளுவரது பாட்டினது தீஞ்சுவையைச் சொல்லுமிடத்து, உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது தித்திப்பாகிய சுவையும் ஒப்பாகாது;—தெள்ளமுதம் உண்டு அறிவார் தேவர் - அத்தெள்ளிய அமுதையுண்டு அதன் சுவையை அறிபவர் தேவர்கள்;—வண்டமிழின் முப்பால் உலகடைய மகிழ்ந்து உண்ணும் - வளம் பொருந்திய தமிழின்கண்ணதாகிய முப்பாலாகிய அதின் மும்மடி சிறந்த பாலை எல்லாவுலகத்தாரும் மகிழ்ந்து உண்டு தீஞ்சுவையறிவார். எ - று.

வளம் ஆகுபெயர். ஆல் அசை. அவ்வமிர்தம் வாயுட்பெய்தவழி நாவிற்பட்ட சிறிதுபொழுதளவே தீஞ்சுவை பயப்பது, இப்பாட்டு நெஞ்சின்கணிலைபெற்று ஒழிவின்றித் தீஞ்சுவை பயத்தலின் ஒவ்வாதென்றார். முப்பால் சிலிஷ்டரூபகம். இனி எவ்வுலகத்தாருக்குங் கருமபூமியாகிய இவ்வுலகத்துட்டோன்றி மெய்ப்பொருளுணர்ந்தன்றி வீட்டின்பம் பெறுதல் கூடாமையின், உலகடைய வுண்ணுமென்றார். அன்றி, அவ்வுலகத்துத் தேவர்களும் தமதுமேற்பட்டவறிவினாலே இதனது உயர்வொப்பற்ற குணத்தை அறிந்து முக்கியப்பிரமாணமாகக் கொண்டு மகிழ்கூர்வரென்பதுபற்றி, அங்ஙனங் கூறினாரெனினுமமையும். இஃது இவ்வுலகத்தார்க்கேயன்றி அவ்வுலகத்தார்க்கும் பயன்படுமாறு சொல்லியபடி. (ருக)

திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் செய்த

திருவள்ளுவமாலையுரை முற்றிற்று.

இடைக்காடர்பாடல்.

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

இ - ள். குறள் - நாயனாரது நூலின் ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறள்வெண்பாக்களும்,—கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த - கடுகை அதனடுவே துளைசெய்து ஏழு கடனீரையும் அத்துளையுட்பெய்து தன்னளவிற் குறுகும் வண்ணம் தறித்துவைத்தால், அதுபோல்வனவாகும். எ - று.

மிக்க சிற்றளவிற்கு எடுத்துச்சொல்லப்படுவதொரு நுண் பொருளாகலின், கடுகு கொல்லப்பட்டது. இரண்டனுருபு தறித்தவென்வினை கொண்டது. துளைத்தல் உள்ளீடு போக்குதல். புகவிடென்பது புகட்டென விகாரப்பட்டு முதனிலையாய் நிற்றலின், புகட்டியென்றாயது. துளையினிடைவெளிக்கும் அதன்புறமுடிக்கும் கொள்ளப்பட்ட பங்கு சிறிதாக ஒழிந்த பங்கு பெரிதாகலின், குறுகவென்றார். தறித்தாலன்னவெனற்பாலது தறித்தவென இடைக்குறைந்து நின்றது. இல்லாதபொருளை உவமானமாகக் கூறலின், இல்பொருளுவமை. குறட்பாக்களுள் ஒவ்வொன்றும் அதுபோறலின், தறித்தவெனப் பன்மையாற் கூறலாயிற்று. குறள் பால்பகாவஃறிணைப்பெயராக

லின், இங்கே பன்மைக்காயது. இங்ஙனங்கூறவே, குறட்பாவின் சொற்சுருக்கமும் அதனுள் அடக்கப்பட்ட பொருள் விரிவும் நோக்கும்வழி, அக்கடுகும் ஏழ்கடனீரும் போலுமென்றதாயிற்று. பொருள்விரிவினளவுபடாமை சொல்லியபடி.

இப்பாட்டிலே "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்—குறுகத் தறித்த குறள்." என முதற்சொல்லை மாற்றி ஔவையாராற் புகழ்ச்சிசெய்யப்பட்டது.

ஆசிரியர் திருநாமங்கள் ௯

திருவள்ளுவர்.
நாயனார்.
தேவர்.
முதற்பாவலர்.
தெய்வப்புலவர்.
நான்முகனார்.
மாதானுபங்கி.
செந்நாப்போதார்.
பெருநாவலர்.

நூலின்றிருநாமங்கள். ௯

திருக்குறள்.
முப்பானூல்.
உத்தரவேதம்.
தெய்வநூல்.
திருவள்ளுவர்.
பொய்யாமொழி.
வாயுறைவாழ்த்து.
தமிழ்மறை.
பொதுமறை.

திருவள்ளுவநாயனார் திருவடி வாழ்க.

திருக்குறளகராதி.

குறள்.	பக்கம்.
அ	
அகடாரரல்	௨௬௬
அகப்பட்டி	௩௦௪
அகரமுதல	௩
அகலாதணு	௧௯௯
அகழ்வாரை	௪௫
அகனமர்ந்து	௨௭
அகனமர்ந்தீ	௨௯
அஃகாமை	௫௧
அஃகியகன்	௫௦
அங்கணத்து	௨௦௭
அசையியற்	௩௧௨
அச்சமுடை	௧௫௬
அச்சமேகீ	௩௦௫
அஞ்சாமைய	௧௪௫
அஞ்சாமையீ	௧௧௨
அஞ்சுமறியா	௨௪௬
அஞ்சுவதஞ்	௧௨௬
அஞ்சுவதோ	௧௦௬
அடக்கமம	௩௭
அடல்வேண்டு	௯௮
அடற்றகை	௨௨௦
அடுக்கியகோ	௨௭௨
அடுக்கிவரினு	௧௮௧
அடுத்ததுகா	௨௦௩
அணங்குகொ	௩௦௭
அணியன்றே	௨௮௮
அந்தணரென்	௧௨
அந்தணர்நூற்	௧௫௮
அமரகத்தாற்	௨௩௩
அமரகத்துவ	௨௯௧
அமிழ்தினு	௨௨
அமைந்தாங்	௧௩௯
அரங்கின்றி	௧௧௮
அரம்பொரு	௨௫௩
அரம்போலு	௨௮௩
அரிதரோதேற்	௩௨௯
அரிதாற்றி	௩௩௧
அரியகற்றுசற்	௧௪௭
அரியவற்று	௧௩௦
அரியவென்று	௧௫௬
அருங்கேட	௫௯
அருஞ்செவ்	௧௬௪
அருட்செல்	௬௮
அருமறை	௨௪௨
அருமையு	௧௭௭
அரும்பய	௫௬
அருவினையெ	௧௪௨
அருளல்லதி	௭௨
அருளில்லார்	௭௦
அருளென்	௨௧௭
அருளொடு	௨௧௬
அருள்கருதி	௮௧
அருள்சேர்	௬௯
அருள்வெஃகி	௫௧
அலந்தாரை	௩௭௪
அலரெழவாரு	௩௨௬
அலர்நாண	௩௨௮
அல்லலரு	௬௯
அல்லவை	௩௦
அல்லற்பட்	௧௬௨
அவர்தந்தா	௩௩௮
அவர்நெஞ்	௩௭௦
அவாவில்லா	௧௦௭
அவாவினை	௧௦௭
அவாவென்ப	௧௦௫
அவிசொரிந்	௭௩
அவையறிந்	௨௦௪
அவையறியார்	௨௦௫
அவ்வித்தழுக்	௪௮
அவ்வியநெ	௪௯
அழக்கொண்	௧௯௦
அழச்சொல்	௨௨௮
அழல்போ	௩௫௨
அழிவதூஉ	௧௩௫
அழிவந்த	௨௩௧
அழிவினவை	௨௨௬
அழிவின்ற	௨௧௯
அழுக்கற்ற	௪௯
அழுக்காறவா	௧௪
அழுக்காறுடையார்	௪௮
அழுக்காறுடையான்	௪௦
அழுக்காறெனை	௪௯
அழுக்காற்றி	௪௮
அளவல்லசெய்	௮௨
அளவளாவில்	௧௫௩
அளவறிந்தார்	௮௧
அளவறிந்து	௧௪௦
அளவின்கணி	௮௧
அளித்தஞ்ச	௩௩௦
அறங்கூறுன	௫௨
அறஞ்சாரா	௨௯௭
அறஞ்சொல்	௫௩
அறத்தாறிது	௧௪
அறத்தாற்றி	௧௭
அறத்தான்வ	௧௫
அறத்திற்கே	௨௫
அறத்தினூங்	௧௩
அறம்பொரு	௧௪௭
அறவாழிய	௫
அறவினையா	௯௧
அறவினையு	௨௫௯
அறனழீஇ	௫௨
அறனறிந்தா	௧௮௪
அறனறிந்துமூ	௧௨௯
அறனறிந்துவெ	௫௧
அறனுக்கம்	௪௭
அறனியலா	௪௩
அறனிழுக்கா	௧௧௩
அறனீனு	௨௧௬
அறனெனப்	௧௮
அறனோக்கி	௫௪
அறன்கடை	௪௨
அறன்வரை	௪௪
அறிகிலா	௩௨௫
அறிகொன்	௧௮௪
அறிதோறறி	௩௧௬
அறிந்தாற்றி	௧௫௧
அறிவற்றங்	௧௨௪
அறிவிலார்தா	௨௪௧
அறிவிலானெ	௨௪௧
அறிவினு	௮௯
அறிவினுளெ	௫௭

குறள்.	பக்கம்.
அறிவின்மை	௨௪௦
அறிவுடையாரா	௧௨௫
அறிவுடையாரே	௧௨௬
அறிவுருவா	௧௯௭
அறுவாய்நி	௩௧௮
அறைபறை	௩௦௫
அற்காவியல்	௯௫
அற்றதறிந்து	௨௬௯
அற்றமறைக்கு	௨௭௯
அற்றமறைத்த	௨௪௨
அற்றவரென்	௧௦௬
அற்றாரழிபசி	௬௩
அற்றாரைத்தே	௧௪௮
அற்றார்க்கொ	௨௮௬
அற்றுளவறி	௨௬௮
அற்றேறமென்	௧௮௧
அணிச்சப்பூ	௩௧௮
அணிச்சமு	௩௧௯
அன்பகத்தில்	௨௬
அன்பறிவாரா	௧௯௭
அன்பறிவு	௧௫௦
அன்பிலனு	௨௪௬
அன்பிலாரெல்	௨௪
அன்பிற்குமு	௨௪
அன்பின்வழி	௨௬
அன்பின்விழை	௨௫௯
அன்பீனுமா	௨௫
அன்புடை—லி	௨௮௨
அன்புடை—ல்வே	௧௯௬
அன்புநாணொ	௨௮௦
அன்புமறனு	௧௭
அன்புற்றமர்ந்த	௨௫
அன்பொரீஇ	௨௮௭
அன்போடியை	௨௪
அன்றறிவாமெ	௧௪
ஆ	
ஆகாறளவிட்	௧௪௦
ஆகூழாற்	௧௦௮
ஆக்கங்கருதி	௧௩௬
ஆக்கமதர்வி	௧௭௩
ஆக்கமிழந்	௧௭௨
ஆக்கமுந்	௧௮௬
ஆங்கமை	௨௧௨
ஆபயன்கு	௧௬௩
ஆயுமறிவி	௨௬௧
ஆய்ந்தாய்ந்	௨௨௭
ஆராவியற்கை	௧௦௮
ஆவிற்குநீரெ	௩௦௨
ஆள்வினையு	௨௯௦
ஆற்றுருமா	௧௪௪
ஆற்றினளவறி	௨௦௮

குறள்.	பக்கம்.
ஆற்றினளவறிந்தி	௧௪௦
ஆற்றின்வருந்	௧௩௭
ஆற்றினிலைத	௨௦௬
ஆற்றினொழு	௧௭
ஆற்றுபவர்க்	௨௧௩
ஆற்றுவா—லிக	௨௫௪
ஆற்றுவா—ல்பசி	௬௩
ஆற்றுவா—ல்பணி	௨௮௦
இ	
இகலானு	௨௪௫
இகலிற்கெ	௨௪௫
இகலின்மி	௨௪௪
இகலெதிர்	௨௪௪
இகலென்ப	௨௪௩
இகலென்னு	௨௪௪
இகல்காணு	௨௪௫
இகழ்ச்சியிற்	௧௫௭
இகழ்ந்தெ	௨௯௯
இடமெல்லா	௩௦௧
இடனில்பரு	௬௧
இடிக்குந்து	௧௩௧
இடிபுரிந்தெள்	௧௭௬
இடிப்பாரை	௧௩௧
இடுக்கட்ப	௧௮௯
இடுக்கண்கா	௨௯௨
இடுக்கண்வ	௧௮௦
இடும்பைக்கி	௧௮௦
இடும்பைக்கே	௨௯௨
இடைதெரிந்	௨௦௫
இணருழ்த்து	௧௮௮
இணரெரிதோ	௮௭
இதனையிதனு	௧௫௧
இமைப்பிற்கர	௩௨௨
இமையாரின்	௨௫௮
இம்மைப்பிறப்	௩௭௮
இயல்பாகு	௯௮
இயல்பினு	௧௭
இயல்புளி	௧௫௯
இயற்றலு	௧௧௩
இரக்கவிர	௨௯௮
இரத்தலினி	௬௪
இரத்தலுமீ	௨௯௯
இரந்துமுயி	௩௦௧
இரப்பனிரப்	௩௦௨
இரப்பாரை	௩௦௦
இரப்பான்வெ	௩௦௦
இரவாரிரப்	௨௯௪
இரவுள்ளவுள்	௩௦௩
இரவென்னு	௩௦௨
இருணீங்கி	௧௦௧
இருநோக்கி	௩௧௦

குறள்.	பக்கம்.
இருந்துள்ளி	௩௫௬
இருந்தோம்பி	௨௭
இருபுனலும்	௨௧௧
இருமனப்பெ	௨௬௨
இருமைவகை	௧௦
இருவேறுல	௧௦௯
இருள்சேரிரு	௪
இலக்கமுடம்	௧௮௧
இலங்கிழா	௩௬௨
இலமென்றசை	௨௯௫
இலமென்றுவெ	௫௦
இலர்பலராகிய	௭௬
இலனென்றுதீய	௫௮
இலனென்னு	௬௨
இல்வாழ்வா	௧௫
இல்லதெனி	௧௯
இல்லாரை	௨௧௬
இல்லாளையஞ்	௨௫௭
இல்லாள்கட்	௨௫௭
இல்லைதவற	௩௭௯
இவறலுமாண்	௧௨௭
இழத்தொறூஉ	௨௬௭
இழிவறிந்துண்	௨௬௯
இழுக்கலுடை	௧௨௨
இழுக்காமை	௧௫௬
இழைத்ததிக	௨௨௪
இளித்தக்க	௩௬௯
இளிவரின்	௨௭௬
இளைதாகமு	௨௫௦
இளையரின	௨௦௯
இறந்தமைந்	௨௫௬
இறந்தவெ	௧௫௫
இறந்தாரிற	௮௮
இறப்பேபுரி	௨௭௮
இறலீனுமெ	௫௧
இறுதிபய	௧௯௯
இறைகடி	௧௬௪
இறைகாக்	௧௫௯
இற்பிற—கண்ண	௨௭௧
இற்பிற—கண்ணே	௨௯௬
இனத்தாற்	௧௬௫
இனம்போன்	௨௩௫
இனியவுள	௩௧
இனியன்ன	௩௭௧
இனைத்துணைத்	௨[illegible]
இனையரிவ	௨௨௭
இன்சொனுடை	௩௨௯
இன்சொலாலீ	௧௧௪
இன்சொலாலீர	௨௯
இன்சொலி	௩௧
இன்பங்க	௩௩௪

குறள்.	பக்கம்.
இன்பத்து—பய	௨௪௪
இன்பத்து—வி	௧௮௨
இன்பமிடை	௧0௭
இன்பமொ	௨௯௮
இன்பம்விழை—ணி	௧௮௧
இன்பம்விழை—ன்	௧௭௮
இன்மையிடு	௩0௧
இன்மையினி—த	௨௯௫
இன்மையினி—து	௧௬௨
இன்மையு	௪௫
இன்மையெ	௨௯௫
இன்மையொ	௨௮௧
இன்றியமை	௨௭௪
இன்றும்வ	௨௯௭
இன்னாசெ—ரை	௮௯
இன்னாசெ—ர்	௨௮௧
இன்னாதிரக்	௬௩
இன்னாதின	௩௩௧
இன்னாமை	௧௮௨
இன்னாவெ	௮௯
ஈ	
ஈட்டமிவ	௨௮௫
ஈதலிசைய	௬௪
ஈத்துவக்கு	௬௪
ஈர்ங்கைவி	௩0௫
ஈவார்கணெ	௩00
ஈன்றபொ	௨௩
ஈன்றாண்மு	௨௬௩
ஈன்றாள்பசி	௧௯0
உ	
உடம்பாடி	௨௫௩
உடம்பொ	௩௨0
உடுக்கையி	௨௨௬
உடுப்பதூஉ	௩0௬
உடைசெல்	௨௬௭
உடைத்தம்	௧௩௯
உடைமையு	௨௯
உடையரெ	௧௭௨
உடையார்	௧௯௭
உட்கப்படா	௨௬௨
உட்பகைய	௨௫௧
உணர்வது	௨0௬
உணலினு	௩௮௧
உண்டார்க	௩௧0
உண்ணற்க்	௨௬௨
உண்ணாது	௪௭
உண்ணாமையு	௭௨
உண்ணாமைவே	௭௨
உதவிவரைத்த	௩௩
உப்பமைந்	௩௭௪
உயர்வகலந்	௨௧௩

குறள்.	பக்கம்.
உயிருடம்பி	௯௩
உயிர்ப்பவு	௨௫௧
உய்த்தல	௩௬௯
உரமொரு	௧௭௪
உரனசைஇ	௩௬௨
உரனென்	௧0
உருவுகண்	௧௯௩
உருளாய	௨௬௫
உரைப்பா	௬௫
உலகத்தாரு	௨௪௩
உலகத்தோ	௪௨
உலகந்தழீஇ	௧௨௫
உலைவிடத்	௨௧௮
உவக்காணெங்	௩௩௯
உவந்துறை	௩௨௨
உவப்பத்	௧௧௯
உழந்துழந்	௩௩௭
உழவினார்	௨௯௪
உழுதுண்டு	௨௯௩
உழுவாரு	௨௯௩
உழைப்பிரி	௧௫௪
உளபோன்	௧௬௭
உளரெனினு	௨0௯
உளரென்னு	௧௨0
உளவரைதூ	௧௪௧
உள்ளக்களித்	௩௬௮
உள்ளத்தார்	௩௫௮
உள்ளத்தாலு	௮0
உள்ளத்தாற்	௮௩
உள்ளமிலா	௧௭௪
உள்ளமுடை	௧௭௨
உள்ளம்போ	௩௩௫
உள்ளற்க	௨௨௯
உள்ளியதெல்	௮௮
உள்ளியதெய்	௧௫௭
உள்ளினு	௩௪௪
உள்ளினே	௩௭௮
உள்ளுவதெல்	௧௭௩
உள்ளுவன்—னு	௩௩௯
உள்ளுவன்—ம	௩௨௧
உள்ளொற்றி	௨௬௪
உறங்குவ	௯௭
உறன்முறை	௨௫௨
உறாஅதவர்க்	௩௭௧
உறாஅதவர்போ	௩௧௨
உறாஅதோ	௩௨௬
உறாஅர்க்கு	௩௪௩
உறினட்ட	௨௩௩
உறினுயிர	௨௨௩
உறுதோறு	௩௧௫
உறுபசியு	௨௧௧

குறள்.	பக்கம்.
உறுபொரு	௨௧௭
உறுப்பமைந்	௨௧௮
உறுப்பொத்	௨௮௨
உறுவதுசீர்	௨௩௩
உறைசிறி	௧௯௬
உற்றநோய்நீ	௧௩0
உற்றநோய்நோ	௭௩
உற்றவன்	௨௭0
உற்றானளவு	௨௭0
ஊ	
ஊக்கமுடை	௧௪௨
ஊடலிற்றோற்	௩௮௧
ஊடலிற்றோன்	௩௮0
ஊடலினுண்	௩௭௫
ஊடலுணங்	௩௭௬
ஊடலுணர்தல்	௩௧௬
ஊடற்கட்	௩௬௮
ஊடிப்பெ	௩௮௧
ஊடியவ	௩௭௪
ஊடியிருந்	௩௭௭
ஊடுகமன்	௩௮௨
ஊடுதல்	௩௮௨
ஊணுடை	௨௮௮
ஊதியமென்	௨௨௯
ஊரவர்கௌவை	௩௨௭
ஊருணிநீர்	௬0
ஊழிபெய	௨௮௧
ஊழிற்பெரு	௧௧௧
ஊழையு	௧௭௯
ஊறொரா	௧௯௧
ஊனைக்கு	௨௮௮
எ	
எச்சமென்	௨௮௫
எட்பகவ	௨௫௩
எண்சேர்ந்	௨௫௯
எண்ணித்து	௧௩௭
எண்ணியவெ	௧௯௨
எண்ணியா	௧௪௫
எண்ணென்ப	௧௧௬
எண்பதத்தாலெ	௨௮௨
எண்பதத்தானோ	௧௬0
எண்பொருள	௧௨௫
எதிரதாக்கா	௧௨௬
எந்நன்றி	௩௪
எப்பொருளு	௨00
எப்பொருளெ	௧0௨
எப்பொருள்யார்	௧௨௪
எய்தற்கரி	௧௪௩
எரியாற்சு	௨௫௫
எல்லாப்பொ	௨௧௪
எல்லார்க்குந	௩௮

குறள்.	பக்கம்.	குறள்.	பக்கம்.	குறள்.	பக்கம்.
எல்லார்க்குமெ	௧௬௯	ஒருமைச்	௨௩௯	கண்களவு	௩௧௧
எல்லாவிளக்	௮௫	ஒருமைமக	௨௭௭	கண்டதுமன்	௩௨௭
எல்லைக்கணி	௨௩௧	ஒருமையுளா	௩௮	கண்டாங்கலு	௩௩௫
எவ்வதுறை	௧௨௫	ஒலித்தக்கா	௨௧௯	கண்டாருயிரு	௩௦௮
எழுதுங்கா	௩௬௯	ஒல்லுங்கரு	௨௩௪	கண்டுகேட்	௩௧௩
எழுபிறப்பு	௨௧	ஒல்லும்வகை	௧௩	கண்ணிறைந்	௩௬௫
எழுமையெ	௩௩	ஒல்லும்வாயெ	௧௯௪	கண்ணிற்கணி	௧௬௭
எளிதென	௪௩	ஒல்வதறிவ	௧௩௮	கண்ணிற்றுனி	௩௭௦
எள்ளாத	௧௩௮	ஒழுக்கத்தினெ	௪௧	கண்ணின்பச	௩௫௫
எள்ளாமை	௭௯	ஒழுக்கத்தினொ	௪௧	கண்ணின்றுக	௫௩
எள்ளினிளி	௩௭௨	ஒழுக்கத்து	௯	கண்ணுங்கொ	௩௫௬
எற்றிற்கு	௩௦௬	ஒழுக்கமுடைமை	௪௦	கண்ணுடைய	௧௧௬
எற்றென்	௧௮௯	ஒழுக்கமுடைய	௪௧	கண்ணுள்ளார்	௩௨௧
எனைத்தானுந	௧௨௨	ஒழுக்கமும்	௨௭௧	கண்ணுள்ளிற்	௩௨௧
எனைத்தானுமெ	௯௦	ஒழுக்கம்வி	௩௯	கண்ணொடுக	௩௧௩
எனைத்திட்	௧௯௩	ஒழுக்காறு	௪௭	கண்ணோட்டத்	௧௬௬
எனைத்துங்	௨௩௫	ஒளியார்மு	௨௦௫	கட்ணோட்டமி	௧௬௮
எனைத்துணை	௪௩	ஒளியொருவ	௨௭௬	கண்ணோட்டமெ	௧௬௬
எனைத்துநி	௩௪௬	ஒறுத்தாரை	௪௫	கதங்காத்துக்	௩௯
எனைத்தொ	௩௪௪	ஒறுத்தார்க்	௪௬	கதுமெனத்தா	௩௩௬
எனைப்பகை	௫௮	ஒறுத்தாற்	௧௬௮	கயலுண்கண்	௩௪௭
எனைமாட்சி	௨௧௫	ஒற்றினானொ	௧௭௦	கரத்தலுமாற்	௩௩௨
எனைவகை	௧௫௦	ஒற்றுமு	௧௬௯	கரப்பவர்க்	௩௦௩
என்பிலதனை	௨௫	ஒற்றொற்றி	௧௭௧	கரப்பிடும்பை	௨௯௯
என்றுமொ	௧௮௯	ஒற்றொற்று	௧௭௧	கரப்பிலாநெ	௨௯௯
என்னைமுன்	௨௨௧	ஒன்றாகநல்	௯௨	கரப்பிலார்	௨௯௯
ஏ		ஒன்றாமை	௨௫௨	கரப்பினுங்	௩௬௫
ஏதம்பெருஞ்	௨௮௬	ஒன்றாவுலக	௬௫	கரவாதுவந்	௩௦௧
ஏதிலாரார	௨௩௯	ஒன்றானு	௩௮	கருமஞ்சிதை	௧௬௮
ஏதிலார்கு	௫௪	ஒன்றெய்தி	௨௬௫	கருமஞ்செய	௨௯௦
ஏதிலார்போ	௩௧௩	ஒன்னார்த்	௭௪	கருமணியிற்	௩௨௦
ஏந்தியகொ	௨௫௬	ஓ		கருமத்தானா	௨௮௭
ஏமுற்றவ	௨௪௯	ஓஒதல்வே	௧௮௯	கருவியுங்கா	௧௮௩
ஏரினுநன்	௨௯௪	ஓதியுணர்ந்	௨௩௯	கலங்காதுக	௧௯௩
ஏரினுழாஅ	௭	ஓம்பினமை	௩௩௦	கலந்துணர்	௩௫௭
ஏவவுஞ்செ	௨௪௨	ஓர்த்துள்ள	௧௦௩	கல்லாதமே	௨௪௧
ஐ		ஓர்ந்துகண்	௧௫௮	கல்லாதவரிற்	௨௦௯
ஐந்தவித்தா	௧௦	ஓஒவினிதே	௩௩௬	கல்லாதவருந	௧௧௯
ஐயத்தினீங்	௧௦௧	க		கல்லாதானொ	௧௧௯
ஐயப்படாஅ	௨௦௨	கடலன்ன	௩௨௪	கல்லாதான்	௧௧௯
ஐயுணர்வெ	௧௦௨	கடலோடா	௧௪௫	கல்லார்ப்பி	௧௬௬
ஒ		கடனறிந்	௧௯௮	கல்லாவொரு	௧௨௦
ஒட்டார்	௨௭௫	கடனென்ப	௨௭௯	கல்லான்வெ	௨௪௮
ஒண்ணுதற்	௩௦௯	கடாஅக்களி	௩௦௯	கவறுங்கழக	௨௯௬
ஒண்பொரு	௨௧௮	கடாஅவுரு	௧௭௦	கவ்வையாற்	௩௨௭
ஒத்ததறிவா	௬௦	கடிதோச்சி	௧௬௩	கழாஅக்கால்	௨௪௦
ஒப்புரவினா	௬௨	கடிந்தகடிந்	௧௯௦	களவினாலா	௮௦
ஒருதலையா	௩௬௨	கடுஞ்சொல்	௧௬௪	களவின்கட்	௮௦
ஒருநாளெ	௩௬௪	கடுமொழியுங்	௧௬௫	களவென்னு	௮௧
ஒருபொழுது	௯௬	கடைக்கொட்	௧௯௨	களித்தறியே	௨௬௪
ஒருமைக்க	௧௧௮	கணைகொடிது	௭௯	களித்தானை	௨௬௪

குறள்.	பக்கம்.
களித்தொறு	௩௨௭
கள்வார்க்கு	௮௨
கள்ளுண்ணாப்	௨௬௫
கறுத்தின்னா	௮௯
கற்க கசடற	௧௧௫
கற்றதனாலா	௩
கற்றறிந்தார்	௨௦௬
கற்றாருட்கற்	௨௦௮
கற்றார்முற்	௨௦௮
கற்றிலனாயினு	௧௨௨
கற்றீண்டு	௧௦௨
கற்றுக்கண்	௧௯௮
கனவினானுண்	௩௪௮
கனவினுமி	௨௩௫
கா	
காக்கபொரு	௩௭
காக்கைகர	௧௫௪
காட்சிக்கெ	௧௧௪
காணச்சின	௨௪௭
காணாதாற்	௨௪௨
காணிற்குவ	௩௧௮
காணுங்காற்	௩௬௯
காண்கமற்	௩௬௩
காதலகாத	௧௨௯
காதலரில்	௩௫௦
காதலர்தூ	௩௪௭
காதலவரி	௩௫௬
காதன்மை	௧௪௮
காமக்கடன்	௩௩௩
காமக்கடு—னு	௩௨௩
காமக்கடு—னீ	௩௩௪
காமக்கணிச்	௩௫௮
காமமுநாணு	௩௩௩
காமமுழந்	௩௨௩
காமமென	௩௫௯
காமம்விடு	௩௫௭
காமம்வெகுளி	௧௦௪
காலங்கருதி	௧௪௨
காலத்தினாற்	௩௨
காலாழ்களரி	௧௪௬
காலைக்குச்	௩௫௧
காலையரும்பி	௩௫௧
கானமுயலெ	௨௨௨
கு	
குடம்பை	௯௬
குடிசெய்வ	௨௯௦
குடிசெய்வார்	௨௯௧
குடிதழீஇ	௧௫௯
குடிபுறங்காத்	௧௬௦
குடிப்பிறந்தார்	௨௭௩
குடிப்பிறந்—கு	௧௪௭
குடிப்பிறந்—த	௨௨௮
குடிமடிந்து	௧௭௫
குடியாண்மை	௧௭௭
குடியென்னுங்	௧௭௪
குணநலஞ்	௨௮௦
குணநாடி	௧௪௮
குணமென்னுங்	௧௨
குணனிலனாய்	௨௪௭
குணனுங்குடி	௨௨௮
குலஞ்சுடுங்	௨௮௯
குழலினிது	௨௨
குறிக்கொண்	௩௧௨
குறித்தது	௨௦௩
குறிப்பறிந்து	௨௦௦
குறிப்பிற்—ரா	௨௦௩
குறிப்பிற்—ர்	௨௦௨
குற்றமிலனாய்	௨௯௧
குற்றமேகாக்	௧௨௭
குன்றன்னார்	௨௫௫
குன்றினனை	௨௭௫
குன்றேறி	௨௧௭
கூ	
கூடியகாமம்	௩௬௨
கூத்தாட்ட	௯௪
கூழுங்குடியு	௧௬௧
கூறாமைநோ	௨௦௨
கூற்றங்குதி	௭௯
கூற்றத்தை	௨௫௪
கூற்றமோ	௩௦௯
கூற்றுடன்று	௨௧௯
கெ	
கெடல்வே	௨௫௪
கெடாவழி	௨௩௨
கெடுங்கா	௨௨௯
கெடுப்பதூஉ	௭
கெடுவல்யா	௩௫
கெடுவாக	௩௬
கெட்டார்க்	௩௭௧
கே	
கேடறியா	௨௧௧
கேடில்விழி	௧௧௮
கேடும்பெ	௩௫
கேட்டார்ப்	௧௮௯
கேட்டினு	௨௨௮
கேட்பினுங்	௧௨௩
கேளிழுக்கங்	௨௩௧
கை	
கைம்மாறுவே	௯௦
கையறியா	௨௯௩
கைவேல்க	௨௨௨
கொ	
கொக்கொக்	௧௪௩
கொடியார்—யி	௩௩௪
கொடியார்—யு	௩௫௪
கொடுத்தலு	௧௫௩
கொடுத்து	௨௪௭
கொடுப்பத	௪௮
கொடுப்பதூஉ	௨௮௯
கொடும்புரு	௩௦௯
கொடைய	௧௧௫
கொலைமே	௧௬௧
கொலையிற்	௧௬௦
கொலைவினை	௯௩
கொல்லாந	௨௮௦
கொல்லாமை	௯௨
கொல்லான்	௭௩
கொளப்பட்	௨௦௧
கொளற்கரி	௨௧௪
கொன்றன்	௩௪
கோ	
கோட்டுப்	௩௭௭
கோளில்	௫
ச	
சமன்செய்	௩௯
சலத்தாற்	௧௯௧
சலம்பற்றி	௨௭௨
சா	
சாதலினின்	௯௪
சாயலுநா	௩௩௯
சார்புணர்ந்	௧௦௪
சால்பிற்குக்	௨௮௧
சான்றவர்	௨௮௧
சி	
சிதைவிடத்	௧௭௩
சிறப்பறி	௧௭௧
சிறப்பீ—மு	௧௨
சிறப்பீ—ம்	௮௮
சிறப்பொடு	௮
சிறியாருணர்	௨௭௮
சிறுகாப்பி	௨௧௪
சிறுபடை	௧௪௯
சிறுமைநு	௩௫௩
சிறுமைபல	௨௯௯
சிறுமையுஞ்	௨௨௧
சிறுமையுணீ	௩௧
சிறைகாக்கு	௨௦
சிறைநல	௧௪௯
சிற்றினம	௧௩௨
சிற்றின்ப	௫௦
சினத்தைப்	௮௭
சினமென்னு	௮௭

குறள்.	பக்கம்.
சீ	
சீரிடங்கா	௨௩௫
சீரினுஞ்சீ	௨௭௪
சீருடைச்செ	௨௮௭
சீர்மைசிற	௫௫
சு	
சுடச்சுட	௭௫
சுவையொளி	௧௧
சுழலுமிசை	௨௨௩
சுழன்றுமேர்	௨௯௨
சுற்றத்தாற்	௧௫௩
சூ	
சூழாமற்று	௨௯0
சூழ்ச்சிமுடி	௧௯௪
சூழ்வார்கண்	௧௩0
செ	
செப்பமுடை	௩௫
செப்பின்பு	௨௫௨
செயற்கரியசெ	௧0
செயற்கரியயா	௨௨௪
செயற்கைய	௧௮௪
செயற்பாலசெ	௧௨௮
செயற்பாலதோ	௧௫
செயிரிற்றலை	௭௩
செய்கபொ	௨௧௮
செய்தக்க	௧௩௬
செய்தேமஞ்	௨௩௩
செய்யாமற்செய்	௩௨
செய்யாமற்செற்	௮௯
செய்வானை	௧௫௧
செய்வினை	௧௯௫
செருக்குஞ்	௧௨௭
செருவந்த	௧௬௫
செல்லாமை	௩௨௯
செல்லாவி	௮௬
செல்லான்	௨௯௫
செல்லிடத்	௮௫
செல்வத்துட்	௧௨௧
செல்விருந்	௨௮
செவிகைப்ப	௧௧௫
செவிக்குண	௧௨௧
செவிச்சொல்	௨00
செவியிற்சுவை	௧௨௩
செவியுணவி	௧௨௨
செறுஅச்சிறு	௩௧௨
செறிதொடி	௩௬௬
செறிவறிந்	௩௭
செறுநரை	௧௪௩
செறுவார்க்	௨௪௮
செற்றவர்பி	௩௬0
செற்றுரென	௩௫௭
செற்றார்பி	௩௬0
சென்றவிட	௧௨௪
சொ	
சொலல்வல்	௧௮௭
சொல்லுக—வி	௫௬
சொல்லுக—லை	௧௮௭
சொல்லுதல்	௧௯௨
சொல்லப்ப	௩0௫
சொல்வண	௨௩௭
சொற்கோட்	௩௬
ஞா	
ஞாலங்கருதி	௧௪௨
த	
தகுதியென	௩௪
தக்காங்கு	௧௬௩
தக்காரின	௧௩௧
தக்கார்தக	௩௫
தஞ்சந்தம	௩௭௩
தணந்தமை	௩௫௩
தண்ணந்துறை	௩௬௬
தந்தைமகற்	௨௩
தந்நலம்	௨௬௧
தந்நெஞ்சத்	௩௪௫
தமராகித்	௧௫௪
தம்பொரு	௨௨
தம்மிலிருந்	௩௧௫
தம்மிற்பெரி	௧௩0
தம்மிற்றம்	௨௩
தலைப்பட்டார்	௧00
தலையினிழிந்	௨௭௫
தவஞ்செய்	௭௫
தவமறைந்	௭௭
தவமுந்தவ	௭௪
தவறிலரா	௩௮௧
தள்ளாவிளை	௨௧0
தற்காத்துத்	௨0
தனக்குவமை	௫
தனியேயிருந்	௩௭௨
தன்குற்றநீக்	௧௨௮
தன்றுணையின்	௨௪௯
தன்னுயிர்க்கின்	௯0
தன்னுயிர்தா	௭௫
தன்னுயிர்நீ	௯௩
தன்னூன்பெரு	௭௧
தன்னெஞ்சறி	௮௩
தன்னைத்தான்—க்	௮௬
தன்னைத்தான்—த	௫௯
தன்னையுணர்	௩௭௯
தா	
தாமின்புறு	௧௧௮
தாம்வீழ்—த	௩௪௧
தாம்வீழ்—மெ	௩௧௪
தாம்வேண்	௩௨௮
தார்தாங்கி	௨௨0
தாளாண்மையி	௧௭௮
தாளாண்மையெ	௧௭௮
தாளாற்றி	௬0
தானந்தவ	௮
தி	
திறனல்ல	௪௯
திறனறிந்	௧௮௬
தினற்பொரு	௭௨
தினைத்துணைந	௩௨
தினைத்துணையா	௧௨௭
தினைத்துணையு	௩௬௮
தீ	
தீப்பாலதான்	௫௮
தீயவைசெய்	௫௮
தீயவைதீய	௫௭
தீயளவன்றி	௨௭0
தீயினாற்சுட்ட	௩௯
தீவினையார	௫௭
து	
துஞ்சினார்	௨௬௩
துஞ்சுங்காற்	௩௪௯
துணைநலமா	௧௮௮
துப்பார்க்கு	௭
துப்பினெவ	௩௩௩
துப்புரவில்	௨௯௭
தும்முச்செறு	௩௭௮
துளியின்மை	௧௬௨
துறந்தா—த்	௭௪
துறந்தா—ந்	௧௬
துறந்தார்படி	௧௭0
துறந்தார்பெரு	௯
துறந்தாரிற்	௪௬
துறப்பார்	௧௧0
துறைவன்	௩௩0
துனியும்புல	௩௭௫
துன்பத்திற்	௩௭௩
துன்பமுறவ	௧௯௩
துன்புறூஉ	௩0
துன்னத்து	௩௫௮
துன்னியார்	௫௪
தூ	
தூங்காமை	௧௧௩
தூங்குக	௧௯௪
தூய்மைது	௧௯௮
தூஉய்மையெ	௧0௬
தெ	
தெண்ணீரடு	௩0௨
தெய்வத்தா	௧௭௯

குறள்.	பக்கம்.
தெய்வந்	௧௯
தெரிதலுந்	௧௮௩
தெரிந்தவி	௧௩௫
தெரிந் துணை	௩௩௫
தெருளாதா	௭௦
தெளிவிலத	௧௩௬
தென்புலத்	௧௬
தே	
தேரான்பிற	௧௪௯
தேரான்றெ	௧௪௯
தேவரனைய	௩௦௪
தேறற்க	௧௪௯
தேறினுந்	௨௫௦
தொ	
தொகச்சொ	௧௯௭
தொடங்கற்	௧௪௪
தொடலைக்	௩௨௪
தொடிநோக்	௩௬௭
தொடிப்புழு	௨௯௪
தொடியொடு	௩௫௪
தொடிற்சுடி	௩௩௪
தொட்டனைத்	௧௧௭
தொல்வர	௨௯௬
தொழுதகை	௨௩௭
தோ	
தோன்றிற்	௬௬
ந	
நகல்வல்லர	௨௮௪
நகுதற்பொரு	௨௨௫
நகையீகை	௨௭௨
நகையுழுவ	௮௬
நகையுள்ளு	௨௮௩
நகைவகை	௨௩௪
நசைஇயார்	௩௪௩
நச்சப்படா	௨௮௬
நடுவின்றி	௪௯
நட்டார்குறை	௨௫௮
நட்டார்க்கு	௧௯௬
நட்டார்போ	௨௩௬
நட்பிற்குவீ	௨௨௭
நட்பிற்குறு	௨௩௦
நண்பாற்று	௨௮௪
நத்தம்போற்	௬௬
நயந்தவர்க்	௩௩௮
நயந்தவர்நல்	௩௫௩
நயனிலசொல்	௫௬
நயனிலனெ	௫௫
நயனீன்று	௩௧
நயனுடை	௬௧
நயனொடு	௨௮௩
நயன்சாரா	௫௫
நலக்குரியார்	௪௪
நலத்தகை	௩௭௫
நலத்தின்க	௨௭௩
நலம்வேண்	௨௭௩
நல்குரவெ	௨௯௬
நல்லவை	௧௦௯
நல்லாண்	௨௯௧
நல்லார்கட்	௧௨௦
நல்லாறென	௯௨
நல்லாறெனி	௬௨
நல்லாற்று	௬௮
நல்வினத்தி	௧௩௫
நவிற்றொறு	௨௨௫
நற்பொரு	௨௯௭
நனவினாற்	௩௪௮
நனவினானந்	௩௪௯
நனவினானல்காக்	௩௪௮
நனவினானல்காத	௩௪௭
நனவினானல்காரை	௩௪௯
நனவென	௩௪௮
நன்மையுந்	௧௫௦
நன்றறிவா	௩௦௪
நன்றாகுமாக்	௯௩
நன்றாங்கா	௧௧௧
நன்றாற்ற	௧௩௭
நன்றிக்கு	௪௧
நன்றிமறப்	௩௩
நன்றென்	௨௦௬
நன்றேதரி	௩௫
நன்னீரைவா	௩௧௭
நா	
நாங்காதல்	௩௪௨
நாச்செற்று	௯௫
நாடாதுந	௨௨௭
நாடென்ப	௨௧௨
நாடொறுநாடி	௧௬௧
நாடோறுநாடு	௧௫௨
நாணகத்தி	௨௮௯
நாணுமை	௨௩௮
நாணுலு	௨௮௯
நாணுமற	௩௭௨
நாணென	௩௬௦
நாணென்	௨௬௩
நாணொடு	௩௨௩
நாண்வேலி	௨௮௮
நாநல	௧௮௫
நாளென	௯௫
நி	
நிணந்தீயி	௩௬௧
நிலத்தியல்	௧௩௨
நிலத்திற்	௨௭௩
நிலவரைநீ	௬௫
நிலைமக்கள்	௨௨௧
நிலையஞ்சி	௯௨
நிலையிற்றி	௩௮
நில்லாதவ	௯௪
நிழனீருமின்	௨௫௧
நிறைநீர	௨௨௫
நிறைநெஞ்	௨௬௧
நிறைமொழி	௧௧
நிறையரி	௩௨௫
நிறையுடைமை	௪௫
நிறையுடையே	௩௫௯
நினைத்திருந்	௩௭௯
நினைத்தொ	௩௫௬
நினைப்பவர்	௩௪௪
நீ	
நீங்கான்வெகு	௨௪௬
நீங்கிற்றெ	௩௧௪
நீரின்றமை	௮
நீருநிழல	௩௭௬
நு	
நுணங்கிய	௧௨௩
நுண்ணியநூ	௧௦௯
நுண்ணியமெ	௨௦௪
நுண்மாணு	௧௨௦
நுணிக்கொம்	௧௩௯
நூ	
நூலாருணால்	௧௯௭
நெ	
நெஞ்சத்தார்	௩௨௨
நெஞ்சிற்றுற	௭௮
நெடுங்கட	௮
நெடுநீர்மற	௧௭௫
நெடும்புன	௧௪௫
நெய்யாலெ	௩௨௮
நெருப்பினு	௨௯௭
நெருநலுள	௯௬
நெருநற்றுச்	௩௬௬
நோ	
நோக்கினா—கி	௩௧௧
நோக்கினா—கெ	௩௦௮
நோதலெவன்	௩௭௫
நோயெல்லா	௯௦
நோய்நாடி.	௨௭௦
நோவற்க	௨௫௦
நோனாவுடம்	௩௨௩
ப	
பகச்சொல்	௫௩
பகல்கருதி	௨௪௩
பகல்வெல்	௧௪௧
பகுத்துண்	௯௧

குறள்.	பக்கம்.
பகைநட்பாக்	௨௪௯
பகைநட்பாங்	௨௩௭
பகைபாவ	௪௩
பகைமையு	௨௦௪
பகையகத்துச்	௨௦௮
பகையகத்துப்	௨௦௯
பகையென்	௨௪௮
பசக்கமற்	௩௪௦
பசந்தாளி	௩௪௦
பசப்பென	௩௪௧
படலாற்று	௩௩௬
படியுடை	௧௭௬
படுபயன்	௫௦
படைகுடி	௧௧௨
படைகொண்	௭௧
பணியுமாமெ	௨௭௮
பணிவுடைய	௩௦
பணைநீங்கிப்	௩௫௩
பண்டறியே	௩௦௮
பண்ணென்	௧௬௭
பண்பிலான்	௨௮௪
பண்புடை	௨௮௩
பதிமருண்டு	௩௫௨
பயனிலபல்	௫௫
பயனில்சொற்	௫௬
பயன்மரமுள்	௬௧
பயன்றூக்கார்	௩௨
பயன்றூக்கி	௨௬௦
பரிந்தவர்நல்	௩௫௭
பரிந்தோம்பிக்	௪௦
பரிந்தோம்பிப்	௨௮
பரியதுகூர்	௧௭௪
பரியினுமா	௧௧௦
பருகுவார்	௨௩௨
பருவத்தோ	௧௪௧
பருவரலும்	௩௪௩
பலகுடைநீ	௨௯௩
பலசொல்ல	௧௮௮
பலநல்லகற்	௨௩௬
பல்குழுவு	௨௧௧
பல்லவைக	௨௦௯
பல்லார்பகை	௧௩௨
பல்லார்முனி	௫௫
பழகியசெல்	௨௬௭
பழகியநட்	௨௩௦
பழிமலைந்	௧௯௦
பழியஞ்சி	௧௬
பழுதெண்	௧௮௫
பழைமையெ	௨௩௦
பழையமெ	௨௦௨
பற்றற்றகண்	௧௫௨

குறள்	பக்கம்.
பற்றற்றகண்ணே	௧௦௦
பற்றற்றே	௭௭
பற்றிவிடா	௯௯
பற்றுகபற்	௧௦௦
பற்றுள்ள	௧௨௮
பனியரும்பி	௩௫௦
பன்மாயக்கள்	௩௬௦
பா	
பாடுபெறு	௩௫௪
பாத்தூண்	௬௩
பாலொடு	௩௨௦
பி	
பிணிக்குமருந்	௩௧௪
பிணியின்மை	௨௧௨
பிணையேயர்	௩௧௦
பிரித்தலும்	௪௮௩
பிரிவுரைக்	௩௩௦
பிழைத்துணர்	௧௨௩
பிறப்பென்னு	௧௦௩
பிறப்பொக்	௨௭௭
பிறர்க்கின்	௯௦
பிறர்நாணத்	௨௮௯
பிறர்பழியு	௨௮௮
பிறவிப்பெ	௬
பிறன்பழி	௫௩
பிறன்பொரு	௪௨
பிறன்மனை	௪௪
பீ	
பீலிபெய்	௧௩௯
பு	
புகழின்றாற்	௨௭௫
புகழ்ந்தவை	௧௫௭
புகழ்பட	௬௬
புகழ்புரிந்	௨௦
புக்கிலமை	௯௭
புணர்ச்சிபழ	௨௨௫
புத்தேளுல	௬௦
புரந்தார்கண்	௨௨௪
புலத்தலிற்	௩௮௦
புலப்பலென	௩௬௧
புலப்பேன்	௩௬௩
புல்லவையுட்	௨௦௭
புல்லாதிரா	௩௭௩
புல்லிக்கிடந்	௩௪௦
புல்லிவிடா	௩௮௦
புறங்குன்றி	௭௮
புறங்கூறிப்	௫௨
புறத்துறுப்	௨௬
புறந்தூய்	௮௪
புன்கண்ணை	௩௫௦

குறள்.	பக்கம்.
பெ	
பெண்ணிய	௩௭௬
பெண்ணிற்	௬௯
பெண்ணினாற்	௩௬௭
பெண்ணேவல்	௨௫௮
பெயக்கண்டு	௧௬௯
பெயலாற்று	௩௩௬
பெரிதாற்றி	௩௬௬
பெரிதினிது	௨௪௦
பெரியாரை	௨௫௪
பெருக்கத்து	௨௭௪
பெருங்கொ	௧௫௩
பெருமைக்கு	௧௪௮
பெருமைபெ	௨௭௯
பெருமையு	௨௭௮
பெரும்பொரு	௨௧௦
பெருஅமையஞ்	௩௭௨
பெறினென்	௩௬௪
பெறுமவற்	௨௧
பெற்றாற்	௨௦
பே	
பேணாதுபெட்டா	௩௩௭
பேணாதுபெட்ப	௩௬௮
பேணாதுபெண்	௨௫௭
பேதைபெருங்	௨௩௪
பேதைப்ப	௪௦௯
பேதைமையு	௨௩௮
பேதைமையெ	௨௩௮
பேதைமையொ	௨௩௧
பேராண்மை	௨௨௨
பொ	
பொச்சாப்பார்	௧௫௫
பொச்சாப்புக்	௧௫௫
பொதுநலத்	௨௬௦
பொதுநோக்	௧௫௪
பொய்படுமொ	௨௩௯
பொய்மையு	௮௩
பொய்யாமைபொ	௮௪
பொய்யாமைய	௮௪
பொருடீர்ந்	௫௬
பொருட்பெண்டிர்	௨௬௦
பொருட்பொரு	௨௬௦
பொருணீங்	௬௯
பொருண்மா	௩௫௨
பொருள்கரு	௧௯௫
பொருள்கெடு	௨௬௭
பொருளல்லவரை	௨௧௫
பொருளல்லவற்	௪௦௧
பொருளற்றார்	௭௦
பொருளாட்சி	௭௧
பொருளானா	௨௮௫

குறள்.	பக்கம்.
பொருளென்	௨௧௬
பொள்ளென	௧௪௨
பொறியின்	௧௭௯
பொறிவாயி	௪
பொறுத்தலிற	௪௫
பொறையொ	௨௧0
போ	
போற்றினரி	௨00
ம	
மகன்றந்தை	௨௩
மக்கண்மெய்	௨௨
மக்களேபோல்	௩0௪
மங்கலமென்ப	௨௧
மடலூர்தல்	௩௨௪
மடிமடிக்	௧௭௫
மடிமைகுடி	௧௭௬
மடியிலா	௧௭௭
மடியுளா	௧௭௯
மடியைமடியா	௧௭௫
மடுத்தவா	௧௮0
மணிநீருமண்	௨௧௩
மணியிற்றிக	௩௬௫
மண்ணோடியை	௧௬௭
மதிநுட்ப	௧௮௪
மதியுமடந்தை	௩௧௮
மயிர்நீப்பின்	௨௭௬
மருந்தாகித்	௬௧
மருந்தென	௨௬௮
மருந்தோமற்	௨௭௬
மருவுகமாசற்	௨௨௯
மலரன்ன—ண்மு	௩௧௯
மலரன்ன—ளரு	௩௨௬
மலரினுமெல்	௩௭0
மலர்காணின்	௩௧௭
மலர்மிசை	௩
மழித்தலுநீ	௭௯
மறத்தல்வெ	௮௬
மறந்தும்பி	௫௮
மறப்பினு	௪0
மறப்பினெவ	௩௪௬
மறமானமா	௨௨0
மறவற்கமா	௩௩
மறைந்தவை	௧௭௧
மறைபெற	௩௩௮
மறைப்பேன்மற்	௩௫௯
மறைப்பேன்மன்	௩௩௨
மற்றியானெ	௩௪௫
மற்றுந்தொடர்	௯௯
மனத்ததுமா	௭௮
மனத்தாறு	௧௩௩
மனத்தினமை	௨௩௬
மனத்துக்கண்	௧௩
மனத்துளது	௧௩௩
மனத்தொடு	௮௪
மனநலத்தி	௧௩௪
மனநலநன்கு	௧௩௪
மனநலமன்	௧௩௪
மனந்தூயார்	௧௩௪
மனந்தூய்	௧௩௩
மனமாணுவு	௨௫௨
மனைத்தக்க	௧௮
மனைமாட்சி	௧௯
மனையாளை	௨௫௭
மனைவிழைவா	௨௫௬
மன்னர்க்கு	௧௬௨
மன்னர்விழை	௨00
மன்னுயிரெல்	௩௩௪
மன்னுயிரோ	௬௯
மா	
மாதர்முகம்	௩௧௯
மாலைநோய்	௩௫௧
மாலையோவல்	௩௫0
மாறுபாடில்	௨௬௯
மி	
மிகச்செய்	௨௩௭
மிகன்மேவன்	௨௪௫
மிகினுங்குறை	௨௬௮
மிகுதியான்	௪௬
மு	
முகத்தான	௩0
முகத்தினினி	௨௩௬
முகத்தின்மு	௨0௩
முகநகநட்ப	௨௨௬
முகநோக்கி	௨0௪
முகைமொக்	௩௬௫
முடிவுமிடை	௧௯௫
முதலிலார்க்	௧௩௨
முயக்கிடை	௩௫௫
முயங்கிய	௩௫௫
முயற்சிதிரு	௧௭௮
முரண்சேர்ந்	௧௪௪
முறிமேனி	௩௧௭
முறைகோடி	௧௬௩
முறைசெய்	௧௧௪
முறைப்பட	௧௮௫
முற்றுற்றி	௨௧௫
முற்றியுமுற்	௨௧௪
முனைமுகத்	௨௧௫
முன்னுறக்கா	௧௫௬
மே	
மேலிருந்து	௨௭௭
மேற்பிறந்தா	௧௨௧
மை	
மையலொரு	௨௪0
மோ	
மோப்பக்கு	௨௯
யா	
யாகாவாரா	௩௮
யாங்கண்ணி	௩௨௫
யாண்டுச்செ	௨௫௫
யாதனின்யா	௯௭
யாதானுநா	௧௧௭
யாமுமுளே	௩௪௫
யாமெய்யா	௮௫
யாரினுங்கா	௩௭௭
யானெனதெ	௯௯
யானோக்கு	௩௧௧
வ	
வகுத்தான்	௧௧0
வகைமாண்	௨௫௫
வகையறச்	௧௩௬
வகையறிந்தத	௨௫0
வகையறிந்துவ	௨0௭
வசையிலாவ	௬௬
வசையென்ப	௬௬
வசையொழிய	௬௭
வஞ்சமனத்தா	௭௬
வருகமற்கொ	௩௬௩
வருமுன்னர்	௧௨௮
வருவிருந்து	௨௭
வரைவிலாமா	௨௬௧
வலியார்க்கு	௨௪௬
வலியார்முற்	௭0
வலியினிலை	௭௭
வழங்குவ	௨௭௨
வழிநோக்	௨௪௭
வழுத்தினுடு	௩௭௮
வறியார்க்	௬௨
வன்கண்கு	௧௮௩
வா	
வாணிகஞ்செய்	௩௭
வாய்மையெ	௮௨
வாராக்காற்	௩௩௭
வாரிபெருக்	௧௫0
வாழ்தலுயிர்	௩௨0
வாழ்வார்க்	௩௪௧
வாளற்றுப்	௩௬௨
வாளொடென்	௨0௮
வாள்போல்	௨௫௧
வானின்றுல	௬
வானுயர்தோ	௭௭
வானோக்கி	௧௫௮

குறள்.	பக்கம்.	குறள்.	பக்கம்.	குறள்.	பக்கம்.
வி		விரியுமெனி	௩௪௬	வெருவந்த	௧௬௪
விசும்பிற்று	௮	வினைகலந்து	௩௬௪	வெள்ளத்தனையம	௧௭௩
விடாஅது	௩௪௬	வினைக்கண்வினைகெ	௧௭௭	வெள்ளத்தனையவி	௧௮௦
விடுமாற்ற	௧௯௯	வினைக்கண்வினையு	௧௫௨	வே	
விண்ணின்று	௭	வினைக்குரி	௧௫௧	வேட்ட	௩௧௫
வித்துமிடல்	௨௭	வினைசெய்	௧௭௦	வேட்பத்தா	௧௮௭
வியவற்க	௧௨௯	வினைத்திட்	௧௯௧	வேட்பன	௨௦௧
விருந்துபுற	௨௭	வினைபகை	௧௯௫	வேண்டற்—ஃ	௫௯
விருப்பறுச்	௧௫௨	வினையான்	௧௯௬	வேண்டற்—ன்	௨௬௫
விரைந்து	௧௮௭	வினைவலியு	௧௩௮	வேண்டா	௧௦௬
விலங்கொடு	௧௨௧	வீ		வேண்டிய	௭௫
வில்லேருழ	௨௪௯	வீழப்படுவா	௩௪௨	வேண்டினு	௯௮
விழித்தகண்	௨௨௩	வீழுநர்வீழ	௩௪௨	வேண்டுங்	௧௦௫
விழுப்புண்ப	௨௨௩	வீழுமிருவர்	௩௧௫	வேண்டுதல்	௪
விழுப்பேற்	௪௭	வீழ்நாள்ப	௧௪	வேலன்று	௧௫௯
விழைதகை	௨௩௧	வீழ்வாரினி	௩௪௩	வேலொடு	௧௬௧
விழையார்	௨௩௨	வீறெய்தி	௧௯௨	வை	
விளக்கற்ற	௩௪௦	வெ		வைத்தான்	௨௮௫
விளிந்தாரின்	௪௩	வெண்மை	௨௪௧	வையத்துள்	௧௮

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௮௭	௧௪	சேரரத	சேராத
௮௯	௩௧	நடத்தல்.	நடத்தல்,
௧௦௦	௩௫	றின்மை	றிண்மை
௨௩௩	௨	போலிலும்	போலினும்
௨௪௮	௩௦	ஆராய்தல்,	ஆராய்தல்.
௨௬௭	௨௯	ளம்படும்.	ளப்படும்.
௨௭௧	௫	பதியை	பகுதியை
௨௮௪	௩௯	செய்தவனுதற்	செய்தவதனுற்
௩௧௫	௨௯	வெண்டு	வேண்டு
௩௭௮	௩௦	றும்பினேனு	றும்மினேனு
		திருவள்ளுவமாலை.	
௮	௧௬	பேபற்றி	போற்றி
௧௫	௩௪	தீயதாவும்	தீயதாகவும்
௧௮	௩௬	முதலியோரலே	முதலியோராலே
௨.௧	௨௩	வவைப்பட்டு	வகைப்பட்டு
௨௨	௨	தெய்தனர்	செய்தனர்

௩௧௩ - ம் பக்கத்தினடியில் * குறியிட்டகோட்டில் குறிக்கப்பட்ட 'ஏனல் காவ லிவளுமல்லள்' என்ற பாட்டு இறையனாரகப்பொருள் ௮ - ம் சூத்திரத்துரையில் வருவது.